சித்த மருத்துவ ஆய்வுக் கோவை



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரஸ்வதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்,
தஞ்சாவூர்.

சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 299

சித்த மருத்துவ ஆய்வுக்கோவை

பதிப்பாசிரியர்
பன்மொழிப் புலவர் பேராசிரியர்
மு. சதாசிவம், எம். ஏ., எம். லிட்.,
(முன்னாள் இயக்குநர்,)
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

2009 விலை ரூ. 180 - 00

கோவை - அ

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: சித்த மருத்துவ ஆய்வுக்கோவை
பதிப்பாசிரியர்	: பேராசிரியர் மு. சதாசிவம், எம். ஏ., எம். லிட்.,
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	: 299
மொழி	: தமிழ்
பதிப்பு	: மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: 2009
தாள்	: 18. 6 கி. கி. சேஷசாயி
நூல் அளவு	: 21 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 604
படிகள்	: 500
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	: லேமினேசன் அட்டை
பொருள்	: மருத்துவம்
விலை	: ரூ. 180-00

வெளியீட்டாளர் முகவுரை

தஞ்சையில் அமைந்து தரணி முழுமைக்கும் அறிவுச் செல்வமாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கும் அரும்பெரும் நிறுவனம் சரசுவதி மகால் நூலகமாகும். சுவடிக் கருவூலமாகவும், பன்மொழி நூற்களஞ்சியமாகவும், பன்மொழி ஆய்வு மையமாகவும் திகழும் சரசுவதி மகால் நூலகம் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. இந்நூலகம் தமிழகத்தினர் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும், பிற நாட்டினரும் பயன்படுத்தி வருகின்ற ஓர் அரிய ஞான ஆலயமாகும்.

சரபோஜி மன்னர் மருத்துவ ஆய்வகம் ஒன்றைத் தன்வந்தரி மகால் என்ற பெயரில் நடத்திவந்தார். பல்வகை நோய் தீர்க்கும் முறை பற்றிய ஆராய்ச்சிக்கும், புற்றுநோய், இளம்பிள்ளை வாதம், நீரிழிவு நோய் மற்றும் காசநோய் பற்றிய ஆய்வுகள், ஆயுர்வேதம் மற்றும் சித்த வைத்திய முறையில் ஆய்வு செய்யப்பட்டன. மருத்துவ நிபுணர்களுக்கு வீடு, நிலம் முதலியன கொடுத்து ஆதரவளித்ததும், மருத்துவ நூல்களைப் பணம், அணிகலன்கள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களைக் கொடுத்து வாங்கியும் சரபோஜி மன்னர் தன்வந்தரி மகாலில் மருத்துவ ஆராய்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்தார். இங்கு புகழ்வாய்ந்த சித்த, ஆயுர்வேத மற்றும் யுனானி மருத்துவர்களை ஒன்று சேர்த்துப் பல கண்டுபிடிப்புகளுக்கு ஆதரவளித்தார். இதன் விளைவாக ஏற்பட்ட கண்டுபிடிப்புகள் சரபேந்திர வைத்திய முறைகள் என்று தமிழில் எழுதப்பட்ட நூல்களில் விரிவாகவும், மனதில் நிற்கக்கூடிய வகையிலும் எழுதப்பட்டுள்ளன.

1990ஆம் ஆண்டு மேனாள் மாண்புமிகு கல்வி அமைச்சரும் இன்றைய நிதியமைச்சருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சரசுவதி மகாலில் ஏறக்குறைய 1500 சித்த மருத்துவச் சுவடிகள் இருப்பதை அறிந்து தமிழர்களின் மருத்துவ முறையான சித்த மருத்துவமுறை மீண்டும் தமிழகத்தில் தழைத்தோங்கவேண்டும் என்று கருதி, சித்த மருத்துவம் பற்றி அறிவியல் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று விரும்பினார்கள். அதன் பயனாக சித்த மருத்துவக் கருத்தரங்கு ஒன்று இந்நூலக ஒத்துழைப்போடு பாளையங்கோட்டையில் 1990ஆம் ஆண்டு செப்டம்பர் 6, 7ஆம் நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் இடம்பெற்ற 75 ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து சித்தமருத்துவ ஆய்வுக் கோவை என்னும் நூலாக இந்நூலகம் வெளியிட்டது. ஆர்வலர்கள் மற்றும் ஆய்வாளர்களுக்கு பெரிதும் பயன்படும் வண்ணம் உள்ளதால் இந்நூல் 2000ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகவும், தற்போது மூன்றாம் பதிப்பாகவும் வெளிவருகிறது.

இந்நூல் வெளிவர நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கும், நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினி அச்சில் வெளிவர கணினி பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எம். எஸ். சண்முகம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
13 - 1 - 2009.

பதிப்புரை

தமிழர்கள் தங்களுக்கே உரிய கலைகளை, அறிவுத் துறைகளை, மரபுகளைப் பொன்போல் போற்றிப் பாதுகாத்து வைப்பதில்லை என்று பொதுவாகக் கூறப்படுவதுண்டு. தமிழர்கள் என்றும் புதுமையைக் கண்டபோதெல்லாம் அதில் பேரீடுபாடும் பேரார்வமும் கொள்வது இயல்பாதலின் தங்கள் பழைய மரபுகளை அவர்கள் ஒரொருகால் மறந்து நிற்பதும் உண்டு. எனினும் தமிழர்களில் ஒரு சிலராவது எப்போதும் தங்கள் பழமைப் பண்புகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடையவராய் உள்ளனர்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரிர் டாக்டர் க.அன்பழகன் அவர்கள் தமிழர்கள் புதுமையைப் போற்றுவதுடன் பழமையையும் பாதுகாத்து வரவேண்டும் என்ற ஆர்வம் உடையவராய் உள்ளார். தமிழர்களின் மருத்துவ முறையான சித்த மருத்துவ முறை மீண்டும் தமிழகத்தில் தழைத்தோங்க வேண்டும் என் தளராஉ குறிக்கோளுடையவராய் உள்ளார். சரசுவதி மகாலின் ஆட்சிக் குழுத் தலைவராயுள்ள அவர்கள் சரசுவதி மகாலில் ஏறக்குறைய 1500 சித்த மருத்துவச் சுவடிகள் இருப்பதை அறிந்து சரசுவதி மகாலில் ஒரு சித்த மருத்துவத் துறையைத் தோற்றுவித்துள்ளார். சித்த

மருத்துவம் பற்றி அறிவியல் பூர்வமான ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று விரும்புகிறார். அதன் பயனாகவே சித்த மருத்துவக் கருத்தரங்கு ஒன்று பாளையங்கோட்டையில் செப்டம்பர் 6, 7 ஆம் நாட்களில் சிறப்புற நடைபெற ஏற்பாடு செய்யப்பெற்றது.

இக்கருத்தரங்கிலேயே ஆய்வுக் கட்டுரைகளை அச்சிட்டு ஆய்வாளர்கள் கையில் ஆய்வுக் கோவையைத் தருவதென்று முடிவு செய்தோம். ஏறத்தாழ நாற்பது ஆய்வுக் கட்டுரைகள் வருமென்று எதிர்பார்த்தோம். ஆனால் இருமடங்கு கட்டுரைகள் வந்துவிட்டன. எனினும் ஐந்நூற்று ஐம்பது பக்கங்களை பதினைந்தே நாட்களில் அழகுற அச்சிட்டுத் தரப் புதுக்கோட்டை சர்மா அச்சகத்தினர் முன் வந்தனர். அவர்களுக்கு என் முதல் நன்றி உரியது. எல்லாக் கட்டுரைகளையும் படித்துத் திருத்தித்தர தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறைத்தலைவர் திருமதி மருத்துவர் பிரேமா அவர்கள் ஆர்வத்துடன் முன் வந்தார். அவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருத்தரங்கை முன்னின்று நடத்துவதற்கு ஆர்வத்துடன் முன் வந்த முனைவர் பேராசிரியர் வளன்அரசு அவர்களும், மருத்துவர் செயப்பிரகாசு நாராயணன் அவர்களும் ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து அனுப்பி வைத்தனர். கருத்தரங்கின் வெற்றிக்கு முதற்காரணம் இவர்களே. இந்தக் கருத்தரங்கை நடத்துவதற்கு இடம் தந்து, பிற எல்லா வசதிகளையும் அளித்த சித்த மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் வி. சுப்பிரமணியன் அவர்களுக்கும், பொறுப்பு முதல்வர்

அவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், நன்கொடைகள் வழங்கி உதவிய பெருமக்களுக்கும் என் பெருநன்றியைப் படைத்து மகிழ்கிறேன்.

இந்த ஆய்வுக் கோவையை வெளியிடுவதற்குப் பொருளுதவி செய்த நடுவண் அரசுக்கும் நனிநன்றி.

தஞ்சாவூர்,
3-9-90.

மு. சதாசிவம்,
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

பொருளடக்கம்

வ. எண்.		பக்கம்
1	பாதரசம் சேர்ந்த மருந்துகள் சில அனுபவங்கள் சில கருத்துக்கள்	1
2	இலக்கியம் விளம்பும் மருத்துவம்	13
3	[illegible] குற்றால மூலிகைகள்	20
4	கற்றாழை	27
5	காடிக்காரச் செந்தூரம்	34
6	சுட்டிகை ஒரு அரிய சித்த மருத்துவப் பரிகார முறை	40
7	சித்த அறிவியலில் கண் மருத்துவம்	49
8	கிராமியப் பகுதிகளில் சித்த மருத்துவ நடைமுறைச் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களும் நிவர்த்திக்கும் முறைகளும்	55
9	நீரிழிவு நோய்க்கு ஓர் எளிய நிவாரணம்	60
10	நோயும் நோய் முதலும்	64
11	சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழி முறைகளும்	72
12	சன்னி நோய் மருத்துவத்தில் இளநீரின் ஆட்சி	77
13	சித்தர்கள் தந்த செல்வம்: சித்த வைத்தியம்	83
14	சித்த மருத்துவ வளர்ச்சிக்கு இன்றியமையாத பணிகள்	85
15	சித்த மருத்துவம் - சில சிந்தனைகள்	92
16	வர்ம மருத்துவ மேம்பாட்டின் தேவை	108

வ. எண்,		பக்கம்
17	தமிழ் மருத்துவத்தில் மலைவாழ் மக்களின் பங்கு	120
18	கர்ப்ப காலத்து வழக்கில் உள்ள மருத்துவ முறைகள்	121
19	சித்த மருத்துவ வளர்ச்சிக்குச் சில சீரிய கருத்துக்கள்	136
20	திணையும் நோய் நிலையும்	144
21	சித்த மருத்துவம்	156
22	வளரும் சித்த மருத்துவத்தில் வழக்கொழிந்து வரும் பாடாணங்கள்	165
23	சங்கு பற்பத்தின் ஆட்சி	172
24	சித்த மருத்துவமும் விலங்கின மருந்துகளும்	179
25	சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழிமுறை களும் சித்த மருத்துவங்களின் தரக்கட்டுப்பாடும்	192
26	சிவஞான சித்தியாரும் நோய்க் கணிப்பும்	198
27	உணவில் சித்த மருத்துவம்	205
28	சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழி முறைகளும்	213
29	கணினியும் நோய்க் கணிப்பும்	218
30	Identification of crude drugs a key Factor for the development of Siddha system	222
31	இசப்புகோல் விதை	225
32	சித்தர்களின் தீர்க்கதரிசனம் (அ) மெய்ஞ்ஞானி களின் விஞ்ஞான நோக்குகள்	233
33	சமநிலைக்காய்	242

வ. எண்,		பக்கம்
34	சித்த மருத்துவத்தின் முன்னேற்றத்திற்குரிய ஆலோசனைகள்	262
35	சித்த மருத்துவ மேம்பாடும் பரிபாஷை விளக்கமும்	266
36	சித்த மருத்துவத்தை வளர்க்கும் வழிகள் சித்த மருத்துவ வளர்ச்சியில் நவீன அறிவியலின் பங்கு	272
37	சித்த மருத்துவத்தில் நெல்லி	281
38	தஞ்சை ராவ்சாகேப் மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சித்த மருத்துவப் பணி	293
39	சித்த மருத்துவமும் அதன் வளர்ச்சிக்கு வழிகளும்	299
40	சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பத்தியம் ஒரு பத்தியமா?	305
41	சித்த மருத்துவ முன்னேற்றத்தில் சுவடியின் பங்கு	310
42	சித்த மருத்துவத்தில் அவசர சிகிச்சை	321
43	கூடு விட்டுக் கூடு பாய்தல்	328
44	சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழிமுறைகளும்	334
45	தாதுக்கள் ஓர் அறிவியல் ஆய்வு	345
46	சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழிமுறைகளும்	357
47	அம்மை நோய்க்கு அரிய மருந்துகள்	362
48	பத்தாண்டுகள் பயன் தரும் பதங்க முறைகள்	374

வ. எண்,		பக்கம்
49	சித்த மருத்துவத்தில் தமிழ் ஆய்வேடுகளின்பங்கு	381
50	அயச் செம்பு	400
51	சித்த மருத்துவத்தில் பயிரியலின் பங்கு	408
52	சித்த மருத்துவ உய்வுக்கு வழி	411
53	மணி 4000- ஓர் ஆய்வு	416
54	சித்த மருத்துவ முன்னேற்றத்தில் மூலிகைஆய்வு	424
55	மதியமுது உடற்கூறு மற்றும் உடலியங்கியல் ஆய்வுகள்	431
56	யோக மருத்துவம்-மது மேகமும் மறதியும்	441
57	ஓலைச்சுவடியில் சித்த மருத்துவம்-ஓர் ஆய்வு	450
58	Development of Siddha Medicine	465
59	Siddha Vaidyam ways and means for its} Development	469
60	Scope and development of Siddha medicine	474
61	A step towards siddha Anti-dotes for snake-bite	479
62	Yogi's Vision of Vascular occlusions	486
63	தூக்கமின்மையும் யோகத் தியானப் பயிற்சியும்	491
64	பாலர் வாதம்-(40)-ஒரு கண்ணோட்டம்	499
65	சித்த மருத்துவ வளர்ச்சியில் மருந்து செய்முறைகளின் பங்கு	508
66	சித்த மருத்துவத்தில் பலர் போற்றும் புழுவெட்டு மை	515
67	ஒரு நூற்றாண்டு மருந்து	525
68	சித்த மருத்துவத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள்	534

வ. எண்,		பக்கம்
69	சித்த மருத்துவமும் அதன் வளர்ச்சியும்	541
70	சித்த மருத்துவத்தின் வளர்ச்சியில் நவீன அறிவியலின் பங்கு	549
71	சித்தர்கள் ஆய்வு-சித்த மருத்துவ வளர்ச்சி	558
72	வெண்படையும்-பரிகாரமும்	567
73	சித்த மருத்துவம் வளரச் சில வழிகள்	573
74	திருமூலர்-ஓர் ஆய்வு	576
75	தெய்வீக மூலிகைகள்	581
76	சித்த மருத்துவ வளர்ச்சிக்கான வழிமுறைகள்	587



பாதரசம் சேர்ந்த மருந்துகள்
சில அனுபவங்கள் - சில கருத்துக்கள்
MERCURIAL PREPARATIONS - SOME OBSERVATIONS - SOME SUGGESTIONS

மரு. புது. ஜெயப்பிரகாஷ் நாராயணன், எம்.டி. (சித்தா)
இணைப்பேராசிரியர் - மருத்துவம்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை

முன்னுரை

சூதகந்தீ தாதுபற்பம் சொன்னநாட்டார் சிகிச்சை
ஓதரியமூலி இம்மண்ணூர் சிகிச்சை - வேதடரும்
சத்திரசாராக்கினி நிசாசரச் சிகிச்சையென்றே
முத்தரத்தது ஆகும் மொழி -பதார்த்த குண சிந்தாமணி

தாதுப்பொருட்களைக் கொண்டும் பாதரசத்தை-அடிப்படையாகக் கொண்டும் (Minerals and Metals) செய்யப்படுகின்ற மருத்துவமே சிறந்த மருத்துவம் என அனுபவ அறிவினால் உறுதிப்படுத்தியவர்கள் சித்தர்கள். இன்று அரசினரால் நடத்தப்பெறுகின்ற சித்தமருத்துவ மனைகளில் பல வகையான பாதரச மருந்துகள் (Mercurial Preparations) உள்ளுக்கு வழங்கப்படும் மருந்துகளாகவும் புறப்பூச்சு மருந்துகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் பயன்கள் கண்கூடாகக் கண்டவை. இன்றைய அறிவியலில் உன்னதமான அளவிற்கு உயர்ந்திருக்கின்ற நவீன மருந்தியல் துறையில் அவர்கள் பயன்படுத்திய பாதரசம் சேர்ந்த மருந்துகள் ஆபத்தானவை எனக் கண்டறியப் பட்டுப் பாதரசம் சேர்ந்த மருந்துகள் பெரும்பாலானவை அவர்களுடைய பாடப் புத்தகங்களில் இருந்து அகற்றப்பட்டு விட்டன.

சித்த மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படுகின்ற பாதரசம் சேர்ந்த பச்சை வெட்டு மருந்துகளைப் பொறுத்தவரை மேற்கண்ட நவீன அறிஞர்களின் கருத்துக்கள் பெருமளவுக்குப் பொருத்தமுடையனவாக இருக்கலாம். முறையாகத் தூய்மைப் படுத்தப்பட்டு இரசாயணச் சமையலுக்கு உட்படுத்தப்படுகின்ற பாதரச மருந்துகளுக்கு இந்த மதிப்பீடு பொருந்தாது. பாதரசத்தோடு சேர்கின்ற ஏனைய மருந்துப் பொருட்கள், துணை மருந்துகள், பத்தியமுறைகள் இவைகளெல்லாம் பாதரச மருந்துகள் உடலில் செயல்படும் முறையைச் (Pharmacodynamics) சீர்படுத்துகின்றன எனக் கருத இடமிருக்கிறது.

நடைமுறையில் உள்ள இரசக் கலப்புள்ள மருந்துகள்:

உள்மருந்துகள்

1 அய வீரம்	(Mercuric Chloride)
2 ஆறுமுகச் செந்தூரம்	(Mercury)
3 இலிங்கச் செந்தூரம்	(Red Sulphide of mercury)
4 கௌரி சிந்தாமணி	(Mercury)
5 சண்டமாருதச் செந்தூரம்	(Mercuric chloride, mercurous chloride, red sulphide of mercury)
6 சிவனார் அமிர்தம்	(Mercury)
7 இரசகந்தி மெழுகு	(Mercury,Mercurous chloride)
8 படிகலிங்கத்துவர்	(Red sulphide of mercury)
9 பூரணச் சந்திரோதயம்	(Mercury)
10 வெள்ளை எண்ணெய்	(Calomel)
11 பரங்கிப்பட்டைப் பதங்கம்	(Mercury, Cinnabar)
12 பட்டுக் கரும்பு	(Cinnabar, mercury, mercburic chloride, mercurous chloride)

13 கஸ்தூரிக் கரும்பு	(Mercury, calomel, cinnabar, red sulphide of mercury)
14 இடிவல்லாதி	(Calomel)
15 மேகநாதக் குளிகை	(Cinnabar, red sulphide of mercury)
16 அகத்தியர் குழம்பு	(Mercury)
17 சாந்தச் சந்திரோதயம்	(Calomel)
18 வசந்த குசுமாகரம்	(Cinnabar)
19 பிரமானந்த பயிரவம்	(Cinnabar)

புற மருந்துகள்

1 அமிர்த வெண்ணெய்	(Mercuric chloride)
2 மேகவிரணக் களிம்பு	(Mercury, calomel, mercuric chloride, cinnabar)
3 வங்க விரண களிம்பு	(Calomel, Red sulphide of mercury)

இன்னும் பல இரசக் கலப்புள்ள மருந்துகள் பரம்பரை மருத்துவர்களால் கையாளப்படுகின்றன. விரிவு கருதி இங்கே குறிப்பிடப்படவில்லை.

நுட்ப மருத்துவம்

பாதரசத்தையும், பாதரசக் கலப்புள்ள மருந்துகளையும் கையாளுவதில் தற்கால மருத்துவ விஞ்ஞானிகளைவிடச் சித்தர்கள் மிக விரிவான அனுபவ அறிவு பெற்றிருந்தார்கள் என்பதற்குப் போதுமான நூலாதாரங்கள் உண்டு. இலிங்கத்திலிருந்து இரசத்தைப் பிரித்தெடுத்தல் (Desturctive distillation of mercury from cinnabar by sublimation) தங்கம், வெள்ளி, வெள்ளீயம் ஆகியவற்றில் இரசத்தைச் சேர்த்து இரசக் கலவையை (Amalgam) உண்டாக்கி லோகமாரணம் செய்து மருந்தாக்கிப் பயன்படுத்தியது சித்தர்களுடைய மருந்தியல் (Lacto-chemistry) அறிவுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

நவீன மருத்துவத்தில் பாதரசக் கலப்புள்ள மருந்துகள் சிறுநீர் பெருக்கிகளாகவும் (Diuretics) மேகப்பிணி விலக்கியாகவும், (Anti-syphilitic) மலமிளக்கியாகவும் (Laxative), அழுகலகற்றியாகவும் (Anti-septic) சில தோல் நோய்களில் வெளிப் பிரயோகமாகவும் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால் சித்தர்கள் மேற்குறித்த நிலைகளில் மட்டுமல்லாமல் சுரப்பிணி, குன்மம், கழிச்சல் நோய்கள், கீல்வாத நோய்கள், புற்று நோய்கள் ஆகியவற்றில் தேவைக்கேற்ப உள் மருந்தாகவும், புற மருந்தாகவும் பயன்படுத்தி வந்திருப்பது இரச மருந்தியலில் அவர்களின் ஆழ்ந்த நுட்பத்தையும் அனுபவத்தையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

மேலும் வயிற்றுப்புண், கீல்களில் ஏற்படும் அழற்சி புற்றுநோய் போன்ற நோய்களில் சித்த மருத்துவத்துறையில் வழங்குவதைப் போல் வழங்குவதில்லை. நவீன மருத்துவ அறிஞர்களைக் கேட்டால் மேற்குறித்த மருந்துகளை விடச் சிறந்த மருந்துகளைக் கண்டறிந்திருக்கின்றோம் எனச் சொல்வார்கள். எது சிறந்தது என்பதை ஒப்புநோக்கிய ஆய்வுகள் நடத்தினால்தானே கண்டறிய முடியும். ஒப்பு நோக்கும் ஆய்வு நடத்த வேண்டும் என்றால் நம்மால் அது முடியாது. சித்த மருத்துவத்துறையோடு தொடர்புடைய நவீன மருந்தியல் அறிஞர்களும் மருத்துவ மனைக்குச் சென்று நோயாளிகளை அணுகும் கல்வி அறிவு இல்லாதவர்களாக (Non-clinical Pharmacologyst) இருக்கின்றார்கள். இவர்களே சித்த ரச மருந்துகள் மேற்கண்ட நோய்களைத் தீர்க்கும் தன்மையுடையவை என்று சொன்னாலும் மருத்துவ மனையில் வழங்கிய அனுபவத்தை வைத்துச் சொல்கிறார்களா என்ற கேள்வி எழத்தான் போகிறது.

சித்த மருத்துவத் துறையில் வழக்கத்தில் உள்ள பாதரச மருந்துகள் எந்த அளவிற்கு மருத்துவப் பயன் உடையவை. தீய குணங்கள் இல்லாமல் எந்த அளவிற்குப் பயன்படுத்தத் தக்கவை என்பதை நவீன மருத்துவ அறிஞர்களோடு இணைந்து ஆய்வுகள் நடத்த வேண்டும்.

இத்தகைய ஆய்வுகள் நடத்தப்பட்டாலும் நடத்தப் படாவிட்டாலும் பாதரச மருந்துகள் சித்த மருத்துவத் துறையிலிருந்து வழக்கொழிந்துபோய் விடப்போவதில்லை. ஒப்பு நோக்கிய ஆய்வுகள் நடத்தினால் இன்னும் அதிகமான மக்கள் இதன் பயனைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படலாம்.

குடற்பகுதியில் மட்டுமே அதிகமாக, குறிப்பாக செயல்படக் கூடியதாகவும், அதே நேரத்தில் உடலில் அதிகமாக ஈர்க்கப்படாமல் செயல்படக்கூடிய இரச மருந்தைப் பயன்படுத்த வேண்டுமென்று கழிச்சல் நோய்களுக்கான மருந்துகளில் இலிங்கத்தைச் சேர்த்தது வியக்கத் தக்க சித்தர்களுடைய பட்டறிவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

இரச நஞ்சு பற்றிய அறிவு

நன்றாக முடிக்கப்பெறாத அல்லது பொருத்தமான முறையில் வழங்கப்படாத இரச மருந்துகள் எத்தகைய கேட்டினை விளைவிக்குமென்பதைக் குறி குணங்கள் வாயிலாகச் சித்தர்கள் விளக்கியிருப்பது இன்றைய நவீன மருத்துவ அறிஞர்கள் விளக்குகின்ற இரச நஞ்சுக் குறி குண இயலுக்குப் பொருந்துவனவாகவே உள்ளன. பிருக்கப் (Kidney) பாதிப்பை ஏற்படுத்தி உடலை வீங்கச் செய்வது, செரிமான மண்டலத்தில் தீவிர அழற்சியை ஏற்படுத்தல், நரம்பு மண்டலத்தைத் தாக்கி மனநோய் குறிகுணங்களை ஏற்படுத்துதல், இவற்றையெல்லாம் சித்தர்கள் நன்கு கவனித்துப் பதிவு செய்திருக்கின்றனர்.

இதற்காக அவர்கள் குறிப்பிட்டிருக்கிற இரச நஞ்சு முறிவுகளும் நல்ல பயனை அளிக்கின்றன. உயிர்வேதியியல் அடிப்படையிலும், வேதியல் அடிப்படையிலும் இவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை கண்டறிந்தால் இரச மருந்துகளை மிகச் சிறப்பான முறையில் கையாளலாம்.

இரச மருந்துகளைப் பற்றிய எனது சில அனுபவங்கள்:

இன்றைக்கு சித்த மருத்துவத்துறையில் பரவலாக, மிக அதிகமாகக் கையாளப்படுகின்ற இரசக் கலப்புள்ள மருந்துகளில் மிக முக்கியமான ஒன்று இரசகந்தி மெழுகு. இந்த மருந்தை ஒரு வேளைக்கு ஒரு கிராம் வீதம் ஒரு நாளைக்கு இருவேளை வீதம் முப்பது நாட்களுக்குத் தொடர்ந்து கொடுத்தாலும், அதன் பின் சோதனைக்குட்படுத்தப்பட்ட நோயாளியின் இரத்தத்தில் அல்லது சிறுநீரில் பாதகமான குறிகள் எதையும் காண முடிவதில்லை.

ஏனைய மருந்துகளோடு கலப்புறுகின்ற போது இரச மருந்துகளின் உலோக நச்சுத்தன்மை இழப்பதோடு மட்டுமல்லாமல் அருத்துத் தன்மையிலும் பாதுகாப்பான தன்மையோடு செயல்படுவதை நமது பட்டறிவு காட்டுகின்றது. நாட்பட்ட கீல்வாத நோய் (Rheumatoid arthritis), தொழுநோய் (Leprosy) போன்ற நோய்களுக்காக ஒரு மாதத்திற்கு ஒரு வாரம் இடைவெளிவிட்டுத் தொடர்ச்சியாக ரசசந்தி மெழுகு உண்டு வருகிறவர்களுக்கு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை (Serum Creatinine Blood Urea) மற்றும் சிறுநீரில் புரதச்சத்து, சீழ் அணுக்கள், சிவப்பு அணுக்கள் இருக்கின்றனவா என்று கவனித்துக் கொள்கிறேன். ஆனால் இரச மருந்துகள் பிருக்கம் (Kidney) ஈரல் மற்றும் நரம்பு மண்டலத்தின் மீதும் கடுமையான நச்சுத் தன்மையை ஏற்படுத்த வல்லது என்ற நவீன அறிஞர்களின் கணிப்பை எப்போதும் கருத்தில் கொண்டிருக்கிறோம்.

அத்தகைய மதிப்பீடு மகா வீரமெழுகு வான்மெழுகு போன்ற இரச சம்பந்தமான பச்சைவெட்டு மருந்துகளை வழங்குகின்றபோது நமது அனுபவத்திலும் ஒத்து வருவதாகவே உள்ளது. அம்மெழுகுகளை அம்மருந்துகளின் குறைந்த அளவாகிய 50 மி. கிராம் அளவில் நாளுக்கு இரண்டு முறை என்ற கணக்கில் கொடுத்த மூன்று நான்கு தினங்களிலேயே வாயில் உலோகச் சுவை, முகம் வீங்குதல்,

தோலில் அரிப்பு போன்ற நச்சுக் குறிகுணங்களைக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட நோயாளிகளில் பலரின் சிறுநீர் பரிசோதனையின்போது புரதச் சத்தின் தடையம் (Trace of Alubumen) இருப்பதையும் கவனித்திருக்கிறேன்.

ஆனால் சண்ட மாருதம், அயவீரம் ஆகிய மருந்துகளில் நிலைமை வேறு விதமாக இருக்கிறது. இவற்றைத் தேனில் குழப்பிக் கொடுப்பதால் இம்மருந்துகள் பெரும்பாலும் வாய்ப்புண், அல்லது ஈறு அழற்சியை ஏற்படுத்தி விடுகின்றன. ஆனால் மகாவீர மெழுகைப் போலவோ வான் மெழுகைப் போலவோ வழங்கிய இரண்டு மூன்று நாட்களிலே நச்சுத் தன்மையைத் தோற்றுவிப்பதில்லை. சிலரில் 20 முதல் 30 நாட்கள் வழங்கிய பின்னரே நச்சுக் குறிகுணங்கள், நோயாளிகளால் மருத்துவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

நன்றாக முடிக்கப்பெறாத நிலையில் இரண்டாம் நாளிலேயே சண்ட மாருதத்தின் நச்சுத் தன்மையால் வாய் வீங்கியவர்கள் உண்டு.

என்னுடைய நோயாளிகளில் நீண்ட கால இரச மருந்து சிகிச்சை தேவைப்படுகின்ற நோயாளிகளுக்குச் சண்ட மாருதத்தை 10 முதல் 20மி. கிராம் அளவிற்கு மிகாமல் 500 மி.கி. அமுக்கிராச் சூரணத்தில் கலந்து ஒரு நாளைக்கு 2 முறை கேப்சூல்களில் போட்டு விழுங்கச் செய்து, அரைத் தேக்கரண்டி தேனைக் குடிக்கச் சொல்வேன். இவர்களில் ஒரு மாத காலம் விழுங்கினாலும் எந்தவித நச்சுத்தன்மையும் தோன்றுவதில்லை என்பதைக் கவனித்திருக்கிறேன். இந்த நோயாளிகளின் நீர்ப்பரிசோதனை, இரத்தப் பரிசோதனைகளும் பாதகமான அறிவிப்புகளை ஏதும் தரவில்லை.

ஏனைய மருத்துவத் துறைகளில் மருத்துவம் பெற்றும் வலியின் காரணம் கண்டறியப் படவில்லை. (Pain of unknown origin) வலியும் குணமாகவில்லை என வந்த மூன்று நோயாளிகளில் சண்டமாருதத்தை வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறேன்.

இந்த மூன்று நோயாளிகளில் இருவர் (Sciatica) வை ஒத்தைக்கால் வலியினாலும் ஒருவர் Brachial neutalgia வை ஒத்தைக் கை வலியினாலும் பல மாதங்களாகச் சிரமப்பட்டவர்கள்.

சண்ட மாருதத்தை மிகக் குறைந்த அளவில் அமுக்கிராச் சூரணத்துடன் வழங்குகின்றபோது அதன் கூட்டுச் செயல்பாடு சண்ட மாருதத்தின் நச்சுத் தன்மையைக் குறைத்து மருத்துவத் தன்மையை மேம்படுத்துவதாகத் தெரிகிறது. இரசக் கலப்பினால் திசுக்கள் சேதமடையாமல் சண்டமாருதம் காப்பதாகத் தெரிகிறது.

அண்மையில் போபாலில் நச்சுக்காற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தோன்றிய புண்களைப் பரிகரித்து இலட்சுமணபுரி கிங் ஜார்ஜ் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் நரேந்திர சிங் இரசாயணங்களால் திசுக்களில் ஏற்படுகின்ற சேதத்தை அமுக்கிரதடுப்பதாக அவரது ஆய்வின் முடிவை அறிவித்திருக்கிறார்.

பூரம் (Mercurous chloride) சேர்ந்த மலமிளக்கி மருந்துகள் முந்தைய நாட்களில் நவீன மருத்துவத் துறையில் வழக்கில் இருந்து வந்ததாகவும், அதன் நச்சுத் தன்மை கிட்னியைப் பாதிக்கும் அறிகுறிகள் ஆய்வுகளில் நிரூபிக்கப்பட்டதால் மருத்துவ வழக்கில் இருந்து அகற்றப்பட்டு விட்டதாகவும் அறிகின்றோம்.

ஆனால் சித்த மருத்துவத் துறையில் சிற்றாமணக்கெண்ணெய், ஏலாரிசி, சுக்கு இவை சேர்த்துச் செய்யப்படுகின்ற வெள்ளை எண்ணெய் மிகச் சிறப்பான

மலமிளக்கியாகப் பயன்பட்டு வருகிறது. சிற்றாமணக் கெண்ணெய் குடித்தவர்களுக்குக் கழிச்சலைத் தொடர்ந்து ஏற்படுகின்ற மலச்சிக்கல், வெள்ளை எண்ணெய் வழங்கப்படும் போது காணப்படுவதில்லை. இப்படி வெள்ளை யெண்ணெய் வழங்கப்பட்டவர்களில் பூரத்தினால் பிருக்க நச்சுத்தன்மை ஏற்பட்டிருக்குமா என்பதைக் கண்காணிக்கும் வகையில் வெள்ளை எண்ணெய் வழங்கப்பட்ட மறுநாள் இத்தகைய இருபது நோயாளிகளின் சிறுநீர் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டதில் எந்த விதமான பாதகமான விளைவுகளையும் கவனிக்க இயலவில்லை.

கீல்வாத நோய்க்கு மருத்துவம் பெறுகின்றவர்களுக்கு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை அல்லது நான்கு வாரத்திற்கு ஒரு முறை வெள்ளை எண்ணெயை 15 மி.லி. வழங்கி வருகிறோம். அவர்களில் எந்தவித பாதகமான நச்சுக்குறி குணங்களையும் காண இயலவில்லை.

இரசகற்பூரத்தோடு சிற்றாமணக்கெண்ணெயும் அவற்றின் நச்சுத் தன்மையை இழந்து அவற்றின் மருத்துவப் பயனை மட்டுமே காட்டுகின்ற வகையில் வெள்ளையெண்ணெயின் மருத்துவக் கட்டு அமைந்திருக்கின்றது. மேலும் வெள்ளையெண்ணெய் வழங்கப்பட்டவருக்குக் கழிச்சலை நிறுத்தும் பொருட்டு After purgative வழங்க வேண்டிய அவசியம் நேர்ந்தது கிடையாது.

பாதரச வெளிப்பூச்சு மருந்துகள்:

(TOPICAL APPLICATIONS)

நவீன மருத்துவத் துறையில் வெளிப்பிரயோகத்திற்குப் பயன்படுத்துகின்ற களிம்புகளில் பாதரசத்தைச் சேர்ப்பதை அடியோடு நிறுத்திவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குச் சொல்லப்படுகின்ற காரணம் இத்தகைய களிம்புகளில் சேர்கின்ற இரசம் உடல் குருதிச்

சுற்றோட்டத்தினுள் ஈர்க்கப்பட்டுப் பொதுவான நச்சுக் குணங்களைக் காட்டலாம் என்பதே. சுரம், தோல், அரிப்பு முதலிய நச்சுக் குறிகுணங்களைக் கவனித்திருப்பதாகப் பதிவும் செய்திருக்கின்றனர். ஆனால் நடைமுறையில் சித்த மருத்துவர்கள் அமிர்த வெண்ணெய், மேகவிரணக் களிம்பு, ஆகியவற்றைப் பரவலாகவும், அடிக்கடியும் பயன்படுத்தி வருகின்றோம். இவை நச்சுக் குணங்களைத் தோற்றுவிப்பதை எனது இருபது ஆண்டு கால அனுபவத்தில் பார்த்ததில்லை. குறிப்பிட்ட இடத்தில் மட்டும் செயல்படுமாறு அதனுடைய இரசாயனக் கலவையை எவ்வாறு அழைத்துள்ளனர் என்பதை இரசாயன அறிஞர்களைக் கொண்டு ஆய்வு செய்தால் இத்தகைய மருந்துகளைத் தரக்கட்டுப்பாடு செய்ய வசதியாக அமையும்.

ஆனால் இத்தகைய தரக்கட்டுப்பாடுகளைச் செய்வதற்கு மிக நுட்பமான தொழில் நுட்ப வசதிகள் தேவைப்படுவதாக அறிகிறோம். எடுத்துக்காட்டாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். சென்னையிலுள்ள சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் அதனுடைய பொறுப்பு இயக்குநர் டாக்டர் ஜி. வேலுச்சாமியின் வழிக்காட்டுதலில், இலிங்கச் செந்தூரத்தில் சுரத்தைக் குறைக்கும் ஆற்றலை மதிப்பீடு செய்திருக்கின்றனர். இலிங்கச் செந்தூரத்தை 200 முதல் 300 மி.கிராம் வரை பாதுகாப்பாக வழங்கலாம். ஆனால் இலிங்கச் செந்தூரம் வழங்கப்பட்ட நோயாளிகளில் இரத்தத்தைச் சோதித்துப் பார்த்ததில் அதில் பாதரசத்தின் தடயமே கிடைக்கவில்லை. சிறுநீரிலும் அதற்குரிய அறிகுறிகள் காணப்படவில்லை என்கின்றனர்.

அண்மையில் சென்னை மைய சித்த வைத்திய ஆராய்ச்சி மாளிகையின் மருந்தியல் நிபுணர் திரு கோஷ் அவர்கள் நெல்லை சித்த மருத்துவக் கல்லூரிக்கு வந்திருந்தபோது இதுபற்றிக் கலந்துரையாடினேன். அவர்களுடைய கருத்துப்படி கொஞ்சமாவது பாதரசம்

இரத்தத்தில் கலந்திருக்கக்கூடும். ஆனால் அதை அறுதியிட்டு ஆராயக்கூடிய வசதி இந்தியாவில் மிகச் சில அணுசக்தி நிலையங்களிலேயே இருக்கக்கூடும் என்றார்.

பாதரசம் சித்த மருத்துவத் துறையில் பயன்படுத்தாத பிரிவுகளே கிடையாது எனலாம். ஆகவே அத்தகைய சிறந்த பாதரச மருந்துகளைத் தரக்கட்டுப்பாடு செய்வதற்கு நுட்பமான கருவிகளோடு கூடிய மருந்துத் தரக்கட்டுப்பாடு நிலையம் ஒன்றினை நிறுவிட வேண்டும்.

முடிவுரை

சித்தமருத்துவத்தின் சிறப்பிற்குக் காரணமாக இருப்பவை அதனுடைய பாதரசக் கலப்புள்ள மருந்துகளே. பாதரச மருந்துகள் முக்கிய உறுப்புகளுக்குக் கேடு செய்யலாம் என்ற எச்சரிக்கையை நவீன மருந்தியல் அறிஞர்கள் தந்துள்ளனர். ஆனால் நடைமுறையில் இத்தகைய அச்சம் எல்லாப் பாதரச மருந்துகளுக்கும் பொருந்துவதில்லை என்பதைக் கண்டிருக்கிறோம். நன்றாக முடிக்கப் பெறாத, முறைகேடாக வழங்கப்படும் இரசமருந்துகளால் தீங்குகள் ஏற்படும் என்பதிலே நமக்கும் உடன்பாடுதான். ஆகவே பாதரச மருந்துகளை நீண்ட கால நோய்களுக்கு வழங்குகின்ற காலத்தில் முக்கிய உறுப்புகளுக்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றனவோ என்பதை ஆய்வுக் கூடப் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்துக் கொள்வது பாதரச மருந்துகளைச் சிறந்த முறையிலும் ஆபத்து இல்லாமலும் வழங்குவதற்கு உதவியாக இருக்கும். நவீன வேதியல் அறிஞர்களும், உயிர் வேதியல் அறிஞர்களும், மருந்தியல் அறிஞர்களும், மருத்துவ அறிஞர்களும் அவர்களுக்குள்ள வாய்ப்பிற்கு ஏற்பச் சித்த மருத்துவத்திலுள்ள இரச மருந்துகளை ஆய்வு செய்ய முன் வரவேண்டும். அப்படி முன்வந்தால் உலக மக்களுக்குப் பயன்படும் விதத்தில் இன்னும் சிறந்த முறையில் பாதரச மருந்துகளைப் பயன்படுத்தலாம்.

துணை நூல்கள்

1. குணபாடம் - தாது சிவ வகுப்பு மருத்துவர் ஆர்.தியாகராசன் அவர்கள்

2. சித்தா பார்மகோபியா அடையாறு கூட்டுறவு மருந்துகள் செய்கூடம்.

3. Pharmacology and Pharmaco Therapeutics by R. S. Satoskar & S. D. Bhandarkar.

இத்தகைய பணிகளில் என்னை ஊக்குவித்து வருகிற பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.வீ. சுப்பிரமணியன் , எம்.டி., (சித்தா) அவர்களுக்கும், என்னோடு கலந்துரையாடிப் பயன்மிக்க விமர்சனங்களைத் தருகின்ற எனது மாணவ மணிகளுக்கும் என்னுடைய நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலக்கியம் விளம்பும் மருத்துவம்

அறிஞர் பா. வளன்அரசு, எம்.ஏ., பி.எட்., பி.எச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், தூய யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.-2)

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது தமிழ்ப் பழமொழி. உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்று கூறும் திருமூலர், உடம்பார் அழியின் உயிரார் அழிவர் திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவுமாட்டார் என்று தெளிவு தருவார். வலிவான உடலில் பொலிவான உள்ளம் தழைக்கும் நல்வாழ்வுக்கு வழி சொல்லும் மருத்துவக் கூறுகள் பல தமிழ் இலக்கியத்தில் வீறுடன் விளங்குகின்றன. உடல் சித்தி பெறவும் உயிர் முத்தியுறவும் விழைந்து உழைத்த பெருமக்கள் சித்தர் எனப் போற்றப்பட்டனர். நோய்வாய்ப்பட்டோரை முழுமையாக ஆராய்ந்து மருந்து தருவதே முறையாகும். நாடி பிடித்துப் பார்த்து ஆராய்வது சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்பாகும். வாழ்நாளில் வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகியவை அடுத்தடுத்து வரும் என்பர். வாதத்தைப் போக்க எண்ணெயும் பித்தத்தை நீக்கச் சந்தனமும் பயன்படும். வாதம் கூடினால் புளிப்பும், பித்தம் ஏறினால் கசப்பும், சிலேத்துமம் சேர்ந்தால் இனிப்பும் நாவில் தோன்றுமாம்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திருமூலர் மனித உடலில் எழுபத்திரண்டாயிரம் நரம்புகள் உள்ளன, அவற்றுள் பத்து நரம்புகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன என்பர். மருந்துக்கு விளக்கம் வழங்கும் திருமூலர், உடல் நோயையும் உள்ளப் பிணியையும் தடுப்பது மருந்து, நோய் நீக்கமே நோக்கம், சாவைத் தள்ளிப் போடுவதே மருந்தின் ஆற்றல் என்பர்.

மறுப்பது உடல்நோய் மருந்தென லாகும்
மறுப்பது உளநோய் மருந்தென லாகும்
மறுப்பது இனிநோய் வரா திருக்க
மறுப்பது சாவை மருந்தென லாமே

திருமூலர் அருளிய திருமந்திரம் பன்னிரு திருமுறைகளுள் பத்தாவதாக இடம் பெற்றுள்ளது. நோய்வாய்ப்பட்டவரை ஆராய நாடி, குரல், தொடுபுலம், விழி, நாவு, மேனி, மலம், சிறுநீர் ஆகிய எட்டினையும் நோக்குவர்.

நாடியால் முன்னோர் சொன்ன நல்லொலி பரிசத்தாலும்
நீடிய விழியினாலும் நின்ற நாக்குறிப் பினாலும்
வாடிய மேனியாலும் மலமொடு நீரினாலும்
சூடிய வியாதிதன்னைச் சுகமுடன் அறிந்து பாரே.

அகத்தியர் பலர்:

பொதிகைமலைச் சாரலில் வாழ்ந்த அகத்திய முனிவர் பெயரால் பல்வேறு மருத்துவ நூல்கள் வழங்கப்பெறுகின்றன. அவற்றை ஆராய்ந்தால் அகத்தியர் ஒருவர் அல்லர், பதின்மர் என்பது புலப்படும். அகத்தியர் பெருந்திரட்டு, அகத்தியர் இருபத்தொன்றாயிரம், அகத்தியர் இரண்டாயிரம் அகத்தியர் மணி நூலாயிரம், செந்தூரம் முந்நூறு, கரிசல், வைத்திய சிந்தாமணி, வைத்திய காவியம், மூலிகைக் காண்டம், அகஸ்தியர் பூரண சூத்திரம் ஆகியவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

சங்க ஏடுகள்:

மூலிகை பற்றியும், மருத்துவர் குறித்தும், பழந்தமிழ் ஏடுகளாகிய சங்க நூல்களில் சான்றுகள் உள்ளன. வாயுறை வாழ்த்து என்னும் அறிவுரை பற்றி எடுத்தியம்பும் தொல்காப்பியர் கசப்பான மூலிகைகளான வேம்பும் கடுவும் முதலில் வெறுக்கப்பட்டாலும் முடிவில் நலம் பயப்பதால்

பெரிதும் விரும்பப்படும் என்பர். சங்கப் புலவருள் ஒருவராகிய உறையூர் மருத்துவன் தாமோதரனார் அகநானூற்றில் இருபாக்களும் (138, 257) புறநானூற்றில் மூன்று பாக்களும் (60, 170, 321) நல்கியுள்ளார். மரத்திலிருந்து மருந்து எடுப்பது பற்றிப் புறநானூறும் (180) மருத்துவன் மருந்து கொடுப்பது பற்றி நற்றினை (136) பாலைக்கலி (17) ஆகிய நூல்களும் நவில்கின்றன. கலித்தொகையும் பெருங்கடுங்கோ மருத்துவரின் மருந்து பயன் தரவும் உடல் நலம் பெறவும் முறையாகவும் அறநெறிப்படியும் வாழவேண்டும் என வலியுறுத்துவர்.

திருவள்ளுவரும் மருந்தும்:

வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிமொழியும் திருவள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தின் வாயிலாகப் பத்துக் குறட்பாக்களில் மருத்துவநுட்பங்களை ஒட்பமாகவும் திட்பமாகவும் தெரிவித்துள்ளார். உடலை நொய்யதாக்கும் நோயினை மூவகைப் படுத்தி முன்னோர் மொழிந்ததை நினைவு படுத்துவர்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று (941)

காற்று, நெருப்பு, நீர் ஆகியவை கூடினாலும் குறைந்தாலும் முறையே வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற நோய்கள் தோன்றும். பழங்காலத்துச் சீன மருத்துவமும் இப்பாகுபாட்டை விளம்புகிறது. ஆயுர்வேதமும் திரிதோடக்கொள்கை என்று இதனைச் செப்புகிறது. நோயின் இயல்பினை அறிந்து, நோயின் காரணத்தை ஆராய்ந்து அதனை நீக்கும் நெறியை உணர்ந்து, ஏற்ற மருந்தினைக் கையாள வேண்டுவர் வள்ளுவர்,

நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (948)

மருத்துவராகிய கற்றறிந்தவர் நோயுற்றவரது, தகுதி, நோயின் அளவு, காலநேரச் சூழ்நிலை ஆகியவற்றை ஆராய்ந்து ஏற்ற மருந்தைக் கையாளத் தூண்டுவர்.

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல் (949)

மருத்துவம் நான்கு கூறுகள் கொண்டது. நோய்வாய்ப்பட்டவர், மருத்துவர், மருந்து, உதவுபவர் ஆகிய நான்கு பகுப்பும் சேர்ந்து மருந்து ஆகும்.

உற்றவன் தீர்ப்பான் மருந்துஉழைச் செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து (950)

கீழ்க்கணக்கு நூல்கள்

அறநூல்களுள் மூன்று திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி என மருந்துகளின் பெயரால் அமைந்துள்ளன. சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் சேர்ந்து திரிகடுகம் உடல் நோயைப் போக்கும். மும்மூன்று கருத்துக்கள் கொண்ட திரிகடுகம் உள்ளத்திற்கு மருந்தாகும். கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்தும் கலந்த சிறுபஞ்சமூலம் போன்று பாடல்தோறும் ஐந்து செய்ய செப்பும் நூல் உள்ளத்துக்கு எழுச்சியூட்டும். ஏலம், இலவங்கம், தக்கோலம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய ஆறும் இணைந்த ஏலாதி மருந்துப் பொருளாகும். ஒவ்வொரு பாவிலும் ஆறு கருத்துக்கள் கொண்ட ஏலாதி நூல் வாழ்க்கைக்கு விருந்தாகும். ஆசாரக்கோவை குளிப்பது, உண்ணுவது, உறங்குவது, வேண்டுவது போன்று பல்வேறு ஒழுக்க முறைகளைக் கோவையாக்கிக் கூறும் நூலாகும். திருவள்ளுவமாலைப் பாடல் ஒன்று சீந்தில் கொடி, நீர்க்கண்டம் ஆகிய இரு மூலிகைகளுடன் சுக்குப் பொடியைத் தேன் கலந்து முகர்ந்தால் தலைவலி தீரும் எனத் தெரிவிக்கின்றது.

சிந்திநீர்க் கண்டம் தெரிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்து இல் (11)

இரட்டைக் காப்பியங்கள்

இளங்கோ எழுதிய சிலப்பதிகாரம், பூம்புகார் மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் என இரு பகுப்புடன் துலங்கியதாக விளம்புகிறது. பட்டினப் பாக்கத்தில் வணிகர், கணியர், மருத்துவர் ஆகியோருக்குத் தனித்தனியே குடியிருப்புகள் இருந்தனவாம். விளங்கிய கொள்கை ஆயுள்வேதரும் காலக்கணிதரும், அங்கே வாழ்ந்த செய்தியை இந்திர விழாவூரெடுத்த காதை எடுத்தியம்புகிறது. சாத்தனார் யாத்த மணிமேகலையில் துயிலெழுகாதை மருத்துவம் பற்றி எடுத்துமொழிகிறது.

ஏற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
கடுஞ்சூல் மகளிர் நெடும்புண் உற்றோர்
தன்துயர் கெடுக்கும் மந்திரமாக்கள் (81-83)

வைணவ இலக்கியங்கள்

கம்பர் அருளிய இராம காதையுள் கும்பகருணன் வதைப் படலம் புண்ணை ஆற்றும் முறையினை விளக்கமாக எடுத்துரைக்கின்றது.

உடலிடைத் தோன்றிற்று ஒன்றை அறுத்து அதன் உதிரம் மாற்றி சுடலுறச் சுட்டுவேறோர் மருந்தினால் துயரம் தீர்வார், நாலாயிரத் தெய்வப் பனுவல்களுள் குலசேகரர் பாசுரம் மருத்துவர் பற்றிய உவமையினை எடுத்தாண்டுள்ளது.

இறைவனிடம் ஆன்மா பற்றுறுதியுடன் விளங்க வேண்டுவர். பிற்கால சோழர் காலத்தில் இராசராசன் தமக்கை குந்தவையார், ஆதுல சாலை ஆகிய மருந்தகத்தினைக் குடந்தையிலும், தஞ்சையிலும் நிறுவி, நிலக்கொடைகள் நல்கி மருத்துவருக்கும் ஊழியருக்கும் ஊதியம் வழங்கிட ஆவன செய்தார். தஞ்சாவூர், திருமுக்கூடல், குன்றத்தூர்க் கல்வெட்டுக்கள் இச்செய்தியைப் புலப்படுத்துகின்றன.

சித்தர் பெருமக்கள்:

பதினைந்தாம் நூற்றாண்டினரான தேரையர் பல்வேறு மருத்துவ நூல்கள் நல்கியுள்ளார். தேனும் இஞ்சியும் சுருக்கமும் மூப்பாம் முதுமையும் நீக்கும் ஆற்றல் மிக்கவை. அத்திப்பிஞ்சு, கோவைப்பிஞ்சு, மாமரப்பட்டை, செருப்படி மூலிகை ஆகிய நான்கையும் ஒரே அளவில் கலந்து, வாழைப்பூச்சாறு விட்டு மையாக அரைத்து நெல்லிக்காய் உண்டால் சீதபேதியும், இரத்த பேதியும் நீங்கும் என்பர். சிகாமணி, நாண்மாலை, வைத்தியப்பள்ளு, நீர்நிறக்குறி, நெய்க்குறி, நோய்மருந்தளவை, தைலவருக்கச் சுருக்கம், தேரையர் வைத்தியம் என்னும் எட்டு நூல்களும் தேரையரின் மருத்துவத் திறத்தைத் தெளிவுறுத்துகின்றன.

பதிணென் சித்தர் பால வாகடம் அகப்பைச் சித்தர், சட்டைமுனி, உரோமமுனி, புலிப்பாணி, பாம்பாட்டிச் சித்தர், கொங்கணவர், இராமதேவர், ஆகியோரின் மருத்துவக் கூறுகளை எடுத்துரைக்கின்றது. பாம்பாட்டிச் சித்தர் மருத்துவத்தில் மேகவெட்டை நோய்க்குச் செருப்படி மூலிகையைப் பயன்படுத்த வேண்டுவார். மார்புச் சளிக்கும் எலும்புருக்கி நோய்க்கும் வேலியிலும் தோட்டங்களிலும் படரும் முசுமுசுக்கை மூலிகை பெரிதும் உதவும் என்பர். பதினெண் சித்தர் சில்லரைக்கோவை நச்சு மருத்துவ நூலாகும். குறுந்தொகையிலும் பெருங்கதையிலும் சித்தர் பற்றிய குறிப்புகள் உள்ளன.

நிறைவுரை

மராட்டிய மன்னர் சரபேந்திரர் (1798 - 1832) காலத்தில் தொகுக்கப்பட்ட சரபேந்திரர் இரத்தினாவளி சித்த மருத்துவத்தையும் ஆயுர்வேதத்தையும் செப்புகிறது.

இத்தாலியத்தமிழ் ஏந்தலாகிய வீரமாமுனிவர் நசகாண்ட வெண்பா, இரணவாகடம் போன்ற நூல்களை நல்கியுள்ளார். மூலிகை மணி வேங்கடேசன் ஆய்வு நோக்கில் நாட்டுப்புற மருத்துவம் பற்றி வட ஆர்க்காடு மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்டு, நூற்று முப்பதுக்கு மேற்பட்ட பழமொழிகளைத் தொகுத்துத் தந்துள்ளார். நன்னாரி விரும்பப் பொன்னாகும் மேனி, ஆற்றுநீர் வாதம் போக்கும், அருவி நீர் பித்தம் போக்கும், சோற்றுநீர் இரண்டும் போக்கும், சித்த மருத்துவ வாரியம் பழந்தமிழ் மருத்துவ ஓலைச்சுவடிகளைப் பதிப்பித்துத் தரும். ஏடுகளில் உள்ளவை அச்சாகும்போது, கேடு சூழாத சித்த மருத்துவத்தை நாடும் புகழும், நானிலத்திற்கும் நன்மை பெருகும்.

குறிக்கத் தக்க குற்றால மூலிகைகள்

வ. புதுவைப் பூங்கொடி,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை 627 002.

முன்னுரை:

தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும் திருக்குற்றால மலை மூலிகைச் செல்வங்கள் நிறைந்த திருத்தலமாகும். இயற்கை எழிலும் இனிய தென்றல், குளுமை மிகுசாரலும், மருத்துவ மூலிகைகளை மருவி வரும் அருவிப் பெருக்கும் குறிப்பிடத்தக்கவை. வாலியம் பொற்றை, பட்சியம் பொற்றை, திருமலை ஆகிய மும்மலைகள் கொண்ட திரிகூட மலையே குற்றாலம் ஆகும். உலக அருவிகளுள் தன்னிகரற்றதாகத் திகழ்வது குற்றால அருவியின் பெருமையாகும் என்று அறிஞர் கால்டுவெல் திருநெல்வேலிச் சீமை வரலாற்றில் விளம்புகிறார். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மூலிகைகள் குற்றாலத்தில் குறிப்பிடத்தக்க சில மூலிகைகள் மருத்துவ மாண்பு பொருந்தியவை ஆகும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் ஆகியவை மர வகைகள் ஆகும். வல்லாரை, நித்திய கல்யாணி ஆகியவை செடிகள் ஆகும். நன்னாரியும், நஞ்சறுப்பானும் கொடிகள் ஆகும். சிறியா நங்கையும், கீழாநெல்லியும் பூண்டுகள் ஆகும். சுக்கு நாறிப்புல் ஆகும்.

கடுக்காய்:

மரவகுப்பைச் சேர்ந்த கடுக்காய் சில இடங்களில் உயர்ந்தும், சில இடங்களில் தாழ்ந்தும் பயிராகும். மருத்துவப் பெருமக்கள் கடுக்காயை விசயன், அரோகினி, பிருதுவி,

அமிர்தம், சிவந்தி, திருவிருத்தி, அபயன் என ஏழுவகையாகப் பகுத்துள்ளனர். பொதிகை மலையில் ஐந்து கீற்றுகள் உடையதாகவும் கறுப்பு நிறம் உடையதாகவும், 2 அங்குல நீளம் உடையதாகவும் விளங்கும் அபயன் கடுக்காய் அங்க நோயையும், கண் நோயையும் போக்கும். கோழையை அகற்றும், மலத்தை நீக்கும், கருங்கடுக்காய், செங்கடுக்காய், வரிக்கடுக்காய், பால் கடுக்காய் என்னும் நான்குவகைக் கடுக்காயினுள் கருங்கடுக்காய் மலத்தைப் போக்குவதுடன், மேனிக்கு அழகைக் கூட்டும். அறிவுத் தெளிவை ஏற்படுத்தும், வாத, பித்த, கபத்தை நீக்கும். செங்கடுக்காய் நீர் நரம்பின் துளைகளில் உண்டாகும் ஈளையையும் முப்பிணி நோய்களையும் போக்கவல்லது. மேனி பொன்னிறம் பெறவும் அறிவு பெருகவும் உதவுவது. வரிக்கடுக்காய் விந்துவைப் பெருக்கி உடலுக்குப் பொலிவு தரும். திரிதோடத்தைப் போக்கும். பால் கடுக்காய் உடலுக்கு அழகும், ஒளியும் வன்மையும் தரும். வயிற்று மந்தத்தைப் போக்கும். மிகுநீர்ப் போதல், உதட்டு நோய், கண்நோய்கள், ஆண்மையின்மை, ஈரல் நோய், விரைவாதம், குடல்புரட்டல் வாய்ப்புண், வயிற்றுக்கட்டி ஆகியவற்றைப் போக்கும் ஆற்றல் உடையது கடுக்காய் ஆகும். அறுசுவை உணவை ஊட்டி உடலைத் தேற்றும் தாயைக் காட்டிலும் உடல் நோயை ஒட்டி மேனி வளம் பேணுவது கடுக்காய் ஆகும். இத்தகைய அரிய கடுக்காயை உப்புடன் சேர்த்து உண்டால் ஐயமும், சீனியுடன் சேர்த்து உண்டால் அழலும், நெய்யுடன் சேர்த்து உண்டால் ஐயமும், வெல்லத்துடன் உண்டால் முக்குற்றமும் நீங்கும் எனினும் செரிப்புத் தன்மை அற்றவர், இல்லறத்தில் ஈடுபட்டோர், பட்டினி கிடந்தோர், நெடும் தொலைவு நடந்தோர், கருவுற்றோர், தொண்டையிருகல் உள்ளோர் இதனை பயன்படுத்தல் ஆகாது. கடுக்காய்த் துவையல், மலத்தை இறுக்கும். கடுக்காய் கசாயம் பெருமூத்திரம், கண்நோய் ஆகியவற்றை நலமாக்கும். கடுக்காயைப் பொடி செய்து பல் துலக்கினால் ஈறு வலி நீங்கி

இரத்தக் கசிவும் அகன்று பல் இறுகும். கடுக்காயில் பால் சேர்த்து காய்ச்சிக்கொடுத்தால் சீதபேதி நிற்கும். நாள்தோறும் காலையில் கடுக்காய் சாப்பிட்டு வந்தால் தலைமுடி நரைக்காது. மேனியில் சுருக்கம் விழாது,பாவன கடுக்காய், இரத்த பித்தம், இருமல் வயிற்றுநோய், வாதநோய் முதலியவற்றைப் போக்கும். சுக்குக்குப் புறம் நஞ்சு, கடுக்காய்க்கு அகம் நஞ்சு, என்பது பழமொழி என்றாலும் கடுக்காய்க்கொட்டையின் பருப்பு கண் நோய்க்குச் செய்யும் மருந்துகளில் பயன்படுகிறது.

தான்றிக்காய்:

மரவகுப்பைச் சேர்ந்த தான்றி, சிலந்தி நஞ்சு, ஆண் குறிப்புண், குருதியழல் நோய் ஆகியவற்றைப் போக்கும், தான்றிக்காயைச் சுட்டுத் தினம் இருவேளை வெந்நீரில் கொடுத்தால் பல்வலி தீரும். தான்றிக் கொடியைத் தேனில் கலந்து தந்தால் அம்மை நோய் அகலும். புண்பட்ட இடங்களில் தான்றிப்பருப்பை உரைத்துப் பூசினால் புண் ஆறும். தான்றிக் காயை நெய்யிட்டு வறுத்து, கோதுமை மாவில் பிசைந்து வாயில் அடைத்து வைத்தால் தொண்டைப்புண், இருமல் கோழை ஆகியவை நீங்கும்.

நெல்லிக்காய்:

நெல்லிப்பழம் பச்சையாய் இருக்கும்போது வெண்மஞ்சள் நிறமாகவும் உலர்ந்தபின் கருநிறமாகவும் விளங்கும். நெல்லிமுள்ளி, கருநெல்லி, அருநெல்லி என இதனை வகைப்படுத்துவர். நெல்லிக்காயைப் பகல்பொழுது உண்டால் வாந்தி, மயக்கம், தலைச்சுற்று ஆகியவை அகலும். மேனியில் பேரழகைத் தோற்றுவிக்கும். நெல்லி முள்ளியால் எலும்புருக்கி நோயும் பெரும்பாத நோயும் ஆண்குறிக் கொப்புளமும் குணமாகும். இதனை அரைத்துத் தலை முழுகினால் கண் குளிர்ச்சியாக இருக்கும். கிடைத்தற்கரிய கருநெல்லி முப்பிணியைப் போக்கும். உடலை அழியாமல்

காக்கும், உள்ளத்திற்குக் களிப்பை உண்டாக்கும். முதுமை அடைந்தவர் இளமையைப் பெற விரும்பினால் நெல்லிக் கனியைப் பாகம் செய்து உண்ண வேண்டும். நெல்லிக்காய் இலேகியத்தை தேன் கலந்து புன்னைக்காய் அளவு உண்டு வந்தால் வாந்தி, காமாலை, சோகை, குன்மம், உடம்பெரிவு ஆகியவற்றைப் போக்கும்.

வல்லாரை:

பூண்டு இனங்களுள் ஒன்றாகிய வல்லாரை வாய்ப்புண், கழிச்சல், குருதிக் கழிச்சலால் பிறக்கும் வயிற்றுக் கடுப்பு ஆகிய இவற்றைப் போக்கும். யானைக்கால், விரைவீக்கம், மேகப்புண் ஆகிய நோய்களையும் போக்கும் ஆற்றல் கொண்டது வல்லாரை. வல்லாரை இலையைக் கற்பமாக உண்டால் அறிவு துலங்கும். வல்லாரைச் சாற்றில் உப்பும், சாதிப் பத்திரியும் சேர்த்து உண்டால் பெருவயிறு முதலான நோய்கள் நீங்கும். குழந்தைகளுக்கு உண்டாகும் படை, குருதிக் கேடு, நரம்பு நோய் முதலியனவும், முதியோர்க்கு உண்டாகும் மேகம், வயிற்று நோய், சுரம் முதலியனவும் வல்லாரை இலைச் சாற்றுடன் ஆவின்பாலும், அதிமதுரத் தூளும் கலந்து கொடுத்தால் மிகுந்த பலன் உண்டாகும்.

நன்னாரி:

தானாகப் பயிராகும் கொடியாகிய நன்னாரி வேரின் மேல்புறம் கருமையாகவும், உட்புறம் வெண்மையாகவும், தோன்றும். அழல் நோய், வண்டுக்கடி ஆகியவற்றைப் போக்கும். நீரிழிவு, சிலந்தி ஆகியவற்றைத் தணிக்கும். நன்னாரியின் வேர், இலை, கொடி, பூ ஆகியவற்றை நெய்யுடன் வதக்கி வறுத்துப் பாகம் செய்து பத்தியமாக உட்கொண்டால் வெள்ளை, அக்குள் நாற்றம், வியர்வை நாற்றம் அகலும். நீர்ச்சுருக்கு முதலான வெப்ப நோய்க்கு நன்னாரி வேருடன் சீரகத்தைச் சேர்த்துக் குடிநீராகத் தரலாம். நன்னாரியை வாழை இலையில் கட்டிச் சாம்பலுள் புதைத்து

வைத்து நரம்பு நீக்கி வெல்லமும், சீரகமும் சேர்த்து அரைத்துக் கொடுத்தால் நீர் எரிச்சல் நீங்கும். நன்னாரியை எண்ணெய் கலந்து மேல் பூசி வந்தால் ஒற்றைத் தலைவலி ஓடிப்போகும்.

நஞ்சறுப்பான்:

நஞ்சு முறித்தான் என்னும் பூண்டு எல்லா நஞ்சு வகைகளையும் நீக்கும். பாம்புக்கடி, இடு மருந்து, வெள்ளை, எட்டி ஆகியவற்றை உண்பதால் உண்டாகும் நஞ்சு வகைகள் அனைத்தையும் போக்க நஞ்சறுப்பான் என்னும் கொடிப்பாலைக் குடிநீரை அருந்த வேண்டும்.

சிறியாநங்கை:

சிறியாநங்கை என்னும் பூண்டு, உடல் வலிவைத் தரும். மகளிரை வயப்படுத்த வல்லது. சிறியாநங்கை இலையை அரைத்துக்கொட்டைப் பாக்களவு எடுத்துப் பாலுடன் காலைப் பொழுதில் உண்டு வந்தால் உடல் வலிவும் பொலிவும் பெறும். இத்தகைய உடல் வனப்புடையவரை மகளிர் கண்டு காமுறுவர். பாம்புக் கடிக்கு இதன் இலையைக் கைப்புச்சுவை தோன்றும்வரை தின்னக் கொடுக்கவேண்டும். சீறியெழும் பாம்பும் சிறியாநங்கையைக் கண்டால் அடங்கிப் போகுமாம். சிறியாநங்கையைக் கண்டவுடன் சீறிய நாகம் கட்டழியும் என்பது பழமொழி.

கீழ்க்காய் நெல்லி:

கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி என்றெல்லாம் விளங்கும். கீழ்க்காய் நெல்லி வயிற்று மந்தம், குருதிக் கழிச்சல், நீரிழிவு, காமாலை, தாது வெப்பம், நாள்பட்ட மேகப் புண்கள் ஆகியவற்றைப் போக்கும். கீழாநெல்லியை அரைத்து ஆவின் தயிரில் கலந்து நாள்தோறும் கற்ப முறையின்படி உண்டு வந்தால் மேகவெட்டை முதலான நோய்கள் நீங்கும். அசுத்த இரத்தம், விழிநோய், நாவறட்சி

ஆகியவற்றைப் போக்கும். கீழ்வாய் நெல்லி இலையை உப்பு சேர்த்து அரைத்து, சொறி சிரங்குகளுக்குப் பூசினால் அவை குணமாகும். கீழாநெல்லித் தைலத்தை வாரத்திற்கு இருமுறை தலைமுழுகப் பயன்படுத்தி வந்தால் உட்காய்ச்சல், கை, கால், கண் எரிச்சல், தலைச்சுற்றல் வாந்தி முதலியவை விலகும்.

சுக்குநாரிப்புல்:

வாசனைப்புல், தைலப்புல், சம்பாரப்பூ என்றெல்லாம் வழங்கும் சுக்குநாரிப்புல், கற்பூரப்புல் என்று அழைக்கப்படுகிறது. வளி, அழல் நோய், சுரம், கோழை, சுவையின்மை ஆகியவற்றைப் போக்கிப், பசியை உண்டாக்கும். பச்சைப் புல்லை வாலையில் இட்டு வடித்து எடுக்கும்போது இறங்கும் எண்ணெய் வாசனைப்புல் எண்ணெய் எனவும், புல் தைலம் எனவும் பெயர்பெறும். மிகத் தெளிவாகவும், சிறிது மஞ்சள் கலந்த சிவப்பு நிறமாகவும், காரமுடையதாகவும், எலுமிச்சம் பழம் மணம் கொண்டதாகவும் விளங்கும். வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, வாந்தி ஆகியவற்றைக் குணமாக்கும். இந்த எண்ணெயைச் சரிபங்கு தேங்காய் எண்ணெயுடன் கலந்து வெளிப்பூச்சிற்குப் பயன்படுத்தினால் வாதப்பிடிப்பு, கீழ்வாதம், நரம்புக் குறைச்சல் ஆகிய நோய்கள் நீங்கும்.

நிறைவுரை:

தமிழகத்தில் மூலிகைகள் பயன்தருவது போன்று மேல் நாட்டிலும் மூலிகை மருந்துகள் முப்பத்தெட்டு பற்றி இங்கிலாந்து மருத்துவர் பாட்சு குறிப்பிட்டுள்ளார். அஞ்சும் இயல்புடையவர்க்கு ஐந்து, துன்புறுபவர்க்கு ஆறு, கனவுலகில் இருப்பவர்க்கு ஏழு, தனிமை உணர்வு உடையவர்க்கு மூன்று பிறர் செல்வாக்கிற்கு ஆட்பட மறுப்பவர்க்கு நான்கு, பற்றற்றவர்க்கு எட்டு, பிறர்

கவலையைத் தமதாக்கிக் கொள்பவர்க்கு ஐந்து என ஏழு வகை மனிதர்க்கு ஏற்ற முப்பத்தெட்டு மூலிகை மருந்துகளை வகைப்படுத்தியுள்ளார். தமிழகத்தில் அகத்திக்கீரை முதலாக வள்ளைக் கீரை முடிவாக ஐம்பத்து நான்கு கீரைகள் நோய் தீர்க்கும் ஆற்றல் உடையன என அறிகிறோம். அத்திக்காய் முதலாக வெண்டைக்காய் முடிய முப்பத்து மூன்று காய்களும் பல்வேறு நோய்களை நீக்கும் ஆற்றல் வாய்ந்தவை என்பர். திரிகூட மலையில் திகழும் குற்றாலம் பன்னெடுங்காலமாக ஆயிரக்கணக்கான மூலிகைகளைக் கொண்டுள்ளது. ஆங்கிலேயரும், செருமானியரும் இந்த மூலிகைகளைப் பற்றி ஆராய்ந்து அறிமுகப்படுத்தியுள்ளனர். சித்த மருத்துவத்திற்குப் பெருமை தரும் இத்தகைய மூலிகைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து நூல்கள் பல வெளிவரவும் மக்களுக்கு ஒளி தரவும் அனைவரும் முனைந்து வினையாற்ற வேண்டும்.

பயன்பட்ட நூல்கள்:

1. தியாகராசன்: மூலிகை இயல்
2. சூசைராசா: நோய் தீர்க்கும் காய்கறி கீரைகள்
3. இராமசாமி: நலம் தரும் மருந்துகள்

கற்றாழை

டாக்டர்பி. மாசிலாமணி
அகத்தியர் இல்லம்
46, ரங்கபிள்ளைவிதி, புதுவை.

இதைக் கத்தாழை என்றும், கன்னி, குமரி என்றும் அழைப்பர். இதனுடையதாவர அறிவியற் பெயர் ஆலோவீரா (Aloevera) இது இந்தியா முழுமையும் ஆற்றங்கரையிலும் சதுப்புள்ள நிலங்களிலும் தோட்டங்களிலும் விளையக் கூடியது.

இதில் பலவகைக் கற்றாழை உண்டு. சோற்றுக் கற்றாழை, சிறுகற்றாழை, பெரும் கற்றாழை, பேய்க்கற்றாழை, கருங்கற்றாழை, செங்கற்றாழை, ரயில் கற்றாழை, எனப் பலவாறாக இருந்தாலும், மருத்துவத்திற்குச் சோற்றுக் கற்றாழையே உபயோகத்திலுள்ளது. செங்கற்றாழையே மிக மிக உயர்ந்தது எனப் போகர் கூறியுள்ளார். அது இப்பொழுது கிடைப்பது அரிதாக உள்ளது. ஆனால் மலையில் விளையும் கற்றாழை சிறு சிவப்பாக உள்ளது. திருவண்ணாமலை, மயிலமலை, செங்கம் மலை இவற்றின் மேல் விளையும் கற்றாழை சிறிது செந்நிறம் பெற்றுள்ளது.

இந்தக் கற்றாழையின் குணத்தை நன்கு அறிந்த தேரையர்,

வற்றாக் குமரிதன்னை வற்றலென வுண்ணினுஞ்சீர்
முற்றாக் குமரியென மூளுமே - நற்றாக்குந்
திண்மையு மல்லாத் தெரிவைய மேயானாலு
முண்மைமிகு தூறாமா யுள்

எனக் கூறியுள்ளார்.

இப்பாட்டின் கருத்தை நன்கு ஆராய்ந்து பார்த்தால் இதன் நல்ல குணத்தை நாம் அறியலாம்.

தேரையர் காண்டத்தில், "குமரியின் வற்றலும் கொளப்பிணி அகலும்." இதன் வற்றலைச் சமையல் செய்து உபயோகித்தால் நோயைப் போக்கும் என்று குறிப்பிடுகிறார். பொதுவாக இதன் குணத்தை நோக்கிப் பார்க்கும் பொழுது வாதமேகம், கருமேகம், கிருமியைப் போக்குதல், பெரும் வியாதி, மூலம், உள்மாந்தம், குன்மம், பித்த சாந்தி இவைகளைப் போக்கவல்லது. மேலும் இதன் குணத்தைத் தேரையர் குணவாகடத்தில் கூறியுள்ளதைப் பார்ப்போம்.

பொல்லாமே கங்கபம்பு முச்சூலை குட்டரசம்
அல்லார்மத் தம்பகந்த ரங்குன்மம்-எல்லாம் விட்
டேகு மரிக்கு மெரிச்சற் கிரிச்சரமு
மாகு மரிக்கு மருண்டு

கற்றாழையில் ரத்தசீதம், ரத்தம் கலந்த கழிச்சல் இவற்றைப் போக்கலாம் என்று கூறியுள்ளார்.

இதன் குணத்தையும் இதனால் செய்த மருந்துகளையும் பார்ப்போம்.

அன்னபேதி செந்தூரம்

100 கிராம் அன்னபேதி, கற்றாழைச் சோறு 100 கிராம் இவற்றை நன்றாகக் கலந்து அரைத்துப் புடம் இட்டு 2 அரிசி எடை தேனில் குழைத்துக் கொடுக்கச் சளி, இருமல், மேகநோய் போக்கவல்லது.

மேலும் இதன் சாற்றைக் கொண்டு எண்ணெய், நெய், லேகியம் செய்யலாம். இதனால் செய்த லேகியம் மூலநோயையும் குடல் வாயுவையும் போக்கவல்லது. இதன்

சாற்றை நெய்யில் கலந்து காய்ச்சி உட்கொள்ள மேக நோய்கள் ஒழியும். மேலும், கற்றாழையின் சோற்றை லேசாகச் சூடு பண்ணி ஊழி நோய்களுக்குக் கொடுக்க வறட்சியை நீக்கவல்லது.

உடல் அரிப்பு உள்ளவர்களுக்குக் கற்றாழைச் சோற்றை மேலே பூசி ஒரு மணி நேரம் இருந்து குளிக்க அரிப்புகள் ஒழிந்து விடுகின்றன. இந்தக் கற்றாழைச் சோற்றில் நல்லெண்ணெய் கலந்து காய்ச்சி இரவில் படுக்கும்பொழுது தலையில் சிறிது தேய்த்துக்கொண்டால் தூக்கம் வரும். மேலும் இச்சோற்றுடன் கற்கண்டு, வால் மிளகின் தூள், அரிசித்திப்பிலித்தூள், அக்கரகாரம், கோஷ்டம், அதிமதுரம், கண்டுபாரங்கி ஆகிய இவற்றைச் சம எடையாகத்தூள் செய்து அதற்குச் சம எடை கற்றாழைச் சோற்றைக் கலந்து நன்றாக அரைத்துப் பட்டாணி அளவு மாத்திரை செய்துகொண்டு தினம் காலை, மாலை உண்டுவரப் பேய் இருமல், குத்திருமல் நீர்சுளுக்கு இவைகளைப் போக்கும்.

கற்றாழையின் சோற்றுடன் நல்லெண்ணெயை விட்டு நன்றாகக் காய்த்துத் தலையில் தடவப் பெண்களுக்கு மயிர் நன்றாக வளரும். இக்கற்றாழையின் சோற்றை உள்ளுக்கு உபயோகப் படுத்துவதற்கு முன்பு ஒரு முறை தண்ணீரில் சுத்தம் செய்ய வேண்டும் என்ற விதி வகை உண்டு.

இக்கற்றாழை பற்பங்கள், செந்தூரங்கள் செய்ய உபயோகப்படுத்தப்படுகின்றன. தேரையர், செங்கற்றாழை யினால் இரும்பே தங்கமாகும் என்று கூறியுள்ளார். ஆனால் அது கிடைப்பது இல்லை. வட நாட்டில் இந்தக் கற்றாழையின் சோற்றையும் வில்வப்பழத்தின் சோற்றையும், கலந்து தலைக்குத் தேய்த்துக் குளிக்கின்றனர். இதன் பலனை அவர்களைக் கேட்கும் பொழுது கபால உஷ்ணத்தைக் குறைத்துக் கண்களுக்குக் குளிர்ச்சியையும் கூரிய பார்வையையும் தருவதுடன் இரவில் நன்றாகத் தூக்கமும் வருகிறதென்று கூறுகின்றனர்.

வற்றல்

கற்றாழையை ஓர் அங்குலம் அளவு துண்டு, துண்டாக வெட்டி வெய்யிலில் நன்றாகக் காயவைக்கவும். இது சுருங்கி வற்றலாக மாறிவிடும். இதை வாரத்திற்கு இரண்டு முறை நல்லெண்ணெயில் பொரித்துச் சிறிது மிளகுத்தூள், உப்புத்தூள் கலந்து உணவுடன் சேர்த்து உண்டுவர உடல் அழலைப் போக்கி வயிற்றினுள் உள்ள கிருமியை ஒழித்து ஆரோக்கியத்தைத் தரவல்லது.

கற்றாழை கற்பம்

கற்றாழைச் சோற்றை 200 கிராம் எடுத்துக்கொண்டு அதில் உயர்ந்த மஞ்சள், கடுக்காய்த் தோல் 500 கிராம் பொடி செய்து மேற்படிச் சோற்றுடன் கலந்து கோப்பையில் வைத்து வெய்யிலில் உலர்த்தவும். நன்றாக உலர்ந்த பிறகு கல்உரலில் இடித்து வஸ்திரகாயம் செய்துகொள்ளவும். இதைத் தினம் காலை மாலை 5 கிராம் வீதம் உட்கொண்டு வர உடல் பலம் பெறும். அது மாத்திரமல்ல நீரிழிவு நோயையும் போக்கவல்லது. வெங்காயச் சாற்றுடன் கற்றாழைச் சோற்றைக் கலந்து தினம் காலையில் உண்டுவர வெள்ளை நோய், மூத்திர எரிச்சல், மூல நோய் இவைகளைப் போக்கும்.

கரியபோளம்

கரியபோளம் என்பது கற்றாழையின் உள்ளே இருக்கும் சோற்றைக் காயவைத்துப் பாடம் செய்ததற்குக் கரியபோளம் என்று வழங்கப்படுகிறது. இதற்குப் பல பெயர்கள் உண்டு. மூசாம்பரம், ஜன்னிநாயகம், ரத்தபோளம் என்று கூறுவது. இதனுடைய தாவர அறிவியல் பெயர், ஆலோஸ், லிட்டோராலிஸ். இது பார்ப்பதற்கு கருப்பாகவும் சிவந்ததாகவும் இருக்கும். இந்த கற்றாழையின் சாற்றுக்குக் கண்ணி ரசம் என்றும் பெயருண்டு! இதை மேல்நாட்டினர் 4 வகையாகப் பிரித்துள்ளனர்.

1.சொக்கோட்ரைன்
2. எப்பாட்டிக்
3. பாக்ப்டோஸ்
4. கேப் ஆலோஸ்

ஆனால் நிறத்தில் வேறுபட்டு இருந்தாலும் குணம் ஒன்றே. இதன் குணத்தை அகத்தியர் குண வாகடத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

மார்பு வலிவீக்கம் வயிற்றுவலி பக்கநோய்
வார்மேகக் கட்டிபொரு மாவாதம் - பாருலகில்
நீளங்கை காலில் நிலைசூலையுங் கறுத்த
போளந்தனைக் காணிற்போம்.

கரியபோளம் அதிக அளவு உள்ளே செல்லும்பொழுது மலத்தை வெளியாக்கும். 100 மில்லி கிராம் அளவு சூரணங்களுடன் சேர்த்துக் கொடுக்கப் பசியை உண்டுபண்ணிப் பழைய ஆகாரத்தை ஜீரணிக்கச் செய்யும். இம்மருந்தைத் தனித்து உபயோகப்படுத்துவது இல்லை. ஏனெனில் மிகக் கசப்பு துவர்ப்புச்சுவை கொண்டது. சிறிது நாற்றமும் உள்ளது. இதனைத் தனித்துக்கொடுத்தால் கருவை அழித்துவிடும். ஆனால் இந்த மருந்தைப் பல மருந்துகளுடன் சேர்த்துக் கொடுக்கும்பொழுது கரு இல்லாத பெண்களுக்குக் கருப்பையைச் சுத்தம் செய்து கரு உற்பத்திக்கும் உதவுகிறது.

கரியபோளம் மாத்திரை

கரியபோளம் 50 கிராம், ஜாதிக்காய் 10 கிராம் ரோஜாப்பூ குல்கந்து 60 கிராம் ஆகியவற்றைக் கல்வத்தில் இட்டு நன்றாக அரைத்து லேகியம் போல் ஆக்கிக்கொண்டு தினமும் இரவு 100 மில்லி கிராம் அளவு வாயிலிட்டுப் பால் சாப்பிட்டு வரக் கருப்பையில் உள்ள அழுக்கு நீங்குகிறது.

கரியபோளம் 700 கிராம் அன்னபேதி 1 கிலோ இவை இரண்டையும் தேன்விட்டு நன்றாக அரைத்து வைத்துக்கொண்டு தினம் இரவில் 2 கிராம் வீதம் உள்ளுக்குக் கொடுக்க உதிரச் சிக்கலைப் போக்கிச் சுகம் தரும்.

கசப்புத் தைலம்

மூசாம்பரம் 100கிராம், உயர்ந்த சாம்பிராணி 100 கிராம், குங்குமப்பூ 20 கிராம், இவற்றை நன்றாகக் கலந்து 1 லிட்டர் உயர்ந்த சாராயத்தில் ஊறவைக்கவும். ஒரு வாரம் சென்ற பிறகு வடிகட்டிப் புட்டியில் வைத்துக்கொள்ளவும். இதைப் பிரசவித்த பெண்களுக்கு ஒரு வாரம் வரையில் காலை மாலை அரைத் தேக்கரண்டி அளவு கொடுக்க நலம் உண்டாவதுடன் கருப்பையிலுள்ள அழுக்குகள் வெளிப்படும்.

காது மருந்து

மூசாம்பரம் 20 கிராம் பூண்டு 10 கிராம், உயர்ந்த சாம்பிராணி 5 கிராம் இவற்றை நசுக்கி நல்லெண்ணெய் ½கிலோவில் கலந்து காய்ச்சி வடிக்கட்டிக்கொள்ளவும். காதுவலி, காதுகுத்தல், சீழ்வருதல் இவைகளைப் போக்கும், நல்லதொரு மருந்தாகும் இது!

அடிபட்ட வீக்கத்திற்கு

மூசாம்பரம் இதை நன்றாகக் கொதிக்க வைத்து மிதமான சூடுடன் ரணங்கள் இல்லாமல் வீக்கம் உள்ள இடத்தில் மேலே தடவினால் வீக்கம் குறைந்து வலியைப் போக்கும்.

இந்த மூசாம்பரம் மஞ்சள் காமாலையைப் போக்க வல்லது. 5 மில்லி கிராம் மூசாம்பரத்தை மோரில் கலந்து தினம் இரண்டு வேளை குடிக்க மஞ்சள் காமாலையைப் போக்கவல்லது. ஆனால் கருவுற்ற பெண்களுக்குக் கொடுக்கக் கூடாது. எந்தக் காரணத்தைக் கொண்டும் கருவுற்ற பெண்களுக்கு மூசாம்பரத்தை உபயோகப்படுத்தக்கூடாது.

போலிகள்

மூசாம்பரம் உயர்ந்த அழுத்தத்தினால் மெழுகுபோல் ஆகும். தற்சமயம் மருந்துக் கடைகளில் விற்பது உயர்ந்த மூசாம்பரம் அல்ல. சிறிது மூசாம்பரமும் களிமண்ணும் கலந்து செய்த மூசாம்பரம் விற்கப்படுகிறது. இதை மருத்துவர்கள் கவனித்து வாங்க வேண்டும். மூசாம்பரம் கசப்பும், துவர்ப்பும், வாடை உடையது. மூசாம்பரத்தை தீயிலிட்டால் உருகும் குணம் உடையது.

மூசாம்பரம் லேகியம்

மூசாம்பரம் 100 கிராம், சுக்கு, மிளகு, திப்பிலி 10 கிராம் வீதம், கோஷ்டம், அதிமதுரம், சடாமாஞ்சில், மயிர்சிக்கி, கண்டுபாரங்கி, கண்டதிப்பிலி, செவ்வியம், வாய்விளங்கம், வசம்பு, கருஞ்சீரகம், நச்சீரகம், மல்லி, ஜாதிக்காய், கோரைக்கிழங்கு, அதிவிடையம் இவைகள் 10 கிராம் வீதம், மூசாம்பரம் தவிர மற்றதெல்லாம் ஒன்றாக இடித்துத் தூள் செய்துகொண்டு பனைவெல்லம் ½ கிலோ கரைத்து மணல் தூசி இல்லாமல் வடிக்கட்டிக் கொண்டு கடாயில் ஊற்றி மேற்படி சூரணத்தை அதிலே போட்டு, மூசாம்பரத்தையும் அதிலே போட்டு, நன்றாக வெந்து பதம் வந்தவுடன் நெய் 200 கிராம் விட்டுக் கிளறி இறக்கும் தருவாயில் 5 கிராம் குங்குமப்பூ கலந்து இறக்கி ஆறவைத்துப் புட்டியில் வைத்துக்கொள்ள வேண்டும். இதைத் தினம், காலை மாலை பிள்ளைப்பேறு பெற்றவருக்குக் கொடுத்துவர உடல் ஆரோக்கியம் பெறும். இதை 40 நாள் காலை, மாலை, அரை தேக்கரண்டி அளவு பாலில் சாப்பிடவேண்டும்.

பத்தியம்: கீரை, கருவாடு, கத்தரிக்காய் இவைகள் கூடாது. கற்றாழையின் நற்குணத்தை இன்னும் நாம் ஆராய்ந்ததால் அதன் பலனைப் பெறலாம்.

காடிக்காரச் செந்தூரம்

மருத்துவர். P. *சரோஜினி தேவி* M. D. (S)
உதவி மருத்துவ அலுவலர்,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை

சித்தமருத்துவத்தில் பயன்படும் மருந்துப் பொருட்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை மூலிகை, தாது, சீவவகுப்பு என்பன. இவற்றுள் தாது வகுப்பில் உலோகங்கள் உபரசங்கள், பாடாணங்கள், காரசாரங்கள் ஆகியவை அடங்கும். இங்கே கடிகாரச் செந்தூரம் பற்றிப் பார்ப்போம். இது உபரசம் 120ல் ஒன்று ஆகும்.

காடிக்காரத்தின் வைப்புமுறை :

சொக்க வெள்ளி 1½ அவுன்ஸ் (42 கிராம்), பொட்டுலுப்புத் திராவகம் 1 அவுன்ஸ் (28 மி. லிட்), தீநீர் 2 அவுன்ஸ் (56 மி. லிட்) திராவகத்தைத் தீநீரில் சேர்த்துக் கலக்கி வெள்ளியைச் சேர்த்துச் சிறு தீயிட்டு எரித்து உருக்கிப் பிறகு நீர் சுண்டி ஈரமில்லாத உப்பு அடியில் நிற்கும் வரையில் தீயை அதிகரித்து இந்த உப்பை ஒரு குகையில் உருக்கி, உருகினதைச் சூடாயும், கொழுப்புத் தடவியும் இருக்கிற அச்சுக்களில் வார்த்து விடவும். இதை நீல நிறப்புட்டியில் போட்டு வைத்துக்கொள்ளவும்.

செய்கை:

துவர்ப்பு, புண்ணாக்கி, அழுகல் அகற்றி

குணம்

பேதி, கண்ணோய், பிரமேகம், படர்தாமரை, அக்கி, கரப்பான், புண், விஷக்கடி, தொண்டை நோய் முதலியன தீரும்.

காடிக்காரச் செந்தூரம் செய்முறை:

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), இரச செந்தூரம் 1 பலம் (35 கிராம்) இவ்விரண்டையும் தனித்தனியாகப் பொடிக்க வேண்டும். காடிக்காரம் 1 பலம் (35 கிராம்) இதையும் தனியாகப் பொடிக்கவும். ஒரு கல்கார்க்குப் புட்டியில் முதலில் இரசச் செந்தூரத் தூளில் பாதி பாகம் போட்டு, அதன் மீது இலிங்கத் தூளில் பாதி போட்டு அதன்மீது காடிகாரத்தூள் முழுவதையும் கொட்டி பிறகு மீதியுள்ள இலிங்கத்தூளையும் அதன்மீது இரசச் செந்தூரத்தையும் கொட்டிக் காற்று நுழையாவண்ணம் மூடி இட்டுத் தோள்பட்டையினால் புட்டி தெரியாமல் சுற்றி வரிந்து கட்டி, வேகவைத்துக் கொட்டின நெற்குவியல் மத்தியில் புதைக்க வேண்டும். சூடாறியபின் கல்வத்திலிட்டு அரைத்து எடுக்க வேண்டும்.

தாது சீவ வகுப்பு பக். 312

அளவு:

½ முதல் 1 அரிசி எடை (அதாவது 32 மி. கி. முதல் 60 மி. கி. வரை)

அனுபானம்:

தேன், இஞ்சிச்சாறு, துளசிச்சாறு

தீரும் நோய்கள்:

பாரிசவாதம் போன்ற வாத ரோகங்களும், ஊழிபோன்ற பேதிகளும், பெரும்பாடும் நீங்கும்.

ஊழி நோய்கட்குக் கடிகாரச் செந்தூரம் வழங்க அந்நோய்தீரும் என்று கூறப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு நுண்ணுயிர் ஆய்வியல் செய்யப்பட்டது. ஆய்வியலில் ஊழி நோய்க்குக் காரணமான நுண்ணுயிரின் ஆய்வின் உண்மைகள் கீழ்க்கண்டவாறு தெரிய வந்துள்ளன.

MICROBIOLOGICAL INVITRO STUDIES

The drug Kadikara Chandooram had been investigated by the Department of Microbiology. Tirunelveli Medical College, Tiurnelveli. The Microbiological studies were conducted with Kadikara Chendooram performed "In Vitro" to assess the sensitivity against the intestinal pathogens by Agar dilution method. The cultures of Vibrio cholerae and Salmonella typhi were used.

Salmonella typhi and Vibro cholorae organisms were grown in agar media in two different culture plates as control. Another two pairs of culture media were taken in four different culture plates. Two of them were added with 10 mgs.of Kadikara Chendooram drug and another two with 20mgs. Then Salmonella typhi were introduced into two plates, containing 10mgs. and 20mgs. respectively. Similar experiment was tried with Vibrio cholerae.

It was found that no growth of Salmonella typhi on the drug-added plates at a dose of 10 mgs. and 20 mgs. and also Vibro cholerae in 20 mgs. Thus the anti-bacterial activity of the new drug the against intestinal pathogens was assesssed.

ஆனால் ஊழி நோயாளிகட்குக் கொடுத்துச் சோதனை செய்யப் போதுமான வசதி வாய்ப்புகள் வரும் நாட்களில், இம்மருந்தினைஅந்நோயாளிகட்குக் கொடுத்து நோய்க் குறிகுணங்களின் குறைந்த அல்லது முற்றிலும் குணமான நிலை பற்றிய விளக்கங்கள் தரமுடியும் என்பதை மனமகிழ்வுடன் தெரியப்படுத்திக்கொள்கிறேன். மேலும் பல சோதனைகள் செய்ய வேண்டியவற்றை இனி எதிர்கொள்ளும் நாட்களில் செய்ய முயற்சி செய்து வருகின்றேன்.

காடிக்காரச் செந்தூரத்தினைக் கழிச்சல் நோயிலும் பெரும்பாடு நோயிலும் கொடுத்துக் குணமடைந்தது பற்றியும் எலிக்கு இம்மருந்தினைக் கொடுத்துக் கழிச்சலை நிறுத்துகிறது என்ற சோதனை பற்றியும் இனிக் காண்போம்.

ANTI-DIARRHOEAL ACTION OF KADIKARA CHENDOORAM-PREPARATION OF THE TEST DRUG.

1 gram of Kadikara Chendooram was suspended in 10 ml of water using tragacanth.

CHARCOAL MEAL METHOD:

The anti-diarrhoeal study was done according to the method of Janssen and Jageneau (1957) in albine rats.

Albino rats were fasted for 24 hours. The fasted rats were divided into two groups each containing three. One group of rats were given the test drug in a dose of ml/100 g.

The second group received distilled water 1 ml/100 g. One hour later all the animals were given 0.5 ml. of an aqueous suspension of 10% charcoal with gum acacia by stomach tube. After 90 minutes the administration of the charcoal meal the animals were sacrified with choloroform. The small intestine, from pyloric end upto caecum was removed and stretched on a clean white glass. The distance travelled by charcoal was measured by measuring the distance travelled by charcoal from the pylorus.

RESULT

At the end of the experiment, the mean distance travelled by the carbon particles to the total length of the intestine was measured in the control and the test drug treated group.

The mean distance travelled by carbon particles in the control group was 75 cm. to the mean total length of the intestine 91 cm. The mean distance travelled by carbon particles in Kadikara Chendooram treated group was 52 cm. to the total length of 83 cm. The results of the experiment are as given in the table.

Drug	Dose/100gr. Oral	Total length of the intestine	Distance travelled by carbon	mean% distance travelled
water	1 ml.	91 cm.	75 cm.	82.2%
Kadikara Chendooram	100mg/ 1ml	83 cm.	52 cm.	63.8%

The present distance travelled by Charcoal in the control group was 82.4%. In the Kadikara Chendooram given group, it was 63.8%. The value in the test group treated reveals that the drug has considerably depressed the gastro intestnal mobility. Hence, we may infer that the drug is and effective anti-diarrhoeal one which acts partly by inhibiting gastro intestinal propulsion.

நமது நூலில் கூறப்பட்டதன்படி நமது மருத்துவமனை கழிச்சல் நோயாளிகட்குக் காடிக்காரச் செந்தூரத்தை தேனுடன் கலந்து 25 உள், வெளி நோயாளிகளுக்கு வழங்கியதில் 22 நோயாளிகட்குக் குணமடைந்தும், 3 நோயாளிகளின்

நோய்க்குறிகுணங்கள் குறைக்கப்பட்டும் அனுப்பப் பட்டனர். நஞ்சுக் குறிகுணங்கள் எதுவும் இல்லை.

சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் மகளிர் மருத்துவத்துறையில் பெரும்பாட்டிற்குக் காடிக்காரச் செந்தூரத்தை 30 மி.கி. தேனில் கலந்து ஒரு நாளைக்கு 3 வேளை வீதம் வழங்கி ஆய்வு செய்யப்பட்டது. அதில் பெரும்பாட்டின் குறிகுணங்கள் குறைந்து குணமடைந்ததாக ஆய்வு முடிவினைக் கல்லூரியில் நடைபெற்ற மருத்துவக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

முடிவுரை:

மேற்கண்ட மருத்துவப் பரிசோதனைகள் மூலம் காடிக்காரச் செந்தூரத்தினால் பெரும்பாடு, கழிச்சல் போன்ற நோய்கள் குணமடைந்துள்ளன என்பது கண்கூடாகத் தெரியவந்துள்ளது. நுண்ணுயிர் ஆய்வியல் மூலம் ஊழிநோய் நுண்கிருமிகளையும், டைபாய்டு கிருமிகளையும் அழிக்கும் மிகு ஆற்றல் கொண்டது என்பதுவும் தெரிய வந்துள்ளது. எனவே, டைபாய்டு மற்றும் ஊழி நோயாளர்கட்டகும் இக்காடிக்காரச் செந்தூரத்தை வழங்க, நடைமுறைப்படுத்த, தக்க ஆய்வுகள் மேற்கொள்ள, உரிய நடவடிக்கைகள் எடுக்க முயல வேண்டும்.

❋❋❋

சுட்டிகை - ஒரு அரிய சித்த மருத்துவப் பரிகார முறை

ந. செயசங்கர், அரசினர்சித்தமருத்துவக்கல்லூரி, பழனி
ஆர். குமார், அரசினர்சித்த மருத்துவக்கல்லூரி, பழனி.
மரு. கே. இராசேசுவரி, எம்.டி. (சி).

முகவுரை

சுட்டிகை நோய்களைப் போக்குவதற்கு ஆதாரமாயுள்ள மருத்துவ முறைகளில் ஒன்று. சித்த மருத்துவத்தில் அக மருந்துகள் முப்பான் இரண்டு என்றும், புறமருந்துகள் முப்பான் இரண்டு என்றும் கூறப்பட்டுள்ளன. புறமருந்துகள் முப்பத்திரண்டினுள் சுட்டிகை அடங்கப்பெறும்.

சுட்டிகை என்பது சுட்டு எடுத்தல் என்று பொருள்படும். இதனைச் சிட்டிகை என்றும் அகர மருத்துவம் என்றும் வழங்கலாம். சுட்டிகைப் பரிகாரமுறை பிற மருத்துவ முறைகளிலும் தற்பொழுது கையாளப்பட்டு வருகின்றது. சிறப்பாகக் கூறின் சீன மருத்துவமுறை இதில் அடங்கும். பிற மருத்துவ முறைகளிலும் நம் மருத்துவத்தில் சொல்லப்படுகிற அமுத நிலைகளே அடிப்படையாக இருக்கின்றன.

சுட்டிகை செய்ய வேண்டிய முறையினைக் கொண்டு இரு வகுப்பில் அடக்கப்பட்டுள்ளது.

அ) நேர்முக முறை
ஆ) மறைமுக முறை

நேர்முகமுறை:

நேர்முகமுறை சுட்டிகை என்பது மருக்கொழுந்தில் இலைகளைக்(MOXA) கொண்டு பத்திகளைப் போல் செய்து தேவைப்படும் இடத்தில் வைத்துச் சுட்டிகை செய்தல். இது (MOXIBUSTION) என்று பெயர் பெறும். நேர்முக முறை மேலும் இரு வகைப்படும்.

அ) தழும்புகள் உண்டாக்குவது
ஆ) தழும்புகளை உண்டாக்காதது

தழும்புகளை உண்டாக்கும் வகையில் மாக்ஸா வைத் தோல் மீது வைத்து முழுமையாக எரியும் வரையில் காத்திருக்க வேண்டும். இவ்வாறு பல முறை செய்யும் பொழுது சுட்டிகை செய்த இடத்தில் தழும்பு உண்டாவதால் இம்முறை வழக்கில் அதிக அளவில் பயன்படுத்துவதில்லை.

தழும்புகளை உண்டாக்காத வகையில் மாக்ஸாவை எரித்துத் தோல் மீது வைத்து உடனே எடுத்துவிடவேண்டும். இவ்வாறு குறிப்பிட்ட இடம் சிவக்கும் வரை மாறி மாறிச் சிறிது இடைவெளி விட்டுச் சுட்டிகை செய்திடுதல் வேண்டும். இம்முறையில் தழும்புகள் ஏற்படுவதில்லை.

மறைமுக முறை:

இவ்வகை மருத்துவமுறையில் முன் கூறியதைப்போல நேரிடையாகத் தோலில் சுட்டிகை இடாமல், சுட்டிகை மேற்கொள்ளப்பட வேண்டிய இடத்தில் இஞ்சிக் கீற்று, பூண்டுக் கீற்று, (அ) சோற்றுப்பு முதலியவைகளில் ஏதேனும் ஒன்றை தோலில் பரப்பி மாக்ஸாவின் துணியில் நெருப்பிட்டு எரிக்கவேண்டும். பின் மேற்சொன்ன இடத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து திரும்பவும் எடுத்துவிட வேண்டும். இவ்வாறு பலமுறை செய்தல் வேண்டும்.

இதற்கு மேற்கோளாக, சித்த மருத்துவத்தில் செங்கல்லைச் சுட்டு அதன் மேல் எருக்கிலையைப் பரப்பி கால் ஆணி உள்ளவர்கள் நோய் கண்ட இடத்தை அதன் மேல் வைக்கும்படி சொல்லுகின்றோம். மேலும், சில கிராமப் பகுதிகளில் காமாலை நோய்க்கு வலது புயத்தில் நொச்சியிலையைப் பரப்பி அதன் மேல் சுட்டிகை செய்தல் இன்றும் பழக்கத்தில் உள்ளது.

சித்த மருத்துவத்தில் சுட்டிகையின் வகைகள் ஐந்தாகும். அவை பின்வருமாறு.

1. மரச் சுட்டிகை
2. காந்தி சுட்டிகை
3. உலோகச் சுட்டிகை
4. காற்றுச் சுட்டிகை
5. மண் சுட்டிகை

சுட்டிகை ஒவ்வொன்றின் விளக்கம்

அ) மரச்சுட்டிகை

மரச்சுட்டிகைகளுள், வேர்களையே சிறப்பாக மஞ்சள் கொம்பினையே பயன்படுத்துகின்றனர்.

சித்த மருத்துவத்தில் மஞ்சள் கொம்பினால் சுட்டிகை செய்ய வேண்டிய இடங்களும் அவற்றால் தீரும் நோய்களும் கூறப்படுவதைப் போன்றே சீன முறை மருத்துவத்திலும் கூறப்படுகிறது. இரண்டு முறை மருத்துவமும் உடற்கூறு இயலின் அடிப்படையைக் கொண்டுள்ளன. மஞ்சள் கொம்பினால் சுட்டிகையிட வேண்டிய இடங்களும், அவற்றால் தீரும் நோய்களும் செப்பப்பட்டுள்ளன. சீன மருத்துவ முறையிலும் இதேபோல் காணப்படுகிறது.

1. நாசித்தண்டு சன்னி வாத நோய்

Du25 - மூக்கின் தண்டிகையில் சுட்டிகை செய்வதால் மூக்கிலிருந்து குருதி வடிதல், மூக்கடைப்புப் போன்ற நோய்கள் குணமாகின்றன.

2. மேலுதட்டின் நடுப்பள்ளம்-பற்கிட்டும் சன்னிநோய்

Du26 - மேலுதட்டிற்கும், மூக்கின் நுனிக்குமிடையேயுள்ள பள்ளத்தின் மேல் $^{1}/_{3}$ பாகமும், கீழ் $^{2}/_{3}$ பாகமும் சந்திக்கும் இடத்தில் சுட்டிகை செய்யின் மயக்கம், வலிப்பு நோய் வெப்புத் தாக்குதல், போன்ற அவசரகால சிகிச்சைக்கும் முகவாதம், இடுப்பு வலி போன்ற நோய்களும் குணமாகின்றன.

3. கீழுதடு (அதரம்) கப நோய்கள்

Ren24-கீழுதட்டிற்கும், கீழ்த்தாடைக் கவுட்டிற்கும் (Chin) இடையே காணப்படும் மத்திமப் பகுதியில் சுட்டிகை செய்யின் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகின்றன.

4. குறியின் மேல்புறம் - விதை வீக்கம்

Ren2 மேகன அனுசங்கிக்கு மேற்புறம் சுட்டிகை செய்வதால் சிறுநீரகம், பிறப்புறுப்புக்கள் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும்.

5. புருவத்தின் மேற்பகுதி - விரண சிலேத்தும நோய்கள்

GB14-புருவத்தின் நடு மத்தியில் நோயாளியின் ஒரு விரற்கிடைக்கு மேலாகச் சுட்டிகையிட்டால் பீனிசம், தலைவலி, கண் நோய்கள் குணம் பெறுகின்றன.

6. மார்பின் கீழ்ப்பகுதி - சூலை, குன்மம்

Ren15-நோயாளியின் கையால் ஏழு விரற்கிடை அளவு தொப்புளுக்கு மேலாகவும், நெஞ்சின்பின் ஏதிப்பகுதிக்குச் சற்றே கீழாகவும் உள்ளது. இவ்விடத்தில் சுட்டிகையிட்டால் வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள், சிறப்பாகக் குன்மம் குணமடைகின்றது.

7. கால் பெருவிரல் - அண்ட வீக்கம்

Spl-கால் பெருவிரல் நகத்தின் அடிப்பகுதியின் அக ஓரத்தில் சுட்டிகை செய்யின் பிறப்புறுப்புகள் சம்பந்தப்பட்ட நோய்கள் தீரும்.

8. தொடக்கவுடு - குடலண்டத்தில் குடல் முற்றும் அண்டத்தில் இறங்குவதற்கு முன் சுட்டிகை செய்தல்.

St31-பாலிகமுன்மேல் முனையிலிருந்து மேகன அனுசங்கியின் கீழோரத்திற்குச் செல்லும் இடத்திற்கு மத்தியில் இரைப்பை, பீலிகம், கல்லீரல், குடல் போன்றவைகளின் நோயைக் குணப்படுத்தும்.

ஆ) உலோகச் சுட்டிகை

தங்கம், கருவங்கம், செம்பு, அயம், நாகம் போன்ற பஞ்சலோகங்கள் ஏதேனும் ஒன்றினால் செய்யப்பட்ட கருவிகளால் சுட்டிகை இடுவதாகும்.

ஆழிசூட்டுக்கருவி பொட்டு சூட்டுக்கருவி இன்னும் சில கருவிகள்

நாக்கரணை, புற்று, பிளவை, கிரந்தி புண் போன்ற நோய்கள் தோன்றிய இடத்தில் முதலில் பொட்டு சூட்டுக் கருவியினால் சுட்டு வெதுப்பி முளைகளைக் கருக்கியபின்

ஆழிச் சூட்டுக்கருவியினால் சுட்டிகை இடலாம். இவ்வாறே வாய்ப்புற்றுக்கு முளைகளைக் கருக்கியபின் காதின் கீழ் இரண்டங்குலம் விட்டு நெற்றியின் மேலும் தலையுச்சியிலும் பொட்டு சூடும் பிடரிச் சுழியில் குறுக்குச் சூடும் போடலாம்.

மேலும், லசுனதாபிதத்தில் சுட்டிகை செய்வது இன்று சில இடங்களில் பழக்கத்திலுள்ளது.

சித்த முறையிலுள்ள உலோகச் சுட்டிகையைப் பின்பற்றிச் சீன மருத்துவத்தில் Hot Needing Therapy என்றுள்ளது. காட்டரைசேஷன் என்னும் மேல் நாட்டு அறுவை மருத்துவ முறையையும் இவ்வகையில் சேர்க்கலாம்.

காந்திசுட்டிகை

வெயிலில் காய்தலைக் காந்தி என்பர். சித்த மருத்துவ முறையில் வாத நோய்களும், வெண்படை நோயும் குணமாக்கப் பயன்படுகிறது.

வெண்படை நோயில் கார்போகிப் பொடியை எலுமிச்சைப் பழச்சாற்றில் கலந்து நோய் கண்ட இடத்தில் தடவி வெயிலில் ஐந்து நிமிடங்கள் காண்பிக்கச் செய்கின்றனர். ஏனெனில் கார்போகி அரிசியிலுள்ள Psoralen என்னும் மருந்துப் பொருள் சூரியனிலிருந்து வெளிப்படுகின்ற புற ஊதாக்கதிர் "பி" யை (Ultraviolet "B" Rays) தோலின் உட்பகுதிக்கு எளிதில் செல்லச் செய்து நிறமிகளை(Milamin pigments) உற்பத்தி செய்கின்றது. இந்தச் சிகிச்சை முறையைக் காலை 9-00 மணிக்குள் செய்திடல் வேண்டும். இந்த நேரத்தில் புற ஊதாக்கதிர்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

மேலும் சூரியனின் கதிர்களால் வைட்டமின் "டி" உற்பத்தி செய்யப்படுகின்றது. இச்சத்து சுண்ணத்தையும், பாஸ்பரத்தையும் சிறுகுடலில் உறிஞ்சச் செய்து என்புகளையும், பற்களையும் வலுவாக்குகின்றது. இவ்வாறு சூரிய ஒளியை வெற்றுடலில் படச் செய்வதின் மூலம் என்புருக்கி நோயை ஓரளவு தடுக்கலாம்.

கால்சுட்டிகை

காற்று சுட்டிகை என்னும் பெயர்படும், அதாவது வெப்பு மிகுந்த காற்றுகளை உடலில் தாக்கும்படி செய்து வியர்வையை உண்டாக்கிப் பிணியை நீக்கும் முறையாகும்.

நவீன மருத்துவத்தில் மேற்கண்ட முறைக்கு ஈடான அகசிவப்பு கதிர்களையும், இன்னும் பிற கதிர்களையும் பயன்படுத்தி வருகிறார்கள். மேலும் ருஷ்யாவில் பிராண வாயுவைக் (O_2)குறிப்பிட்ட இடத்தில் செலுத்தி நோய் நீக்கப்படுகிறது.

மண்சுட்டிகை

இவ்வகைச் சுட்டிகை முறையில், எண்ணெய் பழகிய குடுவையை நெருப்பிலிட்டு, சூடாக்கித் துணியில் பிடித்துக்கொண்டு, உச்சி, நெற்றி, முதுகு, மார்பு, கால் போன்ற இடங்களின் மேல் நொச்சியிலையைப் பரப்பி அதன் மேல் வைக்க வேண்டும். இதனால் பிடிப்பு, விஷசுரம், தாகம், ஒற்றைத் தலைவலி ஆகியவை குணமடைகின்றன.

சூடுபடுத்திய சட்டியை நேரிடையாகத் தோலின் மேல் வைக்காமல் நொச்சியிலையைப் பரப்பி பின் அதன் மீது சட்டியை வைப்பதால் இது மறைமுகச்சுட்டிகை முறையாகக் கருதலாம்.

இயற்கை மருத்துவ நிலையங்களில் இன்னும் இம்முறை பயன்படுத்தப்படுகிறது.

மருத்துவ அறிவியல் அடிப்படையில் சுட்டிகையின் பயன்

1. சுட்டிகை செய்யும் பொழுது குறிப்பிட்ட இடத்திலுள்ள திசுக்கள் சேதமடைகின்றன. இதன் மூலமாக நாளமில்லாச் சுரப்பிகளும், மண்ணீரல், தைமஸ் சுரப்பி போன்ற ரெடிகுலோ என்டோதீலிய மண்டலமும் தூண்டப்படுகிறது.

2. உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையை உண்டாக்கிச் சஞ்சார நோய்களிலிருந்து காக்கின்றது.

3. Serotinim, Bradykinin போன்றவை குருதியில் வெளிப்படுத்தப்படுகின்றன.

மரச்சுட்டிகை, உலோகச் சுட்டிகை போன்றவற்றை நோயாளி பட்டினியுடன் இருக்கும் பொழுது வயிறு நிறைய உண்ட பின்னரும், சூலுற்ற காலத்திலும், மேற்கொள்ளக்கூடாது. ஏனெனில் மயக்கம், வாந்தி, கருச்சிதைவு போன்ற குறிகுணங்கள் முறையே காணப்படும்.

சுட்டிகை மருத்துவத்தின் சிறப்பு:

அ. விசேஷமான கருவிகள் தேவையில்லை

ஆ. குறைந்த செலவில் சிகிச்சை பெறலாம்.

இ. மயக்கம், உணர்ச்சியின்றிக் கிடக்கும் நிலைகளில் அவசரகால சிகிச்சையாக (As an emergency aid) பயன்படுத்தலாம்.

ஈ. வலிப்பு ஏற்படும் குழந்தைகளில் வலிப்புக்குப் பின் தற்காப்புக்காக, மீண்டும் வராமல் தடுக்கச் சில கிராமங்களில் பயன்படுத்துவதைக் கொண்டு தற்காப்பு மருத்துவமாகக் (Preventive Measures) கொள்ளலாம்.

உ. மருந்துகள் இல்லாக்காலத்தில் குறுகிய நேரத்தில் மருத்துவம் மேற்கொள்ளலாம்.

சுருங்கக்கூறின், பொருட்செலவு, காலம், நோயின் துன்பம் போன்றவற்றைக் குறைக்கலாம்.

சுட்டிகை செய்வதினால் புண்கள் ஏற்படின் அவற்றிற்குத் தனியாக மருத்துவம் செய்யலாம்.

முடிவுரை

சுட்டிகை பரிகாரமுறை நம் தாய் மொழியாம் தமிழில் இருக்கின்ற சித்த மருத்துவத்திற்கே உரியதாயினும் பிறவகை மருத்துவத்தில் இம்முறை செழித்து ஒரு பெரும் பிரிவாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இந்நாளில் காந்தி சுட்டிகையைத்தான் வழக்கில் நாம் பெருமளவில் பயன்படுத்தி வருகிறோம். இதைப்போன்றே மற்றவகை சுட்டிகை முறைகளையும் பயன்படுத்திச் சித்த மருத்துவத்தை வளர்த்திடுவோம். அழிந்து வரும் சுட்டிகைப் பரிகாரமுறை மீண்டும் மறுமலர்ச்சி அடைந்து நோயினரை நலம் பெறச் செய்தலே இக்கட்டுரையின் அரும்பெரும் நோக்கமாகும்.

பயன்படுத்தப்பட்ட நூல்கள்

1. சித்த மருத்துவாங்கச் சுருக்கம்

2. சித்தர் அறுவை மருத்துவம்

3. Text book of Medical Physiology - Arthure Guyton M.D.

4. Principles and Practice of Acupuncture J. K. Patel (India) C.K. LO (China)

5. Clinical Acupuncture-Anton Jayasuriya

சித்த அறிவியலில் கண் மருத்துவம்

டாக்டர் ப. அ. முகம்மது இக்பால், எம்.டி., (சித்தா) விரிவுரையாளர்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

சித்தர்கள் இயற்றிய நூல்கள் பாலர் மருத்துவம், சூல் மருத்துவம், தைலவருக்கச் சுருக்கம், இரசவாதம், இரசக்கட்டு, இரச வைத்தியம், இரண வைத்தியம் (நயன விதி) என்பன போன்றவை பல உள்ளன. இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஒரு சில ஏடுகளே புத்தகமாக வெளியிடப்பட்டன. அவை தற்போது நமக்கு நூல் வடிவில் கிடைக்கின்றன. ஏட்டு வடிவில் இருக்கின்ற பல சுவடிகள் காலப்போக்கில் மறைந்து கொண்டே வருகின்றன. காரணம் ஏட்டில் உள்ள மருத்துவ அறிவியலைப் பற்றி முறையாகச் சித்த மருத்துவர்கள் கவனம் செலுத்தாததேயாகும்.

அகத்தியர் நயனவிதி 500, நாகமுனி நயனவிதி 200 ஆகிய இருநூல்களில் 700 பாட்டுக்களைக் கொண்ட ஒரே ஒரு புத்தகம் மட்டுமே உள்ளது. இப்புத்தகமானது முதன் முதலில் 1923 ஆம் ஆண்டில் கண் மருத்துவர் டி. எஸ். அமிர்தலிங்கம் பிள்ளை அவர்களால் தஞ்சாவூர் அரண்மனையிலிருந்து பெறப்பட்ட ஏட்டினை ஆய்வு செய்து அச்சுப் புத்தகமாகச் சாது இரத்தின சற்குரு புத்தக சாலையினரால் அச்சடிக்கப்பட்டு வெளியாகி உள்ள து. 1936 ஆம் ஆண்டில் அப்புத்தகம் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது. பின் நீண்ட கால இடைவெளிக்குப்பின் மூன்றாம் பதிப்பாக 1976ஆம் ஆண்டு பழனி தண்டாயுதபாணி கோவில் மூலமாக வெளியிடப்பட்டது.

முதல் பதிப்பில் அகத்தியர் நயன விதி 500 பாடல்களுக்கு மூலமும் உரையும் எழுதப்பட்டிருந்தது. நாகமுனி நயன விதி 200 பாடல்களுக்கு மூலம் மட்டுமே இருந்தது. உரை எழுதப்படவில்லை. மூன்றாம் பதிப்பில் நாகமுனி நயன விதி 200 பாடல்களுக்கு மூலமும் உரையும் எழுதப்பட்டு இருக்கின்றது.

கண் மருத்துவம் தொடர்பாகத் தற்போது உள்ள அகத்தியர் நயனவிதி 500 நாகமுனி நயன விதி 200 என்ற பாடல்களில் காணப்படும் அறிவியல் கருத்துக்களை ஆய்வு செய்தால் பலரும் வியக்கத் தக்க அளவில் நோய்க் குறிகுணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதை அறியலாம். எடுத்துக்காட்டாக ஒரு சில பாடல்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அகத்தியர் நயன விதி பாடல் 141

இமை நோய்கள் 16

ஆனதோர் பில்லம் மூன்று அணைந்திமைத் தடிப்பினோடு
நான்முட மயிரி ழிச்சக் கண்பற்பரோகம் மூன்று
ஈனமாம் கழலை மூன்று இமையுநீர் சுற்று நீங்கல்
மானனாய் புழுவினோடு உயர்ச்சி பன்னாறுந்தானே.

இப்பாடலில் கூறப்பட்டிருக்கும் நோய்க் குறிகுணங்களைச் சற்று ஆழமாக உற்று நோக்கினால் தற்காலக் கண் மருத்துவ அறிவியலுடன் பொருந்தி வருகிறது. இப்பாடலின் தொடர் நிலையாக இமை நோய்களின் குறிகுணங்கள் பற்றி பிற்பட்ட பாடல்களில் நாக முனிவர் தெளிவுறக் கூறியுள்ளார். பில்லம் என்பது பற்றி 3

பாடல்களிலும், இமைத்தடிப்பு இழிச்சகண், முடமயிர், பற்பரோகம், கழலை, இமை நீர்ப்பாய்ச்சல், புழுக்கடி, இமை உயர்ச்சி பற்றிய தெளிவான குறிகுணங்கள் மருத்துவம் போன்றவற்றை 141 முதல் 183 ஆவது பாடல்கள் வரை தெளிவுபடுத்தியுள்ளார். பாடல்களில் காணும் குறிகுணங்களைத் தற்காலக் கண் மருத்துவ அறிவியலுடன் ஒப்புநோக்கிச் சில மேற்கோள்கள் காட்டியுள்ளேன். இவைகளை மேலும் ஆய்வு செய்து பார்த்து விளக்க உரைகள் எழுத வேண்டும்.

இமைத்தோடம்-16 LID AFFECTIONS

1.	பில்லம் 3	TRACHOMA
	நீர்ப்பில்லம்	Stage I
	அமரப்பில்லம்	Stage II
	குடற்பில்லம்	Stage III
2.	இமைத்துடிப்பு	
	இமைப்புறக்கட்டி	Hordiolum Externum (Style)
	இமை உள்கட்டி	Hordiolum Internum
3.	முடமயிர்	TRICHIASIS
	முடமயிர் உள்வளர்ச்சி	Entropion
	முடமயிர் வெளிவளர்ச்சி	Ectropion
4.	இழிச்ச கண்	ULCERATIVE BELEPHERITIS
5.	பற்பரோகம்	Other diseases including anomalies of the lid

6.	கழலை	TUMOUR OF THE LID Benine tumour Malignant tumour
7.	இமைநீர் பாய்ச்சல்	CONJUCTIVITIS DACRYOCYSTITIS
8.	சுற்றுக் குலைவு	ULCERATIVE BELEPHERITIS
9.	புழுக்கடி	ULCERATIVE BELEPHERITIS
10.	இமையுயர்ச்சி	VIIth NERVE PALSY (Bell's Palsy)

முன்கூறப்பட்ட நூலிலுள்ள 700 பாடல்கள் நான்கு வரிப்பாடல்களாக விருத்தங்களாக உள்ளன. பாடல்களை ஆய்வு செய்தால் இரண்டு ஆசிரியருக்குமிடையே நோய்க்கணிப்பில் நோய்ப்பகுப்பில் குறிகுணங்களில் ஒரு சில கருத்து மாறுபாடுகள் காணப்படுகின்றன. அவைகளை வரன்முறைப்படுத்த வேண்டியது நமது கடமையாகும். மேலும் அந்நூலில் அவர்கள் அறுவை மருத்துவம் மேற்கொண்டனர் என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன. காசம் (cataract) நாகபடலம் (Pterygium) போன்ற நிலைகளுக்கு அறுவை மருத்துவம் மேற்கொண்டுள்ளதாகவும் அதன் பிற்பட்ட நிலையில் அகப்புற மருத்துவம் மேற்கொண்டு நலப்படுத்தினர் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

வெள்ளெழுத்து பற்றிய குற்ப்புகள்

தெளிவுற வெளியாய் நிற்குந் தீங்கில்லை முப்பத்தேழில்
ஒளியறப் புகைந்து சற்றே ஒதுங்கிடு நாற்பத்தைந்தில்
வெளியுற இருள் தானாகும் மேவிய ஐம்பத்தேழில்
அளிவுற இருளுங் கண்களாண்டது நூறதாமே (நா. ந. வீ. 91)

கூசும் விழியும் புகைந்திருக்கும் குறுகும் பார்வைதோற்றாது
மாசும் கண்ணும் பசிந்திருக்கும் மயங்கும் குணங்கள்
பலவாகும்
தேசுங்குறையு மருட்சியுண்டாம் திறமாய்க் கருமாம்
செய்யாது
ஏசுங் குணங்கள் வெள்ளெழுத்து என்றே சொல்லு
இது கண்டே. (அ. ந. வி. 39)

முற்கூறப்பட்ட பாடல்களிலிருந்து வெள்ளெழுத்து என்பது எந்த வயதில் ஏற்படும் என்பது பற்றியும் அந்நிலையில் காணப்படும் குறிகுணங்கள் பற்றியும் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. முன்கூறப்பட்ட இரண்டு பாடல்களும் இரண்டு ஆசிரியர்களால் கூறப்பட்டு இருக்கின்றன. இரண்டு பாடல்களிலும் கூறப்படும் கருத்துக்கள் வெள்ளெழுத்து என்ற நிலையைத் தனிமைப் படுத்திக் காண உதவுகின்றன.

இது தவிரக் கண் மருத்துவம் தொடர்பாகச் சென்னையிலுள்ள உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் 1982ஆம் ஆண்டில் கண் மருத்துவம் என்ற ஒரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலில் கண் மருத்துவம் பற்றிய பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நயன மருத்துவம் பற்றிய 14 சுவடிகளை ஆய்வு செய்து தொகுத்து வெளியிட்டுள்ளனர். அந்நூலில் 14 ஏட்டுச் சுவடிகள் இருக்கும் இடங்கள் பற்றித் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அச்சுவடிகளை முறையாக ஆய்வு செய்து பயன்படத் தக்க கருத்துக்கள் அடங்கியிருந்தால் அவைகளை அச்சிடத் தஞ்சை சரசுவதி மகால் நூலகம் முயற்சிகள் மேற்கொண்டால் சித்தர்நயன (கண்) மருத்துவத்திற்குப் பயனுள்ள மேலும் பலநூற்கள் கிடைக்கும். அதன் மூலம் கண் மருத்துவம் வளர்ச்சி பெற வாய்ப்புண்டு.

சுவடி பற்றிய தகவல்கள்

அரசினர் கூழ்த்திசை சுவடிகள் நூலகம், சென்னை.

நூலின் தலைப்பு	பாடல்கள்
1 அகத்தியர் நயனவிதி	291
2 அகத்தியர் நேத்திர வாகடம்	250
3 அகத்தியர் சஞ்சீவி	94
4 நயன வைத்திய விதி	95
5 நயன விதி	189
6 கண் வைத்தியம்	198
7 கண் வைத்தியம்	105

தஞ்சை சரசுவதி மகால் சுவடி நூலகம், தஞ்சை

1 அகத்தியர் நயனவிதி	345
2 அகத்தியர் நயன விதி	333
3 நயன சாத்திரம்	54

கேரளப் பல்கலைக் கழகச் சுவடி நூலகம்
திருவனந்தபுரம்

1 நயன விதி	50
2 நயன வாகடம்	92
3 நயன விதி	14
4 நயன விதி	22

மேற்படி ஏட்டுச் சுவடிகளை ஆய்வு செய்து தகுதி வாய்ந்தவைகளை நூல் வடிவில் பதிப்பித்தால் சித்த மருத்துவத்தில் கண் மருத்துவப் பிரிவு மேலும் சிறப்புப்பெறும்.

ஒப்பு நோக்கப்பட்ட நூற்கள்:

1. அகத்தியர் நயன விதி 500 நாகமுனி நயன விதி 200 (1936)

2. கண் மருத்துவம், பதிப்பாசிரியர் மாதவன் (1982)

3. Opthalmology by May & Worth 1960

கிராமியப் பகுதிகளில் சித்த மருத்துவ நடைமுறைச் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களும் நிவர்த்திக்கும் முறைகளும்

டாக்டர் எஸ். ஏ. யூசுப், பி.ஐ.எம்., மருத்துவ அலுவலர்
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், செய்துங்கநல்லூர்.

மிகவும் பின்தங்கிய கிராமங்களில் தனியாக அமைந்திருக்கும் சித்த மருத்துவப்பிரிவுகள் மிகவும் சவாலான, சிக்கலான சூழ்நிலையைச்சமாளிக்கும் நிலையில் அமைந்துள்ளன. பெரும்பாலான ஊராட்சி ஒன்றிய சித்த மருந்தகங்கள் மிகவும் பிற்பட்ட, சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாத கிராமங்களில் அமைந்துளளன. இம்மருந்தகங்களின் அருகாமையில் வேறு பெரிய அரசு மருந்தகங்கள் அமையாததினால் பெரும் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

உதாரணமாக, பெரும்பாலும் சிறுகுழந்தைகள் (3 வயது முதல் 12 வயது வரை) தலை அல்லது நெற்றியில் அல்லது கண் இமை மேல் பகுதிகளில் பலமாக அடிபட்டுப் பிளவுபட்ட விரணங்களை தையல் மூலம் பொருத்தி வில்வாத ஜன்னி (Tetanus) வியாதி வராமல் தடுக்கச் செய்ய வேண்டும். இம்முறைகளைச் சமாளிக்கச் சித்த மருத்துவத்தில் மாற்று முறைகளை உடனடியாகக் காண வல்லுநர் குழு அமைத்து முயற்சிக்க வேண்டும். மேலும் சிறு குழந்தைகள் கடும் ஜுரம் மற்றும் இசிவுகளுடன் வருவதுண்டு. இம்மாதிரி நிலைகளில் இசிவுகளை உடனடியாக நிறுத்தச் சித்த மருத்துவத்தில் மேம்பட்ட முறைகளைக் கையாண்டு நிவர்த்தி கிடைக்கத் தக்க ஆராய்ச்சிகள் நடத்த வேண்டும்.

மேலும் கடுமையான வயிற்றுவலி மற்றும் இடுப்பு, முதுகு, கழுத்து வலியுடன் வரும் நோயாளிகட்கு அதிநவீன நிவாரண முறைகளை சித்த மருத்துவ முறைகளில் கையாளப் பெரும் முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

இதேபோல் இரைப்பு நோயில் கடும் மூச்சுத்திணறலுடன் வரும் நோயாளிகளில் பெரும் கஷ்டத்தையும் அவஸ்தையையும் தவிர்க்கச் சித்த மருத்துவ முறைகளில் அரிய முயற்சி மேற்கொண்டு உடனடி நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அவ்வண்ணமே தேள், நட்டுவாக்காலி, பாம்பு போன்ற விஷ ஜந்துக்களின் கடிகளினால் பாதிக்கப்பட்ட நபரின் கடுமையான வலியை நிவாரணம் செய்யவும். விஷமானது இரத்தம் மூலம் பரவிச்சுவாசத்தைத் தடை செய்யாமல் தடுக்க விஷ மாற்று மருந்துகளைச் சித்த மருத்துவத்தின் மூலம் வழங்கி நல்ல பயன் கிடைக்க உடனடி ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும்.

கிராம மக்கள் மிகவும் ஏழ்மையிலும், போக்குவரத்து வசதி குறைந்த இடங்களிலும் வசித்து வருவதால் அவர்கள் நம்பிக்கையுடன் அருகாமையில் உள்ள சித்த மருந்தகங்கட்குச் சிகிச்சை நாடி வருவதுண்டு. இந்நிலையில் நோயாளிகள் உடனடி நிவாரணம் பெறாமல் சிறிது தாமதம் அடைந்தாலும் பெரும் கஷ்டத்திற்கும் கோபத்திற்கும் ஆட்படுவது உண்டு. இதனால் அவர்கள் சித்த மருத்துவத்தின் மீது வைத்திருக்கும் ஆழ்ந்த நம்பிக்கையைக்கூட இழக்கும் நிலை வரலாம். இந்நிலைகளை உடனடியாக மாற்றத் தக்க நடவடிக்கைகளைத் தமிழக அரசு உடன் மேற்கொள்ள வேண்டும். மேலும் மிகவும் பிற்பட்ட கிராமங்களில் பணி செய்யும் சித்த மருத்துவர்கட்கு அரசு வருடம் ஒரு முறை

சென்னை இந்திய மருத்துவ இயக்குநரகத்தில் நவீன மருத்துவக் கருவிகளைப் பற்றிய அறிவு, உபயோகிக்கும் விதம் அவற்றின் பயன்கள் என்பது பற்றியும் நவீன விஞ்ஞான முறையில் பரவி உள்ள சிகிச்சை முறைகள் பற்றியும் விளக்கமாகப் பயிற்சி அளிக்க வேண்டும்.

ஆங்கில மருத்துவ முறையில் குணப்படுத்த முடியாத வியாதிகள் என ஒதுக்கித் தள்ளப்பட்ட மதுமேகம் (Diabetes) புற்று (Cancer) இரைப்பு நோய் (Asthma) இளம்பிள்ளை வாதம் (Polio) போன்ற நோய்கட்குச் சித்த மருத்துவத்தில் (மறைக்கப்பட்ட) நிரந்தர, நிவாரண, முறை உண்டு. அம்மருத்துவ முறைகளை வெளிப்படையாக அறிவிக்கும் சித்த மருத்துவர்களுக்குத் தக்க உயர்ந்த சன்மானங்களை அரசு அறிவித்தால் (சுமார் 1 லட்சம் முதல் 10 லட்சம் வரை) கண்டிப்பாக நல்ல பயன் கிட்டும். சித்த மருத்துவம் கிராமங்களில் சீர் பெற அரசு சீரிய கவனம் செலுத்திப் பயனுள்ள ஆராய்ச்சிகளை மேற்கொள்ள உடனடியாக ஆவன செய்யவேண்டும் என இந்த கருத்தரங்கம் மூலம் வேண்டுகிறோம்.

தமிழரசு என்ற செய்திப் பத்திரிகையுடன் இலவச இணைப்பாகச் சித்த மருத்துவக் குறிப்புகள் அடங்கிய பிரதி ஒன்றை அரசு இலவசமாக வெளியிட முயற்சிக்க வேண்டும். சித்த மருத்துவத்தில் நிவர்த்தி முறைகள்:

மேற்சொன்ன பிளவுபட்ட விரணத்திற்கு முறைப்படி தையல் மூலம் பொருத்தி வில்வாத ஜன்னி வராமல் தடுக்கக் கீழ்க்கண்ட சித்த மருந்துகளைக் கையாளலாம்.

1. அமுக்கராமாத்திரை - 1, பரங்கிப்பட்டை மாத்திரை-1, பிரமானந்த பயிரவம் - 1, சிவனார் அமிர்தம் - 200 மி. கி.

இம்மருந்துகளைத் தேனுடன் கலந்து மூன்று வேளை வீதம் ஒரு வாரம் சாப்பிடலாம்.

சிறு குழந்தைகளின் கடும் ஜ்ரம், இசிவுகளை நிறுத்த அண்டத்தைலம் 5 சொட்டு வீதம் வாய் வழியாக உள் மருந்தாகக் கொடுத்து மேலுக்கும் தடவலாம். அண்டத் தைலத்துடன் வசந்த குசுமாகர மாத்திரை 1, கஸ்தூரிக் கருப்பு 100 மி. கிராம் அளவு சேர்த்து மூன்று வேளை வீதம் தேனில் மூன்று நாட்கள் தரலாம்.

கடுமையான வயிற்றுவலி, கழுத்து முதுகுவலியுடன் வரும் நோயாளிகட்கு அபின் சேர்ந்த வலி நிவாரண மருந்துகளை அளவுடன் உபயோகிக்கலாம்.

(உ. ம்.) கபாட மாத்திரை.

கடுமையான இரைப்பு நோயில் மூச்சுத் திணறலுடன் வருபவர்கட்குக் கீழ்க்கண்ட மருந்துகளை வழங்கலாம்.

1.	தாளிசாதி மாத்திரை	1
	சுவாசக் குடோரி மாத்திரை	1
	விஷ்ணு சக்கர மாத்திரை	1
	சிவனார் அமிர்தம்	200 மி. கிராம்

இம்மருந்துகளை மூன்று வேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிட நல்லகுணம் தரும்.

தேள்கடி மற்ற விஷ ஜந்துகளின் கடிகட்கு உடனடியாகத் தேங்காய்ப் பால் 30 மி.லி. அளவு உள்ளுக்குச் சாப்பிட வேண்டும். பின்பு கீழ்க்கண்ட மருந்துகளைச் சேர்த்துக் குடிநீராக்கிக் கொடுக்க நல்ல பலன் தரும்.

1.	அறுகம் புல்லின் வேர்	20 கிராம்
	மிளகு	5 ..
	கருப்புக் கட்டி	100 ..

இத்துடன் 800 மி.லி. அளவு தண்ணீர் சேர்த்து அடுப்பில் ஏற்றித் தீயெரித்து 200 மி.லி. அளவு குடிநீராகச் சுருங்கியதும் வடிகட்டி அருந்த வேண்டும்.

மேற்கூறிய மருத்துவ முறைகள் உடனடியாகப் பலன் தராவிட்டாலும் சிறிது காலதாமதத்தில் நல்ல பலன் தரும். மேலும் நல்ல பயனுள்ள ஆராய்ச்சிகள் மேற்கொண்டு மேற்சொன்ன மருந்துகளைவிட வெகுசீக்கிரம், உடனடி நிவாரணங்கள் கிடைக்கும், சித்த மருந்துகளைக் கண்டு பிடித்து வழங்கவேண்டும் என இக்கருத்தரங்கு மூலம் வேண்டுகிறோம்.

நீரிழிவு நோய்க்கு ஓர் எளிய நிவாரணம்

வே. ஜான் ஜஸ்டஸ், விரிவுரையாளர்,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

நீரிழிவு நோய் எனப்படும் மதுமேகம் உலகம் முழுவதும் பரவி இருக்கின்ற ஒரு நோய். இன்றளவும் உலகின் பல்வேறு மருத்துவ ஆய்வு நிலையங்களிலும் இந்நோய்க்கான காரணம் நோயை முழுமையாகத் தீர்க்கின்ற மருத்துவம் முதலியவற்றில் ஆய்வுகள் நடந்து வருகின்றன. எத்துணைச் சிறப்பான கருவிகள் கொண்டு ஆய்கின்ற போதும் இதற்கான தீர்வு மேலும் மேலும் தொடர்கின்றது.

மதுமேக நோய்க்கான சரியான காரணம் தெரியாத நிலையில் இரு மதுமேக நோயாளிகளுடைய வாரிசுகள் திருமணம் செய்து கொள்வதைத் தவிர்த்தல் நலம். இதன் மூலம் தொடர்ந்து வரும் பரம்பரை நோயைத் தடுக்கலாம் என்பர்.

> "அண்மையா யடிக்கடிக்கு நீரிறங்கும்
> அடிக்கடிக்கு அரை நாழிதனியே காணும்
> வெண்மையானடி யதளிந்தான் பிடிக்கும்
> மிக்கான சடம் வெளுத்து மேனி குன்றும்"
>
> -யூகி. சிந்தாமணி

மதுமேகம் என்கின்ற இத்தீவிர நோய் அடிக்கடி நீர் கழிதல், அந்நீரில் இனிப்புச் சுவை மிகுந்திருத்தல், ஏழு உடல் தாதுக்களும் சிறிது சிறிதாக வன்மை இழத்தல் முதலிய மாறுபாடுகளை அடையும் ஒரு நிலையாகும்.

நோய்க்கணிப்பு

இந்நோய்க்கான ஓர் எளிய மருத்துவத்தை நிர்ணயிக்கும் பொருட்டு, பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரும்பான்மையான நோயாளர்கள் மதுமேக நோய் வரலாறு உடையவர்கள். சிறுநீரில் சர்க்கரைச் சத்து காணப்படுவதால், குருதியில் சர்க்கரைச் சத்துக் காணப்படுதல், இவற்றை நவீன ஆய்வு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு அதன் வழி நோய் கணிக்கப்படுகிறது.

பெரும்பாலான நோயாளர்க்கு நோய்க்குறி குணங்கள் காணப்பட்ட போதிலும் குருதிச் சர்க்கரை அளவைக் கொண்டே நோய் உறுதி செய்யப்பட்டது.

மருத்துவம்:

சீரான நோய்க் கணிப்பிற்குப் பின்னர் எளிதாகக் கிடைக்கவல்ல ஆனால் காயகற்பங்கள் எனச் சிறப்புடைய சக்தி செய்யப்பட்ட கடுக்காய், கறிவேப்பிலை, நெல்லிக்காய் ஆகிய மூன்று மூலிகைகளை சம அளவில் சேர்த்து நிழலில் உலர்த்தி சூரணிக்கப்பட்டு, வஸ்திரகாயம் செய்யப்பட்டுப் பயன்படுத்தப் படுகின்றன. இம்மருந்து 2 முதல் 3 கிராம் அளவு வரை இரு வேளை அல்லது 3 வேளை நோயாளி வன்மை, நோயின் வன்மை, இவைகளுக்கு ஏற்ப வழங்கப்படுகின்றது.

இதில் சேர்கின்ற கடுக்காய், அறுசுவையும் உடையதெனவும், தாயைவிடச் சிறப்புடையதெனவும் கூறப்பட்டுள்ளதாலும், தற்கால ஆய்வுகள் இம்மூலிகை பற்பல செய்கை உடையது (adaptogenic) என நிரூபித்துள்ளதாலும் கண்ணோய்களை நீக்கவல்ல சிறப்புடையதாலும் நீரிழிவில் காணப்படுகின்ற பார்வைத்திரைக் கோளாறுகளை நீக்கவல்லது என்ற அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கறிவேப்பிலை

கறிவேப்பிலையின் மூலிகை வேதியல் ஆய்வுகள், அதன் வேதிப்பொருள்கள், குருதிச் சர்க்கரை அளவைக்

குறைக்க வல்லது என்பதை நிலை நிறுத்துவதால் இம்மூலிகை சேர்க்கப்பட்டது.

நெல்லிக்காய்

நான் வாழாவிட்டாலும் தமிழ் வாழவேண்டும் என்ற காரணத்தால் ஔவைக்கு அதியமான் கொடுத்த நெல்லிக்கனிதான் இம்மருந்துக் கலவையின் சிறப்பான அடுத்த மூலிகை.

சரபேந்திர வைத்திய முறைகளிலும், அகத்தியர் 2000 நூலிலும், நீரிழிவு நோய் நீக்கும் தன்மை இதற்குக் கூறப்பட்டுள்ளது.

தேர்வு

500க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இம்மருந்தை உட்கொண்டு நலம் பெற்று வருகின்ற போதிலும் 3 நோயாளர்களிடம் ஏற்பட்ட குருதிச் சர்க்கரை மாறுதல் இங்குத் தரப்படுகிறது. இம்மூன்று நோயாளர்களும் மாறுபட்ட வயது வன்மை உடையவர்கள்.

குருதி சர்க்கரை அளவு மி.கி.

நோயாளியின் பெயர், வயது பால்	வெளி நோயாளர் எண்	மருத்து வத்திற்கு முன்	2ம் மாதம்	3ம் மாதம்	மருத்து வத்தின் முடிவில்
சுப்பிரமணிய பிள்ளை 70/ஆண்	27	416	210	152	132
முத்துராஜ் 25/ஆண்	7633	410	118	,,	89
முத்துக்குமாரசுவாமி 58/ஆண்	156	227	162	142	118

மருத்துவம் தொடர்கிறார்.

மேற்சொன்ன நோயாளர்கள் எல்லாருமே மதுமேக நோயாளர்க்குரிய எளிய உணவுக் கட்டுப்பாடு அறிவுறுத்தப்பட்டவர்கள். அவை அதிக இனிப்புச் சுவையுள்ள பொருள்களைத் தவிர்த்தல், மாப்பொருட்களைக் குறைந்த அளவு உட்கொள்ளுதல் முதலியன. இவர்கள் உண்பதற்காகக் கீரை வகைகள், புரதப் பொருள்கள் முதலியன கூறப்பட்டன.

ஆய்வின் முடிவு

மேற்கண்ட நோயாளிகளின் குருதிச் சர்க்கரை அளவு மாறிய விதம் அவர்களின் நோய்க்குறிகுணங்கள் குறைந்த விதம் ஆகியவை குறிப்பிடக்கூடிய அளவில் குறைந்துள்ளன. இம்மருந்துகளின் மதுமேக நோய் நீக்கல் செயல் நம்பிக்கையைத் தருகிறது.

தீவிர விளைவுகளைத் தரக்கூடிய நோய் என்று சித்தர்களால் கூட வர்ணிக்கப்படுகின்ற மதுமேக நோய்க்கு எளிமையான சிறப்பான இம்மருந்துகள் ஓர் நம்பிக்கை ஒளியாகத் திகழ்கின்றன.

இவ்வாய்வுக் கட்டுரை ஆய்வின் இடைநிலையில் தரப்படுகின்ற, பல்வேறு பகுதிகளிலும் இதன் பயன் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் தரப்பட்டுள்ள ஓர் செய்தியே. முழுமையான முடிவுகளுள் எதிர்வரும் காலத்தில் மருத்துவ அறிவியலுக்குச் சமர்ப்பிக்கப்படும்.



நோயும் நோய்முதலும்

மரு. குரு. கணபதி, இணைப்பேராசிரியர்
மரு. கோ. இலட்சுமையா,
தேர்வுநிலை உதவிவிரிவுரையாளர்
அரசினர்சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை

நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் திருக்குறள்

முன்னுரை

நோயை இன்னவென்று கணிக்காமலோ, நோயின் காரணத்தை இன்னதுதான் என்றறியாமலோ செய்யக்கூடிய மருத்துவத்தை மருந்தாளுநர் மருத்துவம் (Compounder's treatment) என்று கூறப்படுகிறது. சித்த மருத்துவமும் அவ்வாறுதான் மருத்துவர்களால் கையாளப்பட்டு வருகிறதோ என்ற ஐயம் பலருக்கு உண்டு. ஆனால் மேல் குறிப்பிட்ட குறள் ஒன்றே போதும் சித்த மருத்துவம் எவ்வளவு முழுமையான மருத்துவம் என்பதனை அறிய. எந்தக் கருத்தையும் சுருங்கக்கூறி விளங்க வைப்பதில் வள்ளுவருக்கு நிகர் வள்ளுவரே என்றால் அதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. பலரும் குறளுக்கு விளக்கத்தை எழுதும் நிலையில் மருத்துவர்களால் உணரக்கூடிய விளக்கம் இந்தப் பாடலுக்கு என்ன என்பதனைப் பார்ப்போம். அதற்கு முன் நோய் என்றால் என்ன?

நம்மை நாம் இயற்கை வழியில் செல்லவிடாமல் தடுக்கும் சக்தி எதுவோ அதுவே நோயாகும். அது உள்ளத்தைப் பற்றியதாகவும் இருக்கலாம். உடற்கட்டுகளால் ஆன உடலைப் பற்றியதாகவும் இருக்கலாம்.

நோய்நாடி

நோய்நாடி என்பது நோயைக் கணித்தல் ஆகும். அதாவது இந்த நோயினால் நோயாளி அவதியுறுகின்றார் என்பதை அறிவதாகும். நோயை எவ்வாறு அறியலாம் என்று பார்க்கும் பொழுது எண்வகைத் தேர்வை நினைவு கூர்தல் வேண்டும். அதாவது நா, நிறம், மொழி, விழி, ஸ்பரிசம், மலம், மூத்திரம், நாடி என்ற எட்டுவகைப் பரிசோதனைகளாகும்.

நா

நாவைப் பரிசோதித்தல், நாவை மூன்று வழிகளில் பரிசோதிக்க வேண்டும்.

நாவின் நிறம்

வாதநிறம்	- கறுமை நிறம்
பித்தநிறம்	- மஞ்சள், சிவப்பு நிறம்
கபநிறம்	- வெள்ளை நிறம்
தொந்தநிறம்	- ஒன்றோடொன்று கலந்த நிறம்
முக்குற்ற நிறம்	- வாத, பித்த, கப நிறங்களில் தோன்றல்

நாவின் குணம் அல்லது நாவின் தன்மை

மாப்படிந்துள்ளதா, புண்பட்டுள்ளதா, வளைந்து காணப்படுகிறதா? வழவழத்துக் காணப்படுகிறதா, நா வறட்சி அல்லது அதிகமாக நீர் ஊறல் உள்ளதா, நாவெடிப்புற்றுக் காணப்படுகிறதா, இலசுனவளர்ச்சி, பற்களின் நிலை போன்ற இன்னும் பல குணங்களை அறிதல் வேண்டும்.

நாவின் புலன்:

சுவை அறிதல், சுவை நன்றாக இருக்கிறதா, சுவையின்றி இருக்கிறதா, சுவை மாறுபட்டுக்

காணப்படுகிறதா, (நச்சுத் தன்மைகளில் இவ்வாறு காணப்படுவது உண்டு)

மொழி

உரத்த ஒலி, சமஒலி, குரற்கம்மல், சிரித்தல், பிதற்றல், குளறல், சம்பந்தமில்லாத பேச்சு, பெருங்கூச்சல், வருந்திப் பேசல், கபத்தோடுடைய பேச்சு, மூச்சுத்திணறலுடன் பேசல் போன்றன.

விழி நிறம், தோட நிறங்கள்

குணம். 96 வகையான கண்ணோய்களில் ஏதேனும் உள்ளதா என அறிதல்.

புலன்

பார்வையறிதல்

மலம்

நிறம்: சிவந்து (குருதி கலந்து) இருத்தல், வெளுத்துச் சலம் கலந்து இருத்தல்.

அளவு: மலக்கட்டு முதலியன

மணம் - நாற்றம்

பித்த குணம் - புளிப்பு மணம்

கப குணம் - துர்நாற்றம்

நுரை - நுரையுடன் மலம் கழிதல் (உஷ்ணம்-வாயு)

மூத்திரம்

நீர்க்குறி நிறம்

அளவு

மணம்

நுரை

எஞ்சல் இவைகளை அறியவேண்டும்

நெய்க்குறி வாதம்-அரவென நீண்டிடுதல்
பித்தம்-ஆழிபோல் பரவல்
கபம்-முத்தொத்து நிற்றல்

நாடி

நோயைக் கணித்தலை உறுதிப்படுத்துவது நாடி முறையாகும்.

வாதநாடி	-வாதம்	வாயு உஷ்ணம் சீதம்
பித்தநாடி	- பித்தத்தில்	வாயு உஷ்ணம் சீதம்
கபநாடி	- கபத்தில்	வாயு உஷ்ணம் சீதம்

தொந்த நாடி
முக்குற்ற நாடி

நோய் முதல் நாடி

நோயின் காரணத்தை அறிதலாகும்

1. புறக்காரணம்	தன் செயல்	செயல்மாறுதலால்
	பிற செயல்	உண்டாதல்
	தன்பிறச் செயல்	

2.அகக்காரணம் உணவு வகைகள் - அறுசுவை அடிப்படையில்

சுவைகள் தோன்றும் விதம்

எல்லாச் சுவைகளும் ஐம்பூதச் சேர்க்கையில் உண்டாகின்றன.

மண் + நீர் - இனிப்பு
மண் + தீ - புளிப்பு
நீர் + தீ - உப்பு
வளி + தீ - கார்ப்பு
மண் + வளி - துவர்ப்பு
வளி + வெளி - கைப்பு

வாத (வளி) நோயை உண்டாக்கும் சுவைகள்:
கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு
பித்த நோயை உண்டாக்கும் சுவைகள்:
கார்ப்பு, புளிப்பு, உப்பு
கபநோயை உண்டாக்கும் சுவைகள்:
இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உப்பு

இதுவன்றி உதாரணமாக:

வாத பந்தமலாது மூலம் வராது
குடல் தனிலே சீதமலாது சுரம் வராது
போன்ற மூலக்குற்றங்களும் இதனுள்ளே
அடங்கிவிடும்

வாய்நாடி (அது தணிக்கும் வாய்நாடி)

நோயைக் கணித்தபின் அதன் மூலக்காரணத்தையும் அறிந்து பின் நோயாளி அந்நிலையில் இருந்து குணம் பெறுவதற்கும் மருத்துவம் செய்வித்தலுக்கும் முன் மருத்துவம் செய்யப்போகும் முறையை முடிவு செய்தல் வேண்டும்.

விரேசனத்தால் - வாதம் தாழும்
வமனத்தால் - பித்தம் தாழும்
நசியம் ஆக்கிரானத்தால் - கபம் தாழும்

என்ற அடிப்படைத் தத்துவத்தின் கீழ்த் தொடங்கல் வேண்டும்.

அதன்பின் தோன்றியுள்ள குறிகுணங்களுக்கு அதன் கேடுற்ற குற்றத்தினைப் பொறுத்து என்ன மருத்துவம் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தல் வேண்டும். அதன்பின் ஏழு உடற்கட்டுகளில் எந்தெந்த உடற்கட்டுகள் பாதிப்பு அடைந்துள்ளன என்பதை உணர்ந்து அவற்றை நன்னிலைப் படுத்த மருத்துவம் செய்விக்க முடிவெடுக்க வேண்டும் என்பதாகும். பொதுவாக, மருத்துவ முறையை எதிர் உரை, ஒப்புரை, கலப்புரை என்ற ரீதியில் அமைக்கின்றோம். உதாரணமாக, கழிச்சல் இருக்கிறதென்றால் எதிர் உரையில் கழிச்சலை நிறுத்துவதற்கான மருத்துவம் செய்தலாகும்.

ஒப்புரையில் கழிச்சலுக்கான காரணத்தை உணர்ந்து செரியாமையின் பொருட்டு உண்டாகியிருக்குமாயின் நன்றாகச் செரிப்பித்து மலத்தைக் கழிக்கக்கூடிய மருந்துகள் கொடுக்க வேண்டும்.

கலப்புரையில் நேர் மருந்தையும், ஒப்பு மருந்தையும் கொடுத்து மருத்துவம் செய்ய முடிவெடுத்தல் ஆகும்.

நோயளவு, நோயாளியளவைப் பொருத்து மருத்துவர் மிகவும் கவனமாக இவ்வழிகளில் எதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதனை முடிவு செய்யவேண்டும்.

வாய்ப்பச் செயல்:

நோயைப் பொறுத்தும் நோயாளியைப் பொறுத்தும் மருந்துகளை நிர்ணயித்து மருத்துவம் செய்தலாகும்.

வேர்பாரு தழைபாரு விஞ்சிகைகால்
பற்ப செந்தூரம் பாரே.

என்ற அடிகளின் அடிப்படையில் முதலில் மூலிகைகளினால் மருத்துவம் செய்விக்க முயற்சிக்க வேண்டும். இன்னும் மக்கள் உலோக, பாடாண மருந்துகளைச் சாப்பிடுவதில் பயமும், மூலிகை மருந்துகளை சாப்பிடுவதில் மகிழ்ச்சியும்

கொண்டுள்ளார்கள். அக்காலத்திலும் இது வலியுறுத்தப் பட்டுள்ளது. மூலிகை மருந்துகளால் குணம் ஏற்படாத போது பற்பம், செந்தூரம் போன்றவற்றைத் தேர்வு செய்தல் வேண்டும். மூலிகை மருந்துகளில் குணம் முழுமையும் ஏற்பட வழியில்லை என்ற நிலையிலும் உலோக, பாடாண மருந்துகளை மருத்துவரின் எண்ணத்திற்கு ஏற்பப் பயன்படுத்த வேண்டும்.

இதுவன்றி மருத்துவ முறையில் மலத்தைக் கழிக்க முதலில் மருத்துவம் செய்விக்க வேண்டும் என்ற நிலையில் நோயாளியைப் பொருத்தும் (உடல் இலக்கணம்) நோயைப் பொருத்தும் (குற்ற அடிப்படையில்), காலத்தைப் பொருத்தும் (Seasons) என்ன வகையான மருத்துவத்தைக் கையாளலாம் என்பதை உணரவேண்டும். ஏனென்றால் மலத்தைக் கழிக்கக் குடிநீர், மாத்திரை, தைலங்கள் போன்ற மருந்துகள் உள்ளன. அடுத்து நோய்க்கான நேர் மருந்தைத் தேர்வு செய்தல் வேண்டும். அதற்குத் துணை மருந்து ஏதேனும் சேர்க்க வேண்டுமானாலும் சேர்க்க வேண்டும். உதாரணமாக வெளுப்பு நோயால் பாதிக்கப்பட்டவருக்கு மருத்துவம் செய்விக்கும் போது அயச்செந்தூரமோ அல்லது அன்னபேதிச் செந்தூரமோ கொடுக்கும்போது ஏதேனும் சூரணத்தைத் துணை மருந்தாகத் தேவைப்பட்ட குணத்திற்குத் தகுந்தாற்போல் சிறந்த அனுபானத்தில் கொடுத்தல் வேண்டும். மருந்துகளின் அளவு, நோயளவும், நோயாளியின் அளவைப் பொருத்தும் கொடுக்கப்பட்ட பொது அளவில் இருந்து தேர்வு செய்தல் வேண்டும்.

பத்தியம் நோய்க்காகவும், மருந்திற்காகவும் தேவைப்படுவதற்கு இணங்க நோயாளிகளுக்கு அறிவித்தல் வேண்டும் உணவில் நோய்க்குக் காரணமான சுவையுள்ள உணவுப் பதார்த்தங்களை நீக்கச் சொல்ல வேண்டும். உதாரணமாக கப நோயினால் பாதிக்கப்பட்ட

நோயாளிகளுக்கு இனிப்பு (மண்-நீர்-இனிப்பு-கபம்) இவற்றை நீக்கச் சொல்ல வேண்டும். அதுபோல் சேர்க்க வேண்டியவற்றைச் சேர்க்க வேண்டும். நீக்கப்பட வேண்டியவற்றை நீக்கச்சொல்ல வேண்டும்.

நோய் முதல் நாடலில் புறக் காரணத்தில் தன்செயல், பிறசெயல், தன்பிற செயல்களைப் பிரித்தறிந்து பார்ப்பதினால் இவற்றைத் தவிர்த்தலால் நோய் வராமலும் தடுக்கலாம் என்பது அறியப்படுகிறது. எனவே இக்குறளின் மூலம் சித்த மருத்துவம் (இந்திய மருத்துவம்-தமிழர் மருத்துவம்) எவ்வளவு முழுமைபெற்ற மருத்துவமாக வழக்கத்தில் மக்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது தெளிவாகிறது.

சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழிமுறைகளும்

டாக்டர் சேதுராமன், உதவி மருத்துவ அலுவலர்,
ஆரம்ப சுகாதார நிலையம்,
பூந்தோட்டம், தஞ்சைமாவட்டம்.

மொழிகளில் தொன்மையானது தமிழ் மெழியாகும்! மருத்துவத்தில் தொன்மையானது தமிழ் மருத்துவம்! அரிய சித்த மருத்துவம் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டு இராஜ மருத்துவம் எனப் பெயர் பெற்று மக்களிடையே தவழ்ந்தது.

காயகற்பம் போன்ற உயர்வகை மருத்துவ முறைகள் சித்த மருத்துவத்தில் இமயமாகத் திகழ்கிறது. சித்த மருத்துவத்தில் ஒவ்வாமை மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அதற்குக் காரணம் உணவே மருந்து. மருந்தே உணவு என்ற தத்துவத்தின் அடிப்படையில் அமைந்து இருப்பதால் பின்விளைவுகள் இல்லாமல் காணப்படுகிறது.

பழங்காலத்தில் சித்த மருத்துவம் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தது. பிறகு முகலாயர் ஆட்சிக் காலத்திலும், அந்நியர் படையெடுப்பாலும் நலிந்தது. காலப்போக்கில் வெள்ளையர்கள்ஆதிக்கம் தமிழகத்தில் ஊடுருவியதால் மிகவும் தொய்வு ஏற்பட்டது. அந்நிய மருத்துவம் இங்கு பரவ ஆரம்பித்ததால் மக்கள் புதுமையின் மோகத்தில் பிணைக்கப்பட்டார்கள். அம்மருத்துவத்தால் ஏற்படும் பின்விளைவுகளை மக்கள் ஆராயாமல் அதில் மோகம் கொள்ளவும், தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளவும் முனைந்துள்ளார்கள்.

நாம் அந்நிய மருத்துவத்தைக் குறை கூறாமல் நமது தமிழ் மருத்துவத்தை நன்கு ஆராய்ந்து மக்களின் மனதில் இடம் பிடிக்கும் வண்ணம் நமது முறையை எடுத்துச் சொல்ல வேண்டும்.

குடும்ப நலத்துறையில், குடும்பக் கட்டுப்பாடு (Operation) தடுப்பூசி மற்றும் அத்தியாவசியமான முறைகளை மக்களிடையே அரசு விளக்கிக்கூறி மக்களின் மனதில் பதியும் வண்ணம் விளம்பரம் செய்து அதனை ஊக்குவித்து வருவதால், இன்று இரண்டுக்குப் பிறகு எப்பொழுதும் வேண்டாம்என்ற எண்ணத்தை மனதில் கொண்டு, மக்கள்தாங்களாக முன்வந்து குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சை செய்ய முன்வருகிறார்கள். நாம் நம் துறையின் மருத்துவ முறைகளை மக்களிடையே மனதில் பதியும் வண்ணம் மருத்துவமனையில் அவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்.

சித்த மருத்துவ சகோதரர்கள் முதலில் மருத்துவத் துறையில் நம்பிக்கை வைத்து ஆர்வமாகச் செயல்பட வேண்டும். நம் மருத்துவத்துறை மாணவர்கட்குச் சித்த மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு மாதம் ஒரு முறை கல்லூரிகளில் ஒரு மூலிகை அல்லது ஒரு வியாதியை எடுத்துக்கொண்டு அதை ஆராய்ந்து அவர்கட்குப் புரியும் வண்ணம் கருத்துக்களைக் கூற வேண்டும்.

மூலிகைகளையும், தாதுக்கள், பாடாணங்களைப் பற்றியும் அவர்கள் அடையாளம் (Identification) தெரிந்து கொள்ளும் வண்ணம் மூலிகைகளின்(Botonical name) தாவரப் பெயர்கள் ஆகியவற்றை அடிக்கடி எடுத்துக்கூற வேண்டும். குணபாட (Pharmacology Action) இயல்புகள் நன்கு தெரியும் வண்ணம் அவர்கட்கு எடுத்துக்கூற வேண்டும். ஏன் ஒரு மூலிகை இல்லாமல் பல மூலிகைகளைச் சேர்க்கிறோம் என்ற காரணத்தையும், ஒவ்வொரு மூலிகையின் குணாதிசயங் களைக் கொண்டு இத்தனை மூலிகைகளைச் சேர்த்து மருந்து தயாரிக்கிறோம் என்ற காரணத்தையும் விளக்க வேண்டும்.

மக்களிடையே மருந்து செய்முறைகளை விளக்கிக் கூற ஒரு பாலமாக வீடியோ கேசட் மூலம் இரண்டு, மூன்று மூலிகை மருந்துகளை அவர்களே தயார் செய்து மருந்தாகப் பயன்படுத்த அவர்களுக்குப் புரியும் வண்ணம் மூலிகையின் அங்க அடையாளத்தையும், செய்முறையையும், கிடைக்கக்

கூடிய இடங்களையும் விளக்கிக் கூறவேண்டும். இதுபோல வண்ணத் திரையில் 5 நிமிடம் அல்லது 10 நிமிடங்கள் வருவது போல நல்ல திரைப்பட முன்னணி நட்சத்திரங்களை வைத்து விளக்கிக் கூறவேண்டும். தற்போது குடும்பக் கட்டுப்பாடு விளம்பரம் திரைப்படத்தில் எவ்வாறு செய்கிறார்களோ, அது போல!

மஞ்சள் காமாலைக்கு உணவுக் கட்டுப்பாடு செய்து, கீழாநெல்லி அரைத்துச் சாப்பிட்டால் நலமாக இருக்கும். தாங்களே சிறுநீரை சோற்றில் ஊற்றிப்பார்த்து அதன் வண்ணத்தைக் கொண்டு மருந்தினைச் சாப்பிடவேண்டும். பிறகு அருகில் உள்ள சித்த மருத்துவ வல்லுநர்களைக் கலந்து ஆலோசித்து, மருத்துவம் செய்துகொள்ள அறிவுறுத்தலாம். மக்களிடையே இதுபோல் சிறு சிறு துண்டுப் படங்களாக விளம்பரப்படுத்தினால்தான் மருத்துவத்தை மக்கள் மனதில் பதியச் செய்ய இயலும்.

மற்றும் சித்த மருத்துவத்தைப் பத்துப் பிரிவாக எடுத்துக் கொள்ளலாம்.

1. சித்த மருத்துவச் சிறப்புமிகு வல்லுநர்களை அரசானது தேர்ந்தெடுத்து மக்களுக்குத் தெரியும் வண்ணம் பொது இடத்தில் கௌரவித்து அவர்கள் சிறப்பாகச் செய்த சேவைகளையும், கண்டுபிடிப்புகளையும் மக்களுக்குப் புரியும் வண்ணம் வானொலி, திரைப்படம், திரைப்படச்சுருள் ஆகியவற்றின் மூலமாக விளம்பரப் படுத்தவேண்டும்.

2 .ஆங்காங்கு உள்ள சித்த மருத்துவர்கள் மக்களிடம் தொடர்பு கொண்டு சித்த மருத்துவ இலவச முகாம்களை அடிக்கடி நடத்திவரவேண்டும். அதனால் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வரும். கட்டாயமாக ஒவ்வொரு மருத்துவரும் ஒரு மருத்துவ முகாம் நடத்தி வரவேண்டும், என்ற எண்ணத்தை உருவாக்க வேண்டும். மருத்துவர்கட்குத். தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் மருத்துவத் துறையில் வருடத்திற்கு இரண்டு ஆய்வுக் கூட்டம் நடத்தி அவர்களுடைய கருத்துக்களைப் பரிமாறும் எண்ணங்களை உருவாக்க வேண்டும்.

3. கல்லூரிகளில், மாணவர்களிடையே மாதம் ஒரு முறை மருத்துவ ஆய்வு அறிக்கை படித்தும், மூலிகை அங்க அடையாளம் அறிய அடிக்கடி மூலிகைப் பொருட்காட்சி போன்றவற்றையும் வைக்கவேண்டும்.

4. நடமாடும் சித்த மருத்துவ ஊர்திகளைக் கொண்டு மிகவும் பின்தங்கிய கிராமங்களுக்குச் சென்று மருத்துவம் செய்ய வேண்டும்.

5. அரசுப் பொருட்காட்சிகளில் சித்த மருத்துவ மூலிகைகளையும் அபூர்வ மூலிகைகளையும், அவற்றின் குணாதிசயத்தையும் விளக்கிக் காட்சிப்படுத்த வேண்டும்.

6. தலைநகரில், சித்தமருத்துவ அருங்காட்சியகம் எனும் நிலையான அமைப்பு ஒன்றை எல்லோரும் பார்க்கும் வண்ணம் அமைந்திட வேண்டும்.

7. பாரம்பரிய சித்த மருத்துவர்களின் அரிய முறைகளை அவர்கள் விளக்கிக் கூற வகை செய்ய வேண்டும். அதற்குத் தக்க சன்மானம் கொடுத்து அவர்களைக் கௌரவிக்க வேண்டும்.

8. சில பாரம்பரிய சித்த மருத்துவரிடம் அரிதான ஓலைச் சுவடிகளும் மருந்துகளும் உள்ளன. அரசிடமோ அல்லது சரசுவதி மகால் நூலகத்திடமோ அவற்றை ஒப்படைக்க அவர்களை ஊக்குவிக்கவும் தக்க பொருளுதவி அளித்திடவும் வேண்டும்.

9. ஓலைச் சுவடிகளில் உள்ள மொழிபெயர்ப்புகளை மொழி பெயர்ப்பது மட்டும் இல்லாமல் அவற்றை மொழி பெயர்க்கும் வல்லுநர்களுடைய கருத்துக்களையும் கூற வேண்டும். சுவடியில் உள்ளதை அவ்வாறே பதிப்பதால் மருத்துவருக்கோ, மக்களுக்கோ கருத்துக்கள் எளிதில் போய்ச் சேர்வதில்லை. அதனால் மொழி பெயர்ப்பில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு அவர்கள் கருத்துக்களையும் அதில்கூற வேண்டும்.

10. போலி மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கும் தனியார் நிறுவனங்கள் நாட்டில் பல உள்ளன. அவற்றில் சான்றிதழ் பெற்றுக்கொண்டு சித்த மருத்துவம் செய்கிறார்கள். அவர்கள் புரியாமல் செய்யும் மருத்துவத்தால் மக்களிடையே தவறான கருத்துக்கள் உள்ளன. அவர்கள் செய்யும் தவறுகளால் சித்த மருத்துவ அறிஞர்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள். இதை அரசு தடுக்க வழி செய்யவேண்டும்.

இதுபோன்ற கருத்துக்களைக் கடைப்பிடிப்பதால் சித்த மருத்துவம் மேலும் மேலும் வளர ஏதுவாகும். தமிழக அரசும் மத்திய அரசும் சித்த மருத்துவத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து ஆக்கப்பூர்வமான செயல்கள் செய்துவருகிறது. தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



சன்னி நோய் மருத்துவத்தில் இளநீரின் ஆட்சி

செ. கு. செண்பகவினாயகம், பி.எஸ்ஸி, பி.எஸ்,எம்.எஸ்.
அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

நுழைவாயில்

சன்னிநோய் என்பது ஏதாவது ஒரு நோயால் பாதிக்கப்பட்டபோது ஒரேகாலத்தில் முக்குற்றங்களும் தத்தம் அளவில் மிகுந்து எழுந்ததால் விளைந்த துன்பங்கள் பலவற்றைத் தொடரச் செய்யும் நோயாகும். பெரும்பாலும், சுரநோயைத் தொடர்ந்துவரும், தனிநோயாகவும் கருதுவர். மாறுபாடானஆண் பெண் உடல் உறவாலும், கட்டி, தீப்புண் இவைகளாலும் நன்றாக முடியாத நறுமணக் குளியல் எண்ணெய்களை உபயோகிப்பதாலும் இந்நோய் வரும். குற்ற வேறுபாட்டால் மூன்று (3) என்றும் பிறப்பால் பதிமூன்று (13) என்றும், தேரர் முக்குற்றப் பிணியுடன் ஏழைக்கூட்டி (7) பத்து (10) என்றும் வகுத்துள்ளனர். Delirium most familiar in ferver can also be produced by drugs and other causes of acute cerebral disturbance. Severe affection disturbance also may be accompanied by delirium.

சன்னிநோய் மருத்துவப் பரிகாரம்:

முக்குற்றங்களும் உயிர்க்கால் தவிர மற்ற நான்கும் ஒரே காலத்தில் கேடடைவதால், உடல் வன்மை எளிதில் கெடும். எனவே, இந்நோய்க்கான மருத்துவத்தில் கேடடைந்த குற்றங்களை உடனடியாகத் தத்தம் நிலையைத் தக்கவைக்கத்

தகுந்த பெருமருந்துகளை உள்ளுக்கு வழங்க வேண்டும். சேட்ப சீதமாய்த் துடைத்து எனத் தேரையர் கூறியாங்கு இந்நோய் ஐயக்குற்றம் கேடடைவதால் கெடுதிகள் பல உண்டாகக் காரணமாகிறது. கொல்லும் தன்மையை உண்டாக்கும். எனவே புறமருத்துவம் செய்வித்து ஐயத்தை கண், மூக்கு, உச்சி மருத்துவமும் ஒற்றடம், பற்று வியர்வை பிடித்தலும் பதின்மூன்று ஜன்னிகளும் 13 வகையான பிஸ்ரவ மாத்திரைகள் - பூபதி மாத்திரை பூரணசந்திரோதய மாத்திரை, குங்குமப்பூ மாத்திரை, மகாஏலாதி மாத்திரை, கஸ்தூரி மாத்திரை இரசச் சுண்ணம், வெள்ளைப் பாடாண பற்பம், முத்து பற்பம், பவள பற்பம், தாளக பற்பம் போன்ற அகமருந்துகள் தக்க அனுபானத்தில் செய்து கொடுக்கப்படுகின்றன.

அனுபானம்:

அனுபானத்தாலே அவிழ்தம் பலிக்கும் என்பர் சித்தர்கள். ஒவ்வொரு நோய்க்கும் குறிப்பிட்ட மருந்திற்கும் சிறப்பான அனுபானங்கள் சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ளன. இன்றளவும் செம்மையுறச் செயல்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட நோய்க்குக் குறிப்பிட்ட மருந்தை எப்படித் தேர்வு செய்து, நோயின் வன்மை, நோயாளியின் தன்மைக்குத் தக்கவாறு வழங்குகிறோமோ அதைப்போலவே அதைவிட ஒருபடி மேலாகத் தேர்வு செய்ய வேண்டிய ஒன்று அனுபானம் என்றால் அது மிகையாகாது. துணையாக அமையும் அனுபானம் மருந்திற்கும், உடலுக்கும் வன்மையைத் தந்து நோயையும் அகற்றுகின்றது. வெற்றிலை நீர், மோர், பால், தயிர், வெண்ணெய், நெய், தேன் இந்த வகையில் இளநீரும் ஒரு சிறந்த அனுபான அவிழ்தமாகும்.

இளநீர்: இளந்தேங்காயில் உள்ள சுத்தமான நீர் (Water of Tender Coconut) இளநீர். இது சிறிது பால் கலந்த நீர் போன்ற வெண்மை நிறமுடையது. துவர்ப்பாயும், தித்திப்பாயும் இருக்கும்.

சித்தர்கள் முன்னர் இரத்த சுத்திக்கு இதைக் கையாண்டனர். ருசியாயும், பருக இன்பமாயும், தாகத்தை நீக்கும் தன்மையும், விடங்களாற்றும் தன்மையும், தாதுவைப் பலப்படுத்துதல், மூத்திரத்தை வெளிப்படுத்துதல், தீச்சுட்டபுண், நெஞ்செரிவு, இளைக்கச் செய்யும் நோய், மகோதரம், நீரிழிவு முதலியவைகளுக்கு உபயோகிக்கலாம்.

சந்நிநோய் மருத்துவத்தில் இளநீர் அனுபானம்

According to affection due to the liquor can only cured by liquor என்று ஆண்டுள்ளார்.

தவிர அகத்தியர் 12000 என்ற மருத்துவச்சுவடியில் இளநீரை அனுபானமாகவும் அது சேரும் மருந்துகளையும் சந்நி நோய்க்கு ஆட்சியாக்கினால் சிறப்பான குணம் உண்டாவதோடு நோயாளி உடல் வன்மை அடைகிறது. குறிப்பாக அந்தக சன்னிக்கு விஜயபயிரவம் மாத்திரையுடனும் அபின்யாச சன்னிக்குக் கரபையிரவம் மாத்திரையுடனும் இளநீரை அனுபானமாகக் கொடுப்பது சிறப்பு மருத்துவமாகக் கூறப்பட்டுள்ளது.

ஆக இது ஒரு ஒப்புரை மருத்துவமாகின்றது. ஐயக் குற்றத்தின் மிகுதியால் இந்நோய் ஏற்பட்டாலும் ஐயக் குணத்தையுடைய இளநீரால் பாதிப்பு இல்லை. மாறாக நல்ல குணம் கிடைக்கின்றது.

நவீன மருத்துவத்தில் இளநீரின் ஆட்சி

சென்னை, தஞ்சை போன்ற நகரங்களிலும் இளநீரை நுண்வடிகட்டி மூலம் தெளிவுபடுத்தி அதனை நாளம் வழியே செலுத்தும் மருத்துவம் 1980இல் இருந்து 1990 எண்ணிக்கையில் அதிகரித்துள்ளது.

அதிகமான உடல்தளர்ச்சி - காலரா - சீதபேதக்கு ஆளானவர்களுக்கு இளநீரை ஆகாரமாக வழங்கப் பரிந்துரை செய்யப்படுகிறது.

செயற்கை குளுக்கோஸ் கிடைக்காத கிராமங்களில் உடனடி நிவாரணியாக இளநீர் பருகத் தருகிறார்கள்.

இளநீரில் ஒரு வேதியியல் கண்ணோட்டம்:

தண்ணீர் 95.5	மாவுப்பொருள்	4.0
புரதம் 0.1	சுண்ணாம்புச்சத்து	0.02
கொழுப்பு 0.1	பாஸ்பரஸ்	0.0%
கனிம நீர் 0.4	இரும்பு	0.5%

என்று தெரியவருகிறது.

அதிகமான அளவு பொட்டாசியம் சத்து உள்ளது. 4.0 முதல் 5.3 வரை

நிக்கோடினிக் அமிலம் 0.64 அஸ்கார்பிக் அமிலம் 2.2 முதல் 3.7

பயோட்டிக் அமிலம் 0.02 பாண்டேதினிக் அமிலம் 0.52

போலிக் அமிலம் 0.203 ரிபோபுளோபின் 0.01

தையமின், பைரிடாக்ஸின் சிறிதளவு காணப்படுகிறது.

இளநீரின் விசேஷகுணம்:

இளநீர் ஒரு ஐஸோடோனிக் கலவை புரோட்டாபிளாஸத்திற்கு ஒப்பானது.

இளநீரை நுண்வடிகட்டி முறைப்படி சுத்தி செய்து வடிகட்டி நாளங்கள் வழியே ஏற்றப்படுகிறது.

இளநீரை நீரிழிவிற்கும் கொடுக்கலாம். நீரடைப்பிற்கும் வழங்கலாம். மூத்திரத்தை வெளிப்படுத்துவதற்குகு விசேஷமாகப் பயன்படுகிறது.

இளநீரை வாரத்தில் மூன்று நாட்கள் அருந்தி வரத் தாது பலப்படும்.

இளநீரை வாரத்தில் 3 நாட்கள் தொடர்ந்து கர்ப்பிணிக்குக் கொடுத்துவரக் குழந்தைகள் நல்ல நிறத்துடன் பிறக்கும். தவிர கர்ப்பிணிகளுக்குக் குளிர்ச்சி, மூத்திரத்தை வெளிப்படுத்தலுக்கு முக்கியமாக உபயோகப் படுத்தப்படுகிறது.

தீச்சுட்ட புண்களினால் செல்களில் இருந்து இழக்கப்பட்ட புரேட்டோபிளாஸம் இளநீரை அருந்திடச் செய்வதால் தன்னிலைப்படுத்தப்படுகிறது.

இளநீர் ஏன் அனுபானமாக்க வேண்டும்?

இளநீர் உடலில் உடனே உட்கிரகிக்கப்பட்டுத் தன்மயமாக்கப்படுகிறது. எனவே, இளநீருடன் மருந்துகள் வழங்குவதால் உடலில் உடனே வேதியியல் மாற்றங்களை நிகழ்த்த ஏதுவாகின்றது. எனவே சித்த மருத்துவத்திலும் சிறந்த அனுபானமாகிறது.

என்னுரையின் முடிவுரை:

அவசரகால மருத்துவத்தில் சித்த மருத்துவம் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் தற்சமயம் கண்டிப்பான நிலையை எட்டியுள்ளது. காரணம் மக்கள் நாளுக்கு நாள் தங்களுடைய நோய் எதிர்ப்புத் தன்மையை இழந்துகொண்டே வருகின்றார்கள். மறுபக்கம் நவீன மருத்துவத்தில் வளர்ச்சியால் அவர்கள் பலவீனப்பட்டு வருகிறார்கள். அந்த அளவு வீரிய மிக்க மருந்துகளை உடனடி நிவாரணத்திற்குப் பயன்படுத்தி உடனடியாகக் குணப்படுத்துவதால் நோய் மட்டும் குணமாவதோடு உடல் வன்மை குன்றிவிடுகிறது. அந்த அளவுக்கு வீரியமான மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. என்வே, சித்த மருத்துவத்தில் அவசரகால மருத்துவம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சியில் இருந்ததைச் சில காலமாக மறைத்து, மறுத்து, அழித்துவிட்டனர். ஆனால் புதிய மைல்கற்களாக, மருத்துவப் படிகளோடு மகத்துவம் பல புரிந்திடக் கற்று வேகமாக, விவேகமாக சித்த

மருத்துவத்தை வளர்க்கத் தன்னை அர்ப்பணிக்கும் எண்ணமுள்ள சித்த மருத்துவர் உருவாக வேண்டும். அவசரகால மருத்துவத்தைச் சித்த மருத்துவத்தில் புகுத்த அனைத்து அணுகுமுறையும் கையாள வேண்டும். சன்னிநோய் முக்கிய நோய். இதற்கு நவீன மருத்துவம் உட்பட எந்த மருத்துவத்திலும் சிறந்த மருந்து இல்லை. சித்த மருத்துவம் தவிர, அதிலும் சிறந்த மருந்துகளைத் தரப்படுத்தி, வகைப்படுத்தி வழங்குவதோடு அதற்கு இளநீர் அனுபானமாக வழங்க இன்னும் சிறப்புண்டாகும்.

தவிர இளநீர் சிறந்த அனுபானம் மட்டுமல்லாது சிறந்த நிவாரணி, பலவீனம், தாதுக்குறைவு, நீர்வேட்கை, நீரிழிவு, நீரடைப்பு, மேகம், நீர்ப்பெருக்கு போன்றவற்றிற்கு நல் மருந்தாகின்றது. எனவே மேற்கண்ட நோய்க்கெல்லாம் மருந்து வழங்கும்போது சித்த மருத்துவர்களாகிய நாம் இனி இளநீரையே சிறந்த அனுபானமாக வழங்கலாம். இளநீர் நவீன மருத்துவத்தில் வழக்கில் இருக்கும் குளுகோஸ் (Glucose) மற்றும் எலக்ட்ரோலைட் (Oral Electrolyte) இவைகளுக்குச் சமமானது எனலாம்.

துணை நின்ற நூல்கள்:

1. Glossory of Indian Medicinal Plants.
2. Indian Medicine by Dr. Julius Jolly
3. The Wealth of India. vol. II
4. Dictionary of Medicine Vol. I
By Sambasivam Pillai

சங்க இலக்கியத் தாவரங்கள்
அகஸ்தியர் இரண்டாயிரம்
சரபேந்திர வைத்திய முறைகள்
அனுபோக வைத்திய பிரம்ம ரகசியம்.

சித்தர்கள் தந்த செல்வம்: சித்த வைத்தியம்

சித்த வைத்தியர் ஆர், எம். கே. எஸ். விவேகானந்தம், ஆர்.ஐ.எம்.பி.,
ஆர்.எம்.கே. வேலுசுவாமி சித்த வைத்திய சாலை
பழநி 624601.

பதினெட்டு சித்தர்கள் தந்த செல்வம் சித்த வைத்தியம். பதினெட்டுச் சித்தர்கள் சித்த முறைகளையும், ஜோதிடம், நாடி ஜோதிடம் மற்றும் உள்ள முறைகளையும் வைத்துச் சென்றார்கள்.

எங்கள் தாத்தா தவத்திரு ஆர். எம். கே. வேலுசுவாமி அவர்களும், எங்கள் தந்தையார் தவத்திரு ஆர். எம். கே. சிவசுப்ரமணியம் அவர்களும் தஞ்சை சரசுவதி மஹாலுக்குக் கொடுத்த 150 ஏடுகளும் சிறந்த முறையில் அச்சிடப்பட்டுப் புத்தகமாக வெளியிடப்பட்டுச் சித்த வைத்தியர்களுக்கும், பொது மக்களுக்கும் பயன்பெறச் செய்ய வேண்டும்.

சித்த வைத்தியம் சிறந்த முறையில் முன்னேற மாண்பு மிகு தமிழக முதல்வர் அவர்களும், பேராசிரியர் மாண்புமிகு அன்பழகன் அவர்களும், மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்களும், சித்த வைத்தியம் நல்ல முறையில் பொதுமக்கள் மத்தியில் பரவச் செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டில் வைத்தியர்களிடமும் மற்றும் தஞ்சை சரஸ்வதி மஹாலிலும் ஏடுகள் உள்ளன. தஞ்சை சரஸ்வதி மஹாலில் உள்ள ஏடுகள் சரியாக அச்சிடப்படாமல் உள்ளன. அவைகளை நல்ல முறையில் அச்சிட்டு அனைவருக்கும் பயன்படும்படி செய்ய வேண்டும். வைத்தியர்களிடமும் நல்ல எளிய முறைகளும் மிக முக்கியமான முறைகளும் இருக்கின்றன. அவைகளைச் சேகரித்து நல்ல முறையில் பதிப்பு செய்து வெளியிடவேண்டும்.

சென்னையில் உள்ள கூட்டுறவு மருந்து உற்பத்தி நிலையம் போல் பழநி, பாண்டிச்சேரி முதலிய இடங்களில் நிறுவிச் சித்த மருந்துகள் செய்து பொது மக்களுக்கு எளிய முறையில் கிடைக்கச் செய்ய வேண்டும்.

பாம்புக்கடி, மற்றும் விஷக்கடிகளுக்குக் கிராமங்களில் இப்போது பரம்பரை விஷக்கடி வைத்தியர்கள் உள்ளார்கள். அவர்கள் குடத்தில் உள்ள விளக்குபோல் பொது மக்களுக்குத் தெரியாமல் உள்ளனர். இம்மாதிரி வைத்தியர்கள் தமிழகத்தில் எங்கு எங்கு இருக்கிறார்களோ அவர்களைக் கண்டு அவர்களுடைய வைத்திய முறைகள் அனைவருக்கும் பயன்படும்படி செய்ய வேண்டும்.

உடுமலைப்பேட்டை சமீபம் உள்ள வாகத்தொழுவு என்ற ஊரில் விஷக்கடி வைத்தியர் பழநிச்சாமி என்பவர் உள்ளார். விஷக்கடிக்கு மந்திரிக்கும் வைத்தியர் எம். பூபதிராஜு, எல். எம். ட்டி., என்பவரும் பெரியார் மாவட்டம் ஈங்கூர் ரயில்வே ஸ்டேஷனில் வேலை பார்க்கிறார். விஷம் தீண்டியவுடன் அவருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தால் அவர் இருக்கும் இடத்திலேயே மூன்று நாட்கள் மானசீகமாக மந்திரிக்கிறார். 3 நாளில் விஷம் இறங்கிவிடும்.

இதுபோல நாடி ஜோதிடத்தில் திரு வி. தெய்வசிகாமணி, நாராயணி ஆசிரமம், பெரிய காட்டுப்பாளை, முறியாண்டாம் பாளையம் அஞ்சல், தேவூர் வழி - 638655, கோவை மாவட்டத்தில் உள்ளார். இவரிடம் நாடி ஜோதிட ஏடுகள் உள்ளன.

பஞ்சாயத்து யூனியன் மருத்துவ நிலையத்திலும், அரசு மருத்துவமனையிலும் மருந்துகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

❀❀❀

சித்த மருத்துவ வளர்ச்சிக்கு இன்றியமையாத பணிகள்

டாக்டர் ஜி. ஜெயக்குமார், எம்.டி. (சி)
விரிவுரையாளர்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை
உதவி
டாக்டர், கி. பொன்சிங், (எம். டி.)
டாக்டர் பா. ஈஸ்வரமூர்த்தி, (எம். டி.)

முன்னுரை:

சித்த மருத்துவம் என்பது இந்திய, மேலைநாட்டு மருத்துவங்களிடையே பழமையும், காலத்தே முந்தியதும் ஆகும். மக்கள் தோற்றத்தால் மூத்தகுடி தமிழ்குடி. அப்போது முதல் பழகி வந்த மருத்துவம் சிறப்புத்தன்மையும் தனித் தன்மையும் கொண்டு நோய்களைத் தீர்த்து வைத்ததால் சித்த மருத்துவம் எனவும், இலக்கிய வரலாறுகள் உணர்த்துகின்றன. அதன் வளர்ச்சி நிகழ்காலத்தில் தேக்கமடைந்ததற்கான காரணம், அதனைப் போக்கத் தேவையான வழிமுறைகளைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கம்.

வரலாற்றின் தேக்க நிலை:

நானூறு ஆண்டுக் காலத்திற்கு முன்பு கிடைத்துள்ள ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட சான்றுகள் மூலம், 150 ஆண்டுகள் முற்பட்ட இலக்கிய மருத்துவப் புத்தகங்களில் கிடைத்தவைகளைக் கொண்டு, அவைகளும் மூலப் பிரதிகளாக இல்லாமல் அவற்றின் படிகளாகவே கிடைத்துள்ளதைப் பார்க்க முடிகிறது. 100 ஆண்டுகளுக்கு முன்னால் எட்டணா, 1 ரூபாய், இரண்டு ரூபாய் விலையில் பல்வேறு மருத்துவ நூல்கள் நானூறு பக்க அளவில் கூட ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் வெளிவந்துள்ளன. அவற்றை வைத்துப் பழந்தமிழர்கள் செய்து வந்த இம்மருத்துவம் ஆங்கிலேய ஆதிக்கம் வளர்ந்த பின்னர்ச் சிறப்பிழந்து மக்கள் நவீன மருத்துவத்தைத் தேடிச் செல்லும் நிலை ஏற்பட்டு விட்டது. மன்னர்கள் ஆட்சி நீக்கம் செய்யப்பட்ட காரணத்தினால் அவர்களால் மானியம் கொடுத்து வளர்க்கப்பட்ட சித்தமருத்துவம் பிற்கால ஆட்சியினர் ஆதரவும், மக்கள் ஆதரவும் குறைந்துவிட்ட காரணத்தினால் நாகரீகம் கருதி

மேல்நாட்டு மோகத்துக்கு உட்பட்டு மேல்நாட்டு மருந்து எளிதில் கிடைக்கும் காரணத்தால் மூலிகைகளை அறிந்து வைத்துக்கொள்ள முயலாமலும் அதன் அழிவைத் தடுக்க முயற்சியும் செய்யாதிருந்தனர். பின்வந்த சந்ததியினர் மூலிகை அறியாமல் வருவாய் காரணம் கொண்டு ஏழ்மை காரணமாகக் கலப்படம் செய்யவும், பிறர் கூறும் கர்ண பரம்பரைக்கேற்ப மருந்து செய்யவும் தலைப்பட்டதால் மருந்தில் தரம் குறைந்து அதனால் பிணி தீரும் நிலை அரிதாகிவிட்டது. இதனால் சித்த மருத்துவத்திற்கு அவப்பெயர் ஏற்பட்டது. மூலிகை அறிவு இல்லாத, தமிழ்ப் புலமை இல்லாத, இரண்டு மற்றவர்கள் விலை கொடுத்துப் பெருமை கருதிச் சேகரித்த ஓலைச்சுவடி மேற்கொண்ட அரைகுறையான வைத்தியம் மக்களிடம் கெட்டபெயர் ஏற்படுத்தியது.

வளர்க்கவேண்டியதின் தேவைகள்:

முன்பு, கட்டு, களங்கு, பற்பம், செந்தூரம் என்று மூலிகை மட்டுமின்றிப் பாடாணம், உலோகம், சீவப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு எளிய வழியில் விரைவான குணத்தைக் கொண்டு மக்களுக்கான பெருவியாதி முதல் சிறு வியாதிகள் வரை (4448 நோய்கள்) தீர்க்கப்பட்டன. சித்த மருத்துவத்தில் அறுவை மருத்துவம்கூடச் செய்யப்பட்ட வரலாறு உண்டு. ஆனால் இவை இன்று ககனகுளிகை போன்று கற்பனை என்று கூறத்தக்க அளவில் அருகிச் செய்ய இயலாத செய்ய முடியும், செய்வேன் என்று கூறுபவர்களையும் செய்துமுடிக்க முடியாத ஒன்றாகத்தான் உள்ளது. இந்த மறுக்கமுடியாத உண்மையை மாற்றிக்காட்ட வேண்டியது தற்கால சித்தமருத்துவர்கள் மட்டுமல்லாது அறிஞர்களுடைய கடமையும் ஆகும்.

மூலிகைகளை அனைத்தும் தெரிந்தவர் எனத் தங்களைக் கூறிக்கொள்பவர்கள் கூட அவற்றின் வகைகளையோ இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்க் கூறப்பட்ட ஓலைச்சுவடிகளில் கண்ட மூலிகைகளையோ இன்றுவரை அடையாளம் சரியாகக் கூறமுடியாத நிலை இருப்பதால், தாவர இயல் பேராசிரியர்கள் கூட அதனை இன்ன குடும்பம் என்று சொல்லுகிறார்களே தவிர இன்ன மூலிகை என்று அறுதியிட்டு அடையாளம் காட்ட இயலவில்லை, என்பதும் முழுமையான உண்மை. பழைய நூல்கள் மேற்கோள் காட்டும் குணம், சுவை கண்டு வகைப்படுத்தி

மருத்துவத்திற்குப் பயன்படுவது சித்தமருத்துவம் மட்டுமே. எனவே அம்மூலிகைகளை எப்பாடு பட்டாகிலும் கற்பனை என்று கருதாமல் உண்மை எனக் கருதி ஆர்வம் மிக்க ஆய்வாளர்களைக் கொண்டு மறுமலர்ச்சி பெறச் செய்தல் பொருட்டு அவற்றின் வளம் கண்டு விலங்குகளுக்குச் சரணாலயம் இருப்பதுபோல் இம்மூலிகைகளுக்கும் தனித்தன்மை கண்டு அவ்விடங்களைச் சிறப்புறப் பேணல் வேண்டும்.

புத்தகங்களிலும் மருத்துவ ஓலைச் சுவடிகளிலும் கூறப்பட்ட பாடல்களைப் பதம் பிரித்து அக்காலச் சித்தர்கள் கூறிய மருந்தின் பெயர்களைக் கூடக் கண்டறியமுடியாத அவலநிலைதான் இக்காலத் தமிழ்ப் புலவர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் உள்ளது என்றால் மிகையாகாது. உதாரணமாகப் பாரதத்திற்கும் தேரையர் மருத்துவர் பாரதத்திற்கும் இன்றுவரை சரியான விளக்கம் தரப்படவில்லை. கைவல்லிய நவநீதம், சிவஞானபோதம், திருவாசகம், திருமந்திரம், திருவள்ளுவர் ஞான வெட்டியான் போன்ற நூல்களில் காணும் பாடல்களின் முழுமையான விளக்கம் இதுவரை கூறப்படவில்லை. தமிழ்வளம் குன்றிக் காணப்படுவதாலும் தமிழ்பால் ஆர்வம் உள்ளவர்கள் கூட மருத்துவ ஆன்மீக அறிவு முழுமை இல்லாததால் இதனைப் படித்துப் பொருள் கொள்ளத் திணறுகிறார்கள். மருத்துவம் படித்தவர்கள் தமிழ் அறிவு போதிய அளவு இல்லாததால் பாடவேறுபாடு அறிந்து பதம் பிரிக்க இயலவில்லை என்பதும் கண்கூடான உண்மை. அதனால்தான் சித்த மருத்துவம் தரமற்று மேம்படாத நிலைக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் அன்று வெளியிடப்பட்ட புத்தகங்களும் இன்று புதுப்பித்துச் சித்த மருத்துவத்தில் வெளியிடப்படவில்லை. சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குக் கூடப் படிக்க முழுமையான அனைத்து வெளியீடு செய்யப்பட்ட புத்தகங்களும் கூடக் கிடைக்கவில்லை. அவர்களுக்குக் கல்விப்பாட புத்தகங்களும் முழுமையானதல்ல. எனவே புதிய புதிய நூல்கள் சித்த மருத்துவத்தில் உருவாக்கப்படவில்லை என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மையாயினும் அதனை மாற்ற 200 ஆண்டுகளுக்கு முந்திய காலத்திற்கு அழிந்துபட்டும், படாமலும் ஊருக்கு ஒருவர் கையில் உலாவரும் நூலாகச் சித்த

மருத்துவம் இருப்பதனை மாற்றி, அப்படிப்பட்ட பழைய நூல்களை எல்லாம் வகைப்படுத்தி ஒப்பிட்டுத் தள்ளுவனதள்ளிப் புதிய திருத்தப் பதிப்பு நூல்களை ஏராளமாக வெளியிட்டுத் தமிழ்கற்றோர் அனைவர் இல்லங்களிலும் தவழச்செய்ய வேண்டும். அதுவும் எளிய தமிழில் அனைவருக்கும் புரியும்வண்ணம் சொல்லப் பட்டிருக்க வேண்டும். அவை தமிழகம் மட்டுமல்ல, பிற நாட்டுத் தமிழர்களுக்கும் அறிஞர்களுக்கும் படிப்பதற்கும் பார்வையிடவும் கிடைத்திடச் செய்தல் வேண்டும். அதனைப் பன்னாட்டு மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்திடல் வேண்டும். இதனால் சித்த மருத்துவம் பல நாட்டவரும் தெரிந்துகொள்ள வழிவகுக்கும்.

வெளியீடுகள்:

முக்கியமாகப் பன்னாட்டுப் பெரிய நூல் நிலையங்களிலும்(அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனி) உள்ள தமிழ் மருத்துவ ஓலைச்சுவடிகளைத் தொகுத்திடல் வேண்டும். தொகுத்த ஓலைச்சுவடிகளைப் படியெடுத்து அதனை வரிசைப்படுத்தி அச்சுவடிகளை விளக்கம் பெற்ற நூலாக வெளியிடல் வேண்டும். வெளியிடப்பட்ட பழைய சித்த மருத்துவப் புத்தகங்கள் மொத்தம் எத்தனை. படியெடுக்கப் பெற்றுப் பழங்காலம் முதல் உலா வரும் ஓலைச்சுவடிகள் எத்தனை, அப்படிப்பட்ட ஓலைச் சுவடிகளின் பிரதிகள் தமிழகத்தின் எல்லைக்குட்பட்ட இடங்களில் மாத்திரம் அல்லாது, காலப்போக்கில் தமிழ் எல்லையைக் கடந்தும் இந்திய எல்லையைக் கடந்து பரந்த இந்த உலக நாடுகளில் உள்ள நூலகங்களில், சில தனிப்பட்ட வீடுகளில் ஒளிந்து கிடக்கும் சித்த மருத்துவ நூல்களை மறுப்பதற்கில்லை. அவைகள் யாவும் பெரும்பொருள் கொடுத்தாவது கைப்பற்றி ஒரே இடத்தில் சேர்க்கவோ படியெடுத்துக் கொண்டுவந்து ஆராய்ந்து மூலப் பிரதிகளைக் கண்டறியவும், கண்டறிந்த படிகளை ஒன்று சேர்த்து வகைப்படுத்தி அவைகளை ஆசிரியர் வகையாக எத்தனை, என்று பிரித்தறிவதும் கூறப்பட்ட ஆசிரியர்கள் பல்வேறு காலத்தவரா, ஒருவரா, ஒரே பெயரில் பலரா, பலர் அப்பெயர்களில் பல இடங்களில் இருந்தனர் என்பதும் உண்மையா? என்று ஒப்பீடு செய்து வரலாறு அறிவது முக்கியம். அப்படிக்காணும் போதுதான் சித்தமருத்துவத்தின் தொன்மை, வளமை, அதன் வரலாறு, மொழிச் சிறப்பு, புலவர்கள் சித்த மருத்துவத்தில்

அமைந்துள்ள பாடலின் பாங்கு புலப்படும். மருத்துவத்தின் தரமும் உயரும். ஒப்பீடு செய்த பின்னர் அசல் பதிப்பும், திருந்திய பதிப்பும் உரையுடன் கூட வெளியிடப்படவேண்டும். பாடலை இனங்கண்டு கொள்ளும் முன்பு முன் குறிப்பிட்டதைப் போலத் தமிழ் ஆசிரியர்களோடு இணைந்த மருத்துவர் குழுக்கள் அமைக்கப்படல் வேண்டும்.

கருத்தரங்கம் கலந்துரையாடல் ஏற்பாடு செய்தல் அவசியம்.

தமிழாசிரியரும், மருத்துவரும் இணைந்த இந்த மருத்துவ மேம்பாட்டுக் குழுவும் நியமிக்கப்படுகிறபோது புத்தகங்களைப் பதிப்பித்துத் திருந்திய வெளியீடாக வெளியிடும் முன்னர், அந்தப் புத்தகத்தைப் பற்றிய சந்தேகங்கள் விமர்சிக்கப்பட்டுக் குறைபாடுகள் இருக்குமாயின் கலந்துரையாடல் மூலம் வினாக்களுக்கு விடை தெளிந்த பின்னால் வெளியீடு செய்திடல் வேண்டும். அந்தக் கலந்துரையாடல் கருத்தரங்கமும், ஆர்வமுள்ள ஈடுபாடுள்ள அனைவராலும் (ஆர்.ஐ.எம்.பி., (சித்தா) ஜி. கி. எம். டி. எம்., பி. ஐ. எம்., ஏல். ஐ. எம்., பிஎஸ், எம். எஸ்.) என்ற மருத்தவர் மட்டுமல்லாது பரம்பரையாக மருத்துவ அனுபவங்கல் கேட்டறிந்த பிறராலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அறிமுகம் செய்யப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும். இதுவே இன்றியமையாத கடமையாகும். அப்போதுதான் பிறரால் குறை சொல்ல முடியாத தரமான புத்தகமாக அது வெளிவரும்.

ஆய்வு வழி:

நவீன மருத்துவத்தைப் போல புதிய புதிய ஆராய்ச்சிகள் சித்த மருத்துவத்தில் ஏற்படுத்தப்படாதது ஒரு பெரும் குறையாகும். அதனை நாம் புதியன செய்யாவிடிலும் ஒரே நோய்க்குக் கூறப்பட்டுள்ள வெவ்வேறு மாதிரியான மருந்துகளைச் செய்து (வெவ்வேறு ஆசிரியர்களால் வெவ்வேறு நூலில் கூறப்பட்டுள்ள) அவற்றை நோயாளிகளுக்குக் கொடுத்து அவை நோய்களைத் தீர்க்கும் ஆற்றல், தன்மை கொண்டு, மருந்தினை வரிசைப்படுத்த வேண்டும். தரம் செய்யவும், முடியுமானால் முயற்சியும் செய்வோமானால் மக்கள் சித்த மருத்துவத்தின் போலி விளம்பரங்களைத் தேடி ஏமாறாமல் தரம் வாய்ந்த மருந்துகளை அச்சம் இன்றிப் பயன்படுத்த ஏதுவாகும்.

விளம்பரம்

பாமர மக்களுக்குச் சித்த மருத்துவத்தின் அருமைகளைத் தெரிந்து கொள்வதற்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு மாதந்தோறும் முடிந்தால் வாரந்தோறும் ஊர்க்கூட்டம் கூட்டியோ, வானொலி, தொலைக்காட்சி மூலமாகவோ பிரசாரம் செய்து மருந்தின் தன்மை, மூலிகையின் இயல்பு, கிடைக்குமிடம், பயிர் செய்யும் வகை, ஏன் முடிந்தால் எளிதான செய்முறைகளைக் கூடச் சொல்லித் தந்து விளக்கம் பெறவைப்பது அத்தியாவசியமான பணியாகும். நவீன மருத்துவத்தில் மருந்துகளின் (பக்க விளைவுகள் நெடுநாள் சாப்பிடும் தன்மையால் ஏற்படும் கெடுதிகளைக் கூறிச் சித்த மருத்துவமானது உடல் வன்மை தருவதோடு நோயாற்றவும் செய்யும் என்ற சிறப்பைக் கூறிட வேண்டும். சித்த மருத்துவர்கள் சித்த மருத்துவத்தையே தொழிலாகச் செய்திடல் வேண்டும்.

முடிவுரை:

தக்கார் தகவிலர் என்பது அவர் அவர் எச்சத்தால் காணப்படும் என்ற குறளின் மகிமையை உணர்ந்தவர்கள் கையில் இதற்கான பொறுப்பினை ஒப்படைத்தால் விரைவான முன்னேற்றம் காணலாம் என்பதும் இதனைக் கூறக் காரணம் நன்கொடையாக நூலகங்களுக்கும், ஆய்வுகளுக்கும் தரப்படுகிறது. புத்தகங்களையும் ஓலைச் சுவடிகளையும் அவற்றின் அருமை பெருமை உணராதோர் பொறாமைக்குணம் கொண்டோர் அகந்தையாகவோ பழிதீர்ப்பதாக நினைத்துக்கொண்டோ அவற்றினை அழித்திட முற்படுகின்ற, அழித்திட்ட பலவேறு காட்சிகளைக் கண்ணுற்ற வேதனையில் கூறுகின்றேன். திறன் உள்ளவரைப் பாராட்டும் பண்பில்லாதோர் தன் திறன் இல்லை நிலை அறிந்தும் வழ்க்கைக்கு ஏணியாகத்

தலைமையிடம் பெறத்துடிக்கும் திருப்தியில்லா மாக்கள் இருக்குமட்டும் சித்த மருத்துவம் சீர்படாது. அதன் தரம் உயரக் காலமெல்லாம் தொடர்ந்து வரும் இம்மருத்துவம் செழித்தோங்கத் தற்போது இன்றியமையாத பணியாதெனில் புலவர்களும் மருத்துவர்களும் இணைந்து செயலாற்றிப் புத்தகங்களை இந்த மருத்துவத் துறையினில் வெளியீடு செய்ய வேண்டியது மிக, மிக அவசியம்.

வாழ்க தமிழ்! வளர்க சித்த மருத்துவம்!



சித்த மருத்துவம் - சில சிந்தனைகள்

ஜோஸப் தாஸ், ஜே. மருந்தியல் துறை,
பா.1 மேற்படிப்புப் பகுதி,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை

திராவிட மருத்துவம்

சித்த, ஆயுள்வேத மருத்துவ முறைகள் இரண்டும் வேறு வேறு என இரு மருத்துவ முறைகளைச் சார்ந்தவர்களும் கூறி வருகின்றனர். சித்த மருத்துவ நூல்கள் தமிழிலும், ஆயுள் வேத மருத்துவ விளக்கங்கள் வடமொழியிலும் இருப்பதும், மற்றும் சித்த மருத்துவத்தில் இல்லாத சில மருந்துகள் ஆயுள் வேதத்திலும் ஆயுள்வேதத்தில் இல்லாத மருந்துகள் சித்த மருத்துவத்திலும் உள்ளன என்பதும் ஆகும். இன்னும் சில சிறிய வித்தியாசங்களையும் குறிப்பர். இவையே, இரண்டு முறைகளும் வெவ்வேறு எனக்கூறப் போதிய காரணங்கள் ஆகா.

நவீன முறை மருத்துவத்தில் இருந்து இவ்விரு இந்திய மருத்துவங்களையும் வேறுபடுத்துபவை ஐம்பூதம், முக்குற்றம் போன்ற அடிப்படைத் தத்துவங்களே! சித்த, ஆயுள்வேத மருத்துவ முறைகள் இரண்டும் ஒத்த அடிப்படைத் தத்துவங்களை உடையன. இவை இரண்டும் ஒரே மருத்துவத்தின் இரண்டு மொழி பெயர்ப்புக்கள். அவ்வளவே.

இன்றைய அரசியல் தமிழ்நாடு, கேரளம் மற்றும் ஆந்திர, கன்னட மாநிலங்களில் சில பகுதிகள் அடங்கியதே பண்டைய தமிழகம். ஆனால் இன்று தமிழ்நாடு என்றால் அதில் கேரளம் இல்லை. ஆந்திர, கன்னட மாநிலப்

பகுதிகளும் இல்லை. இதுபோன்றே இந்தியாவிற்கு ஆரியர் வருகைக்கு முன்இருந்த மருத்துவ முறை சிதைந்து கால கட்டத்தில் ஆயுள் வேதமாகவும், சித்த மருத்துவமாகவும் தனித்தனியே தெரிகின்றன.

இன்றைய புழக்கத்தில் உள்ள இவ்விரு மருத்துவ முறைகளுக்கும் திராவிட மருத்துவ முறையே தாய் மருத்துவம் என்றால் மிகையாகாது.

இந்தியாவில் தோன்றிய புத்த மதம் இன்று பரவலாக இங்கு இல்லை. மாறாகச் சீனா, ஜப்பான் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உயிருடன் உள்ளது. இருப்பினும் புத்த மதம் தோன்றியது இந்தியா என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆயுள்வேதம் - ஆரியமருத்துவமுறை என்று ஒரு வாதத்திற்கு வைத்துக்கொண்டாலும், ஆரியர்களின் பூர்விகமான மத்திய ஆசியாவில் ஆயுள்வேதம் தோன்றியது என்று கூற ஆதாரம் இல்லை. ஆரியர்கள் போற்றிய வேதங்கள் மத்திய ஆசியாவிலிருந்து கொண்டுவரப்படவில்லை. மேலும் மத்திய ஆசியாவில் ஆயுள்வேதம் இருந்ததாகவோ, இருப்பதாகவோ எந்த அடிச்சுவடும் இல்லை. சிந்துச் சமவெளியில் அமைதியுடன் வாழ்க்கை நடத்தி வந்த திராவிடர்களை, நாடோடிகளாக மேய்ச்சல் நிலம் தேடிவந்த ஆரியப் பழங்குடியினர் துரத்தினார்கள் என்பது சரித்திரக் கணிப்பு.

விரட்டப்பட்ட திராவிடர்கள் வீடு, வாசல், நிலம், இழந்து இந்தியாவின் பல திசைகளுக்கு, குறிப்பாக தென்னிந்தியா நோக்கிப் பாய்ந்தனர். அவர்கள் விட்டுவந்த இலக்கிய, விஞ்ஞான, மருத்துவ அறிவை ஆரியர்கள் பெரிதும் காலப்போக்கில் பின்பற்றினர் என்று கூறினால்

மிகையாகாது. துரத்தப்பட்ட திராவிடர்கள் அகதிகளாகத் தங்களுடன் கொண்டு சென்ற ஒரு சில மருத்துவமுறைகள் பிற்காலத்தில் சித்த மருத்துவத்திற்கு முன்னோடியாகவும், ஆரியர்களால் திராவிடர்களிடம் இருந்து பெறப்பட்டு மெருகேற்றப்பட்ட மருத்துவம் ஆயுள்வேதமாகவும் ஒரு தாய் வயிற்றில் உதித்த, இருவேறு மகவுகளாக வளர்ந்து மிளிர்ந்தன.

எனவே போதிய வேறுபாடுகல் ஏதும் இல்லாத இவ்விரு மருத்துவ முறைகளும் ஒன்றே என்று கூறுவதற்கு ஒரு முக்கிய காரணம் இரண்டிற்கும் திராவிட மருத்துவ முறையே தாய் மருத்துவமாகும்.

திராவிட மருத்துவமே தமிழ் மருத்துவம்:

திராவிடம் என்பது வடமொழிச் சொல். இது சிந்து சமவெளியில் இருந்து துரத்தப்பட்டுத் தக்காணத் தீபகற்பத்தை நோக்கி ஓடிவந்த மக்களைக் குறிக்க, ஆரியர் பயன்படுத்திய சொல். ஓடிவந்த மக்கள் தங்களைத் தாங்களே திராவிடர் என்று ஒரு போதும் குறிப்பிட்டது கிடையாது. இவ்வாறாயின் அவர்களின் இயற்பெயர்தான் என்ன? தமிழர்கள்.

எனவே இதுவரை வடமொழிச் சொல்லால் திராவிட மருத்துவம் என்று குறிப்பிட்டது தமிழ் மருத்துவத்தையே. அன்றைய தமிழ் மருத்துவத்தின் இன்றைய இரண்டு மொழிப் பதிப்புக்களே சித்த, ஆயுள்வேத மருத்துவ முறைகள்.

சித்தர்கள் தோற்றுவித்த சித்தர் மருத்துவந்தான் சித்த மருத்துவம், அதன் மற்றொரு பெயர் தமிழ் மருத்துவம் என்று பலர் கூறுவர். சித்தர்கள் தோற்றுவித்தது சித்த மருத்துவம் என்பதை ஒத்துக்கொள்ளலாம். ஆனால் அது மட்டுமே தமிழ் மருத்துவம் என்றால் ஏற்பது சிரமம்.

சித்த மருத்துவத்துடன் தொடர்புள்ள அகத்தியர் திருமூலர் முதலான சித்தர்கள் காலம் கி. பி. 500க்குப் பிற்பட்டது என்பதே ஆராய்ச்சியாளர்கள் கருத்து. மேலும் சித்தி, சித்தா, சித்தர் என்ற சொற்கள் சங்க இலக்கியங்களில் இல்லாததும் சித்த மருத்துவத்தின் தோற்றம் கி.பி. 500க்குப் பிற்பட்டே இருக்க இயலும் என்பதற்கு மற்றொரு காரணம். எனவே தமிழ் மருத்துவத்தின் மற்றொரு பெயர்தான் சித்த மருத்துவம் என்றால் தமிழ் மருத்துவத்தின் தோற்றமே காலத்தால் பிற்பட்டு உண்மைக்குப் புறம்பாகிவிடும்.

சித்த மருத்துவக் காலத்திற்கு முன் தமிழகத்தில் மருத்துவம் தழைத்திருந்தது என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. அந்த மருத்துவ முறைக்கு மருந்து, மருத்துவம் என்ற பொதுப்படையான பெயர்களே இருந்திருக்க வேண்டும். சிலப்பதிகாரம் தவிர எல்லாச் சங்க இலக்கியங்களும் மருந்து என்றபொதுப் பெயரையே குறிக்கின்றன. Medicine என்றால் இன்று நவீன மருத்துவத்தை மட்டுமே குறிப்பது போல மருந்து என்றால் அக்காலத்தில் தமிழ் மருத்துவத்தை மட்டுமே குறித்திருக்க வேண்டும். வள்ளுவரும் எந்தச் சிறப்புப் பெயரும் கொடுக்காமல், மருந்து என்றே ஒரு அதிகாரத்திற்குப் பெயர் சூட்டியது மற்றொரு சான்று.

இருப்பினும் ஆயுள்வேதம் என்று சிறப்புப் பெயரும் பண்டைய தமிழ் மருத்துவத்திற்கு இருந்தது. ஆயுள்வேதரும், காலக்கணிதரும் என்ற சிலப்பதிகார வரியால் தெரியலாம்.

அதர்வண வேதத்தின் ஒரு அங்கம் ஆயுள்வேதம் என்பது வடமொழிப் பண்டிதர்களின் கணிப்பு. இருப்பினும் ஆயுள்வேதம் என்ற சொல் நான்கு வேதங்களிலும் இல்லை.

வடமொழி ஆயுள்வேதத்தின் இணையற்ற நூல்களாகக் கருதப்படும் சரகசம்கிதா, சுசுருத சம்கிதா ஆயுள்வேதம் என்ற

சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கி.பி. எட்டாம் நாற்றாண்டு வரை ஆயுள்வேதா என்ற சொல்லை வடமொழி மருத்துவ நூற்கள் பயன்படுத்தாமையும், அதற்கு முற்பட்ட சிலப்பதிகாரம், ஆயுள்வேதம் என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பினும், ஆயுள்வேதம் என்பது தமிழ் மருத்துவத்தையே குறிக்கும் என்பதும் பொருந்தும். எனவே இன்று புழக்கத்தில் உள்ள ஆயுள்வேதத்தையும் சித்த மருத்துவத்தையும் உள்ளடக்கியதே தமிழ் மருத்துவம் தமிழ் மருத்துவம் செய்ய விரும்புபவர் இவ்விரண்டு முறை களையும் கற்க வேண்டும்.

சங்கத் தமிழகத்தில் மருத்துவ விஞ்ஞான அறிவு

பண்டைய தமிழ் மருத்துவத்தின் சில பகுதிகளைச் சித்தர்கள் செப்பனிட்டுச் சித்த மருத்துவம் ஆக்கினர் என்று கொள்ளலாம். சங்க காலத் தமிழ் மருத்துவ நூல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால் அதில் மருத்துவத்தின் பங்கையும் தெரிந்து கொள்ளஇயலும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான சங்க இலக்கிய நூல்களில், அக்காலத் தமிழ் மருத்துவத்தின் பல சிறப்பியல்புகளைக் காணலாம்.

தமிழ் மருத்துவத்தின் அடிப்படையாக அமைந்த ஐம்பெரும் பூதக் கொள்கை, புறநானூற்றுப் பாடல் 2ல் விளக்கப்படுகிறது. ஐம்பெரும் பூதத்தியற்கை போலக் காத்தல், பொறுத்தல், அழித்தல் முதலான குணங்களை ஒருங்கே பெற்றவன் சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் என்று முரஞ்சியூர் மூடிநாகராயர் பாடுகிறார்.

ஐம்பூதத்தியற்கை போல என்ற சொற்றொடர் ஐம்பூதக் கொள்கையின் பல திறப்பட்ட மருத்துவ, விஞ்ஞான நுட்பத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறது. ஐம்பூதக் கொள்கைகள் பற்றிய தெளிவான சிந்தனைகள் இக்காலத் தமிழரிடம் அபரிமிதமாக இருந்ததால்தானே புலவர் சுருங்கக்கூறி ஒரு கோடு காட்டிச் சென்றிருக்க முடியும்.

திருக்குறளில் மருந்து:

திருக்குறளில் மருந்து என்ற அதிகாரம் உள்ளது. இதன் பத்துப் பாடல்களும் மருத்துவத்தின் பல சிறப்புகளைக் கூறுகிறது. இந்தப் பத்துப் பாடல்களின் கருத்துக்களுமே வடமொழியில் உள்ள சரக சம்கிதா முதலான தொகுதிகளிலும் கூறப்பட்டுள்ளன.

சரக சம்கிதாவில் காணப்படும் திருக்குறளுக்கு ஒத்த கருத்துக்கள், தமிழில் இருந்தே சென்றிருக்க வேண்டும். ஏனென்றால் ஒரு தலைப்பட்சமான ஆராய்ச்சியாளர்களும், குறள் கி. பி. 6ம் நூற்றாண்டுக்கு முற்பட்டது, சரகர் தொகுப்பு முற்றுப்பெற்றது கி. பி. 8ம் நூற்றாண்டுக்குப் பின் என்று ஒத்துக்கொள்வர். எனவே காலத்தால் முந்திய குறளில் காணப்படும் மருந்து எனும் அதிகாரம் விளக்கும் மருத்துவம் சித்த மருத்துவ காலத்திற்கு முந்தைய தமிழ் மருத்துவத்தின் சாரமாகும் எனக் கொள்ளுதல் தகும்.

பேயும், நோயும்:

நாகரீகத்தின் உச்சியில் இருப்பதாகக் கூறும் இந்த இருபதாம் நூற்றாண்டில் கூடப் பல நோய்களுக்குக் காரணம் பேய் என்று பலர் நம்புகின்றனர். மாந்திரீகரின் உதவியை நாடுகின்றனர். நோய்க்குக் காரணம் பேய் என்று பழந்தமிழர்களும் எண்ணியதாகத் தெரிகிறது. இருப்பினும் அவர்கள் பேய்க்குக் கொடுத்த உருவம், அதை விரட்ட எடுத்த முயற்சிகள் அனைத்தும் அறிவியல் பூர்வமானவை.

பழந்தமிழர்கள் பேய் என்று அழைத்தாலும், அவர்கள் குறிப்பிட்டது கண்ணுக்குத் தெரியாத நோய் பரப்பும் தொற்றுக் கிருமிகள் எனலாம். பேய் போர்க்காலத்தில் அதிகம் காணப்படும். போர்க்களத்தில் பட்ட வெட்டுக்காயம், குருதி முதலியவற்றைப் பேய்தொடும். இவ்வாறு புறம் 62ம் பாடலில் கூறப்பட்டுள்ளது. புண்ணைப் பேய் தழுவும் என்றால் கண்களுக்கு அரூபமான நோய்க்கிருமிகள் புகுந்து ஏற்படுத்தும் தொற்று நோயைத்தான் (Infection) பேய் என்று இந்த இடத்தில் குறிப்பதாகப்படுகிறது. இதே போன்ற கருத்தைப் புறம் 356ம் பாடலிலும் காணலாம்.

புறம் 281ல் ஒரு மருத்துவக் காட்சி:

போரில் புண்பட்ட தலைவன் வீட்டினுள் படுத்திருக்கிறான். அவன் பட்ட புண்வழியாகப் பேய் நுழையாமல் தடுப்பதற்காக அவன் மனைவி இரவம், வேம்பு, ஆகிய மரங்களின் தழைகளை வீட்டின் கூரையில் செருகி வைக்கிறாள். யாழ் போன்ற இசைக் கருவிகளைக் கொண்டு இசைக்கிறாள். கருத்த மையை அவன் புண்களில் தடவுகிறாள். கடுகை ஆங்காங்கு வீட்டின் தரையில் பரப்புகிறாள். குழல் ஊதி, மணிகள் ஒலித்துக், காஞ்சி ராகத்தால் பாடுகிறாள். வீடு முழுவதும் சாம்பிராணிப் புகை போடுகிறாள். பேய் புண்ணைத் தொடல் தடுப்பதற்கு புண்ணிற்குக் கறுத்த களிம்பைப் பூசுவதும், சாம்பிராணி புகைப்பதும் தொற்றுக் கிருமிகள் தாக்காமல் தடுக்கவே என்பது புலனாகும். வேம்பு ஒரு தொற்றுநோய் அகற்றி என்பது எல்லோருக்கும் தெரிந்தது. இரவம் தொற்றுக் கிருமிகளைக் கட்டுப்படுத்த வல்லது என்பது அண்மைக்கால ஆராய்ச்சியின் கண்டுபிடிப்பு. எனவே இவ்விரு மரங்களின் தழைகளைப் புண்பட்டவன் வீட்டில் வைத்திருந்து ஏதோ மருந்து செய்வதற்கு அல்லது நுண் கிருமிகள் பரவுவதைத் தடுக்கும் என்ற நம்பிக்கையில், யாழ், குழல், மணி இசைத்துப்

பாடுவது நோயாளி படும் வேதனையை மறக்கச் செய்வதற்கு துன்பம் நேர்கையில் யாழிசைத்து எனக்கின்பம் சேர்க்க மாட்டாயா என்ற பாவேந்தர் பாடலின் பொருளை ஒரு காட்சியாகவே இந்தப் புறநானூற்றுப் பாடல் கண்முன் நிறுத்துகிறது என்றால் மிகையாகாது.

பேய் என்று கூறினாலும் அதை விரட்டப் பழந்தமிழர்கள் மருந்தினைப் பயன்படுத்தினார்கள், மந்திரத்தை அல்ல.

மனநோய் மருத்துவம்:

மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்துள்ள இக்காலத்தில் மனநோயைப் பார்த்துப் பேய்ப் பிடிப்பு என்ற பலர் கூறுவதைப் பார்க்கிறோம்.

பெண்களுக்குப் பல காரணங்களால் மனக்கலக்கம் வரலாம். காதலில் வெற்றியும், தோல்வியும் இயற்கை. தோல்வியுற்ற பெண் மனம் கலங்குகிறாள். தொழில் பொருட்டுத் தொலைநாடு சென்ற தலைவன் நெடு நாட்களாகத் திரும்பவில்லையானால் அவனுக்கு என்ன நேர்ந்ததோ, எப்படிநேர்ந்ததோ, வருவானோ, வரமாட்டானோ என்று தலைவி மனதில் குழம்புகிறாள், உன்மத்தம் ஆகிறாள்.

குறுந்தொகை 263ல் ஒரு மருத்துவக்காட்சி:

ஒரு இளம் பெண்ணின் தாய் மகளுக்குப் பேய் பிடித்து விட்டதாக நினைக்கிறாள். பேயை விரட்டத்தாய் ஒரு பரிகாரம் செய்ய எண்ணுகிறாள். ஆட்டுக்குட்டியின் கழுத்தை அறுத்து, தினையைப் படைத்து, பல்வகையான இசைக்கருவிகளை முழக்கிப் பல தெய்வங்களை அழைத்துப் பேயை விரட்ட வேண்டும் என்பதே அது. ஆனால் மனநிலை பாதிக்கப்பட்ட மகளோ, அன்னை நினைப்பது போலத்

தனக்குப் பேயும் பிடிக்கவில்லை. அவள் கூறும் பரிகாரமும் தேவையில்லை. தனக்குப் பிடித்திருப்பது காமநோய், தலைவனை அடைவதுதான் அதற்குத் தக்க மருந்து, மாறாகப் பேயோட்ட வெறியாட்ட மெடுப்பதல்ல என்கிறாள்.

இதுபோன்ற கருத்தை விளக்கும் மற்றொரு காட்சியையும் குறுந்தொகைப் பாடல் 360ல் காணலாம். தலைவி தோழியை நோக்கித் தலைவன் இன்னும் வராமையால் என் நோய் அதிகமாகிறது. இந்நோய்க்கு வெறியாட்டம் எடுப்பது தக்க மருந்தாகாது என்று என் தாய் நன்கு அறிவாள். தலைவன் வந்தவுடன் இந்நோய் குணமாகும் என என் தாயும் அறிவாள், என்கிறாள்.

அக்காலத் தமிழ் மக்கள் பலர் நோய்க்காரணம் பேய் அல்ல என்பதை நன்கு உணர்ந்து இருந்தமை இதனால் புலப்படும். மனநோய் ஒரு நோய்தான். ஏதோ ஒரு காரணத்தால் விளையும். அக்காரணத்தைத் தவிர்ப்பது தான் நோய்க்குத் தக்க மருந்து. பேய் ஓட்டுவது அல்ல என்ற நம்பிக்கையைப் பார்க்கும்போது இன்றும் சரியான வளர்ச்சி பெறாத மனநிலை மருத்துவத்தில் எவ்வளவு முதிர்ச்சி பெற்றிருந்தார்கள் தமிழர்கள் என்பது புலனாகும்.

பேய் என்றால் ஒரு அரூபமான, அசுத்த ஆவி என்று இக்காலத்தில் நாம் நினைக்கிறோம். இருப்பினும் பேய் என்ற சொல்லிற்கு நோய் என்றே நம் முன்னோர்கள் நினைத்தது தெரிகிறது.

மனோநிலை மருத்துவர் சிக்மண்ட பிராய்டு கையில் சங்க கால அகப்பாடல்கள் கிடைக்காதது, தமிழனுக்கு ஒரு பேரிழப்பு.

சமூக மருத்துவம்:

பழந்தமிழர்கள் பசியைக்கூட ஒரு பிணி போல் கருதி அதற்குத் துரிதமாகப் பரிகாரம் செய்ய வேண்டும் என்று

கருதும் அளவிற்கு மனிதாபிமானம் மிக்கவர்களாய் இருந்திருக்கிறார்கள். புறநானூற்றுப்பாடல் 173ல் பசிப்பிணி மருத்துவனே என்று பாணன் புரவலனை அழைப்பதால் தெரியும்.

உணவுப் பழக்கவழக்கங்கள் (Dietetics) என்பது நவீன மருத்துவத்தில் இந்நூற்றாண்டின் பின்பகுதியில் வளர்ந்து வரும் துறை. உணவே மருந்து, மருந்தே உணவு என்பது தமிழர் கொள்கை. புறநானூற்றுப் பாடல் 70ல் இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன் என்ற சொற்றொடர் அமைகிறது. இருமருந்து என்பது சோறும், தண்ணீரும் என்று உரையாளர் கூறுவர். புறநானூறு 58ம் பாடலில் நெல்லும் நீரும் என்ற சொற்களும் இருமருந்தைக் குறிக்கும் எனக் கூறுகின்றனர்.

சமூதாயத்தில் காணப்படும் வறுமை, அதனால் விளையும் பசி, பட்டினி போன்ற அவலங்களைப் போக்குவதும் மருத்துவத்தின் ஒரு பங்கு என இன்றுதான் நினைக்கிறோம். சத்துணவுத்திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் சத்துணவுத் திட்டம் போன்றவை சமூக மருத்துவத்தின் ஒரு சில செயல் வடிவங்கள், நோய் தீர்ப்பது மட்டுமல்ல, அன்றாட வாழ்வில் மனிதனைப் பாதிக்கும் ஒவ்வொரு காரணமும் மருத்துவப் பார்வைக்கு உட்பட்டதுதான் என்பதை 20ம் நூற்றாண்டில் நாம் உணர்ந்துள்ளோம். காலம் வரையறுத்துச் சொல்ல முடியாத ஒரு பழைய காலத்தில் இதே கண்ணோட்டம் தமிழர்களிடையே இருந்திருக்கிறது என்பது அவர்களின் வாழ்வில் மருத்துவத்துறை எவ்வளவு உன்னதத்தில் இருந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது.

உணவு முறைகள்

ஒரு சமுதாயத்தின் நாகரிக வளர்ச்சி, அதன் உணவுப் பழக்க வழக்கங்களால் கணிக்கப்படும் என்றால் அது மிகையாகாது.

திருக்குறள் கூறும் மருந்து அதிகாரத்தில் உள்ள பத்துப் பாடல்களில் உணவுப் பழக்க வழக்கங்கள் ஏழு பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன என்றால் உணவுக்குப் பண்டைத் தமிழ் மருத்துவத்தில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் புரியும். உணவு மருந்தைவிட இன்றியமையாதது என்ற அறிவு எங்கிருந்து வந்திருக்க முடியும். அக்காலத்தில் பழக்கத்தில் இருந்த மருத்துவ முறையிலிருந்து என்று மறுபடியும் கூறத் தேவையில்லை.

கள் மருத்துவ முறைகள்:

தற்காலப் பழக்கத்தில் உள்ள ஆயுர்வேத மருத்துவத்தில் நோய் போக்கும் மதுவகை சார்ந்த அரிட்டங்கள், ஆசவங்கள் உண்டு. சித்த மருத்துவத்தில் கிடையாது. இரண்டு மருத்துவ முறைகளும் வேறு வேறு எனச் சொல்பவர்கள் இதைச் சுட்டிக் காட்டுவர்.

மூலிகைகளுடன் சர்க்கரை மற்றும் நீர் கலந்து மண்பானையில் இட்டு மூடிப் புளிக்கச் செய்யும் கள்தான் அரிட்டம். அரிட்டத்தில் சாராயம் இருக்கும். சாராயத்தில் மூலிகைகள் கரைந்து வேகம் பெறுகின்றன. சித்த மருத்துவத்தில் கள்வகை மருந்துகள் இல்லையென்றால் அம்மருத்துவமுறை பண்டைய தமிழ் மருத்துவத்தின் பூரண வாரிசு அல்ல என்று கூறலாம்.

கள் என்பது பழந்தமிழரின் இன்றியமையாத உணவாக அமைந்திருந்தது என்பதை இலக்கியங்கள் சுட்டிக் காட்டுகின்றன. கள் என்பதை மயக்கம் தரும் கள் என்று எடுக்கக் கூடாது என்று உ. வே. சாமிநாதய்யர் குறிப்பிடுகிறார். அரசர்களும், வேறு சிறந்த வாழ்க்கை நிலையுடைய மக்களும் கள் உண்பர் என்று கூறுகிறார்.

நெல்லால் செய்த கள், பனங்கள், இனிமையும் வெப்பமுடைய கள், தேனாலாகிய கள் முதலியவை மக்களுக்கு உணவாகப் பயன்பட்டிருக்கின்றன.

இந்தக் கள் வகைகள் மனமகிழ்ச்சிக்கு மட்டுமல்லாது மருந்தாகவும் பயன்பட்டிருக்க வேண்டும். உணவுக்கும் மருந்திற்கும் வேறுபாடு பாராட்டாத மக்கள் கையில் கள் மருந்தாகவும் பயன்பட்டதில் ஆச்சரியம் இல்லை.

அரிட்டம் செய்யும் போது பயன்படும் மூலிகைகள், செய்து முடிக்கப்பட்டபின் வடிக்கப்பட்டுக் கோதுவாக விலக்கப்படுகிறது. வடிகட்டியதை கண்ணாடிப் புட்டிகளில் அடைத்து இன்றும் பயன்படுத்துவதைப் பார்க்கிறோம்.

மூலிகைகள் போன்ற மருந்துச் சரக்குகள் தயாரிப்பில் பயன்படவில்லை என்றால் அக்கள்ளிலிருந்து கோது விலக்கப்படுவதற்கு வாய்ப்பே இல்லை. புறநானூறு பாடல் 114ல் நறவுப் பிழிஞ்சிட்ட கோதுடைச்சிதறல் என்ற வரிக்கு மது எடுத்தது போக நன்கு பிழிந்து வீசப்பட்ட சக்கை என்ற பொருள் கொள்வர்.

எனவை இத்தகைய கள்ளில் மூலிகைகள் கலந்தன என்பது உறுதி. அவர்கள் பயன்படுத்திய பலவகைக் கள்ளில் இனிமையும், வெப்பமும் கொடுத்த கள் ஒருவகை.

இன் கடுங்கள் என்று குறுந்தொகை 330வது பாடலில் வரும் சொற்றொடர் ஒருவகைக் கள்ளுக்கு இனிய சுவையும் வெப்ப வீரியமும் உள்ளகள் என்று அக்கள்களின் மருத்துவப் பண்பைக் குறித்து அழைப்பதாகவே தெரிகிறது. வெண்கட்தேறல் என்பதும் மருத்துவப் பண்பையே குறிக்கிறது.

அளவுடன் பயன்படுத்தப்பட வேண்டிய கள்ளை முறையறியாமல் பயன்படுத்திப் பிற்காலத்தில் குடித்துச் சீரழிந்து கொண்டிருந்த சமுதாயத்தைத் தடுத்து நிறுத்தவே இக்கள் வகை மருந்துகளைச் சித்தர்கள் கூறாமல் விட்டனர் எனலாம். இன்றும் கிராமப்புறத்தில் போதைக்காகவே அரிட்டம் குடிப்பதைப் பார்க்கிறோம்.

வெட்சி, கரந்தை

பண்டைத் தமிழர் வீரம் மிக்கவர்கள். போரில் முதலில் இறங்குபவன் வெட்சி மலர்களையும், எதிர்ப்பவன் கரந்தை மலர்களையும் மாலையாக அணிந்து கொண்டனர்.

பூமாலைகளை வீரர்களின் நோக்கத்தைக் காட்டும் வெளி அடையாளங்களாகப் பயன்படுத்தினர் என்று தான் நம்மில் பலர் நினைக்கிறோம். அதில் தவறில்லை. அடையாளத்திற்கு என்பதைவிட முதலுதவி மற்றும் உயிர்காக்கும் மருந்தாகப் பயன்படுத்தினர் என்று கொள்ளலாம்.

போர்க்களத்தில் தாகத்தைத் தணிக்கச் சரியான தண்ணீர் கிடைக்காது. உடல் அசதி இருக்கும். அடிபட்டு வீக்கம் வெட்டுக்காயங்கள், குருதிப் போக்கு முதலானவற்றை வீரன் சந்திக்க நேரிடும். இந்த மருத்துவ இடர்ப்பாடுகளைக் களைந்து உயிரைக்காப்பாற்றி மேலும் ஊக்கமாகப் போரிடவேண்டியது வீரனின் கடமை.

வெட்சி மலரின் மருத்துவச்செயலைப் பதார்த்த குண சிந்தாமணி, சுரம், தாகம், உடல் ஆயாசம் ஆகியவற்றைப் போக்கும் என்று சொல்லுகிறது.

பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்தவக் கல்லூரி மருந்தியல் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் இம்மலருக்கு வியத்தகு மருத்துவப் பண்புகள் இருப்பது தெரிந்து கொள்ளப்பட்டது. வெட்சி மலர் சாறு கொடுக்கப்பட்ட சீமை எலிகள் களைப்படையாமல் அதிகநேரம் நீரில் நீந்தின. வீக்கத்தை எளிதாகத் தடுத்துக் குறைத்தது. காயத்திலிருந்து வடிந்த குருதியை உடனே நிறுத்தியது. களைப்பு, வீக்கம், இரத்தக்காயம், குருதிப்போக்கு போன்ற போர்க்கால நிலைக்கு இம்மருந்து நிச்சயம் உதவும் என்று இதனால் தெரிந்தது.

கரந்தையும் பதார்த்த குணசிந்தாமணியில் மருந்தாக விளக்கப்படுகிறது. சிவகரந்தையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியில் இம்மருந்து சுரத்தைக் கட்டுப்படுத்தும். வீக்கம் வாதநோய் போன்றவற்றைத் தணிக்கும் என்பது தெரிகிறது. கையிலோ, பையிலோ வைத்தக்கொள்ளாமல் இம்மலர்களை மாலையாக அணிந்ததற்கு மற்றொரு காரணம் உண்டு. போரில் ஒவ்வொரு வீரனும் தனக்குத்தானே மருத்துவம் செய்துகொள்ள வேண்டும். தேவைப்படும் மருந்தைத் தேடி யாரும் போர்க்களத்தில் ஓடமுடியாது. கழுத்தில் மாலையாக இருந்தால், நினைவு கொஞ்சம் இருக்கும்வரை கைகள் உதவி இல்லாமலே கூட வாயில் போட்டு மென்று விழுங்க முடியும்.

வெட்சி மா மலர் என்று புலவர்களால் புகழப்பட்டு சங்கத்தமிழ் மறவரின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்த வெட்சி இன்று இட்லிப்பூ என்ற இழி பெயருடன் பல வீட்டுத் தோட்டங்களில் அலங்காரச் செடியாக காணப்படுகிறது.

வெட்சியின் இன்றைய நிலையும், பண்டைய தமிழ் மருத்துவத்தின் நிலையும் கவலைக்குரியதாகவே இருப்பதாகத் தெரிகிறது.

நெல்லிக்கனி:

சித்த மருத்துவத்தில் நெல்லிக்காய் லேகியம் உள்ளது. இருப்பினும் ஆயுள் வேதத்தில் உள்ளது போலப் போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்றே தோன்கிறது.

கிடைத்தற்கரிய நெல்லிக்கனியை அதியமான் ஔவையாருக்குக் கொடுத்தான் என்கிறது புறநானூறு பாடல் 91. சாகாமையைக் கொடுக்கவல்லது நெல்லிக்கனி என்ற அளவுக்கு அக்காலத் தமிழர் நம்பினர். நெல்லி மரத்தைப்

பயன்படுத்தி வேலி அமைத்தனர். வீட்டு முற்றங்களில் வளர்த்தனர் என்றும் தெரிகிறது. நெல்லிக்காயைத் தின்றபின் நீர் குடித்தால் இனிக்கும் என்ற செய்தியைக் குறுந்தொகை, அகநானூறு நற்றிணை ஆகிய இலக்கியங்களில் காணலாம். (குறுந்தொகை 262, 317, அகம் 54, 15, 16 நற்றிணை 271)

நெல்லிக்கனியைப் பலவிலங்கினங்கள் விரும்பி உண்ணும் என்ற செய்தியையும் காணலாம். பாலை நிலத்தில் நடந்து செல்லுவோர் நெல்லிக்காயை உண்டு களைப்பைப் போக்கிக் கொண்டதாகவும் தெரிகிறது. தமிழரின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்த ஒரு கனி நெல்லிக்கனி.

பழந்தமிழர் தருமம் செய்தனர். அதில் புதுமை மோர் அல்லது நீர்ப்பந்தல் வேலைக்கு ஆள் வேண்டும். அவர்களும் ஒழுங்காகக் கொடுப்பார்களோ இல்லையோ! எனவே அவர்கள் நிழல் தரும் மரங்களையும், கனி தரும் மரங்களையும் வழி நெடுக நட்டனர். இப்படித் தருமத்தின் பொருட்டு நடப்பட்ட மரங்களில் நெல்லி தலையாயது என்று தெரிகிறது.

அறந்தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்

என்று குறுந்தொகைப்பாடல் 209, சொல்லும் வரிக்கு வழிப்போவாரது உயிரைக்காக்கும் கனிகளைத் தரும், தருமத்தின் பொருட்டு நடப்பட்ட நெல்லி மரங்கள் எனப் பொருள் சொல்வர்.

சாலை தோறும் சமூகவனக் காடுகளை இன்று அரசு அமைக்கிறது. இச்செயலில் இயற்கை அமைப்பு பாதுகாக்கப் படலாம், அன்றாட மக்கள் வாழ்க்கையில் அவை உணவாகப் பயன்படுவதில்லை. அக்காலத் தமிழகத்திலும் இது போன்ற மரம் நட்டிருக்கின்றனர். மக்களுக்கு உணவாகவும், மருந்தாகவும் பயன்படும் கனிதரும் மரங்களை நட்டு வளர்த்தனர். தனிப்பட்ட நபர்கள் செய்தால்தானே இச்செயலைத் தருமத்தின் பொருட்டு என்று கூறமுடிந்தது.

முடிவுரை:

இன்றைய சித்த ஆயுர்வேத மருத்துவங்கள் ஒன்றாக்கப்பட வேண்டும். தமிழ் மருத்துவத்தில் போற்றப்பட்ட மனநோய் மருத்துவம் மற்றும் சமூக மருத்துவ முறைகள் ஆராயப்பட்டுச் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்.

வெட்சி, கரந்தை, மறக்கப்பட்டது போல் சங்க மூலிகைகள் அனைத்தும் இன்று கிடைத்தும் பயன்படுத்துவார் பலரில்லை.

தமிழ்நாட்டில் விளையாத கடைச் சரக்கையே நம்பி இருக்கும் சித்த மருத்துவத்தின் இன்றைய போக்கு மாற வேண்டும். எங்கும் எளிதில் கிடைக்கும் பச்சை மற்றும் காய்ந்த மூலிகை மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த மாற்றங்கள் நிகழ்ந்தால் சித்த மருத்துவம் பண்டைய தமிழ் மருத்துவம் போல் ஒரு மக்கள் மருத்துவமாக மாறும்.



வர்ம மருத்துவ மேம்பாட்டின் தேவை

டாக்டர் அ. மரியஜோசப், பி.எஸ்சி. எம்.டி. (சித்தா)
உதவி விரிவுரையாளர்,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
மருத்துவமனை, பாளையங்கோட்டை.

வர்மம் என்றால் என்ன?

வர்மம் என்பது வாசிநிலை தடைபடுதலாகும். இவ்வாசி நிலைகளை அமிர்த நிலைகள் என்றும் கூறலாம். இவ்வமிர்த நிலைகளை அறிந்தவனே ஆசானாவான். அமிர்த நிலைகள் வளர்பிறையில் மனித உடலின் வலது பக்கத்தில் பதினைந்து இடங்களிலும், தேய்பிறையில் இடது பக்கத்தில் பதினைந்து இடங்களிலுமாக ஏறி இறங்கும். அமிர்த நிலைகள் மூவைந்தாகும். இவ்விடங்களில் தாக்குதல் ஏற்படும்போது, தாக்குதலின் அளவைப் பொறுத்த எதிர்ச் செயல் உடலில் ஏற்படும். அவை உறுப்புகள் அதிகமாக விறைத்தல், செயலிழத்தல், சன்னி ஏற்படுதல், மரணம் ஏற்படுதல் போன்றன. இவ்வாறு நிகழும் தன்மையை வர்மம் என்பர். இதற்குச் செய்யும் பரிகாரம் வர்ம பரிகாரம் அல்லது வர்ம மருத்துவம் எனப்படும்.

வர்மம் பற்றிய சுவடிகள்:

வர்மம் கண்ணாடி 500, வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம் 1200, வர்ம ஒடிவு முறிவு சரசூத்திரம் 1500, வர்ம பீரங்கித் திறவு கோல் 16, வர்மக் கண்ணாடி 100, வர்ம கை பாக வலியம் 60, வர்ம சூத்திரம் 134, வர்மகுருநாடி 235, பொன்னூசித் திறவுகோல் 400, வர்மானிநாலு மாத்திரை போன்ற ஏராளமான சுவடிகள் இன்னும் அச்சாகாமல் உள்ளன.

வர்ம வகை:

படுவருமம் என்ற பலமான தாக்குதலால் (கைமடக்கி இடிப்பது) ஏற்படும் வர்மங்கள், பெயரால் 12 எனவும், தலத்தால் 19 எனவும், பலம் குன்றிய தாக்குதலால் (விரலால் அழுத்துவது) ஏற்படும் வர்மங்கள் தொடுவர்மம் எனவும், அது பெயரால் 96 என்றும், தலத்தால் 165 எனவும், பலமான தாக்குதலுமின்றிப் பலம் குன்றிய தாக்குதலுமின்றி இடைப்பட்ட நிலையில் கட்டையால் தாக்குதலால் ஏற்படும் வர்மம் தட்டு வர்மம் எனவும் அது பெயராலும், தலத்தாலும் எட்டு எனவும் கூறப்பட்டுள்ளது.

தட்டுவர்மம் என்று 8 வர்மத்தை தனியாகக் கூறினாலும் அவை தொடு வர்மத்தினுள் அடங்குபவை என வர்மச் சுவடிகள் கூறுகின்றன.

வர்மம் ஏற்படுத்தும் முறைமை:

உடலில் மெத்தமுள்ள 184 வர்மத்தலங்களில் வர்மம் ஏற்படுத்தப் பிதுக்கல், பின்னல், ஊணல், அமர்த்தல், தட்டல், ஏந்தல், குத்தல், அடித்தல், தாக்கல் போன்ற பலவகை முறைகள் உள்ளன. ஒரே வர்மத்தில் கூடச் செய்முறைகள் பேதத்தால் பலப்பல குறிகுணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஒடிவு முறிவு சர சூத்திரம் 100லிருந்து மேற்கோள் பாடல் எண் 474

பாரு நீ ஆதி தேவதையின் மையம்
பதித்துவிட மலம் காணும், ஏந்தினாலோ
ஊருகின்ற காலதுவே ஊணொட்டாது
ஓராண்டில் வாத சுரம் தொந்தமாகும்
சாருகின்ற கையிலிருத்திச் சரித்துத் தள்ளில்
தஞ்சமென்ற லிங்கம் எழும்பிடும் கண்டாய்
கோருகின்ற அத்தலத்தில் இடிகள் ஏற்றால்
குழையும் லிங்கம் அபானமது விரிந்துபோமே.

வர்மத்தால் ஏற்படும் நோய்கள்:

வர்மத்தில் அடிபட்டவுடன் நன்கு கவனித்து இளக்குமுறை செய்தல் வேண்டும். இல்லையெனில் வர்மம் இளக்கப் படாமல் பலநோய்கள் உண்டாகும்.

படுவர்மப் பகுதியில் அடிபட்டால் மட்டுமே, மனிதன் மயங்கி விழுதல், வாய்பிளத்தல், நாக்குத் தள்ளல், முதலிய பல அறிகுறிகள் தென்படும்.

ஆனால் பெரும்பாலான தொடு வர்மப் பகுதிகளில் அடிபட்டால், இதற்கு அறிகுறிகள் ஏற்படா. வர்மத்திற்கான அறிகுறிகள் ஏதும் இல்லையே என்று எண்ணி அவற்றிற்குரிய சிகிச்சை செய்யாவிடின் நோய்கள் உண்டாகும்.

தொடை இடுக்குப் பகுதியில் காணப்படும் வர்மத்தலம் கோண சன்னி வர்மம் அல்லது பதக்களைக் கால வர்மம் என அழைக்கப்படுகிறது. இத்தலத்தில் மாத்திரை அளவில் தாக்குதல் ஏற்பட்டால் இரண்டு ஆண்டுகள் கடந்தபின் பக்கவாத நோய் ஏற்படும்.

கருக்கொண்ட மங்கையர் ஐந்தாம் மாதத்திற்குப்பின் வயிற்றில் தாக்குதல் ஏற்பட்டு மயக்கமானால் உள்ளிருக்கும் மகவு பெண்ணாக இருந்தால் மலடாகவும் ஆணாக இருந்தால் அந்திர வாய்வும் ஏற்படும்.

பொதுவாக வர்மம் கொள்ளுகின்ற தலங்களைப் பொறுத்து நோய்கள் ஏற்படுகின்றன. அவை, இளைப்பு, ஈடுரோகம், எலும்புருக்கி, ஏங்கிளைப்பு, காசம், காய்ச்சல், நீரிழிவு, நீர்ச்செருப்பு, நெஞ்செரிப்பு, பக்கவாதம், பைத்திய ரோகம், மண்டையிடி மந்தகாசம், மார்க்கடுப்பு, நரம்புத்திமிர், முற்றின ஈளை, மூலச்சூடு, மூளைரோகம், விப்புருதி போன்ற நோய்கள் உண்டாகும்.

சன்னி உண்டாக்கும் வர்மங்கள்

உள்ளங்கை வெள்ளை வர்மத்தில் அடிப்பட்டால் உடனே சன்னி தோன்றும். உடனே தடுக்காவிட்டால் உயிர்ச்சேதம் ஏற்படலாம்.

கொம்பேறி வர்மப்பகுதியில் அடிப்பட்டால் முகவாதம் போன்ற குறிகுணங்களைக் கொண்ட கோணச் சன்னி உண்டாகும்.

இவ்வாறு ஏற்பட்ட சன்னியை நிறுத்தச் செய்யவேண்டிய சிகிச்சை முறை பின்வருமாறு:

கொள்ளுதற்கு வர்மத்தால் சன்னிவெட்டு (வலிப்பு)
கொண்டுதென்றால் பெருவிரலினிடையே தென்னி
விள்ளுவேன் ஓரிரைதான் தள்ளிமெள்ள
வெட்டியே பிடித்திடுவாய் சன்னிபோகும்
வர்மத்திறவுகோல் 9

கைப் பெருவிரல் இடைப்பகுதியில் (கைக் கவனிக்கால வர்மத்தில்) ஒரு விரல் தள்ளிப் பிடித்து வெட்டி இழுத்தால் சன்னி, வலிப்பு போன்றவை நின்று விடும்.

வர்மம் கொள்ளும் முறை:

அ) ஆண்களுக்கு:

திண்ணமுடன் ஈடதுதான் கொள்ளும் மார்க்கம்
செப்புகிறோம் அடியிடி கொள்ளலாலும்
வண்ணமுடன் கைச் சரசம் செய்ததாலும்
வழிதெரியாதிடுக்கெனக் கால் வைத்தாலும்
எண்ணமுடன் முன் பின்னணிச் சாடலாலும்
இதமறியாமோதி விழுந்தொடிதலாலும்
சண்ணுமப்பா வர்மநோய் பலதும் வந்து
சாடுமே திடங்கெடுக்கும் விதம் பின்கேளே.

விதமாக ஓடலொடு சாடலாலும்
மெய்கெட்டுத் தடுமாறி விழுதலாலும்
பதமான மங்கையரைப் புணர்ந்ததாலும்
பரிகரியிலேறி விழுந்தொடிதலாலும்
அதமான விக்கல் வந்து அமட்டிட்டாலும்
அயர்வோடு தலைச்சுமடுயெடுத்ததாலும்
குதமான சிலம்பு அடி வீச்சுக் குத்து
குறிப்பதிகம் மீறில் வர்மம் கொள்ளுந்தானே

பெண்களுக்கு:

கொள்ளவே ஸ்திரீகளுக்கு வர்மங்கொள்ளும்
கொள்கைதனை யின்னதென்று விவரிப்போம்பாரில்
விள்ளவே குனிந்து குடம் தண்ணீர் விம்மி
விரைவாக உன்னியே எடுத்ததாலும்
அள்ளவே தன் பலத்துக் கதிகமான
ஆணழகன் தனைமருவ அணைத்ததாலும்
கிள்ளவே இடையதுதான் பிரளலாலும்
கெடுந்துரல வர்மத்தில் குலைவதாமே.

குலையுமே கொட்டாவி யிடுதலால்
கொழுப்பயர்வில் கடுநடைகள் ஓட்டத்தாலும்
அணையுமே மதப்பட்டுச் சங்கையாலே
அணைந்து பிடி முறைப்படியும் கொள்ளலாலும்
கலையுமந்த தெசவாய்வில் பேதங்கொண்டு
கர்ப்பஸ்திரீ பிரசவத்தில் முக்கலாலும்
துலையுமே சிசுக்கள் பெற விம்மலாலும்
சுழன்று பை மாறில் வர்ம நீரிழிவதாமே.

வர்மத்தால் ஏற்படும் நோய்க்கும், பிற நோய்களுக்குமான வேறுபாடு

வர்மத்தால் ஏற்பட்ட நோய் என்பதை ஒரு நோயாளியில் கண்டறியப் பல காரண காரியங்களை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. வினவுதலின் மூலமாக நோயாளி கூறும் மருத்துவ வரலாறு

2. அடி அல்லது தாக்குப்பட்ட இடம் சூடாக இருத்தல்

3. கொழுத்து, பெருமூச்சு போன்றவை நோயாளியிடம் அவ்வப்போது ஏற்படுதல்

4. உடல் நாளுக்கு நாள் காரணமின்றி இளைத்துக்கொண்டு வருதல்

5. தாக்குதலால் நரம்பு பாதிக்கப்பட்டிருப்பின் அவ்விடம் தசை சூம்பல் ஏற்பட்டிருத்தல்

6. வர்ம நாடி நிலையால் உணர்தல்

7. பிற மருத்துவ சோதனையில் இன்ன நோய் என நோய்க் கணிப்புச் செய்ய இயலாமலுள்ள நோயாளிகள்.

இது போன்ற நிலைகளைக் கொண்டும், மற்றும் தாக்குதல் விழுதல், அடிபடுதல், காயமுறுதல் போன்ற ஏதாவது ஒருபுறச் செயல் ஏற்பட்டு அதற்கான உடனடிப் பரிகாரம் செய்ய மட்டுமே குணம் நல்க முடியும் என்பது இவ்வாசிரியரின் கருத்து.

வர்மத்தால் ஏற்பட்ட நோய்களுக்கு வர்மப்பரிகாரமே எளிதான மற்றும் குறிப்பான மருத்துவமாக இருக்குமேயன்றி இதர மருந்துகள் தற்கால சாந்தி நல்கினாலும் கூடப் பூரண குணத்தைத்தர இயலாது என்பதும் இவ்வாசிரியரின் துணிவான நம்பிக்கை.

சட்டம் சார்ந்த மருத்துவத்தில் வர்ம மருத்துவத்தின் பங்கு:

உடலின் 108 வர்மங்களில் பல வர்மங்கள் சதிகார வர்மங்கள் என அழைக்கப்படுகின்றன. காரணம் சில குறிப்பிட்ட வர்ம இடங்களில், குறிப்பிட்ட மாத்திரை

அளவில் தாக்குதல் ஏற்படுமானால் உடனடியாகக் குணம் ஏதும் ஏற்படாமல் இத்தகைய வர்மங்கள் எதிரிகளாக ஏற்படுத்தப்படுகின்றன. சில எதிர்பாராமல் ஏற்படுவதும் உண்டு.

உதாரணமாகச் சில வர்மங்கள்:

1. அஸ்தி சுருக்கிக்காலம் என்ற வர்மம் ஏற்படுமானால் உடல் 40 நாட்கள் சென்றபின் முன்னுக்கு வளைந்துவிடும். நோயாளி உயரத்தில் ஒரு முழம் அளவு குறைந்து கூனிக்குறுகி விடுவான்.

2. கைப் பொறுத்து வர்மம் என்ற கைக்கூட்டு கால வர்மத்தில் தாக்குதல் ஏற்படுமானால் அந்தக் குறிப்பிட்ட கையானது புயத்திலிருந்து விடுபட்டு, பலம் குன்றி, சூம்பல் ஏற்பட ஏதுவாகிறது.

3. கைக் கவளி காலத்தில் மாத்திரை அளவில் தாக்குதல் ஏற்படுமானால் சரியாக இரு ஆண்டுகள் சென்ற பின் விப்புருதி கட்டி ஏற்படும்.

4. கொண்டைக் கொல்லி வர்மத்தில் தாக்குதல் ஏற்பட்டு அவ்வர்மம் கொண்டால் வாலிபனாக இருந்தால் தாது பலம் குன்றி மலடாக வாய்ப்புள்ளது.

5. முழங்கை வர்மத்தில் தாக்குதல் மாத்திரை அளவில் ஏற்படுமானால் சரியாக ஒரு மாதத்தில் கை முடமாக வாய்ப்புள்ளது.

இதுபோன்ற பகுதிகள் வர்மக்கலைச் சுவடிகளில் ஏராளமாகக் காணப்படுகின்றன. இதனாலேயே இவ்வர்மப் பகுதிகளில் தாக்குதல் செய்யக்கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய செய்தியால் குற்றவாளிகள் தண்டிக்கப்படச் சித்த மருத்துவர்களுக்கும் வாய்ப்பளித்துப் பாதிக்கப் பட்டோருக்கு இன்ன வர்மம் உள்ளது, இத்தனை நாட்கள் கடந்தால் முடமாவர் என்பன போன்ற செய்திகளைத் தரச் சட்டம் சார்ந்த மருத்துவத்தில் வர்ம மருத்துவம், வர்ம மருத்துவர் இடம் பெறுதல் அவசியம் என்பதும் இவ்வாசிரியரின் கருத்து.

வர்ம மருத்துவம் அவசர கால மருத்துவம் எவ்வாறு?

வர்மமுற்ற நோயாளிகளுக்கு மாத்திரை அளவு மிஞ்சித் தாக்குதல் ஏற்படுத்தப்பட்டிருந்தாலோ, அல்லது வர்மம் கொண்டவுடன் வர்மப் பரிகாரமாகிய வர்ம அடங்கல் செய்யப்படாவிடினும் அத்தகைய நோயாளிகளுக்கு நோயின் அதிதீவிர நிலை ஏற்படலாம்.

நோய் தீவிர நிலையில் நோயாளிக்கு மூர்ச்சை, மயக்கம், வலிப்பு, விக்கல் போன்றன ஏற்பட்டிருக்கும். மற்றும் சுவாசித்தலில் சிரமம், அதி பயங்கர வலி, உடல் நீலம் பாரித்தல், உடல் முற்றும் வியர்த்தல், சில்லிடல் போன்ற குறி குணங்களைக் காட்டி நோயாளியைக் கொல்லும் நிலையும் ஏற்படலாம்.

இவ்வாறான நிலையை நவீன மருத்துவம் அவசரகால மருத்துவமாகவே கொண்டு பரிகரிக்கின்றது. அதுபோன்ற உயர்வான தரமான வர்ம மருந்துகள் சித்த மருத்துவ வர்மச் சுவடிகளில் பல கூறப்பட்டுள்ளன. சித்த வர்ம மருத்துவர்களால் இன்னும் கையாளப்பட்டு வருகின்றன.

அதி தீவிர உதிரப் பெருக்கு, அதி தீவிர வாந்தி, வலி போன்ற நிலைகளையும் வர்மப் பரிகாரத்தால் சீராக்க முடிகின்றது.

ஆகவே, இத்தகைய தீவிர நோய் நிலையிலும் பயன் தரக் கூடிய வர்ம மருத்துவம் நிச்சயமாக அவசர கால மருத்துவமாகவே கொள்ளப்படுகிறது.

வர்ம மருத்துவத்தின் வகைகள்:

1. உடனடி மருத்துவம்
2. கால தாமத (பழைய வர்ம) மருத்துவம்

1. உடனடி மருத்துவம்

1. அடங்கல்
   நசியம்
   கலிக்கம்
   அஞ்சனம்
   துவாலை
   உள் மருத்துவம்

2. பழைய வர்ம மருத்துவம் (கால தாமத மருத்துவம்)

   துவாலை
   தடவல்
   உள் மருத்துவம்

வர்ம மருத்துவத்தின் சிறப்பியல்புகள்

வேர் பாரு தாழை பாரு மிஞ்சினக்கால்
மெல்ல மெல்லப் பற்ப செந்தூரம் பாரே

என்ற கோட்பாட்டின்படி பார்க்குமிடத்து வர்ம மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள மருந்து செய்முறைகளில் தாதுப் பொருட்கள், உபரசங்கள் மற்றும் பாடாணங்களின் பங்கு மிகக்குறைந்த அளவிலே, விரல் விட்டுச் சொல்லும் அளவுக்கு மட்டுமே உள்ளது.

மூலிகை, மற்றும் சீவப்பொருட்களே வர்ம மருத்துவத்தில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன. இது ஒரு சிறப்பு அம்சமாகக் கருதலாம். இது மட்டுமின்றி இத்தகைய மருத்துவ முறையே முதன்மையான ஒன்றாகவும், பழமையான ஒன்றாகவும் இருத்தல் வேண்டும்.

கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடியாகிய தமிழர் வாளோடு வீரத்தோடு வர்மத்தையும் தெரிந்திருக்க வேண்டும்.

புல்லையும் பூண்டையும் உண்டு குணம் பெற்ற விலங்குகளைப் பார்த்துப் பழகிய பழங்கால மனிதர் அவற்றைத் தாமும் உண்டு நோய் நீக்க முற்பட்டிருக்கலாம். அவ்வாறு வளர்ச்சியுற்ற சித்த மருத்துவம் ஆரம்ப நிலையில் முற்றுமே மூலிகை மருத்துவமாகத்தான் இருந்திருக்க வேண்டும். காலம் செல்லச் செல்ல நீண்ட காலம் பத்திரமாக இருக்கும் மருந்துகளையும், விரைவில் கையாளும் மருந்து முறைகளையும் ஆய்ந்து கண்டு பழக்கப்படுத்தியிருக்க வேண்டும்.

சித்தர்கள் தம் ஞானத்தால் (INTUITION) மருத்துவம் வெளிக்கொணரப்பட்டது என்பதனை விட அவர்தம் அனுபவத்தால் மட்டுமே இம்மருத்துவமுறை தோன்றியிருக்க வேண்டும் என்பது என் எண்ணம்.

வர்ம மருத்துவம் பழைய, முதல் மருத்துவமாக இருந்திருக்க வேண்டும் என்பதும் என் துணிபு.

நவீன மருத்துவத்தால் அசாத்தியமென்று கூறப்படும் அசைவுப் பொருத்துக்களில் ஏற்படும் முடம் வர்ம மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள வசவெண்ணெய் பிரயோகத்தால் முற்றிலும் சீராக்கப்படுவது கண்கூடு. இதனையும் வர்ம மருத்துவத்தில் சிறந்த அம்சங்களில் ஒன்றாகக் கொள்ளலாம்.

வர்ம மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள தடவல் முறையால் சில குறிப்பிட்ட மூட்டு நழுவல், சதைப்புரட்டு, என்பு முறிவு போன்ற நிலைகளை உடனடியாகப் பரிகரிக்க முடிகிறது.

வர்ம மருத்துவச் சுவடிகளைப் பதிப்பித்தலின் அவசியம்

அழிந்து வருகின்ற கலைகளில் ஒன்றாக இருக்கின்ற இந்த வர்மக்கலை மருத்துவத்தினை அழியாமல் பாதுகாப்பது அவசியம். இந்த வர்ம மருத்துவக் கலையினை அழியாது

பாதுகாத்துச் சுவடிகளை நூற்களாகப் பதிப்பித்தால், துட்டர்கள், முரடர்கள் இக்கலையைப் படித்துத் தவறான வழியில் செல்வார்கள் எனச் சிலர் கருதுகின்றனர். இது தவறு. ஏனெனில் தொட்டுக்காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது என்பது பழமொழி. இப்பழமொழிக்கேற்ப ஒருவன் வர்ம மருத்துவத்தை முறையாக வர்ம மருத்துவம் தெரிந்த வர்மானியிடம் (ஆசானிடம்) படிக்காமல், பதிப்பித்த நூற்களைப் படித்துத் துன்மார்க்கச் செயலில் ஈடுபட முடியும் என்பது சாத்தியமானதல்ல. அதே சமயம் இந்த வர்மக் கலை மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிப்பதனால் பல நன்மைகள் ஏற்படும்.

எவ்வாறெனில் வர்மானிய மருத்துவக் கலை செல்வாக்காக இல்லாத இடங்களில், ஒருவனுக்கு எதிர்பாராத விதமாக அடியோ, தாக்கோ மர்மப் பகுதிகளில் ஏற்படுமாயின் அவற்றிற்கு என்னென்ன சிகிச்சை செய்யவேண்டும் என்பதை அவர்கள் அறியாதவர்களாதலால், குறிப்பிட்ட நாழிதைக்குள் இளக்குமுறை செய்யாமல் அந்த ஆள் மரணமடையவோ, அல்லது நிரந்தர நோயாளியாக மாறிவிடக் கூடிய தன்மையோ ஏற்பட்டு விடும். இந்த நிலையை வர்மானிய நூற்களைக் கற்றறிந்தவர்கள், எந்த இடத்தில் அடிபட்டதோ, அதற்குரிய சிகிச்சையைச் செய்ய முடியும். இதனால் உயிர் ஆபத்தை குறைக்கும் நூலாக இவை பயன்படும்.

இந்த வர்மக் கலை மருத்துவச் சுவடிகளை நன்கு ஆய்ந்து ஒன்று திரட்டி, இது பற்றிய செய்திகளையெல்லாம் நூற்களாக மாற்றி மருத்துவ அறிஞர்கள், மாணாக்கர்கள் அறியும் வண்ணம் இம் மருத்துவ முறை சீராகப் போதிக்கப்பட்டால், போதிக்க வாய்ப்பளிக்கப்பட்டால், எதிர்பாராத ஆபத்துக்களினால் வர்மப் பகுதிகளில் அடிபட்டுத் தகுந்த சிகிச்சை இல்லாமல் நடைப்பிணமாகக் காணப்படுகின்ற மனிதர்களை வாழவைக்க முடியும்.

வர்ம மருத்துவ மேம்பாட்டின் அவசியம்

அவசர கால மருத்துவமாகிய வர்ம மருத்துவம் இன்றும் பல ஆசான்களால் நடைமுறையில் நிரூபணமாகிக் கொண்டிருக்கும் மருத்துவ முறையாகும்.

மரத்திலிருந்து விழுதலாலும், பிற வாகனங்களாலோ பொருட்களாலோ அடிபட்ட நிலையிலும், எதிரியால் தாக்குண்ட நிலையிலும் நோயாளி உணர்வின்றி மயக்கமுற்ற நிலையிலோ, கஷ்ட சுவாசம், மூச்சடைப்பு, விக்கல் போன்ற அசாத்திய குறிகுணங்களோடோ வர்ம ஆசானை அணுகும்போது அவர் குறிகுணங்களுக்கு ஏற்ப மருத்துவம் செய்வித்துப் பூரண குணமளித்தல் இன்றும் வழக்கத்திலுள்ளது.

கண், நாக்கு, இலிங்கம் போன்றவை உள்ளிழுத்த நிலையிலோ அல்லது வெளித்தள்ளிய நிலையிலோ அதனைச் சீர்படுத்த வர்ம கை பாகல்லியம் என்ற சுவடி தரும் மருத்துவ முறை போற்றுதற்குரியது.

வெட்டு, குத்து, சிதைவு போன்ற இரத்தம் சொட்டும் காயங்களுக்குக் கூறப்பட்ட மருத்துவப் பரிகாரம் வாழ்த்துதலுக்குரியது. இரத்தப் பெருக்கை நிறுத்தக் கூறப்பட்டுள்ள தலங்களில் அழுத்த இரத்தப்போக்கு நின்று விடுகிறது.

ஆக, அவசரகால மருத்துவ முறையை முற்றிலுமாகக் கொண்ட எளிய மருத்துவ முறையாகிய வர்ம மருத்துவத்தை அறிவியல் அடிப்படையில் மேம்படுத்தித் தனித்துறை மூலமாக நடைமுறைப்படுத்தினால் பல்லாயிரக் கணக்கான நடைப்பிண மனிதர்களைப் பார்போற்றும் வண்ணம் குணம் ஏற்படுத்த முடியும் என்பது என் முடிவு. எனவே, வர்மக் கலை மருத்துவம் மேம்படுத்துப்பட வேண்டியது அவசிய மாகின்றது.

தமிழ் மருத்துவத்தில் மலைவாழ் மக்களின் பங்கு

பூம்பொழில்- அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளை.

சித்த மருத்துவத்தின் பயனை மலைவாழ் மக்கள் சிறப்புற அறிந்துள்ளார்கள். நவீன மருத்துவ முறைகட்கு ஈடாகச் செயல் முறைகளிலும், மருந்துகளை உற்பத்தி செய்வதன் மூலமாகவும் பழங்காலத்திலேயே மருத்துவ முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். உதாரணமாக செய்யப்பட்ட மருந்தின் திறனை மிருகங்கள் வாயிலாகச் சோதித்தறிந்து, பின்னர் மனிதர்கட்டுக் கொடுத்து வருவது மரபு. மலைவாழ் மக்கள் தாங்கள் வளர்க்கும் உயிரினங்கட்கு மருந்துகளைக் கொடுத்து அதன் அளவையும் அறிந்து வைத்திருந்தனர். குறிப்பிட்ட இடங்களில் வசிக்கும் மக்கட்கு இடத்திற்குத் தகுந்தாற்போல் நோய்கள் வரும் என்பதையும், அதனைத் தீர்க்கும் மூலிகைகள் கிடைக்கும் இடங்களையும் அறிந்து வைத்திருந்தனர். அவர்கள் குறிப்பிட்ட சில வியாதிகள் பரவக் கூடிய வாய்ப்புகள் எவ்வெவ்விடங்களில் உள்ளனவோ, அவ்விடங்களிலே அந்த நோய்களைத் தீர்க்கும் மூலிகைகள் எளிதாக கிடைக்கக்கூடியதாக இயற்கையிலேயே காணப்படுகிறதென்பதை அவர்கள் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் அறிந்து வைத்திருக்கின்றனர்.

சித்த மருத்துவத்தின் மேன்மையைப் பழங் காலத்திலேயே சித்தர்கள் சொல்லிக் கொடுத்ததன் வாயிலாக மட்டுமன்றி அவர்களுடன் நெருங்கிப் பழகியும் அவர்கட்கு மூலிகைகள் சேகரிப்பதற்கு உறுதுணையாக இருந்தும், மருந்துகள் செய்வதற்குத் துணையாக இருந்தும் இதன் மூலமாக மருத்துவ முறையையும், மருந்து செய்முறை யையும் கையாண்டு வந்துள்ளார்கள்.

தாங்களறிந்த இம்மருத்துவத்தைத் தங்களது சந்ததியினர்க்கு மட்டும் சொல்லிக்கொடுத்து இம் மருத்துவத்தின் இரகசியத்தைப் பாதுகாத்து வந்தனர். தனி நோய்க்கு மருத்துவம் செய்யும் மருத்துவர் தன்னுடைய நோய்ப்பரிகாரம் மற்றும் மருந்து இவற்றிலிருந்து மாறுபடாமல் அவருடைய வழிமுறையிலேயே செய்து வந்துள்ள முறை தற்காலத்தில் ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனியாக மருத்துவர்கள், சிறப்பு மருத்துவ நிபுணர்களாக இருக்கும் முறையைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

நோய்கணிப்பதில் வல்லுநர்கள் நோய்களைக் கணித்து, இந்த நோய்க்கு இந்த மருத்துவரை அணுக வேண்டுமென்று மருத்துவரின் முகவரி தந்து அனுப்புகிறார்கள். தற்காலத்தில் குறிப்பிட்ட நோய்கட்கு அந்தந்த மருத்துவரை அணுக வேண்டுமெனக் கூறுவதற்கு இணையாக அவர்களது செயல்கள் அமைந்துள்ளன. பெரும்பாலான மருந்துகள் மூலிகைகளாகவே உள்ளன. எந்தக் காரணங்கொண்டும் மூலிகைகளை அவற்றின் இயற்கை சூழ்நிலையை விட்டு வேறிடத்தில் அவற்றை எடுத்து வைத்து வளர்க்கவேண்டும் என்ற கருத்தினை ஒத்துக்கொள்வதில்லை.

மண்ணின் வளம்கொண்டு அவ்விடத்தில் இயற்கையாகப் பயிர்கள் வளர்கின்றன. அவற்றிற்கு இயற்கையான மண் வளத்திலுள்ள சத்துக்களின் தன்மை அமைந்திருக்கும். இத்தன்மைக் கேற்றவாறு நோய்தீர்க்கும் தன்மையும் அமைகின்றது. எனவே சூழ்நிலையையும் மண்ணின் வளத்தையும், பொறுத்துதான் மூலிகையின் நோய்தீர்ககும் வன்மையும் அமைந்திருக்கும். எனவே நோயாளிகள் வந்த பிறகே நோயினைக் கணித்து அதற்குரிய மருத்து செய்யும் பொருட்டு, எளிதில் கிடைக்கக் கூடியதும், எளிதில் தயாரிக்கக் கூடியதுமான மூலிகை மருந்துகளை வகைப்படுத்தி, நோயினை வன்மைக் கேற்றவாறும், நோயின் தன்மைக் கேற்றவாறும் நடைமுறையில் இவர்கள் இன்றும் கொடுத்து வருகின்றனர்.

நோய்நாடி நோய் முதனாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

எனும் வள்ளுவர் வாக்கினை, இம்மலைவாழ் மக்கள் தங்கள் அறிவிற்கு அறியாமலேயே, மருத்துவ முறைக்கு ஏற்றவாறு, மருந்துகளைத் தந்து நோயாளியைச் சுகப்படுத்தி வருகின்றனர்.

இனி அவர் தம் வழக்கிலுள்ள மருத்துவ முறைகளை அறியுங்கால்

மலைகளின் அரசி நீலகிரி மலையில் வசிக்கும் மக்களிடம் காணப்படும் மருத்துவக் குறிப்புள் சில இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் பொதுவாகக் கிடைக்கும் மருந்துப் பொருட்கள் பற்றிய விவரமும் இதில் அடங்கியுள்ளன. இவற்றை மேற்கொண்டு ஆய்வு செய்வதால் அரிதான பல மருத்துவ முறைகளை அழிவிலிருந்து காக்க முடியும் என்பது என் முடிவு.

முகவாதத்தைத் தொட்டகாய் என்று கூறுகிறார்கள். இதற்கு மருந்தாக

1. புளியாரை இலை (குல்ல மச்சிக்காய்) 2. நார்த்தங்காய் (ஏரிக்காய்) 3. புற்றுமண் இவற்றைச் செம்புப் பானையில் வேகவைத்துப் பாதிக்கப்பட்ட முகத்தில் ஒற்றடம் கொடுக்கக் குணமாகும்.

பக்கவாதம் உண்டாகிய கை அல்லது காலுக்கு ஒற்றடம் இடுவதற்குத் தொட்ட மந்துகிட (ஓரிலைத் தாமரை) இலையைப் பயன்படுத்துகிறார்கள்.

உடம்பில் வரும் கட்டிகளுக்குப் பிப்பிரி இலையை வைத்துக்கட்டக் குணமாகும்.

தொண்டைக்கட்டுக்குச் சுண்ணாம்பைத் தடவி பிப்பிரி இலையை வைத்துக்கட்டக் குணமாகும். பொன்னுக்கு வீங்கிக்கும் இதே முறையைக் கையாளலாம்.

தீராத வயிற்று வலிக்குத் தொண்ணூறு மருந்துகளால் செய்யப்பட்ட 300 வருடத்திற்கு முந்தைய குச்சியை நெருப்பிலிட்டுச் சுடக் குணமாகும். சன்னி, தலைவலி ஆகியவற்றிற்குப் பரம்பரையாக இவ்வைத்தியம் செய்யப் பட்டு வருகிறது.

ஆண்களுக்கு உண்டாகும் ஒவ்வாமைக்கு (அலர்ஜித் தர்ப்பப்புல்லை அடிப்பற்றியுள்ள பாத்திரத்தில் நீர்விட்டுக் காய்த்து அந்த நீரைத் தர்ப்பப்புல்லில் ஊற்றி உடலில் படும்படி வைத்தால் குணமாகும்.

வைக்கோலைச் சாம்பலாக்கிச் சிட்டிகை அளவு எடுத்து ஒரு டம்ளர் நீரில் கலக்கிக் கொடுக்கப் பெண்களுக்கு உண்டாகும் ஒவ்வாமை (அலர்ஜி) தீரும்.

சுரம் அதிகமானால் வெங்காயத்தை நூலில் கோர்த்து கழுத்தில் மாலையாகப் போட்டுச் சீரகத்தை அரைத்து உள்ளுக்குக் கொடுக்கக் குணமாகும்.

அள்ளை அடைப்பு (முட்டடைப்பு)

மூச்சு விடமுடியாமல் அள்ளை இரண்டு துண்டாக்கி வலியுடன் சிரமப்பட்டால் திப்பிலி, வெங்காயம், கஸ்தூரி வெற்றிலை, தேன் இவற்றைக் கலந்து வெற்றிலையை லேசாக விளக்கெண்ணெய் விளக்கில் வாட்டிச் சிறிய உருண்டைகளாகச் செய்து நிழலில் காயவைத்து வயதிற்குத் தகுந்த அளவு கொடுக்கக் குணமாகும்.

குழந்தைக்கு உண்டாகும் சீர் பிணிகளுக்குக் கால்வாய்ச் செடி, பானைத்தீ, செப்பு, யானைமலம், வெங்காயம், வெள்ளை முள்ளி, சிவப்பு முள்ளி, ஆகியவற்றை அரைத்துச் சிறிதளவு கொடுக்கக் குணமாகும். நோயின் குறிகுணம் தலை உச்சியில் குழிவிழும். பேதி, வாந்தி உண்டாகும். கண்குழிவிழும். உடல் சூடு குறைந்து உடல் மெலிவு ஏற்படும் (பெரும்பாலும் கருக் கலைந்த பெண்கள் குழந்தைகளைத் தொட்டால் இந்நோய் உண்டாகும்.)

தொட்டாற்சிணுங்கி, ஜலபுஷ்பி, இரண்டு செடிகளையும் எடுத்துக் காயவைத்து தேங்காய் எண்ணெயில் விட்டுக் காய்த்து உபயோகிக்க உடல் உறுதிபெறும்.

முள்சுண்டைக்காய் கசாயம் செய்து கொடுக்க வயிற்றுப் புழுக்கள் நிற்கும்.

காட்டுக் கருணைக் கிழங்கு அல்லது இலையை அரைத்துக் குடிக்க எல்லாவிதப் பாம்புகடி விஷமும் நிற்கும். கொன்றைப் பட்டையைக் கடிவாயில் பூசி, உள்ளுக்குக் காட்டுக்கருணையைக் கொடுக்கலாம்.

ஓரிதழ்த் தாமரை, முயல்செவி இலை இரண்டையும் தேங்காய் எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சித் தைலம் செய்து பூச ஒவ்வாமையால் வரும் கட்டிகள் தீரும்.

வக்கிரிச் செடி, கொன்றை இலை இரண்டையும் பொடி செய்து தீராத புண்களுக்குத் தேங்காய் எண்ணெயுடன் கலந்து தடவ நீங்கும்.

ஜலபுஷ்பம், சீரகம், பூண்டு மூன்றையும் சேர்த்து அரைத்துப் புண்ணில் தடவ குணமாகும்.

கொழுஞ்சி இலையை வெங்காயம், சீரகம் சேர்த்து அரைத்து நீரில் கலக்கிக் கொடுக்க வயிற்றுவலி தீரும்.

காடு குண்டிகைவேர், பனைவெல்லம், வெங்காயம், சீரகம் சேர்த்து அரைத்து மார்புவலிக்குக் கொள்ளுச்சாறு துவரம் பருப்பு பத்தியத்துடன் கொடுக்கக் குணமாகும்.

புளியம்பட்டை (காய்ந்தது) வெள்ளை அத்தி (காய்ந்தது) கல்பாறையில் தானாக இறந்து கிடக்கும் ஒரு வகைப்புழு இம்மூன்றையும் புகைப்போட்டுப் பக்கத்தில் படும்படி செய்து மூன்று நாட்களில் குணமாகும்படி செய்கிறார்கள்.

காலில் உண்டாகும் தீராத வண்டுகடிக்கு அங்கு விளையும் சிறுபசலைச் செடியைக் கருக்கிச் சாம்பலாக்கித் தேங்காய் எண்ணெயுடன் கலந்து போடக் குணமாகும்.

இதே சிறுபசலைக் கொடியை தொண்டை வீக்கத்திற்கு நெய்யில் கலந்து வேகவைத்து உள்ளுக்குக் கொடுக்க வீக்கம் நீங்கும். பத்தியம் சாமையரிசிக் கஞ்சி சாப்பிட வேண்டும்.

மலைதாங்கிப்பூண்டு, கிழங்கு, வசம்பு, பூண்டு இவற்றை அரைத்துத் தேங்காய் எண்ணெய் கலந்து காய்ச்சி வலிப்பு, கைகால் வலி ஆகியவற்றிற்குத் தேய்க்கக் குணமாகும்.

ஏரசிங்கி வேர் நீரில் கலந்து உள்ளுக்குக் கொடுக்க சீரண சக்தி உண்டாவதுடன் வாத நோயால் ஏற்படும் உடல் வீக்கம் நீங்கும்.

நஞ்சறுப்பான் வேரை மிளகுடன் அரைத்துச் சகல நஞ்சுகளுக்கும் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர்.

புற்றுக்காய் இதை நீரில் இழைத்துக் கண்டமாலைக்குப் பூசக் குணமாகும்.

முந்திரிக் கொடிவேர், எலுமிச்சம்பழச்சாற்றுடன் அரைத்துப்பூசக் கைகால்களில் ஏற்படும் விரணக் கட்டிகள் உடைந்து சீழ், இரத்தம் வந்து புண் குணமாகிவிடும். ஓமை மரத்தோல், கண்ணோரி மரத்தோல், சுக்கு இவற்றைச் சம அளவு எடுத்துத் தாய்ப்பால் விட்டு அரைத்துக் கண்ணில் விட சகல கண்நோய்களும் தீருகிறது. தாய்ப்பால் கிடைக்காத சமயம் பசும்பால் சேர்க்கலாம்.

வாய்ப்புறத்தைச் சுற்றிலும் வரும் அக்கிப் புண்ணுக்கு எலுமிச்சம் சாறு, காவிக்கல், அடுப்பில் உபயோகித்த சட்டியில் ஏற்படும் கரி ஆகியவற்றை அரைத்துப் பூசக் குணமாகும்.

வாயில் ஏற்படும் துர்நாற்றம், பயோரியா ஆகியவற்றிற்கு துருசைவேர், எலுமிச்சம் வேர், கொம்புகை

இலை, பூ ஆகியவற்றை அரைத்துப் பல்லில் பூசி வாய் கொப்பளித்து வர வேண்டும். கிழங்கு, அவரை, புளி, மாப்பண்டம் சேர்க்கக்கூடாது.

தாய்ப்பால் குடித்துக்கொண்டு இருக்கும் சமயமே தாய் கர்ப்பம் உண்டாகி அந்தப்பாலை குழந்தை குடித்தால் அதனால் ஏற்படும் நோய்க்கு உச்ச அரள் பட்டை சக்கை, எலுமிச்சை இலை, சீரகம், வெங்காயம் சம அளவு சேர்த்து அரைத்து ஒரு தேக்கரண்டி அளவு மூன்று வேளைக்குக் குடிக்கக் கொடுக்க வேண்டும். குழந்தை உடல் தேறும். இதே மருந்தை நஞ்சு வெளிப்படாமல் இருக்கும் பெண்களுக்கும் கொடுக்கலாம்.

குழந்தைக்கு உண்டாகும் இரைப்பு நோய்க்கு வெற்றிலைச்சாறு, கம்பி (மருத மலை, நெல்லித்துறை ஆகிய இடங்களில் கிடைக்கும்) உறுமிச்சம் செடி மூன்றையும் மூன்று வேளை கொடுக்கக் குணமாகும்.

நார்த்தங்காய் தழை (எரிக்க செப்பு) எலுமிச்சம் தழை (இம்பி செப்பு) தொட்டக்காய் கிடுவு (புளியாரை இலை) மூன்றையும் அரைத்துப் பக்கவாதம் வந்த இடத்தில் பூசுவதற்கும் ஆவி பிடிப்பதற்கும் உபயோகிக்கச் சொல்கிறார்கள். குடி குள்ளமச்சிக்காய் தழையை ஒற்றடம் கொடுக்க வேண்டும்.

அசீரணக்கோளாறு, வாந்தி, பேதி, வயிற்றுவலி ஆகிய அறிகுறிகளுடன் உடல் சூடு குறைந்து ஏற்படும் வாத நோயைக் குன்னக்காய் என்று கூறுகிறார்கள். இதற்குத் தொரைக்கிடுசெப்பு (காலவைத்தாழை) பச்சைப்பாக்கு நிலத்தும்பை செப்பு மூன்றையும் அரைத்து ஒரு கரண்டி தினம் மூன்று வேளை கொடுத்துவரக் குணமாகும். பசுஞ்சாணத்தில் பச்சைப்பாக்கு சிறிது அறுகம்புல் சேர்த்து கொடுக்கக் குணமாகும்.

பழக்கத்தில் உள்ள மருத்துவக் குறிப்புகள்:

1. சுக்கட்டி கீரை: (மணத்தக்காளி) காமாலை, குடல் புழு ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது.

2. அந்திமல்லி இலையை விளக்கில் வாட்டிக் கட்டிகளுக்கு வைத்துக்கட்டக் கட்டி வெடித்துக் குணமாகும். கிழங்கை அரைத்துப் பூசப் புண் குணமாகும்.

3. தவிட்டுப்பழச் செடியின் இலை, கொழுந்து அரைத்து நீரில் கலந்து கொடுக்கப் பேதி நிற்கும்.

4. கசகசாச் செடி இலையைச் சமைத்து சாப்பிட வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

5. வெள்ளைச் சுண்ணாம்பைக் கால் பெருவிரலில் இரவில் தடவச் சூடு தணியும்.

6. சீமைக் கருவேலன் இலை அரைத்துத் தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சிக் கற்பூரம் கலந்து ஆறாத இரணத்திற்கு உபயோகிக்கலாம்.

7. வாழைப்பழத்தில் சாறு எடுக்க அறுகம்புல்லை பழத்துடன் சேர்த்துப் பிசைந்து வைக்க வாழைப்பழச் சாறு தனியாக இறங்கும்.

ஓட்டுப்புல் இலையை ஒரு கைப்பிடி அளவு எடுத்து மூன்று மிளகு சேர்த்து அரைத்துக் கலக்கி வற்றவைத்துக் குடிக்கச் சூரம் நீங்கும்.

குச்சி குத்திச் சீழ் பிடித்த புண்ணிற்குச் சுண்ணாம்பும், விளக்கெண்ணெயும் சேர்த்து நன்றாக அரைத்துத் திரிசெய்து புண்ணில் வைக்கப் புண் குணமாகும்.

மூச்சுப்பிடிப்பிற்கு முள்ளந்தண்டில் கீழிருந்து மேலாகப் பக்கவாட்டில் நீவினால் குணமாகும்.

பூண்டு ஒரு அரிசி, இஞ்சி, வெற்றிலை இவற்றைத் தாய்ப்பால் விட்டு அரைத்து இரண்டு துளி மூன்று வேளை கண்ணில் விட நாள்பட்ட சூரியா வர்த்தம் நீங்கும்.

இரைப்புடன் கூடிய சன்னிக்கு ஆடாதொடை, அறுபதாம் தழை, நொச்சி, வசம்பு, வேப்பெண்ணெய், பச்சைக் கற்பூரம் சேர்த்துக் காய்ச்சி எடுத்த தைலத்தை உள்ளுக்கும் ஒரு தேக்கரண்டி கொடுத்து மேலும் தேய்த்துவிடக் குணமாகும்.

அடிப்பட்ட நெஞ்சுவலிக்கு உளுந்து காயவைத்துப் பொடி செய்து முட்டை வெள்ளைக் கருவைச் சேர்த்துப் பற்றுப் போடக் குணமாகும்.

கண்ணில் குச்சி குத்தி அதனால் ஏற்படும், கூச்சம், இரத்தக்கட்டி ஆகியவற்றிற்கு அவித்த முட்டை, வெள்ளைக் கருவை இளஞ்சூட்டில் கண்ணில் வைத்து இரவில் கட்டிக் காலையில் எடுக்கக் குமணமாகும்.

வயிற்றுக் கடுப்புக்குத் தேயிலைக் கசாயத்தில் வெள்ளைக் கருவைக் கலந்து குடிக்க வயிற்றுக் கடுப்புந் தீரும்.

பேதி அதிகமாகி அதனால் உடல் தளர்ந்து போனால் முழங்கையில் உள்ள நரம்பை ஐந்துமுறை நீவிவிட்டால் குணமாகும்.

செய்முறை:

தெரியப்பட்டு வந்து உள்ளது.

சதைத் திரட்சிக்கு முட்டை வெள்ளைக் கரு, உளுந்து பற்றுபோடக் குணமாகும்.

செவிச்சீழுக்கு ஊமத்தங்காயைச் சுட்டு வேப்பெண்ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டிக் காதிலிடக் குணமாகும்.

(பத்தியம்: கத்தரிக்காய் கூடாது)

பத்துவயதிற்குள் திடீரென ஏற்படும் இளம்பிள்ளை வாதத்திற்குக் காலையில் நோயாளி இருந்த மலத்தில் நோயாளியின் இருகாலையும் சரியாக வைத்து ஐந்து நிமிட நேரம் நிற்கவைத்துப் பின் சுத்தம் செய்துவிட வேண்டும். இதே முறையைத் தொடர்ந்து ஐந்து நாட்கள் செய்யக் குணமாகும்.

அசீரணக் கோளாறால் ஏற்படும் பேதிக்குக் காலை நீரில் நனைத்து இரும்பு கத்தியைப் பழுக்கக் காயவைத்ததைக் கால் பாதத்தில் மூன்று முறை தட்டக் குணமாகும்.

மார்பு சிலந்திக்குச் சுண்ணாம்பு, மிளகு இரண்யையும் கலந்து பூசக் குணமாகும்.

முகவாதத்தில் ஏற்படும் ஒவ்வாமைக்கு முகத்தைச் சிறுநீரினால் காலையில் நான்கு நாட்கள் கழுவத் தீரும்.

கர்ப்ப காலத்து வழக்கில் உள்ள மருத்துவ முறைகள்

மருத்துவர் சொ. சண்முகசுந்தரம், பி.ஏ.பி.எஸ்.எம்.எஸ்.,
உதவிபிரிவுரையாளர்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பழனி- 624 601

குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர் - முதுமொழி

அழியாத செல்வம் எது? செல்வத்துட் செல்வம்தான் உலகில் வாழ்ந்த அடிச்சுவடு இல்லாமல் மறைந்தே போகும். நம்நாட்டில் பிள்ளை இல்லாதவன் இல்லத்தில் விருந்துணவு கொள்வது கூடாது என்பது மரபு.

நாகரிக உலகத்தில் குடும்பக்கட்டுப்பாடு மூலம் சட்டங்களை வைத்து மனிதன் தன் செயல்களை நிறுத்தினாலும் வாழைமரத்தைப் போன்று ஒரே மகனைப் பெற்றாலும் மலடிக்கு ஒப்பாகும். அப்படி இருந்த போதிலும் மக்களைப் பெறுவதோடு ஒரு குடும்பத் தலைவனின் கடமை முடிந்துவிடாது.

தலைவனும் தலைவியும் காதலால் கருத்து ஒருமித்துக் கூடல் செய்து பெற்ற இன்பம் தன் குழந்தைப்பேறு. அதாவது தலைவி கருவுற்று மகிழ்வது. கருவுற்ற மாதம் முதல் கருச்சிதைவு ஏற்படாமல் பாதுகாத்து வருதலும் தலைவனின் கடமையாகும்.

ஒரு குற்றமற்ற தலைவனும் தலைவியும் கூடுவதால் பெற்றதே சிற்றின்பம். இதன் விளைவு மக்கள் பேறு.

மக்கட்பேறு இல்லாவிடில் வாழ்க்கை நரகம்தான். பேரின்ப வாழ்க்கைக்குச் சிற்றின்ப வாழ்க்கைதான் அடிப்படை. சிற்றின்பமும் அளவுக்கு மிஞ்சி விடலாகாது. வெறும் காம உணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டவர் கண்ட கண்ட இடத்தில் உறவு வைத்துத் தன் உடலையும் உள்ளத்தையும் பாழ்படுத்துக் கொண்டு வரும் கால சந்ததிகளைப் பாழ்படுத்தி மடிந்து போவார்கள். குற்றமற்ற குடும்ப வாழ்க்கைக்குக் கணவன் மனைவி இணைந்து வாழ்க்கை நடத்துவதே பேரின்ப வாழ்க்கைக்கு வழிகாட்டும் நல்வழியாகும்.

இனவிருத்தி செய்ய மட்டுமே கணவனும் மனைவியும் சிற்றின்பத்தில் ஈடுபடுவது தான் சிறப்பு என உணர்ந்து செயல்படுவதால் நீண்ட ஆயுளும் நோயற்ற திடமுள்ள மக்கட்பேறும் கிடைக்கும்.

கருவுற்றபோது காணும் நோய்களுக்கு மருத்துவ முறை

கருப்பையில் சிசுவிற்கு நோய் ஏற்படப் பல வழிகள் உண்டு. உணவுப் பக்குவ முறைகளையும் தக்க மருத்துவ முறைகளையும் கொண்டு கருச்சிதைவு ஏற்படாமல் பாதுகாக்க மருத்துவ முறைகளைப் பரம்பரையாகக் கையாண்டு வருவதினை ஈண்டுக் காண்போம்.

முதல் மாதம்

முதல் மாதம் பித்தம் அதிகரித்து அடிவயிற்றில் வேதனை உண்டாகும். முந்திரிக் கொட்டை போன்று இருக்கும். கருவுற்ற பிண்டம் அடிவயிறு வலியால் கருச்சிதைவும் ஏற்பட வழியுண்டு.

அதற்குத் தாமரைப்பூ 50 கிராம் சந்தனத்தூள் 15 கிராம் சேர்த்து நீர்விட்டு அரைத்துப் பசும்பாலில் (மூன்று நாட்கள்) கொடுக்க வயிற்றுவலி நீங்கிச் கருச்சிதைவு இல்லாமல் போகும்.

2ம் மாதம்

உடல் முழுதும் வாய்வு காரணமாக வலியும் வயிற்றில் வேதனையும் உண்டாகும். இதனால் கருச்சிதைவு காணலாம். இதற்குத் தாமரைப்பூ வெற்றிலை இரண்டும் சேர்த்து அரைத்துப் பாலில் (3 நாட்கள்) கொடுக்கத் தீரும்.

3ம் மாதம்

கருப்பையின் பலவீனத்தால் திடீரென வயிறு முறுக்கி வேதனை உண்டாகிக் கருச்சிதைவு ஏற்படும். இதற்குத் தாமரைப்பூ செங்கழுநீர் கிழங்கு அரைத்துப் பசும்பாலில் (3 நாட்கள்) கொடுக்கக் கருச்சிதைவு நின்று குழந்தை வயிற்றில் வளர ஆரம்பிக்கும்.

4ம் மாதம்

இம்மாதத்தில் கருப்பையினின்று இரத்தம் வெளியாவதுடன் வயிற்று வலி கண்டால் கருச்சிதைவு உண்டாகும் அறிகுறியாகும். இதற்கு நொச்சியிலை, கோரைக்கிழங்கு அரைத்துப் பசும்பாலில் கொடுக்கவும். அரசம்பட்டை, ஆலம்பட்டை கியாழம் வைத்துக் குங்குமப்பூ கலந்து கொடுக்கவும்.

5ம் மாதம்

5ம் மாதத்தில் அடிவயிறு வலி எந்தவிதமாக ஆரம்பித்தாலும் அல்லிதாமரைப்பூ விலாமிச்சுவேர் இரண்டையும் அரைத்து (3 நாட்கள்) கொடுக்கத் தீரும்.

6ம் மாதம்

இம்மாதத்தில் கர்ப்பிணிக்கு குடல்வலி, நீர்ச்சுருக்கு, கருப்பை அழற்சி, உளைவு தோன்றி வேதனை கொடுத்தால் கோரைக்கிழங்கு, முந்திருப்பருப்பு, பச்சைத்திப்பிலி சமஅளவு (15கிராம்) எடுத்தரைத்துப் பாலில் கொடுக்கத்தீரும்.

7ம் மாதம்

கம்மாறு வெற்றிலை, சந்தனம், பூவரசு வேர்ப்பட்டை சமஅளவு (15 கிராம்) அரைத்துப் பசும் பாலில் (3 நாள்) கொடுக்க 7ஆவது மாதத்தில் உண்டாகும் தோல் வியாதிகள் அடிவயிற்றுவலி ஆகியன தீரும்.

8ம் மாதம்

கைகால் அசதி, வீக்கம், நீர்ச்சுருக்கு காணும். பசி எடுக்காது. இது நீங்க கோரைக்கிழங்கு தாமரைப்பூ வகைக்கு (15 கிராம்) நீர்விட்டு அரைத்துப் பாலில் (3 நாட்கள்) கொடுக்கத் தீரும்.

9ம் மாதம்

9ம் மாதத்தில் நோய் கண்டால் அரசம்பட்டை, மருதம்பட்டை, நீர்விட்டு அரைத்துப் பசும்பாலில் குங்குமப்பூ கலந்து (3 நாட்கள்) கொடுக்கக் கருச்சிதைவு ஏற்படாமல் இருக்கும்.

10ம் மாதம்

பூரணமாகக் கரு வளர்ச்சி அடைந்திருக்கும் போது அடிவயிறு தளர்ந்து இறங்கவில்லையென்றால் நாட்டுச் சர்க்கரை, இலுப்பைப்பூ வகைக்கு 30 கிராம் அரைத்துப் பாலில் கொடுக்கச் சிக்கல் எதுவுமின்றிச் சுகப்பிரசவம் உண்டாகும்.

பிரசவ நேரத்தில் தொடர்ந்து வலி ஏற்பட மிளகு சீரகம் கியாழம் வைத்து கொடுக்க வலி ஏற்பட்டுச் சுகப் பிரசவம் உண்டாகும்.

இவ்வாறு கருவில் உள்ள பிண்டத்திற்குத் தாய் மூலம் சிகிச்சைஅளிக்க அதற்குரிய மூலிகைகள் கிடைக்காத போது முதலிலேயே மூலிகைகளைக் கொண்டு எண்ணெய் காய்ச்சி

நோய் கண்டாலும் காணாவிடினும் தாய்க்குக் கொடுத்து வந்தால் யாதொரு நோயும் ஏற்படாமல் சுகப்பிரசவம் ஆகும்.

சுத்தமான ஆமணக்கெண்ணெய் வேண்டிய அளவு வாணலியில் இட்டுச் சிறு தீயாகக் காய்ச்சி, சூடு ஏறிய பிறகு தாளிவேர் ஒரு பிடி அந்த எண்ணெயில் போட்டு, வேரை ஒடித்தால் ஒடியக் கூடிய பக்குவத்தில் காய்ச்சி இறக்கி அந்த எண்ணெயை ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் கொடுத்துவர (காலை மட்டுமே 30 மில்லி) இரண்டு அல்லது மூன்று தடவை பேதியாகும். நீர் ஆகாரம் கொடுக்க வேண்டும். குழந்தைக்கு எந்த நோயும் அணுகாது. தாய்க்கும் சுகப்பிரசவம் உண்டாகும்.

பிரசவம் ஆனபிறகு

குழந்தை பிறந்த உடன் சீறி அழுதால் விக்கல், பொருமல், முக்கல் போன்ற குறிகுணங்கள் உண்டாகும். இதற்குச் சிறு தேக்கு, திப்பிலி இரண்டையும் சூரணம் செய்து தேனில் கலந்து தாயின் முலை நுனியில் தடவிக் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்தால் பொருமல் சில்மிஷம் முதலியன தீரும்.

குழந்தை அழாமல் போனால்

அது உயிருடன் இருக்கிறதா? இறந்து விட்டதா? என்று தீர்மானிக்கக் குழந்தையின் கொப்பூழ்க் கொடியைக் கை விரலால் அழுத்திப் பார்க்க, நாடித்துடிப்பிருந்தால் உயிருடன் இருக்கிறது எனத் தீர்மானிக்கலாம். எனவே, கொப்பூழ்க் கொடியை அறுக்காமல் குழந்தைக்கு மூச்சு வரும் வழி ஒரு மெல்லிய வெள்ளைத் துணியை விரலில் சுற்றிக்கொண்டு வாய், தொண்டை ஆகிய இடங்களில் உள்ள சளி, மாவு அழுக்குகளைத் துடைத்துவிட வேண்டும். பிறகு வேறு ஒரு துணியைக் கொண்டு உடம்பு முழுவதும் தேய்த்துச் சூடாக்க வேண்டும்.

மூச்சு இல்லையானால் உடனே துணியில் நவச்சாரத்தைத் தடவி மெலிதாகத் திரித்து மூக்கில் விட்டு எடுக்க மூச்சு திக்கு முக்காடி வெளிவர ஆரம்பிக்கும். இப்படி மூச்சு விட்டுச் சிசு அழ ஆரம்பித்ததும் கொப்பூழில் நாடித்துடிப்பு அடங்கி விடும். நாடித்துடிப்பு அடங்கியபிறகு தான் கொப்பூழ்க்கொடியை அறுக்கவேண்டும். இப்படி அனேக முறைகள் நமது நாட்டில் இன்றும் பழக்கத்தில் உள்ளன.

குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டும் தாய் முதலில் வாயைக் கட்ட வேண்டும். அதனால்தான் வாயைக் கட்டினவளுக்குப் பிள்ளை, வயிற்றைக் கட்டினவளுக்குக் கணவன் என்னும் முதுமொழி உண்டாயிற்று. குழந்தைகளுக்குக் காணும் பிணிகள் எண்ணிலடங்கா.

வழக்கில் இன்னும் பல முறைகள் உள்ளன. வடஆற்காடு மாவட்டத்துக் கிராமங்களில் பிரசவ சிகிச்சை முறைகள் இன்னும் ஆராயப்படவேண்டிய நிலையில் அதிகம் உள்ளன. மேலே குறிப்பிட்ட முறை மருத்துவ தாதிகள் (கிராமத்தில் பரம்பரையாக உள்ளவர்கள்) மூலம் செவி வழியாகக் கிடைத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சித்த மருத்துவ வளர்ச்சிக்குச் சில சீரிய கருத்துக்கள்

டாக்டர் தே. ஜேம்ல் தேவ கமல அருமைராஜ் எம்.ஏ., எம்.பில்., எஸ்.எம்.பி., பிஎச். டி.,
டாக்டர் தே. ஞானதாஸ் எம்.ஏ., பி.ஐ.எம்., எம்.டி.,

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தகுடி என்று பாராட்டிப் போற்றிப் புகழப்படும் தமிழினத்திற்கே உரியதான மருத்துவமே இச் சித்த மருத்துவம். இம்மருத்துவம் இடைக்காலத்தில் ஆங்கிலேயர்களால் அமுக்கப்பட்டபின் நவீன மருத்துவம் என்ற நவநாகரீக நங்கையை நடமாட விட்டார்கள். இருப்பினும் ஒரு சில சான்றோர்குலப் பெருந்தகைகளாலும் மன்னர்களாலும் போற்றிப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் காலஞ்சென்ற தமிழக முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின் பேராதரவாலும் பெருந்தகை பேராசிரியர் அன்பழகன் அவர்களின் அயராத உழைப்பாலும் இம்மருத்துவம் இன்று மறுபடியும் தன்னுடைய சீநோடும் சிறப்போடும் பதினாறு வயது மங்கையைப் போல நடை போடுகிறது.

இம்மருத்துவத்தின் வளர்ச்சியைக் குறித்துச் சிந்தித்து, பெருந்தகைப் பேராசிரியர் அவர்களின் அறிவுத் திண்மைக்கு ஈடு இணையாகக் கருத்துக்கள் கூற இயலாது எனினும் சித்த மருத்துவத்தின்பால் கொண்ட மாளாக்காதலால் மீளாதிருக் கின்ற நாங்கள் சில கருத்துக்களைக் கூற விழைகின்றோம் இவண்.

1. ஏடுகளை நூல்வடிவாக்கல்

1. பாரம்பரிய சித்த மருத்துவர்களிடமுள்ள அனுபவமுறைச் சுவடிகளை நூல்வடிவாக்கி அதைச் சித்த மருத்துவ மாணவர்கள் பயில வகை செய்தல். அவ்வாறு ஏடுகளைப் பெறும்போது அவர்களை உற்சாகப் படுத்தும் வகையில் சிறு மானியத் தொகை வழங்குதல்.

2. பாரம்பரிய சித்த மருத்துவர்களைக் கொண்டு அவர்களது அனுபவத்தால் பெற்ற கண்டுபிடிப்புகளை மாணவர்களுக்கு எடுத்துக்கூற வகை செய்தல்.

3. நமது மருத்துவத்தில் கூறப்படுகின்ற மருந்துசெய் முறைகளைத் திறமை வாய்ந்தவர்களைக் கொண்டு செய்முறையோடு கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க முயலுதல்.

2. மூலப் பொருட்கள்

சித்த மருத்துவத்தில் மூலிகைகள், கார சாரங்கள், உபசரங்கள், பாடாணங்கள், சீவராசிகள் போன்ற பலவகையான பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவைகளில் குறிப்பாக மூலிகைகளை எடுத்துக்கொண்டால் அவற்றின் வேர், தண்டு, இலை, பூ, பிஞ்சு, காய், கனி இவைகள் பயன்படுத்தப்படுகின்றன. எனவே நமது அரசு மூலிகைப் பண்ணைகளை உருவாக்கி அதன்வழி மூலப்பொருட்களான பச்சிலைகள் சித்த மருத்துவர்களுக்கு எளிதில் கிடைக்க வகை செய்தல்.

3. நீர்வகைகள்

ஆற்றுநீர், ஊற்றுநீர், அருவிநீர், சுனைநீர், குளத்துநீர், நண்டுக்குழி நீர், கடல்நீர், காடிநீர், கழுதைநீர், ஆட்டுநீர்,

மாட்டுநீர், குதிரைநீர், ஈனாப்பசுவின் நீர், மனிதநீர் போன்ற பலவகையான நீர்வகைகளைக் கொண்டும் மருந்துகள் தயாரிக்கப் படுவதால் அவைகளின் தனிக்குணங்களை ஆய்வு செய்து வெளிக்கொணர முற்படுதல்.

4. அபின், கஞ்சா, கள்ளு, சாராயம்

சித்த மருத்துவத்தில் பல மருந்துகளைக் கள்ளு, சாராயம் (புகைநீர்) போன்றவற்றின் அனுபானத்தில் கொடுக்கக் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக அன்னபேதிச் செந்தூரத்தைக் கள்ளில் அனுபானித்துக் கொடுக்க இரும்புச்சத்து குறைவினால் ஏற்படும் பாண்டுநோய் மாறும். இவ்வாறே சாராயத்திற்குக் காய்ச்சல் வாற்று, மாட்டுவால் வாற்று போன்றவற்றைக் கொள்ளலாம்.

அபின், கஞ்சா போன்ற பொருட்கள் சித்த மருத்துவத்தில் ஏராளமாக எடுத்தாளப்பட்டிருப்பினும் அரசு விடுத்துள்ள தடைகளால் இன்று அவைகள் பயன்படுத்தப்படாது முடக்கப்பட்டுள்ளன. (கட்டுவாதிக் குளிகை) நவீன மருத்துவத்தில் அபினிலிருந்து எடுக்கப்படுகின்ற ஏராளமான சத்துக்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்காலத்தில் வந்த மருத்துவத்திற்கு இவைகளைப் பயன்படுத்த அனுமதித்தும் பழங்காலத்திலிருந்தே இருந்து வருகின்ற நம்முடைய மருத்துவத்திற்குத் தடை செய்திருப்பது நமது மருத்துவத்தின் வளர்ச்சியைத் தடை செய்வதேயாம். எனவே மாண்புமிகு டாக்டர் கலைஞரின் தலைமை ஏற்றுள்ள அரசு இதற்கு அதிக கவனஞ் செய்யத் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

5. உபகரணங்கள்

மருந்து செய்வதற்கேற்ற நவீன உபகரணங்களான வாலை, தைலம் இறக்கும் கருவி இவைகளை அரசு நிறுவனங்கள் வழி மருத்துவர்களுக்கு வழங்க வகை செய்தல்.

6. மருந்துகளை நவீனப்படுத்துதல்

மருந்துகளை நவீனப் படுத்துவதன் மூலம் அளவைக் குறைத்து அதனுடைய தன்மையையும் வீரியத்தையும் கூட்டவியலும். குறிப்பாக அதனுடைய மொத்த சத்தினை(Total extract) எடுத்து அதில் சிறிய அளவு நோயாளிகளுக்கு வழங்குதலாகும். இதன்மூலம் சுமார் ஐந்து கிராம் அளவு மருந்தை நூறு மில்லிகிராம் அளவாக்கி வழங்குதல். இவ்வாறு செய்வதன் மூலம் நோயின் தன்மையை எளிதாக மாற்றமுடியும். மேலும் உள் மருந்தாய் வழங்கப்படும் சில தைலங்களை மாத்திரைகளாக்கி (Oil capsules) வழங்குதல். அதோடு குடிநீராக வழங்கப்படும் மருந்துகளிலுள்ள சத்தை எடுத்துச் சிறு சிறு மாத்திரைகளாய் மாற்றி வழங்க வகை செய்தல்.

7. சீவராசிகள்

சித்த மருத்துவத்தில் கூறப்பட்டுள்ள சீவராசிகளில் வனத்தில் வாழ்கின்றவைகளான உடும்பு, காட்டுப்புறா, காடை, கௌதாரி, நல்லபாம்பு, மலைப்பாம்பு, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, காட்டு முயல், முள்ளெலி போன்றவைகள் மருத்துவத்திற்குத் தங்கு தடையின்றிக் கிடைக்க நமது அரசு வகை செய்தல். உதாரணமாக உடும்பு லேகியம் போன்ற உயரிய மருந்துகள் பிணிகளைப் போக்குவதோடு உடல் வலுவையும் ஊட்டுகிறது.

8. கொம்புகள், பல்

மான்கொம்பு, கிருஷ்ண மிருகக் கொம்பு, எருமைக் கொம்பு, மாட்டுக்கொம்பு, காண்டா மிருகக் கொம்பு, யானைக் கொம்பு, பன்றித் தேற்றை இது போன்ற கொம்பு வகைகள் நமது மருத்துவத்தில் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகின்றன. உதாரணமாக மூன்று நவீன ஆய்வின் மூலமாய் மான்கொம்பு பற்பம் இருதய நோய்க்கு மிகவும் சிறந்த மருந்தென ரஷ்ய ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

யானையின் பல்லைத் தாய்ப்பாலில் உரைத்து நெற்றியில் பூசக் கொடிய தலைவலியும் கும்பிட்டு ஓடும். இம்முறை குமரி மாவட்டத்தில் சிறப்பாகக் கையாளப்பட்டு வருகிறது. இவைகள் மருத்துவத்திற்குக் கிடைக்க ஆவன செய்தல்.

9. வர்மம் ஒடிவு, முறிவு.

குமரி மாவட்டத்தில் சித்த மருத்துவத்தின் தனிப்பெறும் பங்கினைப் பெற்றிருக்கும் வர்மம், ஒடிவு, முறிவு இவற்றிற்குச் சிறந்த முறையில் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. இச்சிகிச்சை வடபகுதியில் அதிகமாகக் கையாளப்படவில்லை. இந்த மருத்துவமுறையும் குமரி மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரிடமே சிறப்பாக வழக்கில் காணப்படுகிறது. இக்கலை தமிழகம் எங்கும் பயன்படும் வகையில் வளர்க்கத் தனி ஒரு ஆய்வுமையம் அமைத்தல்.

வர்மம், ஒடிவு, முறிவு இவைகளுக்கென ஏராளமான நூல்கள் இருந்தபோதும் ஒரு நூலைக் கூட (Drugs and Cosemetics act) என்ற சட்டப் புத்தகத்தில் காணப்படும் புத்தகப் பட்டியலில் சேர்க்காதது மிகவும் வருத்தத்திற்குரியதே ஆகும். அதைப் பரிசீலிக்கும்படி பெருந்தகைப் பேராசிரியர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

10. கல்விச் சுற்றுலா

பாரம்பரிய மருத்துவர்கள், மருத்துவ மனைகள், நவீனப் படுத்தப்பட்ட மருந்துசெய் நிலையங்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று மருத்துவ முறைகளைப் பற்றியும் மருந்துகளைப் பற்றியும் குறிகுணங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள மாணவர்களுக்கு அடிக்கடி கல்விச் சுற்றுலா அமைத்தல்.

11. கருத்தரங்குகள்

சித்த மருத்துவத்தை முன்னேற்றுவதற்காகச் சித்த மருத்துவர்கள் இரண்டு மாதங்களுக் கொருமுறையாவது கருத்தரங்குகள் நடத்தி உற்சாகமாகக் கலந்து கொள்ள வகை செய்தல். இதன் வாயிலாகச் சித்த மருத்துவர்களுக்கிடையே உள்ள அனுபவங்கள் நோய்க் கணிப்புகள், குறிப்பிட்ட நோய்களுக்கு வழங்கப்படும் குறிப்பிட்ட மருந்துகள் ஆகியவைகளைப் பற்றிக் கலந்துரையாட முயலுதல்.

12. ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மையம்

சித்த மருந்துகளின் தன்மைகளையும் அதன் நச்சுத் தன்மைகளையும் மருந்துகளின் பயன்களையும் வெளிக் கொணரும் பொருட்டு ஒரு ஒருங்கிணைந்த ஆராய்சி மையம் அமைக்கப்படுதல் வேண்டும். இதில் சித்த மருத்துவர்களும் நவீன மருத்துவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வழி செய்தல். சித்த மருத்துவத்தின் வர்மக் கலையையும் சீனாவில் அக்குப் பஞ்சர் முறையையும் ஒப்பிடுதல் மிகவும் அவசியம். ஏனெனில் இவற்றினிடையே ஏராள ஒற்றுமைகள் உள்ளன.

13. நிதி உதவி

சித்த மருத்துவ ஆராய்ச்சிக்கா அதிகமாக நிதியுதவிகள் மத்திய அரசும் மாநில அரசும் வழங்குதல்

14. அறிவர் பட்டம் (Ph. D.)

சித்த மருத்துவத்தில் அறிவர் பட்டம் பெருவதற்கு வேண்டி ஆய்வுகள் மேற்கொள்ளப் பல்கலைக் கழகங்களிலுள்ள சட்டதிட்டங்களை எளிதாக்குதல். மேலும் மாணவர்களையும் மருத்துவர்களையும் அறிவர் பட்டம் பெற உற்சாகப்படுத்தி ஊக்குவித்தல்.

15. சித்த மருத்துவத்தைச் சர்வதேச அளவில் உயர்த்துதல்

சீனாவின் அக்குப் பஞ்சர் போன்றும் இந்தியாவின் ஆயுர்வேதத்தைப் போன்றும் சித்தமருத்துவத்தைச் சர்வதேச அளவில் உயர்த்த முற்படல். அதற்காகச் சித்த மருத்துவ நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல், பல்வேறு நாட்டின் பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய வழிகளைக் காணல்.

16. மூலிகை ஆராய்ச்சி நிலையம்

இந்தியாவிலேயே மத்தியப் பிரதேச மாநிலத்திலுள்ள Central Indian Medicinal Plants Organisations என்பதைப் போன்று தமிழகத்திலும் ஒரு மையம் நிறுவுதல். மேலும் சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் ஒன்றினை ஏற்படுத்துதல். இதனால் மருந்துகளின் தரத்தை உயர்த்துவதோடு கலப்படங்களைத் தவிர்க்கவும் இயலும்.

17. போலி விளம்பரங்கள்

சித்த மருந்துகள் பற்றியும் சித்த மருத்துவர்களைப் பற்றியும் வருகின்ற போலி விளம்பரங்களை அரசு உடனடியாகத் தடை செய்ய வகை செய்தல்.

18. மருத்துவ இதழ்

சித்த மருத்துவத்திற்கென மருத்துவ மாத இதழோ அல்லது காலாண்டிதழோ ஒன்று உருவாக்கிப் பட்டம்பெற்ற மருத்துவர் ஆசிரியர்குழு ஒன்று நிறுவி அதன் வழிச் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு வகை செய்வது.

இந்த மருத்துவ இதழ் வாயிலாய் ஆய்வுக்கட்டுரைகள், அனுபவ மருந்துகள், மத்திய ஆய்வுக் கூடத்தில் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகள், புதிய மருந்துகள் போன்றவைகளை வெளிக் கொணர்வது.

19. ஆரோக்கிய வாழ்விற்குச் சித்தர் கொள்கை

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் பொன் மொழிக்கேற்பச் சித்தர்கள் காயத்தைக் கல்லாக்க வேண்டிக் காயகல்பமென்ற கொள்கையை உலகிற்குக் கூறிப் போந்தனர். மேலும் அட்டமா சித்திகள் அட்டாங்க யோகங்கள் என்பவற்றின் மூலமாய் உணர்வை வளர்ப்பதைவிட உள்ளத்தை வளர்ப்பது எப்படி என்ற தத்துவங்களை விளக்கியுள்ளார்.

சித்த மருத்துவம் என்றாலே ஆண்மை பெருக்கி என்றதொரு எண்ணம் மக்கள் மத்தியில் நிலவுகிறது. இது ஆண்மை பெருக்கி மட்டும் அல்ல. ஆன்மா பெருக்கி என்பதற்கே முதலிடம் கொடுத்துத் திருமூலர் தம் திருமந்திரத்தில் கூறுகிறார். சித்த மருத்துவம் மக்களின் நன்னடத்தையிலும் அக்கரை கொண்டுள்ளது என்பதற்கு இதுவே சான்று.

எனவே நாங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையும் பெருந்தகைப் பேராசிரியர் அன்பழகன் அவர்களையும் தஞ்சை சரசுவதிமகால் இயக்குநர் அவர்களையும் சித்த மருத்துவக் கல்லூரிகளின் இயக்குநர் சுகாதார மந்திரி அவர்களையும் சித்த மருத்துவக் கல்லூரி முதல்வர்களையும் பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம் மானிடருக்காக வழங்கப்பட்ட இம்மருந்துவம் அதன் சீரிளமை குன்றாது என்றும் இளமைப் பொலிவுடன் விளங்க வழி காணவேண்டும் என்பதே.

அனைத்திற்கும் மேலாய் பொறுமையை வளர்ப்போம்!
பொறாமையைத் தவிர்ப்போம்!!

திணையும் நோய் நிலையும்

ச.ஸ்ரீவாணி, பொ. விசயலெட்சுமி,
இறுதியாண்டு, பி.எஸ்.எம்.எஸ்.,
பேராசிரியை க. இராசேசுவரி (பழனி)

முன்னுரை

அண்டத்திலுள்ளதே பிண்டம்
பிண்டத்திலுள்ளதே அண்டம்
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே

என்ற வாக்கின் உண்மையை அறியாத சித்தமருத்துவரும் உளரோ?

நிலத்தியல்பால் நீர்திரிந்தற் றாகும் மாந்தர்தம்
இனத்தியல் பதாகும் அறிவு

இக்கருத்துதான் எத்துணை உண்மையானது. இந்தப் புறச்சூழலில் தான் எத்தனை மாறுபாடுகள். உடலை அமைப்பதும், உலகை அமைப்பதும் ஐந்து பெரும் பூதங்களாய் இருக்கையில் புறச்சூழலின் மாற்றங்கள் நம் உடலை எங்ஙனம் பாதிக்காமல் இருக்கும்! சுற்றுப் புறச் சூழலென்றும் மாசுக் கட்டுப்பாடு என்றும் எத்துனையோ கூக்குரல்களை நம்மைச் சுற்றிக் கேட்கிறோம். இவை பழமையான அறிவை நமக்குத் தந்த தொல்காப்பியர் அகத்திணையியலில் சொல்லப்பட்டு இருக்கிறது.

Epidemiology என்ற மருத்துவக் கல்வியானது அண்மைக் காலங்களில்தான் சிறப்பாக வளர்ந்து வருகிறது. எப்பகுதியில் எந்நோய் வருமென்றும் எவ்வயதினர்க்கு எந்நோய் மிகுமென்றும் ஆராய்கின்ற இவ்வறிவியலானது தமிழர் வாழ்வில் பன்னெடுங் காலத்திற்கு முந்தையது.

'The more you look back
More you leap forward'

என்பதுபோல் காலச்சக்கரத்தில் பின்னோக்கிச் சென்று இவ்வைந்து பிரிவுகளையும், அவை பதினான்கு கருப்பொருளைக் கொண்டிருந்தாலும், அத்திணைவாழ் மக்கள் தொழில், தொழில் காரண நோயையும், நில அமைப்பையும் நில அமைப்புக் காரணநோய்களை ஆராய்வதுடன், இன்றைய காலம்வரை எத்துணைத் தொடர்புடையது என்பதைக் காண்பதே இம்மருத்துவம் மேலும் வளர்ச்சியடையக் காரணமாகும்.

ஒவ்வொரு மருத்துவ மாணவனும் திணையைப் பற்றி அறிய வேண்டிய அவசியம்

உணவே மருந்து
மருந்தே உணவு, எனவே

1. ஒவ்வொரு நிலத்திலும் கிடைக்கும் உணவு, மருந்துப் பொருட்களைத் தெரிந்து கொள்ளவும்.

2. அந்த நிலங்களில் வசிப்பவர்க்கு வரும் நோய்கள்

3. அந்த நிலைகளில் வளரும் தாவரப் பொருட்கள்

4. மருந்துகள் சாப்பிடச் சிறந்த நிலம்

5. அந்த நிலத்திலுள்ள நீரின் தன்மையைத் திணைகளைக் கற்பதின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

திணைகளும் புவியியல் அமைப்புகளும் எல்லா உயிர்களும் பூத்தற்கிடமாயுள்ள பூமி, தரை, மண், இடம் நிலம் என வழங்கப்படும் திணைகளின் நிலம் முதற் பொருளாக இருப்பினும் உரிப்பொருளும், கருப்பொருளும் உண்டு. நாம் இக்கட்டுரையில் நிலத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு நோய்நிலை மாறுபாடுகளை ஆய்கிறோம்.

குறிஞ்சி
மலையும் மலைசார்ந்த இடமும்

எனவே இங்கு ஒளியினைச் சேனையாகக் கொண்ட சூரியனின் கதிர் நுழைய முடியாததால் அங்கு வரும் நோய்கள்

குறிஞ்சி வருநிலத்திற் கொற்றுமுண்டி ரத்தம்
உறிஞ்சி வருசுரமு முண்டாம் - அறிஞருரைக்
கையமே தங்குதரத் தாமைவல்லை யுங்கதிக்கும்
ஐயமே தங்கு மறி . பதார்த்த குண சிந்தாமணி

கபத்திற்கு இருப்பிடமான குறிஞ்சி நிலத்தில் வளரும் மூலிகைகளுக்கு நோய்களைப் போக்கும் வன்மையுண்டு. மேலும் அங்கு வசிப்பவர்க்கு

இரத்தத்தை உறிஞ்சுகின்ற சுரம்

வெளுப்பு, காமாலை, ஆமைக்கட்டி, வல்லைக்கட்டி, கபநோய்கள் ஏற்படுமென்று கூறப்பட்டுள்ளது.

இன்றைய உடலியங்கியல் வல்லுநர்கள், செவ்விலத்தினால் ஏற்றுச் சொல்லப்படுகின்ற உயிர்க்காற்று குறைகின்ற காரணத்தால் குருதி விலங்கல் அதிகமாகத் தோன்றும். இவை அதிகமான வேகத்தில் தோன்றுகின்றதனால் பலவிலங்கள் முழுவளர்ச்சி பெறாத விலங்காக அமையும். இதன் காரணமாக அவை விரைவில் சிதையும். இந்தச் சிதைவை ஈடுசெய்ய மண்ணீரல் அதிக அளவில் வேலை செய்யும். இக்காரணத்தினால் மண்ணீரல் வீங்கும் என்பர். இதனையே நம் முன்னோர்கள்,

வல்லைக்கட்டி என்றனர். குறிஞ்சி நிலம் சமவெளியைவிட உயரத்தில் இருப்பதால் இங்கு உயிர்க்காற்றுக் குறைவு ஏற்படும். ஆமைக்கட்டி (Cancer of the stomach, acid Peptic disease)

மலைவாழ் மக்களில் பெரும்பான்மையோர் மதுவும் புகைப்பானும் பயன்படுத்தும் காரணத்தால் இவர்களிடம் ஆமாசயக் கட்டிகள் காணப்படுகின்றன என்பது தற்போதைய ஆய்வுகள் மூலம் தெளிவாகிறது.

கபநோய்கள்

மூச்சுத்திணறல் (Asthma) புப்புசக் கோளாறுகள் (Pneumonia) மலைப்பகுதிகளில் பிற பகுதிகளைக் காட்டிலும் அதிகமாகக் காணப்படுகிறது.

வீதன கோள வீக்கம் (Goiter)

மலைப் பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படுவதால் தான் தற்போது வீதனகோள நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இப்பகுதியில் செயல்படுத்தப்படுகிறது.

மூட்டுகளை மிதமிஞ்சிச் செயல்படுத்துவதால் மூட்டுவலி காணப்படுகிறது.

முல்லை
காடும் காடு சார்ந்த இடமும்

எருமை, பசு, ஆடு இவைகளின் கூட்டத்தையுடையது. இங்கு வரும் நோய்கள்

> முல்லை நிலத்தமைய முரிநிரை மேவினுமவ்
> வெல்லை நிலைத்தபித்த
> மெங்குறுங்காண்-அல்லையெனின்
> வாதமொழி யாதனுண் மன்னு மனவவழிநோய்ப்
> பேதமொழி யாதறையப் பின்பு, ப.கு.சி.

முல்லை நிலத்தில் வசிப்பவர்க்குப் பெரும்பாலும் பித்தநோய் அதிகரித்துக் காணும். அப்பித்தத்தோடு வாதமும் பொருந்தும். பித்த நோய்களில் முக்கியமாகச் சுரம், தொண்டைநோய், வாந்தி, கழிச்சல், கல்லீரல் நோய் ஆகும். இவற்றைத் தற்காலக் கூற்றுப்படி பார்க்கும்போது முல்லை நிலத்தினர்க்குக் கால்நடைகளைப் பராமரிப்பதே முக்கிய தொழிலாகும். இதனால் கால்நடைகள் மிகுதியும் வளர்க்கப்படுவதால் அவைகளுக்குத் தோன்றும்-Anthrax எனும் நோய் மனிதர்களுக்கும் வருகிறது.

Anthrax நோய்க்கிருமிகள் இந்நோயுள்ள கால்நடைகளில் தோலை விரிப்பாகவும், ஆடையாகவும் பயன்படுத்துவதாலும் இறந்த கால்நடைகளின் மாமிசத்தை உண்பதினாலும் அவற்றின் தோலினாலான பையினைக் குடிக்கும் நீரை நிரப்பிப் பயன்படுத்துவதாலும் இந்நோய் ஏற்படலாம்.

இந்நோய் குறிகுணம்: பித்தத்தின் இருப்பிடமான குருதியில் நச்சுத் தன்மையை உண்டாக்குகிறது. இதன் விளைவாகச் சுரம், தொண்டைநோய், அசீரணம், வாந்தி, கழிச்சல் உண்டாகும் என்று கூறப்படுகிறது.

Brucellosis இந்நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடையிலிருந்து கறந்தபாலை அப்படியே காய்ச்சாமல் உட்கொள்வதால் இந்நோய் வருகிறது. இந்நோயின் முக்கிய குறிகுணம் கல்லீரல் தாபிதமாகும். எனவே முல்லை நிலத்தினர்க்குப் பித்தநோய் அதிகரித்துக்காணும். இதற்குக் காரணமாக அந்நிலத்தினர் தொழில்முறை அமைகிறது.

நெய்தல்
கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதியும்

இங்குள்ளவர்கள் மீன்பிடித்தல், உப்புண்டாக்கல், கடலாடல் போன்ற தொழில்களைச் செய்வதாலும், சரியான சுகாதாரமின்மையாலும் அதாவது மீன் பிடிக்கும் வலையைத்

தோள்மீது போடுதல், அதை அப்படியே வீட்டில் வைத்திருத்தல் போன்ற சுகாதாரமற்ற செயல்களினால் இங்குள்ள மக்கள் அவதிப்படும் நோய்கள்.

நெய்தனில் மேலுவர்ப்பை நீங்காதுறினுமது
வெய்தனில மேதங்கு வீடாகும் - நொய்தன்
மருங்குடலை மிக்காக்கும் வல்லறுப்பை வீக்குங்
கருங்குடலைக் கீழிறக்குங் காண். ப.கு.சி.

இந்நிலம் மிகுந்த உப்பையகலாதிருந்தாலும், பித்தவாயு தங்குவதற்கு இடமாகும். அதில் வசிப்பவர்களுக்குத் தேகத்திலுள்ள நுட்ப இடங்களில் கபநீரானது பெருகித் தடித்தலையுண்டாக்குவது தவிர சீலிபாதரோகம், குடலண்ட விருத்தியையும் உடாக்கும்.

இங்கு நீர்த்தேக்கம் அதிகம் காணப்படுவதால் பாக்டீரியா வைரஸ் போன்ற நோய் நுண்கிருமிகளின் வளர்ச்சி அதிகமாக காணப்படுகிறது.

நீர்த்தேக்கம் அதிகமாகக் காணப்படுவதால் நோய்களை உண்டாக்கக் கூடிய கொசுக்களின் எண்ணிக்கை அபரிமிதமாக உள்ளது.

மலேரியா: நோயை உண்டாக்கக் கூடிய கொசுக்கள் கடிப்பதால் மலேரியா சுரத்தினால் மனிதன் தாக்கப்படுகிறான்.

உணவுப்பாதை மற்றும் சிரிமான உறுப்புக் கோளாறுகள்

தேங்கியுள்ள தூய்மையற்ற நீரை இங்குள்ளவர்கள் அருந்த நேரிடுவதால், அந்நீரிலுள்ள மலினங்கள், நோய்க்கிருமிகள், செரிமான நிகழ்ச்சிக்கு இடையூறாய் இருக்கிறது. இதனால் பெருங்கழிச்சல், நிணக்கழிச்சல், கடுப்புக் கழிச்சல், ஊழி என்ற வாந்தி பேதி நோய்

ஏற்படுகிறது. இதனால் மேலும் மனிதனின் உடலிலுள்ள இரசத்தாதுக்கள் குறைவதால் உடல் வன்மையற்று நோய் எதிர்ப்புத்தன்மை குறைகிறது.

பாலை

பாலைவனங்கள் நீறைந்த இடம்.

மண்ணில் வாழும் மக்கள் முதலான உயிர்கள் உயிரை மாய்த்துக் கொள்ளலாமா எனக்கருதும் அளவிற்கு வெயில் அதிகமாக இருக்கும். இந்நிலத்தைப் பற்றிப் பதார்த்த குண சிந்தாமணியில்

> பாலை நிலம்போற் படரைப் பிறப்பிக்க
> மேலை நிலமீயாது விரித்ததற்கு - வேலைநில
> முப்பிணிக்கு மில்லாம் முறையே யவற்றாலாம்
> எப்பிணிக்கு மில்லாம தெண்

இந்நிலம் துன்பந்தருதற்கிடமாயிருத்தல் மட்டுமே யில்லாமல், உலகில் கொல்லும் வாத பித்த கபங்களும் அவைகளால் முறையே ஏற்படும் மற்றெல்லாப் பிணிகளும் தோன்றும்.

இதில் தோன்றும் நோய்களை "மண் மற்றும் விதை" (Soild and Seed) என்று கூறலாம். அதாவது எவ்வாறு சமதளப்படுத்தப்பட்ட உறுதியான கல்தரையில் விதை போட்டால் முளைக்காதோ, அதேபோல் காயமாகிய நம் உடம்பைக் கற்பத்தினால் திடப்படுத்தி வைத்திருந்தால் கிருமி என்ற விதையைத் தூவினால், விதையினின்று செடி முளைக்காதது போல் கிருமியினின்று நோயும் வளராது. ஆனால் இங்கு காயத்தைக் கல்லாக்க எந்த வளமையும் செழுமையும் இல்லாததால் முக்குற்ற நோய்களும் முற்றுகையிடுகின்றன.

மழையின் வாசனையை அறியாத மண்ணில் மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் விளைச்சலும் இல்லை.

"உணவே மருந்து
மருந்தே உணவு" என்பது முன்னோர் வாக்கு
புறநானூற்றில் பசியைப் பிணியாகக்
கூறியிருக்கிறார்கள்.

பாலை நிலத்தில் நீர்வளம், மற்ற வளங்கள் இன்மையால் அங்குள்ள மக்கள் உடல்வன்மை குறைந்து ஒரு தொழிலையும் செய்ய முடியாதவர்களாயும், அதனால் வருமானத்திற்கு வழியின்றி ஏழ்மைநிலை அடைந்து பசிப்பிணியால் பாதிக்கப்படுகிறார்கள். பசித்தபின் புசிப்பதற்கு சத்துள்ள உணவு இல்லாததால் ஊட்டச்சத்துக் குறைந்து நோய் எதிர்ப்பு சக்தியை இழந்து உடலில் நோய் வந்து தொற்றுகிறது.

மாலைக்கண், ஸ்கர்வி, பெரிபெரி போன்ற உயிர்ச்சத்துக்கள் குறைவினால் இதுபோன்ற நோய்களும், புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்புண்டு.

இங்குள்ள மக்கள் விரைவில் திருமணம் செய்து, பெண் பிள்ளைகளின் கடமையை முடிக்கும் வழக்கத்தைக் கொண்டுள்ளதால் அதன் மூலம் சரியான உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி இல்லாத பெற்றோர்க்கு ஆரோக்கியமான குழந்தைகள் பிறக்க வாய்ப்பு ஏதுமில்லை.

புரதச்சத்து குறைவினால் சோபை, கணை போன்ற நோய்கள் ஏற்பட்டுக் குழந்தைகளின் வளர்ச்சி தடைபடுகிறது.

பசிவந்தால் பத்தும் பறந்து போகும். பதினான்கு வேகங்களில் ஒன்றான பசிக்கு புசிக்கவில்லையெனில் மனோரீதியான நோய்கள் பல வருவதற்கு வாய்ப்புகள் உண்டு. இந்த வளமற்ற நிலத்தினால் இறப்பு விகிதம் அதிகரிக்கிறது.

மருதம் - வயலும் வயல் சார்ந்த பகுதியும்

மருதநில நன்னீர் வளமொன்றைக் கொண்டே
பொருதநில மாதியநோய் போக்கும்
என்றதாலும்

நீரின் குணமெல்லாம் மண்ணின் குணமல்லால்
மற்றுமுண்டோ? என்றதாலும்

இந்நிலத்தில் நிலத்தின் காரணமாக நோய்கள் வர வாய்ப்புகள் இல்லை.

மருதநில நன்னீர் வளமொன்றைக் கொண்டே
பொருதநில மாதியநோய் போக்குங் - கருதநிலத்
தாறிரதஞ் சூழவருந்துவரென் றாற்பிணியெல்லே
ஏறிரதஞ் சூஞ்விக்கும் இல். ப.கு.சி.

இதன்மூலம் நீர்வளம் பொருந்திய இந்நிலத்தால் வாத, பித்த, கப நோய்கள் போகும்.

இந்நிலத்தின் ஆற்றுநீர் ஓட்டத்தில் இருப்பதாலும், சூரிய சந்திர கிரகணங்கள் நீரில் ஊடுவிப் பாய்வதாலும் பெரும்பாலான மலினங்கள் நீங்கிக் கிருமிகள் மடிகின்றன. எனவே,

நிலத்தின் வளமையின் காரணமாக அங்கு எல்லாவகைத் தாவரங்களும் கிடைப்பதால் மக்களுக்குக் கிடைக்கும் சரிவிகித உணவில் எவ்விதக் குறைபாடுகளும் இல்லை.

சமூகத்தின் நலனுக்கு அச்சமூகத்தின் பொருளாதாரந்தான் அடிப்படைக் காரணம். ஆனால் அந்நிலைமைக்கு இங்கு இடமில்லை.

மருத நிலத்தில் விளையும் மூலிகையே பெரும்பாலும் நாம் மருந்திற்குப் பயன்படுத்துகிறோம். இந்நிலமே மருந்து உண்பதற்கும் ஏற்ற நிலமாகக் கருதப்படுகிறது.

முடிவுரை

வருமுன் காப்போம் என்பதின்படி நோய் வருவதற்கு முன் அது தாக்காதவாறு உடலைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் கூறவேண்டும்.

இக்கட்டுரையில் இனி நிலத்தில் உண்டாகும் நோய்களைத் தடுக்கும் எளிய முறைகளைக் காண்போம்.

குறிஞ்சி

இங்கு வாழ்மக்களின் வாழ்க்கை மலையின் மீதே அமைந்துவிட்டது. அதை நம்மால் மாற்றமுடியாது. எனவே இவர்களுக்கு வரும் நோயைத் தடுக்க, முதலில் நாம் அங்கு மரங்களை வெட்டாமலேனும் இருக்க வேண்டும். இதன் மூலம் நாம் அங்கு காணும் உயிர்க்காற்றுப் பற்றாக்குறையை நீக்கலாம்.

வயிற்றுப்பிணியைப் போக்க மதுஒழிப்பையும், புகை பிடிக்கும் பழக்கத்தையும் நீக்க அறிவுறுத்த வேண்டும்.

குறிப்பாகக் காஷ்மீரில் உள்ளவர்கள் குளிர்காய்வதற்கு அடிவயிற்றில் நெருப்புச்சட்டியைக் கட்டிக்கொள்வார்கள். இதனால் வயிற்றுப்புற்று வர ஏதுவாகும். எனவே இம்முறை உகந்ததல்ல என நாம் அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

வீதனகோள வீக்கத்தைத் தடுக்க உணவில் அயோடின் கலந்த உப்பைச் சேர்த்துக்கொள்ளச் செய்ய வேண்டும்.

குளிர்ந்த நீரைக்குடிப்பது தவிர்த்து, சூடான நீரை அருந்திக் குளித்துவரக் கபப்பிணிகள் நீங்கும்.

முல்லை வாழ்மக்கள்.

கால்நடைகளைச் சுகாதார முறைப்படி வளர்க்கவும், அவைகளுக்கு நோய் வராமல் தடுக்கத் தடுப்பு மருந்துகளைக் கொடுக்கவும், செய்தால் மனிதர்களுக்கு நோய் வராமல் தடுக்கலாம். நோயுற்று இறந்த கால்நடைகளின் மாமிசம், தோல் முதலியவற்றைப் பயன்படுத்தாமல் அதிக ஆழத்தில் புதைந்து விட வேண்டும்.

நெய்தல் நில மக்கள்

அவர்கள் முதலில் உடல் தூய்மைகளையும் அவர்கள் பயன்படுத்தும் மீன் பிடிக்கும் வலையையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

நீர்த்தேக்கத்திலுள்ள கொடுக்களை அகற்றவும், நீரின் மாசுக்களைத் தடுக்கவும் மருந்துகளைத் தெளிக்க வேண்டும்.

நீரை நன்கு கொதிக்க வைத்து வடிகட்டி ஆறிய நீரை அருந்த வேண்டும். இதனால் வயிற்றுப் பிணிகளைத் தடுக்கலாம்.

பாலை

இயற்கை இங்கே அணுசரணையாக இல்லாவிட்டால் கூடச் செயற்கை முறையில் மருத்துவர்களாகிய நாம் இங்குள்ள குறைகளை நீக்க முயல வேண்டும். அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு அடிப்படைத் தேவைகள் எளிதில் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மக்களுக்கும் போதுமான அளவு சுகாதாரக் கல்வியைப் போதிக்க வேண்டும். இந்தக் கட்டுரை இதற்கு ஒரு முயற்சியாக அமைந்திருக்கிறது. நம் மருத்துவத்தில் கற்பம் என்ற மருத்துவமுறை உள்ளது. இதனை ஆராய்ந்து பார்த்துப் படித்தால் மேலும் பல உண்மைகள் வெளிவரலாம். ஐந்திணை ஒழுக்கங்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நேர்மை தமிழ்மக்கள் யாவரும் மனத்தகத்தே கொண்டு மகிழ்வடையும் ஒன்றாகும். எனவே வாழ்வின் இனிமை, அங்ஙனம் வாழப் பலநெறி, அவ்வாழ்விற்குரிய வளத்தையும் ஒருங்களிக்கத் திணையும் நோய்நிலையும் எனும் இக்கட்டுரை தூண்டுதலாய் அமைய வேண்டும் என்ற நோக்கத்தில் இக்கட்டுரையை முடித்துக் கொள்கிறோம்.

சித்த மருத்துவம்

மருத்துவர் மு. அல்லிமுத்து, எம்.டி.(சித்தா)
உதவிவிரிவுரையாளர்
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பழனி 624 601

முன்னுரை

சித்த வைத்தியம் என்பது மிகப் பழமையானது. எவ்வாறெனில் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி என்பது போலத் தமிழ் மக்களுடன் முதலில் தோன்றிய மருத்துவம் தமிழ் மருத்துவம் என்று போற்றப்படுகின்ற சித்த வைத்தியம் அத்தனைத் தொன்மையானது. சித்த வைத்தியம் எனப் பிரிவு பட்டு உயிருக்கும் உடலுக்கும் மருத்துவம் செய்யும் தனிச் சிறப்புடையது சித்த வைத்தியம் என்பது வெள்ளிடை மலை. பண்டைய நாட்களில் வாழ்ந்த தமிழ்க்குடி எவ்வாறு தங்கள் மொழியை வளர்த்ததோ அதே போன்றே தங்கள் நாகரீகம், தெய்வம், தமிழ் மருத்துவம் இவற்றையும் வளர்த்து வந்தது. சித்தன் வைத்தியம் என்று பிரிந்து முதல் சித்தனாகிய சிவனால் உலக மக்கள் நோய் நொடியின்றி நீண்ட நாள் வாழ்ந்து சிவத்தின் தத்துவத்தை அறிந்து அதனுடன் ஒன்றுபட வழங்கப்பட்ட வைத்தியம் சிவனால் படைக்கப்பட்ட இயற்கைப் பொருட்களைக் கொண்டே செய்யப்பட்ட மருந்துகளைக் கொண்டே நோய் தீர்க்கும் மருத்துவம் சித்த வைத்தியம். சித்தர் வைத்தியம் எனப் பிரிந்து சித்தர்கள் சிவனைப் போன்றே தெய்வமானவர்கள் வழிவந்த வைத்தியமாகிச் சித்த வைத்தியமாகியது. இதைப் பற்றிக் கூறுவதற்குச் சிற்றறிவு படைத்த என்னால் இயலாது. இருப்பினும் மிகச் சுருக்கமாகச் சொல்லி விளங்க வைக்க விரும்புகிறேன்.

சித்த வைத்தியத்தின் தோற்றம்

மனிதர்களாகிய நாம் இன்று ஆரோக்கிய நிலையைக் காப்பாற்றிக் கொண்டு வாழ்நாட்களை அபிவிருத்தி செய்வதற்கு ஆதாரமான சித்த வைத்திய நூல்கள் பரமசிவனால் உமையவளுக்கும் இவர்கள் தங்கள் செல்லக் குழந்தை தகப்பன் சாமி என்றும் தமிழ்க்கடவுள் என்றும் திருஆவினன் குடிச் சித்தன் என்றும் போற்றப்படும் முருகப் பெருமானுக்கும் அதன் பிறகு நந்திக்கும் அகஸ்தியருக்கும் மற்றுமுள்ள சித்தர்களுக்கும் மெய்ஞானத்தால் போதிக்கப் பட்ட வைத்தியம் சித்த வைத்தியம். இவ்வாறு தோன்றிய வைத்தியம் தமிழ்ச்சங்கங்கள் உள்ள நாட்களில் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் வளர்க்கப்பட்டு வந்திருக்கின்ற சிறந்த வைத்தியம். தமிழர்கள் தோன்றி வளர்ந்து தமிழ் வளர்த்த நாடுகளில் மட்டுமே வளர்ந்த வைத்தியம் சித்த வைத்தியம். இதில் தேர்ச்சி பெற்றவர்கள் அனைவருமே திராவிட பரம்பரையைச் சார்ந்தவர்களே. ஆகவே இவ்வைத்தியம் வேறெங்கிருந்தும் கொண்டு வரப்பட வில்லை என்பது உறுதியாகிறது.

சித்த வைத்திய முறை

மனிதர்கள் நோய்களைத் தீர்க்க வேண்டிச் சித்தர் முறையில் வைப்புச் சரக்குநூல் உதவியைக் கொண்டு தயாரிக்கும் மருந்துகளும் முறைகளுமாகும். இவ்வாறு செய்யப்படும் மருந்துகள் மக்களின் நோயை நீக்குதல் மட்டுமல்லாமல் அவர்களின் மனத்திற்கும் சுகத்தைக் கொடுக்கிறது. செய்பாக நூல்கள் பலவகையில் பரவி இவற்றின் தொகையும் பல்வேறாகிப் பெருகியிருக்கிறது. உலகம் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது போல் மனித உடலும் பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்டது. ஆகவே உலகத்தில் ஏற்படுகின்ற மாற்றம் நமது உடலிலும் ஏற்படுகின்றது. அவைகளைச் சரிப்படுத்துவதற்காக

பஞ்சபூதங்களின் அடிப்படையினால் ஆன மருந்துகளை வழங்குவது நமது சித்த வைத்தியம். மருந்திலுள்ள பூதஅணுக்களும் உடலில் உள்ள பூத அணுக்களும் இணைந்து சீவாணுக்களாகின்றன. இச்சீவாணுக்களே தங்களுக்குள்ள தொழிலியற்றும் சக்தியால் உடம்பிற்கும் மனதிற்கும் வேண்டிய அம்சங்களைக் கொடுக்க ஏதுவாகிறது. இதுபோன்றே தொண்ணூற்றாறு தத்துவங்களும் நமது உடம்பில் அமைந்துள்ளன.

முக்குற்றம் முத்தோடமென்று சொல்லுகின்ற உயிர்த்தாதுக்கள் மூன்றும் முக்கியமானவையே. மனிதனுக்குள் சூக்கும சக்திகள் மூளையிலும் வீணாத் தண்டின் கயிறுக்குள்ளும் அமைந்திருக்கும். இதுவே மனிதனின் பிராண சக்தியாகும். இத்துடன் பித்தமும் கபமும் சேர்ந்தால் முத்தோடமெனப்படும். உடலுக்கு மிக முக்கியமான இவற்றைக் கொண்டே அமைந்தது சித்த வைத்திய முறைமையாகும்.

நோய்கள்

சித்தர்களின் முறைப்படி மூன்று வித அறிவு பேதங்களும் ஐம்புலக் கருவிகளையும் பனிரெண்டு விதக் தேகக் கூறுபாடுகளைப் பெற்றுள்ள விந்து நாதத்தையும், ஜீரணித்த சத்துக்களையும் தாக்குதலினால் அவைகளின் சகசமான தொழிலியற்றும் செயல்கள் மாறுபடும். இதுவே வியாதியாகும். காலம், அறிவு, புலன் இவைகள் தொழிலியற்றும் செய்கைகளில் குறைவின்றி இருந்தால் அதையே ஆரோக்கியம் என்றும் கூறப்படும். நோயென்பது உடம்பையடுத்த தொழிலின் பேதத்தினால் மாத்திரமல்ல. மனோவிகர்ப்பத்தையும் சார்ந்ததாகும். பொதுவாகத் தேகவியாதி, மனோவியாதி, என இரண்டு விதமாகப் பிரிக்கப்படும். இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை. இதற்குத் தேகத்தின் கூறுபாடே ஆதாரமாகவுள்ளது.

அடுத்துக் கர்ம வியாதிகளைப் பற்றிய விளக்கம் கூறப்புகின் அடுத்த சன்மத்தின் தீக்கரும காரணத்தினால் சூக்கும தேகத்திற்கு ஏற்படும் ஓர் கெடுதி இத்தகைய எல்லா நோய்களும் பூர்வ சன்மக் கரும காரணத்தினால் ஏற்பட்டது. இதில் சிலது தெய்வக் குற்றத்தினாலும் சிலது இயற்கையான பாவத்தினாலும் ஏற்பட்டது. இக்காரணங்கள் காலப் போக்கினால் தான் நிவர்த்தியாகும். இயற்கையாலும், கிரக சம்பந்தத்தினாலும் ஏற்பட்ட கெடுதிகள் தீரும் வரையிலும் வினைப்பயன்களுக்குண்டாகும் பிராயச்சித்தம் ஏற்படும் வரைக்கும் இவை கள் தீரா. பரம்பரையிலும் வியாதிகள் தொடரும். கருமகண்டம் என்னும் நூலில் இதைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சித்த முறைப்படி முன் சன்மம் அல்லது சன்மங்களின் வினைப் பயன்படி காலச்சக்கரத்தில் அறியக் கூடாத காரணத்தினால் தாய் தந்தையருக்குச் சில கோளாறுகள் ஏற்பட்டுக் குழந்தைகளைப் பிற்காலத்தில் தாக்கும்.

நோய்க்காரணங்கள்

சீவாணுக்கும், கண்ணறைகளின் நடையும் சகசமாக இருந்தால்தான் தாதுக்களின் சமநிலைக்கு யாதொரு கோளாறும் ஏற்படாது. இவ்விதமாகவே இருப்பதற்கு உணவுப்பகுதி அளவுப்படி இருக்கவேண்டும். அவ்வாறில்லையெனில் நோய்களுண்டாகும். மேலே கண்டபடி கன்மத்தினாலும், வெளிக் காரணங்களினாலும் நோய்கள் ஏற்படும். இவைகளுக்கு அபாயம், பாசாணம், மனோவசியம், காயம், மந்திரம், தேவதை இவைகளே காரணமாகும்.

சித்த முறைப்படி தயாரிக்கும் மருந்துகள்

பூர்வ காலத்து மருந்துகள் தூண்களைப் போன்ற நான்கு வகை ஆதாரங் கொண்டது. அவை

1. மருந்துகளின் இயற்கையான தன்மையை அறியும் அறிவு

2. தன்னுடைய மனோவல்லமை

3. தனக்கு ஏற்பட்ட தெய்வீக சக்தி

4. வைத்தியனின் நல்லொழுக்கமும், பயபக்தியும். இவற்றைக் கொண்டு மருந்துகள் மூன்று வகைப்படும்.

1. ஒப்புரை: வியாதிக்குச் சமத்துவ குணமுடைய மருந்துகள்

2. எதிருரை: நோய்க்கு எதிரான குணத்தை அதாவது கண்டிக்கக் கூடிய குணத்தையுடைய மருந்துகள்

3. கலப்புரை: அதாவது மேற்சொன்ன இரண்டுவித மருந்துகளும் கலந்தது.

இவற்றிற்கு மூலிகை, தாது ஜீவப் பொருள்களைக் கொண்டு செய்யப்படும் மருந்துகள் கொடுக்கப்படும். இவையன்றி சித்த முறைப்படி காயசித்தமாகச் சரக்குவைப்பை அனுசரித்து மருந்துகள் தயாரிக்கப்படும். இவ்வகையான மருந்துகள் வேறு எந்த வைத்திய முறையிலும் கிடையாது.

சித்த முறைப்படி நோய்களைச் சோதிக்கும் விதிகளும் விதமும்

நாடி பரிசம், நா நிறம் மொழி விழி மலம் மூத்திரம் இவை மருத்துவர் ஆயுதம். இவற்றைக் கொண்டும் மணிக்கடை சாத்திரம், நோயின் முற்குறிகுணங்கள் இவைகளையும் கொண்டு நோய் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். இவ்வகை நோய் அறியும் முறைமை தற்காலத்தில் மிகவும் சிறப்பாக நமது வைத்தியத்தில் மட்டுமல்லாமல் ஏனைய வைத்தியர்களாலும் கையாளப்பட்டு வருகிறது என்பது நாமறிந்ததே. சிறப்பாக நாடியைப்பார்த்து நோயை அறிவது சித்த வைத்தியத்தில் சிறந்த முறையாகும். இது கூரிய

அறிவும் நீண்ட பழக்கமும் உள்ளவர்களுக்குத் தான் எளிதில் இயலும். இத்தெள்ளிய நூலறிவும், திறமையும் எந்த அளவில் சிறப்பாக அமைந்துள்ளதோ, அந்த அளவு சிறப்பாக வைத்தியமும் அமையும்.

சித்த மருத்துவத்தில் சிகிச்சை விதிகள், கிரமங்கள்.

நோய் இன்னது என்று தெளிவாக அறியவேண்டும். இன்ன அவயம் நேராகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய வேண்டும். எந்த அவயத்தை அனுசரித்ததென்றும் தட்ப வெப்ப நிலை, தேகவலிவு, செரிமான சக்தி, நோயாளியின் மனோகுணம், வயது, பழக்க வழக்கம், ஆகிய இவற்றைக் கவனிக்க வேண்டும். இதில் முக்கியமாகச் சித்தர்களின் எண்ணப்படி நோயாளியின் உடலில் உள்ளே இருக்கும் விஷயங்களில் புகாது. மேலெழுந்த வாரியாகச் சிகிச்சை செய்தால் உடம்பில் நோய் குணமாகாது. இவ்வாறு தவறுதலாகச் செய்யும் வைத்தியம் நூலுக்குப் புறம்பானது என்றும் கெடுதியே உண்டாகுமென்றும் சொல்லப்படுகிறது. இவையன்றித் தெய்வ, மானிட இராட்சச சிகிச்சைகள் என்று கூறப்படுகின்ற சிகிச்சை முறைகளில் தெய்வ மானுட சிகிச்சையே அதிகம் கையாளப்படுகிறது. மிகச் சில மட்டும்தான் இராட்சச சிகிச்சை செய்யச் சொல்லப்படுகிறது.

சித்த வைத்தியத்தின் தற்கால நிலைமை

இறந்த காலத்தில் நோக்கம் எவ்வளவுக்கெவ்வளவு இருக்கிறதோ அவ்வளவிற்கும் எதிர் காலத்தின் நோக்கம் விளக்கமாகப் புலப்படும். ஏனெனில் சென்ற கால நிகழ்ச்சிதான் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அதன் போக்கையும் அறியச் சிறந்த வழியாக இருக்கும்.

பூர்வ காலத்தில் சித்த வைத்திய சிரோன்மணிகள் செய்த வேலைகளை எல்லாம் தற்காலத்தில் புதிதாகக் கண்டு

பிடிக்கப்பட்ட காரியங்கள் மறைந்து விட்டன. தற்காலத்தில் உள்ளவர்கள் சித்தர்கள் போன்ற மகான்களுக்குப் பயபக்தி காட்டுவதால் சித்த மருத்துவம் வளராது. அன்னார்கள் கூறும் செய்திகளையும் அவர்களின் நூல்களையும் நன்கு கற்றுணர்ந்து அதன்படி சிறிதும் தவறுகள் ஏற்படாமல் மருந்து செய்து பயன்படுத்த வேண்டும். அவர்கள் செய்த நூல்களை நோய்ப் பரிகார முறையிலும், காய கற்ப முறையிலும் அதிகத் தேர்ச்சியடைந்தவர்கள் செய்த உயர்ந்த நூலெனக் கொள்ள வேண்டும். எவ்வளவு குறைவாகவும் இரகசியமாகவும் சொல்லி இருந்தாலும் அது மேன்மையான கருத்து என்றே கொள்ள வேண்டும். இக்காலத்தில் என்ன நடக்கும் என்று பூர்வ காலத்தில் சொல்லி வைத்திருப்பதைக் கண்டே அவர்களின் அறிவுக் கூர்மையை நாம் பாராட்ட வேண்டும். எந்தக் காலத்தில் மேலை நாட்டு உலக சம்பிராதயங்கள் கீழை நாட்டு வைத்தியத்திற்கும் நமது நாட்டு வைத்திய முறைக்கும் உள்ள பேதங்கள் மறைந்து போகும். இந்தக் காலம் எப்பொழுது வரும் என்று தான் நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அனேகமான வைத்திய நூல்கள் இன்னும் அறிய முடியாத நிலையில் ஏட்டுப் பிரதிகளாகவே உள்ளன. அவற்றை இன்றைய சித்த மருத்துவர்கள் வெளிக்கொணர முயற்சிக்க வேண்டும். அனேக திறமை வாய்ந்த வைத்தியர்களும் தங்களுடைய மேன்மை பெற்ற அறிவுத் தேர்ச்சியையும், அனுபவத்தையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் இரகசியமாய் வைத்திருந்த விஷயத்தையும் பார்த்தால் சித்த வைத்தியம் மங்கிப் போவதற்கு இவைகளே காரணமாகும் என்று தோன்றுகிறது.

சித்த மருத்துவத்தின் சிறப்பு

சித்த மருத்துவத்தின் சிறப்புப்பற்றி அவ்வளவு எளிதாகக் கூறிவிட முடியாது. ஏனெனில் சித்த மருத்துவத்தில் அவ்வளவு சிறப்புக்கள் அடங்கியுள்ளன. சித்தர்களின்

மணிமகுடம் என்று சிறப்புப் பெறுகின்ற முப்புவைக் கொண்டு மருந்துகளை வன்மையுள்ளதாகவும், மருந்துகளின் செய்முறைகளை மிகவும் எளிதாகவும் செய்து முடிக்கலாம்.

இராசயோகம் என்று சொல்லுகின்ற குண்டலினி யோகத்தின் மூலமாக நோய் இன்றி நெடுநாட்கள் வாழலாம். மணிமந்திர அவிழ்தம் என்னும் சிகிச்சை முறை தமிழ் வைத்தியத்திற்கே சிறப்பாக உரியது. வேறெந்த முறையிலும் இவை பற்றி நாம் காணவே முடியாது. இயற்கையாகவே உடம்பை நன்னிலையில் வைத்துக்கொள்ளக் கூடிய முறைகள் நமது சித்த வைத்தியத்தில் தான் கூறப்பட்டுள்ளன, என்பது எல்லோரும் அறிந்ததே.

சித்த மருத்துவ வளர்ச்சிக்கான வழிகள்

சித்த மருத்துவம் வளர்ச்சி பெற வேண்டும் என்றால் அதன் நிலையையும் அது வளர்க்கப்பட்ட சூழ்நிலையையும் ஆராய்ந்து அதன்படி வளர்க்க வேண்டும். தற்கால வைத்தியர்கள் நவீன காலத்திற்கேற்ப மருந்துகளையும், செய்முறைப் பகுதிகளையும் விரைவாகவும் சிரமப் படாமலும் செய்ய முயல்கிறார்கள். இவையெல்லாம் மருந்திற்கும், மருத்துவத்திற்கும் ஏற்படுகின்ற தீமையே யாகும். அத்துடன் பழைய ஏட்டுச் சுவடிகளிலும் நூல்களிலும் சொல்லப்பட்டுள்ள மறைபொருட்களையும் தெளிவாக அறிந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் வளர வேண்டும். அவற்றில் கூறியுள்ள செய்திகளை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் நவீன வைத்தியர்களிடம் ஏற்பட வேண்டும். அத்துடன் நூல்களில் சொல்லியுள்ள சில முறைகளை மிகவும் கொடுமையானவை என்றும் சிரமமானவை என்றும் அந்த முறைகளை அப்படியே விட்டு விடுதலைத் தவிர்க்க வேண்டும். சித்தர்கள் கூறிய முறைகள் அனைத்தும் உண்மை என்று முழு மனதாக நம்பவேண்டும். தனிப்பட்ட முயற்சியுடையவர்களையும்

ஆராய்ச்சியில் எண்ணமுள்ளவர்களையும் ஊக்குவித்தல் வேண்டும். அதற்கும் தேவையான பொருள் உதவியையும், இட உதவியையும், கொடுத்து அவர்களை ஆதரித்தல் வேண்டும். இதற்காக அரசு தனிக் கவனம் செலுத்துதல் மிக அவசியம் ஆகும். மக்களுக்கு ஆங்கில முறையில் கொண்டுள்ள மோகம் மறைய வேண்டும். இவை போன்ற பல நடைமுறைகளை எளிதாக்கினால் சித்த மருத்துவம் தலை தூக்கித் தனக்கு நிகர்தானே என்று பீடுநடை போட்டு வரும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

முடிவுரை

இதுகாறும் கூறப்பட்டவை என் சிற்றறிவுக்கு எட்டிய சிறிய பகுதியேயாகும். சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்காக அரசும் பொதுமக்களும் ஆதரவு தந்து தமிழ் மருத்துவத்தை வளர்க்க வேண்டும் என்று கூறி முடிக்கின்றேன்.

நூல் ஆதாரம்

1. சித்த மருத்துவம்
2. டி. வி. சாம்பசிவபிள்ளை அகராதி
3. சித்த மருத்துங்க சுருக்கம்
4. நோய் முதல் நாடல் திரட்டு1
5. தோற்றக்கிரம ஆராய்ச்சியும் மருத்துவ வரலாறும்.

வளரும் சித்த மருத்துவத்தில் வழக்கொழிந்துவரும் பாடாணங்கள்

க. அன்பரசு, நான்காமாண்டு
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளை.

சித்தர்களின் ஒப்பில்லாச் சிந்தனைத் தெளிவினில் சிறப்புப் பெற்ற மருத்துவம் பார் எங்கும் பலர்போற்றும் சித்த மருத்துவம். இச் சித்த மருத்துவத்தின் தனிச்சிறப்பே சித்தர் மணிமகுடம் என்னும் முப்பு விலும் வேறு எந்த மருத்துவ முறைகளிலும் பயன்படுத்தாத அளவில் பாடாணங்களையும், தாதுப் பொருட்களையும் நாம் பெருமளவில் பயன்படுத்தி வருவதாகும். சொல்லொண்ணா அளவில் துன்பம் விளைவித்து உயிர்குடிக்கும் முற்றிய நோய்களைத் தீர்க்கும் பெருமருந்துப் பிரயோகங்களில் இன்றியமையாத சரக்குகள் பாடாணங்களே ஆகும். இம்மருத்துவ முறையில் பயன்படுத்தி வந்த பல்வகைப் பாடாணங்களும் தாதுப் பொருள்களும் வழக்கில் இருந்து மறைந்து கொண்டு வருவது கவலைக்குரிய ஒன்றாகும். அவ்வாறு மறைந்து வரும் சரக்குகளில் முக்கியமான பாடாணங்களை மீண்டும் வழக்கில் கொண்டு வந்து சித்த மருத்துவ முறையை மென்மேலும் வளர்ச்சியுறச் செய்து சிறப்படையச் செய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

பாடாணம் என்றால் என்ன?

உயிருக்கே சேதம் விளைவிக்கக்கூடிய பொருட்களைத் தான் நாம் பாடாணம் என்று அழைத்து வருகிறோம். அது பலவிதமாகப் புகட்டியாவது, முகர்ந்தாவது, தொந்தித்தாவது, அல்லது பக்குவப்படாது உடம்பிலேயே விஷமித்து

அவ்வுடம்பைத் தாக்குவதுமின்றிப் பலவித கஷ்டங்களுக்கும் இடமுண்டாக்கும். எனவே பாஷாணங்களில் பழகுவது பாம்பினிடத்தில் பழகுவதற்கு ஒப்பாகச் சொல்லலாம். மேலும் சித்த மருத்துவ முறையில் மட்டுமே பாஷாண வகை, பாஷாண பிறப்பிடம், பாஷாண வைப்பு, பாஷாண சுத்தி முறை, பாஷாணப் போக்குக் குறித்து அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது.

சித்த மருத்துவத்தில் பாடாணத் தொகுப்பு:

சித்த மருத்துவத்தில் பாடாணங்களில் எண்ணிக்கை மொத்தம் அறுபத்து நான்கு என்றும், அவற்றில் பிறப்பிடம் பிறக்கும் வகை ஆகியவற்றில் அடிப்படையில் பிறப்பு வகைப் பாடாணங்கள் முப்பத்தி இரண்டு என்றும், வைப்பு வகை முறைகளில் செய்யப்பட்டவைகளின் குணங்களின் அடிப்படையில் வைப்பு வகைப் பாடாணங்கள் முப்பத்தி இரண்டு என்றும் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பிறப்புவகைப் பாடாணங்கள் அனைத்திற்கும் உற்பத்தியான விதம், அவற்றின் தன்மை, அவற்றிற்கான வைப்பு முறைகளும் சில கூறப்பட்டுள்ளன.

இயற்கைப் பாடாணம் மற்றும் செயற்கைப் பாடாணங்களிலுள்ள முரண்பாடு

போகர் 7000த்தில் இயற்கைப் பாடாணங்கள் முப்பத்தி இரண்டுக்கும் தனியாகப் பெயர்களும் தொகுக்கப்பட்டு அவைகளில் சிலவற்றிற்கு வைப்பு முறைகளும் தனித்தனியே கூறப்பட்டுள்ளன. ஆனால் அதே நூலில் வைப்புப் பாடாணங்களின் பெயர்த் தொகுப்பில் இயற்கைப் பாடாணங்களில் உள்ள சில சரக்குகளின் பெயர்கள் மீண்டும் வருகின்றன. அவையாவன சூதம், வீரம், லிங்கம், கெந்தி, வெள்ளைப் பாடாணம், துத்தம், அரிதாரம் ஆகும். இது கவனத்திற்குரியது. பிறப்புவகைப் பாடாணங்கள் முப்பத்தி இரண்டில் சிலவற்றிற்கு வைப்பு முறைகளைத் தனித்தனியே

கூறிவிட்டு மீண்டும் ஏன் வைப்புப் பாடாணத் தொகுப்பிலும் அவற்றின் பெயர்களைக் குறிப்பிட வேண்டும் என்ற கேள்விக்கு இடமிருக்கின்றது. எனவே அவ்வாறு கூறப்பட்ட சரக்குகள் வெவ்வேறாகத்தான் இருக்க முடியுமே தவிர ஒன்றாக இருக்க முடியாது. அவ்வாறு ஒன்றாக இருக்கும் பட்சத்தில் பாடாணங்களின் எண்ணிக்கை 64 என்பது திண்ணம் ஆக இருக்க முடியாது. அவற்றினைப் பிரித்து இனங்காணவேண்டியது சித்த மருத்துவ வல்லுநர்களின் கடமையாகும்.

பஞ்ச சூதம்

பஞ்ச சூதங்களான இரசம், இரசச் செந்தூரம், இரசகற்பூரம், வீரம், லிங்கம், ஆகியவற்றின் இரசச் செந்தூரம், இரசக் கற்பூரம் இவற்றினைத் தவிர மற்றைய மூன்றும் பாடாண வகைப்படுத்தலில் இடம் பெற்றுள்ளன. ஆனால் இரசச் செந்தூரமோ, இரச கற்பூரமோ வேறு எந்தவகை வகைப்படுத்தலிலும் (உபரசத்திலோ அல்லது காரசாரத்திலோ) இடம் பெறாமல் உள்ளது கேள்விக்குரிய ஒன்று. இதற்கும் விளக்கம்காண வேண்டிய கடமை சித்தமருத்துவ வல்லுனர்களையே சேரும்.

பாடாணத் தூய்மை

பாடாணங்கள் அனைத்திற்கும் தூய்மை அவசியம் ஆகும். இயற்கைப் பாடாணங்கள் பூமியிலிருந்து பெறப்படுகின்றமையால் அதில் ஏராளமான மலினங்கள் அல்லது பிற பொருள்கள் கலந்திருக்க வாய்ப்புள்ளது. ஆகவே தூய்மைப் படுத்துதல் மிகமிக அவசியமாகின்றது.

வைப்புச் சரக்குகளைச் சரக்கு வைப்பு நூல்களில் கூறியுள்ளபடி நாமாகச் செய்து பெறப்பட்டாலும் அல்லது வேதியியல் முறைப்படி செய்யப்பட்டுக் கடைகளில் இருந்து பெறப்பட்டாலும் பிறமலினங்களோ, பிறபொருள்

சேர்க்கையோ அதிகமாக இருப்பதற்கு வாய்ப்பு இல்லாததாகையால் சுத்திமுறை முக்கியமல்ல. இருப்பினும் சுத்தித்தல் நன்று.

பாடாணங்கள் அனைத்திற்கும் பொதுவான சுத்தி முறைகள் பல பல்வேறு நூல்களில் கூறப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சில சரக்குகளாலோ, பல சரக்குகள் சேர்ந்தோ கூறப்பட்டுள்ளன. அவற்றில் சிறந்தவற்றைத் தேர்ந்து எடுப்பது மிக அவசியமாகும். அப்பொறுப்பினைச் சித்த மருத்துவ அறிஞர்களிடத்தில் விட்டுவிடுகிறேன்.

வழக்கொழிந்து வரும் பாடாணங்கள்

பாடாணவகை 64ல் சூதம், வீரம், லிங்கம், தாளகம், மனோசிலை, கெந்தி, கௌரி, மிருதார்சிங்கி, துரிசு போன்றவைகள் மட்டுமே தற்பொழுது கிடைக்கப் பெறுகின்றன. இவ்வாறு குறைந்த எண்ணிக்கையுள்ள பாடாணங்களைக் கொண்டு எவ்வாறு கொடிய நோய்களை வேரறுக்க முடியும். எனவே நூல்களில் கூறியுள்ள அறுபத்தி நாலு பாடாணங்களையும் நாம் வழக்கிற்குக் கொண்டு வரவேண்டும். அப்பொழுதே சித்த மருத்துவம் மென்மேலும் தழைத்தோங்கும்.

பாடாணங்கள் வழக்கொழியக் காரணங்கள்

பாடாணங்கள் வழக்கொழியப் பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றினை இங்குக் காண்போம்.

அ. முதலில் பாடாணச் சரக்குகளைச் சரியாக இனம் காணமுடியாமல் போனது, பாடாணங்கள் வழக்கொழிந்து போனதற்கு இன்றியமையாத காரணமாகும். அவ்வாறு இனம் காண முடியாமல் போனதிற்குப் பாடாணங்களை முறையாக எளிதில் பயன்படுத்தி வந்த தலைமுறையினரும், அவர்தம் அனுபவத்தின் மூலம் விட்டுச் சென்ற குறிப்புகளும் இன்று இல்லாமையும், பாடாணங்களைப் பற்றிய தகவல்களும்

சரியாகக் கிடைக்கப் பெறாமையும் ஆகும். நூல்களிலும் பாடாணங்களின் இயல்பு, புறத்தோற்றம் பற்றிய சரியான குறிப்புகள் கிடைக்கப் பெறவில்லை. மேலும் தற்கால விஞ்ஞானத்தின் மூலமாக இனம் காண முடியாத அளவிற்கு அவற்றின் சரியான வேதியியல் பெயர்களுக்கோ, மண்ணியல் பெயர்களுக்கோ இட்டுச்செல்லும் குறிப்புகளும் சரியாகக் கிடைக்கப் பெறாமையும் பாடாணங்கள் வழக்கில் இருந்து மறைந்து வருவதற்குக் காரணமாக அமையும்.

ஆ. பாடாண வகைகளில் பெரும்பான்மையானவற்றை முக்கியமாக வைப்புப் பாடாணங்களை வேதைமார்க்கத்தில் படன்படுத்தி அம்முயற்சிகளில் தோல்விகண்டு அதனால் அவர்கள் அத்தகைய சரக்குகளை வழக்கில் இருந்து விட்டு விட்டனர் போலும். அதனால் அத்தகைய பாடாணங்களின் உண்மையான மருத்துவப் பயன்களை நாம் பெறமுடியாமல் போயிற்று. இவ்வாறு பாடாணங்களை மருத்துவத்தில் பயன் படுத்துவதைக் காட்டிலும் வேதை மார்க்கத்தில் அதிகமாகப் பயன்படுத்தி வந்தமையும் பாடாணங்கள் வழக்கொழியக் காரணமாயிற்று.

இ. பாடாணங்கள் சேரும் மருந்துகள் எளிதில் செய்ய முடியாமல் அவற்றிற்கு மிகவும் நீண்டகாலமும், அதிக உழைப்பும் தேவைப்படுவதால் அவற்றைத் தவிர்த்து எளிதான மருந்துகளை மட்டுமே செய்வதில் முனைவதும் பாடாணங்கள் வழக்கில் இருந்து மறைந்து வருவதற்குக் காரணமாகும்.

ஈ. இயற்கைப் பாடாணங்கள் கிடைக்கப் பெற்றாலும் அவற்றின் முக்கியத்துவத்தை உணராமல் பல்வேறு துறையினர் அவற்றை வேறுவழிகளில் பயன்படுத்தி வருவதால் நமக்கு அவை கிடைக்காமல் போகின்றன. மேலும் பாடாணங்கள் அவ்வாறு பெறும்பொழுது அவற்றின் விலைகளும் அதிக அளவிற்குச் செல்வதால் கடைகளில் அவற்றை வாங்குவோர் இல்லாத காரணத்தினாலும் அவை வழக்கில் இருந்து மறைந்த வருகின்றன.

பாடாணங்களை முறைப்படுத்துதலின் அவசியம்

வழக்கில் இருந்து மறைந்து வரும் பாடாணங்களை வழக்கிற்குக் கொண்டுவரவேண்டும். ஏனெனில் பற்பல செந்தூரங்கள் செய்யவும் கட்டு, களங்கு, சுண்ணம் போன்ற பெரும் மருந்துகள் செய்யவும் பாடாணங்கள் மிகவும் இன்றியமையாதவை ஆகும். இதனை

வீரம் விட்டால் நீற்றினம் போச்சு
துரிசு விட்டால் குருவே போச்சு
கெந்தி விட்டால் வர்ணம் போச்சு

என்ற கோட்பாடுகளினால் அறியலாம்.

மேலும் உலோகங்களை மடியச் செய்யப் பாடாணங்களே சிறப்பானவை. உதாரணமாக தாளகம் வெள்ளீயத்தையும், மனோசிலை காரீயத்தையும், லிங்கம் உருக்கையும் கெந்தி தாம்பீரத்தையும் மடியத் செய்யும். அயத்தொட்டிப் பாடாணம் களங்குக்கே ஆதியாகும். சவ்வீரம் நவலோகத்தையும் சுன்னமாக்கும். இதுபோன்ற மருந்து முறைகளைப் பாடாணங்கள் முக்கியமானதாகையால் அவற்றை நாம் முறைப்படுத்தி வழக்கிற்கு வெளிக்கொணரல் அவசியம்.

சித்த மருத்துவ வளர்ச்சியில் பாடாணங்களின் பங்கு

சித்த மருத்துவத்தில் தனிச்சிறப்பெனக் கருதப்படும் பாடாண மருந்து முறைகளைச் சரிவர வெளிக் கொணர்ந்து பெரும்பிணிகளுக்கு அருமருந்தாகப் பயன்படுத்தி அவற்றை நீக்கிடல் வேண்டும். அவ்வாறு பிணிகளைப் போக்கும் பாடாணங்களைச் சரிவர இனம் கண்டு அவற்றை முறையாக வகைப்படுத்துதல் வேண்டும். வழக்கொழியக் காரணமானவற்றைக் களைந்து மீண்டும் வழக்கிற்குக் கொணர்தல் அவசியம். அவ்வாறு வெளிக்கொணரச் சித்தர்

நூல்களில் கூறியுள்ள பாடாணங்களின் உற்பத்தி, அவற்றின் பிறப்பிடம் ஆகியவற்றை ஆராய்ந்து மேலும் சரக்கு வைப்பு நூல்களான போகர் சரக்கு வைப்பு 800, மச்சமுனி சரக்குவைப்பு 800, கொங்கணர் சரக்கு வைப்பு மற்றும் போகர் 7000 முதலிய நூற்களில் கூறியுள்ள வைப்பு முறைகளை ஒப்பு நோக்கிப் பிறப்பு, வைப்புப் பாடாண வகைகளை முறையாகத் தொகுத்து அவற்றின் நவீன அறிவியல் அடிப்படையில் மண்ணியல் பெயர்களும், வேதியியல் பெயர்களும் இடவேண்டும். அவ்வாறு பெயரிட்டால் தான் எவ்விதக் குழப்பமுமின்றி ஓர் தெளிவான சரக்கினை நாம் பெற முடியும். அவ்வாறு பெயர் வரிசையைப் பெறுவதற்குச் சித்த மருத்துவ வல்லுநர், மருந்தியல் நிபுணர், மண்ணியல் நிபுணர், வேதியியல் நிபுணர் ஆகியோர் கொண்ட ஒரு குழுவை அமைத்து ஆய்வுக்கு வித்திடல் வேண்டும். அதற்கு இக்கருத்தரங்கம் வழிகோல வேண்டும் என விரும்பி வேண்டிக் கொள்கிறேன்.

கட்டுரை எழுதத் துணை நின்ற நூல்கள்

1. போகர் 7000
2. டி. வி. சாம்பசிவம் பிள்ளை அகராதி
3. போகர் கருக்கிடை நிகண்டு 500
4. போக முனிவர் சரக்கு வைப்பு 800
5. மச்சமுனி சரக்கு வைப்பு 800
6. கொங்கணர் சரக்கு வைப்பு (நூறு)
7. குணபாடம்-தாது ஜீவ வகுப்பு-ஆர். தியாகராஜன்
8. பதார்த்த குணவிளக்கம்-தாது ஜீவ வர்க்கம்
   சி. கண்ணுசாமி பிள்ளை.

சங்கு பற்பத்தின் ஆட்சி

கு. சிவராமன், இசிமஅ.,
மரு. ஜி. கணபதி, எம்.டி., (சித்தா)
அரசினர்சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

ஐவகையெனும் பூத மாதியை வகுத்ததனுள் அசரசர பேதமான யாவையும் வகுத்து, என்னும் மூதறிஞர் வாக்குப்படி இவ்வுலகமானது ஐம்பெரும் பொருட்களால் அமைந்தது. இவ்வுலகத்தில் உள்ள பொருட்கள் அசையாப் பொருள், அசையும் பொருள் எனும் இருவகையுள் அடங்கும். இவை அனைத்தும் தாதுப்பொருள். தாவரப்பொருள், சங்கமப் பொருள் எனும் 3 பிரிவுகளுள் அடங்கும். தாவரப் பொருட்களில் மூலிகைகள் அடங்கும். தாதுப் பொருட்களில் உலோகம், காரசாரம், பாடாணம் எனும் நான்கு பிரிவுகளுள் அடங்கும். சங்கமப் பொருட்களில் நடப்பன, நகர்வன, பறப்பன, நீர்வாழ்வன என்பவை அடங்கும்.

சங்கு, சங்கமப் பொருட்களில் ஒன்றாகச் சித்த மருத்துவத்தில் இடம் பெறுகிறது. இது ஐந்து கடல்படு பொருட்களுள் ஒன்று ஆகும். சித்த மருத்துவத்தில் சிறப்பாக சொல்லப் பட்டுள்ள சங்கு பற்பம் இந்த ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சங்கு, நந்து, நாகு, பணிலம், சுத்தி, வளை, கம்பு, வலம்புரி கோடு, வாரணம், வெள்ளை வண்டு, இடம்புரி, சுங்கம், வேதநத்தம் போன்ற வேறு பெயர்களினாலும்

வழங்கப்படுகின்றது. சங்கில் பலவகைகள் காணப்படினும் மருத்துவத்திற்குப் பயன்படுவது ஊதுசங்கு ஆகும்.

சங்கிற்கு உடல் உரமாக்கி, துயரடக்கி, அகட்டு வாய்வகற்றி, பசித்தீதூண்டி, துவர்ப்பி, வெப்பகற்றி, கோழை அகற்றி முதலிய செய்கைகள் இருப்பதாகக் குணபாடச் சீவவகுப்பு நூல் கூறுகிறது. இதன் பொதுக் குணமாவது

கசிவா மிரத்த பித்தங் கண்ணோய்க ளேகும்
பசியாறும் வாதம் பறக்க - மிசிவுடனே
தங்கு முளைவிரணந் தானகலு மேவெள்ளைச்
சங்குமது வுண்டாயிற்றான்

சங்கினைப் பற்பமாக்குவதற்குத் தேரன் முறை தவிரப் பல முறைகள் கூறப்பட்டுள்ளன. அவற்றுள், ஆய்வுக்காகக் கற்சுண்ணாம்பில் தாளித்து எடுத்துச் சுத்தி செய்த சங்கை உத்தாமணி இலை விழுதில் புதைத்துக் கனபுடமிட்டுப் பற்பமாக்கும் முறை தேர்ந்து எடுக்கப்பட்டு கடந்த 16-2-90 அன்று சங்கு பற்பம் செய்யப்பட்டது.

இம்முறையில் செய்யப்பட்டது சங்கு பற்பத்தை இருகுன்றி அதாவது 260 மி. கிராம் வரை நெய் அனுபானத்தில் உள்ளுக்கு வழங்க இருமல், மூலம், வயிற்றுப்பிணி, அண்ணாக்குத் தூறு, மார்பு வலி, வாயு, குன்மம் முதலியன தீருமெனக் குணபாடதாதுசீவ வகுப்பு நூல் குறிப்பிடுகின்றது.

அண்ணாககுத் தூறு என்பது தொண்டை, லசுனம் முதலிய பகுதிகளில் ஏற்படும் தாபிதம் மற்றும் நிணவளர்ச்சி என்பதாகும். இதை நவீன மருத்துவத்தில் குறிப்பிட்டுள்ள Tonsilitis ஆகக் கொள்ளலாம்.

Streptrococcus எனும் நுண்கிருமியினால் தான் பெரும்பாலும் இந்த லசுனதாபிதம் (Tonsilitis) வருவதாக நவீன மருத்துவம் கூறுகின்றது. ஆகவே, நம் சித்த மருத்துவத்தில் அண்ணாக்குத் தூறுவிற்கு கூறப்பட்டுள்ள சங்கு பற்பம் நுண்ணுயிரியல் ஆய்வுகளுக்காக Microbiological analysis கடந்த 4-8-90 அன்று திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பப்பட்டது. அதன் முடிவுகளாவன,

	50mg	100mg	250mg	500mg
STRERTOCOCCUS	-	-	-	-
PROTEUS	+	+	+	+
STAPHYLOCOCCUS	+	+	+	+
ESCHI Coli	+	+	+	+

(நுண்ணுயிரியல் ஆய்வுக்கான சான்றிதழ் கடைசியில் இணைக்கப்பட்டுள்ளது)

மேற்கண்ட முடிவுகள் இந்த சங்கு பற்பம் Sensitive to Beta Haemolitic Streptococcus என்பதுத் தெளிவாயிற்று. 50 மி.கி. முதல் 500 மி. கி. வரை நான்கு அளவுகளில் Streptococcus மீது சோதித்துப் பார்க்கையில் அதனுடைய நுண்கிருமிக் கொல்லி சக்தி (anti-biotic effect) தெள்ளத்தெளிவாகத் தெரியவந்தது.

Streptococcusஎனும் இந்த நுண்கிருமி கிராமம் பாஸிடிவ் பாக்டீரியா ஆகும். இதனால் சுவாசப் பாதையில் ஏற்படும் தாபிதங்கள் (Respiratory tract infections) பற்றி Text book of Microbiology by R. Anandanarayanan என்ற நூலில் இவ்விதம் விளக்கப்பட்டுள்ளது.

(.....The Primary site of invasion of the human body by Str. pyogens is the throat. Sore throat is the Commenest of streptococcal diseases. It may be localise as tonsilitis or may involve the pharynx more diffusely (Pharyngitis). Tonsilitis is Commoner in order children and adults than in younger children, who commonly develope diffuse pharyngitis. Localisation is believed to be favoured by hypersensitivity due to prior contact. If pharyngeal infection in children, abdominal pain is occasionally complained of and may be confused with Appendicitis.....)

நம் குணபாடச் சீவ வகுப்பில் கூறப்பட்டுள்ல அண்ணாக்குத் தூறு, வயிற்றுப்பிணி முதலியனவற்றை மேலே கூறப்பட்டுள்ள Tonsilitis மற்றும் Abdominal pain இவைகளுடன் ஒப்பு நோக்கையில் சங்கு பற்பத்தின் மீதான ஆட்சி தெளிவு பெறுகின்றது.

சங்கிற்குக் கோழை அகற்றி செய்கையும் இருப்பதனாலும் அதன் நுண் கிருமி கொல்லி சக்தியினாலும் கப சம்பந்தப்பட்ட சுவாச பாதை தாபிதங்கள். இருமல் முதலிய நோய்கட்குச் சிறப்பாக வழங்கலாம்.

மேலும் மார்புவலி தீரும் என்று கூறப்பட்டதாலும்,

வாதம் பறக்கும் மிசிவுடனே தங்கு
முளைவிரணந் தானகலும்

என்ற சங்கின் பொதுக்குணத்தையும், முன்னர்க் கூறிய இருமல், அண்ணாக்குத்தூறு இவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்க்கையில் இக்குறி குணங்கள் அனைத்தும் வாதசுரம் (Rheumatic fever) எனும் நோயில் காணப்படுவதால், சங்கு பற்பம் அந்நோயைத் தீர்க்க வாய்ப்புகள் உள்ளன.

ஏனெனில், R. Anandanarayanan's Text book of Microbiology எனும் நூலில் (.....Str. Pyogens infections leads to two important non suppurative sequelae acute rheumatic fever and acute Glomerulonepritis. These complications ensure one to three weeks after the acute infection so that the organism is no longer detectable when sequale set in .....)

Rheumatic fever எனும் இந்நோய் B - Hoemolitic streptococcus மூலம்தான் வருகிறது. அந்நோய் முதலில் தொண்டை தபிதாமாகவும் (Tonsilitis) பின் கீல்வாயுவாகவும் (joint Pain) கடைசியில் தமரகத்தில் தாபிததத்தையும் (Carditis) உருவாக்குகின்றது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கு பற்பம் அதே B - haemolitic Streptoeoccus ன் மீது Sensitivity இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் அந்நோயினைத் தீர்க்கும் சாத்தியக் கூறுகள் அதிகமாக உள்ளன என்பது இவ்வாய்வில் தெரிய வருகிறது.

மேலும் Streptococcus infection ஆல் வரக்கூடிய தோல் நோய்கள், பிருக்க தாபிதம் முதலியனவும் சங்கு பற்பத்தால் தீர்க்கும் என்பது இவ்வாய்வில் தெரியவந்துள்ளது.

நமது குணபாட சீவ வகுப்பில் கூறப்பட்டுள்ள இருமல், வயிற்றுப் பிணி, அண்ணாக்குத் தூறு மார்புவலி முதலிய நோய்களைத் தீர்க்கும் சங்கு பற்பத்தின் செயல்திறன், இந்த ஆய்வின் ஒப்பு நோக்குதல் மூலம் தெளிவுபடுத்தப் படுகிறது.

மேலும் Streptococcal infections 5 முதல் 8 வயது வரையுள்ள குழந்தைகளையே அதிகம் தாக்குகின்றது என்பது நிரூபிக்கப்பட்டு உள்ளதால் சத்து மிகுந்த சங்கு பற்பம் சிறுகுழந்தைகட்கு வழங்குவது மிகச் சிறப்பாக அமையும்.

நுண்ணுயிரியல் ஆய்வில் வெளியான முடிவுகளின்படி 50 கி. மிலிருந்தே அதற்கு antibiotic effect இருப்பது

தெரிந்தாலும் நோயின் அளவு, நோயாளியின் அளவு பொறுத்து அதன் அளவு மாறலாம்.

இவ்வாய்வின் மூலம் இக்காலத்தில் கண்டறியப்பட்ட நோய்களுக்கு சித்தர்கள் அப்போதே கூறி வைத்திருந்த மருத்துவக் கருத்துக்களை எண்ணும்போது சித்த மருத்துவத்தின் பெருமை தெரியவருகிறது. நவீன அறிவியலின் துணைகொண்டு நம் சித்த மருத்துவத்தை வெளி உலகத்தினருக்கு நம்பவைக்க முடியும் என்பது அதன் மூலம் உலகளவில் நம்முடைய சித்த மருந்துகள் எவ்விதம் ஆட்சி புரிகின்றன என்பதைப் பாரெங்கும் பறைசாற்றி மென்மேலும் உலகளவில் நமது சித்த மருத்துவத்தின் வளர்ச்சியைக் கொண்டுவர முடியும்.

இக்கட்டுரை எழுத ஆதாரமாயிருந்த நூல்கள்

1. குணபாட தாது சீவ வகுப்பு
2. சித்த மருந்துவாங்க சுருக்கம்
3. சித்த மருத்துவம் - நோய் நாடல் 2
4. சித்த மருத்துவம் (பொது)
5. Text book of Microbiology by R. Anandanarayanan

இக்கட்டுரை சிறப்புற அமைவதற்கு உறுதுணையும் உதவியும் நல்கிய

மரு. வீ. ராமதாஸ் எம்.டி. (சி)

குணபாடத்துறை பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

மரு. எஸ். பூபதிராஜ் எம்.டி. (சி)
மரு. பா. சம்பத்குமார் எம.டி.(சி)
மரு. முருகேசன் எம்.டி. (சி)
டாக்டர் வசந்தா பாபு

துறைத் தலைவர் மற்றும் பேராசிரியர்
நுண்ணுயிரியல் துறை, திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை

கோவை - 12

மற்றும் அனைத்து நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MICROBIOL SENSITIVITY TESTING

Sensitivity test was carried with Sangu Parpam on various Bacteria namely B.H. Streptococcus, Proteus. Staphylococcus aureus and Escherichia coli and it was found that only B. haemolytic streptococcus was found to be sensitive to 50 mg, 100 mg, 250 mg and 500mg, % and other bacteria were found to be resistant.

PROFESSOR OF MICROBIOLOGY
Tirunelveli Medical College,
Tirunelveli - 627 001.

சித்த மருத்துவமும் விலங்கின மருந்துகளும்

முனைவர் ச. பரிமளா,
விரிவுரையாளர், தொல்அறிவியல்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை

தமிழகத்தின் தனிப்பெரும் மருத்துவமெனச் சிறப்பிக்கப்படும் சித்த மருத்துவம் ஆய்வு நோக்கில் அணுகுவோர்க்கு ஓர் அட்சயப் பாத்திரமாகத் திகழ்கிறது என்பதில் ஐயமில்லை. சித்தர்கள் கூறாத செய்திகளே இல்லை என்று கூறுமளவிற்கு மூலகை, தாது சீவப் பொருட்களைக் குறித்த பல்வேறு மருத்துவப் பயன்பாடுகளை அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

சித்தர்கள் கூறிய மூலிகைகளைப் பற்றியும் தாதுப்பொருட்களைப் பற்றியும் பல மருத்துவ அறிஞர்கள் விரிவான முறையில் எடுத்துக் கூறிய அளவிற்குப் பல்லாற்றானும் பயன்பட்டு வருகின்ற விலங்கினங்களைக் குறித்து அதிக செய்திகள் வெளியிடப்படவில்லை என்றே கூறலாம். இன்றைய நவீன அறிவியல் யுகத்தில் உயிர்காக்கும் பல அரிய மருந்துப் பொருட்கள், விலங்கினங்களிலிருந்தே எடுக்கப்பட்டுகின்றன. ஏறத்தாழ 400 வகையான விலங்கினங்களிலிருந்து மருந்தக மூலப்பொருட்களைப் பிரித்தெடுத்து அவற்றிலிருந்து 100 வகையான மருந்துப் பொருள்களைப் பற்றி ஆய்ந்தறிந்து அவற்றின் பயன்களை விளக்கியுள்ளனர். இன்றைய அறிவியலார்கள்! அதற்கு ஈடாக நம் சித்தர்களும் நூற்றுக்கும் மேற்பட்ட விலங்கினங்களின்

மருத்துவக் குணங்களைக் குறித்த பாடல்களை அளித்துள்ளனர். சித்தர்களின் நூல் திரட்டிலிருந்து இதுவரை தொகுக்கப்பட்ட விலங்கினங்களின் அகரவரிசைப் பட்டியல் இதில் இணைக்கப்பட்டுள்ளது. அவைகளின் அடையாளமறிந்து அவற்றைச் சேகரித்து அவற்றிற்கான அறிவியல் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவ வளர்ச்சியில் விலங்கின மருந்துகளின் பங்கு பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உணவே மருந்து

மக்களின் உணவு பலவகைப்பட்டது எனினும், தாவர உணவுகளைப் போலவே ஊன் உணவும் மக்களின் பயன்பாட்டில் உள்ளது. குறிப்பாக இறால், நண்டு, மீன், ஆமை, பறவைகள், ஆடு, மாடு, மான் போன்ற விலங்கினங்கள் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விலங்கினங்கள் உணவுக்காகப் பயன்படும் அதே நேரத்தில், அந்த விலங்கினங்களின் இறைச்சி எத்தகைய மருத்துவக் குணங்கள் கொண்டது என்பதையும், அவற்றிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகளைப் பற்றியும் சித்தர்கள் தமது பாடல் திரட்டில் விவரித்திருப்பது ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய அரிய செய்திகளாகும்.

ஏறத்தாழ 115 வகையான விலங்கினங்கள் உணவாகப் பயன்படுத்தப்படுவதும், அதனை உண்பதால் ஏற்படும் நற்பலன்களைப் பற்றியும், தீய விளைவுகளைப் பற்றியும் அறிந்து கொள்ளச் சித்த மருத்துவ நூல்களே துணைபுரிகின்றன என்றால் அது மிகையாகாது. அவற்றை முழுமையாக விவரிப்பின் இங்குப் பக்கங்கள் பெருகுமென்பதால் சிலவற்றை மட்டும் இங்குக் காணலாம்.

சித்தர்களின் பாடல்களைத் தொகுத்துக் கூறிடும் பதார்த்த குண விளக்கம் பதார்த்த குண சிந்தாமணி போன்ற நூல்களில், ஏறத்தாழ 23 வகையான கடல், மற்றும் ஆற்று மீன்களின் மருத்துவக் குணங்களைக் குறித்தும், நண்டு, இறால் ஆமை போன்றவற்றின் மருத்துவப் பயன்கள் குறித்தும், பறவை வகைகளில் ஏறத்தாழ 44 வகையான பறவைகளுக்கும், ஆடு, மாடு, பன்றி, புலி, கரடி, எலி, முயல் போன்ற பல வகையான பாலூட்டி விலங்கினங்களுக்குமுரிய மருத்துவக் குணங்களையும் கூறிடும் பல பாடல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

இவையன்றி வரால் மீனின் தலையிலுள்ள கல் போன்ற காதுறுப்பினைப் (earstone) பயன்படுத்தி, அதிலிருந்து தயாரிக்கப்படும் மச்ச இரத்தின அஞ்சனம் அல்லது வரால் மீன் மைகண் நோய்களைப் போக்கிடும் என்பதை,

பெரிய வரால்மீன் கல்குங்கு மப்பூபேசும் அந்நிறையாங்
கரியஞ்சனக்கல் துட்டெடையுங் கனக்கக் குழியில் தானிட்டு
தெரியப்புளி மாதுளைச் சாற்றில் திறமாயரைத் தேயுலர்த்தி
அரிய பொடியைக் கண்ணிடஅ கலும் பூச்சதை அஞ்சனமே
அகத்தியர் நயன விதி ஐந்நூறு)

என்ற பாடல் விளக்குகிறது.

மேலும் வரால்மீனின் இரைக்குடலை எடுத்து, அதே எடையுள்ள பசுவெண்ணெய் இவ்விரண்டையும் செப்புப் பாத்திரத்தில் வைத்து, வெண்கலப் பாத்திரத்தாலிழைத்து, பிறகு அதனை வழித்தெடுத்து அதில் ஒரு சிறிய பயறளவு எடுத்துக் கண் இமையில் தடவக் கண் படலம் குந்தகம், நாகபடலம், கழலை, ஆணிப்பூ தீருமென்றும், இதனை அமிர்த சஞ்சீவி என்றழைப்பர் என்றும் தெரியவருகின்றது.

இதற்குரிய அறிவியல் ஆய்வுகள் அதிகம் தேவைப்படுகின்றன. அன்றியும், எல்லா விலங்கின மருந்துப் பொருட்களுக்குமே அறிவியல் அணுகுமுறை தேவைப்படுகிறது.

உதாரணமாக

உடும்பு எனும் விலங்கினைப் பற்றிக் கூறும்போது

கிட்டும் உடும்பிறைச்சி கேள்விநோய் மூலநோய்
வெட்டைசிரநோய் சோபை மேகப்புண் குஷ்டுகபஞ்
சீதமிரத் தக்கடுப்பு தீராக் குடல் வாதம்
பேதியிவை போக்குமெனப் பேசு

சொல்வாத பித்தமொடு தோல் வறட்சி யும்போம்
பலமிலாத் துர்ப்பலர்க்கும்பாரில் - பலம்வந்
திருந்துவர்ப்பி னிப்பும் இயற்கையிலே உள்ள
உடும்பின் இறைச்சிதனை உண்.

எனும் பாடல் வழி. துவர்ப்பு இனிப்புச் சுவைகளையுடைய உடும்பு இறைச்சியால் காதுநோய், மூலம், வெட்டை, தலை நோய், வீக்கம், மேகம், புண், குட்டம், கபம், சீத இரத்தக் கடுப்பு, குடல்வாதம், பேதி, வாதபித்தம் , தோல் வறட்சி முதலானவை நீக்குவதுடன் உடல் பலம் பெருகுமென்றும் அறிகிறோம். இதுவன்றி உடும்புச் சூரணம், உடும்பு லேகியம் செய்து பயன்படுத்தும் முறைகளும் விவரிக்கப்பட்டுள்ளன. இதுபோல் எண்ணிறந்த விலங்குகளின் உண் உணவைப் புசிப்பதால் உண்டாகும் நல்ல மற்றும் தீய விளைவுகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இவையன்றி விலங்குகளின் எலும்புகள், குளம்புகள், கொம்புகள், தோல் பொருட்கள், கூடுகள் ஓடுகள் போன்ற

இன்ன பிற பொருட்களும் சித்த மருத்துவத்தில் பற்பங்கள், செந்தூரங்கள் மற்றும் சுண்ணங்கள் தயாரிக்கப் பயன்படுத்தப் படுகின்றன.

விலங்கின மருந்துகள்

குறிப்பாகக் கடல் பொருட்களான சங்கு, சிப்பி, முத்து, கிளி ஞ்சல், பலகறை, பவளம், பவளப்புற்று, நண்டுக்கல், ஆமை ஓடுகள், இவற்றிலிருந்து பெருமளவில் மருந்துப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. முதலில் இவை அனைத்திற்குமான மூலப்பொருட்கள் எவை எவை என்பதை அறிந்து கொள்ள வேண்டியது சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கான முதல்படிஎனக் கூறலாம். ஏனெனில் சங்கு போன்ற எளிதில் அடையாளம் அறிந்திட இயலும் கடல்படு பொருட்களில் சந்தேகம் ஏற்படுவதில்லை. ஆனால் கடல்நுரை, பலகறை, சிப்பி, கிளிஞ்சல், அம்பர் இவைகளைப் பற்றிய அறிவியல் ஆய்வு இன்றியமையாதது ஆகின்றது.

ஏனெனில் பலகறை என்று டெத்துக்கொண்டோமேயானால் இன்றைய அறிவியல் வல்லுநர்கள் பலகறை வகைகளை ஆறிவியல் பூர்வமா, ஆராய்ந்து ஏறத்தாழ 30 வகையான பலகறைகளைத் தரம் பிரித்துள்ளனர். இவற்றின் எனும் பலகறை இனங்கள் நம் பகுதியில் அதிக அளவில் கிடைக்கின்றன. இந்தப் பலகறையின் தோற்றம், சிறிய கூழாங்கல் அளவிலிருந்து ஒரு பெரிய ஆரஞ்சுப் பழ அளவிற்குக்காணப்படும். வெள்ளை, மஞ்சள், பழுப்பு வண்ணம், மற்றும் பல வண்ணப் புள்ளிகளைக் கொண்டதாகக் கிடைக்கின்றன. சிறய பலகறை (அ) சோழிகள், தாயம், பல்லாங்குழி போன்ற விளையாட்டு களிலும், பெரிய பலகறையானது வண்ணமிகு கலைப் பொருட்கள் தயாரிப்பிலும் பயன்படுத்தப் படுகின்றன. இந்தப் பலகரையானது நவீன மருத்துவத் துறையில் மருந்துகள் தயாரிக்கப்படுவதற்குரிய சான்றுகள் ஏதும்

இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் சித்த மருத்துவத்தில் இந்தப் பலகரையின் பங்கு பற்றி அறியும்போது, இதற்குரிய அறிவியல் ஆய்வுகள் அதிகம் மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலமாகச் சித்த மருத்துவத்தின் மேன்மை பற்றி இன்றைய அறிவியல் உலகம் அறிந்திடும் வண்ணம் அறிவிப்பது அவசியமாகிறது.

பலகறை என்பது சோகி, கவடி, வராடி என்று அழைக்கப்படுகிறது எனப் பிங்கல நிகண்டு, மண்ணிய சுவடி சோகி, வராடியே பலகறைப் பேர், உரைக்கிறது. பலகறையில் பல வகைகள் இருப்பினும் வெண்ணிறப் பலகறையே. சித்த மருத்துவத்தில் பற்பம், செந்தூரம், சுண்ணம் செய்யப் பயன்பட்டு வருகிறது. நரைத்த பலகரை என வரும் கீழ்வரும் செய்யுள்கள், இது வெண்ணிறப் பலகறை என்றும், இதனால் மந்தம், தாகம், கிராணி, (வயிற்று நோய்கள்) கண்ணோய்கள், வாத தொந்தம், பலவிதக் குத்தல், கபவாதம், விடச் சுரங்கள் கல்லீரல், மண்ணீரல் நோய்கள், சுவாச காசம் போன்ற நோய்கள் தீருமென்றும் கூறுகின்றன.

மந்தந் தாகங் கிராணி மாவிடச் சுரங் கண்ணோய்
தொந்தம் பரிநாமச் சூலைகய - மிந்த
வுலகறையைக் காலொடிவை யோடு நரைத்த
பலகறையைக் காணினியம் பார்.

(பதார்த்த குணசிந்தாமணி)

மேலும் பலகறையைச் சுத்தியாக்கும் பலமுறைகளும், பலகறைப் பற்பம் செந்தூரம் செய்யும் முறைகளும் குணபாடம்: (தாது சீவ வகுப்பு) எனும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. இந்தப் பலகறைப் பற்பத்தைப் பால், பன்னீர் வெண்ணெய் என்ற பல துணை மருந்துகளுடன் அனுபானித்துக் கொடுக்கத் தீரும். நோய்களைக் குறித்த அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளது. இவையன்றி இயற்கையாகவும் செயற்கையாகவும், வெறிபிடித்த நாய், நரி,

மனிதர், பசு, எருமை, பன்றி போன்றவைகளினால் உண்டாகும் நஞ்சிற்க்குப் பலகறைப் பற்பத்தைத் தக்கதுணை மருந்துகளுடன் கொடுக்க வேண்டுமென்பதையும், அதற்கெனப் பரிகரிக்கப்பட்ட உணவினையும் அளிக்க வேண்டுமென்பதையும் குறிப்பிட்டுள்ளது.

முள் தைத்த காயம், கத்தி, ஈட்டி, போன்றவற்றால் உண்டாகும் காயம், கதை, தடி, உலக்கையால் ஏற்பட்ட காயம், பலவிதத்தில் அடிபட்டு ஏற்பட்ட காயம் இவற்றிற்கு எந்தெந்த முட்டைக் கருவில் கலந்து தடவ வேண்டும் என்ற குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

சித்த மருத்துவம் அறிந்தவர்களைத் தவிர, சாதாரண மானவர்கள் இதனைத் தாயம் , பல்லாங்குழி போன்ற விளையாட்டுக்குரிய பொருளாகவும் அலங்காரப் பொருளாகவும் மட்டுமே அறிந்திருப்பர். பலகறை, பல்வேறு மருத்துவப் பயன்பாட்டிற்குரியது என்று நுணுகி ஆராய்ந்து, அதனை இன்றைய அறிவியல் வல்லுநர்களுக்கு ஒரு சவாலாக அமைந்திருக்கும் சித்தர்களின் அறிவியல் அறிவு வியப்பிற்குரியதாகும். இன்றைய அறிவியல் உலகம் பலகறையைப் பற்றி அறிந்திருப்பது கடுகளவே என்று கூடக் கூறலாம்.

இது மட்டுமல்ல, சித்தர்கள் கூறிடும் விலங்கின மருந்துப் பொருட்கள ஒவ்வொன்றையும் அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து கூறினோம் என்றால் அது சித்த மருத்துவத்தின் சிறப்பினைச் சிந்திக்க வைத்திடும் அரிய பணியாக அமைந்திடும். இன்று சென்னையில் இயங்கும் இம்காப்ஸ் நிறுவனத்தினர் (இந்திய மருத்துவக் கூட்டுறவு மற்றும் மருந்து தயாரிப்பு நிறுவனம்) தேரையர் கரிசல் 300 எனும் நூலினை ஆதாரமாகக் கொண்டு பலகறைப் பற்பத்தைத் தயாரித்து அதனை 50-100 மி. கி. அளவில் நெய்

அல்லது வெண்ணெயுடன் கலந்து உண்ணத் தேகத்தில் உண்டாகும் வெட்டை நோய், மேகச்சூடு, நீர்கட்டு, விஷம், போன்றவை நீங்குமென்று விளக்கி விற்பனை செய்து வருகின்றனர். காந்தி கிராமம் தஞ்சை மத்திய மருந்தகம், பாளை அரசு சித்த மருத்துவக் கல்லூரி, மற்றும் சில தனியார் சித்த மருந்தகங்களும் பலகறைப் பற்பத்தைத் தயாரித்துப் பயன்படுத்தி வருகின்றனர். எனினும் பயனை விரிவாக அறிந்தோர், எண்ணிக்கையில் குறைந்தோர் என்றே கூறலாம். எனவே சித்த மருத்துவத்தில் அதிக அளவில் விலங்கின மருந்துகளைப் பற்றிய செய்திகளைப் பலரும் அறிந்திட வழி வகைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொதுவாக மூலப் பொருட்களைச் சுத்தி செய்யும் முறைகளும், மருந்துகளின் செய்முறைகளும் பலவகைகளில் கூறப்பட்டுள்ளன. சித்த மருத்துவத்தில் ஆர்வம் மிக்க ஆய்வு மாணவர்கள் இவைகளை ஒன்றன்பின் ஒன்றாகச் செய்து பார்த்து, எளிய தரமுள்ள முறைகளை வெளிப்படுத்தலாம்.

உதாரணமாக பலகறை பற்பத்தினை, பல முறைகளில் தயாரித்துப் பார்த்து அதன் தரத்தை நிர்ணயிக்கலாம். பலகறைப் பற்பத்தில் மருத்துவக் குணங்களை ஆராய்ந்து அறிந்து அதனை எளிய முறையில், எல்லோரும் பயன்படுத்தும் வகையினில் உறைவடிவ மாத்திரைகளாகத் தயாரிக்கலாம்.

எத்தனையோ வகையான பலகறைகள் கிடைக்கும் போது குறிப்பாக வெண்ணிறப் பலகரையே சித்த மருத்துவத்தில் பயன்படும் காரணங்களை ஆராயலாம். அதனுடைய வேதியல் கூறுகளை ஆராய்ந்து , அதனை மற்றைய பலகறைகளின் வேதியியல் கூறுகளுடன் ஒப்பிட்டு அறியலாம்.

இவ்வாறு சித்தர்கள் கூறிய செய்திகளை, இன்றையை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து பல அரிய மருந்துப் பொருட்களை வெளிப்படுத்தி, அதன் மூலம் சித்த மருத்துவம், ஆங்கில மருத்துவத்திற்கு இணையாக வளர்ச்சி பெருவதற்கு வழிகோலலாம்.

மருத்துவம் குணமிகு விலங்கினங்கள்

1. அட்டை
2. அம்பர் மீன் அம்பர் பொன்னம்பர்
3. அயிரை மீன்
4. ஆரால் மீன் சிற்றாரால் பேராரால்
5. ஆமை கறி-ஓடு-முட்டை
6. ஆள்காட்டி பட்சி - முட்டை
7. இந்திரக் கோபப்பூச்சி - தம்பலம்
8. இறகுகள்
9. இறால் மீன்
10. ஈசெல்
11. உடும்பு
12. உல்லமீன்
13. உழுவை மீன்
14. உள்ளான்-கொசு உள்ளான்-கோரையுள்ளான்
15. ஊமைச்சி-நத்தை
16. எச்சங்கள்
17. எரிவண்டு
18. எருமை
19. எலி -பெருச்சாளி - வெள்ளெலி
20. எலும்புகள்
21. ஒட்டகம்
22. ஓணான்
23. ஓலைவாளைக் கருவாடு
24. கச்சற் கருவாடு

25. கடல்நுரை-கணவாய் -ஓடு-மீன் நஞ்சு
26. கடல்நண்டு 'கழனி நண்டு' வயல் நண்டு
27. கரடி
28. கருங்கொக்கு
29. கருவெளவால்-வெள்ளைவெளவால்-மீன்
30. கவுதாரி
31. கழுதை
32. கற்றாளை மீன்
33. காக்கை - அண்டங்காக்கை
34. காடை
35. காண்டாமிருகக் கொம்பு - தோல்
36. கிருட்டிணப் பட்சி
37. கிழங்கான் மீன்
38. கிளிஞ்சல் பெருங்கிளிஞ்சல் - சிறுகிளிஞ்சல்
39. கிளுவை
40. கீரிப்பிள்ளை
41. குதிரை
42. குருவி ஊர்க்குருவி-கருங்குருவி
சிட்டுக்குருவி-தூக்கணாங்குருவி
43. குளவி-குளவிக்கூடு
44. குளம்புகள்
45. குயில்
46. குறவைமீன்
47. குறும்பாடு-செம்புலியாடு-வரையாடு
48. கூழைக்கடா
49. கெண்டைமீன்
50. கெளிறு மீன்
51. கொக்கு
52. கொசு உள்ளான் - கோரையுள்ளான்
53. கொடியாடு-செம்மறியாடு-வெள்ளாடு
54. கொள்ளிக்கருவாடு

55. கொம்புகள்
56. கோட்டான்
57. கோவேறு கழுதை
58. கோழி - கருங்கோழி - கானாங்கோழி
சம்பங்கோழி - வான்கோழி
59. சங்கு - வெண்சங்கு - மூள்சங்கு
60. சன்னக்கூனி
61. சன்ன கெண்டை
62. சாணம்
63. சிவிப்பட்சி
64. சுறாமீன் - சுறாக்கருவாடு
65. சூரைப் படட்சி
66. சிறுநீர்
67. சேல்கொண்டை
68. சேவல்
69. தாரா
70. திருக்கைமீன்
71. தேன் - தேன்கூடு
72அ. தூக்கணாங்குருவி
72ஆ. நண்டுக்கல்
73. நமிட்டுப்பட்சி
74. நரி
75. நாரை
76. நீர்க்காக்கை
77. நீர்நாய் - மரநாய்
78. நாரை
79. பசு
80. பலகறை - சோகி
81. பவளம்
82. பள்ளையாடு

83. பன்றி

ஊர்ப்பன்றி

காட்டுப்பன்றி

முள்ளம்பன்றி

84. பால் பொருட்கள்

85. பாம்புச்சட்டை

86. புறா

மணிப்புறா-மனைப்புறா

மாடப்புறா-வெண்புறா

வரிப்புறா-தவிட்டுப்புறா

பச்சைப்புறா-வண்ணப்புறா

87. புகையூறல்

88. புலி

89. பூநாகம்-மண்புழு

90a. புனுகு

புனுகுச்சட்டம்

90b. பூனை-புனுக்குப்பூனை

91. பொன்னந் தட்டான்

92. மடவை மீன்

93. மடையாள்

94. மயறி மீன்

95. மயில்

96. மாடு

97. மான்

கடமான்

கலைமான்

கொம்புகள்

கத்தூரி

98. மின்மினிப்பூச்சி

99. முசுறு முட்டை

100. முட்டை ஓடுகள்

101. முதலை
102. முத்துச் சிப்பி - முத்து
103. முள்ளம் பன்றி
104. முயல்
105. யானை
106. வரால் மீன் - தலைக்கல்
107. வாத்து
108. விச்சுளிப் பறவை
109. விலாங்கு மீன்

துணை நின்ற நூல்கள்

அகத்தியர் நயன விதி 500 (மூலமும் உரையும்)
ர. நமச்சிவாயராஜயோகி - 1636 ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை சென்னை.

நாகமுனிவர் நயன விதி 200

2. சித்த வைத்திய பதார்த்த குண விளக்கம் (தாது - ஜீவ வர்க்கம்)
சி. கண்ணுசாமிப்பிள்ளை 1941 B. இரத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை.

3. பதார்த்த குண சிந்தாமணி 1926
காசிம் முகையதீன் ராவுத்தர் மாறன் அச்சுக்கூடம் சென்னை.

4. குணபாடம்
R. தியாகராஜன் 1968 தமிழ்நாடு அரசு வெளியீடு.

சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழிமுறைகளும்: சித்த மருத்துவங்களின் தரக்கட்டுப்பாடும்

(அ. ச. உலகநாதன், பாளையங்கோட்டை)

(STANDARDIZATION OF SIDDHA DRUGS)

நோய், நோய்க் கணிப்பு மருத்துவம் இவையெல்லாம் மரபுவழியாகச் சமயத்துடன் தொடர்புபடுத்தியே சொல்லப்பட்டிருக்கின்றன. இன்றைக்கும் கூடக் கிராமப்புறங்களில் மரபுவழி மருத்துவர்கள் பெரும்பான்மையான நோய்களுக்கு மருத்துவம் செய்கின்றனர்.

நவீன மருத்துவ மருந்துகள் பல கிராமங்களில் இன்றைக்கும் தெரியாத, புதிராக உள்ளன. மரபு வழி மருத்துவத்தைப் பயன்படுத்தும் காரணமே அது எளிதாகக் கிடைக்கிறது மலிவாகக் கிடைக்கிறது, செயல் திறன் மிக்கது என்பதுதான்.

சித்த மருத்துவத்தைப் பின்பற்றி மருத்துவம் செய்கின்ற பட்டதாரி மருத்துவர்கள் சுமார் 872 பேர் உள்ளனர். இதைத் தவிர 15,000 பதிவு பெற்ற இந்திய மருத்துவ முறை மருத்துவர்களும், (Registered R.I.M.P)15,000 பதிவு செய்யப்படாத இந்திய மருத்துவ முறை மருத்துவர்களும் உள்ளனர். இதைத் தவிர அரசின் சார்பில் 2 சித்த மருத்துவக் கல்லூரிகளும், உயர் மருத்துவ மனைகளும், சென்னை உட்பட்ட எல்லா மாவட்டத் தலைமையகங்களிலும், கூட்டாட்சித் தலைமையகங்களிலும், 256 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் (Primary Health Centres)ஊரக

மருந்தகங்களிலும் சித்த மருத்துவமனைகள் செயல்படுகின்றன.

இத்தனை பேர்க்குத் தேவையான மருந்துகளை, அரசு நிறுவனங்களாலே, சரியான நேரத்தில், சரியான அளவில் வழங்க முடிவதில்லை. இதன் காரணமாகப் புற்றீசல் போல், பல தனியார் மருத்துவத் தயாரிப்பு நிறுவனங்கள் தோன்றி உள்ளன. ஆனால் இந்த நிறுவனங்களின் குறிக்கோள், குறைந்த நேரத்தில் நிறைந்த வருமானத்தைச் சேர்ப்பது. இது மட்டுமல்லாமல் இந்நிறுவனங்களுக்கு அனுமதி உரிமம் பெறுவது மிகவும் எளிதாக உள்ளது. இதன் காரணமாகவும், மருந்துகளின் தரத்தைச் சோதிப்பதற்கான தரக்கட்டுப்பாடு நிலையங்கள், ஆய்வு வசதிகள் முதலியவை இம்மருத்துவ முறையின் தலைமைப் பீடமாகிய, சிறப்புடைய இக்கல்லூரியில் கூட இல்லாமை வருத்தத்திற்கு உரியது. மேலும் பன்னாட்டு மருந்து நிறுவனங்கள்,(Multinational Pharmaceutical Companies) கூட மூலிகை மருந்துகள் செய்வதில் ஆர்வம் காட்டி வருவதால், மருந்துகளின் விலையும் வானளாவ உயர்ந்து உள்ளது. தரக்கட்டுப்பாடு என்று சொல்லும்போது செய்து முடிக்கப்பட்ட மருந்துகளின் தரம் செவ்வனே இருப்பதும் எதிர்விளைவு இல்லாது இருப்பதும், எளிதாகச் சாமானியப்பட்ட மக்களாலும், வாங்கிப் பயன்படுத்தக் கூடிய விலைக்குள் இருத்தல் வேண்டும். இதற்கான சட்டம் இயற்றப்படுதல் வேண்டும்.

அச்சட்டங்கள் காகித அளவில் இல்லாது, இம்மருத்துவ மனையின் தலைவரோ, அதற்கான தரக்கட்டுப்பாடு நிலையத்தின் தலைவர்களோ, தரம் குறைந்து மருந்து உற்பத்தி நிறுவனத்தின் உரிமத்தை ரத்து செய்யக்கூடிய அதிகாரம் பெற்று இருக்கவேண்டும். இம்மருந்து செய் நிறுவனங்களில், R.& D. Research & Development) ஆராய்ச்சியும், வளர்ச்சியும்) பகுதியும், அது முறையான சித்த மருத்துவப் பயிற்சி பெற்ற மருத்துவர் தலைமையின் கீழ் இருத்தல் கட்டாயம் ஆக்க வேண்டும்.

ஒவ்வொரு மருந்தின் கலனிலும், அது தயாரித்த நாள், தயாரிப்பு வரிசையின் ஆயுட்காலம், அதன் விளைவு, எதிர் விளைவு, அதில் சேரும் மருந்துகளின் தாவரவியல் பெயர், அதன் அளவு, அதி சேர்கின்ற வீதம் முதலியவை தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும். Propertiry Siddha Medicine or Patent Medicine.

(தனியார் உரிமம்) என்ற வார்த்தைத நீக்கப்பட்டு, அந்த மருந்து செய்வதற்கான நூலின் ஆதாரப்பெயர் சேர்க்கப்படவேண்டும்.

இது தரநிர்ணயத்தில் முதல் தடை இருப்பது, ஒரே மருந்தைச் செய்கின்ற பல முறைகளும், பல்வேறு புத்தகங்களில் குறிக்கப்பட்டு உள்ளன. இவை சேர்கின்ற மருந்துகளும், தனி மருந்து அளவும், செய்வதற்குப் பயன்படுகின்ற முறைகளிலும் பல்வேறாக மாறுபடுகின்றன. நடைமுறையில் ஒரே மருந்து பல்வேறு நிலையங்களில் செய்யப்படும்போது, ஒரே செயல் திறன் உடையதாக இருப்பது இல்லை.

மேலும் மூலிகைகளின் பெயர்கள், தமிழகத்தின் பல பகுதிகளில், பல்வேறு பெயர்களாக இருப்பது குழப்பத்தை ஏற்படுத்துகிறது. எனவே இதுதான் சரியான மருந்து என்பதற்கான ஆதாரம் ஏதும் இல்லை.

இதன் முதல் முயற்சியாகப் பாரதத்தின் சித்த மருந்துகள் என்ற நூல் நடு அரசால் வெளியிடப்பட்டது. ஆனால் இன்றைய நிலையில் எந்த ஒரு மருத்துவ நிலையமும், செய்து முடிக்கப்பட்ட மருந்துகளை, இந்த அடிப்படையில் தான் செய்தது என்று சொல்ல முடிவதில்லை. மேலும் ஒவ்வொரு மருந்து நிறுவனமும், தன் மனதிற்கு ஏற்றவாறு எல்லாம் மருந்துகளைக் கலக்கின்றன. இவைகளில் நட்புச் சரக்கு, பகைச் சரக்கு முதலிய அடிப்படை, வெப்ப வீரியம், தட்ப வீரியம் என்ற அடிப்படையும், சுவையின் தன்மையும், குணங்களும் மிஞ்சப்படுகின்றன.

எனவே பாரத சித்த மருத்துவம் என்ற நூலில் சொல்லப்பட்ட ஒவ்வொரு மருந்தும், அறிவியல் பூர்வமாக அல்லது சித்த அறிவியலின் அடிப்படையிலோ அல்லது நவீன மருத்தறிவியலின் அடிப்படையிலோ நிலைப்படுத்தப்பட வேண்டும்.

சித்த மருத்துவத்தில், ஒவ்வொரு மருந்துப் பொருட்களுக்கும் 5 தன்மைகள் சொல்லப்படுகின்றன. இந்த 5 தன்மைகளும் ஐம்பெரும்பூதங்களின் அடிப்படையில் அமைந்து உள்ளன. இந்த 5 தன்மைகளாவன, சுவை, குணம், வீரியம், விபாகம், பிரபாவம் முதலியவை. இதில் சில பூதங்கள், பிற பூதங்களுக்கு எதிர்ப்புத் தன்மையும், சில பூதங்களுக்கு நட்புத் தன்மையும் உடையதாக உள்ளன.

அதேபோல் சில சுவைகள் பிற சுவைகளுக்கு நட்புச் சுவையாகவும் இருக்கும். தட்ப வீரியம் உடைய மருந்தையும் வெப்ப வீரியம் உள்ள மருந்தையும் சேர்த்தால் ஆகாது. எனவே மருந்து செய்யும்போது, இந்த அடிப்படை எல்லாம் கவனிக்கப்பட்டனவா என நிலைநிறுத்தல் அவசியம். இதன் அடிப்படையில் ஒரு கலவை மருந்தில், இன்னின்ன மருந்துகள், இந்த இந்த அளவுகளில் தான் சேர்த்தல் ஆகும் என்பதற்கும் ஒரு கட்டுப்பாடு கொணரப்படவேண்டும். இதைப் போலவே முடிக்கப்பட்ட ஒவ்வொரு மருந்தையும், வேதியியல் அடிப்படையிலான தரநிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

பாரதத்தின் சித்த மருந்துகள் என்ற நூலில் சொல்லப்பட்ட முறைப்படி, செய்யப்பட்ட மருந்துகளை, அதன் கனிமப் பொருளின் அளவு, கரிமப் பொருளின் அளவு, நீரில் கரையும் பொருளின் அளவு கொழுப்பில் கரையும் பொருளின் அளவு, உயிர் வேதியியல் அளவு, முதலியவை நிர்ணயம் செய்து, அந்தத் தரத்தின் அடிப்படையிலே, பிற

நிறுவனம் செய்யும் மருந்துகள் இருக்கின்றனவா என நோக்கியும், புதிதாகச் சேர்க்கப்பட்ட கலவை மருந்துகளை, அந்த மருந்துகளின் 5 தன்மை அடிப்படைகள், நட்பு, பகை, அடிப்படைகள் முதலியவை நன்கு ஆராயப்பட்டு செயல் திறன், நச்சுத்தன்மை முதலியவை சோதிக்கப்பட்ட பின்னரே அவை மருந்துக் கடையில் விற்பனை செய்யப்படுதல் அவசியம்.

உலோகங்கள், பாடாணங்கள் சேர்ந்த மருந்துகள், மருந்து சீட்டுகள் இல்லாமல் வழங்கப்படுதல் கூடாது. இம்மருந்துகளை, மருந்தகங்களில் கையாளுகின்ற விற்பனையாளர்கள் முறையாகப் பயிற்சி பெற்றிருத்தல் அவசியம். தமிழகத்தில் நெல்லையில் ஒன்றும், சென்னையில் ஒன்றும், பழனியில் ஒன்று ஆகிய இடங்களிலாவது இத்தரக்கட்டுப்பாடு நிலையங்கள் உடனடியாகத் திறக்கப்படுதல் அவசியம்.

தரக்கட்டுப்பாடு இல்லாத போது, அதில் கலப்படம் செய்வதும் சாத்தியம் ஆகிறது. இதனால்தான் பங்களாதேஷ் போன்ற சிறிய நாடுகள் கூட, யுனானி, ஆயுர்வேத மருந்துகளின் தரக்கட்டுப்பாட்டிற்கு ஆன விதிகளை ஏற்றுள்ளது.

மருந்து தயாரிப்பாளர் அடிப்படையில், ஒரு மரபுவழி மருத்துவராக இருக்க வேண்டும் என்பதும், செய்துமுடிக்கப்பட்ட மருந்து, ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுத், தரக்கட்டுப்பாடு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். இத்தரக் கட்டுப்பாட்டிற்கு பின், மரபு வழி மருந்து என்று சொல்லி விற்கப்படுகின்ற செயலற்ற மருந்துகள் பல தடை செய்யப்பட்டு உள்ளன. இதனைச் சித்த மருத்துவத்திற்கும் மேற்கொண்டால், சித்த மருத்துவம் பெரிதும் வளரும் என்பதில் ஐயமில்லை.

அண்மையில் வெளிவந்த Doctor Drug Disease என்ற இதழில் எப்படி ஒரு மிகப்பெரிய இந்தியமுறை மருந்து செய்நிலையம், ஆய்வு செய்யாமலே, வியாபார நோக்குடன், ஒரு மருத்துவரின் பெயரில் ஒரு ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டு உள்ளது என நிரூபித்து இருக்கிறது. இம்மருந்து ஸ்தாபனம் வியாபார நோக்கு உடையதே தவிர, மருந்தின் தரத்தைப் பற்றிக் கவலைப் படுவது இல்லை.

இதே கருத்தை இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் (IndianCouncil of Medical Research - ICMR) தலைவர் வலியுறுத்திச் சிறப்புமிகு மரவு வழி மருந்துகள் தரக்கட்டுப்பாடு விதிக்கப்படுமானால், வளர்ச்சி அடையும் எனக் கூறி உள்ளார்.!

தரமோடு செய்வோம்! வளமோடு வாழ்வோம்!!

வாழ்க சித்த மருத்துவம்.

சிவஞான சித்தியாரும் நோய்க் கணிப்பும்

ஆ. பகவதி
அரசினர்சித்தமருத்துவக்கல்லூரி,
பாளையங்கோட்டை.

பழங்கால அறிஞர்களாகிய சித்தர்கள், தங்கள் ஆன்ம சித்தியின் மூலம், மெய்ஞானத்தால் மட்டுமின்றி விஞ்ஞானத்தின் ஒரு பிரிவான மருத்துவத்திலும் பற்பல அரிய கருத்துக்களைக் கூறியுள்ளனர். அக்கருத்துக்களை முழுமையாகப் பகுத்தறிவு நோக்கில் ஆராய்ந்து, அறிதல் சித்த மருத்துவம் மேலும் முன்னேறுவதற்கான வழிவகை ஆகும். இதற்கான முதல் முயற்சியாக அளவை இயலைப் பற்றி அறிதல் வேண்டும். ஆகவே இங்கு சிவஞான சித்தியாரைக் குறிப்பிடுதல் சிறப்பு.

சிவஞான சித்தியார் எனும் நூல் மெய்கண்டாருடைய சிவஞான போதத்தின் வழி நூல் ஆகும். இந்நூலை இயற்றியவர் அருள்நந்தி சிவாச்சாரியார். இந்நூலின் அளவை இயல் பற்றி ஈரேழு பாக்கள் உள்ளன.

அளவை என்பது பொருள்களின் உண்மையையும், தன்மையையும் அறிவதற்குக் கருவியாய் உள்ளவை ஆகும். இதனையே வடமொழியில் பிரமாணம் என்பர். பிரமாணத்தின் வாயிலாக அறியப்படும் அறிவு பிரமேயம் ஆகும்.

தொல்காப்பியனார் ஆகம அளவைக்கு உடன் பட்டிருத்தலும், சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் அளவைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும், பரிமேலழகர் தன் உரையில் அளவைகளைப் பற்றிக் கூறியுள்ளமையும் அளவையின் தொன்மையை உணர்த்துகின்றன.

அளவைகள் மருத்துவத்துறையில், பிணியறி முறைமையிலும், நோய் தீர்ப்பதிலும் முதல் இடத்தை வகிப்பதால், அளவைகள் பற்றித் தெளிவாக அறிதல் இன்றியமையாதது.

அளவைகள், காட்சி, கருதல், உரை, அபாவம், உவமானம், அருத்தாபத்தி, உண்மை, ஐதீகம், இயல்பு, ஒழிபு எனப் பத்து வகைப்படும்.

1.0. காட்சி:

பொது உணர்வை முதலில் பெற்று ஐயந்திரிபறப் பொருட்களை அறிவதாகிய அறிவே காட்சி ஆகும். இது நான்கு வகையாகும்.

1.1. இந்திரியக்காட்சி

இது ஐம்புலன்கள் வாயிலாக நாம் அறியும் அறிவு ஆகும். சித்த மருத்துவத்தில் பிணியரி முறைமையின் அடிப்படையாகக் கருதப்படும் எண்வகைத் தேர்வு இந்திரியக் காட்சியிலடங்கும். உற்று நோக்கல், கண்கள், மூலமாகவும், நாடித் துடிப்பு, பரிசம் மற்றும் தட்டி அறிதல், மூலமாகவும், தமரகத் துடிப்பு, செவிக் குழாயின் காதுகளை அணைத்தறிதல் மூலமாகவும் அறியப்படுகின்றன. மேலும் மதுமேக நோயாளி தொந்த நிலையில் பாதிக்கப்பட்டிருப்பதை நோயாளி மூச்சுக் காற்றின் துர்நாற்றத்தை மூக்கினால் முகர்ந்தும் அந்நோயைக் கணிக்க முடிகிறது.

1.2. மானதக் காட்சி

நம் மனத்தால் அறியப்படும் அறிவே மானதக் காட்சி. நம் மனம் அறிந்தவற்றையே நம் கண்கள் நமக்கு உணர்த்துகின்றன. சிறந்த மருத்துவர், நோயாளியின் மாறுபட்ட நடையிலிருந்தே நோய்களைச் சரியாகக் கணித்தல் இதிலடங்கும்.

1.3. யோகக் காட்சி

இதன் அடிப்படை உண்மை தற்போது நிரூபிக்கப்பட்டு வருகிறது. இன்றும் நாட்டு மருத்துவர்கள் சிலர், நோயாளியைப் பார்த்த உடனேயே தங்கள் யோக சக்தியால் நோயைக் கணித்து மருத்துவம் செய்தல் இதனைச் சாரும்.

1.4 தன் வேதனைக் காட்சி

தற்போதைய ஆய்வுகள் பல எண்ணமே வாழ்வு என்ற கருத்தை நிலை நாட்டுகின்றன. பொதுவாகத் தீராத் தலைவலி, குன்மம், இரைப்பு நோய் போன்ற நோய்களால் அவதியுறுவோரில் பெரும்பாலோர் மனக்கவலை, மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டவர்களே. தலைவலி முதல் தமரக நோய் வரை பல நோய்கள் மனோ விகாரங்களாலேயே ஏற்படுகின்றன. எனவே, உள சிகிச்சையின் மூலம் உடல் நோய்களை நீக்குவது இவ்வளவையிடலங்கும்.

காட்சியில் ஒன்றை மற்றொன்றாகத் தவறாக அறிதல் திரிபுக் காட்சியாகும். உடல் வீங்குதல் கல்லீரல் தாபிதம் பிருக்கக் கோளாறு போன்ற பல காரணங்களால் ஏற்படலாம். பிணியறி முறைமையில் திரிபுக் காட்சி முக்கியமானது. சவிகற்பக் காட்சி என்பது பொருளின் பெயர், வகுப்பு, குணம், செய்கை முதலியவற்றைப் பற்றிய தெளிவான அறிவைத் தருவது. கண்ட மாலை நோயை ஆராயும் போது, அதனுடன் தோன்றும் கிரந்தி, அதற்கு அடிப்படையான ஊன்மிகு குணம் முதலியவற்றை அறிதல் ஆகும்.

2.0. கருதல்

முன்பே நாம் அறிந்த அனுபவத்தின் துணையால், நாம் காண்பதிலிருந்து அறியும் அறிவு, சித்த மருத்துவத்தில் சிறுநீர்ச் சோதனையில், அதில் விடப்படும் எண்ணெய்த் துளி அரவு போலிருப்பின் வாத நோய் எனவும், ஆழி போல்

தோன்றின் பித்த நோய், எனவும் முத்துப் போல் இருந்தால் கப நோய் எனவும் கணித்தல் கருதல் அளவையைச் சாரும். இவ்வளவை இயல்பேது, காரியவேது. அனுபலப்தியேது என மூவகைப்படும்.

2.1. இயல்பேது

இயல்பான காரணத்தினை அடிப்படையாகக் கொண்டது. பித்த நாடி மிகுந்து காணப்படின், பித்த நோய்களான குருதி, நீர் குருதி, அழல், மஞ்சள் காமாலை போன்ற நோய்களை அறிதல் இப்பிரிவிலடங்கும்.

2.2. காரியவேது

புறத்தோற்றத்தில் ஏற்படும் மாறுபாடுகளான காரியங்களினால் பெறும் அறிவு, கறுத்த தோல், கண், மலம், சிறுநீர் ஆகியவற்றின் மூலம் வாதம் தன்னிலை மிகுந்து இருத்தலை அறிதல் காரியவேதுவின் பாற்படும்.

2.3. அனுபலப்தியேது

காரண, காரியங்களின் அடிப்படையில் பெறும் அறிவே ஆகும். நோயாளியின் சுவாசப் பாதையில் ஏற்படும் வேறுபட்ட ஒலிகளால் இரைப்பு நோயைக் கணித்தலுக்குத் துணை செய்வது இவ்வளவையே.

3.0. உரை

சித்தர்கள் தங்கள் யோக வன்மையால் கண்ட உண்மைகளைத் தந்திரக் கலை, மந்திரக்கலை,உபதேசக்கலை என்ற மூன்று பிரிவுகளில் அறிகிறோம். இந்த அறிவே உரை எனப்பட்டது. வசியத்தின் மூலம் உள நோயைக் குணமடையச் செய்தலும், உளவியல் மருத்துவத்தில் அறுதியில் முறையில் காரணங்களை அறிதலும் தந்திரக் கலையின் மூலமே.

மந்திரங்களைச் செபித்துத் தியானத்தின் மூலம் மன அமைதி பெறுவது மந்திரக் கலையில் அடங்கும்.

பலவித நோய்களுக்கான காரணங்கள் நோய்களின் குறி குணங்கள், மருந்துகள் அவற்றை ஆக்குவதற்கான அடிப்படை விதிகள் போன்ற பல கருத்துக்களை உள்ளடக்கியது உபதேசக்கலை.

4.0. அபாவம்

ஒரு பொருளின் இன்மையை உணர்த்துவதே அபாவம். சிறுநீர் தன்னளவில் மிகாதிருப்பதால், நோயாளிக்கு மதுமேக நோய் இல்லை என அறிதல் அபாவமே. நீர்ச்சுருக்கு என்பது குறைந்தளவு இன்மையை உணர்த்தும் பிரிவான ஒப்பு இன்மையைச் சாறும். நீர்க்கட்டு என்பது முற்றிலும் இன்மை என்ற பிரிவில் அடங்கும்.

5. உபமானம்

நமக்குத் தெரிந்த ஒரு பொருளைப் பற்றிக் கூறி, அதன் மூலம் குறிப்பிட வேண்டிய கருத்தின் பொருளைத் தெளிவாக, உணரவைப்பதே உவமானம். சித்த மருத்துவத்தில் நாடி நடையைச் சீவ செந்துக்களின் நடைக்கு ஒப்பிடுதலும், மருந்தின் அளவைக் கடுகளவு, குன்றிமணி எடை, நெல்லி அளவு, மிளகளவு என ஒப்பிட்டுக் கூறலும், நோய்களை விளக்குங்கால் ஆமைக்கட்டி, நிர்த்தலை வாதம் என உரைப்பதும் உபமானத்தைச் சாரும்.

6. அருத்தாபத்தி

நாம் உணர்வதற்கான ஒன்றைச் சொல்லி, அதன் மூலம் குறிப்பிட வேண்டிய கருத்தின் பொருளடைவை உணர வைப்பதாகும். பகலுண்ணான் பருத்திருப்பான் எனும் கூற்று இரவில் ஒளித்து உண்பான் என்பதை உணர்த்துகிறது. மது அருந்தாதவர் நுரையீரல் புற்று நோய்காளாகார் என்பது

புகைப்பதால் புற்றுநோய் ஏற்பட்டது என்பதை உணர்த்துதலும் அருத்தாபத்தியைச் சாரும்.

7. உண்மை

என்றும், எவராலும், மறுக்க முடியாத அறிவு உண்மை எனப்படும். கப நாடி, மிகுந்து காணின் கப நோய்கள் உண்டாகும் என்பதும், இரத்தக் குழாய்கள் சேதமடையும் போது இரத்தப் பெருக்கு ஏற்படும் என்பது உண்மை அளவையலறியலாகும்.

8. ஐதிகம்

சித்தர்கள் மேற்கொண்ட வழி முறைகளை, அவற்றின் உட்பொருளை அறிந்தோ அறியாமலோ வழி வழியாகக் கடைப்பிடித்தல், ஐதிகம் எனப்படும்.

முற்காலத்தில் அம்மை போன்ற தொற்றுநோய்கள் ஏற்பட்டால், நோயாளியைத் தனிமைப்படுத்துதலும், பிறர் நோயாளியை நெருங்காதபடி அறிவிப்புச் செய்தலும், வேப்பிலை கட்டுவதும், இவ்வாறு அந்நோய் பரவாது தடுத்த வழி முறைகளும் ஐதீகத்தில் அடங்கும்.

9. இயல்பு

இது தெளிவற்ற ஒரு பொருளைப் பற்றிய ஐயம் அற்ற அறிவைத் தரும் அளவை. மருத நில நீர் நோய்களைத் தீர்க்கும் என்பதும், முல்லை நிலத்தில் வாழ்பவனுக்கு வல்லைப் பிணி தோன்றும் என்பதும் இயல்பின் வாயிலாக அறியும் உண்மையாகும்.

10. ஒழிபு

நாம் காணும் பொருளைப் பற்றிய கருத்துக்களில், ஐயத்திற்கிடமானவற்றைத் தவிர்த்து, இறுதியாகச் சரியான முடிவிற்கு வருவதே ஒழிபெனலாம்.

மூச்சுத்திணறல், புப்புசக் கோளாறு, சுவாசப் பாதைக் கோளாறு, கல்லீரல் தாபிதம் பிருக்கக்கோளாறு போன்ற பல காரணங்களால் ஏற்படுவதால் தகுந்த சிகிச்சையைத் தேர்ந்தெடுக்க ஒழிபு முறைப் பிணியறிதல் துணையாகிறது. பலவகைச் சுரங்கள் ஒரே நோய்க்கான பல குறி குணங்கள். அடிப்படை ஆகக் கொண்ட ஒரே நோய் போன்றவற்றிற்கு மருத்துவம் அளிப்பதில் ஒழிபு அடிப்படை ஆகும் என்பது மிகையாகாது.

அளவைகள் பத்துப் பிரிவுகளாகக் கூறப்பட்டாலும், காட்சியில், அபாவம், இயல்பு, உபமானம் ஆகியவையும், அனுமானத்தில் அருந்தாபத்தி, உண்மை, ஒழிபு முதலானவையும், உரையில் ஐதிகமும் அடங்கும்.

அளவை எனப்படும் பிரமாணம் பற்றிய தெளிவான அறிவானால் தான் பிரமேயத்தைச் சரியாக உணர முடியும். பிரமேயத்தைப் பற்றிய அறிவின் மூலமே நோய் நாடலில் மருத்துவர் சிறப்படைய இயலும். எனவே, சித்த மருத்துவத் துறையில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட அளவுகளைப் பற்றிய அறிவும், ஆகமங்களில் தெளிவும் இன்றியமை யாதவை.



உணவில் சித்த மருத்துவம்

மருத்துவர் N.சிதம்பரநாதன்,M,D. Siddha,
இணைப் பேராசிரியர் (மருத்துவம்-பொது)
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

வருமுன் காப்போம் என்பதே இன்றைய மருத்துவத்தின் குறிக்கோளாகும். இயந்திர வேகத்தில் இயங்கும் மனித வாழ்க்கையில், அன்றாட வாழ்வில், உணவுக்கு உள்ள முக்கியத்துவத்தை மறந்து விடுகிறோம் நாம். நம் சித்த மருத்துவத்தில் உணவே மருந்து மருந்தே உணவு எனக் கூறப்பட்டுள்ளது. அதன்படி நமது உடலைப் பிணி அணுகாதபடி பாதுகாக்கச் சிறந்த உணவுமுறை அவசியம். நமது சித்த மருத்துவ முறைப்படி கூறப்பட்டுள்ள உணவு முறைகள் நமது உடலை நன்கு வளர்ப்பதுமன்றி நோய் உடலை அணுகாதபடி பாதுகாக்கவும் செய்கின்றன. மேலும், இந்த உணவுப் பொருட்கள் நமது உடலில் ஏற்படும் நோய்களுக்கு அருமருந்தாகவும் பயன்படுகின்றன. எளிய இப்பொருட்கள் மருத்துவத்தில் புரியும் விந்தைகளை இங்குக் காண்போம்.

நமது உணவு வகைகளில் மருத்துவப் பொருட்களாகிய சுக்கு, மிளகு, திப்பிலி, உப்பு, புளி, இஞ்சி, சர்க்கரை, தேன், ஏலம், கிராம்பு, உளுந்து, அரிசி, பயறு வகைகள், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், தேங்காய், கடலை, கடலை எண்ணெய், மிளகாய், மிளகாய் வற்றல், சீரகம், வெங்காயம், கடுகு, கறிவேப்பிலை, வெள்ளைப்பூண்டு, கொத்தமல்லி, வெந்தயம், ஓமம், ஆமணக்கு, கருப்புக்கட்டி, மஞ்சள், பால், மோர், நெய், பருப்பு வகைகள், கீரை வகைகள்,

வாழைக்காய், வாழைப்பழம், பூசணிக்காய், வெண்டைக்காய், பாகற்காய், சுண்டைக்காய், பெருங்காயம் முதலிய பலவற்றைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறோம். இவற்றின் சிறந்த விஞ்ஞான ரீதியான மருத்துவக் குணங்களை அறிந்தோ, அறியாமலோ நெடுங்காலமாக அவற்றை உட்கொண்டு நல்ல ஆரோக்கியமாக உடலைப் பேணி வருகிறோம். பெரும்பாலோர் பலவற்றின் உண்மையான மருத்துவப் பயன்களை அறிந்து அவற்றைப் பயன்படுத்துகிறார்கள்என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. அவ்வாறு தெரியாதவர்களும் அவற்றைப் பற்றித் தெரிந்துகொண்டு பயன்படுத்தினால் நமது சித்த மருத்துவத்தின் மேன்மையும், தென்னிந்தியச் சமையல் கலைகளின் தனிச்சிறப்பும் பலரும் உணர்ந்து கொள்ள முடியும் என்ற நோக்கத்துடன்தான் இக்கட்டுரையில் முக்கியமான, அன்றாட வாழ்வில் நாம் பயன்படுத்துகிற மருத்துவப் பொருட்கள் சிலவற்றைப் பற்றி எழுதப் படுகின்றன.

தற்காலத்தில் காலையில் எழுந்தவுடன் பயன்படுத்துகின்ற காப்பி, தேநீருக்குப் பதிலாகக் குளிர்ந்த நீரைப் பருகுவதால் வாய், தொண்டை, மார்புப் பகுதியிலும், உணவுப் பாதையிலும் இரவில் தூங்கும்போது ஏற்படும் வறட்சி, சூடு இவை தணிந்து நெய்ப்புத் தன்மை உண்டாக்குவதுடன் மலம், நீர், எளிதில் கழியவும் உதவும். நாம் எல்லோருமே காப்பி, டீக்கு அடிமையாகிவிட்டோம் என்றாலும் கருப்புக் கட்டியும் கொத்து மல்லியும் கலந்து காப்பி குடிப்பதே நல்லது.

குளித்தபின், உடன் காலைச் சிற்றுண்டிக்காக முதலில் ஏதேனும் ஓர் இனிப்புச் சுவையுடைய பொருளை உட்கொண்டால், அது உமிழ்நீரை நன்கு சுரக்கச் செய்து பின்னர்ச் சாப்பிடும் உணவு வகைகளைப் பற்களால் நன்கு அரைப்பதற்கு வேண்டிய நெய்ப்புத் தன்மையைக் கொடுக்கிறது. இட்லி, தோசை அல்லது பொங்கல் முதலிய

உணவுகளைக் காலை உணவாக உண்ணுகிறோம் இதில் சேர்க்கப்பட்ட உளுந்தில் புரதச்சத்து, நிறைய உள்ளது. உடலுக்கும், நரம்புக்கும் வலிமையைக் கொடுக்கிறது. அதே உளுந்தினை உணவுடன் சேர்க்கும் துவையல், மிளகாய்ப்பொடி இவற்றைத் தாளிப்பதற்கு நல்லெண்ணெயுன் சேர்த்து பயன்படுத்துகிறோம். அந்தக் காலத்திலிருந்தே பெண் பருவமடைந்த காலத்தில் உடலுக்குப் பலம் ஏற்படுவதற்காக உளுந்தங்களியைக் கொடுக்கிறார்கள். அக்களியில் உளுந்து, நல்லெண்ணெய் , கருப்புக்கட்டி இவற்றைச் சேர்த்துத் தயாரிக்கிறார்கள். நல்லெண்ணெயானது உடலின் உள்ளும், வெளியேயும் வறட்சியை நீக்குவதோடு அல்லாமல் தோலுக்கும், தலைமயிருக்கும் பளபளப்பையும் கொடுக்கிறது. அதனால்தான், வாரத்திற்கு இருமுறை நல்லெண்ணெயை உடலிலும் தலையிலும் தேய்த்து முழுகுகிறோம். கருப்புக் கட்டியானது உடல் பலத்தை வளர்த்து நோய் எதிர்ப்புச் சக்தியை வளர்க்கிறது. துவையலில் மிளகாய், தேங்காய், உப்பு, புளி இவை சேருகின்றன. காரத்திற்காகச் சேர்க்கப்படும் மிளகாயானது இதயத்திற்குப் பலம் அளிக்கக்கூடியது. செரிமான நீர்களைச் சுரக்கச் செய்கிறது. அதே மிளகாயை இதய நோயாளிக்கு நெஞ்சுவலியைப் போக்கப் பற்றிடுகிறோம். இம்மிளகாயைக் கொண்டு செய்யும் குடிநீரானது மதுப்பழக்கம் உடையவர்களுக்கு அம்மதுவைக் குடிக்க எழும் ஆவலைத் தடை செய்யும் தன்மையைக் கொடுக்கிறது.

தேங்காய்த் துருவல் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. உடலுள்ளே ஏற்படும் புண்களை ஆற்றுகிறது. மலச்சிக்கல் ஏற்படாதவாறு செய்கிறது. தேங்காய்த் துருவலிலிருந்து எடுக்கும் நெய் குழந்தைகளுக்குத் தலையில் தேய்ப்பதற்கும், தீப்புண்களை ஆற்றவும் பயன்படுகிறது.

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பது பழமொழி. ஆனால், அதனை நாள் ஒன்றுக்கு ½ கிராமிற்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதிகக் கழிச்சலினால் உடலில் நீர்த்துவம் குறைந்திருப்பின் உப்பையும், சர்க்கரையையும் சம அளவு கலந்த பூரிதக் கரைசலைக் கொடுக்கலாம்.

புளியினால் சிறப்பான நன்மை ஏதும் இல்லை. பொதுவாகப் புளிக்குப் பதிலாக எலுமிச்சம்பழச் சாற்றினைச் சேர்ப்பது நல்லது.

மதிய உணவானது நம் அன்றாட வாழ்வின் பிரதான உணவாக அமைந்துள்ளது. இவ்வுணவில் அடங்கியுள்ள அறுசுவைகளால் உடலின் ஏழு உடற்கட்டுகளும் வலிமை பெறுகின்றன. உணவை வாழையிலையில் வைத்து உண்ணும்போது உடலுக்குக் குளிர்ச்சியுண்டாக்குவதுடன், குன்றாத இளமையும், வலிமையும் உண்டாகும். பச்சரிசி, புழுங்கலரிசிச் சாதமே உடலுக்கு வலிமையைத் தருகிறது. அரிசிச் சாதத்தில் வெறும் மாச்சத்துதான் அதிகம் உள்ளது. மாச்சத்து நமக்குத் தேவையானது என்றாலும், அதனை மட்டும் நிறைய உண்பதைத் தவிர்த்து, அதனைக் குறைந்த அளவிலும், மற்ற பருப்புக் காய்கறிக் கீரை வகைகள் அதிக அளவிலும் சேர்த்துக் கொண்டால்தான் பிரதான சத்துக்களான மாச்சத்து, புரதச்சத்து, கொழுப்பு, தாது உப்புகள், நீர் முதலிய உயிர்ச்சத்துக்களாகிய விட்டமின்கள் ஆகியவை தேவையான அளவில் உடலில் சேரும்.

பருப்பை, பருப்புச் சாதமாகவும், குழம்பிலும் தொடுகறி வகைகளிலும் சேர்க்கிறோம். இதில் உடலை வளர்க்கும், புரதச் சத்து அடங்கியுள்ளது. பருப்பில் உருக்கிய பசுநெய் விட்டுச் சாப்பிடுவது நல்லது. அந்நெய்யில் உடலுக்குத் தேவையான கொழுப்புச் சத்து இருப்பதால் உடல்

உள்ளுறுப்புகளை நன்னிலையில் பாதுகாக்கவும், உடலுக்கு நல்ல வடிவத்தைக் கொடுக்கவும். எலும்பு மூட்டுகள் நன்கு இயங்குவதற்குத் தேவையான பசையை ஊட்டவும், உதவுகிறது. சூட்டினால் வரும் இலுமலுக்குக் காலையில் சூடான பாலில் நெய் ஓர் கரண்டி கலந்து சாப்பிடத் தீரும். பாலில் எல்லாவித உயிர்ச் சத்துக்களும் உள்ளதால் A cup of milk daily keeps the doctor away என்னும் பழமொழிக்கேற்பத் தினமும் பால் அருந்துவது நல்லது. நெய்யானது சித்த மருந்துகளைத் தயாரிக்கவும், மருந்துகளைக் கலந்து உண்பதற்கானதுணை மருந்தாகவும் பயன்படுகிது.

மதிய உணவில் பயன்படுத்தப்படும் சாம்பார், ரசம் தொடுகிற வகைகளில் சேருகின்ற பல பொருட்களில், மிளகானது வயிற்றிலுண்டாகும் வாயுவை அகற்றுவதுடன், உடலில் ஏற்படும் நச்சுத் தன்மையையும் போக்குகிறது. அதனால்தான் அந்தக் காலத்திலிருந்தே நாய் முதலான விலங்குகள் கடித்தால் மிளகை நல்லெண்ணெயுடன் சேர்த்து உள்ளுக்குக் கொடுத்து வருகிறார்கள். பூச்சிகள், வண்டுகள் கடித்துவிட்டால் நல்ல மிளகையும், வெற்றிலையையும் அரைத்து உள்ளுக்குக் கொடுத்தும், மேலுக்குக் கடிபட்டஇடத்திலும் பூசலாம். இருமலுக்கு மிளகையும் பனங்கற்கண்டையும் பாலில் காய்ச்சி உண்ணலாம். இதற்கு நச்சுத் தன்மையைப் போக்கும் ஆற்றல் இருப்பதால் தான் பத்து மிளகிருந்தால் பகைவன் வீட்டிலும் உணவருந்தலாம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. வெள்ளைப் பூண்டு உணவுப் பொருட்களுக்கு மணமூட்டுவதுடன், வாயுவையும் அகற்றுகிறது. கொழுப்புச் சத்தையும், இரத்த அழுத்தத்தையும் மிகாமல் செய்கின்றது. இதனைப் பாலுடன் சேர்த்துக்காய்ச்சி, அப்பாலை அருந்தினால் மேற்குறிப்பிட்ட நோய்கள் போகும். அசைவ உணவுப் பதார்த்தங்களில் பூண்டும் இஞ்சியும் நிறையச் சேர்க்கிறார்கள். இஞ்சியானது,

பசித்தீயைத் தூண்டவும், செரிப்புண்டாக்கவும், வாயுவை அகற்றவும் செய்கிறது. இதனைப் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை ஓர் அவுன்ஸ் காலையில் சாறாகப் பிழிந்து அருந்தி வந்தாலோ அல்லது தேனூறல் இஞ்சித் துண்டுகளை உட்கொண்டாலோ பித்த மயக்கத்தை நீக்கும். சித்த மருந்துகளில் இஞ்சி லேகியம், சூரணம், சுரசம் ஆகவும் பயன்படுகிறது. மேலும், உணவுப் பொருட்களில் சேர்க்கப்படும் பெருங்காயம், மணத்திற்காகவும் செரிப்பிற்காகவும் வாயுவை அகற்றவும் பயன்படுகிறது.

கடுகு சிறிதாயினும் காரம் பெரிது என்பது பழமொழி. இதற்குச் செரிப்புண்டாக்கி, சிறுநீர் பெருக்கிச் செய்கைகள் உண்டு. உடலுக்குத் தேவையான வெப்பத்தையும், கொடுக்கிறது. அதிக விக்கல் ஏற்பட்டால் கடுகை அரைத்து மார்புக்குழியில் பற்றிட நீங்கும். விஷப் பொருட்களை உட்கொண்டு விட்டால் அதனை வாந்தி செய்வித்து வெள்யேற்றக் கடுகை நீரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கலாம். சீரகம் செரிப்புத் தன்மையை உண்டுபண்ணும்.

குடற் புண்களை ஆற்றும், தாக சந்நிக்குச் சீரகவெந்நீர் அருந்தினால் நல்லது. சீரகத்தை நல்லெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சித் தலைமுழுகப் பித்தத்தைத் தணிக்கும். அசைவ உணவு உண்டபின் செரிப்புத் தன்மையைப் பெருக்கப் பெருஞ்சீரகத்தை வாயிலடக்கி மெல்லுகிறார்கள். வெந்தயத்திற்கு இரத்த விருத்திச் செய்கையும் சிறுநீர் பெருக்கிச் செய்கையும் உள்ளது. சூட்டுடன் கூடிய கழிச்சலுக்கு வெந்தயத்தை மோருடன் சேர்த்துக் கொடுக்கக் குணமாகும். தேங்காய் எண்ணெயில் வெந்தயத்தைப் போட்டு ஊறவைத்து எண்ணெய் மட்டும் தலைக்குத் தடவிவர முடி நன்கு கறுத்து வளரும். கொத்துமல்லிக் கீரையையும், விதையையும் உணவில் மணமூட்டுவதற்கும்,

செரிப்புண்டாக்கவும் உபயோகிக்கிறோம். இது இருதயத்தைப் பலப்படுத்தும் குணமுடையது. குடல் கிருமிகளையும் கொல்லும். மஞ்சள் நிறத்திற்காகவும், மணத்திற்காகவும் உணவில் சேர்க்கப்படுகிறது. குடல் அழுக்கையும், குடல் கிருமிகளையும் அகற்றுகிறது. பெண்கள் முகத்தில் மயிர் முளைக்காமல் தடுக்கவும், அழகுக்காகவும். பூசுகின்றனர்.

சுக்கு சமையலிலும், மருந்துகளிலும் பிரதானமாகவோ உபசரக்காகவோ பயன்படுத்தப்படுகிறது. செரிப்புத் தன்மைக்காகவும், வாயுக்காகவும் அருந்தக்கூடிய சுக்கு வெந்நீர் எல்லோர்க்கும் தெரிந்த ஒன்றாகும். சுக்கைப் பொதுவாக மதியம் உட்கொள்வது நல்லதென்று சித்த வைத்தியத்தில் கூறப்பட்டுள்ளது.

கறிவேப்பிலையை மணத்திற்காகவும், செரிப்புக் காகவும் உபயோகிக்கிறோம். இதனைத் தனித்தும், துவையல் மற்றும் பலமுறைகளிலும் பயன்படுத்துகிறோம்.

ஓமமானது பசியை உண்டுபண்ணவும், வயிற்று உபாதைகளை நீக்கவும் செய்கிறது. இதிலிருந்து தயாரிக்கப்படும் ஓமத்தீ நீர் என்ற மருந்து குறிப்பாகக் குழந்தைகளுக்கு ஏற்படும் செரியாக் கழிச்சலைப் போக்கப் பயன்படுகிறது. எனவே இத்தீநீர் சிறு குழந்தைகள் உள்ள வீடுகள் தோறும் இருக்க வேண்டியது அவசியம். பாயாசம், நெய், பூந்தி போன்ற உணவுகளைச் சாப்பிடும்போது கணைய நீரும், பித்த நீரும் சுரந்து இவற்றைச் சீரணிக்க உதவுகிறது. கடைசியில் செரிப்புத் தன்மைக்காகப் புளிப்புத் துவர்ப்புச் சுவையுள்ள உணவுகள் தேவைப்படுவதால் மோர் சாதம், ஊறுகாய், உப்பு போன்ற பொருள்கள் உண்ணப்படுகின்றன.

இரவில் இலகுவில் செரிக்கக்கூடிய உணவு வகைகளை உண்டு, படுக்கைக்குச் செல்லுமுன் பாலருந்த வேண்டும். உணவு உண்ணும் போது இடையில் நீர் அருந்தலாகாது. உணவு காலங்களுக்கு இடையில் நொறுக்குத்தீனி முதலியவை உண்ணக் கூடாது. இதனை சுவாமிராமதீர்த்தர் அவர்கள்if you want to harm your friend give him something to eat between meals காலையில் ¼ வயிறும் மதியம் ¾ வயிறும் இரவு ½ வயிறும் உணவு உண்ண வேண்டும். நமது அன்றாட உணவில் நம் தேகத்தை நன்னிலையில் வைக்கக்கூடிய எல்லா மருத்துவப் பொருள்களும் உள்ளன. இதனை மேலும் விரிவாகத் தெரிந்து கொண்டு அதன்படி உண்டு வந்தால் நோயின்றி நெடுங்காலம் வாழலாம்.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்

என்ற வள்ளுவர் வாய்மொழியைப் போற்றிக் கடைப்பிடித்தால் நல்ல பயன் கிடைக்கும்.

சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழி முறைகளும்

டாக்டர் எஸ். திருநாவுக்கரசு, எம். டி.,
திருவனந்தபுரம்.

திராவிட கலாச்சாரம் ஓங்கி இருந்த காலத்தில் சித்தமருத்துவம் மலர்ந்தது என்று கூறலாம். (அதாவது வேதங்கள் தோன்றுவதற்கு முன்பு) Prevadic period

சித்த மருத்துவத்தின் தனி-இயல்பு, தாது தாவர கடற் பொருள்களை மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படுதல் ஆகும். அந்தத் தனி இயல்பில் இரசவாத காவியம் latro - Chemistry மிகவும் குறிப்பிடத்தக்கது. தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக்கி அவை மருத்துவத்திற்குப் பயன்படுத்தப் பட்டன.

ஒரு கலை, புகழ் அடைவதற்கு நூல்கள்தான் முக்கியமான ஆதாரம். சித்த மருத்துவம் பற்றிய ஓலைச் சுவடிகளும், நூல்களும் எண்ணிக்கையில் அடங்கா. அரிய எண்ணிக்கையில் அடங்காத நூல்களும், ஓலைச்சுவடிகளும், புதுச்சேரியில் உள்ள பிரெஞ்சு அரசால் நடத்தப்படுகின்ற நூலகத்தில் (Institute of Indology) உள்ளன. அந்நூல்களையும் சுவடிகளையும் பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்து வருகின்றனர்.

அதே மாதிரி கேரளப் பல்கலைக்கழகமும், திருவனந்தபுரத்தில் உள்ள நூலகத்தில் பல சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள் உள்ளன. அவற்றில் இன்னும் பல பதிக்கப் பெறாமல் ஓலைச் சுவடி வடிவிலேயே உள்ளன.

இத்தகைய பதிப்புகள் பல வெளிவரும்போது தமிழ் மருத்துவத்தின் சிறப்பு மேலும் புலனாகும். நல்ல முறையில் பாதுகாக்கப்படுகின்ற இச்சுவடிகளை நூல் வடிவமாகக் கொண்டுவரத் தமிழ்நாடு அரசும் சித்த மருத்துவ வல்லுநர்களும் ஆவன செய்ய வேண்டும். இவைகளை (மைக்ரோபிலிம்) நுண்ணியல் புகைப்படமாக மாற்றி பாதுகாத்து, மைய சித்த மருந்து நூல் நிலையம் (Central pool of Siddha Literature) என்ற ஒரு நூல் நிலையம் ஏற்படுத்திச் சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளையும் நூல்களையும் பாதுகாக்கலாம்.

தனித்தன்மை பெற்ற இத்தமிழ் மருத்துவத்திற்கு இன்றும் தனிக் கழகம் மத்திய அரசால் ஏற்படுத்தப் படவில்லை. கீழ்க்கண்ட கழகங்கள் (கவுன்சில்) ஆயுர்வேதக் கழகங்களிலிருந்து பிரிந்து தனித்து இயங்கத் தமிழ்நாடு அரசு ஆவன செய்ய வேண்டும்.

1. சித்த மருத்துவக் கல்வித்துறை

2. சித்த மருத்துவப் பதிவுக் கழகம் (Council for Registration of Siddha Physicians)

3. மத்திய சித்த மருத்துவ (CCRAS) ஆராய்ச்சிக் கழகம் மத்திய அரசில் சித்த மருத்துவத்திற்குத் தனியாக அறிவுரையாளர் ஏற்படுத்த வேண்டும்.

சித்த வைத்தியத்தைப் பொது மக்களிடம் பரவச் செய்யக் கீழ்க்கண்ட முறைகளைக் கையாளலாம்.

1. மக்களிடம் சித்த வைத்தியத்தின் பெருமையைத் தெளிவாக எடுத்து விளக்க வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் மூலம் அறிமுகப்படுத்த வேண்டும்.

2. சிறிய நூல்களை இலவசமாக வெளியிட்டு அவற்றின் மூலம் மக்களை அன்றாட ஊறுவிளைக்கும் சிறிய நோய்களுக்கும் பெரிய நோய்களுக்கும் சித்த மருத்துவத்தை நாடச் செய்யவேண்டும்.

சிறு நோய்களுக்கு வீட்டுத் தோட்டங்களில் கிடைக்கும் மூலிகையைக் கொண்டு குணமடைய மக்களுக்கு எளிய நடையில் மூலிகைகளின் விரிவுக் குறிப்புக்களை வினியோகம் செய்து அம்மூலிகைகளை வீட்டுத் தோட்டங்களில் பயிர் செய்வித்தல் வேண்டும்.

3. சித்த மருந்துச் செய்திகளைத் தினத்தந்திச் செய்தித்தாள் எளிய முறையில் அறிமுகப் படுத்தியது போன்று பிற செய்தித்தாள்கள் மூலமோ, வாரமலர்கள் மூலமோ, மாதம் இருமுறை நூல்களோ, மாதம் ஒரு நூல் மூலமோ சித்தத்தின் சிறப்பினை விரிவாக வெளியிட வேண்டும்.

4. குறைந்தது வருடத்திற்கு மூன்று அல்லது நான்கு சிறப்புக் கூட்டங்களைப் பல சித்த அறிஞர்களைக் கொண்டு பொதுமக்கள் முன்பு கூட்டி விளக்கங்கள் நல்குதல் வேண்டும்.

5. மேலும் பள்ளியிறுதித் தேர்வு பெற்ற, விருப்பமுள்ள மாணவ மாணவிகளுக்குப் பயிற்சி அளித்துப் பாமர மக்களுக்குச் சித்த மருத்துவ முறையை விளக்குதல் வேண்டும்.

6. ஒவ்வொரு மாவட்டம் தோறும் பல்கலைக் கழகம், கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றின் நூலகங்களில் சித்த மருத்துவக் குறிப்பு நூல்கள் வைக்கச் செய்து எல்லோரும் படிக்கச் செய்தல் வேண்டும்.

7. எளிய மருத்துவக் குறிப்புகள் அடங்கிய சித்த மருத்துவ நூல் பல மொழிகளில் வெளியிட வேண்டும்.

8. சித்த மருத்துவத்தின் சிறப்பையும், சரியான மூலிகைகள், தாதுக்கள் போன்றவற்றைப் பொது மக்கள் அறிந்து கொள்ள விளம்பரத்துறை மூலமாக விளம்பரங்கள் கொடுத்தல் வேண்டும்.

9. தமிழகத்தில் உள்ள இரு சித்த மருத்துவக் கல்லூரிகளையும் சேர்த்துச் சித்த மருத்துவப் பல்கலைக் கழகம் தனியாக அமைக்க வேண்டுமம.

10. மாவட்டங்கள் தோறும் மூலிகைப் பண்ணைகள் அமைத்து அங்குள்ள மூலிகைகள் எல்லா மக்களுக்கும் எளிதில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அதிகப்படி உள்ள மூலிகைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்.

11. சித்த மருந்துகளும் விற்பனைக்குரிய வரிவிதிப்பை விலக்குச் செய்து குறைந்த விலையில் ஏழை மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். சித்த மருத்துவத் தயாரிப்பாளர்களுக்கு உதவித் தொகை வழங்கலாம். (சப்சிடி)

12. ஒவ்வொரு கிராமத்திற்கும் அல்லது குறைந்தது 1000 பேர் கொண்ட தொகுதிக்கு ஓர் சித்த மருத்துவ நிலையம் நிறுவ வேண்டும்.

மேலும் ஒவ்வொரு தாலுக்காவிலும் குறைந்தது 50 படுக்கை இடவசதி கொண்ட மருத்துவமனை நிறுவுதல் வேண்டும்.

குறிப்பாகச் சித்த மருத்துவத்தின் சிறப்பையும், சரியான மூலிகைகளையும் அறிந்து கொள்ளத் திரைப்படம் தயாரித்துப் பஞ்சாயத்துக்கள் தோறும் திரையிட்டு மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

13. சித்த மருத்துவத்தின் சிறப்பினைப் பேருந்துகள், புகைவண்டி, விமானம் மற்றும் பொது இடங்களில் விளம்பரம் செய்யவேண்டும்.

மேற்சொன்ன அனைத்தும், தனி ஒரு மனிதனாலோ அரசாங்கத்தால் மட்டுமோ செய்ய முடியாது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு

என்று பாரதியார் கூறியது போல் நாம் அனைவரும் ஒன்றுபட்டுக் கிடைப்பதற்கு அரிய பொற்சுரங்கமாம் இந்தச் சித்த மருத்துவத்தை வளர்ப்போமாக.

கணினியும் நோய்க் கணிப்பும்

குரு. கணபதி (இணைப் பேராசிரியர்)
செ. ப. பாண்டிப் பெருமாள் (விரிவுரையாளர்)
தி. திருநாராயணன் (உதவி விரிவுரையாளர்)
சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்ற வாக்குதான் எத்தனை உண்மையானது. எந்த ஒரு அறிவியலின் வளர்ச்சிக்கும் பல்வேறு பகுதிகளில் புதிதாய் ஏற்படுகின்ற கலைச் செல்வங்களைப் பயன்படுத்துதல் இன்றியமையாதது. கால வெள்ளத்தின் மாறுதலுக்கு ஏற்றாற்போல் நாமும் சில மாறுதல்களை ஏற்றுக் கொள்ளுதலே சாலச் சிறந்தது. இது சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு உதவும்.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே

என்பது தமிழர் மரபு. எனவே, கணினி யுகமான இந்த யுகத்தில் நாமும் நோய்க்கணிப்பில் கணினியைப் பயன்படுத்தல் சாலப் பொருத்தமே.

நோய்க் கணிப்பில் தற்போதைய நிலை

வாத, பித்த, கபம் ஆகிய தாதுக்களின் அடிப்படையில் மட்டுமே நோய்கள் பண்டைக் காலத்தில் வகுக்கப்பட முதன் முதலாகச் சித்த மருத்துவத்தில் குறிகுணங்களின்

அடிப்படையில் (Clinical signs & symptoms) நோய்களைப் பகுத்த சீரிய பணி யூகி முனிவருடையது. யூகி முனி விளக்கிய 4448 நோய்கள் ஒவ்வொன்றிலும் பல குறிகுணங்களின் சேர்க்கையே ஆகும். ஒரு நோய்க்குக் குறைந்தபட்சம் 10 குறிகுணங்கள் என்றாலும் 4448 குறிகுணங்களையும் அதன் பல்வேறு சேர்க்கை மாறுதல்களையும் மனதில் கொண்டு நோய் கணிப்பது தற்போதைய நிலையில் சற்றுக் கடினமாக உள்ளது. எனவேதான் பெரும்பாலான நோயாளர்களுக்குக் கில்வாயு, வாதசூலை முதலிய பொதுவான சில நோய்களாகக் கணிக்கப்பட்டுப் பொது மருத்துவமே செய்யப்படுகின்றது. பெரும்பாலான நோய்க்கும் சிறப்பான தனியொரு மருந்து இருக்கின்ற போதிலும் நோய்க்கணிப்பில் காணப்படும் கடினத்தால் வழக்கில் அங்ஙனம் மருத்துவம் செய்வதும் கடினமாய் உள்ளது.

கணினியின் பங்கு

நோய்க்கணிப்பில் கணினியைப் பயன்படுத்தும் பொழுது நமக்கு அடிப்படையாய் இருப்பவை, யூகி முனிவர் சொன்ன நோய்ப் பகுப்புகளும், அவற்றின் குறிகுணங்களும்தான். இந்த அடிப்படையை நாம் மாற்றப் போவதில்லை. ஆனால் இந்தந்த நோய்க் குறிகுணங்கள் தொகுப்பு, இந்நோயினைக் குறிக்கும் என்பதை மட்டுமே நாம் நினைவில் கொள்வதற்குப் பதில் கணினியை அச்செயலைச் செய்யக் கூறுகிறோம். இது நம் பளுவைக் குறைப்பது மட்டுமல்லாமல், இனிதாகவும், எளிதாகவும் இருக்கும். சித்த மருத்துவத்தின் அஸ்திவாரத்தைப் பழமையின் பெயரால், நம் முன்னோரின் தெளிந்த அறிவை ஒதுக்காமல் புதுமை என்ற பெயரினால் அறியாமைக்கு ஆளாகாமல் இரண்டின் சிறப்பும் கை கோர்த்து நம் மருத்துவம் வளமடைய வழி வகையாகும்.

நடைமுறைச் செயல்முறை

காய்ப் பருவத்துக்கன்னி முயற்சியாக 4448 நோய்களில் மஞ்சள் நோயின் பதின்மூன்று பிரிவுகளையும் தனித்தனியாகப் பகுத்துக் கணிப்பதற்கு ஏதுவாக ஒரு எளிதான கன்னி மொழியில் மஞ்சள் நோயின் குறிகுணங்களைக் கணினி நினைவுப் பகுதியில் செலுத்தித் தேவையான பொழுது நாம் கொடுக்கின்ற விவரணங்களைக் கொண்டு மஞ்சள் நோயின் பிரிவைக் கணிப்பதற்கான கட்டளை வடிவமைக்கப் பட்டுள்ளது.

தனி நபர் கணினி தற்பொழுது அரசாங்க நிறுவனங்களால் கூட மிகக் குறைந்த விலையில் தயாரிக்கப்படுகின்றது. நம்முடைய முயற்சியிலும் இத்தகைய கணினி ஒன்று பயன்படுத்தப்பட்டது. இக்கணினியை இயக்கி, நோயைக் கணிப்பதற்குக் கணினி மொழியையோ, கணினி உட்பகுதியைப் பற்றியோ அறிந்திருக்கத் தேவையில்லை. இது எல்லோராலும் இயக்க வல்லது. இரு மொழிக் கணினிகள் இருப்பதால் ஆங்கிலப் புலமையும் தேவையில்லை. கணினிக்கு இடப்பட்ட கட்டளையாவது நாம் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தலையும் உள்ளடக்கியது.

நோயாளி கூறுகின்ற குறிகுணங்களை நாம் தட்டச்சுப் பகுதியில் செலுத்த அது அவற்றைத் தொடர்பு படுத்தி நோயின் தனிவகையை நமக்குத் தரும். எனவே, சிறப்பான தனி மருத்துவத்தை நாம் கொடுத்து நோயாளி விரைவில் குணம் பெற ஏதுவாக அமையும்.

வளி மஞ்சள் நோயில் 12 குறிகுணங்களும்
அழல் மஞ்சள் நோயில் 9 குறிகுணங்களும்
ஐய மஞ்சள் நோயில் 9 குறிகுணங்களும்
வளி ஐய மஞ்சள் நோயில் 8 குறிகுணங்களும்

அழல் ஐய நோயில் 10 குறிகுணங்களும்
முக்குற்ற ஐய மஞ்சள் நோயில் சிறப்பாக
6 குறிகுணங்களும்

ஊது மஞ்சள் நோயில் 10 குறிகுணங்களும்
வறட்டு மஞ்சள் நோயில் 15 குறிகுணங்களும்
பெரு மஞ்சள் நோயில் 7 குறி குணங்களும்
அழகு மஞ்சள் நோயில் 8 குறிகுணங்களும்
செங்கமல மஞ்சள் நோயில் 8 குறிகுணங்களும்
கும்ப மஞ்சள் நோயில் 9 குறிகுணங்களும்

கும்ப மஞ்சள் நோயில் 9 குறிகுணங்களும் உள்ளன. இவற்றில் சொல்லப்பட்ட குறிகுணங்களால் 4 (அல்லது) 5 குறிகுணங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவாகவும், எஞ்சியவை ஒவ்வொன்றிற்கும், சிறப்பானதாகவும் அமைந்திருக்கின்றன. எனவே மொத்தமுள்ள 123 குறிகுணங்களில் 42 நீங்கலாக, பிற தனித்தன்மையுடையவை. இந்த 81 குறிகுணங்களையும் மனதில் கொண்டும், அவற்றின் சேர்க்கைகளை மனதில் கொண்டும் கணினியைப் பயன்படுத்தி நோயைக் கணிப்பது எளிதாக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

கணினியைப் பயன்படுத்துவது நோய்க் கணிப்பை எளிதாக்கினாலும், நூல்களில் கூறப்பட்ட எல்லாக்குறி குணங்களும் நோயாளனிடம் இருப்பதில்லை. எனவே எவ்விவரத்தைக் கணினிக்குச் செலுத்துவது என்ற முடிவு மருத்துவரின் பொறுப்பாகும். கணினி மருத்துவருக்கு உதவுகின்ற கருவியே அன்றி மருத்துவருக்கு மாற்றாகாது.

IDENTIFICATION OF CRUDE DRUGS- A KEY FACTOR FOR THE DEVELOPMENT OF SIDDHA SYSTEM

S.N. Yoganarasimhan,
Regional Research Centre (Ay)
Jayanagar, Bangalore - 560011

Drugs are used from the earliest period by man to relieve pain and to cure the diseases and hence may be said to be as old as mankind. Drugs may be either natural or synthetic. Plants, minerals and animal kingdom contribute to the natural drugs. The term Crude Drug includes the derivatives of plants, minerals, animals or their parts in dry condition, they may be cut into transverse or longitudinal pieces or peelings in some cases. The drugs derived from plant kingdom are called, as Vegetable Drugs which include whole plant or part of the plants, both in fresh and dry state. A vast manority of crude drugs belong to vegetable drugs. A good background of Medicinal plants is a prerequisite for the proper study of vegetable drugs.

India is well-known as the Emporium of Medicinal Plants due to the occurrence of in abundance in the divergent types of forests. The medicinal plants have been utilised in the traditional systems, of medicine like Siddha and Ayurveda from the earliest times. They are used either in fresh from or in dry condition (crude drugs) in several single or compound preparations. Though

the drugs included in these systems of medicine wre grouped according to their therapeutic action and some synonyms denoting the morphological characters of the plant were, provided no definite method was adopted for the indentification of the drugs in the classicssince these systems were heirarchial and the knowledge of identification was gained by practical experience. During the subsequent period, attempts were made to classify the drugs on the basis of more morphological characters which are also found to be too inadequate at present. Due to the vast gap in the development of these systems in subsequent centuries coupled with the non availability of original literature, lack of voucher specimens, proper descriptions and also a gradual, deterioration of experts in the system inself the identification of the drugs in these systems has developed into an enoromous problem. Hence, the resources to various methods found in other sciences is necessary to scientifically determine and identify the medicinal plants-crude drugs. The different methods may be broadly grouped as follows:

1. Taxonomic: where thorough knowledge of field bothany is required and morphological characters of the plants are utilised.

2. Pharmacognostical: Where the macro and microscopic characters are studied and diaganostic characters for each drug is provided.

3. Phytochemical: Where the drug is subjected to chemical analysis under instruments like U.V. , Flourescence and Chromatography.

The above methods will be discussed with relevant examples to plant drugs prevailing in Siddha system. Since nearly 60% of the drugs are of plant origin. Similar methods may be evolved for the identification of drugs of Chemical. Geological and Zoological origiin.

Thus, a cumulative knowledge of plant taxonomy, pharmacognosy and phytochemistry along with a sound knowledge of the drugs described in the classics are necessary for a proper scientific identification of medicinal pyants/crude, drugs which alone will help for the development of the Siddha system in the modern age.



இசப்புகோல் விதை

என். வேங்கடப்பன்
முன்றாமாண்டு பி.எஸ்.எம்.எஸ்.,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பழனி.

இசப்புகோல் விதை

தாவரவியல் பெயர்	: பிளாண்டாகோ ஓவேட்டா
போர்ஸ்கல்	:
Bot Name	: Plantage Ovata Forskal
உலகம்	: தாவர உலகம்
பிரிவு	: விதையுள்ள தாவரம்
துணைப்பிரிவு	: ஆஞ்சியோஸ்பெர்ம்ஸ்
வகுப்பு	: டைகாட்டிலிடனே
துணைவகுப்பு	: கேமோபெட்டெல்லே
வரிசை	: பைகார்பெல்லேட்டே
தொகுதி	: லேமியேல்ஸ்
குடும்பம்	: பிளண்டாஜினேசி
பேரினம்	: பிளாண்டாகோ
சிற்றினம்	: ஓவேட்டா
சமஸ்	: சிநிக்தஜீரா
தமிழ்	: இஸ்கோல் விதை

இஸ்பாகுல்விதை, இசாப்குல் விதை

இசாப்குல் என்பது ஒரு பாரசீக மொழிச் சொல். இசாப் என்பது குதிரையும், குல் என்பது காதையும் குறிக்கும். இதன் இலைகள் குதிரைக்காதின் தோற்றத்திலிருப்பதால் இப்பெயர் பெற்றன.

இப்பயிர் பாரசீக நாட்டைச் சேர்ந்தது. இப்போது வடமேற்கு இந்தியாவில், குறிப்பாக பஞ்சாப், சிந்து சமவெளிப் பகுதிகளிலும், மைசூரிலும், கிழக்குக் கடற்கரைப் பகுதியிலும் விளைகிறது.

உடலெங்கும் சிறு சிறு சுனைகளைக் கொண்டு வேரிலிருந்து அல்லது வேரையொட்டிய சிறுதண்டிலிருந்து தோன்றிய நீண்ட இலைகளும், (நீளம் 7.5 முதல் 23 செ.மீ.) நீண்ட காம்புடைய மஞ்சரியும் கொண்ட ஓராண்டுச் செடியாகும்.

இது இந்தியாவில் மட்டுமின்றி சீனா, வட அமெரிக்கா பர்மா, ஜப்பான், ருஷ்யா, அரபுநாடுகள், ஆப்பிரிக்க நாடுகளிலும் மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இது பார்வைக்கு மணல் போல் இருக்கும், வாயிலிட்டுச் சுவைக்க மரத்தூள் போலச் சுவையற்றிருக்கும்.

பயனபடும் உறுப்புகள்

விதை விதையைச் சுற்றிலுமுள்ள உலர்ந்த சதைப்பகுதி, (தோல்)

வேதிச் சத்துகள்

குழகுழப்பான பசைதான் இதில் பெருமளவு (30%) உள்ளது. இப்பசையில் எஸலோஸ், அரோபினோஸ் ராம்னோஸ், சாலக்டுரோனிக் அமிலம், பாலிசாக்ரைடுகள் ஆகியவை உள்ளன.

மேலும் ஆவியாகாத எண்ணெய் 5% வீதமும், புரதப் பொருட்களும் அக்குபின் என்ற ஒரு கிளைக்கோஸைடும் {C13H 19O8 H2O} உள்ளன.

செய்கைகள்

உள்ளழலாற்றி, சிறுதுவர்ப்பி, வறட்சியகற்றி, மலமிளக்கி, சிறுநீர்ப்பெருக்கி

சமீபத்தில் இரத்த அழுத்தம் குறைப்பதற்காகவும் பயன்படும் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இசப்புகோல் விதை - தாவரமும் தாவரத்தின் பாகங்களும்

A PLANTAGO OVATA FORSK

உடலில் இம்மருந்தின் செயல்:

இதன் விதைகளையோ, இல்லை அவற்றைக் குடிநீரிட்டோ, உண்ணும்போது குழகுழப்பான பசை அதிக அளவில் சீரணப்பாதையில் இவ்விதையினின்றும், இவ்விதையின் உறையினின்றும் தோற்றுவிக்கப்படுகின்றது. இப்பசை அமிலத்தன்மையோ, காரத்தன்மையோ இல்லாது, நடுநிலை கொண்டது. சுவையோ, மணமோ, வெகுட்டலோ இன்றி இப்பசை நீரில் ஓரளவே கரைகின்றது.

இப்பசை, செரிப்பு, நொதிகள், இரப்பை அமிலம், பித்தநீர், இவற்றால் வெகுவாக மிக மிகக் குறைந்த அளவிலேயே செரிப்பிக்கப்படுகின்றது. வேறு மாற்றமும் அடையாது பெரும்பகுதிக் குழகுழப்பான பசையாகவே உணவுப்பாதை முழுவதும் செல்கிறது. செல்லும்போது இப்பாதை முழுமையும் உட்புறமாக அமையும் சளிக்கவசத்தில் உட்புறமாக ஒரு படலம்போல் படிந்து அவ்விடத்தில் எரிச்சலை அகற்றுவதோடு வழவழப்புத் தன்மையும் கொடுக்கின்றது. அப்பாதையில் உள்ள காயங்கள் மீது ஒரு படலமாய் ஏற்படுத்திக் காயமடைந்த சளிக்கவசப் பகுதியை எரிச்சல் உண்டாகும். உணவுப்பொருள், சுரப்புகளின்றும் காப்பாற்றுகிறது. அக்காயங்களில் பாக்டீரியா சேராமலும் காக்கிறது. உணவுப் பாதையில் இது

செல்லும்போது அதன் சுவர்களில் உள்ள நன்மை உண்டாக்கும் பாசிகளைப் பாதிப்பதில்லை இன்னும் அவைகளால் நச்சு உண்டானாலோ, வேறுவிதமான நஞ்சுகள் இருப்பின் அவைகளை உறிஞ்சிவிடுகின்றன.

அக்குபின் என்ற கிளைக்கோசைடினால் எவ்விதப் பயனுமில்லை. அது செரிக்கப்படாமலே வெளியேற்றப் படுகிறது. புரதப் பொருட்களும் ஆவியாகாத எண்ணெய்களும் வழக்கமான வினைக்கு ஆட்படுகின்றன.

சாப்பிட்ட பின்பு 12-24 மணி நேரத்துக்குள் இவ்விதைகள் எப்படி உண்ணப்பட்டதோ அவ்வாறே வெளியேற்றப்படுகின்றன. விதைகளாகவே உண்டிருந்தால் அவை நீரை உறிஞ்சுவதால் நன்கு பருத்துப் பெரியதாக மலத்தில் தோன்றுகிறது.

கலப்படச் சோதனை

இதன் குழகுழப்பான பசை ருத்தேனியம் சிவப்பு கரைசலுடன் இளஞ்சிவப்பு நிறத்தை உண்டாக்கும். இதன் உப்புதல் எண் விதைகளுக்கு 10 முதல் 14 வரை விதைத் தோலுக்கு 90 இதற்குப் பதிலாக கலப்படம் செய்யப்படுகின்ற இதைப் போன்ற மற்ற ஒரு விதையின் உப்புதல் எண். 5

இதற்குப் பதிலாகப் பிளாண்டாகோ ஏசி ஆப்டிக்கா, என்ற தாவரத்தில் விதையையும் பயன்படுத்தலாம்.

குணம்

சித்த மருத்துவம்

சித்த மருத்துவத்தில் இது சீதக்கழிச்சல், சிறுநீர் எரிச்சல் உடல் வெக்கை, சுரம், இருமல், கிரகணி, இத்திரதி, மூத்திரத்தரிப்பு, இவை குணமாகும். உடலுரமாகும் என வைஷஜகல்பம் குணபாடம் பொருட்பண்பு நூல் எனும் நூல்களிலிருந்து அறியப்படுகிறது.

ஆயுர்வேத மருத்துவம்

கபம், பித்தம் இவற்றைக் கண்டிக்கும், வயிற்றுப்பிசம் உண்டாகும்.

யுனானி மருத்துவம்

குளிர்ச்சி உண்டாக்கும். சீரண உறுப்புகளில் உண்டாகின்ற எரிச்சல். பித்தம், கழிச்சல்கள், கிராணி இவற்றுக்கும், இருமலுக்கும் பயன்படும், அரைத்துப் பற்றுப்போட வாத நோய்கள் கிரந்தி வீக்கம், கீல்வாதம் போகும்.

வழக்கு

சிறுநீர் மண்டலத்தில் உண்டாகின்ற் நீர் எரிவு, குத்தல், சிறுநீர்க் குழாயில் உண்டாகின்ற புண், சலப்பையில் உண்டான ஒவ்வாமை, எரிவு, புண்கள், இவற்றிற்கும் மேக நோய்களுக்கும் இதனைக் கொடுக்கலாம்.

ஜீரண மண்டலத்தில் உண்டாகின்ற கோளாறுகளான தொண்டைப்புண், வளிகுன்மம், வயிற்றுப்புண், பசதக் குடலில் உண்டாகும் புண், பேதி, கிராணி, மலக்கழிச்சல், சலக்கழிச்சல், இரத்தக் கழிச்சல், நாட்பட்ட மலபந்தம், மூலம் இவைகளுக்கும் சுவாசமண்டலத்தில் உண்டாகின்ற இருமலுக்கும் கொடுக்கலாம். மேலும் எக்காரணத்தைப் பற்றியும் வருகின்ற சுரத்திற்கும் கொடுக்கலாம். பொதுவாக இவைகளை ஓரிருமுறை நீரில் விரைவாகவும், நன்கு கழுவிச் சுத்தம் செய்தும் பயன்படுத்துவர்.

இவைகளை வெறும் விதையாக நான்கு முதல் எட்டுக் கிராம் வரை எடுத்து உண்ணலாம். அல்லது வெந்நீரிலிட்டு

உண்ணலாம். அல்லது நீரிலிட்டு இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாள் தண்ணீரோடு சேர்த்துப் பருகலாம். இளநீர், அல்லது கரும்புச் சாற்றில் சேர்த்துப் பருகுவதும் உண்டு. மேலும் ஒரு பங்கு விதைக்கு 30, 40, 60, 80 இவற்றில் ஏதேனும் ஒரு பங்கு அளவில் தண்ணீர் விட்டுக் குடிநீர் செய்து பருகுவதும் உண்டு. இவ்விதைகளைக் குடிநீர் இட்டு உண்ணும்போது சுவையோ நாற்றமோ இன்றி இருப்பதால் துன்பமின்றிப் பருகலாம். இவற்றில் சிறிதளவு சர்க்கரை சேர்த்துக் குடிநீரைக் கொடுக்கக் குழந்தைகளும் விரும்பி உண்ணும், சிறந்த மருந்தாகும்.

இது குறிப்பாக காலை நேரங்களில் மட்டும் உண்டாகின்ற கழிச்சல், மலைப்பகுதிகளில் உண்டாகின்ற கழிச்சல், ஐரோப்பாவினின்று இங்கு வந்து குடியேறிவிட்டவர்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் உண்டாகின்ற கழிச்சல், இவற்றிற்குச் சிறந்த குணத்தைக் கொடுக்கும்.

மலக்கட்டுக்குச் சுமார் 10 கிராம் அளவு உண்ண, மலக்கட்டை நீக்கி நன்கு மலத்தைக் கழியச் செய்யும். இச்செயல் ஈரலவுப் பாதையின் அலை இயக்கத்தை அதிகப் படுத்துவதால் உண்டாகும். மேலும் இதற்கு இதன் குழகுழப்புப் பசை முக்கியமான வழுவழுப்புத் தன்மையைக் கொடுப்பதாலும் உண்டாகும் இச்செயல் பாரபின் எண்ணெயின் மலமிளக்கும் செயலை ஒத்திருக்கிறது. எனினும் இவ்விதை பாரபின் எண்ணெயைவிட மிகமிக விலை குறைவானது. மேலும் பாரபின் எண்ணெயை அடிக்கடி உபயோகிப்பதால் உண்டாகின்ற கெடுதிகளான சீரணப்பாதையில் உண்டாகின்ற வீக்கம் வலி, மலக்குடலில் உண்டாகின்ற நமைச்சல் இவை உண்டாவதில்லை.

தஞ்சு முறிவுக்கு இதனோடு சம அளவு, தயிர், பன்னீர், பேதான இவை சேர்த்துப் பாடாண நஞ்சுக் குறிகளுக்குக் கொடுக்கலாம். தாமிர நஞ்சுக்கு அபினியை அடிவயிற்றில் பற்றிட்டு இதனையும் குடிநீர் இட்டு உள்ளுக்குக் கொடுக்கச் சிறந்த குணத்தைக் கொடுக்கும்.

இரத்தக் கொதிப்புக்குப் பயன்படுத்தல்

இதில் உள்ள சாராயத்தன்மையுடைய சத்து ஒன்று மயக்கம் உண்டு பண்ணப்பட்ட பூனைகள், நாய்கள் இவற்றின் இரத்த அழுத்தத்தைக் குறைப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முயல்கள், எலிகள், தவளைகள் இவற்றில் இதயத் துடிப்பின் வேகத்தைக் குறைப்பதும் நன்கு காட்டப்பட்டுள்ளது. இச்சாராயத்தன்மை உடைய சத்து இதயத்தின் மென்தசைகளுடைய செயலைக் குறைப்பதால், இரத்த அழுத்தம் குறைவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் மின்னசோட்டா பல்கலைக்கழகத்தில் இதினின்று தயாரித்த மீட்டாம்யூசில் என்ற மருந்தினை (பிராக்டர் அண்டு கேம்பில் கம்பெனியார் தயாரித்தது) இக்கம்பெனியார் இந்தியாவில் விக்ஸ் கிரியரசில், போன்றவற்றைத் தயாரித்து விற்போர் ஆவர்.) 75 பேருக்குத் தொடர்ச்சியாக 16 வாரம் கொடுத்துப் பரிசோதித்தபோது அவர்களின் இரத்தத்தில் கொழுப்புச் சத்து மிகவும் குறைவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இரத்த அழுத்தம் மேற் கண்டவாறு சாதாரண நிலை அடைந்தது. கொழுப்புச் சத்து இரத்தத்தில் குறைந்த விதம் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. மேற்கண்ட மருந்தும் சிபாஷ கெய்கி கம்பெனியாருடைய ஃபைபரால் என்ற இரு மருந்துகளும் மேலும் நன்கு ஆராயப்பட்டு வருகின்றன. எனவே சென்ற ஆண்டு மட்டும் ரூபாய் 95 கோடி மதிப்புடைய இவ்விதைகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

முடிவுரை

நம் நாட்டில் விளைவிக்கப்படுகின்ற இம்மருந்து ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவ முறைகளில் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. வெளிநாட்டுக்கும் பலகோடி ரூபாய் மதிப்புக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. எனினும் இம்மருந்தைச் சித்த மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. சில வைத்திய சாலைகளில் மட்டும் பெரு மருந்துகளில் இவற்றைச் சிறிதளவுச் சேர்ப்பதாகத் தெரிகிறது. எனவே நம் நாட்டில் விளையும், குறைந்த விலையில் கிடைக்கும் இம்மருந்தை நம் சித்த மருத்துவர் நன்கு ஆராய்ந்து மருத்துவ பரிசோதனைகள் செய்து நோக்கின் மேலும் பல அறிய உண்மைகள் கண்டுபிடிப்புகள் புலப்படலாம்.

LIST OF REFERENCES:

1. Indian Medical Plants, by Major B. D. Basu, I.M.S. Publisher M/s. Periodical experts, Delhi-32. 1972.

2. Dr. K.M. Nadkarni's Indian Materia Medica, revised by A.K. Nadkarni, Popular Prakasham,Bombay 1982.

3. "One for the heart" an article published in India to-day (English Edition) March 15, 1990.

4. Wealth of India

5. Pharmacognosy-S. B. Gokhale, C.K. Kakate, (3rd edition) Pragati Pragasham, 1987.

சித்தர்களின் தீர்க்கதரிசனம் (அ) மெய்ஞ்ஞானிகளின் விஞ்ஞான நோக்குகள்

வி. சண்முகம்
நான்காம் ஆண்டு, பி.எஸ், எம். எஸ்.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பழனி.

இக்கட்டுரையின் நோக்கம் புதியன கண்டறிதல் அன்று. சித்தர்கள் கண்டவற்றைப் புதுமை முறையில் வெளிக் கொணரும் புதுமுயற்சி, சித்தர்களின் அறிவியல் திறனை நம் கற்பனை எல்லைக்குள் அடக்கிவிட முடியாது. இக்கால நவீனமுறை ஆய்வுகளின்றியே அவர்கள் தங்கள் ஞானத்தினால் அனைத்தும் அறிந்து தெளிந்திருந்தார்கள். அவற்றைச் சாதாரண மக்களும் அறியக்கூடிய வகையில் கூறினார்களே அன்றி அவற்றின் முழுவிளக்கங்களும் வெளிப்படுத்தாமல் தெய்வ நம்பிக்கை ஊட்டி மருத்துவத்தைத் தெய்வ மயமாக்கி மக்கள் சிரத்தையுடன் அதனைக் கடைப்பிடிக்குமாறு செய்வித்தார்கள். சித்தர்களின் ரசவாதம், வைப்பு, முப்பு போன்றவை இதனைத் தெளிவாகப் பறைசாற்றும். இக்கட்டுரையின் இந்தத் தொடக்க முயற்சி அனைத்துத் தர மக்களும் சித்த மருந்துகளை அறிவியல் நோக்குடன், நம்பிக்கையோடு, மிகக் குறைந்த செலவில் நிறைந்த பலனைப் பெற வழி செய்யும் ஒரு பகுதியேயாகும்.

சித்தர்கள் மெய்ஞ்ஞானத்தில் மட்டுமின்றி விஞ்ஞானத்திலும் தீர்க்கமான அறிவைப் பெற்று இருந்தார்கள். சித்தர்களின் கட்டு, களங்கு, ககனக்குளிகை

போன்றவைகள் நுட்பமான அறிவில் உருவானவைகள். இவர்களால் உருவாக்கப்பட்ட சித்த மருந்துகள் ஒவ்வொன்றும் தீர்க்கமான விஞ்ஞான நோக்கோடு உருவானவை என்பது அசைக்க முடியாத உண்மையாகும். அக்காலத்தில் கண்டறியப்படும் மூலிகைகள், தாதுப்பொருட்கள், சீவப்பொருட்களில், மருந்துகள் இவற்றின் கண்டுபிடிப்புகள், சித்தர்களின் பாடல்களில் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னமிருந்தே பொதிந்து கிடக்கின்றன. ஆனால் அவைகளைச் சாதாரண மக்களும் அறியும் வகையில் விளக்கக் குறிப்புகளோடு நமக்குக் கிடைக்காமை சித்தமருத்துவத்தில் ஒரு பேரிழப்பாகும். அவ்வாறு பொதிந்துள்ளவற்றை வெளி உலகுக்குக் கொணர்ந்து விஞ்ஞானிகளின் கூட்டோடு விளக்கமாக வெளிக்கொணர்வதும், அவைகளை முழுமையாக நோய்களைத் தீர்க்க உலகம் முழுவதும் பரப்பச் செய்வதும் வரவேற்கத் தக்க செயலாக அமையும்.

வெள்ளுள்ளி

சந்தியொடு வாதந் தலைநோவு தாள்வலி
மன்னிவரு நீர்க்கோவை வன்சீத (கழிச்சல்)-அன்னமே
உள்ளுள்ளி காண்பாய் உள்மூலநேரகமும் போம்
வெள்ளுள்ளி தன்னால் வெருண்டு

விஞ்ஞான ஆதாரம்

1. இது சீதக்கழிச்சலுக்குச் சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

2. இது விலைமலிவானதும், தீயபின் விளைவுகள் இல்லாத மருந்து என்று இஸ்ரேலிய விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளது.

3. இவ்வெள்ளைப்பூண்டு (potent Amoebicide Merranidazole in Natural form) என்ற வேதிப்பொருளைக் கொண்டுள்ளது என்று இப்போது கண்டறியப்பட்டுள்ளது.

4. 4 பூண்டு கீற்றுகளைப் பச்சையாகவே சமைக்காமல் தினமும் இரவில் உண்டுவரின் இக்கழிச்சல் நிற்பதாக அறிந்துள்ளார்கள்.

5. மேலும் இது இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்துவதாகவும், இரத்த அழுத்தத்தைக் குறைப்பதாகவும் கண்டுள்ளார்கள்.

6. இந்தச் சீதக்கழிச்சலில் வயிற்றில் வரும் வாயுவை நீக்கவும் இது பயன்படுகிறது.

7. மேலும் இது இதய நோயில் சிறந்த மருந்தாகவும் பயன்படுவதாகக் கண்டுள்ளார்கள்.

ஆதாரம் - இந்தியன் எக்ஸ்பிரஸ், மார்ச் 88

ஆசிரியருக்குக் கடிதம் பகுதி, மருத்துவர். ஜே. ஜீ. புனே

சீதக்கழிச்சல் அமீபாக் கழிச்சலில் அதிக அளவு
கோழைப்படுவது சிறந்த குறியாகும்

எனவே இது சீதக்கழிச்சல் என அழைக்கப்படுகிறது.

மேற்கண்ட மேற்கோளில் உள்ளபடி இஸ்ரேலிய விஞ்ஞானிகள் அமீபாவினால் வரும் கழிச்சலுக்குப் பூண்டு சிறந்த மருந்து என்று விஞ்ஞானப் பூர்வமாக அறிந்துள்ளார்கள். இருப்பினும் நம் சித்தர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே இதை அறிந்திருக்கிறார்கள். இதுபோல இன்னும் பல அரிய கண்டுபிடிப்புகள் நம் சித்தர் பாடல்களில் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை விஞ்ஞான பூர்வமாக வெளிக்கொணர்வது வரவேற்கத்தக்கதாகும்.

சுவிட்ஸர்லாந்து நாட்டில் இப்பூண்டைப் பயன்படுத்திச் செய்த மாத்திரையை ஏகவிலைக்கு இரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கு விற்கிறார்கள். மேற்கண்ட மேற்கோளில் இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இரத்த அழுத்தத்தில் தலைநோவும் ஒரு குறியாகும். மேற்கண்ட பாடலில் இத்தலைநோவையும் நீக்குவதற்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தாவரம் ஏற்கனவே மக்கள் நன்கறிந்த தாவரம் என்பதால் இதைப்பற்றிய விளக்கங்களைத் தராமல், தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை மட்டுமே குறிப்பிட்டுள்ளேன்.

இந்த வெள்ளைப்பூண்டில் உள்ள அலிசின் (0.4%) என்ற வேதிப்பொருளானது இயற்கை நிலையில் மட்டுமே செயல் புரியும் தன்மைகொண்டது. அதைப் பிரித்து எடுத்தால் செயல்பாட்டை இழந்து விடுகின்றது. தனியே பிரித்துக் குளிர்பதனம் செய்தல் போன்றவைகளால் இதன் செயல்பாட்டை நிலைநிறுத்தல் கடினமாக உள்ளது எனக்கண்டுள்ளார்கள்.

இது மட்டுமின்றி ஏற்கனவே பூண்டில் மாவுப் பொருள் (20%) புரதப்பொருள் (56%) 0.1% கொழுப்பு மற்றும் மியூசிலேஜ், பாஸ்பரசத்து, இரும்புச்சத்து, தாமிரசத்து இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறாகத் தற்போது கண்டுபிடிக்கப்படும் இதன் மருத்துவக் குணங்கள் எல்லாம் சித்தர்களின் பாடல்களில் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளன என்பது இதன்மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது.

முருக்கன் விதை மாத்திரை

திரிகடுகும் சீரகமும் கடுகுரோகிணியும்
சேர்ந்த முருக்கன் வித்தும் சமனாய்ச்சேர்த்து
நெறியுடைய நேர்வாளம் இதற்குச் சமனாய்
நீர்வார்த்தரைத் தவுண்டை சுண்டை போல
அரிய பனைவெல்லம் இளநீர் நெய் பாலும்
ஆன பழஞ்சீனி தனிலுள்ளே கொள்ளக்
கிருமியுடன் மாந்தமும் சீதக்கட்டும்
கெண்டை வயிற்றுப்பிசமும் கவிகை போமே.
சித்த வைத்தியத் திரட்டு

என வழக்கில் கிருமி, மாந்தம் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படுகிறது.

விஞ்ஞான நோக்கு

முருக்கன் வித்து: கைனோ டானிக் அமிலம் கொண்டுள்ளதால் மலமிளக்கியாகவும், புழுக்கொல்லி யாகவும் செயல்படுகின்றன.

கடுகுரோகிணி: கதார்டிக் அமிலத்தைக் கொண்டுள்ளதால் மலமிளக்கியாகச் செயல்படுகின்றது.

நேர்வாளம்: குரோடோனோலிக் அமிலம் கொண்டுள்ளதால் நீர்மலம் போக்கியாகச் செயல்படுகின்றது.

சீரகம்: சீரகத்தின் எண்ணெயில் தைமால் இருப்பதால் புழுக்கொல்லியாகச் செயல்படுகின்றது.

சுக்கு: இது அகட்டுவாயகற்றியாகவும் பசித்தீத் தூண்டியாகவும் செயல்படுகின்றது.

மிளகு: மிகச்சிறந்த நக்சரி

தீயவிளைவுகள்: டிஜினிக் அமிலம் மற்றும் குரோடோனோலிக் அமிலம் இவை குடலை எரிச்சல் செய்யக்கூடியவை. ஆனால் சரக்குகள் அனைத்தும் சுத்தி செய்யப்பட்டு விடுகின்றன. மெட்டீரியா மெடிக்கா நட்கர்னி.

பின்விளைவுகள் நீக்கம்: நேர்வாள நஞ்சுக்குச் சீரகத்தை வறுத்துக் கொடுக்கலாம். (தேன் விட்டு) குணபாடம் மூலிகை வகுப்பு. மிளகு அனைத்து வகை நஞ்சுகளையும் நீக்கும் தன்மை வாய்ந்ததால் தீய நஞ்சுக் குணத்தை நீக்கச் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு இம்மாத்திரை விஞ்ஞானபூர்வமாக மலம் போக்கியாக மட்டுமின்றிக் கிருமிகளை வெளியேற்றவும் செயல்படுவதோடு இம்மருந்துச் சேர்க்கையில் தீயகுணங்களை நீக்குதல் பொருட்டு அதனை நீக்கும் தன்மை வாய்ந்தச் சரக்குகளையும் சேர்த்துச் செய்திருப்பது வியப்பிற்குரிய ஒன்றாகும். ஏனெனில் மருந்துச் சேர்க்கையில் ஒவ்வொன்றின் குணமும் நுணுக்கமாகத் தெரிந்திருந்தால் ஒழிய இவ்வாறு செய்ய இயலாது. பேதி மருந்துகளில் இது மிகப் பாதுகாப்பானது என்பது அறியலாம்.

இதுபோன்று சித்த மருந்துகள் என்பது ஒவ்வொன்றும் விஞ்ஞான பூர்வமாகச் செய்யப்பட்டுள்ளது என்பது அசைக்க முடியாத உண்மையாகும்.

தயிர்சுண்டிச் சூரணம்

அஞ்சுப்பு அஞ்சுபலம் அவ்வளவுமாம் சுக்கு
மிஞ்சு புளித்த தயிர் ஓர் வீசையிலே
துஞ்சலுற எல்லுலர்த்தித் தூளாக்கிளிதருந்து
இல்லை அசீரணம் பேதியே.

சித்த வைத்தியத் திரட்டு

அஞ்சுப்பு

இந்துப்பு (SODIUM CHLORIDE IMPURA)
கல்லுப்பு (STONE SALT)
துஞ்சலுற எல்லுலர்த்தித் தூளாக்கிளிதருந்து
(SODIUM CHLORIDE)
வளையலுப்பு (NATURAL SALT FROM EARTH)
பூநீறு (do)

1. தொடர்ந்து கழிச்சலின் காரணமாக உடலில் உள்ள நீர்ச்சத்துகள் வெளியேறுகின்றன.

2. இதனால் உடலில் உள்ள உப்புகளும், தாதுக்களும் சேர்ந்து வெளியாகின்றன.

3. இச்சூரணத்தில் ஐந்து வகை உப்புகளும் உள்ளதால் வீணான உப்புச் சத்துகளும் தாதுக்களும் சமன்செய்யப் படுகின்றன. எனவே உடலின் மின்பகுபொருள் சமநிலையை ஏற்படுத்துகிறது. இச்சமநிலை பாதிப்பு உயிரைப் போக்கக் கூடியது.

4. சுக்கு அகட்டுவாயகற்றியாகவும், பசித்தீத் தூண்டியாகவும் செயல்பட்டுக் கழிச்சலினால் மந்தப்பட்ட பசியைக் கூட்டுகிறது.

5. தயிர் கழிச்சலை நிறுத்தும் தன்மை கொண்டது

அதிகமான கழிச்சலின் காரணமாக உப்புகளும் தாதுப்பொருட்களும் வெளியேறுகின்றன என்பதை விஞ்ஞான பூர்வமாக சித்தர்கள் அறிந்திருந்ததாலேயே தங்கள் தயாரிப்பில் இதுபோன்ற உப்புக்களை சேர்த்திருக்கிறார்கள்.

தற்போதும் இதுபோன்ற உப்புகள், தாதுக்கள் கலந்து தயாரிப்புகளையே நடைமுறையில் பயன்படுத்துகிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பே சித்தர்கள் பேதியை நிறுத்துவதற்கு மட்டும் மருந்தளிக்காமல் பின் விளைவுகளை நீக்கும் முறைமையையும் கடைப்பிடித்தது வியப்பிற்குரிய ஒன்றாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

அன்னபேதி செந்தூரம்

இம்மருந்து பாண்டு நோயினைத் தீர்ப்பதில் தனிச்சிறப்பு வாய்ந்தது வழக்கில் பெரும்பாலான மருத்துவர்கள் இதனையே சிபாரிசு செய்கிறார்கள்.

விஞ்ஞானபூர்வமான ஆய்வு:
அன்னபேதி:(FERROUS SULPHATE)

1. இந்த அன்னபேதி செந்தூரம், அயச்செந்தூரத்தைக் காட்டிலும் பாண்டு நோயை நீக்குவதில் தனிச்சிறப்பு வாய்ந்தது.

2. ஏனெனில் இது கந்தகத்தை சல்பேட் என்ற அமைப்பில் பெற்றுள்ளது.

3. இந்தக் கந்தகம் SH-தொகுதி உருவாக வழி வகுக்கின்றது. இந்த (SH) group, இரும்புச் சத்தை பெர்ரிக் என்ற நிலையில் இருந்து பெர்ரஸ் நிலைக்கு கொண்டு செல்வதில் சிறந்த பங்குபணி ஆற்றுகிறது. இதன் குறைக்கும் தன்மையேஇதற்குக் காரணமாகும். இந்த பெர்ரஸ் நிலையில் இரும்புச்சத்து மிக எளிதாக உட்கிரகிக்கப்படுகின்றது.

சித்தர்கள் தாதுப்பொருட்களைக் கையாள்வதில் திறமை வாய்ந்தவர்கள். இதை வேதியியல் முழுமையாக உயர்ந்திருந்தால் ஒழிய இவ்வளவு தீர்க்கமாக கையாண்டிருக்க முடியாது. மேற்கண்ட விஞ்ஞான மேற்கோளினின்றும் அன்னபேதி செந்தூரத்தைப் பாண்டு நோய்க்கு விஞ்ஞான பூர்வமாகவே கையாண்டிருக்கிறார்கள் என்பது புலனாகின்றது.

இதுபோன்ற பல சிறந்த தாது பொருட்களினின்றும் தயார் செய்த மருந்துகள் சித்த மருத்துவத்தில் ஏராளமாக உள்ளன. அவை அனைத்தும் விஞ்ஞான பூர்வமாகவே உருவானவை என்பது உண்மையாகும்.

ஆதாரங்கள்

1. இந்தியன் மெட்டீரியா மெடிகா நட்கர்னி

2. குணபாடம் மூலிகை வகுப்பு மரு. முருகேச முதலியார்

3. உயிர்வேதியியல் மருத்துவர், அம்பிகா சண்முகம்

4. குணபாடம் தாதுவகுப்பு மருத்துவர் தியாகராஜன்

5. சித்த வைத்தியத்திரட்டு மருத்துவர், உத்தமராயன்

6. இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிக்கை.

சமநிலைக்காய்

கவிஞர்கோ கோவை. இளஞ்சேரன்
முன்னாள்துணைஇயக்குநர், பதிப்புத்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்

"நோய்க்கு இடம் கொடேல்"[1] இது அன்னை அவ்வையின் அன்பு மொழி. ஆழமும் அழுத்தமும் கொண்ட ஆத்திசூடி பாரதி வாயால் சொன்னால், தமிழ் மகள் சொல்லிய சொல் அமுதம் என்போம்[2]. ஆம் அமுதமொழி. அமுதம் சாவா மருந்து. இத்தொடரும் சாவா மருந்தைத் தருவது.

நோய்க்கு இடங்கொடேல் என்பதிலுள்ள மூன்று சொற்களும் தனித்தனியே அழுத்தம் கொண்டவை. நோய் கெட்ட அழுத்தம் கொண்டது. நொ என்றால் துன்பப்படு. அது நீண்டு நோ ஆகித் துன்பத்தையும் நீட்டும் நோய் ஆகித் துன்பத்தில் அழுத்தும்.

இடம் கொடேல் என்றால் கொடுக்க இடம் இருக்கிறது என்று பொருள். நமக்கு அந்த இடம் நாமே தான். நம் உடம்பு இடம் நோய்க்கு இடம். இடத்தைக் கொடுத்தால் மடத்தை மட்டுமல்ல வாழ்வையே பிடுங்கும். கொடுத்தல் என்பது இல்லாதவர்க்கும் கொடுக்கலாம் ஈகையாக, இருப்பவர்க்கும் கொடுக்கலாம் இரவலாக. இங்கே கொடுப்பதும் கொடாமல் இருப்பதும் பகைக்கு; நோய் எனும் பகைக்கு.

நோய்க்கு இடம் கொடாமலிருக்க நோய்பற்றி அறிமுகம் செய்துகொள்ள வேண்டும். நோய் எப்படி இடம் பிடிக்கும்? வேலையைச் செய்யும்? திருவள்ளுவர் சொல்வார்.

> மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய[3].

இக்குறள் திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் முதல் குறள். தொடர்ந்து வரும் ஆறு குறட்பாக்கள் உண்ண வேண்டிய உணவை அளவிடுவன. அளவாக உண்ண வேண்டும் என்பதுடன் அதிகமாக உண்ணக்கூடாது என்பதை வலியுறுத்துவார் அளவு குறையக்கூடாது என்பதும் குறிப்பாக உள்ளது. பத்தில் ஆறு குறட்பாக்கள் உணவைப்பற்றிக் கூறுவதால், முதற் குறளுக்குப் பொருள் எழுதிய பெருமக்கள் உணவு குறைந்தாலும் மிகுந்தாலும் நோய் செய்யும் வளி முதலா எண்ணிய மூன்று நோய் செய்யும் என்று விளக்கினர். ஆனால், இப்பொருளைத் தொடாத உண்மைப் பொருள் உரிய பொருள் உண்டு. உரையாசிரியர்கள் கொள்ளும் பொருளுக்கு உணவு என்னும் சொல்லை வரவழைக்க வேண்டும. இதனைத் தோன்றா எழுவாய் என்பர் எழுவாய் தோன்றியிருக்குமானால் வரவழைப்பது ஏன்?

நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று = மருத்துவ நூல் வல்லவர் வளி முதலாக எண்ணிய மூன்று
மிகினும் குறையினும் = மிகுந்தாலும் குறைந்தாலும்
நோய் செய்யும் = நோயை உண அடர்க்கும்

என்பதே இயல்பான பொருள். மருத்துவ நூலோரைக் குறித்திருப்பதால் இதுதான் நேர் பொருள்.

அதாவது, மிகுவதும் குறைவதும் இங்கு உணவு பற்றி அன்று, வளி முதலிய மூன்றுதாம். நோய்க்கு இவைதாம் முதற்காரணம். உணவின் மிகுதியும் குறைவும் துணைக் காரணம் எனலாம்.

வளி முதலிய மூன்று எவை? வாதம் என அழைக்கப் பெறும் வளி, பித்தம், சிலேத்துமம் என வழங்கப்பெறும் கோழை. இம்மூன்று 'ஐ' எனப்படும்[4]. நம் மொழியில் சொன்னால் வளி பித்தம், கோழை.

இவை மிகுவதும் குறைவதும் உண்டா? உண்டு. அதற்கு இம்மூன்றையும் பற்றிய வரலாற்றை உணரவேண்டும். நமக்குத் துன்பத்தைப் பகைவர்தாம் தருவர்

என்பதன்று. நண்பரும் தருவது வாடிக்கை. ஆனால் நோயும் துன்பமும் பிறர்தர வாரா[5] என்று பதித்த பூங்குன்றன் உண்மை பொய்யாகாது. நமக்கு நோயும் துன்பமும் செய்வோர் பிறர் அல்லர். நம் உடம்போடுள்ள உடன் பிறப்புக்களே. உடன் பிறந்தே கொல்லும் வியாதி. அவ்வுடன் பிறப்புக்களே வளி முதலா எண்ணிய மூன்றுமே. இவை மூன்றும் நண்பரும் ஆகும். பகைவரும் ஆகும். நண்பர் என்றால் ஒன்றிய நண்பர். கிடைத்தற்கரிய நண்பர். பகைவர், என்றால் பிரியாத பகைவர், கொடிய பகைவர். மேலும் சொன்னால் உயர்ந்த நண்பர். உயர்ந்த பகைவர்.

மருத்துவ நூலில்,

> வளி - மன்னன், பித்தம் - அமைச்சன்
> கோழை - படைவீரன் எனப்பெறும்
> அரசன் வாதமோடு அமைச்சன் பொருநன்[6] என்றும்
> தான் (வளி) மனை (பித்தம்) செய் (கோழை)
> மன்னன் அமைச்சன் மீளி[7]

என்றும் தேரையர் பொருத்தமாக உருவகப்படுத்தினார். தேவாரம் பாடிய அப்பரும்,

> ஆனது இக்காளை (கோழை)
> அமைச்சை (பித்தத்தை) மேவிடின் என்றார்
> ஆன் இறை (வளி) உறின்[8] என்றார்

எனவே, நல்ல நண்பர், நல்ல பாம்பைப்போல் நல்ல பகைவர். இவர்கள் ம் உடம்பில் ஓரிடத்தில் மையங்கொண்டு உடலெங்கும் பணியாற்றுபவர்கள்.

வளி-உடம்பில் உந்தியின் கீழ் இடுப்பு, தொடை, எலும்பு, தோல்,
பித்தம்-உடம்பில் உந்தி, கண், குருதி, தோல், நா
கோழை-உடம்பில் மார்பு, தலை, கழுத்து, மூக்கு

என இடம்பிடித்துக் கொண்டுள்ளன. நண்பர்களாக நன்மை செய்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால் வளி மூச்சாக ஓடிப் பித்தம் நீராக உணவை செரித்துக் குருதியாக்கி, கோழை சுவையுணர்ச்சி, கண்குளிர்ச்சி, மூட்டுப் புணர்ச்சிகளை

ஆக்கும். பகைவர்களாக மிகும், குறையும். மிகினும் குறையினும் நோய் செய்யும். இவை மூன்றன் தன்மை முதலிய வரலாறு பத்திக்கட்டமாகக் காட்டப் பெற்றுள்ளது. இது இருவகைச் செயற்பாட்டால் நம்மை வாழவைத்து வீழவும் வைக்கின்றன. எவ்வாறு? இவற்றால் வாழ்வை எவ்வாறு சீராக்கிக் கொள்வது? வீழ்வை எவ்வாறு தடுத்துக்கொள்வது? அதுதான் இக்கட்டுரையின் நோக்கு.

வளி முதலா மூன்றின் வரலாறு

வரலாறு	வளி	பித்தம்	கோழை
இடம்	உந்தியின்கீழ்		
	இடுப்பு	உந்தி, கண்	மார்பு, தலை
	தொடை, எலும்பு	குருதி, தோல்	கழுத்து, மூக்கு
	தோல்	நா	
தன்மை	குளிர்ச்சி, வெப்பம் அணுத்தன்மை	மிகு வெப்பம் நீரியம்	குளிர்ச்சி, நாற்றம்
எடை	இலேசு	கனம்	கனம்
சுவை	புளிப்பு	கசப்பு	இனிப்பு
தோற்றம்	கறகறப்பு	பளபளப்பு	மினுமினுப்பு
செயல்	இயக்கம்	அசைவு	நிலைப்பு
பூதம்	காற்று	நெருப்பு	நீர்
நிறம்	கருப்பு	சிவப்பு	வெண்மை
பதவி	மன்னன்	அமைச்சன்	படைவீரன்
உடல்	கருத்தல்	உடல் பாதிரி நிறம்	உடல் வெளுப்பு
அறிகுறி	துடித்தல்		இருமல்
	வியர்த்தல், மிகு மந்தம், மூச்சு	கண்சிவப்பு	அயர்வு, உளறல்
		தலைநடுக்கம்	வீக்கம்
		உமிழ்	மேல்மூச்சு, வேட்கை
		சுவையின்மை	சுரம், பனிப்பு
		இளைப்பு	தலையாவி
நட்பு	மூச்சோட்டம்	சிரிமானம்	சுவையளித்தல் மூட்டிசைவு
	குருதியோட்டம்		மூட்டிசைப்பு
பகை	வியர்வு, மிகுமந்தம்	சுவையதிகம்	குறை, தித்திப்பு, புளிப்பு, உப்பு
	வாய்ப்பெருமூச்சு	காலமிலா உணவு,	அதிகம், ஈர ஆடை
		துக்கம், தூக்கமின்மை	சிரியாமை

இவை மூன்றனுள் வளிக்கு மட்டும் முதன்மை ஏன்? அரச பதவி ஏன்?

வளி நண்பனாக உடலோடு உயிரை நண்பனாக்கி வைக்கிறது. உயிர் மூச்சோட்டம், குருதிநாளத் துடிப்பு, உடலுறுப்புக்களின் நல்லமைப்பு என உடலுயிர் வாழ்வை வளர்க்கிறது.

பகைவனாகப் பலவகை வாத நோய்களைச் சேர்க்கிறது. இதுதான் அதிகமாக 80 நோய்களைத் தருவது. வெளிப்படையாக உடல் தாக்கத்தைக் காட்டிவிடுவது.

இவற்றால் இதற்கு முதலிடம்: அரச பதவி

அடுத்த நிலையில் பித்தம் நண்பனாக உடலுள்ளே குருதி உருவாக, செரிக்க உழைக்கிறது. பகைவனாக அடுத்த நிலையில் 40 வகை நோய்த்தாக்கத்துத் தருகிறது.

இதனால் இரண்டாம் நிலை: அமைச்சு பதவி.

கோழை நண்பனாக மூட்டு இயக்கத்திற்கு உதவி, உடலுள் இயக்கத்திற்கு உழைக்கிறது. பகைவனாக 20 வகை நோய்களைத் தருகிறது. இதனால் மூன்றாம் நிலை, போர் வீரன் பதவி.

புறநானூற்றில் முதல் பாட்டின் முதல் புலவராகிய முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார், இம்மருத்துவக் கருத்தையும் உள்ளடக்கியே

> வளித்தலைய தீயும் (பித்தமும்)
> தீ முரணிய நீரும் [9] (கோழையும்)

என வளியை முதலில் கட்டினார். வளியின்றேல் உடலென்ன உலகமே இல்லையாகும். ஆக, வளியின் முதன்மையுடன் நம்மை ஆக்கியும் தூக்கியும் நிற்கும். இம்மூன்றும் மிகுந்தும் குறைந்தும் தாக்குகின்றன.

மிகுவதற்கும் குறைவதற்கும் காரணம் என்ன?
ஏன் மிகும் குறையும்? எக்காலத்தில் மிகும் குறையும்?
மிக்கும் குறைந்தும் எவ்வகை நோய்களைச் செய்யும்?
மிகை, குறைவின் தாக்க வெளிப்பாடுகள் யாவை?

இது அவற்றிற்கு விடைப்பட்டியல்: [10]

தாக்கம்	வளி	பித்தம்	கோழை
காரணம்	பொருந்தா உணவு உப்பு புளி காரம் உண்டன விரைவு மிகை, சினம், யோகப்பயிற்சியில் செரிமான முரண், தூக்கமின்மை	இனிப்பு, புளிப்பு நீர்ப்பிடி உடைகள் களைப்பு, மழைநீர்	
காலம்	சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, மார்கழி, தை		

மிகை

நோய்கள்	வாதம் 80	40 வகைப்	20 வகை ஐய நோய்கள்
	உள்வளி முடக்கம்	பித்த நோய்கள்	மயக்கம், வியர்வைப்
	இளைத்தல்,	நடுக்கம் மிகுதூக்கம்	பெருக்கம்,
			கீல்கள் முட்டுதல்
	கீல்கள் வலுவின்மை, சோர்வு.	வெளிப்பாடு	வயிற்றுப்பல்
			மந்தம்

காரணம்	குறை உணவு முறையற்ற யோகப் பயிற்சி, மிகுதூக்கம் சுறுசுறுப்பின்மை	நீர்வேட்கை தரும் உணவு ஏற்ற உணவிண வின்மை	வெப்பஉணவுகள் மிகு வெப்பம்
காலம்	ஆவணி புரட்டாசி	ஐப்பசி கார்த்திகை	மாசி பங்குனி

குறை

நோய்கள்	80 வகையில் சில	40 வகையில் சில	20 வகையில் சில
வெளிப்பாடு	மென்குரல் மறதி, இளைத்தல்	தீமந்தம் மிகுதூக்கம்	மயக்கம், கீல்கள் தாக்கம், வலி

இயல்பில் வளி முதலாகும் மூன்றும் மிகப்பெருமளவில் நன்மை செய்யும். சிறிதளவில் தீமையும் காட்டும். எடுத்துக்காட்டாக, வளி பத்து வகைப்படும். அவற்றையும் அவற்றின் விளக்கத்தையும் காணில் நன்மை தீமையை உணரலாம். அவை அடியார்க்கு நல்லாரால்,

அபான வாயு மலமூத்திரங்களைப் பெய்விக்கும்.
உதானன்
கண்டத்தானத்தில் நிற்கும். விதானவாயுபோக்குவரவு
செய்து இயங்கப்பண்ணும். சமானவாயு
அறுவகைச் சுவையையும் அன்னத்தையும் பிரித்து
எழுவகைத்தாதுவின் கண்ணும் கலப்பிக்கும். கூர்மன்
இமைப்பும் விழிப்பும் உறக்கமும் உணர்ச்சியும் பண்ணும்.
நாகன் விக்கல் இடுவிக்கும். கிருகரன் கோபத்தைப்
பண்ணுவிக்கும். தேவதத்தன் உடம்பெரிப்பைப்
பண்ணுவிக்கும். தனஞ்சயன் பிரரணன் போன பின்னும்
உடம்பை விடாதே நின்று மூன்றாநாள் உதிப்பித்து
உச்சந்தலையிற் பிற்கூற்றிலே மூன்று நெற்கிடை
வெடித்துப் போமென்றிக[11]. இந்நிலை ஏசுவிற்கு
ஏற்பட்டதை மூன்றாம் நாள் உயிர்த்தெழுப்பாகக்
கொண்டனர் போலும்.

என்று விளக்கப்பெற்றுள்ளது. பத்தில் ஏழு உதவியாகின்றன.

ஆனால், மிகை குறையாமல் தாக்கங்களே நேர்ந்து நோய்செய்யும். தாக்கமில்லாமல் மிகை, குறையை எவ்வாறு போக்குவது? இதற்கு எளிதான விடை சொல்லிடலாம்.

மிகாமலும் குறையாமலும் சமநிலையில் வளிமுதலான

மூன்றையும் வைத்தால் நோய் செய்ய வழியில்லை.

சொல்வது எளிதாவது போன்று செய்வதையும் எளிதாக்கிக் கொள்ள உடல் பற்றிய கவனம் வேண்டும். அதற்குத் தமிழ் மருத்துவத்தில் பல முறைகள், இந்நூல் வல்லோரால் குறிக்கப் பெற்றுள்ளன. விளக்கப் பெற்றுள்ளன. செய்முறைகளும் கொடுக்கப்பெற்றுள்ளன. செய்து நிறைவேற்றவும் பெற்றுள்ளன.

இங்கு ஒன்றைக் குறித்துச் சொல்லி ஓரளவில் விளக்கலாம். சமநிலையில் வளி முதலாம் மூன்றையும் வைக்கக் கைமருந்தாக உதவுவது ஒரு காய்.

சொல்லளவில் கடுமையான காய். ஆமாம், கடுக்காய். ஆனால் உதவியில் தாய்க்கு மேம்பட்ட காய்.

தாய்

காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய் நெறித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாய்[12].

ஆனால்,

கடுக்காயும் தாயும் கருதில் ஒன்று என்றாலும்
கடுக்காய்த் தாய்க்கதிகம் காணீர் - கடுக்காய் நோய்
ஓட்டி உடல்தேற்றும் உற்ற அனையோ சுவைகள்
ஊட்டி உடல்தேற்றும் உவந்து என்றார் தேரையர்.

கடுக்காய் நோய் ஓட்டும் என்றார் . உடல் தேற்றும் என்றார். ஆம், மருந்துமாகும், ஓரளவில் ஊட்டமும் தரும் நோய்தீர.

உற்றான் தீர்ப்பான் மருந்து உழைச்செல்வான் என்று
அப்பால் நாற்கூற்றே மருந்து

என்றார் திருவள்ளுவர். அதில் மருந்தையும் நான்கு வகையாகப் பரிமேலழகர்

மருந்தின் வகை நான்காவன:

1 பல பிணிக்கும் ஏற்றல்
2. சுவை, வீரம் விளைவாற்றல்களால் மேம்படுதல்
3. எளிதில் எய்தப்படுதல்
4. பகுதியொடு பொருந்துதல்[15]

என்றார். இவை நான்கும் பொருந்தும் மருந்துகள் சிலவே. அவற்றுள்ளும் கடுக்காய் முழுமையாகப் பொருந்துவது.

பரிமேலழகர் குறித்த நான்கும் அகத்தியர் குணபாடம், தேரையர் காரிசல் முதலியவற்றாலும் குறிக்கப்பெறுபவை. எனவே இஃதொரு பொதுக்கருத்து. எனவே இந்நான்கைக் கொண்டு கடுக்காய்ப் பயனை அளவிடலாம்.

இவ்விளைவுகளின் வாயிலாகக் கடுக்காய் வளி முதலான மூன்றின் மிகை, குறையில்லாமல் சமநிலைப்படுத்தும் காய் என்பதையும் கண்டறியலாம்.

1. பல பிணிக்கும் ஏற்றல்:

பிணிகள் முக்குற்றங்களால் வருவன. அனைத்து மருத்துவச் சித்தர்களும்

> முக்குற்றம் அகற்றும்
> வாத பித்த வன்கபத்தைத் தீர்க்கும்[16]
> வாத பித்த ஐ அகற்றும்[17]

என்று பாடியுள்ளனர். குணபாடம் கடுக்காயின் பலவகை முறைகள் 76 பிணிகளைத் தீர்க்கும் என்று பட்டியல் தந்துள்ளது.

கடுக்காய் பல வகைப்படும். பொதுவாக ஏழு வகை. அவை

1. விசயன்-இது அவந்தி நாட்டில் விளைவது-வளி நோய் போக்கும்.

2. அரோகிணி-கன்னியாகுமரியில் விளைவது-முப்பிணி போக்கும்

3. பிருதிவி-சவுராட்டிரம்-பித்த நோய் போக்கும்

4. அமிழ்தம்-காசி விளைச்சல்-கோழை நோய் போக்கும்

5. சிவந்தி-அனைத்துக் காடுகளின் விளைச்சல்-மூலநோய் போக்கும்.

6. திருவிருத்தி-மலைகளில்-புண்களை ஆற்றும்

7. அபயன்-பொதிகை மலை-கோழை நோய்களைப் போக்கும்.

இப்பிணி தீர்ப்பு பொது.

சிறப்பாக: உணவிற்குமுன் கடுக்காய்த்தூள் கொள்ளப் பசியைத் தூண்டும். தூண்டிய அஃதே செரிக்கவும் செய்யும். இவ்வாறு இரண்டும் செய்வதோடு உண்டபின் கொண்டால் வளி முதலானவற்றால் மூளும் முக்குற்றமும் போக்கும்.

தமிழில் கடுழி பத்தியம் என்றொன்றுண்டு. இதனால் மூன்றன் மிகை குறை நேராது.

கடுக்காயை மென்றுதின்ன, தீபாக்கினி அதிகப்படும்.

சீதகிக் கடுக்காய்ப் பருப்பைத் தாய்ப்பாலில் தேய்த்துப் போட்டுக் கண் நோயைப் போக்கலாம். கடுக்காயைச் சுட்டுக் கரியாக்கித் தேனுடன் உட்கொள்ள முக்குற்றமும் நீங்கும்.

கடுக்காய் தனியாக மருந்தாகுவதுடன் மற்றவற்றோடு கூடியும் நோய் போக்கும். கடுக்காய் திரிபலாதி என்னும் கடுக்காய் தான்றி நெல்லி என மூன்றனுள் முதலாவது. திரிபலாதி கைமருந்தாகும். கைகண்ட மருந்துமாகும். இதனைப் பெருங்கதை என்னும் இலக்கியம் கைபுனைந்தியற்றிய முக்கூட்டு அமிழ்தம்[18] என்று சாவா மருந்தாகப் பாடியது.

மகளிர்க்குக் கூந்தலில் பொடுகு, வெண்மயிர் தோன்றல், உதிரல் முதலியவை ஒருவகைப் பற்றுநோயாம். இந்நோயால் பழுதாகும் மயிரை நல்லதாக்குவது கடுக்காய். தனியாக அன்று

கடுக்கலந்த கைபிழி எண்ணெய் பெற்றமையால்
மயிர் நல்லவாயின[19] என்றும்
கடுவும் கைபிழி எண்ணெயும் பெற்றமையால்
மயிர் நல்லவாயின[20]

என்றும் தொல்காப்பிய உரை ஆசிரியர் இருவர் எடுத்துக்காட்டினார்.

மேலே குறிக்கப்பெற்ற கடுக்காய் பிணிபோக்கும் மருந்து என்பதற்கு சுருக்கமான கருத்துக்கள்.

2. சுவை, வீரம் விளைவாற்றல்களால் மேம்படுதல்

சுவை: சுவை ஆறுவகை. கடுக்காய் ஐந்து சுவைகளை யுடையது.

காம்பில் - கசப்பு - இது கோழைக்குற்றம் போக்கும்.
தோலில் - கார்ப்பு - இருப்பதும் ஐய,
கோழைக்குற்றத்தைப் போக்கும்

பொதுச் சுவை	கொட்டை - துவர்ப்பு - கோழைக்குற்றம் போக்கும்.
துவர்ப்பு	நரம்பு - புளிப்பு. இது வளிக்குற்றம் போக்கும். பருப்பு - இனிப்பு - இது தீக்குற்றம் போக்கும்

மற்றொரு சுவையாகிய உவர்ப்புச் சுவை இதில் இல்லை. இந்த இல்லாமை கடுக்காய்க்கு ஒரு சிறப்பு. உவர்ப்புச் சுவையால் கண் நோய் உண்டாகும். வீரிய திட்பம் கெடும். குருதி ஊற்றம் தடைபடும். இவ்வகையில் கடுக்காய் இயற்கைச் சுவையமைப்பு, நோய் அணுகா மருந்தாயிற்று.

வீரம்

கடுக்காய்க்குத் தமிழில் 9 பெயர்கள் உண்டு. அவற்றில் ஒன்று கடு. கடு என்றால் நஞ்சு.

சுக்குக்குப் புறம்நஞ்சு
கடுக்காய்க்கு அகம் நஞ்சு

என்பதொரு பழமொழி. கடுக்காய்க்கு அகம் நஞ்சு. இந்த நஞ்சுகொண்ட பருப்பே கண்நோய்க்கு மருந்தாவதைக் கண்டோம். மற்றொரு பெயர் அமிழ்தம். காசியில் விளையும் இது கோழையான் உண்டாகும் நோய்களைக் கட்டுப்படுத்தும். மற்றும் மலச்சிக்கலைப் போக்கிப் பேதி உண்டாக்கும். நஞ்சு ஒரு வீரியம். அமிழ்தம் ஒரு வீரியம். இவ்வீரியத்தைப் பேதி விரும்பும்போது

பிருதிவிக் கடுக்காயை உண்டால் பேதி
சிவந்திக் கடுக்காயைத் தொட்டால் பேதி
அமிழ்தக் கடுக்காயை மோந்தால் பேதி
விசயன் கடுக்காயைப் பார்த்தாலே பேதி

ஒரு வகைக் கடுக்காய் மரத்தின் கீழ் நின்றால் பேதி. தொட்டால், பேதியாக, கடுக்காயைப் பேய்க்கும்மட்டிக் கொடியிலுள்ள கனியைப் பிளந்து வைத்து மூடி ஒரு மண்டலம் போக, தரையில் படாமல் பக்குவப்படுத்த வேண்டும்[21].

முகலாய மன்னன் அவுரங்கசீபின் அரண்மனை மருத்துவன் கடுக்காய் செய்முறைச் சாற்றுவடிப்பை ஒரு பூவில் தெளித்து மோக்கச் செய்து பேதிவரச் செய்தான் என்பர்.

இவையெல்லாம் கடுக்காய் வீரியத்தின் வரலாற்றுச் சுருக்கம்.

விளைவு ஆற்றல்களால் மேம்படுதல்:

விளைவை இங்கு இரண்டு வகையாகக் கொள்ளலாம். ஒன்று காய் விளைச்சல் கடுக்காய் ஒரு மரம். இதன் செடிமப் பெயர் (தாவரப் பெயர்) டெர்மினாலியாசெபுலா(Terminalia Chebula) செபுலா என்பது மரத்தின் இனப்பெயர். டெர்மினாலியா என்றால் கோடிக்காவல் தெய்வ விழா எனப்பெறும். இதுகொண்டு இதன் பெருமையை உணரலாம். இதிலுள்ள கோடி ஒரு வகையில் இதன் விளைச்சலுக்குப் பொருந்தும். வங்காளத்தில் கடுமரத்தில் பல ஆயிரக்கணக்கான காய்கள் விளையும். மற்றொரு விளைவு பயன்படல், கடுக்காய், உடல் நலப்பயன், நோய் தடுக்கும் பயன், நோய் போக்கும் பயன் என ஆற்றல் உள்ள பயன்களைக் கொண்டது. உடல் நலப்பயன் தொடர்ந்து குறிக்கப்பெறும். நோய் போக்கும் பயன் ஓரளவில் முன்னே குறிக்கப்பெற்றது. நோய் தடுக்கும் பயன் குறிக்கத்தக்கது.

முன்னர் உணவிற்கு முன் கடுக்காய்த்தூள் கொள்வதால் பயன் கூறப்பட்டது. பின்னர் விளக்கப்பெறும் பருவ நிலைக்கேற்ப கடுக்காய், கடுக்காயில் சமைக்கப்பெற்ற பண்டங்கள், நாள்தோறும் காலையில் உட்கொள்ளும் வழக்கம் இவற்றால் நோய்தடையை அறியலாம்.

3. எளிதிற் கிடைத்தல்

கடுக்காய் எளிதிற் கிடைப்பதென்பது வெளிப்படையாகத் தெரிவதன்று. இலைமறை காயாக உள்ள அந்த எளிமை முதலில் இந்தியாவில் எல்லா இடங்களிலும் இம்மரம் பயிராகிப் பயன்தரும் என்பது. இமயமலைச் சாரலில் பயிராகும். கன்னியாகுமரிப் பகுதியிலும் விளையும். மலையில் விளையும். இதனை

> *கடுகலித்து (தழைத்து) எழுந்த*[22]
> *கண்ணகன் சிலம்பு (மலை)*

என்றார் குன்றூரில் வாழ்ந்த குன்றூர்ப் பெருங்கௌசிகனார். வடக்கில் சமதளப் பகுதியிலும், தெற்கில் மேட்டுப் பகுதியிலும் இம்மரம் விளையும். அளவான சிறு மரமாகவும், வடக்கே சில இடங்களில் 100 அடி உயரமுள்ள மரமாகவும் வளரும். இவ்வாறு பரவலாக, ஏறத்தாழ அனைத்துப் பருவத்தும் விளைவது எளிதாகக் கிடைப்பதின் அறிகுறிகளே.

இதன் நிறமும் தோற்றக் குறிகளும் தனித்தனியாக ஒவ்வொன்றின் பயன்பாடுகளை அறிவித்து எளிதாகப் பயன்கொள்ள உதவும். சேதகிக் கடுக்காய் வெண்மை நிறம். சிவந்திக் கடுக்காய் மஞ்சள் நிறம்.

அபயம் கருப்பு: திருவிருத்தி ஐந்து வண்ணம்
அமிழ்தம் மூன்று வரிகளை உடையது
அரோகினி நான்கு வரிகளை உடையது
மிகச் சில வெண்மை இவற்றால்

கடுக்காய் — கடுங்கடுக்காய், செங்கடுக்காய் வரிக்கடுக்காய், பால் கடுக்காய் எனப்படும்

இக்குறியீடுகள் பயன்கொள்ள எளிதாக்கும்.

4. பகுதியொடு பொருந்துதல்

இந்தப் பகுதி என்பது மருந்துப் பகுதி, நோய்ப்பகுதி, கூட்டுச் சரக்குப் பகுதி, பருவப் பகுதி, உடற்பகுதி எனப் பலவகைப் படும்

இத்துணைப் பகுதிகளுக்கும் கடுக்காய் பொருந்தி நிற்பது.

மருந்துப் பகுதி: இதன் தோல், கொட்டை, நரம்பு, பருப்பு என்பவற்றால் மருந்துகள் செய்யலாம். பருப்பு தவிர ஏனையவை

பொடியாக்கப்பெற்றே மருந்தாகும். இதன் பூ, பிஞ்சு, முற்றாத காய், முற்றிய காய், நெற்றான காய் எனப் பல பருவ விளைச்சலும் மருந்தாகும். தூள், தூளி (சூரணம்) கருக்கு நீர், (கசாயம்), நீறு (பஸ்பம்) உறுப்புகள், முழுக்காய் எனத் தனியாகவும் செயற்பாட்டாகவும் மருந்தாகும்.

நோய்ப்பகுதி: நோயின் பகுதியைத் திருவள்ளுவர் வழியில் சொன்னல், நோய், நோய்முதல் நோயின்வாய், வாய்ப்புச் செய்வது என நான்காகும். இவற்றையும், வளி முதலான மூன்றின் மிகை குறைகளையும் நாடி அறிவதற்கே நாடி உள்ளது.

நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செயல்

என்னும் திருக்குறள் மூன்று நாடிகளை அறிவிக்கிறது. கை நாடியைப் பிடித்துப் பார்த்துக் குருதி ஓட்டத் துடிப்பால் வெப்பதட்பத்தால் காரணத்தை நாடி அறிவது நாடி. அதை அறிவிப்பதும் நாடி. இந்நாடி முதல் மூன்று நாடிகள், நோய் நாடி, நோய்முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி. இரண்டாவது வளிநாடி, பித்தநாடி, கோழை நாடி என மூன்று. இதனை

அரசாம வாத(1) மோடு அமைச்சன் (2) பொருநன் (3)
அடைவினில் நாடிகள் அவை வெவ்வேறே[25]

எனத் தேரையர் கரிசல் அறிவிக்கிறது. மூன்றாவது நோயை நாடும் நாடி தணிக்கும் வாயை நாடும் நாடி என்பன. இந்நாடி வகைகளால் அறியப்பெறும் நோய்ப்பகுதிகளுக்கேற்பக் கடுக்காயின் உறுப்புகள், செய்முறைகள் கொண்டு இது பகுதிப் பொருந்தும்.

கூட்டுச்சரக்குப்பகுதி

தான்றி, நெல்லி இவற்றின் கூட்டால் கடுக்காய் திரிபலாதியாகும். இஃதன்றி வல்லாரை, நல்லாரை, மையாந்தகரை,ஆவின்பால், ஆட்டுப்பால் ஆகியவற்றின் கூட்டாலும், உப்பு, தேன் வெல்லம், நெய் இவற்றின் கூட்டாலும் பொருந்தும்.

பருவப்பகுதி

ஒரு மிக இன்றியமையாதது ஓராண்டில் பருவங்கள் ஆறு. அவை முன்னர் வளி முதலான மூன்றும் ஆறு பருவங்களில் எவ்வெப் பருவத்தில் மிகும். குறையும் என்று கண்டோம். அவ்வப் பருவத்திற்கேற்ப அமையும் நோயையும் கண்டோம். ஆறு பருவங்களுக்கும் இக்கடுக்காய் இயற்கையாகவும் செய்முறைகளாகவும் பொருந்தும். இவற்றுள் இயற்கையாகக் கொள்ளும் வகைகளுள் தூளி (சூரணம்) எளிது. எல்லாப் பருவங்களுக்கும் பொருந்தும். ஆனால் பின்வருமாறு அவ்வப் பருவத்திற்கு ஏற்ற கூட்டுகளை அறிய வேண்டும்.

இளவேனில்	வெல்லம்
வேனில்	உப்பு
கார்	கற்கண்டு
கூதிர்	சுக்கு
முன்பனி	அரிசித்திப்பிலி
பின்பனி	தேன்

இவ்வாறு கடுக்காய்த்தூள் மருந்து என்பது மட்டும் அன்று

நாள்தோறும் காலை கடுக்காய்த்தூளை ஏற்ற கூட்டுகளுடன் கூட்டி மூன்று சிட்டிகை கொள்ள வளி முதலிய மூன்றன் மிகுதலும் குறைதலும் நேரா.

இதனால் கடுக்காய் மூன்றையும் சமநிலையில்
வைக்கும் காய்
சமநிலைக்காய்

நாள்தோறும் கொள்ள விரும்பாதோர் நாடி வழியாக உடலில் வளி முதலானவற்றின் மிகையையும் குறையையும் உணர்ந்து அதற்கேற்ப அவற்றைச் சமநிலைப்படுத்தக் கடுக்காயைப் பயன்படுத்தலாம்.

மாந்தர் தம் பருவத்திற்கு ஏற்ப உணவை
மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சேக்சுபியர்

குறித்ததற்கு ஏற்ப இளமை, முதுமை என்னும் நம் பருவத்திற்கு ஏற்பவும் இக்கடுக்காய் அமையும்.

இளவேனில், வேனில், கார், கூதிர், முன்பனி
பின்பனி என்னும் அறுவகைப் பருவத்திற்கும்
இப்பருவத்து இந்நோய்க்கு இம்மருந்து செய்தால்
தீரும், விகற்பிக்கும் என அறிதலும்[24]

என்று திருக்குறளின் உரையாசிரியர்களுள் ஒருவராகிய காலிங்கர் குறித்தமை போன்று, பருவம் தேர்ந்து, நோய்

தேர்ந்து, நோய் தீர இக்காய் ஒன்றே கைகொடுக்கும். இத்துணை நன்மை தரும் கடுக்காய், கடுப்புக் காய்தான். கடுக்காய் சுவையாகத் தின்னக்கூடிய காய் அன்று. கடு என்பதற்கு ஏற்ப கடுமைக் காய்தான். கடுமையான சொல்லைக் குறிக்கப் புகுந்த தொல்காப்பியர்

வேம்பும் கடுவும் போல வெஞ்சொல்[25]

என்றார். சுவையால் கடுஞ்சொல்லுக்கு உவமையானாலும் மருந்தால் நோய் தீர்ந்தவர் இன்சொல்லைப் பெற உதவும் காய். இந்தக் கடுமையுடன் ஒன்றையும் சொல்லிவிட வேண்டும். அது கடுக்காயை உண்ணக்கூடாதார் எவர் என்பது அவர், இவர்

செரிமானம் இல்லாதவர், தொண்டைக் கரகரப்புள்ளவர், தொலைநடை மேற்கொண்டோர், பட்டினி கிடந்தோர், குருதி இழந்தவர், கால் கட்டப்பெற்றோர், வாய்ப்பூட்டு தளர்ந்தவர், சூலுற்ற பெண்கள், புணர்ந்த ஆண்கள்

இதுவரை கண்ட அளவில் கடுக்காய் மருந்தியல், இலக்கியத் தொடர்பு கொண்டது. இதற்கு ஆன்மிகத் தொடர்பு உண்டு.

இதுபற்றிய புராணக்கதை ஒன்று உண்டு. இந்திரன் அமிழ்தம் உண்டபோது ஒரு துளி கீழே சிந்தியது. அத்துளி விதையாக முளைத்ததே கடுக்காய்[26]. கதை என்றாலும், அமுதத்திலிருந்து நஞ்சு முளைத்திருப்பது ஒரு புதுமை. கோயில் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு திருமரம் உண்டு கொறுக்கைக் கோயிலில் கடுக்காய்மரம் திருமரமாக உள்ளது.

தொழில் துறையில் விற்பனையால் தொடர்பிருக்கிறது. இதற்கு ஆங்கிலத்தில் இங்க் நட் (Ink Nut) என்றொரு பெயர். இதன் ஊறலால் சாயம் செய்யப்படுவதால் இப்பெயர் பெற்றது.

இதுவரை இக்கட்டுரை என்ன கொடுத்தது?

கடுக்காய் கொடுத்தது என்பீர்கள். அப்படிச் சொன்னால் அது இரண்டு வகையில் தவறாகும்.

நாட்டு வழக்கில் கடுக்காய் கொடுத்தான் என்றால் ஏமாற்றி விட்டான் என்றுதான் கருதப்படுகிறது. ஏன்? சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட பேரகராதி (லெக்சிகன்) கடுக்காய் கொடுத்தல் என்பதற்கு ஏமாற்றி விடுதல் என்றுதான் பொருள் கொடுத்துள்ளது. ஆனால் இது உண்மைப் பொருள் அன்று.

இக்கட்டுரையில் முன்னர் வேண்டும்போது பேதியாவதற்குக் கடுக்காய், மோப்பதால், பார்ப்பதால், தொடுவதால் எளிதாகப் பயன்படும் என்று கண்டோம். இதன்படி ஒருவர் பேதி கருதி கடுக்காயைக் கொடுத்தால் மருந்தாகப் பயன்படும். இவ்வாறு கடுக்காய் கொடுத்தே எளிதில் பேதியாகச் செய்வதைக் குறிக்கவே கடுக்காய் கொடுத்தல் என்ற மொழி எழுந்தது. அத்துடன் கடுக்காய் கொடுத்தால், அதைப் பயன் படுத்தினால் உடல் நலம் சேரும் என்னும் கருத்தே உண்மை. ஆனால் எவரோ ஒருவர் தவறாக, பேதியை. விரும்பாத நிலையில் அவர்க்குக் கொடுத்துப் பேதிகொள்ளச் செய்ததால் ஏமாற்றுதல் பொருள் தவறாக உண்டானது. இவ்வகையாக நீங்கள் பொருள் கொண்டால் அது முதல் தவறாகும்.

இரண்டாவது, இக்கட்டுரை கடுக்காய் கொடுக்கவில்லை. கடுக்காய் சமநிலைக்காய் என்று சமநிலை கொடுத்துள்ளது. எனவே, இதில் ஏமாற்று இல்லை.

நிறைவாக ஒன்று, கடுக்காயை நேரடியாக உண்ண விரும்பாதோர், கடுக்காயைக் கொண்டு

கடுக்காய்த் துவையல், கடுக்காய் வடகம்

கடுக்காய்ப்பாகு (குல்கந்து) கடுக்காய் முறப்பா

கடுக்காய் மோதகம், கடுக்காய் நெய்

கடுக்காய் ஊறுகாய்

எனப் பக்குவம் செய்து நோய்த் தடுப்பு உணவாக்கிக் கொள்ளலாம்.

கடுக்காய்த்தூள் எளிது. சமம் செய்வதில் இயல்பானது. வளி முதலா எண்ணிய மூன்று மிகுந்தும் குறைந்தும் நோய் செய்யாமல் சமநிலையில் வைப்பது எனவே, **சமநிலைக்காய்.**

குறிப்புகளின் விவரம்:

1. அவ்வையார், ஆத்திசூடி, 75
2. சுப்பிரமணிய பாரதியார், பாரதியார் கவிதைகள், தமிழப் பல்கலைக்கழகம், பக்கம், 1452
3. திருவள்ளுவர், திருக்குறள், 941.
4. திருநாவுக்கரசர் தேவாரம், திருவையாற்றுப் பதிகம், 2-1.
5. கணியன் பூங்குன்றனார், புறநானூறு, 192-2.
6. தேரையர், தேரையன் மகாகரிசல், 1-10.
7. தேரையர், தேரையன் மகாகரிசல், பாயிரம்.
8. திருநாவுக்கரசர், தேவாரம்.
9. முரஞ்சியூர் முடிநாகராயர், புறநானூறு, 2-4-5.
10. சீவரட்சாம்ருதம் நூலிலிருந்து தொகுப்பு.
11. அடியார்க்குநல்லார், சிலப்பதிகாரம், 3-27உரைவிளக்கம்.
12. முனைப்பாடியார், அறநெறிச்சாரம், 96-1, 2.
13. அகத்தியர் குணபாடம், பொருட்பண்பு நூல், பயிர் வகுப்பு, முதற் பாகம், பக்கம் 154.

14. திருவள்ளுவர், திருக்குறள், 950.

15. பரிமேலழகர், திருக்குறள் 950, உரைவிளக்கம்.

16. 17, முருகேச முதலியார், க. ச. பொருட்பண்பு நூல், முதற்பாகம், பக். 152.

18. கொங்குவேளிர், பெருங்கதை, இலாவானகாண்டம், 4-91.

19. சேனாவரையர், தொல்காப்பியம் சொல்லதிகாரம், 21 உரை விளக்கம்.

20. இளம்பூரணர், தொல்காப்பியம் சொல்லதிகாரம் 21 உரைவிளக்கம்

21, 22. முகம்மது அப்துல்லாசாயபு, பா. கடுக்காய் பிரபாவ போதினி பக். 18.

23. தேரையர், தேரையன் மகா கரிசல் 1-10, 11

24. காலிங்கர், திருக்குறள், 949, உரைவிளக்கம்.

25. தொல். பொருள். 417.

26. சிங்காரவேலு முதலியார் ஆ. அபிதான சிந்தாமணி. பக். 321.

27. பேரகராதி (லெக்சிகன்) சென்னைப் பல்கலைக்கழகம் தொகுதி 1, பக். 671.

சித்த மருத்துவத்தின் முன்னேற்றத்திற்குரிய ஆலோசனைகள்

கா. பழநிச்சாமி, மாவட்ட சித்த மருத்துவ அலுவலர், ஈரோடு.

சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்குஅடிப்படையாகத் தேவைப்படுவன சித்த மருத்துவ இலக்கியங்கள் ஆகும். பல்வேறு நிறுவனங்கள் பல கால கட்டங்களில் இவ்விலக்கியங்களை ஓலைச் சுவடிகளிலிருந்து எடுத்து எழுதி வெளியிட்டுள்ளன.

அ. இதுவரை வெளியிடாத ஓலைச் சுவடிகளை அவை அழிந்து போவதற்கு முன் படியெடுத்து நூல்களாக வெளியிடவேண்டும்.

ஆ. ஏற்கனவே வெளியிடப்பட்ட நூல்கள் மூலப் பிரதிகளை ஒப்பு நோக்கி அவற்றில் விடுபட்ட புதிய செய்திகளை மட்டும் இணைப்புகளாக வெளியிட வேண்டும்.

இ. முடிந்த வரையில் நிழல் நுண்சுருள் படங்களாக மாற்றி முறையாகப் பாதுகாக்கப்படவேண்டும்.

ஈ. நூல் நிலையங்களில் வெளியிட்ட நூல்கள் செவ்வையாக பாதுகாக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் பொருட்டு அவைகள் பயன்படுத்தப்படவேண்டும்.

உ. மேலே குறிப்பிட்ட வேலைகள் எல்லாம் அமைச்சர் பேராசிரியர் அவர்களுடைய பேராவல் காரணமாகப் பல இடங்களில் துவக்கப்பட்டிருந்தாலும் அவைகள் துவக்க நிலையிலேயே அதை எடுத்தாளுகின்ற அலுவலர்களின் ஈடுபாட்டுக் குறைவினாலும் இவைகளுக்காக ஒதுக்கப்படும் பணக் குறைவினாலும் நினைத்ததை விடப் பின் தங்கிய நிலையிலும் உள்ளன. எனவே பேராசிரியர் அவர்களின் தூண்டுதலினால் பழநியாண்டவர் தேவஸ்தான நிதியிலிருந்து அரசு எவ்வளவு குறுகிய காலத்தில் நூல்களை வெளியிட்டதோ அதே விரைவில் வெளியிட்டால் சிறப்பாக அமையும்.

ஊ. வெளியிடப்படும் நூல்கள் மலிவு விலைப் பதிப்புகளாக வெளியிடப்பட வேண்டும்.

2. அ. வெளியிடப்பட்டுள்ள நூல்களில் சொல்லப்பட்ட மருந்துகள் எல்லாமே ஏற்கனவே மனிதர்களால் சோதிக்கப்பட்டவைகள்தான். எனவே அவைகளைப் புதிய மருந்துகள் போல் விலங்கினங்களுக்குக் கொடுத்துச் சோதித்துப் பார்த்துக் காலத்தை வீணாக்காமல் இருப்பது நன்று. ஆனால் மருந்துகளின் நச்சுத் தன்மையை அவற்றைக் கொடுப்பதற்கு முன் சோதித்துப் பார்ப்பது அவசியம்.

ஆ. தற்போது தமிழகம் முழுவதும் குறிப்பிட்ட நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட குறிப்பிட்ட சில மருந்துகளை மட்டும் தான் பயன்படுத்தி வருகின்றோம். இவைகளை விட இன்னும் சிறப்பான மருந்துகள் நூல்களில் கூறப்பட்டிருப்பினும் அவைகள் பலராலும் பயன்படுத்தாத நிலையில் இருக்கின்றன. எனவே அந்த மருந்துகளைச் சோதனைக்குட்படுத்திச் சிறப்பானவைகளை மட்டும் எல்லோரும் பயன்படுத்தும்படி நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். (எ. கா.) தாம்பிர செந்தூரத்தில் 50 முதல் 60 செய்முறைகள் இருக்கின்றன. அவைகளில் எந்த ஒரு முறையிலான மருந்து சிறப்பாகச் செயல்படுகின்றதோ அதனை நடைமுறைக்கு விரைவில் கொண்டு வரவேண்டும்.

எல்லாக் காலங்களிலும் எல்லோருக்கும் ஆங்கில மருந்துகள் கிடைப்பது போல் எப்பொழுதும் எல்லா இடங்களிலும் சித்த மருந்துகள் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டந்தோறும் 25 படுக்கைகள் கொண்ட சித்த மருத்துவ மனைகள் உடனடியாக அவசியம் திறக்கப்படவேண்டும்.

தமிழகத்தில் ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்ட மருத்துவமனைகள், மத்திய மாநில அரசு நிறுவனங்களிலும் சித்த மருத்துவ பிரிவு திறந்து இயக்க வழிவகைகள் செய்ய வேண்டும். ஏனெனில் சித்த மருத்துவத்தை விரும்பி வருகின்ற மக்களுக்கு மருத்துவம் அளிக்கச் சித்த மருத்துவ பகுதிகள் இயங்கினால்தான் பொதுமக்கள் சித்த மருத்துவம் பற்றி அறியவும் அதன் பலன்களை அனுபவிக்கவும் முடியும்.

பரம்பரை சித்த மருத்துவர்களிடமிருக்கும் நல்ல பல மருந்து செய்முறைகளை வெளிக் கொணர்வதற்கு அரசும், அலுவலர்களும் முயற்சிகளை எடுக்க வேண்டும்.

சித்த மருத்துவம் பற்றித் தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றிலும் வாரந்தோறும் பண்ணைச் செய்திகள் போல் செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்க வேண்டும்.

மஞ்சள் காமாலைக்குக் கீழாநெல்லி சிறந்த மருந்து போன்ற சிலைடுகள், தொலைக்காட்சியில் சித்த மருத்துவம் குறித்துக் காண்பிக்கப்படவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு மற்றும் குழந்தைகள் நலம் பற்றிய விளக்கப்படம் போன்று தமிழ்நாடு செய்தித் துறையினரால் சித்த மருத்துவம் பற்றி ஒரு விளக்கப்படம் எடுக்கப்பட்டு ஒவ்வொரு நாளும் சினிமாத் திரையரங்குகளில் காண்பிக்கப்பட வேண்டும்.

பொதுவான மரங்களை நடுவதற்குப் பதில் மருத்துவப் பயன் உள்ள மரங்களை வனத்துறை அலுவலர்களும் சித்த மருத்துவ அலுவலர்களும் இணைந்து ஆங்காங்கே நட்டு மக்களுக்கு அவைகளின் பயன்களை எடுத்துச் சொல்ல வேண்டும்.

அரசு அலுவலகங்கள், பொது நிறுவனங்கள், கல்லூரி போன்ற இடங்களில் குறைந்தது ஒரு ஏக்கர் நிலத்தில் சித்த மருத்துவ மூலிகைப் பண்ணை பராமரிக்கப்பட வேண்டும். மக்களுக்குச் சித்த மருத்துவத்தில் உள்ள ஆரோக்கிய வாழ்க்கைக்குத் தேவையான நெறி முறைகளை மருத்துவ அலுவலர்கள் எடுத்துக்கூறி நல்வழிப்படுத்த வழி வகைகள் செய்யப்பட வேண்டும்.

தமிழகத்தில் சென்னையில் ஒரு சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று திறக்கப்பட வேண்டும். சித்த மருத்துவத் தேசிய ஆராய்ச்சி மையம் உடனடியாகத் திறக்கப்பட வேண்டும்.

சித்த மருத்துவ மேம்பாடும் பரிபாஷை விளக்கமும்

வீ. சௌந்திரராசன்,
இறுதியாண்டு, பி. எஸ், எம்.எல்.,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

தமிழகத்தில் தோன்றி உலகம் முழுவதும் வாழ்கின்ற மக்களின் சமூக நலன் கருதி வைத்தியம், ஞானம், யோகம், வேதமார்க்கம், சோதிடம் ஆகிய துறைகளின் கருத்துக்களை மறைபொருளாகப் பரிபாஷையின் பாடிச் சென்றுள்ளனர். அவைகளை நாம் மேம்போக்காகப் பார்க்கும்பொழுது ஒரு பொருளும், ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது பிறிதொரு பொருளும் தோன்றும் வகையில் பாடியுள்ளார். அதுவும் சாதாரணச் சொற்களைக் கொண்டே பரிபாஷையில் பாடியுள்ளனர். சித்தமருத்துவம் மேம்பாடு அடைய அப்பரிபாஷைச் சொற்களுக்கு உண்மையான பொருள் விளக்கம் காணல் மிக மிக அவசியமான ஒன்றாகும்.

பரிபாஷை என்பது என்ன?

பரிபாஷை என்பது மறைவான சொல், தொழிற் சொல், நூற் சொல் ஆகும். இவற்றையே ஆங்கிலத்தில் code word, scientific word, Technical word, Nemenclature என்று பல வார்த்தைகளால் அழைப்பார்கள்.

சொல்லும் பொருளும்:

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே
என்பது தொல்காப்பியம்

எந்த மொழியாயினும் ஒரு சொல்லிற்குப் பலபொருள்கள் இருக்கலாம். ஆனால் சொல்வோன் கருத்து. சொல்வோன்

திறம், சொல் பரிமாறும் சூழல், கேட்போன் நிலை, திறம், கேட்கும் சூழல் இவை எல்லாம் பொருந்தினாலன்றிப் பொருள் தெரியாது.

சித்தர்களின் பாடல்களின் எளிதாகப்பேச்சு வழக்கில் உள்ள சொற்களையே பயன்படுத்தி உள்ளனர். ஆனால் அவற்றின் உண்மைப் பொருள் யாரும் அறிவது கடினமாகும். எனவே அவற்றின் உண்மையான பொருள் விளக்கம் காணுதல் அவசியமாகும்.

சித்தர்களும் பரிபாஷையும்

சித்தர்கள் மருத்துவம் மட்டுமின்றி, வேதமார்க்கம், ஞான மார்க்கம், யோகமார்க்கம் ஆகிய துறைகளில் ஏராளமான பரிபாஷைச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர். அவ ற்றுள் வேதைமார்க்கம், ஞானமார்க்கம், யோகமார்க்கம் ஆகிய துறைகளில் உள்ள பரிபாஷைகளுக்குப் பொருள் விளக்கம் காண்பது மிகமிகக் கடினம் என்பதை நாம் அறிவோம்.

மருத்துவத் துறையில் சொல்லப்பட்ட பரிபாஷைகளுக்குப் பொருள் விளக்கம் காண முயற்சிக்க வேண்டும். அப்பரிபாஷைகளின் உண்மையான பொருள் விளக்கம் சித்த மருத்துவ துறைக்குக் கிடைத்தால் உலகில் முதல் தரமான மருத்துவ முறையாகச் சித்த மருத்துவம் அமையுமென்பதில் ஐயமில்லை.

பரிபாஷைகளுக்கு எடுத்துக்காட்டுகள்:

சித்தர்களின் பாடல்களிலிருந்து ஏராளமான பரிபாஷைச் சொற்களை மேற்கோள் காட்டுதல் கூடும். அவற்றுள் சில பரிபாஷைச் சொற்களை இங்குக் கூறுகிறேன்.

காட்டு எருமைப் பால்:

இது காட்டில் வாழும் எருமையின் பால் என்றும், எருக்கம்பால் என்றும், கன எருமை விருட்சத்தின் பால்

என்றும் கூறப்படுகிறது. ஆனால் உண்மை யாதென அறியப்படவில்லை.

நாத குருத் தைலம்:

வைத்தியக்கல்லாடம் என்ற நூலில் வான்மெழுகு என்ற உயர்ந்த மருந்து செய்முறை கூறப்பட்டுள்ளது. இதில் மருந்துகளின் தொகை, அளவு பற்றிக் கூறும் போது பல்வேறு கருத்து வேறுபாடுகள் உள்ளன. மேலும் அம்மெழுகை அரைக்கப் பயன்படும் நாதகுருத்தைலம் என்ற செய்முறையும், அதன் பொருள் விளக்கமும், சர்ச்சைக் குரியதாக உள்ளன. தற்போது வழக்கத்தில் அம்மெழுகை அரைக்க அண்டத் தைலத்தைப் பொதுவாக எல்லோரும் பயன்படுத்துகின்றனர். ஆனாலும் பல வைத்தியர்கள் பல்வேறு கருத்து வேறுபாடுகள் இன்று வரை கொண்டுள்ளனர்.

மயில் முட்டைத் தைலம், கந்தகத் தைலம், வான்கோழி முட்டைத் தைலம், தேன், ஒரு வகையான ஜெயநீர் கொண்டு அரைக்கலாம் என்பது அவர்களின் கூற்று. அவற்றையே நாத குருத்தைலம் என்று வழங்குகின்றனர். மேற்கூறியவை கொண்டு பலரும் இவ்வான் மெழுகைச் செய்து முடிக்கின்றனர்.

மேலும் நாதகுருத் தைலம் என்ற செய்முறை, நூலில் கூறப்பட்டுள்ளது. அத்தைலத்தைச் செய்து முடித்தால் வைத்தியம் மட்டுமன்றி வாத மார்க்கத்திற்கும் பயன்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

எனவே அத்தைலத்தைச் செய்துகொண்டு, வான்மெழுகு மருந்தைச் செய்து முடித்தால் மிகக் கொடிய வியாதிகளைத் தீர்க்க முடியும் என்று புலனாகிறது. மேலும் வான்மெழுகு ஆராய்ச்சி என்ற நூல் திரு. மாங்காடு வடிவேல் முதலியார் அவர்கள் எழுதியுள்ளார்கள். அதிலும் சரியான முடிவுக்கு வரமுடியாமல் அண்டத் தைலமாகத்தான் இருக்கும் என்று கூறுகின்றனர்.

எனவே பரிபாஷையில் கூறப்பட்டுள்ளபடி நாதகுருத்தைலம் என்ற சொல்லுக்கு உண்மையான பொருள் விளக்கம் கண்டு மருந்து முடிப்பது சாலச் சிறந்ததாகும்.

இரசமணி, ககனக் குளிகை:

இவைகள் செய்வது போன்ற விளக்கம் நூலில் கூறப்பட்டுள்ளது. அதற்குப் பொருள் யாதும் கூறவில்லை. காரணம் பரிபாஷையில் சொல்லப்பட்டதே ஆகும்.

பூநாகம்:

இது பூமியில் காணும் மண்புழு என்றும், சிலர் செந்தாமரைப் பூவில் உள்ள சிறிய நாகம் என்றும் கூறுவர். அச் செந்தாமரைப் பூவில் காணும் நாகம் மயிரளவு உள்ளதாகும். அதைக் கவனமாக எடுத்து, கருங்கல் கூட்டி அரைத்துப் பூச அறுந்த நரம்பு ஒன்றுகூடும் என்று கருத்துக் கூறுகின்றனர். சிலர் பூநாகம் என்பது பூநீறு என்றும் கருத்துக் கூறுவர்.

முப்பு:

சித்த மருத்துவத்தில் சித்தரின் மணிமகுடம் முப்பு ஆகும். முப்பு என்ற சொல்லே ஆராய்ச்சிக்குரியது. ஏனென்றால், அச்சொல்லுக்குத் தெளிவான வரையறை கூற முடியவில்லை, மேலும் செய்முறைகள், கைபாகம், செய்பாகம் அனைத்தும் பரிபாஷையில் காணப்படுவதால் உண்மையான பொருள் விளக்கம் காணுதல் தேவையாகும்.

சிலர் முப்பைத் தனியாகச் செய்ய வேண்டியதில்லை நன்கு செய்து முடித்த மருந்திலேயே முப்பும் முடிந்து, அம்மருந்திலேயே அதுவும் அடங்கி விடுகிறது. எனவே தான் அம்மருந்து நோய்களை நன்கு குணமாக்குகிறது என்பது சிலரின் வாதமாகும். இக்கருத்து ஆராய்ச்சிக்கு உரியதாகும்.

திருமூலர் திருமந்திரம்

திருமூலர் எழுதிய திருமந்திரம் என்னஉம் நூலில் காணப்படும் பாடல்களுக்குப் பொருள் விளக்கம் பலரும் பலவிதத்தில் விளக்கிக் கூற முற்பட்டுள்ளனர். ஆனால் உண்மையான பொருள் விளக்கம் இதுவரை கூறப்படவில்லை.

வைத்தியம் சம்பந்தமாகவும் நிறையப் பாடல்கள் கூறப்பட்டுள்ளன. உதாரணமாக உடலைப் பற்றிக் குறிப்பிடும்போது 35 வகையான சொற்களால் குறிப்பிடுகிறார். ஆனால் அவற்றைப் பயன்படுத்திய விதத்தினைப் பற்றி உண்மைப் பொருள் விளக்கம் இல்லை.

அச்சொற்களில் சில

அத்திப்பழம், கோயில், முட்டை, தோல்பை, மாயபுரி, காயத் தேர் போன்றவை.

குருநாடி, பஞ்சபூத நாடி

உயிர்த்தாதுக்களாகிய வாத, பித்த, கபம் பற்றி விளக்கம் கூறிய சித்தர்கள் குருநாடி, பஞ்சபூத நாடி, போன்றவற்றைப் பரிபாஷையில் சொல்லி இருக்கிறார்கள். மேலும் குருநாடி வாத, பித்த, கபத்திற்கு உயிராக விளங்குவதாகக் கூறியுள்ளனர். எனவே அதைப் பற்றிய பொருள் விளக்கம் கிடைக்காததால் சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவங்களை முழுமையாக அறிய முடியாது. ஆகையால் அதைப் பற்றிய பொருள் விளக்கம் ஆராய்தல் வேண்டும்.

பொருள் விளக்கம் காணப்பட வேண்டிய பரிபாஷைச் சொற்களில் சில

அண்டநீர், பிண்ட நீர், சுத்த கங்கை, நாதம், விந்து, அண்டக் கல், பிண்டக் கரு. ஐங்கோலக் கரு. பழம்புளி, அமுரி, ஊசிநீர், தேசிநீர், உப்பு, கதலி வனம், எரி வண்டு,

கருநெல்லி, வெண்சாரை, கருஞ்சாரை, பரை நாதம் போன்றவை.

கருத்து விவாதம்

சித்த மருத்துவம் மற்றைய மருத்துவ முறைகளினின்று வேறுபட்டதாகவும், பிற மருத்துவ முறைகளால் வேரறுக்க முடியாத கொடிய நோய்களைக் குணப்படுத்த வேண்டுமென்றாலும், பாரில் சிறந்ததொரு மருத்துவமாகவும், மேம்பட்டதாகவும் திகழ வேண்டு மென்றால் பரிபாஷைகளுக்கு உண்மையான பொருள் விளக்கம் காணுதல் மிகமிக அவசியம்.

எனவே வைத்திய நிகண்டுகள், வைத்தியத் திறவுகோல் பற்றிய ஏடுகள், நூற்கள் போன்றவற்றை சித்தர்கள் வாரியகச் சேகரித்து பரிபாஷைச் சொற்களைத் தொகுக்க வேண்டும்.

சித்த அறிஞர்களும் மற்றும் பல்வேறு துறையிலுள்ள அறிஞர்களும் கொண்ட குழு அமைத்து, அப்பரிபாஷைச் சொற்களுக்கு உண்மையான விளக்கம் காண முயல வேண்டும்.

பிறகு உண்மையான பொருள் விளக்கத்தை உறுதிப் படுத்துதல் வேண்டும். அதன் பின்பு அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும்.

சித்த மருத்துவத்தை வளர்க்கும் வழிகள் சித்த மருத்துவ வளர்ச்சியில் நவீன அறிவியலின் பங்கு

மரு. செ. இராமசுவாமி,
உதவி மருத்துவ அலுவலர்,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பழநி.

முன்னுரை

உலக மொழிகளில் முதன்மையானதும் தொன்மையானதுமாகத் தமிழ் விளங்குவதுபோலவே மருத்துவத்தில் முதன்மையானதும் தொன்மையானதுமாக விளங்குவது தமிழர் மருத்துவமாகிய சித்த மருத்துவம் என்றுரைப்பதிலே பெருமைப் படுகிறோம். ஆனால் தற்கால மருத்துவ முறையாகிய நவீன மருத்துவமுறை உலகம் முழுதும் கொடி கட்டிப் பறப்பது போல நம் மருத்துவம் சிறப்பெய்தவில்லை. அதற்குக் காரணம் வளர்ந்துவிட்ட, வளர்ந்து வருகிற நவீன விஞ்ஞான நுட்பங்களை நம் மருத்துவ முறையில் புகுத்திச் சித்த மருத்துவத்தின் பல கூறுகளையும் நவீன அறிவியல் பூர்வமாக ஆய்ந்து தெளிந்து உலகத்தவர் இதன் பெருமையை உணரும் படி செய்யத் தவறியதுதான்.

சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கி 25 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் விரைவான வளர்ச்சியை நாம் எட்டாததற்குக் காரணண் ஆதி காலத்தில் அதாவது நோய்களைக் கணிப்பதற்கும், மருந்துகளின் தன்மை, செய்கை, திறன் இவற்றைத் தெரிந்து தெளிவதற்கும்

இன்றைக்கு இருப்பது போன்ற கருவிகள், நுட்பங்கள் இல்லாத காலத்தில், சித்தர்கள் தம் மெய்யறிவால் உணர்ந்து கூறிச் சென்ற நோய்க் கணிப்பு மற்றும் மருத்துவ முறைகளைப் பெரும்பாலும் நாம் அப்படியே கையாண்டு வருவதுதான்காரணம். நவீன மருத்துவமுறை மிக விரைவாக வளர்ச்சி பெற்றமைக்குக் காரணம் உலகில் பல்வேறு மூலைகளிலிருந்தும் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுகிற நுட்பங்களையும் மருத்துவ முறைகளையும் மருந்துகளையும் ஆராய்ந்து தெளிந்து பயன்கருதி ஏற்றுக் கொள்கிற பாங்குதான்.

சித்தர்கள் அக்காலத்தில் தம் நுண்ணறிவால் உணர்ந்து தெரிவித்த பல நுட்பமான புரியாத கருத்துக்கள் பலவற்றை ஆராய்ந்து தெளிவதற்கு நவீன அறிவியல் துணை புரிகிறது என்பதனை இன்று நாம் அனுபவ ரீதியாக உணர்கிறோம். எனவே நவீன அறிவியல் பாடங்களைப் பட்டப் படிப்பிலேயே தேவையான அளவு புகுத்தி நன் முறையில் போதித்தால்தான் மாணவர்கள் சித்த மருத்துவத்தை ஒரு புதிய கோணத்தில் கற்று உலகோர் போற்றும் வகையில் நம்பிக்கையுடனும், திறமையுடனும் கையாண்டு நோய்களை கணித்துப் பரிகரிப்பதிலும், புதிய ஆராய்ச்சிகளைச் செய்வதிலும் வெற்றிபெற முடியும். அத்தோடு பிறமுறை மருத்துவ அறிஞர்களுக்குச் சிறந்த மருத்துவத்தின் சிறப்பையும் உணர்த்த முடியும்.

இனி, நவீன அறிவியல் எவ்வாறெல்லாம் நம் துறை வளர்ச்சியில் பங்கு பெறுகிறது என்பதை ஆராய்வோம்.

உயிர் வேதியியல் (Bio - Chemistry)

மருத்துவத் தாவரவியல் அறிவைக் கொண்டு இனம் கண்டு கொண்டு வரும் மூலிகைகளில் என்னென்ன சத்துப் பொருட்கள் இருக்கின்றன என்பதைப் பகுத்து ஆய்வதற்கும், உயிருள்ள மனித உடலில் சுரக்கும் சத்துக்களின் தன்மை, செய்கை, இவற்றை ஆராய்ந்து தெளிவதற்கும் உதவுகிறது.

உடற்கூறு(Anatomy)

மனித உடல் அண்டத்தைப் போன்றே ஐம்பூதக் கூறுபாடுடையது. எலும்பு, தசை, தோல், மயிர், நாடி, நரம்பு இவை பிருதிவியின் கூறு என்றும், குருதி, கொழுப்பு, வெண்ணீர், செந்நீர், மூளை இவை அப்புவின் கூறென்றும், சித்தர்கள் கூறிய கருத்துக்களை மட்டும் அப்படியே ஏற்றுக்கொண்டு நின்று விடாமல், நுனி நோக்கிகள் முதலானவற்றைக் கொண்டு மேற்கூறிய உடலின் கூறுகளைக் கண்டு ஆராய்ந்து மனித உடலின் அடிப்படையான உயிரணுக்கள் எவ்வாறு அமைப்பிலும், செயலிலும் வேறுபடுகின்றன என்பதை உணர்த்தும் நவீன அறிவியல் கருத்துக்களையும் தெரிந்தே ஆக வேண்டும் .அதற்கு உடற்கூறு பற்றியநவீன அறிவியல் நூல்கள் உதவுகின்றன.

உடல் தத்துவம்(Physiology)

வெவ்வேறு வகையான உடற் கூறுகளைப் பெற்ற மனித உடலின் இயக்கம் அடிப்படையான, உயிர் உள்ளடங்கிய 96 தத்துவங்களாகப் பரிணமிக்கிறது. சித்தர்கள் கூறிச் சென்ற உயிர் வாழ்வின் அடிப்படைத் தொழில் அலகான (fundamental Functional Unit) விலம் மற்றும் அதிலுள்ள விலசகம் முதலானஉட்பொருட்கள் ஆகியவற்றின் இயக்கம் பற்றிய செய்திகளை அறியவும். 96 தத்துவங்களையும் செயல்படுத்தும் வகையில் அவ்விலங்கள் அமைப்பிலும் தொழிலிலும் வெவ்வேறு பாகங்களில் வேறுபட்டு இயங்கும் பாங்கினையும் நவீன உடலியங்கியல் அறிவின் மூலமாகத் தெளிவாக அறிய முடிகிறது. தற்கால அணுக் கொள்கையைச் சித்தர்கள் அக்காலத்திலேயே பதி, பசு, பாசம் இவற்றை உள்ளடக்கிய சிற்றண்ட மாகக் கூறிச் சென்றது வியந்து போற்றத்தக்கது. சித்தர்கள் கூறிய 5 கோசங்கின் தத்துவங்களைப் பற்றித் தெளிவாக அறிவதற்கு நவீன

அறிவியல் உதவுகிறது. எடுத்துக்காட்டாக, நாடியைப் பற்றிக் கூறும்போது உடலில் உயிர் தரித்திருப்பதற்குக் காரணமான சக்தியே நாடி அல்லது தாது எனச் சித்தர்கள் கூறினர். நாடித்துடிப்பே உயிர் உடலில் இருப்பதை உணர்த்துகிறது. இதயத்தின் துடிப்பே நாடித்துடிப்பாக உணரப்படுகிறது. இதயத்தின் துடிப்பே, எவ்வித வெளித்தூண்டலுமின்றித் தானே நிகழக்கூடிய ஒரு அற்புத நிகழ்ச்சி. இது நின்றுவிட்டால் உயிர் என்ற சக்தி உடலில் நிலை பெறாது. வேறு விதமாகக் கூறின் உயிர் என்ற சக்திதான் இதயத்துடிப்பை நிகழ்த்துகிறது. நவீனக் கருத்துப்படி அச்சக்தி சுகாச்சிரவக்கணு (Sinu-atrial node) இல் தானே உற்பத்தியாகி (autornythicity) , சிறப்பியல்புகளைப் பெற்ற இதயத் தசைகளின் ஊடாகச் செயல்பட்டு இதயத்துடிப்பையும் அதன் மூலம் நாடித் துடிப்பையும் ஒரே சீராக வைத்திருப்பதுடன், வாத, பித்த, கபமாக நாடியில் பிரிந்தும் பரிணமிக்கிறது. அதேபோல் ஒவ்வொரு விலமும் வளர்சிதை மாற்றம் மூலமாக மனிதனுக்குத் தேவையான ஆற்றலை அளிக்கும் பாங்கினையும் நவீன அறிவியல் தெளிவுறக் கூறுகிறது. ஐம்பொறிகளின் வாயிலாக ஐம்புலன்களைத் தொழில் படுத்துகிற ஞானேந்திரியங்களைப் பற்றித் தெளிவாக அறிவதற்கு நவீன அறிவியல் உதவுகிறது.

குணபாடம் (Material Medica)

இத்துறையில் மருத்துவத்தில் கையாளப்படும் மருந்துகள் பற்றியும் அவற்றின் தயாரிப்பிற்குப் பயன்படும் மூலிகை, தாது மற்றும் சீவப் பொருட்கள் பற்றியும் விரிவாகக் கற்பிக்கப் படுகின்றன. இதில் நவீன மருத்துவ தாவர இயலும், உயிர் வேதியியலும், மருந்தியங்கு இயலும் (pharmacology) பெரும் பங்கு வகிக்கின்றன. மருந்துகளின் வீரியம், விபாகம்,

செய்கை மற்றும் பிற பண்புகளை நவீன நுட்பங்களுடன் ஆராய்ந்து தெளிந்தால்தான் வெற்றி பெற முடியும் நவீன மருந்தியங்கு இயல் நவீன மருத்துவத்துறையில் பட்டப்படிப்பிலேயே கற்பிக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு மருந்தும் உடலில் சேரும் அல்லது பொருந்தும் நிலை (Affinity) செயல்படும் விதம் (Mechanism of action) அதன் செயல் திறன்(Efficacy) உட்கொள்ளும்போது உடலினுள் நிகழும் மாற்றங்கள், விளைவுகள் இவற்றைப் பற்றித் தெளிவாக அறிய முடியும். புதியபல மருந்துகளைப் பற்றி ஆராய்ந்து அவர்களின் திறத்தை உலகுக்குப் பறை சாற்றவும் இயலும்.

குகரண நிலையியல் (Pathology) நோய் நாடல்

இத்துறையில் நவீன அறிவு மிக மிக இன்றியமையாதது நோய் நிலையில், வள்ளுவர் கூறியவாறு, மிகினும் குறையினும் நோய் செய்யும், வாத, பித்த, கப நாடிகளின் நடையைப் பற்றிச் சித்தர்கள் கூறியவை சித்த மருத்துவத்தின் சிறப்புகளில் குறிப்பிடத்தக்கவை. நாடியை ஆராய்ந்து எந்தக் கோசம் பாதிப்படைந்துள்ளது என்பதனைக் கணிக்கும் உபாயத்தைச் சித்தர்கள் கூறிச்சென்றனர். ஆனால் முழுமையாக நோயினைக் கணிப்பதற்கு அதாவது பாதிக்கப்பட்ட கோசத்தில் எத்தகைய பழுது ஏற்பட்டுள்ளது என்பது பற்றியும் அதனைச் சரி செய்வது எங்ஙனம், என்பதனையும் நவீன அறிவியல் வழி முறைகளால்தான் துல்லியமாக நிர்ணயிக்க முடியும் என்பது அனுபவ ரீதியான உண்மை, எடுத்துக்காட்டாக, இதயத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதனை அறிவிக்கும் நாடி நடையைச் சதகநாடி கூறும்போது, கபநாடி இளகி நடந்திடின்,

ஈனமுருஞ்சன்னி விடதோடம் விக்கல்
இருந்துரோகம் கரப்பான்
ஆகிய நோய்கள் ஏற்படும் என்றும்,

வாத சேத்தும தொந்த நாடியில்
தீங்கான இருமலுடன் சன்னிதோடம் சேர்ந்தவிடம் வெடி
சூலை இருத்துரோகம்

ஆகிய நோய்கள் ஏற்படும் என்றும்,
பித்த நாடி மீறி நடந்தால்

இருதயத்தில் கலக்கமது மறப்பு தாகம், ஆகியன ஏற்படும் என்றும் கூறுகிறது. இவற்றுள் இதயத்தைப் பற்றிக் கூறும்போது இதயத்தில் கலக்கம், இருத்துரோகம் என்று பொதுவாக இதயம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது மட்டும் தெரிகிறது. எவ்விதமான பாதிப்பு இதயம் சுருங்கி விரிகிரியையில் கோளாறா அல்லது இதயக் கபாடங்களில் (Valves) கோளாறா அல்லது அதனுள் ஏதேனும் துளை ஏற்பட்டுள்ளதா என்று குறிப்பாக அறிய வேண்டின் நவீன அறிவியல் கணிப்பு முறைகளை மேற்கொண்டேயாக வேண்டும். அவ்வாறறிந்து தேவை ஏற்படின் இதய நோய் நிபுணர்களிடம் ஆலோசனைக்கு அனுப்பலாம். இக் கருத்தினையே "சித்த மருத்துவம்" நூலாசிரியரும் தமரக நோய் பற்றிய பாடத்தில் குறிப்பு மூலம் வலியுறுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது. பல நோய்களின் காரணங்களை (Aetiology)க் கூட நவீன அறிவியல் கண் கொண்டு பார்த்தால் தான் சித்த மருத்துவ நூல்களில் கூறியுள்ள காரணங்களைப் பற்றியும் புரிந்து கொள்ள இயலும்.

இதே போன்று அம்மை நோயைக் குறிகுணங்களுக்குத் தக்கவாறு 14 மற்றும் 20 வகையாகப் பிரித்துக்

கூறியிருப்பினும், ஒவ்வொரு வகையும் எவ்வகை நோய்க்கிருமியால் உண்டாகிறது என்பதனைப் பற்றியும், அந்நோய்க் கிருமியின் அமைப்பு, செயல் மற்றும் அது உடலில் குகரண நிலையில் ஏற்படுத்தும் விளைவுகள் ஆகியவற்றைப் பற்றியும் நவீன அறிவியல் நூல்களில் தான் விளக்கமாக அறிந்திட இயலும்.

நோய்க்கணிப்பிற்குக் குருதி, மலம், சிறுநீர் மற்றும் பிற உடற் சுரப்புகளை (secretions) நவீன அறிவியல் ஆய்வுக் கூடத்தில் ஆய்வு செய்து நோயின் காரணம், மருத்துவமுறை, நோய் நிலையில் முன்னேற்றம் (improvement) இவற்றை அறிய முடிகிறது. பாதிக்கப்பட்ட திசுக்களையும் நவீன முறை ஆய்வுக்குட்படுத்தி நோய் நிலையை எளிதில் அறியமுடிகிறது. நோய்களைத் துல்லியமாகக் கணிக்கத் தற்போது எக்ஸ்ரே ஸ்கேன் (Scan, E.C.G.E.E.G.) போன்ற கருவிகள் நடைமுறையில் உள்ளன. இவற்றின் உதவிகொண்டு நோய்களை எளிதில் கணித்து அதற்குத் தகுந்தவாறு மருத்துவம் மேற்கொண்டால் எளிதில் பரிகரிக்கலாம். இக்கருவிகள் எல்லா மருத்துவ முறைகளுக்கும் பொதுவானவை. இவற்றைக் கண்டுபிடித்து வடிவமைத்த விஞ்ஞானிகள் வேறுபாடின்றி அனைத்துத் துறையினரும் பயன்படுத்த வேண்டும். என்ற பொது நோக்கு உடையவர்கள். ஆக சித்த மருத்துவ முறைகளோடு பிற நவீன நுட்பங்களையும், கையாண்டு நோயை எளிதில் கணிப்பதில் தவறேதுமில்லை. ஆனால் வழங்கும் மருத்துவம் சித்த மருத்துவமாக அமைந்து நோய் நீக்கம் ஏற்படுதல் நமக்குப் பெருமை சேர்க்கும். நவீன விஞ்ஞான வேகத்துக்கு ஈடு கொடுத்து நாமும் சென்றால்தான் உலகோர் நம் கருத்துக்களை ஏற்றுக் கொள்வார்கள்.

நோயில்லா நெறி (Hygiene)

இந்நூல் அக்காலச் சூழ்நிலை மற்றும் தமிழர் பண்பாட்டுக்குத் தக்கபடி நலவாழ்வு நெறி முறைகளைச் சிறப்பாக விவரிக்கிறது. ஆனால் தற்காலத்தில் வளர்ச்சியடைந்த அறிவியல், தொழில் நுட்பங்களுக்கு ஏற்பப் பயன்படும் வாகனங்கள், தொழிற் சாலைகள் இவற்றால் சுற்றுப்புறச் சூழ்நிலை மாசு படுவதனால் உண்டாகும் புதுவித நோய்கள் பற்றியும், அம்மாசுதனைக் கட்டுப்படுத்த உதவும் வழிகள் பற்றியும் கூறும் நவீன அறிவியல் கொள்கைகளைப் கற்பித்தல் மிக இன்றியமையாதது.

நஞ்சு இயலும் சட்டம் சார்ந்த மருத்துவமும் (Toxicology and Medical Jurisprudence)

இப்பாடத்திட்டத்தில் சித்தர்கள் கூறிய தாவர, தாது, சீவ நஞ்சுகள் பற்றியும் அவற்றின் முறிவுகள் பற்றியும் கற்பிக்கப்படுவதோடு தற்கால நவீன மருத்துவத்தில் உள்ளது போலச் சட்டம் சார்ந்த மருத்துவம் பற்றியும் கற்பிக்கப்படுவது நம் வளர்ச்சி நிலைக்கு ஒரு படிக்கல்லாக அமைகிறது.

சித்த மருத்துவம்

சித்த மருத்துவ நூலில் ஏராளமாக மருந்துகளும், மருத்துவ முறைகளும் கூறப்பட்டு உள்ளன. அம்மருந்துகளை நவீன அறிவியல் துணை கொண்டு நோய்களைச் சரியாகக் கணித்து மருந்துகளின் தன்மை, செய்கையையும், நவீன கண்ணோட்டத்தில் ஆய்வு செய்து வழங்கி வருவோமேயானால், விரைவான வெற்றியை எய்துவது திண்ணம்.

அறுவை மருத்துவம் மற்றும் தோல் பிணிகள், மன நோய்கள், கபம் உள்ளடக்கிய சிறப்பு மருத்துவம் இவற்றையும் நவீன அறிவியல் கண்ணோட்டத்தில் கற்பிப்பது மிகுந்த நன்மை பயக்கும். மகளிர் மற்றும் சூல் மருத்துவம், பால வாகடம் ஆகிய குழந்தை மருத்துவப் பாடத் திட்டங்களிலும் நவீன நுட்பங்களை அதிக அளவில் புகுத்திப் பட்டப் படிப்பிலேயே அவற்றைக் கற்றுக் கொடுப்பது அவசியம்.

முடிவுரை

பழையன கழிதலும் புதியன புகுதலும் நாகரீக வளர்ச்சியைக் குறிப்பினும், நமது மருத்துவத்தின் பழமையான கருத்துக்கள் எக்காலத்திலும், தள்ளப்பட முடியாதவை. ஆனால் அவற்றைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமாயின் புதியனவற்றைப் புகுத்தினால்தான் இயலும். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம், என்று கூறிய பாரதியார் கூற்றுக்கு இணங்கப் பல மருத்துவ முறைகளையும், நவீன நுட்பங்களுடன் கற்றுத் தெளிந்தால்தான் நம் மருத்துவத்தின் தொன்மைச் சிறப்பை நாம் உணர முடியும்.

சித்த மருத்துவத்தில் நெல்லி

பி. பாபு
இரண்டாம் ஆண்டு பி.எஸ்.எம்.எஸ்.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பழனி.

சாராம்சம்:

சித்த மருத்துவத்தில் நெல்லி காயகற்ப மூலிகையாக உள்ளது. குறைந்த விலையில் எளிதாகக் கிடைக்கக் கூடியதாகும். நெல்லியின் பயன்கள், பயன்படுத்தும் விதம், உடல் செயலியல் - உயிர் வேதியியல் செய்கைகள், நவீன கருத்துக்கள் முதலியவை அடங்கின.

முகவுரை

நெல்லி சித்த மருத்துவத்தில் மட்டுமல்லாது ஆயுர்வேத, யுனானி மருத்துவ முறைகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

வேறு பெயர்கள்

சமஸ்	: ஆதிபலா, தத்துரி, ஆமலகை
கன்னடம்	: நெல்லி
தமிழ்	: நெல்லி, மிருதுபாலா, ஆமலகம்
மலையாளம்	: நெல்லி
ஹிந்தி	: ஆம்லா, ஆன்லா
ஆங்கிலம்	: இன்டியன் கோஸ்பெர்ரி

நெல்லி மரத்தில் இலை, பூ, பட்டை, வேர், காய், விதை ஆகியவை பயன்படும் உறுப்புகளாகும்.

சரக்குகளும் முறைகளும்

நெல்லி மரவகையைச் சார்ந்தது. இலைகள் சிறகு வடிவக் கூட்டு இலைகள், ஒரே தாவரத்தில் ஆண்மலர்கள் தனியாகவும், பெண் மலர்கள் தனியாகவும் காணப்படுகின்றன. இவைகள் ஒரு பால் மலர்கள் என அழைக்கப்படுகின்றன. ஆண் மலரில் மூன்று மகரந்தத் தாள்களும், மூன்று இணைந்த சூலக இலைகளும் உள்ளன. பெண்மலரில் மூன்று சூலக இலைகளும் கருவுறுதலுக்குப் பின் நெல்லிக்கனியாக உறுப்பெருகின்றது. அருநெல்லி, கருநெல்லி என இரு வேறு இனங்கள் உள்ளன. கருநெல்லியின் தாவரவியல் பெயர் (EMBILICA OFFICINALIS) அருநெல்லியின் தாவரவியல் பெயர் (CICCA DISTICHA)

இவ்விரு இனங்களின் குடும்பம் EUPHORBIACEAE.

நெல்லிக்கனி வெண் மஞ்சள் நிறமாயும், உலர்ந்தபின் கருப்பு நிறமாயும் இருக்கும். மணம் கிடையாது. புளிப்பு, துவர்ப்புச் சுவைகளை உடையது. தட்பத் தன்மையையும், இனிப்புப் பிரிவையும் கொண்டது. கனிகள் 1.5 முதல் 2.5 செ. மீ. விட்டமுடையன. கனிகள் கோளமானவை. பகுதிகளை உடையவை. ஆறு இதழ்களைக் கொண்டு மூன்று கோணங்களை உடைய விதைகளைப் பெற்றிருக்கும். கனிகள் கடினமானவை. மென்மைத்தன்மையான தோற்றத்தை உடையன.

நெல்லிக்கனியில் உள்ள வேதியல் சத்துக்கள்

1. கனியில் அதிக அளவு விட்டமின் "சி" (அஸ்கார்பிக் அமிலம்) உள்ளது. அதன் அளவு அப்பொழுதே பறித்த கனியின் குமிழ்ப் பாகத்தில் 100கி.க்கு 600 முதல் 700 மி.கி. வரை உள்ளது.

2. இக் கனியில் 0.5% க்கும் அதிகமான கொழுப்புப் பொருட்கள் மற்றும் பிளெம்பினின் எனும் ஆல்களாய்டும் உள்ளது.

3. 5 சதவீதம் டானின் பொருள் உள்ளது.

4. பாஸ்பரஸ், அயம், கால்சியம், முதலிய தாது உப்புகள் அதிக அளவில் உள்ளன.

5. போதுமான அளவு பெக்டின் பொருள் உள்ளது.

6. அப்பொழுதே பறித்த கனியில் 7.5 சதவீதம் நிர்த்துவம் உள்ளது.

நெல்லிக்காயின் பொதுக்குணம்

பதார்த்த குண விளக்கத்தில் (மூலவர்க்கம்)
கூறியுள்ளபடி
பித்த மனலையம் பீநசம்வாய் நீர்வாந்தி
மத்த மலக்கட்டு மயக்கமுமி -லொத்தவுரு
வில்லிக்கா யம் மருங்கா மென்னாட்கா லந்தேர்ந்தே
நெல்லிக்காயம் மருந்துணீ

நெல்லிக்காய்க் குப்பித்த நீங்கு மதன் புளிப்பாற்
செல்லுமே வாதமதிற் சேர்த்துவர்ப்பாற் -
சொல்லுமைய
மோடுமிதைச் சித்தத்தி லுன்ன வனலுடனே
கூடுபிர மேகமும் போங் கூறு.

கடல் அமிர்தம் ஒத்த நெல்லிக்காயை பகற்பொழுதில் உண்ணில் பயித்தியம், கபநோய், பீநசம், வாய் நீர்ச்சுரப்பு, வமனம், உன்மத்தம், மலபந்தம், தலைசுழலல், பிரமேகம் இவைகள் போகும்.

காமன் அழகுண்டாகும், அதன் புளிப்பால் வாயுவும், துவரால் கபமும் நீங்கும் என்க.

விவாதம்: 1

நெல்லிக்காயைப் பகலில் உண்ணப் பித்தத்தில் அனல் (பைத்தியம்) போகும் எனச் சித்தர் பாடலில் கூறப்பட்டுள்ளது.

உடல் செயலியல் - உயிர் வேதியியல் செய்கை - 1

நெல்லிக்கனியில் உள்ள அஸ்கார்பிக் அமிலத்தின் சிறுநீர் பெருக்கி செய்கையால் சிறுநீர் அதிக அளவு வெளியேறுகின்றது. உடற்காங்கையைக் குறைப்பதில் இதுவும் ஒரு முறை. ஆகையால் உடலில் வெப்பம் குறைகின்றது.

பயன்படுத்தும் முறை

நெல்லிக்காய் சர்பத் வடிவில் தேனுடன் கலந்து பயன் படுத்தினால் சிறுநீர் பெருக்கி செய்கையை அதிகப்படுத்தும்

விவாதம் 2

நெல்லிக்காயைப் பகலில் உண்ண கபநோய் (நுரையீரல் தாபித நோய்கள்) தீரும் எனச் சித்தர் பாடலில் கூறப்பட்டுள்ளது.

உடல் செயலியல்-உயிர் வேதியில் செய்கை 2

நெல்லிக்காயில் உள்ள அஸ்கார்பிக் அமிலம் கோழையகற்றிச் செய்கையைத் தூண்டிக் கோழையை அகற்றுவதின் மூலம் கபநோய்களை நீக்கும்.

துருக்கிஸ்தானில் நுரையீரல் தாபிதங்களுக்கு நெல்லிக்காயைப் பயன்படுத்துகின்றனர்.

நுரையீரல் தாபிதங்களுக்கு வழங்கப்படும் Broncho Curon, Broncho Curon Forte (curo pharma) போன்ற மருந்துகளில் ஆமலகம் அதிக அளவு சேர்க்கப்பட்டுள்ளது.

விவாதம் 3

நெல்லிக்கனியைப் பகல் பொழுதில் உண்ணச் சுவையின்மை போகுமெனச் சித்தர் பாடலில் கூறப்பட்டுள்ளது.

உடல் செயலியல்-உயிர் வேதியியல் செய்கை-3

நெல்லிக்கனியிலுள்ள அஸ்கார்பிக் அமிலம் அகட்டுவாய் அகற்றி செய்கையுடையது. இச்செய்கையினால் அசீரணத்தைப் போக்குவதன் மூலம் 10வது கபால நரம்பான "வேகஸ்" ஐத் தூண்டுவதன் மூலம் சுவையின்மையைப் போகச் செய்யும்.

பயன்படுத்தும் முறை

அப்போதே பறிக்கப்பட்ட கனியின் சாறுடன் சர்க்கரை சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

விவாதம்-4

நெல்லிக்கனியைப் பகல் பொழுதில் உண்ண மலபந்தம் போகும் எனச் சித்தர் பாடலில் கூறப்பட்டுள்ளது.

உயற்செயலியல்-உயிர் வேதியியல் செய்கைகள் 4

(அ) நெல்லிக்கனியில் உள்ள அஸ்கார்பிக் அமிலம் உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்களில் ஒன்றான டிரிப்டோபானின் வளர்சிதை மாற்றத்திற்கு மிக முக்கியமானது. இது டிரிப்டோபானை 5 ஹைட்ராக்சி டிரிப்டோபானாகவும் பைரிடாக்சைல் பாஸ்பேட் எனும் துணை வினையூக்கியின் முன்னிலையில் கார்பாக்சில் நீக்கம் மற்றும் அமீன்தொகுதி மாற்றம் ஆகிய இருவினைகளும் நடைபெற்ற 5 ஹைட்ராக்சி டிரிப்டமீன் (செரடோனின்)

உருவாகின்றது. இதன் செய்கை சிறுகுடலில் நடைபெறும் தசைச் சுருக்க விரிவுகளின் வேகத்தை அதிகப்படுத்துவதன் மூலம் மலகாரி செய்கையை உண்டாக்குகின்றது.

(ஆ) நெல்லிக்கனியில் உள்ள பெக்டின் எனும் கார்பேஹைட்ரேட் உணவு நார்களும் மலகாரிச் செய்கையை உண்டாக்குகின்றன.

பயன்படுத்தும் விதம்

நெல்லிக்கனியையும், கடுக்காயையும் சேர்த்துக் கொடுக்கும் போது மலகாரிச் செய்கையை ஏற்படுத்தும்.

நெல்லிக்கனியைச் சாதாரணமாக உண்ணும்போதே மித மலகாரிச் செய்கையை ஏற்படுத்தும்.

விவாதம்-5

நெல்லிக்கனியைப் பகலில் உண்ண தலைசுழலல், மயக்கம் முதலியவை போகும் எனச் சித்தர் பாடலில் கூறப்பட்டுள்ளது.

உடற்செயலியல்-உயிர் வேதியியல் செய்கை-5

தலைசுழலல், மயக்கம் முதலியவை மூளைக்குத் தேவையான ரத்தம் செல்லாமையினால் ஏற்படலாம். நெல்லிக்கனியில் உள்ள அஸ்கார்பிக் அமிலம் ரத்த தசிரங்களின் சுவரில் கொல்லேஜன் பைபர்ஸ்சை உண்டாக்குவதன் மூலம் ரத்தத் தசிரங்களைச் சுருக்குகின்றது. இதனால் ரத்த அழுத்தம் மிகுதிப்பட்டு மூளைக்குத் தேவையான அளவு ரத்தம் செல்வதனால் தலைசுழலல், மயக்கம் முதலியவை போகும். உடல் உரமாக்கிச் செய்கையும், சிறுநீர் பெருக்கி செய்கையும் முக்கிய பங்கு வகிக்கும்.

பயன்படுத்தும் முறை

அப்பொழுதே பறித்த நெல்லிக்காய்ச் சாறு அதனுடன் சர்க்கரை கூட்டிக்கொடுக்க வேண்டும்.

விவாதம் 6

நெல்லிக்காயைப் பகலில் உண்பதால் காமன் அழகுண்டாகும் எனச் சித்தர் பாடலில் கூறப்பட்டுள்ளது.

உடற்செயலியல்-உயிர்வேதியியல் செய்கைகள்-6

நெல்லிக்கனியில் உடலுக்கு அவசியமான பாஸ்பரஸ், அயம், கால்சியம், முதலியவை அதிக அளவில் உள்ளதால் உடலுக்கு வலிமை கிடைக்கிறது.

நெல்லிக்கனியில் உள்ள அஸ்கார்பிக் அமிலம், பீ 10 ஆன போலிக் அமிலத்தை போலினிக் அமிலமாக மாற்றுகின்றது. இவ்வமிலம் பியூர்ன், பைரிமிடைன் ஆகிய இரு நைட்ரஜன் பேஸ்களையும் உயிர் உற்பத்தி செய்கின்றது. இவை நியூக்ளியோ புரதத்தை உண்டாக்குவதன் மூலம் புரதச் சேர்க்கையை நடைபெறச்செய்து உடலின் சாதாரண செல்கள் நன்கு வளரச் செய்கின்றன. மேலும் செல்களின் மறு உற்பத்தியும் அஸ்கார்பிக் அமிலத்தால் நடைபெறுகின்ற;. இதனால் உடல் வலிமைபெற்று அழகுண்டாகும்.

பயன்படுத்தும் முறை

தினமும் நெல்லிக்கனிகளை உண்டு வருதல்

விவாதம் 7

நெல்லிக்கனியை உண்பதால் அதிலுள்ள அஸ்கார்பிக் அமிலம் அகட்டுவாய் அகற்றி செய்கையின் மூலம் வயிற்றிலுள்ள வாயுவைப் போக்கிப் பசியைத் தூண்டுவிக்கச் செய்யும்.

விவாதம் 8

நெல்லிக்கனிக்குச் சிறுநீரைப் பெருக்கும் செய்கையுண்டு எனச் சித்தர் பாடலில் கூறுகின்றனர்.

உடற்செயலியல் உயிர்வேதியியல் செய்கை 8

நெல்லிக்கனியிலுள்ள அஸ்கார்பிக் அமிலம் சிறுகுடலில் உள்ள குடலுறிஞ்சிகளின் மூலம் உறிஞ்சப்பட்டு அஸ்மாயின் முதல் சுருண்ட தரகக் குழல்களின் எபிதீலியல் செல்களுக்கிடையில் ஹையலுரானிடேஸ் எனும் செல் இடைப்பொருளான மியூகோபாலி சாக்கரைடை ஹையலுரானிக் அமிலமாக மாறிவிடாமல் தடை செய்கின்றது. இதனால் கொல்லேஜன் பைபர்ஸ உருவாக்கப்பட்டு எபிதீலியல் செல்களுக்கிடையில் அடைக்கப்படுகின்றது. இதனால் அமரிதரகத்தில் நீர் திரும்ப உறிஞ்சப்படுதல் தடை செய்யப்படுவதால் சிறுநீர்ப் பெருக்கிச் செய்கை உண்டாகின்றது.

பயன்படுத்தும் விதம்

நெல்லிக்காய் சர்பத் வடிவில் தேனுடன் கலந்து பயன்படுத்தினால் சிறுநீர் பெருக்கிச் செய்கை கிடைக்கும்.

நவீன கருத்துக்கள்

1. சோபை நீக்கி

(அ) இரத்த சிவப்பு அணுக்களின் முதிர்ச்சிக்கு அஸ்கார்பிக் அமிலம் தேவையானது.

(ஆ) நெல்லிக்காயிலுள்ள அஸ்கார்பிக் அமிலம் பெர்ரிக் அயத்தை இரைப்பை அமிலத்தின் முன்னிலையில் பெர்ரஸ் அயமாக மாற்றுவதன் மூலம் அயம் இரைப்பையில் உறிஞ்சப்படுவதை எளிதாக்குகின்றது. மேலும் அயத்தை அதன் சேமிப்பு நிலையான பெரிட்டினிலிருந்து விடுபடச் செய்கின்றது.

பயன்படுத்தும் விதம்

1. உலர்ந்த கனிப்பொடியுடன் அயம் சேர்த்துப் பயன்படுத்தப்படுகிறது.

2. இரு நெல்லிகற்பம் (மருத்துவர் எஸ். கிருஷ்ணராவ் அனுபவம்)

தேவையான மருந்துகள்

1. சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் 1 கி. கி. 2. நெல்லிக்காய்ச் சாறு 2 கி. கி.

செய்முறை

கந்தகத்தைக் கல்வத்திலிட்டு, நெல்லிக்காய்ச் சாற்றை சிறிது சிறிதாகச் சேர்த்து நன்கு அரைத்து உலர்த்தவும், உலர்ந்தபின் பொடித்து வைக்கவும்.

அளவு: 200 மி. கி. வீதம் நெய்யுடன் தினமும் இரு வேளைகள்.

தீரும் நோய்கள்

கந்தகத்தால் சொறி சிரங்கும். அஸ்கார்பிக் அமிலத்தால் இரத்தமும் சுத்தியாகும்.

ஆதாரம்: பக். எண். 292 இம்காப்ஸ் அடையாறு சித்த மருந்துகளின் செய்முறை

2. அதிசாரம் போக்கி

உலர்ந்த நெல்லிக்கனியிலுள்ளதுவர்ப்புப் பொருளும், டானினும் சேர்ந்து தோலைச் சுருக்குவதன் மூலம் அதிசாரத்தை நிறுத்தும்.

பயன்படுத்தும் முறை

நெல்லிக்காய் கஷாயத்தில் தான்றிக்காய் சேர்த்து வழங்கப்படும்.

3. குடற்புண் ஆற்றி

காசி ஹிந்து விஷ்வ வித்தியாலயா மருத்துவர்கள் நெல்லிக்கனி குடற்புண்ணுக்கு ஏற்றது எனத் தெரிவித்துள்ளனர். நெல்லிக்காயை மட்டும் கொடுத்து 46-90 நாட்களில் குடற்புண்ணை ஆற்றினார்கள்.

ஆதாரம்: ஜீவன்நியா, ஹெமண்டா
எண். 4, 1989-90 பக்கம் எண் 38

4. தமரக வெப்பமுண்டாக்கி

நெல்லிக்கனியில் கால்சியம் அதிக அளவில் உள்ளதால் இதய தசைகளின் சுருங்கி, விரி தன்மைக்கு உதவுவதன் மூலம் இச்செய்கையை உண்டாக்குகிறது.

ஜீவன்நியா ஹெமண்டா எண் 4 1989-90

5. மூலம்

3 கி. உலர் நெல்லிக்கனியின் பொடியும், 3 கி. கடுக்காய் பொடியும் சேர்த்துத் தேனுடன் கலந்து ஒரு நாளுக்கு இருவேளை வீதம் சாப்பிடுவதற்கு அரை மணி முன் உட்கொள்ள வேண்டும்.

ஜீவன்நியா ஹெமண்டா எண் 4 1989-90

செய்கை

துவர்ப்புச் சுவையும் டானின் பொருளும், கடுக்காயின் மலமிளக்கி செய்கையும் சேர்த்து ரத்தம் வடிதலைத் தடுக்கும். மேலும் தசிரங்களைச் சுருக்கும் தன்மை துவர்ப்புச் சுவைக்கு உண்டு.

6. கீல்வாயு

நெல்லிக்கனிச் சாற்றைப் பழைய நெய்யில் வேகவைத்து (5:3 அதாவது 3. கி.கிராம், நெய் 5 லிட்டர் நெல்லிச்சாறு) ஜீவன் நியா ஹெமண்டா எண் 4 1989-90 தினம் மூன்று வேளை உண்டு வரக் கீல் வாயு குணமாகும். மேலும் வாந்தியால் வாயுபோகும் என்பது சித்தர் கருத்து.

7. முடிச்சாயம்

நெல்லிக்காய்ச் சாற்றில் அதிக அளவு அயம் உள்ளதால் முடிச்சாயத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதன் நிறம் கருப்புக்கலந்து பழுப்பு நிறம். நெல்லிக்காய் லேகியம் செய்ய, சிறுநீர்ப்பை எரிச்சலைக் குறைக்க, கண்ணுக்குக் குளிர்ச்சியும் உண்டாக்கும்.

முடிவு

ஆரஞ்சுப் பழத்தில் உள்ள "விட்டமின் சி" யைப் போல இருபது மடங்கு அதிகம் கொண்ட எளிதில் குறைந்த விலையில் கிடைக்கும் நெல்லியை மக்கள் தற்போது காய்கறிப் பொருட்களுள் ஒன்றாக நினைத்தே பயன்படுத்தி வருகின்றனர். மேற்கூறிய விஞ்ஞான விளக்கங்களுக்குப் பிறகாவது மக்கள் மருத்துவ நோக்கத்துடன் நெல்லியை நம்பிக்கையுடன் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும். மேலும் இவ்வாறு ஒவ்வொரு தாவரத்தின் உடல் செயலில் உயிர் வேதியியல் செயல்களை ஆராய்ந்து அறிவதன் மூலம் சித்த மருத்துவத்தை இந்நவீன காலத்தில் உறுதியாக முன்னேற்ற முடியும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

நூல்களின் ஆதாரங்கள்

1. பொருட்பண்பு நூல் குணபாடம் (மூலிகை வகுப்பு)
வைத்திய ரத்தினம் க.சே.முருகேசமுதலியார்

2. பதார்த்த குண விளக்கம் மூலவர்க்கம்
வைத்திய வித்வன்மணி சி. கண்ணுசாமி பிள்ளை

3. இந்தியன் மெட்டிரியா மெடிக்கா
டாக்டர் கே. எம். நட்கரண்

4. உடல் தத்தும்
மருத்துவர் பு. மு. வேணுகோபால்

5. Pharmacognosy
S.B. Gohale
C.K. Kokate

6. Fundamentals of Biochemistry for Medical students
Ambika Shanmugam

7. Text Book of Medical Physiology
Guyton

8. Medicinal Plants of Saharanpur
Dr. B.S. Ahuja, M.Sc., Ph.D.,

9. An Introduction of Taxonomy of Angiosperms
Priti Sukla
S.P. Mishra

10. Therapeautic index of curo-pharma

11. Dictionary of the Economical Products of India
Volume VI
Part I

12. Impcobs அடையாறு சித்தமருந்துகளின் செய்முறை

13. Jeevaniya Hamanta, No. *41989 - 90*

தஞ்சை ராவ்சாகேப் மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சித்த மருத்துவப்பணி

பேரன் Dr. J.A. முத்தையாபாண்டியன், M.B.,B.S., L.O.F. C.S.,
B. certificate Central Board of Indigenous Medicine
கருணாநிதி மருத்துவசாலை, தஞ்சாவூர்.

நோய் நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

நோய் வராது தடுக்கவும் வந்த நோயை நீக்கவும் ஆயுளை நல்கவும் வழிவகுப்பதே சித்த மருத்துவக்கலை. இது பழங்காலந்தொட்டே தமிழ்நாட்டில் சீருடனும் சிறப்புடனும் விளங்கி வந்துள்ளது. அகத்தியர், திருமூலர், போகர், தேரையர் முதலிய பல சித்தர்கள் இம்மருத்துவத்தைத் தமிழகத்திற்கு ஈந்தனர். அதில் பெரும் பகுதி பல்வேறு காரணங்களினால் கால வெள்ளத்திற்குப் பலியானது போக எஞ்சியதை மக்கள் மீது கருணை கொண்டு 19ஆம் நூற்றாண்டின் பின் பகுதியிலும், 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வளர்த்த பெரியார்கள் தஞ்சை மு. ஆபிரகாம் பண்டிதர், சித. சுப்பிரமணிய பண்டிதர், விருதை சிவஞான யோகிகள், க.ச. முருகேச முதலியார், பண்டிட் ஆனந்தம், மாங்காடு வடிவேலு முதலியார், ஹக்கீம் அப்துல்லா சாகேப் முதலியோர் ஆவர் என்று Dr.தியாகராஜன்,L.I.M தம் பதிப்புரையில் வரைந்துள்ளார்.

கருவிலே திருவுடையார் என்ற தொடர் தமிழன்பன் ஆபிரகாம் அவர்களுக்கு மிகவும் பொருந்துவதாகும். நுட்ப அறிவு படைத்த அவர் இறை அன்பையும் மக்கள் நலத்தையும் முதன்மையாகக் கொண்டிருந்தார். தமிழன்னை செய்த தவப்பயனால் தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசியை அடுத்த சாம்பவர் வடகரை என்னும் சிற்றூரில் 1859 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இரண்டாம் நாள் பெருந்தகையாளர்களான முத்துசாமி நாடார் அன்னம்மாள் ஆகியோருக்குத் தவப்புதல்வராகத் தோன்றினார்.

விளையும் பயிர் முளையிலே தெரியும், என்பதற்கு எடுத்துக்காட்டாக இவர் தாம் பயின்ற தொடக்கப் பள்ளியிலேயே ஆசிரியப் பணியை மேற்கொண்டு மக்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். 1874ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் இருந்து நார்மல் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் நம் ஆபிரகாம் பயிற்சி பெறும் பேறு பெற்றார். அப்பள்ளியின் தலைவராக இருந்த அருட்திரு யார்க்துரை இவரது திறமை, நேர்மை, ஊக்கம், உழைப்பு, உண்மை ஆகிய பண்புகளால் ஈர்க்கப்பெற்றார். பயிற்சியில் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற ஆபிரகாமைத் தம் பள்ளியிலேயே பணியாற்றுமாறு நியமித்தார். ஆசிரியர் ஆபிரகாம் வாழ்க்கையிலே ஒரு திருப்புமுனை ஏற்பட்டது.

மருத்துவத் துறையில் ஆபிரகாமுக்கு மிக்க ஆர்வம் இருந்து வந்தது. மருத்துவம் தொடர்பான சுவடிகளைப் பார்த்து ஆராய்ந்து அவற்றில் கூறிய முறைப்படி மருந்துகள் தயாரிக்கலானார். முன்செய்த தவப்பயனால் வியக்கத்தக்க வெற்றி கண்டார். நோயால் வாடும் எளியோருக்கும் நண்பர்களுக்கும் தம் மருந்துகளைத் தந்து நல்ல பயனைக் கண்டார். இத் துறையில் மேன்மேலும் வெற்றிகாண விரும்பினார்.

திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குச் செல்லும் சாலையில் சாதுக்களையும், துறவிகளையும் சந்தித்து அவர்களுடன் அளவளாவிச் சித்த மருத்துவத்தின் சிறப்புக்களையும் அதன் சீரிய குணங்களையும், அனுபவ உண்மைகளையும் அறிந்து குறிப்புகள் எடுத்துக்கொண்டார். நோய் தீர்க்கும் மூலிகைகளை அறிந்து பயன் கண்ட பழந்தமிழ் மக்களின் மாண்பினை எண்ணி, எண்ணி வியந்தார். சித்த மருத்துவத்தின் மூலம் தீராத நோய்களையும் தீர்க்க முடியும் எனத்தெளிவு பெற்றார்.

நோய் நீங்கி நலம் பெற்ற அப்பகுதி மக்கள் ஆசிரியராகிய அவரை அன்புடன் பண்டுவர் என அழைக்கலாயினர். வைத்தியரைப் பண்டுவர் என அழைப்பது பாண்டிய நாட்டு வழக்கம். இது நாளடைவில் பண்டிதர் என மருவி ஆபிரகாம் பண்டிதர் எனப் பேரன்புடன் அழைக்கலாயினர்.

திண்டுக்கல் அருகில் உள்ள ஆனைமலைப்பட்டியில் பொன்னம்பல நாடார் என்ற பெரியார் சித்த வைத்தியம் இரசவாதம் முதலியவற்றில் சிறிது அனுபவம் பெற்றிருந்தார். மாதிரிப்பள்ளியில் பயின்று வந்த தம் பிள்ளைகள் மூலம் ஆபிரகாம் பண்டிதரின் மருத்துவச் சிறப்பினைக் கேள்வியுற்று நேரில் காண வந்தார். தம்மால் செய்ய இயலாத மருந்துகளை வெகு எளிதில் புடம்போட்டு எடுத்துக்காட்டிய பண்டிதரைப் பிறவி மருத்துவர் எனப்பாராட்டி மகிழ்ந்தார். விடுமுறையில் தம் இல்லத்திற்கு அழைத்து வந்து உபசரித்தார். அப்பொழுது சில அபூர்வ மருந்துகள் தயாரிக்கும் முறையையும், பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலியவற்றைச் செய்யும் முறையையும் புடமிடும் விதத்தையும் பெரியவருக்குச் செய்து காட்டினார். இவற்றில் பெருமகிழ்ச்சியுற்ற பெரியவர் சித்தர்கள், முனிவர்கள் தங்கியுள்ள சுருளிமலைக்கு நம்

ஆபிரகாம் பண்டிதரை அழைத்துச் சென்றனர். சுருளிமலையின் இயற்கை எழிலில் நம் பண்டிதர் தம் மனத்தைப் பறிகொடுத்தார்.

இவர்கள் சுருளிமலையை அடைந்து இளைப்பாறி இருந்தபோது ஒரு சாது வந்து ஆபிரகாம் பண்டிதரைத் தனியே அழைத்துப் போனார். அவர் பின் சென்ற ஆபிரகாம் ஒரு நீரோடையின் கரையில் சந்தன மர நிழலில் பொன்மேனியுடன் முகப்பொலிவுடன் வீற்றிருந்த கருணானந்த மகரிஷியைக் கண்டார். அவரது திருவடிகளை வணங்கி அச்சத்தாலும் ஆச்சரியத்தாலும் பேச நா எழாமல் நின்றார். கருணாநந்தர் ஆபிரகாம் பேரில் அன்புகொண்டு குழந்தாய், உனக்கு வேண்டியதைக் கேள் தருவோம் என்றார். ஆபிரகாம் அடக்கத்துடனும், பணிவுடனும் குருநாதரைப் பார்த்து, மக்கள் கொடிய நோய்களாலும், பாம்புக்கடியாலும் படும் துன்பங்களிலிருந்து நீங்கி நலம் பெற ஒரு மருந்து அருளினால் மிகவும் பேறு பெற்றவன் ஆவேன் என்றார். மக்கள் நலனில் நாட்டம் கொண்ட ஆபிரகாமின் கருணை உள்ளத்தைக் கண்ட குருநாதர், அவர் விரும்பியவாறே அருள்புரிந்தார். அன்புடன் விடைபெற்றுத் திரும்பினார். திரு. பொன்னம்பல நாடாரும் மற்றவர்களும் ஆபிரகாம் பண்டிதரால் சித்த மருத்துவம் மறுமலர்ச்சி பெற்றுவிடும் எனப் பெரிதும் மகிழ்ந்தனர்.

1877ஆம் ஆண்டு அருள்மிகு கருணானந்த மகரிஷி அருளிய முறையில் உயிர்காக்கும் மருந்துகளை உருவாக்கினார். தம் நன்றியினைத் தெரிவிக்கும் வகையில் இம்மருந்துகளுக்குக் கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள் எனப் பெயரிட்டு மக்களுக்கு வழங்கினார். பாலர் முதல் முதியோர் வரை யாவருக்கும் இம்மருந்துகள் பெரிதும் பயன்பட்டன. விடுமுறை நாட்களிலெல்லாம் சுருளிமலைக்குச் சென்று குருநாதரைக் கண்டு அரிய பல செய்திகளை அறிந்து வந்தார்.

1890இல் தஞ்சையில் குடியேறிய நம் ஆபிரகாம் பண்டிதரும் அவரது மனைவியாரும் தங்களது ஆசிரியப் பணியை விட்டுவிட்டுப் பெரும் அளவில் கருணானந்தர் சஞ்சீவி மருந்துகளைத் தயாரித்து உலகிற்கு வழங்கினர். தஞ்சையின் மேற்புறம் பெரிய நிலத்தை வாங்கி மூலிகைகளைப் பயிரிட்டு வளர்த்தார். 1898இல் மலைப்பகுதியிலும் கோயமுத்தூர், மைசூர்ப் பகுதியிலும் பிளேக் என்னும் கொடிய தொற்று நோய் பரவியது. மக்கள் பலர் பலியானார்கள். இந்த நோயிலிருந்து தப்ப மருந்து எதுவும் அப்போது இல்லை. இருந்தாலும் ஏழைகளுக்கு எட்டாத ஒன்றாக இருந்தது, ஆபிரகாம் பண்டிதர் தயாரித்த சஞ்சீவி மருந்தும், மாத்திரையும் வெளிப்பயன் பாட்டிற்கான கார மாத்திரையும் இந்நோயில் இருந்து தப்ப உதவின. ஏழை எளியோர் மிகவும் பயன்பெற்று மகிழ்ந்தனர். பண்டிதர் அவர்களின் சித்த மருந்துகள் தமிழகம் மட்டுமின்றிக் கடல் கடந்து பயனளிக்கத் தொடங்கிற்று.

இதுபோல இவர் தயாரித்த சமய சஞ்சீவி என்னும் மருந்து காலரா நோயினின்றும் குணம் பெற உதவியது. சளி, இருமல், மாந்தம், சன்னி முதலிய நோய்களால் வருந்திய குழந்தைகளுக்குப் பண்டிதர் தயாரித்த சஞ்சீவி கோரோசனை மாத்திரைகளும் சஞ்சீவித் தைலமும் அமிர்தமாக இருந்து உயிர்களைக் காத்தன. மேலும் பலவித லேகியங்களையும், கஷாயங்களையும் பற்களைப் பாதுகாக்கும் தந்த சஞ்சீவி சூரணத்தையும் பண்டிதர் தயாரித்து அளித்தார்.

பாரதநாடு மட்டுமின்றி ஸ்ரீலங்கா, பர்மா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா, மலேசியா முதலிய கடல் கடந்த நாடுகளில் உள்ள மக்களும் இவற்றைப் பயன்படுத்தி உய்வு பெற்றனர். தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்ந்தனரோ அங்கெல்லாம் இம்மருந்துகள் பரவின. அக்காலத்தில் சஞ்சீவி மருந்துகள் எங்கும் பரவியிருந்த அளவுக்கு வேறு மருந்துகள் பரவவே இல்லை. இது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை.

கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள் பிணி தீர்க்கும் வல்லமை பெற்றவை. எனினும் விலையில் மிகமிகக் குறைந்தவை. இதனால் வசதி படைத்தோர் மிகுந்த பொருட்செலவு செய்து நோய் நீங்கப் பெறும் நிலையில், எளிய நிலையில் உள்ளவர்கள், மிகமிகக் குறைந்த செலவு செய்து சஞ்சீவி மருந்துகளால் குணம் பெற்று மகிழ்ந்தனர். எனவே இம்மருந்துகள் ஏழை எளிய மக்களுக்கும் கண்கண்ட அமிர்தமாகவே திகழ்ந்தன.

வெற்றிலைச் சாறு, இஞ்சி, தூதுவளை, ஆடாதொடைச்சாறு போன்ற அனுபானங்களுடன்தமது சில மருந்துகளை அருந்த வேண்டும் என்று பண்டிதர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இம்மருந்துகள் கைவசம் இல்லாத போது அந்த அனுபானங்களை மட்டுமே அருந்தினாலும் பிணியின் கொடுமை நீங்குவதை மக்கள் கண்டனர். பெரும் பயன்பெற்றனர்.



சித்த மருத்துவமும் அதன் வளர்ச்சிக்கு வழிகளும்

N. செல்வராஜா, கடைத்தோட்டம்
கன்னூர் அவனாசி தாலுக்கா, கோயம்புத்தூர்-638655

உலகின் பல்வேறு பகுதிகளில் பற்பல மருத்துவ முறைகளைக் கொண்டு நோய்களைக் குணமாக்குகின்றனர். அம்முறைகளில் சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யூனானி, ஹோமியோபதி, அலோபதி என்னும் ஆங்கில மருத்துவம் ஆகியன அடங்கும். இது தவிர வேறு முறைகளிலும் நோய்களைக் குணமாக்குகின்றனர். முதல் மூன்று முறைகளும் இயற்கையிலிருந்து கிடைக்கும், வேர், செடி, இலை, கிழங்கு, விதை மற்றும் பல பொருட்களைக் கொண்டு மருந்து தயாரிக்கப்பட்டு மக்கள் நோயின்றி வாழ வழி வகுக்கின்றன. இதில் மிகவும் தொன்மை வாய்ந்த மருத்துவம் சித்த மருத்துவமேயாகும். இதனைத் தமிழ் மருத்துவம் என்றும் அழைப்பர்.

பண்டைக்காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் பல அரிய மருத்துவ முறைகளைத் தமது அனுபவத்தின் மூலம் தந்துள்ளனர். அதனால் நமது முன்னோர்கள் நோயின்றி வாழ்ந்துள்ளனர். சித்தர்கள் தம்முடைய அனுபவ முறைகளை மக்கள் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்ற நோக்கத்தில் அருஞ்சொற்களைக் கொண்டு அமைத்துள்ளனர்.

சீரும் சிறப்பும் கொண்ட இம்முறை ஆட்சி மாற்றங்களாலும், அன்னிய நாகரீகத்தின் காரணமாகவும்

மறைந்து ஒரு சிறி பகுதியினர் மட்டும் தற்பொழுது இதை அழியாமல் பாதுகாத்து வருகின்றனர். பெரும்பாலும் கிராம மக்களிடையே குறிப்பாக பரம்பரை வைத்தியர்கள், தாதிமார்கள் (Dai's) பரம்பரையாகச் சித்த வைத்தியம் செய்பவர்கள், வைத்தியம் பயின்றவர்களிடமும் தங்கிப் புழக்கத்திலுள்ளது.

பரம்பரை வைத்தியர்கள்:

எளிமையான முறையில் பல கொடிய நோய்களைக் குணமாக்கும் திறமை பெற்றவர்கள்தான் இப்பரம்பரை வைத்தியர்கள். இவர்கள் செய்யும் அனைத்து வைத்திய முறைகளும் அனுபவத்தின் மூலம் ஏற்பட்ட வைத்தியங்களாகும். ஏழை எளிய மக்களுக்கு கல், முள், காடு, மலை பாராமல் அவர்கள் இல்லம் சென்று வைத்தியம் செய்பவர்களும் இவர்களே. நவீன மருந்துகளை நாடுபவர்களும் கடைசியில் செல்லும் இடமும் இவர்கள் இல்லமேயாகும். பெரும்பாலும் இவ்வைத்தியர்கள் பொருளாதாரத்தில் பின்தள்ளப்பட்டவர்களாகவேயுள்ளனர். நம்பி வருபவர்களுக்கு வைத்தியங்களையும் கற்றுத் தருவதில் பெருமையுடையவர்களும் இவர்கள் என்று சொன்னால் அது மிகையில்லை.

தாய்ஸ் (Dai's)

நவீன உலகிலும் பெரும்பாலான பிரசவங்களைப் பார்ப்பவர்கள் இவர்களே. மகப்பேறு மற்றும் குழந்தை வைத்தியத்தில் தன்னிகரில்லாப் பல அரிய முறைகளைக் கையாளுவதில் வல்லவர்கள். இவர்கள் பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்கள். பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களும் கூட. மேலும் சித்த வைத்தியத்தைக் குருகுல அடிப்படையில்

வைத்தியத்தைக் கற்று அனுபவத்துடன், திறமையுடன் நோயைக் குணப்படுத்துகிறார்கள். இவர்கள் பழம் பிரதிகளைத் திறமையுடன் படிக்கவும் கையாளவும் அனுபவம் பெற்றவர்கள். இதில் பதிவு பெற்றவர்களும் அடங்குவர். இன்னும் சிலர் கல்லூரியில் பயின்று சித்த வைத்தியத்தைக் காத்து வருகினறனர். இவர்கள் அனைவரும் நமது சித்த வைத்தியத்தின் காவலர்களாக உள்ளனர்.

சித்த வைத்தியம் எப்படி இருக்க வேண்டும்.

மக்களின் முழுப்பங்களிப்புடன் நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்கள் வெற்றி பெறுவது திண்ணம். அவை நமக்குப் பல பாடங்களைப் புகட்டும். மக்கள் தங்களுக்கு வரும் சிறிய நோய்களைத் தம்மிடம் உள்ள பொருட்களைக் கொண்டே செலவு இல்லாமல் வைத்தியம் செய்யக் கற்றுக் கொடுக்கவேண்டும். கிராமந் தோறும் பல எளிய மருந்துகள் தயாரிக்கும் முறையைக் கற்றுத் தந்து அதைப் பயன்படுத்தும் முறையையும் செயல் முறையையும் அவர்களின் பங்களிப்புடன் செய்வது நல்லது. இம்முறையில் ஓரளவு வெற்றியும் கிடைத்துள்ளது என்பதை மத்திய அரசின் உதவியுடன் கோயமுத்தூரில் நடைபெறும் ஒருங்கிணைந்த கிராம சுகாதாரத் திட்டம் காட்டியுள்ளது. உதாரணத்திற்கு மக்களிடம் பெற்ற மருந்து முறை ஒன்றைக் கடைசியில் முறையுடன் விளக்கியுள்ளேன். தற்பொழுது பல மக்கள் இதனால் பயனடைந்துள்ளனர். இதுபோன்ற முறைமைகள் நமது வைத்தியம் வளர ஓர் வழி எனலாம்.

சித்த வைத்தியம் வளரச் சில வழிகள்

நமது வைத்தியத்திற்கு அடிப்படை முலிகைகள், அவற்றை இல்லந்தோறும், கோயில்கள், பொது இடங்களில் வளர்க்க ஊக்கமூட்ட வேண்டும். அதன் மூலம் முலிகைகளின்

அருமை பெருமைகளை மக்கள் அறிய வாய்ப்புக்கிட்டும். மேலும் மூலிகைகளை (Herbarium Sheet) எனப் பக்குவப்படுத்த வேண்டும். இத்திட்டம் செயல்பட நீண்டகாலம் பிடித்தாலும் நல்ல பலன் கிட்டும்.

கிராமப் புறத்திலுள்ள வைத்திய முறைகளைச் சேகரித்து அதை அறிவியல் பூர்வமாகச் சோதித்து பின் மாற்றம் இருப்பின் மக்களுக்கு அறிவிப்பது நல்லது.

மேற்சொன்ன வழிகளுக்குக் கிராமந்தோறும் மருத்துவக் குழுக்களை ஏற்படுத்த வேண்டும். இக்குழு பரம்பரை வைத்தியர்கள், தாய்ஸ், அனுபவ வைத்தியர்கள், விருப்பமுள்ளவர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். அக்குழுவின் முலம் மருந்துகளைத் தயாரித்து குறைந்த விலையில் விநியோகித்தால் அக்குழுவிற்கு குறைந்த வருமானம் கிட்டும். மக்களும் பயனடைவர். மேலும் இக்குழுவின் மூலம் பல ஓலைச் சுவடிகளைப் பெறும் வாய்ப்பும் கிட்டும். இத்திட்டங்கள் யாவும் கூட்டுறவு முறையில் நடைபெற வேண்டும்.

அனைத்துச் சித்த மருத்துவ நூல்களையும் எளிய நடையில் மாற்றி வெளியிட வேண்டும்.

ஒவ்வொரு அரசு மருத்துவமனைகளிலும் சித்தா பிரிவை ஏற்படுத்தி, சித்த முறையிலும் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். (தற்பொழுது ஆரம்ப சுகாதார நிலைய அளவிலேயே இத்திட்டம் உள்ளது). இதற்கு ஆங்கில மருத்துவர்களிடையே மனமாற்றம் தேவை.

நமது மருத்துவம் வளர ஒவ்வொருவரின் மனநிலையும் மாறவேண்டும். புதிய நம்பிக்கை பிறக்க வேண்டும்.

சிந்திப்போம் செயல்படுவோம்.

பின்குறிப்பு

வளர்ச்சிப் பணியை இரு பகுதிகளாகப் பிரித்துச் செயல்பட வேண்டும்.

1. மக்களின் பங்களிப்புடன் செய்யப்படும் வளர்ச்சிப் பணி. 2. ஆராய்ச்சி அடிப்படையில் செய்யப்படுவது. இதில் மக்களின் பங்கு குறைந்து காணப்படும்.

முதல் பகுதியை ஒரு பெரிய திட்டமாகச் செயல்படுத்த வேண்டும். அரசு அல்லது சித்த ஆராய்ச்சிக்கழகம் நடத்தினால் நன்றாக இருக்கும்.

இணைப்பு 1

மக்களிடம் பெற்ற முறை இது. நல்ல பலன் தரும் மருந்து.

விஷராஜாங்கத் தைலம்

தேவையான பொருட்களும் அளவும்

1. விளக்கெண்ணெய் - 1 லிட்டர்
2. வரமஞ்சள் - 70 கிராம்
3. எட்டிக்கொட்டை - 70 கிராம்

செய்முறை: மஞ்சளை மிளகு போல் பொடியாக்கித் தட்டிக்கொள்ளவும். எண்ணெயில் தட்டிய மஞ்சளையும் கொட்டையும் போடவேண்டும். அடுப்பேற்றிச்சிறு தீயாக

எரிக்க வேண்டும். கொட்டை எண்ணெயில் மிதக்கும் பொழுது ஒரு கொட்டையை வெளியே எடுத்து உடைத்தால் சடக் என்று உடைந்தால் பதம் என்றறிந்து இறக்கி வடிகட்டிப் பாட்டிலில் பத்திரப்படுத்தவும்.

உபயோகிக்கும் விதம்: புண்களின் மேல் பூசலாம், துணியில் தோய்த்துக் கட்டலாம்.

தீரும் வியாதிகள்: புண், புரையோடிய புண், புழு வைத்த புண், விசமுள், துரு ஆணி, தகரம், கண்ணாடி கிழித்தல், கால்வெடிப்பு, சேற்றுப்புண்.

(புண்களைக் கழுவித் துடைத்துப் பின்பு மருந்து போடவும்.)

கண், காது, மூக்கிற்குள், தலை போன்றவற்றில் போடக் கூடாது. உள்ளுக்குள் உபயோகிக்கவே கூடாது.

சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பத்தியம் ஒரு பத்தியமா?

த. புனிதகுமாரி,
இறுதியாண்டு, பி.எஸ்., எம்.எஸ்.,
பேராசிரியை பா. கு. மீனாம்பாள்

தமிழ் மருத்துவம் என்றாலே மக்கள் மத்தியில் ஓர் கேள்வி எழுகின்றது. உங்கள் மருந்து உட்கொள்கின்றபோது நீங்கள் பலவற்றை நீக்கச் சொல்கின்றீர்கள். நடைமுறை வாழ்க்கையில் இது சாத்தியப்படுவதில்லை. அதுபோல் பத்தியம் தவறின் கை, கால் செயலற்றுப்போகும் என்ற ஓர் எண்ணமும் உள்ளது. இந்த அச்சத்தினாலே பலர் சித்த மருத்துவம் மேற்கொள்வதில்லை. ஆனால் இக்கருத்துக்கள் முழுவதும் பேதமையினால் ஏற்பட்டவை. பத்தியத்தின் சிறப்பும், எளிமையும் செவ்வனே புரிந்து கொள்ளப்பட்டால் மக்களுக்கு இச்சிறப்புகள் தெரியும்படி செய்தால், சித்த மருத்துவம் வானளவு உயரும்.

பத்தியம்:

அகராதிகளில் ஒவ்வொருவருக்கும் இதனை ஒவ்வொன்றாக வரைகின்றனர். இருப்பினும், இதனைத் தெளிவுற வரையறுத்தால் நோய் வராதிருக்க மானுடர் ஏற்றுக்கொள்ளக்கூடிய அவர்தம் உடலை வளர்க்கும். நன்மை பயக்கும் உணவு மற்றும் செயல்கள் பத்தியத்தையும் அபத்தியத்தையும் தவறாகப் புரிந்து கொண்ட காரணத்தினாலேயே மக்கள் நடுவில் குழப்பம் ஏற்பட்டது. பத்தியம் நோய் வந்தபின் மேற்கொள்ள வேண்டிய உணவாதி செயல்கள் மட்டுமில்லை. நோய் வராது காப்பதற்கு உட்கொள்ள வேண்டிய உணவுகளும், மேற்கொள்ள வேண்டிய செயல்களும் அடங்கும்.

நோய் நிலையும், அவற்றின் காரணங்களும்:

சித்த மருத்துவம் ஐம்பெரும் பூதங்களையும், அதன் சேர்க்கையில் தோன்றுகின்ற உயிர்த்தாதுக்களையும் இவ்வுயிர் தங்குவதற்கு அடிப்படையான உடல் தாதுக்களையும் அடிப்படையாகக் கொண்டது. இவற்றின் செயல்களும், அவற்றின் மாறுபாடுகளும் உடல், உயிர்த்தாதுக்களின் மிகுதலும், குறைதலும் நோய் எனலாம். எனவே நம் இயற்கை உடற்கட்டுக்களின் மாறுதலும், அவற்றின் செயல் வேறுபாடுகளும் நோயாம். இந்நோய்க்குக் காரணம் உணவு, செயல் முயலியவற்றின் மாறுபாடுகள்தாம். எங்ஙனமெனில் ஒவ்வொரு உணவுப்பொருளுக்கும் சுவை, குணம், வீரியம், விபாகம், பிரபாவம் முதலிய ஐந்து தன்மைகள் உண்டு. இவ்வைந்து தன்மைகளும் ஐம்பெரும் பூதத்தின் தன்மைகளைக் கொண்டவை. உடல், உயிர்த் தாதுக்களின் அமைப்பும் அவற்றை வளர்க்கின்ற உணவுகளும், இப்பூத அமைப்பில் அமைந்திருப்பதால்தான் உணவு-ஆதி என உணவை முதன்மைப்படுத்திச் சொன்னார்கள். எனவே நோயுற்ற பொழுது அந்நோய்க்குக் காரணமாய் அமைந்த பூதக்கூறுபாடுகள் உடைய உணவை நீக்கி, நோயை நன்னிலைப் படுத்த ஏற்றுக்கொள்ளக்கூடிய உணவு அளிக்கப் படுமாயின் நோய் எளிதில் நீங்கும்.

மனிதர் தம் செயலுக்கு அவர்களில் இயற்கையாய் உறையும் சத்துவ, இரசோ, தமோ குணங்களே காரணம். இக்குணங்களை விஞ்சச் செய்வதும், குறைத்தலும் உணவின் செயலே. எனவேதான் உத்தம குணமாம் சத்துவ குணத்திற்கு ஏற்புடைய உணவுகளையே பத்தியம் என்றனர்.

பத்தியமும் மருத்துவமும்

நம் உணவு நம்மைச் சுற்றி இருக்குமேயானால், மருந்து வேறெங்கோயிருந்து வருவதில்லை. அதுவும் நம்மைச் சுற்றித்தான் இருக்கிறது. இதனையேதான் ஆன்றோர் உணவே

மருந்து, மருந்தே உணவு என்றனர். இதன் அடிப்படையில் தான் பத்தியத்தை ஏற்படுத்தினர். ஏற்றுக்கொள்ளக்கூடிய, நன்மை பயக்கும் உணவை உட்கொண்டு வந்தால் மருந்து தேவையில்லை. நவீன உணவியலார் சரிநிகர் உணவு, என்றுகூறி, கருநீரக, புரத, கொழுப்பு உணவுகளின் விகிதங்களை 4, 2, 1 என்று வகுத்தனர். கீரையும், காய்கறிகளும் இம்மூன்றும் நீங்கலான உயிர்சத்துக்களின் மிக்க அளவில் கொண்டவை. சித்த மருத்துவ நூலார் வகுத்த உணவு முறைகள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. எங்ஙனம் எனில், உயிர்ச்சத்துக்களின் குறைபாடு நோய்களையும் கருநீரக, புரத, கொழுப்புப் பொருட்களின் மாறுபாடுகளையும் அறிவியலார் அறியும் பன்னாட்கு முன்னரே ஆகும் பொருட்கள் என வகுத்தனர்.

பத்தியம் என்பது சித்தர் மருந்துகளுக்குத்தான் என்பது முற்றிலும் உண்மையன்று. நோயின் நிலைக்கானதுதான். உணவும், மருந்தும் ஒன்றாகவே இருக்கின்றபோது இத்தகைய குழப்பங்கள் ஏற்படுகின்றன. சான்றாக, எல்லோரும் சொல்லுகின்ற அகத்திக்கீரை உணவுப்பொருள் மட்டுமல்லாது ஒரு மருந்துப் பொருளும் ஆகும். அது எல்லா மருந்துகளுக்கும் எதிர்ச்செயல் உடையது அன்று! குடற்கிருமிகளை நீக்குகின்ற மருந்துகளுடன் அகத்திக்கீரையையும் கொடுக்கலாம். எனவே பத்தியம் என்பது மருந்துக்கல்ல. நோய்க்குத்தான் என்பது தெளிவு!

பத்தியத்தின் அறிவியல் அடிப்படை

சில நோய் நிலைகள் தீ பூதம் விஞ்சியதால் ஏற்பட்ட பொழுது அதனைக் குறைக்கும் மண், நீர் பூதக் கூறுபாடுடைய பொருட்கள் ஆகும். இவ்வெப்ப நோய்க்குத் தட்ப வீரியப்பொருள் ஆகும் பொருளாம். இவ்வீரியத்தையும் பூதக்கூறுபாட்டையும் நாம் எளிதில் உணரும் வகை அதன் சுவைதான். எனவேதான் வாதநோய்க்கு இனிப்பு, புளிப்பு, உப்புப் பொருட்களும், பித்தத்திற்கு

இனிப்பு, கைப்பு, துவர்ப்புச் சுவைப்பொருட்களும், கபத்திற்குக் கைப்பு, துவர்ப்புச்சுவைப்பொருட்களும் ஆகும் பொருட்களாம். அதுபோல் பித்த நோய்க்கு இரசோ குணத்தைக் குறைக்கும் செயல்கள் ஆகும் செயல்களாம், வாத நோய்க்குத் தமோ குணத்தை நீக்கும் செயல்கள் ஆகும் செயல்களாம்.

நவீன நூலார் கொள்கையும் பத்தியமும்:

பத்தியம் என்பது மரபுவழி மருத்துவத்திற்கே உரியது என்பதுபோல் நையாண்டி செய்பவர்களும் உளர். அப்படி. இருப்பின் இது நமக்குப் பெருமையே. ஆனால், இன்றைய நிலையில் இதன் சிறப்புகளை உணர்ந்த அலோபதி மருத்துவர்கள் இதற்கெனத் தனியான துறைகளையும் அமைத்து, வளர்ச்சியுறுகின்றனர். புரதச்சத்து குறைவுடைய குழந்தைகட்குப் புரதமிக்க பொருட்களையும், உயிர்ச்சத்துக் குறைந்தவர்க்கு அதனைத்தருகின்ற உணவையும், உப்புச்சத்து குறைந்தோர்க்கு வீதன நோயுடையோர்க்கு அயோடின் சத்து மிக்க உணவுகளையும் கூறுகின்றனர்.

அகத்தியம்:

குழப்பத்திற்குக் காரணமான ஆகாப்பொருட்களும், தகாத செயல்களும் அபத்தியமே. இதனால்தான் ஆகும் பொருளை விளக்கிய தமிழ் மருத்துவர் ஆகாப்பொருட்களையும் வலியுறுத்தினர். நீரிழிவு நோயினருக்குக் கபத்தை விஞ்சச் செய்கின்ற மண், நீர், பூதக்கூறுபாடுடைய இனிப்புச் சுவை நீக்கப்பட வேண்டுமெனக் கூறினர். இச்சுவையானது கருநீரகப் பொருட்களிலும் அதிகமாக இருப்பதினால்தான் அதனை நீக்கக் கூறினர். இதே கருத்தைத்தான் ஆய்வுகளுக்குப் பின்னர் நவீன நூலாரும் சொல்கின்றனர். பித்த, குன்ம, எரி குன்ம நோய்களிலே தீ பூதக்கூறுபாடுடைய சுவைகளான புளிப்பு, உப்பு, கார்ப்பு ஆகியவை நீக்கப்படுதலும், இரசோகுணச்

செயல்களான கோபம், பசி, ஆகியன நீக்கல் வேண்டும் என்றனர். இது போன்ற நவீன நூலாரும் நீக்கல் பொருளில் இச்சுவையுடைய பொருட்களைச் சேர்த்தனர். மதுவும் ஆகாது என்பதும் இதன் பொருட்டே.

Acid-peptic disease என்று இந்நோயை விவரிக்கும் போது அதனை மனேவிகாரத்தினால் ஏற்படுவது என்றனர். இதுவும் இரசோ குணமும் ஒன்றே.

எனவே, பத்தியம் என்பதும் ஆகும் உணவுப் பொருளும், செயலும் எனலாம். அபத்தியம் ஆகா உணவுப் பொருளும் செயலும் என்பர். இரண்டும் மாறுபட்ட இரு நிலைகள். எனவே இவற்றை நீக்குதல் தேவை என்பதைச் சொல்லி இதைச் சேர்த்தல் நலம் என வலியுறுத்தலே வேண்டற்பாலது. பல்வேறு தடைகளையும் மீறி இத்துணை ஆண்டுகள் வாழ்ந்து வந்த இந்தத் தமிழ் மருத்துவத்தைப் பேதைமையால் அழியாது நிலைபெறச் செய்வோம், தேரையர் யமகத்தில் கூறியது போன்று.

பத்தியத்தை நோயையனு பானத்தை லங்கணத்தைப்
பத்தியத்தை முன்மருவன் பண்ணிலிற்கொள் பத்தியத்தை
யேகமா யார்த்தாலு மேறாச் செவிபோனா
யேகமா யார்த்தாலும் மெய்.

என்று கொண்டு கொடிய நோய் நீங்கி, நலம்பல பெற்று மக்களைக் காக்கும் புண்ணியத் தொழிலில் தெளிவுடன் செயலாற்றுவோம்.

சித்த மருத்துவ முன்னேற்றத்தில் சுவடியின் பங்கு

க. இராசநாயகி (பி.எஸ்., எம்.எஸ்.)
அரசு சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை.

முன்னுரை:

நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்

என்பார் திருவள்ளுவர். அவ்வாறு நோய் வரலாறு கண்டு அதனைத் தீர்க்கும் முறைகளைக் கண்டறிந்த அறிவாளர்கள் அவற்றைச் சுவடிகளில் பொறித்து வழங்கியுள்ளனர். அவற்றில் பல சுவடிகள் உலகப் புகழ் வாய்ந்த நம் சரசுவதி மகாலில் இடம் பெற்றுள்ளன.

இச்சுவடிகளை ஆய்ந்து அவற்றில் பதிக்கப்பெற்றுள்ள மருத்துவம் மற்றும் உடல் கூறு மகத்துவங்களை வெளியுலகிற்கு வழங்கும் பணியினைத் தற்போது சரசுவதி மகால் விரைந்து மேற்கொண்டு வருகிறது. இத்தகைய முனைப்பான வெளியீட்டில் மருத்துவர்களாகிய நமக்கும் முக்கிய பங்கு இருக்க வேண்டும்.

சுவடி - சித்த மருத்துவ வழிகாட்டி

தற்போது சித்தர்களின் மணி மகுடமாகத் திகழும் முப்பூ வர்ம ஏடுகள், பரிபாஷைகளை விளக்கும் நிகண்டுகள், சரக்கு வைப்பு முறைகள், மருந்து செய்வதற்குரிய கை பாகம், செய் பாகம் பற்றிய குறிப்புகள், ரசவாத முறைகள், நவீன

மருத்துவத்தில் தீராத நோய்கள் என்று கூறப்படும் புற்றுநோய், வெண்குட்டம் போன்ற நோய்களுக்கு மருந்துகள் சுவடிகளில் காணப்படுகின்றன.

நாம் இதுவரை பெயர் கூடக் கேள்விப்படாத சுவடிகள் பல உள்ளன.

அகத்தியர் அண்ட தரிசனை	1033
அகத்தியர் அமாவாசி	917
அகத்தியர் வகாரம் 16	825
அகத்தியர் வகாரம் 50	1049
கைபாகம் சட்டமுனி திட்டம்	1011
கைபாகம் யூகி முனி 44	953

சுவடி - பொருள் விளக்கம்

சுவடு உடைய எழுத்துக்களால் எழுதப்பட்டது, சுவடி எனப்படும். ஏடுகளின் தொகுப்புகள் ஏட்டுச் சுவடிகள் ஆகும். சுவடி என்றால் ஆங்கிலத்தில் Manuscripts என்று பெயர். Manuscrptus என்றால் written by hand என்று பொருள்படும். அக்காலச் சித்த மருத்துவ பெரியோர்கள் கூந்தல் பனை, தாளிப்பனை எனப்படும் பனையில் இருந்து ஓலைகளை நறுக்கி எடுத்து அதைப் பதப்படுத்தி அதில் எழுத்தாணியால் பல அரிய கருத்துக்களை எழுதி வைத்துள்ளனர். இதுவரை, தமிழில் உள்ள ஓலைச் சுவடிகளில் மருத்துவச் சுவடிகள்-65 சதவிகிதம் உள்ளன.

சுவடிகள் கிடைக்கும் இடங்கள்:

தமிழ்நாட்டில்

சென்னை

அ. பல்கலைக்கழகம் கீழ்த்திசை சுவடி நிலையம்
ஆ. உ. வே. சா. நூல் நிலையம், திருவான்மியூர்
இ. பிரமஞான சபை நூலகம் - அடையாறு

ஈ. தொல்பொருள் ஆய்வுத்துறை - சென்னை
உ. சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் - சென்னை
ஊ. ஆசியவியல் ஆய்வு நிறுவனம் - சென்னை 41

காஞ்சிபுரம்

அ. காமகோடி பீடம்-ஸ்ரீ சங்கராச்சாரியார் மடம்

தஞ்சை

அ. சரசுவதி மகால் நூல் நிலையம்
ஆ. தமிழ்ப் பல்கலைக் கழகம்
இ. தருமபுர ஆதீனம் - மயிலாடுதுறை
ஈ. திருவாவடுதுறை ஆதீனம்

மதுரை

அ. மதுரைத் தமிழ்ச்சங்கம்
ஆ. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மேலைநாடுகளில் தமிழ்ச் சுவடிகள்

1. 1960 ஆம் ஆண்டில் நம் நாட்டுப் பேராசிரியர் அ. கிருஷ்ணமூர்த்தி என்பவர் மேலை நாட்டில் பல இடங்களுக்கும் சென்று தமிழ்ச் சுவடிகளுக்கு விளக்கமான அட்டவணை தயாரித்துள்ளார். அதில் 4 தொகுதிகள் சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறை நூலகத்தில் உள்ளன.

2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அரையாண்டு சஞ்சிகை தமிழ் இயல் 18வது இதழின் கிரிகோரி சேம்சு என்பார் ஐரோப்பிய நாட்டில் தமிழ்ச்சுவடிகள் என்ற தலைப்பில் ஐரோப்பாவில் 88 இடங்களில் உள்ள தமிழ்ச் சுவடிகள் பற்றிய குறிப்பை வழங்கியுள்ளார்.

கீழை நாடுகளில் தமிழ்ச் சுவடிகள்

இரண்டு ஆண்டுகளுக்கு முன், உலகத்தமிழர் ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற மாணாக்கர் ஒருவர் இரண்டு சுவடிகளில் நிழற்படப் பிரதியைப் பிரதி எடுத்து, அதை நிழற்பட பிரதியுடன் ஒப்புநோக்கித் தரவேண்டும் எனக் கேட்டார். அவை, வருமக்கலை பற்றிய நூல்கள். அவை, ஜப்பான் நாட்டிலுள்ள ஏட்டுச் சுவடியிலிருந்து நிழற்படப் பிரதி எடுக்கப்பட்டதாகக் கூறினார்.

சுவடிப் பதிப்பு
பதிப்பில் தவறுகள் - ஏற்படக் காரணங்கள்

1. மூலப்பாட ஆய்வில் பாட வேறுபாடுகளைப் பற்றி அறியாமல் பதிப்பித்ததினாலும்

2. அக்காலம் சுவடியில் மாணாக்கர், ஆசிரியர் கூறுவதைக் கேட்டும், சிலர் வயிற்றுப் பிழைப்புக்காகவும் சுவடிகளில் ஏழுதும் போது தவறாக எழுதிவைத்ததால், அதை அவ்வாறே பதிப்பித்ததினாலும்.

3. சில இலக்கிய அறிவாளர்கள் மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிக்கும்போது, பரிபாஷைகளைப் பெயர் மாற்றிப் பதிப்பித்ததினாலும் தவறு ஏற்பட்டது.

பதிப்பில் தவறுகள் - ஒழிந்திட

1. மூல ஏடு ஒப்புச் செய்தல் வேண்டும்
2. பல சுவடிகளை ஒப்பு நோக்க வேண்டும்
3. எடுத்தாண்ட நூல்களை ஒப்பு நோக்க வேண்டும்
4. சொல் வழக்கு, சொல்லாட்சி ஆய்தல் வேண்டும்
5. இலக்கண அமைதி காணல், செய்யுளாயின் யாப்பமைதி நோக்க வேண்டும்.

6. செய்யுளும், உரையுமாயின் உரையால் தெளிதல் வேண்டும்
7. பிற நூல்களை ஒப்பீடு செய்ய வேண்டும்
8. மொழி நூல் ஒப்பு நோக்க வேண்டும்.

பதிப்பு விளக்கம்

பதிப்பித்தல் என்பதற்கு ஒன்றை வெளிப்படுத்திக் காட்டுதல் என்று பொருள். அதாவது சுயமாக உருவாக்கி வெளியிடுவதும், முன்னுள்ளவற்றை வெளியிடுவதுமே பதிப்பு என்று பொருள்படும்.

பதிப்பித்தல் என்பதற்கு ஆங்கிலத்தில் Edit என்றும், இது Ediu-us என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்தது என்றும் கூறுவர்.

படைப்புக்குத் தேவையானவைகள்

1. தானே புதிய படைப்பு உருவாக்குதல்
2. முன்புள்ள பிறர் படைப்பை வெளிப்படுத்திக் காட்டுதல்
3. தொகுப்புக் கூறுகளை வகைப்படுத்திக் காட்டுதல்

பதிப்பு நிலைகள்

தமிழ் மருத்துவச் சுவடி பதிப்பு நிலைகள் 4 விதமாகக் காணப்படுகின்றன.

1. சுவடி நூலகங்கள் தங்கள் நூலாகச் சுவடிகளைப் பதிப்பித்தல்

2. அரசு நிறுவனங்கள் சுவடிகளைத் திரட்டிப் பதிப்பித்தல்

3. தனியார் சிலர், தங்களிடமுள்ளவற்றையும், நூலகங்களிலிருந்தும் பதிப்பித்தல்

4. பலரிடமிருந்தும் சுவடிகளைப் பெற்றுத் தனியார் பதிப்பகங்கள் அவற்றைப் பதிப்பித்தல். இவற்றில்

1. சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம்

2. தஞ்சை சரசுவதி மகால் நூலகம்

3. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

4. தமிழ்ப் பல்கலைக் கழகம் போன்றவை குறிப்பிடத்தக்கன.

பதிப்பு வேலை - வெளியீட்டு வேலை

பதிப்பு வேலைக்குக் குறிப்பிட்ட பெயருடைய ஓலைச் சுவடிகள் பலவற்றைத் தேடித்தொகுத்து, அவற்றிற்குரிய பல பிரதிகளையும் தொகுத்து, அவற்றுள் ஒன்றை அடிப்படையாகவும், ஏனையவற்றைத் துணையாகவும் கொண்டு சுவடி பெயர்த்தெழுதும் பாங்குடன் திருப்பிப் பதிப்பிற்குரிய செம்பதிப்பாக விதிப்படி அளித்தலே, பதிப்பு வேலையாகும்.

தஞ்சை சரசுவதி மகாலில் தமிழ் மருத்துவச் சுவடிகளின் விளக்கம்.

தஞ்சை சரசுவதி மகாலில் மிகுதியான சுவடிகள் உள்ளன. இவற்றுள், 504 சுவடிகள் 3, 4, 5, 8, 9, 11, 12 ஆகிய தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இதில் சுமார் 505 முதல் 666 வரை சுவடிகளின் விளக்கங்கள் அடங்கியுள்ளன. இவை தவிர இன்னும் அதிகமான சுவடிகள் விளக்க அட்டவணை இல்லாமலேயே காணப்படுகின்றன.

மருத்துவ மாணவரும் - பதிப்பும்

மருத்துவ மாணவர்கள் பதிப்பு வேலை செய்வதற்கு முன் சில கல்வி அறிவுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

1. மருத்துவர்கள் யாப்பிலக்கணம் பற்றி அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் அதிக மருத்துவச் சுவடிகள் இலக்கண வகைகளைக் கொண்டே அமைந்துள்ளன.

2. சொல் வளம் பெற்றிருக்க வேண்டும்.

3. எழுத்தமைதியியல் (Palaeography) அறிவு பெற்றிருக்க வேண்டும்.

4. வட்டார மொழிக்கூறுகளை அறிந்திருக்க வேண்டும். (உதாரணமாக) தண்ணீர் என்று நெல்லை மக்கள் கூறும் அதே வார்த்தையைக் குமரி மாவட்டத்தார் வெள்ளம் என்று கூறுகின்றனர்.

5. பரந்துபட்ட நூற்புலமை பெற்றவராகத் திகழ வேண்டும்.

6. பாட வேறுபாடு பற்றி அறிந்திருக்க வேண்டும்.

பதிப்பிக்கும்போது கவனிக்க வேண்டியவைகள் சுவடி பெயர்த்தெழுதும் முன்பு:

ஒரு சுவடியைப் பதிப்பிக்க எத்தனை வகையான பிரதிகள் காணப்படுகின்றனவோ, அத்தனையும் சேகரிக்க வேண்டும். உதாரணமாக, திருமதி டாக்டர். பிரேமா அவர்கள் கௌசிகர் குழம்பு என்ற மருந்து செய்முறைக்குச் சரசுவதி மகால் நூலகத்தில் இருந்து எடுத்த சுவடிகளுடன் சித்த வைத்தியத் திரட்டு மற்றும அனுபோக வைத்திய ரகசியம் போன்ற பல பிரதிகளைச் சேகரித்து ஒப்பு நோக்கியுள்ளார்.

சுவடி பெயர்த்தெழுதிய பின்பு:

1. நூல் முழுமையும் பெயர்த்தெழுதிய பின் பலவற்றோடும் ஒப்பிட்டுப் பாட வேறுபாடுகளைப் பட்டியலிட்டுக் குறித்துக் கொள்வர்.

2. அவ்வாறு, பாட வேறுபாடுகளை ஒப்பிடும்போது வரிக்கி வரி, சொல்லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து ஒப்பிட வேண்டும்.

3. அவ்வாறு, திருத்தப்பட்ட பாடத்தை மூலத்திலும் பிழையாய் இருந்த பாடத்தை அடிக்குறிப்பிலும் தரவேண்டும்.

4. அதன்பின் அவற்றை ஒழுங்குபடுத்தி வேண்டியவற்றுக்கு விளக்கம் தந்துவிட வேண்டும்.

5. பின் இணைப்புகளுடனும், பிறவற்றுடனும் அச்சுக்கு ஏற்ற நிலையில் தயார் செய்ய வேண்டும்.

சித்த மருத்துவத்துறையில் இதுவரை வெளிவந்துள்ள சிறப்பான பதிப்புகள்.

1. நாடி நூல்களில் மருத்துவம்

அகத்தியர் நாடி
சப்தரிஷி நாடி
வசிட்டர் நாடி
போன்ற பல நாடிகள்

இந்நூல்கள், சோதிட அடிப்படையில் இருந்தாலும், அவற்றுள் கொடிய நோய் பலவற்றுக்கும் மருத்துவம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. உதாரணமாக டாக்டர் மண்டயம் குமார் என்பார் தம் ஆராய்ச்சியின்போது கொடிய குட்ட நோய்க்கு நாடி நூல் மருத்துவம் கண்டதாகக் கூறுகிறார்.

He says, "During the course of the literary research undertaken by the Siddha Medical Research Institute, it was possible to trace an age old palm leaf manuscripts giving a detailed account of such research work done by early Siddhars about 3000 B.C.

2. கண் மருத்துவம்

என்ற சுவடிப் பதிப்பில் தமிழில் கண் மருத்துவம் தொடர்பாகக் கிடைக்கக் கூடிய 14 சுவடிகளை அடிப்படையாகக் கொண்டும், சுமார் 300 சுவடிகளில் உள்ள கண் மருத்துவச் செய்திகளைத் தொகுத்தும், பாடல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இதில், கண்ணோய் தோன்றக் காரணங்கள், கண்நோய்களின் பெயர்கள், கருவிழிநோய் மருத்துவம், வெளிவிழி மருத்துவம், இமை நோய்கள், குவளை நோய்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

3. வருமசூத்திரம்

எனும் சுவடிப்பதிப்பில் வருமக்கலை பற்றிய ஒரு சுவடி பல சுவடிகளுடன் ஒப்பிடப்பட்டுத் தெளிவான விளக்கப் படங்களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

4. தன்வந்திரி குழந்தை வாகடம்

இதுவும் ஒரு அரிய பதிப்பு

5. போகர் - 700

இந்நூலுக்கு இதுவரை எட்டுப் பதிப்புகள் வெளிவந்துள்ளன. இதில் பதிப்புகள் அனைத்தையும் ஒப்பு நோக்கப்பட்டுப் பாட பேதங்களைக் குறித்து, பொழிப்புரையுடன் தமிழ்ப் பல்கலைக்கழகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

மருத்துவச் சுவடிகளைப் பதிப்போர்க்குச் சில அறிவுரைகள்

1. நம் மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கான பாட புத்தகங்கள், பல பழைய சுவடிப் பதிப்புகளாகவே உள்ளன. பல ஆண்டுகளுக்கு முன் பதிப்பிக்கப்பட்ட இவற்றில் சுவடி பற்றிய விவரமோ, பதிப்பு விவரங்களோ இல்லை. இவற்றை இக்காலப் பதிப்புக்கு ஏற்ப நல்ல திருந்திய பதிப்பாக வெளியிட வேண்டும்.

2. பழைய பதிப்புகளில் இருப்பது போல் அல்லாமல், பதிப்பாசிரியர் தம் பதிப்பு முன்னுரையில் சுவடி பற்றிய செய்திகளையும், பதிப்பில் எழுந்த சிக்கல்களையும் விளக்குதல் வேண்டும்.

3. இயன்றவரை ஒவ்வொரு நூலையும் தனித்தனியே பதிப்பித்தல் வேண்டும்.

4. பரிபாஷை அகராதிகளை விரிவாகக் கொடுத்தல் வேண்டும்.

5. சித்த மருத்துவச் சுவடியில் குறிப்பிட்ட நூல் அச்சானதா இல்லையா என்பதை அறிய நூலோதிகளை வெளியிட வேண்டும்.

முடிவுரை

தமிழ் மருத்துவமுறைகள் பல நூறு ஆண்டுகளாகப் பழக்கத்தில் உள்ளவை. இவை, அழிந்து விடாமல் இருப்பதற்காக இன்றைய நிலையில் இந்த ஓலைச்சுவடிகளைப் பதிப்பிக்க ஒரு சிலரே முன்வருகின்றனர். அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பும் வசதியும் மிகக்குறைவே. எனவே வெளிவரும் மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிப்பதும், பதிப்புகளை வரவேற்பதும் பதிப்பாசிரியர்களுக்கு ஊக்கம் தருவதும் அறிஞர்கள் கடமையாகும். இதே நிலையில், பதிப்பிக்கும் ஆய்வாளர்களுக்கும், சுவடிபதிப்பு நெறி முறைகளோடு

தமிழ் இலக்கிய உணர்வும், மருத்துவப் புலமையும் தெளிவுற வாய்க்கப் பெற்று இவற்றைப் பதிப்பிக்க முற்படுவது சாலச் சிறந்ததாகும்.

பயன்பட்ட நூல்கள்

1. சுவடிப் பதிப்பு நெறிமுறைகள்
திரு. த. கோ. பரமசிவம்
2. கண் மருத்துவம் - வே. இரா. மாதவன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
3. சித்தர்கள் கண்ட விஞ்ஞானத் தத்துவம்
திரு. சாமி. சிதம்பரனார், இலக்கிய நிலையம்
4. தேரையர் மகாகரிசல் மூலமும் உரையும்.
டாக்டர் ஆர். தியாகராஜன்
5. கருவூரார் பல திரட்டு - ஆர். நிர்மலாதேவி
6. தன்வந்திரி குழந்தை வாகடம் - க. லலிதாம்பிகா
7. அனுபவ வைத்திய முறை - டாக்டர் சி. என்.
குப்புசாமி
8. The OXFORD English Dictinary Supplement
Volume-I by Clarendon Press.
9. John Hohenberg The Professional Joumalist by
ColumbiaUniversity.
10. திரு. சண்முகம் பிள்ளை - பாடவேறுபாடும்
பதிப்பாசிரியர்களும்
11. சிங்காரவேலு முதலியார் அபிதான சிந்தாமணி,
ஆசியன் கல்விக்கழகம், புதுதில்லி.
12. தமிழ்ச் சுவடிகளின் விளக்கம்.
புலவர் வீ. சொக்கலிங்கம்
து. முரளி, தஞ்சாவூர்.

சித்த மருத்துவத்தில் அவசர சிகிச்சை

கோ. இளங்கோ, இறுதியாண்டு, பி.எஸ்.எம்.எஸ்.,
அரசினர்சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை.

முன்னுரை:

முன்தோன்றிய மூவா முதன் மொழியாம் தமிழுடன் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த சித்த மருத்துவத்தில் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது ஒவ்வொரு சித்த மருத்துவரின் கடமையாகும். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்னும் பலரால் வழி வழியாகவும் கற்றறிந்தும் கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுவதற்கு நாம் ஆற்றவேண்டிய பணிகள் பலவாகும். அரசின் ஆதரவாலும், இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும் மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளர்கிறது. அதன் தனிச்சிறப்புக்கள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டிய நிலை உள்ளது. அவ்வாறு செயல்படும் நிலையில் தான் நாம் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்குச் செய்யும் உண்மையான உழைப்பு ஆகும்.

அவசரகால சிகிச்சை என்பது எல்லா மருத்துவ முறைகளிலும் இடம் பெற்றுள்ளது என்பது யாவரும் அறிந்த உண்மைதான். ஆனால் அதைப் பயன்படுத்தி வெற்றிபெறும் விகிதம் சித்த மருத்துவத்தில் குறைவு என்பதும் யாவரும் அறிந்த உண்மையே. அவசரகாலச் சிகிச்சைக்காகவும் முதலில்

தோன்றும் நச்சுக் குறிகுணங்களை விரைவில் நிவர்த்தி செய்யவும் பயன்படும் மருந்துகளையும் நோய்களைக் குணப்படுத்தும் மருந்துகளையும் குறித்துச் சித்தர்கள் கூறியுள்ளது மறுக்க முடியாத உண்மை. ஆனால் அவை நடைமுறையில் இல்லை என்பதே பெருங்குறை என்றே கூறலாம்.

அனைத்து மருந்துகளையும் அகமருந்து முப்பத்திரண்டு என்ற எண்ணிக்கையில் கொண்டு வந்துள்ளனர். இதில் ஒன்றுதான் தீநீர். பொதுவாகத் தீநீரைப் பற்றி ஆராயும் போது அவை தீர்க்கும் நோய்கள் என்ற வரிசையில் மற்ற மருந்தினர்களுக்குச் சொல்லியுள்ளபடி பல நோய்கள் குறிப்பிடாமல் ஒன்று அல்லது இரண்டு குறிகுணங்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை ஆராயும் போது தீவிர குறி குணங்களை உடனடியாக நீக்குவதற்கு மட்டுமே சித்தர்களால் உருவாக்கப்பட்ட மருந்துகளோ என ஐயப்பாடு தோன்றுகிறது. இதனை ஆராய்வதற்காக 3 தீநீர்கள் செய்முறைப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

1. சுண்டை வற்றல் திராவகம்
2. இஞ்சித் திராவகம்
3. அருநெல்லித் திராவகம்

தீநீர் என்பது வாலையிலிட்டு இறக்கிய ஓர் வகை செயநீர் ஆகும். இதுவே புகைநீர், சத்தி நீர், திராவகம் எனப் பல பெயர்களால் வழங்கப்படுகிறது. இதில் மூலிகைச் சரக்குகளைச் சேர்த்து வாலையிலிட்டுத் தண்ணீர் சேர்த்து அடுப்பேற்றி எரித்து இறக்குவது தீநீர் என்றும், உப்பு வகைகளை வாலையிலிட்டு எரித்து இறக்குவது திராவகம் என்றும் வழக்கில் வழங்கப்படுகின்றன.

1. சுண்டைவற்றல் திராவகம் செய்முறை

1. சுண்டைவற்றல் 2. மாம்பருப்பு 3. கருவேப்பிலை 4. சுக்கு 5. ஓமம் 6. நெல்லிவற்றல் 7. வெந்தயம்

இவற்றைச் சம எடை எடுத்துக்கொண்டு எருமைப் பாலால் ஆட்டித் தயிரை மிதக்கும் அளவு விட்டு மூன்று நாள் ஊறவைத்து வாலையிலிட்டுத் திராவகம் வடிக்க வேண்டும்.

அளவு 0 5 மி. லி., 10 மி. லி.

தீரும்நோய்: உண்டால் நீ கிராணியெல்லாம் கடலே புக்கும் என்பதால் இது கிராணிக்கு (கழிச்சல்) மட்டுமே கொடுக்கும்படி கூறப்பட்டுள்ளது.

2. இஞ்சித் திராவகம் செய்முறை:

சத்துருவைச் செயம் பண்ணும் உப்பு பத்து
சரியிடைசேர் சீன மது பதினைந்தாகும்
மித்துருவாயிடித்து அதை வாலையிலிட்டு
விட்ட பின்பு முன்னீரைத் தள்ளிப்போடு
சித்தி பெற நடு நீரை வாங்கி .....

நல்ல இஞ்சி 1 தூக்கு எடுத்துக்கொண்டு மேற்கூறிய திராவகத்தை இரு மடங்கு விட்டு, மூன்று நாள் புளிக்க வைத்து வாலையிலிட்டுத் திராவகமாக வடிக்க வேண்டும்.

அளவு: 5 - 10 மி. லி.

தீரும் நோய்:

கொல்ல வந்த உப்பிசமுஞ் சுரங்கள் போகும் என்பதனால் இத்திராவகம் உப்பிசத்திற்கும், சுரங்களுக்கும் மட்டுமே வழங்கவேண்டும் என்பதை அறிகிறோம். இதில் நாங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டது சுரம் மட்டுமே.

3. அருநெல்லித் திராவகம் செய்முறை:

பச்சை அருநெல்லி, இஞ்சி, தான்றிக்காய்த்தோல் மூன்றையும் இடித்துக் கடத்திலிட்டு 2 படி தண்ணீர் விட்டு 3 நாள் வைத்து வாலையிலிட்டுத் திராவகமாய் வடிக்க வேண்டும்.

அளவு 5 - 10 மி.லி.

அனுபானம்: திரிகடுகு

தீரும் நோய்கள்:

நிச்சயமாய்ச் சயமிளைப்பு காசம் போகும். இதில் சயமிளைப்பு, காசம் என்று கூறியிருப்பினும் தற்போது காசம் ஒன்றுக்கு மட்டும் கொடுத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய திராவகங்கள் கழிச்சல், சுரம், இருமல், ஆகிய குறிகுணங்களைப் போக்குவதில் சிறந்து விளங்கியதால் இவ்வகை மருந்துகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையில் முதல்வரை அணுகி, அன்னாரின் தலைமையின் கீழ் உள்ள ஆய்வுக்குழு மூலமாக மருத்துவமனையில் வழங்கிப் பரிசோதனை செய்ய அனுமதிக்கப்பட்டது. இதில் இஞ்சித் திராவகம் சுரத்தைப் போக்குவதில் சிறப்பான இடத்தைப் பெற்றது. 15 நிமிடத்தில் உடல் வெப்பநிலை இயற்கை நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. இதற்கான விரிவான ஆதாரங்கள் கல்லூரி முதல்வரிடமும் ஆய்வுக்குழுவிடமும் தயாராக உள்ளன.

கருத்துப் பரிமாற்றம்

நோயை யறிந்தந்த நோயாவது பிறந்த
வாயை யறிந்து வரிசையு-பாய
மருந்தறிந்து..... -தேரையர் வெண்பா

இப்பாடலில் நோயை அறிந்தும் பிறந்த காரணத்தையறிந்த வரிசையுபாயமாகச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது தேரையர் கருத்து. இதன் மூலம் முதலில் தோன்றும் தீவிர முற்குறி குணங்களுக்கு மருத்துவம் செய்து பின் நோய்க்கான காரணத்தை அறிந்து மருத்துவம் செய்ய வேண்டும் என்பது விளங்குகிறது. இதில் தீநீர் முக்கிய பங்கு வகிக்கிறது.

அவசரகால சிகிச்சை என்பது எல்லா மருத்துவ முறைகளிலும் காணப்படாமலில்லை. அவசரக்கால சிகிச்சையில் எவ்வளவு அதிகமான மருந்துகள் எந்த மருத்துவத் துறையில் பயன்படுத்தப்படுகின்றனவோ அம் மருத்துவம் தழைத்தோங்கும் என்பதில் ஐயமில்லை. சித்த மருத்துவம் வளர்ச்சியடையாமல் காணப்படுவதற்குரிய காரணங்களில் அவசரக்கால சிகிச்சையில் பின் தங்கிய நிலையும் ஒன்று என்பது மறுக்கமுடியாது. அவசர சிகிச்சைக்கு சித்த மருத்துவத்தில் மருந்துகள் அதிகம் இல்லை என்ற எண்ணம் சித்த மருத்துவர்களிடையேயும் காணப்படுகிறது. இந்நிலை மாற்றப்படவேண்டும். தற்போது உள்ள நிலையில் ஒருவன் தீவிர சுரத்திலேயோ கழிச்சலிலோ ஒரு சித்த மருத்துவரை அணுகத் தயங்குகிறான். கொடிய நோய்கள், குன்ம நோய்கள் போன்ற பெரிய வியாதிகட்கெல்லாம் சிறப்பான மருத்துவம் அருளிய சித்தர்கள் அவசரக்கால சிகிச்சைக்கும் மருத்துவம் ஆங்காங்கே கூறியுள்ளனர். பொதுவாக நோயாளி தன் துன்பத்தை விரைவில் போக்கும் மருத்துவத்தில் அதிக நாட்டம் கொண்டிருக்கிறான் அவசர சிகிச்சைக்கு நமது நூல்களில் ஏராளமான மருந்துகள் சொல்லப்பட்டிருந்தும் வழக்கில் மறைந்து விட்டமை மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்று.

தீவிர குறிகுணங்களை நீக்குவதற்கு ஆய்வுக்காக மேற்கூறிய மூன்று தீநீர்களும் எடுத்தக் கொள்ளப்பட்டன. அதில் இஞ்சித் திராவகம் சுரத்தைப் போக்கப் பயன்படுத்தப்பட்டு வெற்றியும் காணப்பட்டது. மேலும்

1. குடிநீர்கள் சில சுரங்களுக்குக் கூறப்பட்டிருப்பினும் அதைக் காய்ச்சுவதற்கு சிறிது காலம் தேவைப்படும்.

2. மாத்திரை, செந்தூரங்கள் உடலில் சீரணிக்க நேரம் அதிகமாகிறது. மேலும் அவை சுரத்தையும் தணிக்கச் சற்றுக் கால அவகாசம் எடுத்துக் கொள்கிறது. ஏனெனில் இவை குற்றத்தின் அளவாக நோயைத் தணிக்கப் பயன்படுத்தப்படும் வன்மையுடைய மருந்துகளாகும்.

மேலும் தன் வழிச் சுரத்திற்கோ, பிற வழிச்சுரத்திற்கோ, முதன் முதலில் பெரிய மருந்துகளை வழங்குவது வழக்கமல்ல.

வேர்பாகு தழைபாகு மிஞ்சினக்கால்
மெல்ல மெல்லப் பற்ப செந்தூரம் பாரே

என்பதால் அறியலாம்.

மேலும் கட்டு மருந்துகள் தீவிர நிலைகளுக்குச் சொல்லப் பட்டிருப்பினும் தற்போது அவை வழக்கொழிந்து வருகின்றன. அதைச் சரியாக முடிக்கும் திறமை பெற்றவர்களைக் காண்பதும் அரிதாகி விட்டது. எனவே தீநீர்கள் இவ்விடத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அடுத்துச் சுண்டை வற்றல் திரவாகம் கழிச்சலுக்கு மட்டுமே கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அது என்ன வகையான கழிச்சல் என்று கூறப்படவில்லை. எனவே கழிச்சலைக் கணிப்பதில் காலத்தை வீணாக்காமல் இந்திராவகத்தைக் கொடுக்கலாம். பொதுவாக கழிச்சல் 4 அல்லது 5 முறை சென்றாலே உடலிலுள்ள நீர்த்துவம் வெளியேறிச் சோர்வுற்றுக் காணப்படுவர். இந்நிலையில் சுண்டை வற்றல் சூரணமோ, தயிர்ச்சுண்டி சூரணமோ அல்லது கட்டுவாதி மாத்திரையோ கொடுப்பின் நாம் எதிர் பார்க்கும் அளவுக்கு விரைவில் குணம் கிடைப்பது அரிது. ஏனெனில் இவற்றின் சீரணகாலம் தீநீரின் சீரண காலத்தைவிட அதிகம். மேலும் தீநீர் திரவ நிலையில் இருப்பதால் இழந்த நீர்த்துவத்தையும் சமப்படுத்தவும் உதவியாக இருக்கும்.

அடுத்து, அருநெல்லித் திராவகம் காசத்திற்குக் கொடுக்கப்பட்டது. காசம் இருமல் சில நோய் நிலைகளில் தீவிர நிலையாகக் காணப்படும். இத்தீநீர் வழங்கியதில் இக்குறிகுணங்கள் நீக்கப்படுவதைக் காண்கிறோம். தீநீர் பற்றிய ஆய்வில் மேற்கூறிய மூன்று குறிகுணங்களுக்கும் மேற்கூறிய திராவகங்களை வழங்கலாம். மேலும் இத்தீநீர்கள் அவற்றின் உள்ளடங்கிய மருந்து சத்துக்களை அறிய நவீன

ஆய்வுக்கு அனுப்பப்பட்டு உடலில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிய ஆய்வுக்குழு முயற்சி செய்து வருகிறது. இம்மூன்று மருந்துகளும் நவீன மருத்துவத்தில் வழங்கப்படும் Symptomatic treatment போல் செயல்படுவதாகக் கருதப்படுகின்றன.

இதுபோன்ற சிறப்பான தீநீர்கள் யாகோபு வைத்திய சிந்தாமணி 700 ஏராளமாகக் காணப்படுகின்றன. எல்லாவற்றையும் வெளி உலகிற்கு கொண்டு வருவது ஒவ்வொரு சித்த மருத்துவரின் கடமையாகும். இதுபோன்ற மிகவிரைவில் குணமளிக்கின்ற எளிய மருந்துகளை நாட்டிலுள்ள அனைத்து மருத்துவ மனைகளிலும் பயன்படுத்தி அவசரக்காலத்தில் பயன்படக்கூடிய மருந்துகளை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் நிலையில்தான் சித்த மருத்துவம் நல்ல வளர்ச்சியடைய வழி செய்யும் என்பது மறுக்க முடியாத உண்மை.

முடிவுரை:

தற்போது தீநீர்கள் வழக்கொழிந்து கொண்டே வருகின்றன. வழக்கத்தில் நாம் ஓமத்தீநீரை மட்டுமே பயன்படுத்தி வருகிறோம். தீநீர்கள் பற்றி மேலும் பல ஆய்வுகளை மேற்கொண்டு சிறப்பான தீநீர்களை வழக்கத்தில் பயன்படுத்தினால் சித்த மருத்துவ வளர்ச்சியில் முக்கிய பங்காகத் திகழும்.

ஆதாரநூல்கள்:

1. யாக்கோபு வைத்திய சிந்தாமணி 700
2. குணபாடம் தாது சீவ வகுப்பு
3. தேரையர் வெண்பா

கூடுவிட்டுக் கூடு பாய்தல்

Astral Projection

நெல்லை இராம. பிச்சுமணி
பிரிவு அலுவலர், கல்வித்துறை
தலைமைச்செயலகம், சென்னை.

வாழ்க உலகெலாம் வெல்க நன்னெறி
ஆழ்க அருள்நெறியில் அன்பர்கள் திடமுடன்
வாழ்க வளமுடன் என்றென்றும்
சூழ்க முருகன் அருள்

தமிழ் நாட்டில் 18 சித்தர்களும் வடநாட்டில் 86 சித்தர்களும் இருந்தனர். அவர்கள் இப்பொழுதும் நம்முடன் இருக்கிறார்கள்.

சேலம் மாவட்டத்தில் கருங்கூட மலையில் அந்த மகான்கள் நடமாட்டத்தை இன்றும் காணலாம்.

சித்தர்கள் அனைவரும் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தார்களா என்பது பற்றி நமக்குத் தெரியாது.

இருப்பினும் உஜ்ஜை நாட்டைப் பேரரசர் விக்ரமாதித்தன் திருமந்திரம் கண்ட திருமூலர் மற்றும் திருப்புகழ் தந்த அருணகிரி சுவாமிகள் ஆகியோர் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தனர் என்பது வெள்ளிடை மலையாகும்.

அவர்களுள் மாமன்னர் விக்கிரமாதித்தன் அடிக்கடி கூடு விட்டுக் கூடு பாய்ந்து, அம்மன்னன் நடத்திய காதல் நாடகங்கள் மிகமிகச் சுவையானவை.

விதிவசத்தால் மாண்ட ஆட்டு இடையனின் உடலில் புகுந்து சுமார் 3000 ஆண்டுகள் வாழ்ந்து நமக்குத் திருமந்திரம் என்னும் மெய்ஞ்ஞானத்தை அள்ளி வழங்கிய மாபெரும் மகான் திருமூலர்.

முருகப் பெருமானின் திருஉருவத்தை தன் ஊனக்கண்ணால் தரிசித்துத் திருப்புகழ் தந்த அருணகிரி சுவாமிகள் கிளியின் உடலில் புகுந்து முக்தி பெற்றவர்.

கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்பது எல்லோரும் செய்யக்கூடியதே. அதற்கு முக்கியமாக வேண்டப்படுவது ஒரு முகப்பட்ட மனமும் பிராணாயாமமும் ஆகும்.

மனம் ஒரு நிலையில் இல்லாமல் தன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அடங்காமல் தான்தோன்றித் தனமாகத் திரியும் இயல்புடையது.

வெறிபிடித்த குதிரைக்குக் கடிவாளம் போன்றதுதான் பிராணாயாமம்.

மரத்திற்கு மரம் தாவும் குரங்கு போன்றது மனம். மனத்தைக்கட்டுப்படுத்துவது அவ்வளவு எளிதான காரியமல்ல.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாகுமே.

பிராணாயாமத்தின் அடிப்படை நாடி சுத்தியாகும்.

வலக்கை பெருவிரலால் வலது நாசித்துவாரத்தை அடைத்து இடது நாசியின் வழியாகப் பிராண வாயுவை வேகமாக முடிந்தவரை உள்ளுக்கு இழுத்து, அப்படி இழுத்த காற்றை உள்ளே நிறுத்தாமல் உடனே வலக்கை மோதிர விரலை எடுத்து வலது நாசியின் வழியாகக் காற்றை மெதுவாக வெளியே விடவேண்டும்.

மறுபடியும் வலது நாசியின் வழியாக மேற்கூறியது போல அதாவது வலது நாசியின் வழியாகப் பிராணவாயுவை வேகமாக முடிந்தவரை உள்ளுக்கு இழுத்து உள்ளுக்கு இழுத்த

வாயுவை உள்ளேயே நிறுத்தாமல் வலது நாசியை அடைத்து இடது நாசியின் வழியாக மூச்சை மெதுவாக வெளியிட வேண்டும். இப்படித் தினமும் 10-15 நிமிடங்கள் செய்ய வேண்டும்.

நாடி சுத்தி செய்வதால் கிடைக்கும் பலன்கள்

விந்தைக் கெட்டிப்படுத்தும். நித்திரையில் ஒழுகும் விந்தைத் தடுத்து நிறுத்தும்.

காமவிகாரத்தை நீக்கும். முகத்தில் தேஜஸ் உண்டாகும். கழுத்து வீக்கம், மந்தாக்கினி, உடல் பலஹீனம், பீனிசம், மூக்கு சம்பந்தமான நோய்கள், புளூரசி போன்ற நுரையீரல் சம்பந்த நோய்கள், மார்பு வலி, ஈளை, இருமல், கபம், ஆஸ்துமா, ஜலதோசம், வாயு, பித்தம், உடற்சூடு முதலிய நோய்கள் நீங்கும்.

பிராணாயாமம் சித்தியானால் மனம் ஒருமுகப்படும். மனம் ஒருமுகப்பட்டால் தியானம் சித்தியாகும்.

அதிகாலையில் வெறும் வயிற்றில் வடக்கு திசை நோக்கி உட்கார்ந்து நாடி சுத்தி செய்ய வேண்டும். அதுவும் அதிகாலை மூன்று மணியிலிருந்து ஐந்து மணிக்குள் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் வானமண்டலம் அமைதியாக இருக்கும். வான மண்டலத்திலிருந்து ஓஸோன் என்ற மிக அற்புதமான வாயுபோன்ற பொருள் பூமண்டலத்தை நோக்கிக் கீழ் இறங்கி ஏரி, குளம் ஆறு போன்ற நீர்த்தேக்கத்தின் மீது ஏடுபோல் படிந்திருக்கும்.

மேற்படி ஓஸோன் என்ற வாயு சூரிய கிரகணங்களால் ஆவியாகி விடும். ஆகவே அதிகாலை ஐந்து மணிக்குள் அந்நீரில் குளித்து விட வேண்டும். அச்சமயத்தில் அத்தகைய, நீர் நிலைகளில் குளித்தால் உடலுக்கு எந்த நோயும் வராது. நீண்ட நாட்கள் ஆரோக்கியத்துடன் உயிர் வாழலாம். மருத்துவரை நோக்கித் தினமும் ஓட வேண்டும்.

இன்று இமயமலைச் சாரலிலுள்ள ரிஷிகேஷ் பத்திரிநாத், கேதார்நாத் போன்ற இடங்கலிலுள்ள மடங்களில் அதிகாலை மூன்று மணிக்கு ஆசிரமவாசிகள் அனைவரும் எழுந்து அத்தகைய கடுங்குளிரிலும் குளித்துவிட்டு தியானத்தில் அமருவார்கள். அங்கேயே அப்படியென்றால் இங்கு கேட்கவே வேண்டாம். காலை ஐந்து மணியாகி விட்டால் சென்னையில் குழாய் அடிச்சண்டை, சச்சரவு வீண் வம்பு வழக்குகள் அரசியல் கலவரங்கள் சாதிப்பூசல்கள் எல்லாம் ஆரம்பமாகிவிடும். நிலைமை அப்படியிருக்கத் தன் கட்டுக்கு அடங்காமல் தான் தோன்றித்தனமாகத் திரியும் மனதை அடக்கித் தன் வசப்படுத்தி ஒருமுகப்படுத்துவது எவ்வாறு.

இல்லறத்தைத் துறந்து காட்டை நோக்கி ஓடுவதும் நமக்கு ஒத்து வராது.

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய பொருளியல் ஆசைகளில் உழன்று உழன்று தேய்ந்து போய்க் கடைசியில் அந்த நாலுபேருக்கு நன்றி சொல்லுகிறோம்.

சரி மனதை ஒருமுகப்படுத்திவிட்டோம். இப்பொழுது களத்தில் இறங்குவோம்.

கூடுவிட்டுக் கூடு பாய்வதற்கு ஏற்ற நேரம் இரவு 11 மணிக்கு மேல்காலை 4 மணிக்குள். அப்பொழுதுதான் வானமண்டலம் அமைதியாக இருக்கும்.

தெய்வங்களும் தன் இருப்பிடத்தை விட்டு வீதி உலா வரும் நேரம். அப்படி வீதி உலா வருவதை ஒரு சிலர் தன் ஊனக்கண்ணால் கண்டிருக்கிறார்கள்.

பிறர் அடிக்கடி வந்து தொந்தரவு இல்லாத அறையாகவும் வெளிச்சம் ஒரு சிறிதும் இல்லாத அரையாகவும் இருத்தல் வேண்டும்.

சமதளத்தரையில் துணியை விரித்தோ அல்லது படுக்கையில் மல்லாந்து படுக்கவேண்டும்.

வலது கால் பெருவிரலுக்கும் அவ்விரலுக்கு அடுத்துளள விரலுக்கும் உள்ள இடைவெளியில் இடதுகால் பாதத்தைத் தூக்கி மேற்படி வலதுகால் விரல் இடைவெளியில் செங்குத்தாக நிறுத்த வேண்டும்.

அடுத்துக் கைகள் இரண்டையும் X வடிவமாகப் பின்னி மார்போடு அணைத்துக் கைவிரல்கள் நுனி அக்குளுக்குள் தொட்டு இருக்க வேண்டும்.

கண்களை மூடிக் கண் புருவங்கள் ஒன்றுகூடும் இடத்தில் அதாவது சுழுமுனையில் மனதை ஒருமுகப்படுத்தி நாக்கை மடித்து உள் நாக்கில் படும்படி அழுத்த வேண்டும்.

கண்களை மூடிக்கொண்டு " லம் " என்ற மந்திரத்தைச் சுழுமுனையில் மனக்கண்ணால் எழுதி நாக்கை பயன்படுத்தாமல் மனதால் உச்சரிக்க வேண்டும்.

மனம் ஒரு நிலைக்கு வந்து ஆடாமல் அசையாமல் ஒருமுகப்படுமானால் நமது காலடியில் வெண்புகை போன்ற ஒரு உருவம் தோன்றும்.

இப்பொழுது ஸ்தூல உடலிலிருந்து சூக்குமம் தனியாகப் பிரிந்து விடும். அந்தப் புகை போன்ற உருவத்தைக் கண் திறக்காமல் உற்று நோக்கிக் கொண்டே இருக்க வேண்டும்.

இப்பொழுது வெகு தூரத்திலிருக்கும் ஒரு நண்பரின் பெயரை மனதால் நினைத்து அவரிடம் இன்ன இன்ன செய்திகளைச் சொல்லி வா என்று அப்புகை உருவத்தை மனதால் கட்டளையிட்டால் அந்தச் சூக்கும உடல் அந்த

நண்பரிடம் சென்று நாம் அனுப்பிய செய்தியைக் கூறிவிட்டு நம்மிடமே வந்து சேர்ந்து விடும். ஆனால் ஸ்தூல உடலை விட்டுச் சில சமயங்களில் ஸ்தூல உடலை விட்டு வெளியே வரும் புகை போன்ற உருவம் ஸ்தூல உடல் போன்று நாம் நினைத்த இடத்திற்குச் சென்று திரும்பி வரும்.

இதற்கு ஆதாரம் The Secret search in India என்ற புத்தகம். இதை எழுதிய மேனாட்டைச் சேர்ந்தJohn Burton என்ற அறிஞர் இந்தியாவிற்கு வந்து இமயமலைச் சாரலிலிருந்து திருவண்ணாமலை மகான் ரமண மகரிஷி வரை எழுதியுள்ளார்.

அவர் திருவண்ணாமலை காஞ்சிக்குப் போகும் முன்பு சென்னையில் ஒரு லாட்ஜில் தங்கியிருக்கிறார். இரவில் படுக்கையில் படுத்துக்கொண்டுகாஞ்சிக்குச் செல்லலாம் என்று மனதில் நினைத்துக் கொண்டிருந்தார். நடமாடும் தெய்வம் காஞ்சி மாமுனிவரை நினைத்துக்கொண்டு இரவு வெகு நேரம் அந்தக் காஞ்சி பெரியவாளைச்சந்தித்த வண்ணம் இருந்தார். அந்த மேனாட்டு அறிஞர் திடீரென்று அந்த அறிஞரின் காலடியில் புகை போன்ற உருவம் தோன்றியது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒளிப்பிழம்பான ஒரு மனித உருவம் தோன்றிச் சிரித்த முகத்துடன் காட்சி அளித்தது. அந்தச் சிரித்த முகந்தான் காஞ்சிப் பெரியவர். அப்பொழுது அந்த மகரிஷிக்கு வயது முப்பது. அந்த ஒளிப்பிழம்பை பார்த்துவிட்டு அந்த மேனாட்டு அறிஞர் எழுதுகிறார்I saw hin in flesh & blood.

சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழி முறைகளும்

" சித்த மருத்துவ மாமணி" எஸ். காலீசுவரன்,
பாளையங்கோட்டை.

தமிழகம் தொண்டை, சோழ, சேர, பாண்டிய மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பிறகு 6ஆம் நூற்றாண்டு முதல் 9ஆம் நூற்றாண்டு வரை பல்லவர் காலம் என அழைக்கப்பட்டது. அப்போது சைனம், பௌத்தம், வைதிகம் என மூன்று சமயங்கள் பிரபலமாக விளங்கின. ஆயினும் அவைகளுக்கிடையே சண்டையும் சச்சரவுகளும் மலிந்து காணப்பட்டன. இக்காலகட்டத்தில் தமிழர்கள் இலக்கியத் துறையில் நாட்டம் செலுத்தாமல் சைவம், வைணவம் என்ற இரண்டு சமயங்களை நிலை நாட்டுவதிலே கருத்தாயிருந்தனர்.

அப்போது, நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றலாயினர். அவர்கள் பக்தி இலக்கியத்தை மட்டுமே பரப்பினார்கள்.

பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினான்காம் நூற்றாண்டு வரை பாண்டியர், சோழர் ஆட்சிகள் வலிவும், பொலிவும் பெற்று விளங்கலாயின.

அக்காலத்தில்தான் சேக்கிழார், ஒட்டக்கூத்தர், கம்பர், செயங்கொண்டார் போன்ற பெருங்கவிஞர்கள் தோன்றினர். அவர்கள் பெரியபுராணம், இராமாயணம், கலிங்கத்துப்பரணி போன்ற பேரிலக்கியங்களைப் படைக்கலாயினர்.

பதினான்காம் நூற்றாண்டிற்குப் பிறகு நாயக்க மன்னர் ஆட்சி நிலைபேறு கொண்டது. அக்காலத்தில்தான் தலபுராணங்களும் சிற்றிலக்கியங்களும் தோன்றி வளர்ந்தன. புலிப்பாணி, கமலமுனி, கோரக்கர், மச்சமுனி, சட்டமுனி, உரோமமுனி, யூகிமுனி, தேரையர், தன்வந்திரி, கொங்கணர் முதலியவர்களும் பாம்பாட்டிச் சித்தர், அகப்பேய்ச் சித்தர், குதம்பைச் சித்தர் போன்றோரும், மந்திரம், மருத்துவம், தத்துவம், யோகம், ஞானம், இரசவாதம், சித்து முதலியவைகள் பற்றிப் பல நூல்களை இயற்றலாயினர். இது ஒரு சாரார் கருத்து.

சித்தர் பாடல்களில் தமிழ்ச் சொல் எளிமையாகவும், இனிமையாகவும் கையாளப்பட்டுள்ளது. ஆனால் பொருள் ஆழமும், அருமையும் கொண்டனவாகும்.

எடுத்துக்காட்டாக ஒன்றை இங்கு கூற விழைகின்றேன். மாங்காய்ப் பால் உண்டு மலைமேலிருப்போர்க்குத் தேங்காய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய்.

பதினைந்தாம் நூற்றாண்டில் காளமேகப் புலவரும், 16ஆம் நூற்றாண்டில் சைவ சித்தாந்த உரை நூலாசிரியரும், 18ஆம் நூற்றாண்டில் குமரகுருபரரும், 19ஆம் நூற்றாண்டில் இராமலிங்க வள்ளலாரும் தோன்றினார்கள். வள்ளலார் சித்தராகவும், ஞானியாகவும் சமரச சன்மார்க்கப் போதகராகவும் விளங்கினார்கள்.

பல்லவர் காலத்தில் வடமொழிக்கே முக்கியத்துவம் கிடைத்தமையால் மக்கள் சமஸ்கிருதத்தை விரும்பிப் படிக்கலாயினர். ஆகவே தமிழில் வடசொற்கள் கலக்கலாயின. குறிப்பாத இடா, பிங்கலா, சுசும்னா போன்ற சொற்கள் இடகலை, பிங்கலை சுழிமுனை என்று மாற்றப்பட்டன.

பழங்காலத்தில் எழுதப்பட்ட மருத்துவ நூல்களை ஆராய்ந்தால் தமிழின் தனித்தன்மையினை நன்கு அறியலாம். தனித்தியங்கும் தமிழாற்றலை யாரும் மறுக்க முடியாது.

சங்க காலத்திற்கு முன்பே சித்தர்கள் பலர் தோன்றி மருத்துவ நூல்களைச் செய்துள்ளனர். திருவள்ளுவர், தொல்காப்பியர், ஔவையார் ஆகியோரைச் சித்தர்கள் என்றே கூறலாம்.

தமிழர்களின் ஆர்வம், சமய நூல்களை உருவாக்கப் பயன்பட்டது போன்று மருத்துவம், தத்துவம் முதலிய நூல்களைச் செய்யாது போனதால் நாளடைவில் அந்த அரும்பெரும் நூல்கள் மறைந்து விட்டன.

தமிழின் அருமை பெருமைகளை உணர்ந்த மேனாட்டு அறிஞர்கள் அதன் சிறப்பை வெகுவாகப் பாராட்டிப் போந்தனர். பழமையான இலக்கிய உணர்வுகள் நிறைந்த உயர்ந்தமொழி என மாக்சுமுல்லரும், தத்துவப் பொருளோடு மனத்தில் தோன்றும் எண்ணங்களை எளிமையோடும், சுருக்கத்தோடும் தமிழ் மொழியிலேயே கூறலாம் என மறைத்திரு பெர்சிவல் என்பாரும் கூறினர். தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்தும் நீதி இயல்புகளையும், தனித்தன்மையினையும் கொண்டது எனக் கால்டுவெல்லும் பாராட்டுகின்றனர்.

இத்தகு சிறப்பு வாய்ந்த தமிழகத்தில் மூல சித்தர்கள் பதினெண் பேராவர். இவர்கள் பல வெளி நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாக அறியக்கிடக்கிறது. போகர், புலிப்பாணி முக்கியமாகச் சீனா தேசத்துடன் தொடர்பு கொண்டிருந்ததாகவும் எனவேதான் நமது தமிழ் மொழியில் காணப்படும் சில வார்த்தைகள் அதற்கு ஆதாரமாயிருக்கிறது. சீனாக்காரம், சீனாக்களிமண், சீனாக்கற்கண்டு, சீனாப்புல், சீனாக்கிழங்கு, சீனச்சுண்ணம், சீனாப்பட்டு, சீனாமுத்து, சீனாமிளகு முதலியனவாகும். சில உதாரணங்கள்.

அறிவு என்பதே பிற உயிருக்குத் தீங்கு செய்யாததேயாகும். பிற உயிர்களின் துன்பத்தைத் தன்னுடையதாகக் கருதாதபோது அறிவினால் அடையும் பயன் ஒன்றுமில்லை என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார்.

அறிவரே அருளாளராவர். அறிவராகத் தொல்காப்பியர், ஔவையார், கபிலர் போன்ற உத்தம சீலர்களே சித்தர்கள் எனப்படுவர். அவர்கள் அனைவரும் அநுபூதி அனுபவம் பெற்றுச் சிறந்த அநுபூதி மகான்களாவர். விஞ்ஞானத்திறம் வாய்ந்த மெய்ஞ்ஞானிகள் உணர்த்திய அரும்பெரும் உண்மைகளையும் தெளிவுறுத்திய மருத்துவக்கலை, ஞானக்கலை ஆகியவைகளையும் தொடர்ந்து தமிழகம் ஆராய்ச்சி செய்யும் முயற்சியினைக் கைவிட்டதால் தற்காலம் சித்தர் பாடல்கள் ஏதோ சீட்டுக் கவிகள் போலப் பொருள் விளங்காததாகக் காணப்படுகின்றன. எனவேதான் இந்நிலை.

நமது சித்த மருத்துவத்தில் சாகாக்கலை ஒரு பெருங்களையாகும். ஐம்பூதங்களால் ஆக்கப்பட்ட இவ்வுடல் இறந்த பிறகு மண்ணின் பகுதி மண்ணுடனும், காற்றின் பகுதி காற்றுடனும், தீயின் பகுதி தீயுடனும் கலந்து விடுகின்றன என்பர். அவ்வாறு கலந்து விடுமானால் மீண்டும் பிறப்பது இயலாது. ஆகவேதான் சிவவாக்கியர்,

கறந்த பால் முலைபுகா
கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கின் ஓசை
உயிர்களு முடற்புகா
விரிந்த பூவுதிர்ந்த காயும்
மீண்டு போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லையில்லை
யில்லை யில்லையே என்றார்.

அப்படியிருக்கச் சாகாக்கலை எங்ஙனம் சாத்தியம் ஆகும் என்பது கேள்வி.

மனச் சஞ்சலத்தாலும், சலனத்தாலும் உடலின் அணுக்கள் தளர்ந்து சிதைவுறாமல் விளங்கச் சித்தர்கள் பல சாதனங்களையும், சில மருந்துகளையும் தெரிந்திருக் கின்றனர். பல வகையான வைப்புச் சரக்குகளைச் செய்து அவைகளை அணுக்களாக்கி மறுபடியும் அந்த அணுக்களைக் கட்டினார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால் பூரக்கட்டு, இலிங்கக் கட்டு, தாளகக்கட்டு, இரசக்கட்டு, வீரக்கட்டு என்பன. இந்தக் கட்டுகள் நெருப்பையும் வெல்லும் திறன் வாய்ந்தவையாகும். இவைகளை மருந்துகளாக்கிப் பிணியாளனுக்குப் பயன்படுத்தினால் உடலில் உறைந்துள்ள அணுக்கள் கட்டுண்டு பல்லாயிரம் ஆண்டுகள் உயிர் வாழலாம் என்பது சித்தர்களின் அனுபவ உண்மை.

மனிதன் தோன்றிய காலந்தொட்டே மருந்துகளும், உடற்பிணிதீர்க்கும் மூலிகைகளும், சீவவர்க்கப் பொருள்களும் தோன்றலாயின.

தமிழ் மருத்துவமாகிய சித்த மருத்துவத்தில் சொல்லப்படாத நோய்களோ, மருந்துகளோ கிடையா என உறுதியாகக் கூறலாம்.

சுவாசகாசம், இளைப்பு, இருமல், குட்டம், புற்று, தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், வாதம், மகோதரம், காமாலை, பெண்களுக்கு ஏற்படும் சில நோய்கள், கண், காது, மூக்கு, தொண்டை போன்ற நோய்களுக்குச் சித்த மருத்துவத்தில் அந்நோய்களின் குறி, குணங்கள், மருந்துகள் ஆகியவை ஏற்கனவே சித்தர்களால் அறுதியிட்டுக் கூறப்பட்டுள்ளன. அவைகளை அறியாதது நமது குற்றமே ஒழியச் சித்தர்கள் குற்றமில்லை.

இப்பொழுது சில நாட்டு மருத்துவர்களிடம் அரிய பெரிய மருந்துகள் பரம்பரையாகக் கையாளப்பட்டுப் பிணிகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. அவர்கள் பட்டம், பதவி பெறாமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் இதற்கெல்லாம் ஆசைப்படாமல் குடத்தினுள் வைத்த விளக்குப் போலத்

தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக மக்களுக்கு அரியசேவை செய்து வருகிறார்கள். பட்டமோ, பதவியோ இல்லை என்பதற்காக அவர்களை நாம் புறக்கணித்து விடமுடியாது. அவர்களிடம் இன்ன மருந்து உடலில் என்ன வேலை செய்கிறது? என்று கேட்டால் விளக்கம் அளிக்க முடியாது. காரணம் போதிய கல்வி ஞானம் கிடையாது. கல்வி ஞானம் இல்லை என்பதற்காக அவர்களைப் புறக்கணித்து விடவும் கூடாது.

தொன்றுதொட்டு வழக்கத்திலும் பழக்கத்திலும் கையாளப்பட்டு வந்ததனால் அன்றோ நமது சித்த மருத்துவம் காலத்தால் அழியாமல் காப்பாற்றப்பட்டு வருகிறது. பட்டம் இல்லாமல் அலோபதி வைத்தியர்களே அயர்ந்து அதிசயப்படும் வண்ணம் நமது சித்த மருத்துவர் அரும்பெரும் சேவை செய்து வந்திருக்கிறார்கள். வருகிறார்கள். ஆங்கிலேயர்கள் நம் நாட்டில் காலூன்றிய காலத்தில் அவர்களுக்கு நோய்கள் வராமலில்லை. எலும்பு முறிவு ஏற்படாமலில்லை. அப்போதெல்லாம் ஆங்கில மருத்துவம் (அலோபதி) இல்லை. நமது நாட்டு வைத்தியர்களை அழைத்து வந்து சாப்பாடு கொடுத்து உறைவிடம் தந்து, எல்லா வசதிகளும் செய்து தந்து மருந்துகளைத் தயார் செய்யச் சொல்லி, தங்களின் நோய்களைத் தீர்த்துக் கொண்டார்கள் என்பது எங்களது குடும்ப வரலாற்றின் உண்மை.

தீர்க்க முடியாது என்று சொல்லப்பட்ட பல நோய்களுக்கும் ஆபரேசன் இதற்கு ஒரே வழி என்று கூறப்பட்ட நோய்களான பித்தப்பையில் கல், Stone in the Gull Bladder) சிறுநீர்ப்பையில் கல் என்ற நோய்க்கும், இரத்தத்தில் புற்று (Blood Cancer, Cancer in the Liver and Lungs.) என்ற நோய்களுக்கும், அறுவை சிகிச்சை எதுவும் இல்லாமல் பரம்பரை பரம்பரையாக மருந்துகள் உள்ளே கொடுத்தும் வெளிப்பிரயோகமாகச் சில மூலிகை வைத்தியங்களும் செய்து வரும் என் போன்ற பல சித்த மருத்துவர்கள் நம் நாட்டிலுள்ளனர்.

அவர்களையெல்லாம் ஒன்று கூட்டித் தக்க வெகுமதி அளித்து அவர்களிடமுள்ள அரிய கருவூலங்களைத் தமிழக அரசு கேட்டுப் பெறுதல் வேண்டும்.

சித்த வைத்தியர்களைத் தந்தை போலப் பாவித்து அவர்களிடம் சில ஆண்டுகள் குருகுல வாசமிருந்து அவர்களிடமிருந்து அரிய விஷயங்களை அறிந்துகொள்ள முயற்சி செய்ய வேண்டும். அனுபவமும், ஆராய்ச்சியும், மிகுந்த நல்ல மருத்துவர்களின் பட்டியல் ஒன்று கல்லூரியில் இருக்க வேண்டும்.

கல்லூரியில் நடைபெறும் எல்லா விழாக்களிலும் அவர்களைப் பங்கேற்கச் செய்து அவர்களைப் பாராட்டிப் பேணி போற்றிச் சிறப்புரை வழங்கச் செய்ய வேண்டும்.

வறுமையில் வாடக்கூடிய சிறப்பான சித்த மருத்துவர்களை அரசு பொருள் உதவி செய்து ஊக்குவிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களிடம் மட்டும் மறைந்து கிடக்கின்ற உண்மைகள் வெளிப்பட ஏதுவாகும்.

சித்த மருத்துவக் குழுக்களிலும், சித்த மருத்துவவளர்ச்சி மன்றங்களிலும் அவர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டும்.

சித்த வைத்தியர்கள் பலர் வறுமையிலும் வளமையின்மையாலும் வாடும் நிலையில் தங்களின் வாரிசுகளை மருத்துவப் பயிற்சியோ, கல்வியோ, அளிக்க இயலாமல் வாடுகின்றனர். அவர்களின் வாரிசுகளுக்குக் கண்டிப்பாகச் சலுகைகளும், கல்லூரியில் இடஒதுக்கீடும் செய்தருளல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் குடும்பத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ள பல அரிய கருவூலங்கள் வெளிவர ஏதுவாகும். சிதைவுறாமலும், கறையான் அரிக்காத பல ஏட்டுச் சுவடிகளும் வெளிவர இயலும்.

சித்த மருத்துவக் கல்லூரிகள் தொடங்கு முன்னரே சித்த மருத்துவம் தமிழகத்திலே வளர்ந்து வாழ்வு பெற்று வந்துள்ளது என்ற உண்மையையாரும் மறுக்க இயலாது. குறிப்பாகச் சொல்லப்போனால் பாட்டி மருத்துவம், அஞ்சாரப் பெட்டி மருத்துவம், என்ற பெயர்களால் வழங்கப் பெற்றுப் பல பிணிகளைப் போக்கியுள்ளன. இவ்வாறு செய்யலாகாது எனச்சட்டம் போட்டுத் தடுத்துவிட முடியாது. உணவே மருந்து, மருந்தே உணவு என்ற பழமொழி வேறு மருத்துவத்திலும் கிடையாது.

இவ்வாறான அருமையும் பெருமையும் மிகு சித்த மருத்துவத்தை வளர்ப்பது அரசுடைய கடமை மட்டும் அன்று, மக்களின் கடமையும் ஆகும்.

வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்பது போல, வீட்டுக்கொரு மூலிகைத் தோட்டம் அமைப்போம், என்று மக்கள் முன்வர அரசும், பொதுநல நிறுவனங்களும் ஆர்வம் காட்ட வேண்டும்.

மக்களுக்குக் கீரை வகைகள் முதல் மூலிகைகள் வகை ஈறாக, கொடி முதல் மரம் வரை கற்பித்து மூலிகைகளின் அருங்குணங்களை அறியச் செய்ய வேண்டும். இதில் ஆண், பெண், பாலகர் ஆகியோரும் பங்கு பெறலாம்.

காலி இடங்களில் குறிப்பாக வீட்டைச் சுற்றியுள்ள இடங்களில் மூலிகைப் பயிர் வளர்க்க ஒரு துறையை அரசு நியமிக்கலாம். அதில் பயனுள்ள மூலிகை வகைகளை வளர்க்கச் செய்யலாம். சிறந்த பட்டதாரி மருத்துவர்களையும், நாட்டு மருத்துவர்களையும் இப்பணியில் ஈடுபடச் செய்யலாம். நம் தேவைகளுக்குப் போக வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து இலாபம் ஈட்டலாம். அதனால் மக்களுக்கு அதில் ஆர்வமும் ஈடுபாடும் ஏற்படும்.

எல்லாப் பட்டதாரி மாணவர்களும், மேற்படிப்புப் பட்டதாரி மாணவர்களும் குறைந்தது ஒவ்வொருவரும் ஏறத்தாழ 500 மூலிகை வகைகளையும் குணங்களையும் அதனதன் செய்கைகளையும் அறந்து வைத்திருக்கச் செய்தல் வேண்டும், வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது.

பாடாண சரக்குகளைக் கையாண்டு பிணி தீர்க்கும் முறைகளைப் போதிக்க வேண்டும்.

பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு வெறும் தேர்வு முறை மட்டும் போதாது என்பது என் கருத்து. படிக்கும் ஆண்டுகள் குறைவு. அவர்கள் கற்றுத் தெரிந்து கொள்ளுவது ஏராளம். எனவே போதிய மருத்துவ ஞானம் அடைந்த பின்னரே அவர்களை வெளியேற்றுவது உசிதம் என நினைக்கிறேன்.

எல்லாப் பயிற்சி மாணவர்களும் மருந்து செய்யும் முறைகளைத் தெரிந்து கொண்டு பூரண பக்குவம் அடைந்தபிறகு தம் சுய தொழிலையே செய்ய உறுதி மொழி பெறப்பட வேண்டும்.

பட்டம் தான் தங்களின் குறிக்கோள் என்றும், நாம் எந்த மருத்துவ முறையையும் கையாளலாம் என்ற தவறான எண்ணத்தைப் போக்கவும், சித்தர்களுடைய சாபத்திற்கு ஆளாகாவண்ணமும் அவர்கள் திட சங்கல்பம் கொண்டு உழைத்து, சித்த மருத்துவத்தின் சிறப்பை வெளி உலகம் அறியச் செய்ய வேண்டும்.

ஒழுக்கம், பண்பு, உண்மை ஆகியவற்றில் உயர்ந்து நின்று அவையே தமது குறிக்கோள் என ஒவ்வொரு சித்த

வைத்தியரும் மாணவரும் சங்கல்பம் செய்து சித்த மருத்துவம் வளர, வாழப் பாடுபட முழு மனதுடன் ஒத்துழைப்புத் தந்து, தானும் மக்களும் , நாடும் வாழ இறைவனை வேண்டிக்கொள்வோமாக!

சித்த மருத்துவம் கற்போரும், மற்றோரும் இறைப்பற்றும், நுண்ணறிவும், மன உறுதியும், மனத் தூய்மையும், இருவினையொப்பும், பேரறிவும், தன்னடக்கம், அன்பும், அறமும், தெருட்பண்பும், வீரத்துவமும், பெற்று இலங்குதல் வேண்டும்.

புகைபிடித்தல், போதை மருந்துகளுக்கு அடிமையாகுதல், காம உணர்வுகள் ஆகியவற்றிற்கு அடிமையாகாத மருத்துவர்களால் உலகம் உய்யும்.

சித்த மருத்துவர்கள் நாடி நடை அறிந்து நேய் இன்னதெனப் பகுத்து அதற்கேற்றாற் போல மருந்துகளைக் கொடுத்து நோய் தீர்க்கும் பண்பாளர்கல்.

எனவே, நாடி பார்த்து நோயைக் கணிக்கும் முறை, ஒவ்வொரு சித்த மருத்துவ மாணவர்களும் அறிந்திருத்தல் வேண்டும். அதற்குரிய ஆசான்களைக் கொண்டு நாடி பயிலக் கற்பிக்க வேண்டும்.

மருத்துவர்களுக்கு நியாயமான **விலையில்** நயகமான பாடாணச் சரக்குகளும், இதர சம்பைச் சரக்குகளும் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

பல நூல்களிலிருந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்பித்துவிட்டு (M. D.) பட்ட மேற்படிப்புப்

பட்டம்பெற்றால் மட்டும் பொருத்தமானதாகாது. செய்முறை விளக்கங்களும் அதன் விளைவுகளும், உடற்பிணிக்கு எவ்வாரு ஊறு செய்யாது உதவுகிறது என்ற விளக்கத்திஜநயும் உறுதி செய்தல் வேண்டும்.

இவ்வாறெல்லாம் ஒத்துழைப்புத் தந்தால் சித்த மருத்துவம் சீர்பெற்று வளரும் என்பதில் ஜயமில்லை. வாழ்க சித்தர் புகழ்! வளர்க சித்த மருத்துவம்!!.

தாதுக்கள் ஓர் அறிவியல் ஆய்வு

மரு. ஐ. சொர்ண மாரியம்மாள், எம்.டி. (சித்தா)
உதவிவிரிவுரையாளர்
அரசினர்சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நில மென்னும் நல்லாள் நகும்

எனத் தன்னிடம் ஒரு செல்வமும் இல்லை என்பாரைக் கண்டால் நிலமகள் தன்னுள் சிரிப்பாள் எனத் திருவள்ளுவர் கூறுகிறார். நிலமகள் தன்னுள் பொதிந்து வைத்திருக்கும் செல்வங்களை அவர் உணர்ந்து எழுதியிருக்கின்றார். அத்தகைய எண்ணிலடங்காச் செல்வங்களுள் தாதுச் செல்வங்களும் ஒன்று. மற்றைய செல்வங்களைப் போலன்றி இச்செல்வங்கள் குறிப்பிட்ட காலங்களிலன்றிப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் இயற்கையின் சீற்றத்தாலும், ஆற்றலாலும், உருவானவை ஆகும். தற்போது இத்தாதுக்களின் பயன்கள் எண்ணிலடங்கா. எத்துறையை எடுத்துக்கொண்டாலும் கனிமப் பொருட்களின் பங்கு விரிந்து கொண்டே செல்கின்றது. இந்தியாவில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் கனிமங்களின் பயன்கள் பலவாறாகப் பல துறைகளில் பெருகியுள்ளன என நூல்கள் கூறுகின்றன. இந்திய நாட்டில் எல்லாவகைத் தாதுக்களும் அதிக அளவில் உண்டு என்றும், நம் நாடு சுதந்திரம் பெற்ற பின்னரே தாதுக்களைக் கண்டறியும் வேலையும், அகழ்ந்தெடுக்கும் வேலையும் பன்முகப் படுத்தப்பட்டு விரைவு படுத்தப்பட்டதாகவும் அதற்கு முன்பாகச் சிலக் குறிப்பட்ட தாதுக்கள் மட்டுமே பெறப்பட்டு வந்ததாயும் நூல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

ஆனால் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னரே இத்தாதுக்கள் பற்றிச் சித்தர் பெருமக்கள் அறிந்திருந்தனர். சித்த மருத்துவத்தின் காலம் மிகத் தொன்மையானது, என்பதற்கு இதுவே மிகப்பெரிய ஆதாரமாகும். எவ்வாறெனில் தற்போது இந்தியாவில் எரிமலைகள் கிடையா. ஆனால் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பாக எரிமலைகள் இருந்ததாகவும், அவற்றின் உள்ளடங்கிய தாதுக்கள் வெளிப்பட்டு உலர்ந்து மலையின் வெளிப்பகுதி கடினப்பட்டுவிட்டதாகவும் நூல்களில் மலையின் வரலாறு கூறப்பட்டுள்ளது. ஆனால் தாதுச் சரக்குகளின் இயல்பை விவரிக்கும் சித்தர்கள்.

மலையிறுகித் தாதுவாச்சே என்றும்
மலை வெதும்பி புழுக்கமாகி என்றும்
மலைபற்றி எரியும் போது
அடர்ந்த மலை வெந்துருகித் தாது தானாய்
போச்சே தான் பூமிக்குள் விழுந்து

என்றும் கூறியுள்ளதிலிருந்து சித்த மருத்துவத்தின் பழமையும், மருத்துவத்தில் மேற்படி தாதுக்களின் மருத்துவப் பயன்களையும் அன்றே நமக்கு அளித்துச் சென்ற சித்தர் பெருமக்களின் அரிய செயலையும் நாம் உணர முடிகிறது.

தாதுக்கள், உற்பவத்தானங்கள் எனக் குறிப்பிடுகையில் பாரதத்தில் வடக்கிலும் தெற்கிலுமாக 22 மலைகளைக் குறிப்பிட்டு இவற்றுடன் குட்டி மலை கோடி உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இத்தாதுக்கள் என்பது பல்லாயிரம் ஆண்டுகள் பலவகைப்பட்ட ஊக்கிகளினால் (நீர், வெப்பம், கற்குழம்பு, வாயுக்கள் மற்றும் பல) மலைகளிலடங்கியுள்ள வேதியியற் பொருட்களின் சேர்க்கையாலும், இயக்கத்தாலும் தோன்றுகின்றன. ஆக இந்தத் தாதுக்கள் அனைத்தும் இயற்கை வேதியியல் முறையில் நமக்குக் கிடைக்கும் அரிய வேதியியல் பொருட்களாகும்.

இத்தாதுக்களில் அநேகம் வகைகளைத் தற்காலத்தில் கணக்கிட்டிருந்தாலும் மருத்துவத்திற்கு எனச் சித்தர்கள் சொல்லிப் போந்தது 220 எண்ணிக்கையாகும். இவை உலோகம், உபரசம், பாடாணம், காரசாரம் என 4 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இந்நால் வகைப் பிரிவுகளில் இயற்கைச் சரக்காகக் கொள்ளப்படுவது 169 (உலோகம்-8, பாடாணம்-32, காரசாரம்-10, உபரசம்-119) ஆகும். இந்த இயற்கைச் சரக்குகளைக் கொண்டுதான் நால்வகைப் பிரிவுகளிலும் சொல்லப்பட்டுள்ள மற்றைய 51 வகை செயற்கைச் சரக்குகளைச் செய்ய முடியும்.

மூலிகை இனங்களைப் போல் பல ஆயிரக்கணக்கிலன்றி, மிகச் சொற்பமான எண்ணிக்கையில் தான் தாதுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும் ஒரு சித்த மருத்துவரால் இந்த 200 சரக்குகளையும் இனங்கண்டு கொள்ள முடியாது என்பது வெள்ளிடைமலை. காலப்போக்கில் சித்த மருத்துவ நூல்களில் கூறியுள்ள தாதுக்கள் புறக்கணிக்கப்பட்டு, அவற்றிற்கு மாறாக ஆங்கில மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்ட இரசாயனப் பொருட்கள் புகுத்தப்பட்டு,இது இந்நாள் வரையும் பயன்படுத்தப்பட்டு வருவதால், உண்மைச் சரக்கு பற்றிய குறிப்புகள் மறைந்து போனதுமின்றி, அவற்றின் உண்மைப் பலனையும் நாம் அடைய முடியாமல் போய் விட்டது. நவீன இரசாயனச் சரக்கினைச் சித்த மருத்துவச் செயல் முறைப்படி மருந்தாக முடிந்து விட்டால் மட்டும் அது சித்த மருந்துகள் ஆகிவிட முடியாது. எனவே விருட்சமாக வளர்ந்து இருக்கின்ற இம்முறையை மாற்றி, சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டுள்ள சரக்குகளை இனங்கண்டு அவற்றால் மட்டுமே மருந்துகள் தயாரித்து வழங்கினால்தான் சித்த மருத்துவத் துறையின் உண்மையான மேன்மை நிலை விளங்கும். அங்ஙனமாயின் மேற்படி 220 சரக்குகளையும் இனங்கண்டு தெளிவுபடுத்த வேண்டிய ஒரு மாபெரும் கட்டாய நிலைமை சித்த மருத்துவத் துறையின் மிகப் பெரிய கடமையாக உள்ளது.

அவ்வாறாயின் நூல்களில் கூறியுள்ளவாறு சரக்குகளை இனங்கண்டு கொள்வது சாத்தியமா என ஆராயப்புகின் சாத்தியமே என்றுதான் கூறமுடியும். இதன் ஆராய்ச்சியில் கனிவளத்துறை பெரும்பங்கு வகிக்கின்றது.

கனிவளத்துறையில் பலதரப்பட்ட தாதுக்கள் கண்டு பிடிக்கப்பட்டு ஒவ்வொன்றின் மாதிரிகளும், இரசாயணக் கூறுகளும் திட்டவட்டமாகக் கூறப்பட்டு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

ஒரு தாதுவை அரியப்படுவதற்குஅத்துறையினர் முக்கியமாக எடுத்துக் கொள்வது அத்தாதின் நான்கு கூறுகள் எனலாம்.

1. உருவப் பண்பியில் - Morphological Characters
2. இயற்பண்பியல் - Physical Properties
3. வேதியல் பண்பியல் - Chemical Properties
4. ஒளியியல் பண்பியல் - Optical Characters

சித்த மருத்துவ நூல்களில் ஒவ்வொரு சரக்குகட்கும் வேதியல் பண்பைத் தவிர மற்றைய மூன்று வகைப் பண்புகளும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

தற்காலத்தில் சித்த மருத்துவத்தில் வழக்கத்திலிருக்கின்ற சில தாதுப் பொருட்களைக் கனிவளத் துறையினருடன் ஒப்பு நோக்கியதில் அத்துறையிலும் மேற்படி தாதுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது அறியப்பட்டது. அதன் அடிப்படையில் வழக்கிலில்லாத சில சரக்குகளும் ஒப்பு நோக்கப்பட்டு ஆராயப்பட்டன.

கனிவளத்துறையில் தாதுக்கள், உலோகக் கனிமங்கள், அலோகக் கனிமங்கள் என இருபெரும் பிரிவாகப் பிரிக்கப் பட்டுள்ளன. உலோகக் கனிமங்கள் என்பதில் உலோகங்களும் அதன் தொடர்புடைய அலோகங்களும் அலோகம் என்பதில் நவமணிகள், உப்புகள், கல்நார், அப்பிரகம் மற்றும் பல

சித்த மருத்துவ தாதுச் சரக்குகளில் உபரசத்தின் கீழ்க் குறிப்பிட்டுள்ள சில உயிர்ப்பிராணிகளினின்று பெறும் பொருட்களைத் (என்பு, கத்தூரி மான்கொம்பு இன்னும் பல) தவிர்த்து மற்றைய தாதுக்கள் அனைத்தும் மேற்கண்ட இருபெரும் பிரிவுகட்குள் அடங்கிவிடும். ஆதலால் நம் சரக்குகளை இனங்கண்டு கொள்வது எளிதாகிறது. இதில் முதலாவதாக மனோசிலை எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனோசிலை தோற்றத்தில் போகர் 7000ம் 3ம் ஆயிரத்தில்

உற்பத்தி மனோசிலையில் மூன்றேயுண்டு
உருட்சியான செயமாங்கி என்பதொன்று
நற்பத்திரதாங்கி என்பதொன்று
நலமான பீதவர்ணி யென்ப மூன்றாம்

இதில் செயமாங்கி - பச்சை நிறத்தில் செந்நிறம் கூடியதாம்.

பத்திரதாங்கி-நல்ல சிவப்பு நிறத்திலும்
பீதவர்ணி-என்பதால் மஞ்சள் நிறத்திலும் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

மனோசிலை எனக் கனிவளத்துறையில் (Arsenic Stone) என்ற தலைப்பில் வைக்கப்பட்டுள்ளது.

இரசாயனப் பெயர்	- Arsenic Sulphide
Orange Red	- Ass Sulphur 29.9
	- Arsenic 70.1
Yellow	- AS2S3 Sulphur 39.0
	- Arsenic 61.0

இரண்டாவதாக உபரசங்கள் 120ல் 119வதாகக் கூறப்படும் சாத்திரபேதி என்ற சரக்கின் இலட்சணத்தைக் கூறுங்கால்

மலைகளிலே ரவியின் காந்தி
திறமாகப் பட்புடவே சாத்திரபேதி
அந்தியுமே அடுக்கடுக்காய்ப் பின்னந்தானாய்
அழுத்தமாகக் காவிநிறம் சிவப்புமாகி
... ... கனமாகத்தானிருக்கும்

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதே சரக்கு இன்றும் கடைகளில் கிடைக்கின்றன.

மேற்படி இலட்சணங்கள் உடைய சரக்கினைக் கனிவளத்துறையில் ஒப்பு நோக்கி அறியப்பட்டது. நூற்களில் கூறியுள்ளதே வழக்கில் இருக்கின்றது என்றும் அச்சரக்கும் கனிவளத்துறையில் அறியப்பட்ட சரக்கும் ஒன்றே என்றும் அறியப்பட்டது.

இச்சரக்கு கனிவளத்துறையில் Farroginous Shale என்று அழைக்கப்படுகிறது.

இதன் இரசாயனக் கலவை Iron +Aluminium + Silica

மூன்றாவதாக, சிலாசத்து இருவகை என்றும் வண்ணங்கள் 5 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

செப்புதுங்காண் கற்பூர சிலாசத்தென்றும்
தியானித்த கோமூத்திர சிலாசத்தென்றும்

பண்டென்ற சிலாசத்து வண்ணங்கேளு
மாரமாகக் கம்பியான வெளுப்புமாகும்

குண்டென்ற கோமூத்திர சிலாசத்துக்
கோமூத்திர நிறமாகக் கட்டியாகும்

கண்டென்ற கனகத்தில் பிறந்த சிலாசத்து
கனத்த செம்பரத்தம்பூ நிறத்ததாமே

நிறமான வெள்ளியுட சிலாசத்துதானும்
நிசமாக மயில் வயிற்றின் வெண்மை போலாம்

அறமான அழுக்கடைந்து கட்டியாகும்
அதிக தாம்பிரந்தன்னிலுற்பவித்த
திறமான சிலாசத்து சொல்லக்கேளு
சிறுநீல வண்ணக் கட்டியாகும்
போகர் 7000, 3ம் ஆயிரம், பக்கம் 101, 102

என்று கூறிப் பின்னடிகளில் அவற்றின் சிறப்புகளைக் கூறுகிறார்.

Gypsum

Colour-Usually White, grey, flesh red, Ochen yellow, blue

classification: 1 Fibrous
2. Massive

Fibrous - Coarse or fine, pearly opalescence

Massive (Alabaster) Delicately shaded, impure with clay Calcium Carbonate and silica

Gypsum - Com

Sulphur trioxide	46.6
Lime	32.5
water	20.9

chemical Name: Hydrous Calcium Sulphate

Sym:- CaSol 4 H_{20} (Text Book of Minerology P. 753)

அடுத்ததாகக் கல்நாரின் இருவகைச் சித்தர் நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

கல்நாரின் பிறப்பைக் கேளு
சாற்றவேதான் ரெண்டுவிதம் பச்சைவெண்மை

இரண்டினிலே வெள்ளையது முதற்றாந்தான்
ஈறான பச்சையது ரெண்டாம் பட்சம்

கனிவளத்துறையிலும் இருவகைதான் குறிப்பிடப் பட்டுள்ளது. இச்சரக்கு Actionotics எனும் உபதலைப்பின் கீழ் Serpentine என்னும் பிரிவை உடையது

இரசாயளக் கலவை - Magnesium Slicate H4Mg3Si2O9
Slica 44.1 Magnesis 43.0 Water 12.9

மேலும் இச்சரக்கில் Ferousiron காணப்பட்டால் அது பச்சை நிறமடையும் என்று கூறப்பட்டுள்ளது. ஆகவே பச்சைக் கல்நார் என்பது Magnesium Silicate ferrous iron எனக் கூறப்பட்டுள்ளது.

இது போன்று தற்போது வழக்கில் உள்ள உலோகங்கள் நவமணிகள். அப்பிரகம் போன்ற சரக்குகளே கனிவளத் துறையிலும் அறியப்படுவதை ஆதாரமாகக் கொண்டு சித்த மருத்துவ நூல்களில் கூறப்பட்டு வழக்கில் இல்லாத சரக்குகளை மேற்படித்துறையினரின் ஒத்துழைப்புடன் ஒப்பு நோக்கப்பட்டதில் சிலவகைச் சரக்குகள் அறியப்பட்டன.

சித்த மருத்துவத்தில் பாடாணம் 32 என்பதில் நச்சுச் செய்கை உடைய பொருட்கள் அனைத்தும் பாடாணமாகக் கொள்ளப்படுகின்றன. அவை நச்சுத்தன்மை உடைய இரசாயணக் கலவை உடையதாக மட்டுமின்றி, இயல்பு மாறா

நிலை நஞ்சாகவும் இருக்கலாம் என்பதற்குக் கற்பாடாணம் என்று கூறப்பட்டுள்ள சரக்கு சிறந்த உவமையாகும்.

இச்சரக்கைப் பற்றி விவரிக்கையில்

பூர்த்திட்ட கல்லாகி நஞ்சேயாச்சு
பேரான மலை தோறும் உண்டு பாரே.

என்று மட்டும் தான் கூறப்பட்டுள்ளது. இதை விளக்கப்புகின் கல்லில் பூத்து அல்லது பூப்பது போலாகி நஞ்சாகியது என்று தான் கொள்ள முடியும். அதுவும் பேரான மலைதோறும் அதாவது பெரிய மலை தோறும் காணப்படும் என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். இச்சரக்கைப் பற்றிய ஆய்வு நடத்தியதில் இமாலயபர்வதம் மற்றும் அதனைச் சார்ந்த இடங்களில் கற்களில் பூக்கள் போல் தோற்றமுண்டாகி அக்கல் முற்றிலும் நஞ்சாகி விடுகிறது. எவ்வாறெனின் பூத்திருக்கின்ற பாகத்தைத் தவிர்த்து மற்றைய பகுதி மிக மென்மையாக உள்ளது. அதைத் தொட்டால் சிறு அணுக்கள் கூடத் தோலைத் துளைத்து குருதியில் கலந்துவிடும் தன்மை உடையது என்றும் கூறப்பட்டுள்ளது. இது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இவை Zeolites என்ற பிரிவின் கீழ் கூறப்படுகிறது.

இரசாயணக் கலவை Silica of Aluminium with sodium and Calcium chiefly.

இரசாயனக் கலவை வீதம் A12O3: CaO + NA2O = 1:1

அன்னபேதி

சித்த மருத்துவ நூற்களில் அன்னபேதி என்ற சரக்கைக் குறிப்பிடுங்கால் பேதையான அன்னமென்ற பேதிதானும்

.....
.....மலைச்சவுடு என்று பேரு
பங்கான மூன்றுவித வண்ணமாகும்
காதையான காசீச மென்று பேரு
கருப்பு மஞ்சள் வெள்ளை நிறமாகுங்காணே

என்று போகர் 7000, 3ஆம் ஆயிரத்தில் 231ஆம் பக்கம் கூறப்பட்டுள்ளது.

இது ஒரு பிறவிச்சரக்கு. இதன் வைப்பு முறைகள் மற்றைய நூற்களின் கூறப்படவில்லை. ஆனால் தற்போது சித்த மருத்துவத்தில் பயன்படுத்துவது தற்காலத்தில் கடைகளில் விற்கின்ற இரசாயனப் பொருள் ferrous sulphate ஆகும்.

மேற்படி இரசாயனக் கலவையைக் கொண்டும், போகர் 7000ல் கூறியுள்ள அடையாளங்களைக் கொண்டும், ஒப்பிட்டுப் பார்த்ததில் ferrous sulphate என்ற ஒரு சரக்கு அறியப்பட்டது. நூல்களில் கூறியுள்ளவாறு கருப்பு, வெண்மை, மஞ்சள் நிறத்துடன் இது காணப்படுகிறது. இதைப்பற்றிய ஆய்வு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒப்பு நோக்கப்பட்டு ஆய்விலிருக்கின்ற சிலவகைச் சரக்குகளைப் பற்றிய குறிப்புகள் நேரடியாகச் சமர்ப்பிக்கப் பட்டுச் சரக்குகள் பார்வைக்கும் வைக்கப்படும்.

முடிவுரை

இவ்வாறாக ஒப்பு நோக்கப்பட்ட சரக்குகளை மீண்டும் ஆராய்ந்து அவற்றை உறுதி செய்வதுடன் இதுபோல் மற்றைய அனைத்துச் சரக்குகளையும் கனிவளத்துறையுடன் இணைந்து

ஆராய்ந்து வெளிப்படுத்துவது சித்த மருத்துவத் துறையின் தலையாய கடமையாகும். அப்பொழுதுதான் சித்த மருத்துவத்தின் உண்மை நிலை விளங்கும். மூலிகையினங்களில் எவ்வாறு போலிச்சரக்குகள் ஊடுருவிப் பயன்படுத்தப் பட்டு வருகின்றனவோ அதுபோல் தாதுக்களிலும் போலிச் சரக்குகள் ஊடுருவி இதுகாறும் வந்துகொண்டு இருக்கின்றன. மூலிகையைப் போல் இந்த வகை ஊடுருவலை நாம் சாதாரணமாக எண்ணி விடக்கூடாது. முடியாது. ஏனெனில் ஓர் இரசாயனப் பொருளுக்குப் பிரிதொரு ரசாயனப் பொருள் சேர்க்க இயலாது. அவ்வாறு மாறுபாட்டால் இதன் இயல்பே மாறுபட்டு விடும். ஆதலால்தான் இவ்வரிய இயற்கை இரசாயனப் பொருட்களின் தன்மை அறிவதும், அறிந்து அவற்றைச் சேர்த்து மருந்து முடிப்பதும் ஒரு வேதியல் முறை என்பதால் தான் வாதத்தைத் தெளிவாக அறிய வேண்டும் என்பதாக, வாதம் விட்டால் வைத்தியம் போச்சு என்று நம் நூல்களில் பல இடங்களில் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றார்கள்.

மேலும் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் இரசாயனப் பொருட்கள் உண்மைச் சரக்கினோடு ஒப்பு நோக்கப்பட்டு உண்மைச் சரக்கிற்குப் பதிலாக இவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்கான ஆதாரம் எதுவும் நூல்களில் காணப்படவில்லை. இது வழி வழியாக வந்து கொண்டிருக்கின்ற மாற்றமாகும். உண்மைச் சரக்குகளை அறிய முடியாத காலத்தில் இவ்வூடுருவல் ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் தற்போது கனிவளத்துறை விரிவுபடுத்தப்பட்டு அநேக வகை இரசாயனப் பொருட்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் சித்த மருத்துவத்துறை செய்வது கனிவளத்துறை வெளிப் படுத்தியிருக்கிற ரசாயனப் பொருட்களினின்று நம் சரக்குகளைத் தேர்ந்து எடுத்துக் கொள்வதுதான்.

இங்ஙனம் நூல்களில் சொல்லியிருக்கின்ற அனைத்துத் தாதுக்களையும் இனங்கண்டு அவற்றைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய பேரேடும், அனைத்து சரக்குகளடங்கிய அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டால் மாணவர்கள் எந்நேரத்திலும் சரக்குகளைப் பற்றி அறிந்து கொள்ள ஏதுவாகும்.

இவ்வகையான குறிப்புகள் அனைத்தும் பாடத்திட்டமாக உருவாக்கப் பட்டால் அநேக ஆராய்ச்சிகளும், ஆராய்ச்சியாளர்களும் தோன்ற வழிவகுக்கும் என்று கூறி அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுச் சித்த மருத்துவத்தின் மேன்மை நிலையை நாட்ட வேண்டும் எனவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதாரநூல்கள்

1. போகர் 7000 2, 3ம் பகுதிகள்
2. குணபாடம் தாது சீவ வகுப்பு
3. The Text Book of Minerology Vth edition
4. உலகத்தின் கன்மவளங்கள்
5. The Wealth of India

சித்த மருத்துவமும் வளர்ச்சிக்கான வழிமுறைகளும்

மருத்துவர் ஏ.டி. அரசு, எம்.ஏ., பி.எச்.டி.,
சோதி சித்த மருத்துவ ஆய்வு மையம்
மஞ்சநாயக்கனூர், கம்பாலப்பட்டி
பொள்ளாச்சி (வட்டம்), கோவை மாவட்டம்.

சித்த மருத்துவம், தமிழகத்திற்கே உரிய தன்னிகரற்ற மருத்துவம், காயகல்பம், நாடி பார்த்து நோயறிதல், பாடாணங்களைச் சுத்தி செய்து மருந்தாகப் பயன்படுத்துதல் போன்ற சிறப்பு சான்றுகளால் சித்த மருத்துவம் மற்ற மருத்துவ முறைகளிலிருந்து வேறுபடுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உருவாக்கப்பட்ட இம்முறை முற்றிலும் விஞ்ஞான அடிப்படையிலானது. இன்று நவீன மருத்துவம் வகுத்துள்ள பலமருத்துவ அணுகுமுறைகள் அன்றே சித்தர்களால் வகுக்கப்பட்டுள்ளதைக் கண்டு வெளிநாட்டார் வியப்பில் ஆழ்கின்றனர்.

தற்போது புகழ்பெற்றுள்ள ஆங்கில மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத பல நோய்களைச் சித்த மருத்துவம் வேரொடு களைகிறது. அதே சமயம் பின் விளைவுகளற்றது என்பது அவர்களே ஒத்துக்கொண்ட உண்மை. தற்சமயம் உருசியா, சப்பான், சீனா, செருமனி, தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகள் சித்த மருத்துவத்தைத் தங்கள் நாட்டில் பரப்பி வருகின்றன. நமது மூலிகைகள் விளைகின்றதா? அல்லது பண்புகளில் ஒத்த மூலிகைகள் கிடைக்கின்றனவா? என்று தேடிக் கொண்டுள்ளனர்.

உணவே மருந்து, மருந்தே உணவு என்ற சித்த மருத்துவத்தின் உரிய தத்துவத்தை இன்று மேலைநாடுகள் ஒத்துக்கொண்டு அதன் அடிப்படையில் சிகிச்சைகளை மேற்கொண்டு வருகின்றன. நமது நாட்டில் தோன்றிய புத்தமதம் இங்கு தழைக்கவில்லை. அதைப் போலத் தமிழகத்தில் தோன்றிய சித்த மருத்துவம் வளர்ச்சி பெறாதது வருந்தத் தக்கது. இருந்தாலும் தற்போது அரசு அதன் வளர்ச்சிக்கு ஓரளவு பெருமுயற்சி செய்வது சற்று ஆறுதலைத் தருகிறது. ஆனாலும் அதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளவைகளைத் தகர்த்தெறிந்து ஆக்கப்பணிகளை மேற்கொண்டால் சித்த மருத்துவம் வளர்ச்சி பெறும்.

சித்த மருத்துவ வளர்ச்சிக்கான வழிமுறைகள்: விளம்பர முக்கியம்

சித்த மருத்துவம் இயற்கையில் கிடைக்கும் மூலிகைகளை அடிப்படையாகக் கொண்டது. மூலிகைகளில் நோய் நீக்கும் மருந்துப் பொருட்களுடன் தாது உப்புக்கள், வைட்டமின்கள் போன்றவைகளும் கலந்திருப்பதால் பின் விளைவுகள் ஏற்படுவதே இல்லை. எனவே சித்தர்களின் சித்த மருத்துவ நெறி முறைகள், மூலிகைகளின் அடையாளம், அதன் பயன்கள் பற்றியெல்லாம் மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அதற்குக் கலைநிகழ்ச்சிகள், பத்திரிகைகள் வானொலி தொலைக்காட்சி போன்ற விளம்பரச் சாதனங்களைப் பயன்படுத்தலாம்.

பொது அமைப்புகளைப் பயன்படுத்துதல்:

இல்லந்தோறும் பெண்கள் சமையலில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். நோய் வருவதும் விலகுவதும் உணவு முறைகளாலேயே என்பதைத் தாய்மார்களுக்கு விளக்கவேண்டும். சித்த மருத்துவ அடிப்படை அறிவை

அவர்களுக்கு ஊட்ட வேண்டும். சுக்கு, மிளகு, சீரகம், பெருங்காயம் போன்ற கடைச் சரக்குகளைப் பயன்படுத்துவதைப் போல மூலிகைகளையும் உணவுத் தயாரிப்பில் பயன்படுத்தச் செய்ய வேண்டும். நோய்த்தடுப்பு முறையிலான பழக்கவழக்கங்களை அவர்கள் மூலம் எளிதில் ஒவ்வொரு குடும்பத்திலும் புகுத்தலாம். அதற்குப்பொது அமைப்புகளான மாதர் சங்கம் மற்றும் சமூக சேவை மையங்கள் முன்வர வேண்டும்.

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பைப் பேணுதல்:

வளர்ந்து வரும் நாடுகளில் தொழில்புரட்சி வேகமாக நடைபெற்று வருகிறது. அதனால் தொழிற்சாலைகள் பெருகி வருகின்றன. அவைகளிலிருந்து வெளியேறும் நச்சுக்காற்று நச்சுக் கழிவுப் பொருட்கள் ஆகியவை சுற்றுப்புறச் சூழலைக் கெடுத்துவிடுகின்றன. வேளாண்மையில் சக்தி வாய்ந்த பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவதுடன் உணவுப் பொருட்களும் நச்சுத்தன்மை அடைவதைத் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. மூலிகைகளின் இயற்கைத் தன்மை வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. இத்தகைய பாதிப்புகளைக் களைய அரசு தேவையான மாற்று ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும்.

நுகர்பொருள்களில் மூலிகைச் சாரங்களை ஊடுருவச் செய்தல்

தென்கொரியாவின் ஜின்செங்கு மூலிகை உலகப் புகழ் பெற்றது. கொரியர்கள் உடல் நலத்தின் கமுக்கங்களில் ஒன்று அவர்கள் ஜின்செங்கு பயன்படுத்துவதே! அவர்கள் அதன் சாரத்தை உணவுப் பொருட்களிலும் மற்றும் தேநீர் குளிர் பானங்கள் தின்பண்டங்களில் கூடக் கலந்து

உண்ணுகின்றனர். எல்லாத் தரப்பு நுகர்வோரும் இம்மூலிகையை அறிந்தும், அறியாமலும் பயன்படுத்தி வருகின்றனர். எனவே அவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி உண்டாக்கப்பட்டு உடல் நலத்துடன் வாழ்கின்றனர்.

அதைப்போல நமது நாட்டிலும் அமுக்குரா (அசுவகந்தா) போன்ற மூலிகைகளின் சாரத்தை நுகர் பொருட்களில் கலந்து உற்பத்தி செய்ய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

கல்வித்துறை மூலமாக அறிவுறுத்தல்:

சீனாவில் அவர்களது நாட்டுப்புற மருத்துவத்திற்குத்தான் முதலிடம் தருகின்றனர். அதில் ஒரு நோய்க்குக் குணம் கிடைக்கவில்லையென்றால்தான் மாற்று மருத்துவ முறைகளை நாடுகின்றனர். இத்தகைய சுதேசிப்பற்றை நாமும் வளர்த்தாக வேண்டும். இதைத் தொடக்கக் கல்வியிலேயே புகுத்த வேண்டும். பொருளாதார வசதியின்மையால் பல கல்வியாளர்கள் ஆராய்ச்சி அறிவு இருந்தும் சித்த மருத்துவ ஆய்வைத் தொடர முடியாமல் உள்ளனர். அவர்களைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இனம் கண்டு பயன்படுத்திக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். அதற்குச் சித்த மருத்துவத்துறையை ஓமியோபதி துறையிலிருந்து தனிமைப் படுத்தித் தனியாக இயக்குநரை நியமித்துச் செயல்படச் செய்ய வேண்டும்.

மருந்தியல் ஆய்வு நெறிகளை விரிவாக்குதல்:

மருந்துப் பொருட்களைக் கொண்டு மருந்துகளை உருவாக்கும்போது ஒவ்வொரு மருந்துப் பொருளும் வியாதியை விரட்ட எவ்வாறு வினைபுரிகிறது என்ற அளவில் செய்முறைகள் விஞ்ஞான அடிப்படையில் அமைக்கப்பட

வேண்டும். அப்போதுதான் சித்த மருத்துவம் ஒரு மாபெரும் விஞ்ஞானம் என்பதை மற்றவர்கள் ஒத்துக்கொண்டு கடைப்பிடிப்பர். சித்த மருத்துவத்தில் பல அதிசய மூலிகைகள் உண்டு. அவற்றில் சிலவற்றிற்கு இன்னும் அடையாளமே சரியாகத் தெரியாத நிலை உள்ளது. அதற்கு வைத்திய அகராதிகளில் சொல்லப்பட்ட மூலிகை பரிபாசைகளைத் தொகுத்து அதன் புற அமைப்பு, காரணப் பெயர் மற்றும் சிறப்புகளைக் கொண்டு மூலிகைகளைச் சரியாக அடையாளம் காணலாம். இத்தகைய அணுகு முறைகள் ஆய்வில் மேற்கொள்ளப்படவேண்டும்.

பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தல்:

தாமே மருந்து தயாரித்துப் பயன்படுத்தும் பரம்பரை மருத்துவர்கள் பழங்கதை பேசியே காலத்தை வீணாக்குகின்றனர். மருத்துவக் கழுக்கங்களை வெளியிடாமல் மறைத்து வருகின்றனர். இத்தகைய காரணங்களால் சித்தமருத்துவப் பட்டதாரிகளுக்கும் அவர்களுக்கும் இடைவெளி அதிகமாக உள்ளது. இவர்கள் இடையே கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அரசு சித்த மருத்துவ வளர்ச்சிக்குப் பல உத்திகளைக் கையாள வேண்டும்.

மேற்கூறிய காரணங்களைக் கருத்தில் கொண்டு செயலாற்றினால் சித்த மருத்துவம் வளர்ச்சி பெற்று உலகளாவிய மருத்துவமாகத் திகழும்.

அம்மை நோய்க்கு அரிய மருந்துகள்

டாக்டர். வீ. ராமலிங்கம் - அம்மாப்பேட்டை.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ் என்பார் அறிஞர்கள். அவ்வாறே தமிழ் வைத்தியமும் தோன்றிற்று எனலாம். நமது தமிழ் வைத்தியத்தை உலகிற்கு வழங்கி மக்கள் நலம் பெற ஆசி தந்து நம்மை நோயின்றி நலம்பெற அருள் புரிந்தோர்கள் சித்தர் பெருமக்கள். வைகூரிக்கு என்று தனிநூல் செய்துள்ளார். அருள் மிகு அகத்திய மாமுனிவர், அம்மைக்கு மருந்துண்டோ? என்று கேட்கும் வைத்திய உலகிற்கு இதோ மருந்து என்று அருள்புரிந்துள்ளார். இதில் வரும், மருந்துகள் அனைத்தும் எங்கள் குடும்பத்தில் நெடுநாட்களாகக் கையாண்டு வெற்றி கண்டவை ஆகும். அம்மை ஒரு தொற்றுநோய். இது எளிதில் பரவும் நோய்களில் ஒன்றாகும். இதை ஆங்கில முறையில் பரவாமல் தடுக்க அம்மை குத்தும் முறையுள்ளது.

அம்மையில் 14 வகையுள்ளதாக வைத்திய நூல்கள் கூறுகின்றன. இவற்றுள் நம்நாட்டில் பெரியம்மை, சிறியம்மை, தட்டம்மை, புட்டாளம்மை, பனைமுகரி என்பவையே மக்களைப் பாதிக்கின்றன.

அம்மை தோன்றும் நிலை

பூமியில் எழும் வெப்பமானது உடலைத் தாக்கி, உடலில் வெப்பத்தை அதிகப்படுத்தி, மூலத்திலும் மூளையிலும், எலும்பிலும் கொதிப்பேறி, மனநிலையைக்

கெடுத்து, அறிவை மயக்கியும், உடலில் அனலை (பித்தம்) அதிக அளவில் எழச் செய்தும் மனநிலை, அறிவு ஆகியவற்றைத் தன்னிலையிலிருந்து கெடுத்துத் தாதுக்களில் அதிக வெப்பத்தை உண்டாக்கி, அவ்வெப்பமானது உடலைத் தாக்கும் போது எலும்புகளுக்கு உள்ளிருக்கும் கொழுப்பைக் கொதிப்படையச் செய்து அக்கொழுப்பை எலும்பை ஊடுருவிப் பாய்ந்து கபத்தை அதிகப்படுத்தி வெளியில் விசிறி நீர்க் கொப்பளங்களைப் பிறப்பித்துச் சீழ் கொள்ளச் செய்து அம்மை என்ற தனது உருவை வெளிப்படுத்துகின்றது.

இந்நோய்க்கு குருநோய், மாரி, வைசூரி எனப்பல பெயர்கள் சொல்லப்படுகின்றன.

அம்மை நோயின் அறிகுறி (பொது)

இந்நோயில் திடீரெனச் சுரம்காயும், மேலும், உடல்வலி, தலைவலி, இடுப்புவலி, தலைக்கனம், உடம்பெல்லால் எரிதல், கண்சிவத்தல், தும்மல், வாந்தி, மூக்கில் நீர் வடிதல், மலம் தடைப்படல் முதலிய அறிகுறிகளைத் தோற்றுவித்துப் பிறகு அம்மை வடு உண்டாகும்.

அம்மையின் வகையும் அறிகுறியும்

1. பனைமுகரி: காய்ச்சல் மிதமாய்க் காய்ந்து உடல் கருக்கும், கண் சிவக்கும், கண்டம் வீங்கும், பெரும்பாடு, பிதற்றல், சன்னி தோன்றும்.

2. பாலம்மை: அகோரமாய்க் காய்ச்சலடித்து மூன்று நாளில் சிரசிற்குருத்தோன்றி உடம்பு சுடுக்கும். 7ஆம் நாளில் நீர் கோர்த்து 9ஆம் நாளில் இறங்கும். 15ஆம் நாளில் ஆரோக்கியம் ஏற்படும். தலைக்கு ஊற்றலாம்.

3. **வரகுதிரி:** காய்ச்சல் அதிகமாய்க் காய்ந்து 3ஆம் நாளில் சிரசிற் குருத்தோன்றும். வாயால் இரத்தம் விழும். 7ஆம் நாளில் நீர் கட்டியாகி 11ஆம் நாளில் இறங்கும். நீர்த்தாரையில் இரத்தம் காணும்.

4. **கொள்ளம்மை:** காய்ச்சல், பிதற்றல், சன்னி, வலிப்புத்தோன்றி 3ஆம் நாளில் சிரசிற்குத் தோன்றி 13ஆம் நாளில் இறங்கும்.

5. **கல்லுதிரி அம்மை:** அதி காய்ச்சல், பேதி, வாந்தி கண்டு 3ஆம் நாளில் சிரசிற் குருத்தோன்றி 7ஆம் நாளில் சங்கங்கனி போல் நீர்க்கட்டி 11ஆம் நாளில் நீங்கும். 10ஆம் நாள் தலைக்கு ஊற்றலாம்.

6. **கடுகம்மை:** காய்ச்சலடித்த 3ஆம் நாளில் சிரசிற் கடுகு போல் குருத்தோன்றி உடல் எல்லாம் அதிகமாய் வீக்கம் ஏற்படும். மன்னை கட்டும். குரல் கம்மும் பேதி காணும்.

7. **மெழுக்கண் அம்மை:** காய்ச்சல் மட்டாய் காயும். தேகமெல்லாம் கடுக்கும். இருப்பு விளங்காது. சரீரம் வீங்கும். புலம்பல் உண்டாகும். 7ஆம் நாளில் குருத்தோன்றும். மருந்தளித்தால் குணமேற்படும்.

8. **உப்புத்திரியம்மை:** காய்ச்சல் கண்டு மூன்றாம் நாளில் சிரசிற் குருத்தோன்றி உடம்பெல்லாம் உப்புப் போலிருக்கும். 5ஆம் நாளில் நீர்கட்டி 7ஆம் நாளில் இறங்கும்.11ஆம் நாளில் தலைக்கு ஊற்றி மருந்து அளிக்கலாம்.

9. **கரும்பனசையம்மை:** காய்ச்சலடித்து 4ஆம் நாளில் சிரசில் குருத்தோன்றும். உடல் எல்லாம் குத்தும், கடுக்கும், வைசூரியுள்ளே வாங்கும். பேதி, மூர்ச்சை காணும். மலங்கட்டினால் 13ஆம் நாள் இறங்கும். உடம்பெல்லாம்

விரிந்து இரணமாகிக் கிருமியுண்டாகும். பிரக்கினையற்றுச் சுவாசம் மேல் நோக்கும். 21 நாட்சென்றால் தலைக்கு ஊற்றி மருந்தளிக்க வேண்டும். இந்த அம்மை கண்டவர்கள் பிழைப்பது அரிது என்றும் கூறுவர்.

10. வெந்தய அம்மை: காய்ச்சல் தோன்றிய 3ஆம் நாளில், சிரசிற் குருத்தோன்றி 7ஆம் நாளில் நீர்கட்டி 9 ஆம் நாளில் இறங்கும். 15ஆம் நாளில் தலைக்கு ஊற்றலாம்.

11. பாசிப்பயற்றம்மை: காய்ச்சலும் பிதற்றலும் உண்டாகி, 3ஆம் நாளில் சிரசிற் குருதோன்றி நீர்கட்டி 16ஆம் நாளில் இறங்கும். 17ஆம் நாளில் தலைக்கட்டு சரீரம் பலக்க நீர் மோரன்னங் கொள்ளவும்.

12. விச்சிரிப்பு அம்மை: (உமியம்மை) சுரம் காயும். கண் சிவக்கும், வாந்தி, பேதி காணும். 3ஆம் நாளில் சிரசிற் தோன்றித் தேகமெல்லாம் உமிபோல் வாரியிட்டு மறையும். 7ஆம் நாளில் தலைக்கிட வயிற்றுளைவு காணும்.

13. நீர்க்குளுவான் அம்மை: சுரம் காய்ந்து 3ஆம்நாளில் சங்கங்கனி போற்றோன்றி 7ஆம் நாளில் இறங்கும். 8ஆம் நாளில் தலைக்கு ஊற்றிவிடவும். தேகத்தை குளிரச் செய்யவும் வேண்டும்.

14. தவளை அம்மை: காய்ச்சல் கண்டு நடக்க வொட்டாது. சூலையைப்போல் வலி காணும். ஊண் உறக்கமிராது. 3ஆம் நாளில் சிரசிற் குருத்தோன்றி 6ஆம் நாளில் இறங்கும். 11ஆம் நாளில் தலைக்கு விடவும்.

வைசூரிவாராதிருக்க உள்ளுக்கு மருந்துகள்

அ.மான் கொம்பு பற்பம் தேனில் அல்லது பாலில் உள்ளுக்குக் கொடுக்கத் தடுப்பு மருந்தாகவும் பயன்படுகிறது.

அது அம்மை வேகம் உள்ள போதும் நன்கு வேலை செய்கிறது. அம்மையை நீக்குவதில் மான் கொம்பு பற்பம் தலை சிறந்த மருந்தாகும்.

ஆ. வெள்ளைக் குங்கிலியத்தை அவுரியிலைச் சாற்றால் நான்கு சாமம் அரைத்துச், சிறு சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து, நிழலில் உலர்த்தி அதில் ஓர் உருண்டையை வெந்நீரில் கொடுத்தாலும் அல்லது மருந்தை வைசூரி கண்டபின்பு கொடுத்தாலும் நல்ல குணம் ஏற்படும். அம்மை மாத்திரையை உள்ளுக்கு அளித்தால் அடுத்த முத்து விழாது.

இ. தாழம்பூ ஒன்று வாங்கி அதன் மடலை மட்டும் எடுத்துப் புகையிலை நறுக்குவது போல் மெல்லியதாய் நறுக்கி, ஒரு பீங்கான் அல்லது கண்ணாடிப் பாத்திரத்தில் போட்டு அது மூழ்கத் தேன் ஊற்றி வெய்யிலில் வைத்து வரவும். இந்தத் தேனைக் காலை மாலை ஒரு கரண்டியளவு அருந்தி வரக்குணம். இதைத் தடுப்பு மருந்தாகவும் பயன்படுத்த அம்மை வருவதில்லை.

ஈ. தாழம்பூ அத்தர் வாங்கிக் காய்ச்சிய பசும்பாலில் இரண்டு மூன்று சொட்டிட்டுக் காலை மாலை அருந்த அம்மை உடலில் பூப்பதில்லை.

உ. தாழை விழுதின் நுனிச்சோறு ஒரு பிடி நற்சீரகம் ஒரு சிறங்கை, பெருஞ்சீரகம் ஒரு சிறங்கை, இவற்றை நன்கு நசுக்கி ஒரு சட்டியிலிட்டு ஒரு சேர் தண்ணீர் விட்டு நான்கில் ஒரு பங்காய்க் காய்ச்சிக் காலை மாலை அருந்த நல்ல குணம்.

ஊ. வேப்பிலைக் கொழுந்தும் அதிமதுரச்சூரணமும் சம அளவு நீர் விட்டுச் சிறிது தண்ணீர் விட்டு நன்கு அரைத்துப் பட்டாணிப் பிரமாணம் மாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்தி

அம்மை கண்டவர்களுக்குத் தினம் 3 வேளை கொடுத்து வர அம்மையின் வெம்மையும் பூரிப்பும் அடங்கும். வேப்பிலை அம்மை கண்டவர்களிடத்தில் போட்டு வைக்க நோய் வன்மை பெறாது.

எ. அம்மை கண்டு இறங்கு முகமாயிருந்து தலைக்கு ஊற்ற வேண்டிய காலத்தில், தலைக்கு ஊற்ற உள்ள நீரில் வேப்பிலையை உருவிப்போட்டு அத்தண்ணீர் சூரிய வெப்பத்தில் காய்ந்த பிறகு தலைக்கு இறங்குவதால் அம்மைக் கொப்பளம் சுருக்கமடைந்து விரைவில் ஆறும்.

வேப்பிலையின் கழாயத்தைக் கொண்டு கிருமிகள் உண்டான இரணங்களை அலம்புவதினால் தீரும். வேப்பிலையுடன் எள்கூட்டி மெழுகுபோல் அரைத்து மேற்பூசுவதால் அம்மைப்புண் விரைவில் தீரும்.

வைசூரியைக் குணமாக்கு மூலிகைகள்:

நல்லாடாதோடையொடு பேய்ப்பு டலும்
நறுநெய்யும் வேப்பம்வேரிலையும் நெல்லி
சொல்லாநீர் முட்டானுங் கொள்ளு மஞ்சள்
துராயுடனே

மணிப்புங்கும் விபூதி முத்தம்
புல்லாகு மறுகுடனே பெருஞ்செங்குன்றி
பூநிம்பஞ் செருப்படை கற்பூரவல்லி
வல்லாரை, யிலையது அக்கொம்பை மையான்
வைசூரிகளுக் கரமாக வகுத்த தரமே.

இதன் பொருள்:

ஆடாதோயை, பேய்ப்புடல், பசுநெய், வேம்பு வேர், வேம்பு இலை, நெல்லிக்காய், நீர் முட்டான், கொள், மஞ்சள், துராயிலை, மணிப்புங்கு, விபூதி, கோரைக்கிழங்கு,

அறுகம்புல், செங்குன்றி, பூநிம்பம், சிறு செருப்படை, கற்பூரவல்லி, வல்லாரையிலை ஆகிய இவைகள் அம்மை நோயைக் குணப்படுத்தக் கூடியவையாம்.

அம்மையிறங்குகை முறை

அ) மான்கொம்பு, பவளபற்பம், பூங்காவிச் செந்தூரம் போன்ற உடலுக்குக் குளிர்ச்சி தரும் மருந்துகள் பயன் செய்யலாம். எல்லாவற்றிற்கும் மான் கொம்பே சிறப்புடைய மருந்தாகும்.

ஆ. அம்மையை போக்கும் மூலிகைகளின் கஷாயம் கொடுக்கலாம்.

இ) ஒரு புதுமண் தோண்டி அல்லது வாய்குறுகலான புதிய பானையைக் கொண்டு வந்து அதை நன்கு கழுவி, அதற்கு மேலே விபூதிபட்டை மூன்று இடங்களில் விட்டு, பட்டை போட்ட நடுவில் ஒரு நார்த்தங்காய் அளவு மஞ்சளை அரைத்து மூன்று இடங்களில் அப்பவேண்டும். பிறகு புதிய மண்பாத்திரத்தில் சுத்தமான தண்ணீர் ஊற்றி, தண்ணீரில் ஒரு தேங்காய் அளவு அரைத்த மஞ்சளைப் போட்டு நன்கு தண்ணீரில் கரையும்படி செய்து, மண் பாத்திரத்தின் வாயில் கொள்ளும் அளவு வேப்பிலை சொருகி, நோயாளியின் தலைமாட்டில் ஒரு பிரிமனை போட்டு இதில் பாத்திரத்தை வைக்கவும். இவ்வாறு செய்ய உடன் அம்மை வேகம் குறைந்து, இறங்கத் துவங்கும்.

குறிப்பு:

நோயாளி பாத்திரத்தைக் கையால் எட்டித் தள்ள முடியாத அளவு தூரத்தில் வைப்பதோடு, பானை நீர் சிலசமயம் கசிவு ஏற்பட்டு நோயாளியின் படுக்கைக்கு வராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டம்.

அம்மை நோயால் ஏற்படும் விளைவுகள்

அம்மை நோய் உடலில் இருக்கும் போதும் அம்மை இறங்கித் தலைக்குத் தண்ணீர் விட்ட பின்பும், சில கோளாறுகள் ஏற்படுவதுண்டு. அதற்குத் தகுந்த முறையில் பரிகாரங்கள் செய்யப்படாவிட்டால் அசம்பாவிதமாகும். அதற்குத் தகுந்த சிகிச்சை வேவையாகும்.

அம்மை அதிகப்படாதிருக்க

அ) பழந்தோலை (பழைய செருப்பு)ச்சுட்டுக் கருக்கிய சாம்பலில் தேன் விட்டுப் பிசைந்து கழற்சிக்காயளவு கொடுத்து வந்தாலும் அம்மை அதிகப்படாது.

ஆ) மான் கொம்பு பற்பம் கொடுக்கலாம். வெள்ளைக் குங்கிலியத்தை அவுரியிலைச் சாற்றால் அரைத்து கொடுக்கலாம்.

அம்மை உள்ளே இறங்காதிருக்க, எதிர்பாராமல் சில சமயங்களில் அம்மை ரோகக்குறிகள் அதிகம் வெளியில் தோன்றாமலிருக்கலாம். இந்தச் சூழ்நிலையில் அம்மை உடலின் உள்ளேயும் தோலின் உள்ளேயும் எலும்பு நரம்புகளிலும், உணவுப் பாதை மற்றும் உணவு உறுப்புகளிலும், தொண்டை நாளங்களிலும் தாக்கி, வெளிக்குத் தெரியாமல் செய்து விபத்தை உண்டுபண்ணும். இவ்வேளையில் தகுந்த மருந்து அளிக்கப்படாவிட்டால் இயற்கைத் துர்க்குணத்தால், சருமங்களுக்குக் கீழ் அம்மைக் கொப்பளங்கள் உண்டாகி மேல் தோன்றாதிருக்கு மானால் அசாத்தியமாகவே முடியும். எவ்வளவு அம்மையின் கொடூரம் வெளிக்குத் தோன்றுகிறதோ அவ்வளவாலும், உள் இறங்கவில்லை என்று சற்று நம்பலாம். எவ்வாறிருப்பினும் அம்மைநோய் ஆரம்பத்திலேயே காய்ச்சல் அடிக்கும்போதே அம்மைக் காய்ச்சல் என்று தெரிந்து உடனே தக்க

அவுஷதப்பிரயோகங்களினால் உள்ளுக்கிறங்காலிருக்கும் வழியை அறிந்து சிகிச்சை அளித்தல் உயிர்காப்பான் கடமையாகும்.

சிகிச்சை முறைகள்:

அ) தேற்றான் விதை
ஆ) தேற்றான் விதை-ரூபாயெடை ஒன்றரை
கோரைக்கிழங்கு - ரூபாயெடை ஒன்றரை
வேகவைத்த இளநீர் தண்ணீர் ஆறு அவுன்ஸ்

வேகவைத்த இளநீர் தண்ணீரால் அரைத்துக் கலக்கி வடிகட்டி நாள் ஒன்றுக்கு மூன்று வேளை கொடுத்து வந்தால் அம்மை உள்ளுக்கு இறங்காது.

ஆ. சீரகம்-ரூபாயெடை-ஒன்று
வேகவைத்த இளநீர் தண்ணீர் - ஆறு அவுன்ஸ்

ஒன்று சேர்த்து அரைத்துக் கலக்கி வடிகட்டி நாள் ஒன்றுக்கு மூன்று வேளை கொடுத்து வந்தால் அம்மை உள்ளுக்கிறங்காது.

இ. பிராய்மரத்து இலையை ஒரு மண்சட்டியில் போட்டுத் தண்ணீர் விட்டு நன்றாக அலசிக் கொண்டிருந்து பின் அந்தத் தண்ணீர் நான்கு அவுன்ஸ் வீதம் நாள் ஒன்றுக்கு மூன்று வேளை கொடுத்து வருவதினாலும் அம்மை உள்ளுக்கிறங்காது.

இளநீர்க் காயில் மேல் மட்டையை நீக்கிவிட்டு ஓட்டோடு கூடிய இளநீர் தேங்காயைத் தண்ணீரில் போட்டு நன்றாக வேகவைத்த பின் அதனுள் இருக்கம் தண்ணீரை எடுத்துக் கொடுக்கவும்.

மறுமுள் இரணத்திற்கு மேற்பூச்சு மருந்து சிகிச்சை:

அ. சாதிக்காய் ரூபாய் எடை ஒன்றரை
நறுக்கு மூலம்-ஒன்றரை -ரூபாய் எடை
கிராம்பு-ஒன்றரை-ரூபாய் எடை
சீரகம்-ஒன்றரை-ரூபாய் எடை

ஒன்று சேர்த்துப் பொடித்து எட்டு அவுன்ஸ் தண்ணீரில் போட்டு ஓர் அவுன்ஸாகச் சுண்டக்காய்ச்சிய கஷாயம் ஓர் அவுன்ஸ், வெங்காயச்சாறு ஓர் அவுன்ஸ்,

வேப்பிலைச்சாறு ஓர் அவுன்ஸ்

தேன் அரைக்கால் அவுன்ஸ் எல்லாம் ஒன்று சேர்த்து நாள் ஒன்றுக்கு மூன்று வேளை இந்த அளவாகக் கொடுத்து வரவேண்டும்.

மறுமுள் புண்ணில் போட மருந்து

வட்டத் துத்தியிலை ஒரு பிடி

சிற்றாமணக்கெண்ணெய் ஓர் அவுன்ஸ்

கற்பூரம் அரை ரூபாய் எடை எடுத்துக்கொண்டு முதலில் இலையைத் தண்ணீர் உற்றாமல் நன்றாய் அரைத்து அத்துடன் கற்பூரத்தையும் சேர்த்து மறுபடியும் நன்கு அரைத்து எண்ணெயுடன் குழப்பி வெளிப்பிரயோகமாய்ப் புண்களின் மேல் தடவி வரப் புண் உடன் ஆறி உலர்ந்து விடும்.

கண்ணில் அம்மை வராதிருக்க

அம்மைக் காய்ச்சல்தான் என்று தெரிந்தவுடன் ஒருவர் வாயில் வெங்காயத்தைப் போட்டு மென்று அம்மை காய்ச்சலடிப்பவர்களின் கண்களில் காலை மாலை ஊதுவதினால் அம்மைக் கொப்புளங்கள் கண்ணிலுண்டாகாது தடுத்து விடலாம்.

அம்மையில் காய்ச்சலிருந்தால்

அ. எலுமிச்சை வேர்ப்பட்டை ரூபாய் எடை-ஒன்று
சிந்தில் தண்டு-ரூபாய் எடை-ஒன்று
பற்பாடகம்-ரூபாய் எடை ஒன்று
விலாமிச்சை வேர்-ரூபாய் எடை-ஒன்று
ஏலம்-ரூபாய் எடை-ஒன்று
சந்தனம்-ரூபாய் எடை-ஒன்று
கோரைக்கிழங்கு-ரூபாய் எடை-ஒன்று

ஒன்று சேர்த்து இடித்து இருபத்து நான்கு அவுன்ஸ் தண்ணீரில் போட்டு மூன்று அவுன்ஸ் ஆகச் சுண்டக் காய்ச்சிய கஷாயம் காலை மாலை கொடுத்து வரலாம்.

ஆ. வெந்தயம்-ரூபாயெடை-இரண்டு
கோரோஜனை-ரூபாயெடை-இரண்டு

அளவு எடுத்துக் கொண்டு முதலில் வெந்தயத்தை இருபத்து நான்கு அவுன்ஸ் தண்ணீரில் போட்டு அதை முன்று அவுன்சாகச் சுண்டக் காய்ச்சிய கஷாயத்தில் கோரோஜனையை கரைத்து நாள் ஒன்றுக்கு மூன்று வேளை கொடுத்து வர விரைவில் முழுக்குணம் கிட்டும்.

அம்மை கண்டு கண்விழியாது இருந்தால் கண் சிவந்து பண்பட்டிருந்தால்

சீரகத்தை அழுக்கில்லாத ஒரு சுத்தமான வெள்ளைத் துணியில் முடிந்து முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணில் அடிக்கடி ஒற்றடம் கொடுத்துக் கொண்டிருக்க நலம் உண்டாகும்.

இதேபோல் நீர் தாரையில் இரத்தம் வந்தால் ஜன்னி, சீதபேதி, சூலை, கண் குருடு, செவிடு, வாதம் போன்ற பல நோய்கள் உண்டாகும். அப்போது வைகூரி நூலில் கூறியுள்ளவாறு சிகிச்சை செய்ய வேண்டும் என்பதை

நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு நோய்க்கும் எழுதுவதனால் நிறைய பக்கம் பிடிக்கும் என்பதால் குறிப்பாய்ச் சில நோய்க்கு மட்டும் எழுதியுள்ளேன்.

அம்மாபேட்டையில் செல்வன் கணேசன் தலைக்குப் போட்டும் தொடர்ந்தாற்போல் மாதம் இருமுறை தக்காளிப்பழம் போல் தோன்றி, உடலில் எந்த பாகத்திலும்) உடைந்து புண் ஆகி விடுதல் போன்ற நிலை ஏறத்தாழ, ஆறு, ஏழு ஆண்டுகளாகச் சிறுவனை வாட்டி வதைத்து வந்தது.

பலர் என்னைச் சுட்டிக்காட்டி சிகிச்சை பெற அறிவுரை சொன்னார்களாம். பல ஆங்கில மருத்துவரை அணுகிப் பல ரூபாய் செலவிட்டும் பயன் ஏற்படவில்லை என்றும் பையனின் தாயார் கூறினார்கள்.

அதற்குச் செய்த சிகிச்சை விபரம்: மேலுக்கு மருந்து கோவையிலைச்சாறு நல்லெண்ணெய் சமன் சேர்த்து முறைப்படி காய்ச்சி வடித்து மேல் பிரயோகம் செய்தும் மற்றும் கோவையிலையை நெய் விட்டு அரைத்து சாதாரணமாகக் காணும் புண்களுக்கு அம்மையினாலுண்டான ரகங்களுக்கும் மேற்பூசியும் வரக் குணம்.

உள்ளுக்கு மருந்து

மான்கொம்பு பற்பம், சிலாசத்துப் பற்பம் இரண்டும் சம அளவு கலந்து உள்ளுக்குக் கொடுத்துப் பசும்பால் அருந்தச் செய்யக் குணம் முழுக்குணம் ஏற்படவும் முழு மனநிறைவு ஏற்படவும் சித்தர் பெருமக்களும் தெய்வங்களும் அருளினார்கள் என்பது வெள்ளிடைமலை.

பத்தாண்டுகள் பயன்தரும் பதங்க முறைகள்

மருத்துவர். மு.முருகேசன், எம்.டி. (சித்தா)
உதவிவிரிவுரையாளர்
அரசினர்சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை.

காலத்தால் அறுதியிட முடியாத சித்த மருத்துவத்திற்கு மூலவர்க்க சித்தர்கள் தங்களது ஞான சித்தியின் வல்லமைகொண்டு மானிடர்க்குப் பயன்படும் சிறந்த உயர் மருந்துகளாகிய கட்டு, களங்கு, பற்பம், செந்தூரம், பதங்கம் ஆகிய முறைகளைத் தெளிவுபடுத்தி உள்ளனர்.

பதங்க முறைகள் வழக்கில் மிகக் குரைவான அளவே பயன்படுத்தப்படுகின்றன. சிறந்த பதங்க முறைகளைக் கவனமாக, முறையுடன் செய்து நமது மருத்துவமனையில் பயன்படுத்தினால் நாட்பட்ட நோய்களை எளிதில் குணப்படுத்தலாம் என்பதில் ஐயமில்லை. பதங்க முறைகள் இரச வாதத்திற்கும் வீரியமுள்ள நச்சுத்தன்மையற்ற மருந்துகள் செய்வதற்கும் சிறப்பான முறைகளாகும்.

வேர் பாரு தழைபாரு மிஞ்சினக்கால்
மெல்ல மெல்லப் பற்பச் செந்தூரம் பாரே

நோய் தீவிரமடையாக் காலத்தில் மூலிகை சேர்ந்த குடிநீர் மாத்திரை, மணப்பாகு, போன்ற மருந்துகளை வழங்க வேண்டும். நோய் தீவிரமான நிலையில் பற்ப, செந்தூரங்கள் வழங்க வேண்டும் என்பது கருத்து. பதங்கமும் சிறந்த உள்மருந்தாகும் என்பதில் ஐயமில்லை.

மெழுகொடு குழம்பைந்து கோப்பதங்கம் பத்தாம்

(கோ-அரசன், சக்கரவர்த்தி, தலைமை) தலைசிறந்த மருந்தான பதங்கங்கள் பத்தாண்டுகள் ஆயுட்காலம் கொண்டவை.

கற்பூரம், கந்தகம், வீரம், பூரம், சாம்பிராணி முதலிய ஓடும் சரக்குகளைப் பாண்டத்திலிட்டு மூடி எரித்து ஆவியாக மாற்றி படியச் செய்து ஆறிய பின்னர் எடுத்துப் பக்குவப் படுத்துவது பதங்க முறையாகும். பதங்கித்த இரசம், பதங்கித்த கந்தகம் மருந்துகள் தயாரிப்பதற்கு மிகவும் சிறந்தவை.

இரசத்தையாவது, இரசக் கலப்புள்ள மருந்துகளையாவது, மண்சட்டியில் உப்பு, செங்கல் தூள் கலந்து தூவி பதங்கம் செய்யவேண்டிய மருந்துப் பொருளை ஒரு மூசையில் வைத்து உப்பு செங்கல் தூள் மூடிச் சட்டியைக் கவிழ்த்துச் சீலைமண் செய்து அடுப்பேற்றி குறிப்பிட்ட கால அளவு, தீயினளவு எரித்து அடுப்பிலிருந்து இறக்கி ஆறவிட்டு மேற்சட்டியினுள் படிந்திருக்கும் பொருளைப் பத்திரப் படுத்துவது.

பாடாணங்களை இலைச்சாறுகளால் அரைத்து மூசையாகவும், நடுவில் தொளை வைத்த மேல் மூடியாகவும் செய்து அம்மூசைக்குள் இரசம் விட்டு ஒரு மணி சட்டியில் உப்பினைப் பரப்பி அதன் மேல் மூசையை வைத்து மேல் சட்டி மூடி, நாளொன்றுக்கு ஒரு சீலை வீதம் ஏழு சீலை செய்து குறிப்பிட்ட தீஅளவு, கால அளவு எரித்து ஆறியதும் பிரித்து மேற் சட்டியில் பதங்கித்துள்ள மருந்துப் பொருளை மயிர்க்குச்சியினால் சுரண்டிக் காற்றுப்புகாது கீண்ணாடிக் குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்வதாகும்.

மேற்பானை உட்புறத்தில் பதங்கம் ஒட்டக் கூடிய ஊமத்தையிலை, கல்யாண முருக்கிலை, வெற்றிலை,

கோவையிலை, துளசியிலை, குப்பைமேனியிலை, பூவரசு இலை இவற்றில் ஏதாவது ஒன்றின் சாற்றைப்பூசி உலர்த்த வேண்டும்.

சரக்குகளைப் பதங்கித்தல் அதன் சிறப்பான தூய்மையாக்கும் முறைகளில் ஒன்றாகும். பதங்க முறைகளில் எடுக்கப்பட்ட இரசபதங்கம், துத்த பதங்கம், தாமிரப்பதங்கம், வெள்வங்கப் பதங்கம், அயப்பதங்கம், கருவங்கப் பதங்கம், கந்தகப் பதங்கம், படிக்காரப் பதங்கம், போன்றவைகள் வழக்கில் பயன்படுத்தப்படும். பற்ப செந்தூரங்களை விட வீரியமும் நச்சற்ற தன்மையும் உடையதாக இருக்கும். எளிதில் உட்கிரகிக்கக் கூடியதாயும் இருக்கும்.

பருப்பொருட்களைப் (தூலசரக்குகளை) பதங்கிக்கப் பொதுவிதி

பதங்கித்தல் மூன்று வகைப்படும்.

1. பதங்கிக்க வேண்டிய பொருளின் பொடியைப் பாதரசம், உப்புக்கள் படிக்காரங்கள் இவற்றுள் ஏதேனும் ஒன்றுடன்கலந்து காரநீர்விட்டு மைபோல் அரைத்து, பதங்கப் பாண்டத்தில் வைத்துத் தொடக்கத்திலிருந்து இறுதி வரை பெருந்தீயாக எரித்துப் பதங்கத்தை எடுத்து உலர்த்திக் கொள்ள வேண்டும்.

உயிர்ப்பொருள் - பருப்பொருள் - பதங்கித்தல் வேறுபாடு

உயிர்ப்பொருட்களை எளிதில் பதங்கமாக்கலாம். பருப்பொருளைப் பதங்கிக்கப் பலமுறை மடக்கி மடக்கிப் பதங்கிக்க வேண்டும்.

2. (அ) பருப்பொருளை வெள்ளையாகும் வரை தொடர்ந்து பதங்கித்தல்

(ஆ) பருப்பொருளை எரித்துக் கரித்து ஒன்றும் கலக்காமல் பதங்கித்தல்

இவ்விரு வகையாலும் அப்பொருளைத் தூய்மை செய்தலே அதன் கருத்தாகும்.

3. பருப்பொருளைப் பதங்கிக்க நவச்சாரத்தைக் காட்டிலும், பாதரசம் சிறந்தது என்பது கருத்து. ஏனெனில் எந்தப் பொருளாலும் ஒன்றோடொன்று கலந்து பதங்கிப்பது அதிகம் சிறந்ததாகும். இலேசான உயிர்ப்பொருள் பருப்பொருளோடு சேர்த்துப் பதங்கிக்கப்பட்டால் லேசாகவே கலந்து பதங்கிக்கும். கனமான உயிர்ப் பொருளானது பருப்பொருளோடு கலந்து பதங்கிக்கப் பட்டால் கனமாகவே பதங்கிக்கும். இந்தக் காரணத்தால் நவாச்சர்ரத்தைக் காட்டிலும் பாதரசம் பருப்பொருட்களைப் பதங்கிக்க மேலானதென விளங்குகிறது.

கந்தகப் பதங்கம்

நெல்லிக்காய் கந்தகத்தை காரமான காடி சேர்த்துக் கைவிடாமல் 3 நாள் அரைத்து உலர்த்திப் பொடித்துக் கட்டித் தேன் விட்டுக் குழைத்துப் புளிப்பேறிய உடன் பதங்கிக்க வேண்டும். இதனை நெருப்பிலிட புகையாமல் எரிய வேண்டும். புகைந்தால் மறுபடி மடங்கிச் செய்ய வேண்டும்.

இவ்வாறு பதங்கித்த கந்தகத்தைச் சாதாரண கந்தகத்தைப் பயன்படுத்த வேண்டிய மருந்துகளில் பயன்படுத்தச் சிறந்த பலன் கிடைக்கும்.

இரசப் பதங்கம்

280 கிராம் வாலை ரசத்தைக் கல்வத்திலிட்டுச் சுண்ணநீர் விட்டு 3 நாள் அரைத்துப் பின்பு படிக்காரநீர் விட்டு 6 நாள் அரைத்துப் பதங்கப் பாண்டத்தில் போட்டுப் பதங்கிக்க வேண்டும். *(சட்டியினுள் உப்பைக் கொட்டிக் கொள்ள வேண்டும்.)*

இது இரசவாதம் மற்றும் மருத்துவத்தில் சிறந்த முறையில் பயன்படுகிறது. இரசத்திற்குப் பதிலாக இதனைச் சேர்க்கச் சிறப்புடையதாக கருதப்படுகிறது.

இலிங்க ரசம் எடுக்கும் விதம்

சிவப்புச் சித்திரமூலப்பொடி 1 படி எடுத்துப் பாதியைப் பாண்டத்திலிட்டு அதன் மேல் 200 கிராம் இலிங்கத்தைப் பொடித்துப் போட்டு மேற்சட்டி மூடி சீலைமண் செய்து அடுப்பேற்றி சிறுதீயாக 9 மணி நேரம் எரித்து அதனைச் சுரண்டி வடிகட்டி இரசத்தை நிறுத்துப் பார்க்க 125 கிராம் இருக்கும். குறைந்தால் மறுபடியும் மேற்சொன்னபடி செய்ய வேண்டும்.

சாம்பிராணிப் பதங்கம்

பளிங்குச் சாம்பிராணி 35 கிராம் எடுத்துக் கடலையளவு துண்டுகள் செய்து ஒரு கலையத்தில் போட்டு மற்றொரு கலையத்தால் மூடிப் பச்சைப் பயறு மாவினால் சீலை செய்து அதனை நெய் 1 பலம், நல்லெண்ணெய் 1 பலம், சேர்த்து ஊற்றின விளக்கில் எரித்து ஆறியபின் மருந்தை எடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டு மூக்கில் தடவ நீர்க் கோவையும், நெற்றியில் தடவத் தலைவலியும் குணமாகும்.

வழக்கில் பயன்படுத்த வேண்டிய பதங்கமுறைகள்

இலிங்கப்பதங்கம்

30 முதல் 60 மி.கி. வரை பனைவெல்லம், அமுக்கரா இளகம், பஞ்ச தீபாக்கினி இனகத்தில் அனுபானித்துக்கொடுக்க முடக்குவாதம், பக்கவாயு, சன்னிகள், சுரங்கள் தீரும்.

@sh = பூரப்பதங்கம்

150-300 மி.கி. அளவு ஏலக்காய்த்தூள் 1 கிராம் வெண்ணெய் 3 கிராம் சேர்த்து அனுபானித்துக் கொடுக்க நாட்பட்ட கிரந்தி நோய்கள், புண் பிரைகள் தீரும்.

வீரரசப்பதங்கம்

100 முதல் 200 மி.கி. அளவு கரும்புச்சாற்றில் அனுபானித்துக் கொடுக்க வளிநோய்கள், சூலை 18ம் தீரும்.

குருப்பதங்கம்

15 மி.கி. முதல் 30 மி.கி. வரை பனை வெல்லத்தில் அனுபானித்துக் கொடுக்கக் கண்டமாலை, அனுபானித்துத் தீரும்.

காச இரசபதங்கம்

15 மி.கி. முதல் 30 மி. கி. வரை இருவேளை மிளகுத்தூள் 2 கிராம் தேன் 3.5 கிராம் கலந்து அனுபானித்துத் தர சுவாசகாசம், மந்தார காசம் போன்ற காச நோய்கள் தீரும்.

பறங்கிப்பட்டை பதங்கம்

100-200 மி.கி. அளவு இருவேளை 40 நாட்கல் உண்டுவர தோல் நோய்கள், சிரங்கு, கிரந்தி ஆகியன தீரும்.

அப்பிரகப் பதங்கம்

500 மி.கி. அளவு வெல்லத்தில் அனுபானித்துத்தரப் பாண்டு, சோகை, காமாலை, பெருவயிறு ஆகியன தீரும்.

மருத்துவ ஆய்வுக்குப் பயன்படுத்த வேண்டிய பதங்க முறைகள்

குருமுறைப் பதங்கம்

15 மி.கி. முதல் 30 மி.கி. வரை பனைவெல்லம், வெண்ணெய் இலேகிய வகைகளில் அனுபானித்துத்தர பட்சவாதம், கைகால் முடக்கு, சந்துவாதம், நரம்பு வாதம் கணுக்கால் வாதம் ஆகியன தீரும்.

புற்றுப் பதங்கம்

30-60 மி.கி. அளவு 100 மி.லி. பசுவின்பாலில் கலந்து கொடுக்கக் கன்னப்புற்று, மார்புப் புற்று, வாய்ப்புற்று, கால்புற்று, கண்டமாலை, அரையாப்பு ஆகியன தீரும்.

நீலகண்ட இரசபற்பம்

100-200 மி.கி. பறங்கிப்பட்டைத்தூளில் அனுபானித்துக் கொடுக்கக் குட்டம் 8, மேக விரணங்கள் ஆகியன தீரும்.

கட்டுரையைத் தொகுக்கத்துணை நின்ற நூல்கள்

1. டி. வி. சாம்பசிவம் பிள்ளை தமிழ் அகராதி
2. குணபாடம் தாது-ஜீவ வகுப்பு-டாக்டர் ஆர். தியாகராசன்.
3. பாதரசத்தின் சித்த மருந்துகள் செய்முறைக் குறிப்பு நூல்
4. தேரையர் மகா கரிசல்
5. அனுபோக வைத்திய நவநீதம் பாகம் 4, 5, 7, 10
6. தஞ்சை வைத்திய ராஜ சிந்தாமணி இரண்டாம் பாகம்
7. யாகோபு திருவாய் மலர்ந்தருளிய லோகச் செந்தூரம்
8. போகர் - 7000 (முதலாமாயிரம்)
9. இரசவாத சிந்தாமணி

சித்த மருத்துவத்தில் தமிழ் ஆய்வேடுகளின் பங்கு

செல்வி மா. சத்தியபாமா
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
வே.வ.வ. பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

தொன்மையும் சிறப்பும் வாய்ந்த சித்தமருத்துவமுறை தனித்தன்மை உடையது. இது தமிழகத்தில் விரிவாகக் கையாளப்பட்டுவரும் ஒரு மருத்துவமுறை. மக்களுக்குப் பெரிதும் பயன்பட்ட காரணத்தால் சித்த மருத்துவ நூல்கள் ஏராளமாக எழுதப்பட்டன. இத்தகைய நூல்கள் அச்சுக்கலை வந்த நாளிலிருந்து அண்மைக்காலம் வரை அச்சேறியும் வருகின்றன. என்றாலும் சுவடிகளில் இருந்து முழுமையாக நூல்கள் அச்சேறவில்லை. இத்தகைய நூல்கள் யாவை? அவற்றின் ஆசிரியர் யார்? இவை தோன்றிய காலம் யாது முதலான அடிப்படை ஆராய்ச்சிகள் எதுவும் முழுமையாக மேற்கொள்ளப் படவில்லை என்றே கூறலாம்.

சித்த மருத்துவ வளர்ச்சியில் ஓலைச்சுவடிகள்

இன்றைய அறிவியல் உலகில் ஒரு துறையை வரலாற்று அடிப்படையோடும் ஆய்வுக் கண்ணோட்டத்தோடும் காண்பது இன்றியமையாதது. ஆகையால்சித்த மருத்துவத்தை வரலாற்று அடிப்படையிலும் ஆய்வு நோக்கிலும் அணுக வேண்டியது அவசியமாகின்றது.இதற்கு முதல் நிலையாகச் சித்த மருத்துவ நூல்கள் அனைத்தையும் அறிந்து கொள்வது முக்கியமானதாகின்றது. ஓலைச்சுவடிகளில் இருந்து பல நூல்களும் அச்சேறாத நிலையில் மேற்கண்ட நோக்கில் அணுகுதல் இயலாது. ஆகையால் அச்சேறாத சித்த மருத்துவ நூல்கள் பலவும் அச்சில் வரவேண்டும். சுவரை வைத்துச் சித்திரம் எழுத வேண்டும் என்பது போலச் சித்த மருத்துவ நூல்களை வைத்துத்தான் சித்தமருத்துவத் துறையை மேன்மையுறச் செய்ய வேண்டும். ஆகையால் சித்த மருத்துவ

வளர்ச்சிக்கு முதல் படியாக ஓலைச்சுவடியில் உள்ள மருத்துவ நூல்கள் முழுமையும் அச்சேற வேண்டும் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

தமிழ் மருத்துவச் சுவடிகள் கிடைக்குமிடங்கள்

தமிழ் மருத்துவச் சுவடிகள், சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், கேரளக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை உ. வே.சாமிநாதையர் நூலகம், சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை ஆசியவியல் ஆய்வு நிறுவனம், தஞ்சை சரபோஜி மன்னர் சரசுவதி மகால் நூலகம் பாண்டிச்சேரி பிரஞ்சு இந்திய கலைக்கூடம், சென்னை இந்திய மருத்துவ இயக்குநரகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரை தமிழ்ச் சங்கம், விருதுநகர் வே. வ. வன்னியபெருமாள் பெண்கள் கல்லூரி முதலான இடங்களிலும் சுவீடன், இங்கிலாந்து, மேற்கு ஜெர்மனி, அயர்லாந்து, சிங்கப்பூர் போன்ற மேலைநாடுகளிலும் தமிழ் மருத்துவச் சுவடிகள் காணக்கிடைக்கின்றன.

தமிழ் மருத்துவச் சுவடிகளின் புள்ளி விபரம்

1985ல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள, கணிப்பொறிவழி அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடிகள் அட்டவணை நூலில் 39 நூலகங்களிலுள் 21, 973 தமிழ் ஓலைச்சுவடிகளில் 3285 சித்த மருத்துவச் சுவடிகள் உள்ளன என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இவற்றுள்

சித்த மருத்துவம் தொடர்பானவை	2734	ஓலைச்சுவடிகள்
சித்த மருத்துவம் செயல்முறைக் குறிப்பு	269	,,
சித்த மருத்துவம்-சிகிச்சை	80	,,
சித்த மருத்துவம்-நோயறிதல்	75	,,

சித்த மருத்துவம்-விஷம்	66	ஓலைச்சுவடிகள்
சித்த மருத்துவம்-குழந்தை மருத்துவம்	45	,,
சித்த மருத்துவம்-நிகண்டு	7	

இவையன்றி நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் சித்த மருத்துவப் பரம்பரையைச் சார்ந்த சித்த மருத்துவர்களிடம் சித்த மருத்துவச் சுவடிகள் பெருமளவில் காணக் கிடைக்கின்றன. தனியார்களிடம் இருக்கும் சுவடிகள் குறித்து வெளியுலகுக்குத் தெரியாத காரணத்தினால் குடத்திலிட்ட விளக்காக வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றன.

திரு மு. கோ. இராமன் அவர்கள் "உலகில் தமிழ்ச் சுவடிகள்" என்ற கட்டுரையில் கொடுத்துள்ள ஒரு கணக்கெடுப்பின்படி நம் நாட்டிலுள்ள சுவடிகளில் சித்தமருத்துவம் தொடர்பானவை 60 விழுக்காடு எனவும் அச்சில் வராதவை 55 விழுக்காடு எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவச்சுவடி பதிப்புகள்

1712ல் சீகன்பால்கு தரங்கம்பாடியில் அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினார்கள். தொடக்க காலத்தில் கிருத்துவ நூல்கள் மட்டுமே அச்சிடப்பட்டதாலும் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல துறையைச் சார்ந்த சுவடிகளும் சுவடியில் இருந்து பதிப்பிக்கப் பெற்று அச்சேறின.

மெக்கன்சி என்பவருடைய 1783 முதல் 1821 ஆம் ஆண்டு வரையிலான நூல் சேகரிப்பு தொகுப்பில் 10 மருத்துவ நூல்கள் இருப்பதாகக் தெரிகிறது. இதுவே தமிழ் மருத்துவ நூல்கள் 18ஆம் நாற்றாண்டில் இருந்துள்ளன என்பதற்குச் சான்றாகும். தொடக்க கால மருத்துவச்சுவடிப்பதிப்புகளில் பதிப்பித்தோர் விபரம், சுவடி விபரம் போன்றவை குறிப்பிடப்படவில்லை.

அத்தகைய நூல்களில் பாடல்கள் யாப்பின் அடிப்படையில் பிரிக்கப்படாமல் அமைந்திருந்தன. அதன் பின்னர்ப் பல நூல்கள் உரையுடனும் முதல் குறிப்பகராதி மற்றும் பொருளடக்கம் போன்ற குறிப்புகளுடனும் அமைந்தியுள்ளன.

இன்றைக்கு மருத்துவச் சுவடிகளைப் பதிப்பிப்பதில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதிகப் பயன்பாடு உடைய காரணத்தால் மருத்துவச் சுவடிகள் அதிக முக்கியத்துவம் அடைந்துள்ளன. தற்போது சித்த மருத்துவச் சுவடிகள் ஆய்வு நோக்குடன் பதிப்பிக்கப் படுகின்றன. ஒரு சுவடியைப் பிதப்பிக்க அதன் மாற்றுச் சுவடிகளையும், அச்சு நூலாக வந்திருந்தால், அவற்றையும் ஒப்பு நோக்கி, ஆய்வுரை, சொல்லடைவு முதலான இணைப்புக் குறிப்புகளுடன் பதிப்பிக்கப்படுகின்றன.

தமிழில் சித்தமருத்துவ ஆய்வேடுகள்

தற்பொழுது மருத்துவமறிந்தோர் மட்டுமன்றி தமிழ்ச் சான்றோர் பலரின் பார்வையும் சித்த மருத்துவத்தின்பால் சென்றுள்ளது. இந்த ஆர்வத்தின் காரணமாகச் சித்த மருத்துவத்தைத் தங்களின் ஆய்வுக்களமாகக் கொண்டு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். பட்டங் களையும் பட்டயங்களையும் (Diploma) பெற்று வருகின்றனர். கடந்த 15 ஆண்டுகளாகத்தான் இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. இதுவரை கிடைத்த மருத்துவ ஆய்வேட்டுத் தலைப்புகளின் அடிப்படையில் இவற்றை 3 வகையாகப் பிரிக்கலாம். அவை,

1. பொது நிலையில் சித்த மருத்துவம் குறித்துச் செய்யப் படும் ஆய்வு
2. குறிப்பிட்ட சித்தர்களின் நூல்களைக் கொண்டு செய்யப் படும் ஆய்வு

3. சித்த மருத்துவ நூல்களைப் பதிப்பித்து, அதன்வழி மேற்கொள்ளப்படும் ஆய்வு என்பனவாகும்.

1. பொது நிலையில் சித்த மருத்துவம் குறித்துச் செய்யப்படும் ஆய்வு.

இத்தகைய ஆய்வுகளால் பொது நிலையில் மருத்துவம் குறித்த தலைப்புகள் அமையும். மேலும் அவற்றை மையமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதையும் காணலாம். இவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளன எனலாம். இவை யாவும் பிஎச்.டி (Ph.D.,) ஆய்வுகளுக்காகச் செய்யப்பட்டவையாகும்.

"தமிழ் நூல்களின் மருத்துவக்கலை" என்பது க. வேங்கடேசனின் முனைவர் பட்டத்திற்காக 1982ல் அளிக்கப்பட்ட ஆய்வேட்டின் தலைப்பாகும். இந்த ஆய்வேட்டில் தமிழில் உள்ள இலக்கண நூல்களிலும் செவ்வியல் இலக்கியங்களிலும் (Classical Literature) நாட்டுப்புற இலக்கியங்களிலும் (Folk Literature) கூறப்படும் தமிழரின் மருத்துவக் கலையைக் குறித்த சிறப்பானதொரு ஆய்வினை மேற்கொண்டுள்ளார்.

"தமிழ் மருத்துவ முறை (குமரி மாவட்ட கல்குளம், விளவங்கோட்டுப் பகுதிகள்") என்ற தலைப்பில் வீ. பால்ராசு முனைவர் பட்டத்திற்கான ஆய்வினைச் செய்துள்ளார். 1976ஆம் ஆண்டில் செய்யப்பட்டுள்ள இந்த ஆய்வேடு தமிழ் மருத்துவ முறையைக் குறித்துச் செய்யப்பட்ட முதல் ஆய்வேடு என்ற பெருமைக்குரியது. தமிழ் மருத்துவ ஆய்வேடுகளின் முன்னோடி என்றாலும் மிகையாகாது. ஆய்வேடு பார்க்கக் கிடைக்காத காரணத்தினால் ஆய்வேட்டில் கூறப்பட்டுள்ள செய்திகள் குறித்து விரிவாகக் கூற இயலவில்லை.

"மருத்துவச் சுவடிகளின் ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் இரா. மாதவன் முனைவர் பட்டத்திற்கான ஆய்வினைச் செய்துள்ளார். 1981ல் செய்யப்பட்ட இந்தஆய்வில் மருத்துவச் சுவடிகள் குறித்த முழுமையான முறையில் ஆய்வு செய்துள்ளார். ஓலைச் சுவடியில் இருந்து மருத்துவ நூல்களைப் பதிப்பிப்போருக்கு ஒரு தகவல் களஞ்சியமாக இவ்வாய்வேடு அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

இத்தகைய ஆய்வுகள் தமிழ் மருத்துவத்தின் பழமையையும் பெருமையினையும் இலக்கியச் சான்றுகளுடன் விரிவாக எடுத்துக் கூறுவன எனலாம்.

2. குறிப்பிட்ட சித்தர்களின் நூல்களைக் கொண்டு செய்யப்படும் ஆய்வு.

"தேரையர் நூல்கள் ஓர் ஆய்வு" என்ற தலைப்பில் எஸ். மாரிமுத்து முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார். தேரையர் நூல்கள் சித்த மருத்துவ நூல்களில் அனைத்தைக் காட்டிலும் இலக்கியச் சிறப்போடும், செவ்வியல் இலக்கியங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் விளங்கும் தன்மை கொண்டவை. தேரையர் நூல்களைக் குறித்துச் செய்யப்பட்ட இந்த ஆய்வு சித்த மருத்துவ நூல் ஆய்வுகளின் முன்னோடி ஆய்வு என்று துணிந்து கூறலாம்.

இதையன்றிப்"பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள்" என்பது மாடசாமி என்பவரின் எம்பில் ஆய்வுத் தலைப்பாகும். 1980ல் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள் குறித்து ஆய்வு நடத்தியுள்ளார். இவ்வாய்வில் சித்தர்கள் குறித்தும், சித்தர்களில் பாம்பாட்டிச் சித்தர் பெற்றுள்ள இடம் குறித்தும் ஆய்வு செய்துள்ளார். மேலும் பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள், சமயம், தத்துவம், சமூகம் இலக்கியம் முதலான நான்குவகை நோக்கில் ஆய்வு செய்துள்ளார். இலக்கியம் என்ற நிலையில் சித்த மருத்துவ நூல்களைப் பற்றியும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதை

முழுமையானதொரு தமிழ் மருத்துவ ஆய்வேடு என்பதாகக் கூற முடியாவிட்டாலும் தமிழ் மருத்துவம் தொடர்புடைய நூல் என்பது கண்கூடு.

இத்தகைய ஆய்வேடுகள் சித்த மருத்துவ நூல்களின் உயர்வையும், சிறப்பையும் எளிமையையும் பயன் பாட்டையும் எடுத்துக் கூறுவனவாக விளங்குகின்றன.

3. சித்த மருத்துவ நூல்களின் பதிப்பாய்வுகள்

இரண்டாவது பிரிவாகக் கூறப்பட்டுள்ள குறிப்பிட்ட சித்தர்களின் நூல்களைக் கொண்டு செய்யப்பட்ட ஆய்வினின்றும் இவை வேறுபட்டவையாகும். இவை பிறரால் பதிப்பிக்கப்பட்ட நூல்களின் வழிச் செய்யப்பட்ட ஆய்வுகளாகும். சித்த மருத்துவ நூல்களின் பதிப்பாய்வுகள் என்பன ஓலைச்சுவடியினின்றும் சித்த மருத்துவ நூல்களை எழுதிப் பதிப்பித்து, அவற்றை ஆய்வுக்களமாகக் கொண்டு செய்யப்படும் ஆய்வுகளாகும். இத்தகைய ஆய்வுகளே இன்று எண்ணிக்கையில் மிகுதியானவைகளாக விளங்குகின்றன. இத்தகைய பதிப்பாய்வுகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை,

1. பிஎச். டி., பட்டத்திற்காக மேற்கொள்ளப்படும் பதிப்பாய்வுகள்
2. சுவடியியல் பட்டயப் படிப்பிற்காக (Diploma in Manuscriptology) மேற்கொள்ளப்படும் பதிப்பாய்வுகள்.

1. பிஎச். டி. பட்டத்திற்காக மேற்கொள்ளப்படும் பதிப்பாய்வுகள்

பொதுநிலையில் இத்தகைய ஆய்வுகள் அதிகம் என்று கூறப்படினும், பிஎச்.டி. பட்டத்திற்காக மேற்கொள்ளப் படும் பதிப்பாய்வுகள் சிலவே என்பது குறிப்பிடத்தக்கது.

"பிரமமுனி வைத்திய சூத்திரம்" (ஆய்வு. உரை, பதிப்பு) என்ற தலைப்பில் த. கஸ்தூரி, முனைவர் பட்டத்திற்கான ஆய்வேடு ஒன்றினை அளித்துள்ளார். இவ்வாய்வேட்டில் சித்த மருத்துவம் சொற்பொருள் விளக்கம், சித்தர், சித்தர்காலம், சித்தர் நூல்களின் தன்மை சித்த மருத்துவத்தின் சிறப்பு, சித்த மருத்துவத்தின் சிறப்புக் குன்றக் காரணம், சித்த மருத்துவ வளர்ச்சிக்குச் செய்ய வேண்டுவன போன்ற செய்திகளைச் சேகரித்துள்ளார். மேலும் நூலின் ஆசிரியர், ஆசிரியரின் குரு, ஆசிரியரின் காலம், நூலின் அமைப்பு, யாப்பு, மொழி நடை, சிறப்பியல்பு, குறைபாடுகள் போன்றவற்றை ஆய்வு செய்துள்ளார். பாடல்களுக்கு உரையையும், குறிப்புக்களையும் கொடுத்துள்ளார்.

"வர்ம ஒடி முறிவு சர சூத்திரம் - பதிப்பும் ஆய்வும்" என்ற தலைப்பில் ஜேம்ஸ் வேத கமல அருமைராஜ், முனைவர் பட்டத்திற்கான ஆய்வினைச் செய்துள்ளார். 1982ல் கேரளப் பல்கலைக் கழகத்தில் இந்த ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் எலும்பு முறிவு சிகிச்சைத் துறையாகிய வர்மக்கலை பற்றிய பல சுவடிகள் கிடைக்கின்றன. மருத்துவக் குடும்பத்திலிருந்து கிடைத்த வர்ம ஒடி முறிவு சார சூத்திரம் பதிப்பாய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. 1500 பாடல்கள் உள்ள 17ஆம் நாற்றாண்டிற்குப் பின் எழுந்த இந்நூல் எலும்பு முறிவுச் சிகிச்சையைப் பற்றி அரிய செய்திகளையும் 150க்கும் மேற்பட்ட மருந்து வகைகளையும் கூறுகின்றது. உரை, விளக்கவுரை, குறிப்புரை மேலும் பல செய்திகளையும் உடையதால் படிப்பவர்களுக்கு எளிமையானது. தொழில் முறையிலான சொற்களுக்குப் பொருள், மூலிகை, அரிய மருந்துகள் முதலானவை விளக்கப் படங்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

வர்ம அறிவியலின் வரலாற்றை விளக்குகிறது. இம் மருத்துவ முறையை மேற்கொண்டு நடத்திவரும் சுமார் 40 வர்ம ஆசான்களின் விளக்கம் மற்றும் சோதனைகளை, நூலுல் கூறப்பட்டுள்ள செய்திகளோடு ஒப்பாய்வு செய்யப் பட்டுள்ளது. இறுதியாக இந்தச் சிகிச்சை முறை பிற அறிவியல் முறைகளினின்றும் சிறந்தது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக பிஎச். டி ஆய்வுக்கெனச் செய்யப்படும் ஆய்வுகள் விரிவானவையாகும். அந்நூலைக் குறித்த எல்லாவிதமான செய்திகளையும் தன்னகத்தே கொண்டு சித்த மருத்துவ அறிவியல் களஞ்சியங்களாக விளங்குகின்றன.

2. சுவடியியல் பட்டயப் படிப்பிற்காக மேற்கொள்ளப்படும் பதிப்பாய்வுகள்

சென்னை, அடையாற்றில் உள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சுவடிப் பதிப்புக் கலையை ஒரு பாடமாக வைத்து நடத்தி அதன்வழிச் சுவடிப் பதிப்புகளைக் கடந்த பத்தாண்டுகளாக வெளியிட்டு வருகின்றது. சுவடிகளைப் படித்தறியவும், படியெடுக்கவும், பதிப்பிக்கவும் பயிற்சியளித்துச் சுவடியியல் பட்டயம் (Diploma in Manuscriptology) அளித்து வருகின்றது. இப்பத்தாண்டுகளில் பயிற்சி பெற்றோர் பட்டயக் கல்வியை முடிக்க அளித்துள்ள ஆய்வேடுகளில் சித்த மருத்துவம் தொடர்பான ஆய்வேடுகள் பலவாகும். அவற்றின் எண்ணிக்கை 16 ஆகும். இவற்றைக் குறித்த விபரங்கள் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

இங்கு அனைத்து ஆய்வேடுகளின் ஆய்வுச் செய்திகளையும் தொகுத்திணைப்பின் கட்டுரை மிகவும் நீண்டுவிடும். மேலும் எல்லா ஆய்வேடுகளும் கைக்குக் கிடைக்கவில்லை. ஆகையால் கைக்குக் கிடைத்த சில ஆய்வேடுகளைக் குறித்த செய்திகள் கூறப்பட்டுள்ளன.

"**வர்ம சூத்திரம்**" என்ற ஆய்வுத் தலைப்பில் ஜான் செல்வராஜ் ஆய்வு செய்துள்ளார். 1983ல் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வர்மம்-சொல்விளக்கம், மறுபெயர், வழங்கும் இடங்கள், பரவாத காரணம், வர்மத்தின் பிரிவுகள் போன்றவை விளக்கப்பட்டுள்ளன. வடநூலார் கண்ட வர்மானியம் கூறும் வர்மம் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இது தவிர, வர்மசூத்திரம், படுவர்மத் திரட்டு ஆகிய இரண்டுக்குமுள்ள வேறுபாடுகளும் விளக்கப்பட்டுள்ளன. நூலாசிரியரின் குரு, போகர் என்பது சான்று காட்டி நிறுவப்பட்டுள்ளது. வர்மத்தால் ஒடிவு முறிவுகள் ஏற்பட்டால் அதற்குச் சிகிச்சை அளிக்கப்படும் முறைகளையும் கூறுவதோடு ஆய்வேட்டின் இறுதியில் விளக்கப்படமும் அமைந்துள்ளது.

"**தன்வந்திரி குழந்தை வாகடம்**" என்ற தலைப்பில் க. லலிதாம்பாள் ஓர் ஆய்வேட்டை சமர்ப்பித்துள்ளார். இது 1984ல் அளிக்கப்பட்ட ஆய்வேடாகும். இந்த ஆய்வேட்டில் மருத்துவ முறைகளின் வகைப்பாடு, தமிழ் மருத்துவச் சிறப்பு, நூல் தலைப்பு, சொல் விளக்கம், குழந்தை மருத்துவம் போன்ற பல்வேறு சிறு தலைப்புகளில் செய்திகள் கூறப்பட்டுள்ளன. நூலாசிரியரைக் குறித்து ஆய்வு செய்துள்ளதோடு பாடல்களுக்கு எளிமையான உரை ஒன்றையும் கொடுத்துள்ளார். இவையன்றிப் பின்னிணைப்பில் தன்வந்திரியின் நூல்களின் அட்டவணை, நூலுள் கூறப்பட்டுள்ள மூலிகையின் பயன்கள், கடைச்சரக்கின் பயன்கள் போன்றவை உரைநடை வழியாக வும், பாடல்கள் வழியாகவும் கூறப்பட்டுள்ளன.

"**சூதர் வாக்கியம்**" என்ற தலைப்பில் மா. சத்தியபாமா ஓர் ஆய்வேட்டைச் சமர்ப்பித்துள்ளார். 1983ஆம் ஆண்டில் இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வேட்டில் சித்த

மருத்துவத்தின் சிறப்பு, இரசவாதம், அதன் சிறப்பு, வகைப்பாடு, சித்தர் கருத்து, இன்றைய மருத்துவத்தோடு இரசவாதம் கொண்டுள்ள தொடர்பு போன்ற பல செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும் நூலுள்ள பயன்படுத்தப்பட்டுள்ள அடுக்குத் தொடர்கள், உவமை, ஒருபொருட் பன்மொழி போன்ற இலக்கிய நயங்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பனவும், பயன்படுத்தப்பட்டுள்ள வடமொழி, மலையாள மற்றும் வடசொற்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. சூதர் பெயராய்வு, சூதரின் குரு, காலம், சமயம், வாழ்ந்த பகுதி போன்ற பல செய்திகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. நூலுக்கு உரையும் அருஞ் சொற்களுக்குப் பொருளும் கொடுக்கப்பட்டுள்ளன. பின்னிணைப்பில் மூலிகையின் படங்கள் வரையப் பட்டுள்ளன.

"**தேரையர் வைத்தியம் 100**" என்ற தலைப்பில் சு. ஜெயராம் 1985இல் ஆய்வேடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார். இவ்வாய்வேட்டில் தேரையர் பெயர்க்காரணம், தேரையர் பெயர் பற்றிய பிற செய்திகள், தேரையர் புலமை, தேரையர் காலம் போன்ற பல்வேறு செய்திகள் கூறப்பட்டுள்ளன. மேலும் பாடல்களுக்கு எளிய உரை ஒன்றையும் அமைத்துள்ளார்.

இவ்வாறாகப் பல ஆய்வேடுகள் பதிப்பாய்வு செய்யப்பட்டு இன்றைய சித்த மருத்துவ ஆய்வாளர்களுக்குப் பயன்தருபவையாக அமைகின்றன.

சித்த மருத்துவத் தமிழ் ஆய்வேடுகளின் பயன்கள்

1. சித்த மருத்துவ நூல்கள் பலவும் ஓலைச்சுவடிகளில் இருந்து தாளில் ஏறும் நிலை ஏற்படுவதால் எல்லோராலும் எளிதில் கையாள முடியும்.

2. ஆய்வுக் கண்ணோட்டத்துடன் இவ்வாய்வுகளையும் முழுமையாக ஓரிடத்தில் காண முடிகின்றது. சான்றாக வர்ம ஒடி முறிவு சரசாஸ்திரம் ஆய்வேடு வர்மக்கலையைக் குறித்து அனைவரும் அறியும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது விரிவான பல செய்திகளையும் தருகின்றது.

3. சித்த மருத்துவத் தமிழ் ஆய்வு செய்வோர் தமிழறிஞர்களாக இருக்கும் காரணத்தால் சுவடிப்பதிப்பில் ஈடுபடும்போது யாப்பு, சொற்கள் முதலானவற்றில் பிழைகள் எதுவுமின்றி அமைக்க வாய்ப்பாகின்றது.

4. சித்தர்களின் நூல்களாக இருப்பின் அச்சித்தரைக் குறித்த ஆய்வு விரிவாக மேற்கொள்ளப்படுகிறது. ஆசிரியர், ஆசிரியரின் குரு, காலம், சமயம், அவரது பிற நூல்கள், வாழ்ந்த பகுதி போன்ற பல்வேறு செய்திகள் விளக்கப்படுகின்றன. சித்தர்களைப் பற்றி முழுமையான நூல்கள் வெளிவராத நிலையில் சித்தர்களைப் பற்றி அறிய இவ்வாய்வேடுகள் பெரிதும் உதவுகின்றன.

5. தமிழ் மருத்துவக்கலை இலக்கியங்களில் எங்ஙனம் கூறப்பட்டுள்ளன என்பதை அறிய உதவுகின்றன.

6. சித்தர்களின் பல நூல்களையும் ஆய்வு செய்யும் காரணத்தால் சித்தர் இலக்கியங்களின் இலக்கிய நயத்தை அனைவரும் அறிய ஏதுவாகின்றது. சித்த மருத்துவர்களால் மேற்கொள்ளப்படும் பாதிப்புகளால் இத்தகைய இலக்கிய நயங்களை எடுத்துக் காட்டுதல் அரிது.

7. பல்வேறு கண்ணோட்டங்களில் பதிப்புச் செய்தலின் காரணமாக விரிவான எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் பதிப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதனால் குறைந்த கல்வியறிவுள்ளோரும் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது.

இத்தனை நன்மைகளும் இருந்தபோதும் தமிழறிஞர்கள் சித்த மருத்துவ ஆய்வினை மேற்கொள்ளும்போது சில இடர்ப்பாடுகள் தோன்றுவது இயல்பு. சித்த மருத்துவத்தில் கூறப்படுகிற பரிபாஷைகளுக்குத் தமிழறிஞர்கள் பொருளறிதல் கடினம்.

இரா. மாதவன் என்பவருடைய தமிழில் சித்த மருத்துவச் சுவடிகள் (Siddha Medical Manuscripts in Tamil) என்ற நூலில் சித்த மருத்துவச் சுவடிகளின் பெயர்களைக் கூறுமிடத்து

போகர் கற்பம் 200 என்பதை போகர் கர்ப்பம் 200 (ப. 66) என்றும் போகர் கற்பவதி என்பதை போகர் கர்ப்பவதி (ப. 66) என்றும் கொங்கணர் கற்பம் 100 என்பதை கொங்கணர் கர்ப்பம் 100 (ப. 72) என்றும் நூல் முழுதும் இத்தகைய பிழைகளைக் காண முடிகின்றது. தமிழறிஞர்கள் தனித்துச் சித்த மருத்துவ நூல்களைப் பதிப்பிக்கும் போது இது போன்ற தவறுகள் தோன்ற வாய்ப்பேற்படுகின்றது என்பதற்குத் தக்க சான்றாகும்.

சித்த மருத்துவர்கள் தங்களின் அனுபவ அறிவையும் நூல் பதிப்பித்தலின்போது பயன்படுத்த முடியும். அனுபவ அறிவு சிறந்தது என்பது எல்லோராலும் ஒத்துக்கொள்ளக் கூடிய ஒன்று. இருப்பினும் சித்த மருத்துவர்கள் எழுதும் நூல்களில் சித்தர்கள் குறித்த தெளிவான செய்திகள் கிடைப்பதில்லை.

டாக்டர் சே. பிரேமா அவர்களின் சித்த மருத்துவ வளர்ச்சியில் சுவடிப்பதிப்புகள் கட்டுரையில்

சித்த மருத்துவப் பட்டப் படிப்பு பயில்வோருக்கு முதலாண்டு முதல் ஐந்தாண்டுவரை பல்வேறு பாடத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் "தோற்றக் கிரம ஆராய்ச்சியும் மருத்துவ வரலாறும்" எனும் நூலில் சித்தர்கள் சிலரின் வரலாறு கூறப்படுகின்றது. இது முழுமையற்றதாகவும் தெளிவில்லாமலும் அமைந்துள்ளது என்கின்றார்.

தமிழ் ஆய்வாளர்கள் சித்த மருத்துவ நூல்களின் ஆசிரியர்கள் என்ற நிலையிலும் யோகம், ஞானம், தத்துவம் போன்ற பல்வேறு நூல்களின் ஆசிரியர்கள் என்ற நிலையிலும் அவர்கள் வாழ்க்கை வரலாற்றை அறிய முயன்று பல செய்திகளைக் கண்டறிகின்றனர்.

சித்த மருத்துவ வரலாறு இது வரையில் அறுதியிட்டுக் கூறப்படவில்லை. இதற்கு இத்தகைய ஆய்வேடுகள் பெரிதும் உதவக் கூடியன. ஆய்வின் போது அறியலாகும் பல செய்திகள் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு இன்றியமையாதன. சான்றாக

1. அகத்தியர் பன்னிரு காண்டம்
2. போகர் எண்ணாயிரம்
3. கோரக்கர் மூலிகைப்பயன் ஆயிரம்
4. கொங்கணர் மூவாயிரத்து நூறு
5. கோரக்கர் வெண்பா ஏழாயிரம்
6. மச்சமுனி ஏழு காண்டம்
7. காசியபர் வண்ணம்
8. ரோம முனி வாதுகம்
9. ராம தேவர் சந்தப்பா
10. நந்தீச சந்தம்
11. சங்க முனி கலித்துறை
12. திருமூலர் திருமந்திரம் எண்ணாயிரம்
13. பதஞ்சலி ஏழு காண்டம்
14. காலாங்கி நாதர் நடுக் காண்டம்

போன்ற மறைந்து போன நூல்களைக் குறிப்பிட்டுள்ளமையைக் கூறலாம். இவற்றால் சித்த

மருத்துவர் தனித்துச் செய்தாலும், தமிழறிஞர் தனித்துச் செய்தாலும் காணப்படும் இடர்ப்பாடுகளை அறியலாம்.

ஆராய்ச்சி முடிவு:

இதற்கு முன்னர் இருந்தது போலல்லாமல் சித்த மருத்துவச் சுவடிகள் ஆய்வு நோக்கத்துடன் தற்பொழுது பதிக்கப்பட்டுள்ளன. என்றாலும் சித்த மருத்துவர், ஓலைச்சுவடி பயின்றோர், தமிழறிஞர்கள் ஒரு குழுவாக அமைத்து நூல்களைப் பதிப்பிப்பின் முழுமையான பதிப்பாக அமையும். இத்தகைய தரமான பதிப்புகள் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரமாக அமையும். இதனால் சித்த மருத்துவத்தின் சிறப்பை உலகத்தோர் போற்றிப் புகழும்படியாகச் செய்ய முடியும். இம்முயற்சி குடத்திட்ட விளக்காக இருக்கும் சித்த மருத்துவத்தைக் குன்றின் மேலிட்ட விளக்காக ஒளிரச் செய்யும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

சில எண்ணங்கள்

1. நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் பரம்பரை சித்த மருத்துவர்கள் அதிகம். அவர்களிடம் சித்த மருத்துவச் சுவடிகள் அதிகம் உள்ளன. அவற்றைப் பெற முடிந்தவர்களிடம் பெற்று, பெற முடியாதவர்களிடம் இருக்கும் சுவடிகளின் விபர அட்டவணையையாவது தயாரித்து வைப்பது மிகவும் அவசியம். சித்த மருத்துவம் குறித்து ஆய்வு செய்வோருக்கு இவை பெரிதும் உதவுவன. மேலும் சித்த மருத்துவச் சுவடிகளின் எண்ணிக்கையைக் குறித்தும் அறிந்துகொள்ள உதவும்.

2. ஓலைச் சுவடிகளின் அட்டவணையைத் தயாரிக்கத் தமிழ்ப் பல்கலைக்கழகம் கணிப்பொறியைப் பயன்படுத்தி வருகின்றது. இதனால் தெளிவாகவும், விரைவாகவும்

செயலாற்ற முடிவதோடு வேலையும் எளிதாகின்றது. சித்த மருத்துவப் பதிப்பாய்வுகளுக்கு கணிப்பொறியைப் பயன்படுத்தலாம்.

டாக்டர் சே. பிரேமா அவர்களின் **தமிழ் மருத்துவச் சுவடிகள்** என்ற கட்டுரையில் இந்திய மருத்துவத்துறை இயக்குநரகத்தில் உள்ள வாகட வெண்பா (சு. எண். 616) தேரையர் குண வாகட வெண்பா நோயின் சாரம் (சு. எண். 487) அகத்தியர் குணவாகட சித்திர வெண்பா (சு. எண். 38) போகர் வெண்பா (சு. எண். 139) சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள அகத்தியர் சூரிய வாகட வெண்பா (சு. எண். ஆர். 4157) தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் தேரையர் நோயின் சாரம் (சு. எண். 494) என்ற 6 நூல்களிலும் காணப்படுபவை ஒரே செய்திகளே என்று குறிப்பிடுகின்றார். இவையனைத்தும் ஒத்த செய்திகளாக இருப்பினும் முற்றிலும் மாறுபட்ட தலைப்பைக் கொண்டனவாக விளங்குகின்றன. ஓலைச் சுவடிகள் அனைத்தையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிடுவது என்பது இயலாத ஒன்று. ஆகையால் கம்ப்யூட்டரில் புரோகிராம் (programme) ஒன்று அமைத்து அனைத்துச் சித்த மருத்துவப் பாடல்களையும் உள்ளே கொடுத்து (leading) குறிப்பிட்ட பாடலைப் போன்ற ஒத்த பாடல் எந்தெந்த நூல்களில் அமைந்துள்ளது என்ற பதிலை எளிமையாகப் பெற முடியும். இங்ஙனம் காணுவது சுவடிகளைப் பதிப்பிக்கும் ஆய்வாளர்களுக்குப் பெரிதும் துணை செய்வனவாகும்.

சித்த மருத்துவ வளர்ச்சிக்கு ஓலைச்சுவடியில் உள்ள அனைத்து நூல்களும் பதிக்கப் பெறுதல் அவசியம். எனவே, தமிழ் நாட்டில் கிடைக்கக் கூடிய அனைத்து மருத்துவச் சுவடிகளின் நுண்படச் சுருள் (Microfilm) களையும் சேமித்து ஒரே இடத்தில் பாதுகாக்க வேண்டும்.

பயன்பட்ட நூல்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள்

1. கணிப்பொறிவழி அனைத்துலகத் தமிழ் ஓலைச் சுவடிகள் அட்டவணை, செல்லமுத்து கா.செ. (தொகுப்பு), பத்மநாபன், த (தொகுப்பு), நாகராஜன், பா.வெ. (தொகுப்பு) தொகுதி எண். 5, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், 1985 (நூல்)

2. சித்த மருத்துவ வளர்ச்சியில் சுவடிப்பதிப்புகள், பிரேமா, சே. எம்.டி. (சித்தா), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், கட்டுரை.

3. சூதர் வாக்கியம், சத்தியபாமா, மா. (பதிப்பு) உலகத் தமிழாராய்சி நிறுவனம், சென்னை, 1983. (சுவடியியல் ஆய்வேடு)

4. தமிழ் நூல்களில் மருத்துவக்கலை, வேங்கடேசன், க. சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை 1982 (பிஎச். டி. ஆய்வேடு)

5. தமிழ் மருத்துவச் சுவடிகள், பிரேமா, சே. எம்.டி. (சித்தா) , தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், (கட்டுரை)

6. தமிழ் மருத்துவ முறை (குமரி மாவட்டக் கல்குளம், விளவங்கோட்டுப் பகுதிகள்) பால்ராசு, வி, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1976. (பிஎச். டி. ஆய்வேடு)

7. தன்வந்திரி குழந்தை வாகடம், லலிதாம்பிகா, க. (பதிப்பு) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984 (சுவடியியல் ஆய்வேடு)

8. தேரையல் நூல்கள் -ஓர் ஆய்வு, மாரிமுத்து, எஸ், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1983 (பிஎச். டி) ஆய்வேடு.

9. தேரையர் வைத்தியம் - 100 ஜெயராம், சு (பதிப்பு) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.

10. பாம்பாட்டிச் சித்தர் பாடல்கள், மாடசாமி, மதுரை காமராசர் பல்கலைக் கழகம, மதுரை, 1980, (எம்.பில், ஆய்வேடு)

11. பிரமமுனி வைத்திய சூத்திரம் (ஆய்வு, உரை, பதிப்பு) கஸ்தூரி, த, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை 1988, பிஎச். டி. ஆய்வேடு)

12. மருத்துவச் சுவடிகள் - ஓர் ஆய்வு, மாதவன், இரா. சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1981 (பிஎச். டி. ஆய்வேடு)

13. வர்ம ஒடி முறிவு சர சூத்திரம், ஜேம்ஸ் தேவ கமல அருமைராஜ். கேரளப் பல்கலைக் கழகம், திருவனந்தபுரம், 1982, (பிஎச். டி. ஆய்வேடு)

14. வர்ம சூத்திரம், ஜான் செல்வராஜ், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை, 1983. (சுவடியியல் ஆய்வேடு)

15. Siddha Medical Manuscripts in Tamil, Madhavan, V.R. International Institute of Tamil Studies, Madras March 1984 (book)

பின்னிணைப்பு.
சுவடிகள் பட்டயப்படிப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

1. மருத்துவ நூல்கள்

தன்வந்திரி மருத்துவ சிந்தாமணி		
தன்வந்திரி மருத்துவ அகராதி	உலக எழிலரசி	1979-83

2. சூரிய வாகட வெண்பா	வே. விநாயகம்	1982-83
3. சித்தர் வெண்பா	சென்னி சுரேந்திரநாதன்	1982-83
4. சூதர் வாக்கியம்	மா. சத்தியபாமா	1982-83
5. வர்ம சூத்திரம்	ஜான் செல்வராஜ்	1982-83
6. சொக்கநாதர் சூத்திரம்	பா. அருள்செல்வி	1983-84
7. தன்வந்திரி குழந்தை வாகடம்	க. லலிதாம்பிகை	1983-84
8. தேரையர் வைத்தியம்-100	ச. ஜெயராம்	1984-85
9. வைத்திய நூல்	மு. சுப்புலெட்சுமி	1984-85
10. பிரமமுனி வைத்திய சூத்திரம்	இராதா. செயலக்குமி	1984-85
11. அகத்தியர் முப்பு-50	த. ராஜேஸ்வரி	1984-85
12. அகத்தியர் வாதசூத்திரம்-100	கு. சித்ரா	1985-86
13. அகத்தியர் கர்ம சூத்திரம்-150	சி. அம்புஜம்	1985-86
14. அகத்தியர் வாதசூத்திரம்-200	சேது ஆறுமுகம்	1985-86
15. அகத்தியர் வைத்திய சூத்திரம்-300	சி. தேன்மொழி	1986-87
16. சித்த மருத்துவத்தில் நாடி	மோ.கோ. கோவைமணி	1988-89

அயச்செம்பு

ப. செல்லசண்முகம்
முன்றாமாண்டு, அரசினர்சித்த மருத்துவக்கல்லூரி,
பாளையங்கோட்டை.

முன்னுரை

சித்த மருத்துவத்தில் முக்கிய அங்கம் வகிப்பது இரச வாதம் ஆகும். இரசவாதம் என்பது தாழ்ந்த நிலையில் உள்ள மட்டமான உலோகங்களை உயர்ந்த நிலையில் உள்ள உலோகங்களாக மாற்றுவது ஆகும். இவ்விதம் தாழ்ந்த நிலையில் உள்ள உலோகங்கள் உயர்ந்த நிலையை அடையுமானால் வேறு எந்த மருந்தாலும் தீராத உடற்பிணிகள் தீர்ந்து உடலுக்கு வன்மை அளிக்கும் என்பது சித்தர்களின் கருத்து.

சித்தர்கள் இரசவாத வித்தையை ஒரு பிழைப்பிற் காகவோ பொன் போன்ற உலோகங்கள் செய்து மகிழவோ செய்ததாக அவர்கள் நூல்களில் காணப்படவில்லை. மருத்துவம் செய்வதற்காக மட்டும் இரசவாதத்தைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

●

அவ்விதம் வாத முறைப்படி அயத்திலிருந்து பெறப்பட்ட செம்புதான் அயச்செம்பு என வழங்கப் படுகிறது. அயச்செம்பு அயத்தின் மருத்துவ குணங்களையும், செம்பின் மருத்துவ குணங்களையும் பெற்று விளங்குகிறது. இது இரசவாதம் அறிந்தவர்கள் கூறும் மருத்துவமுறை. எனவே மிகச்சிறந்தது என்பது நூலோர் கருத்து.

போகர் வைத்தியம் - 700 என்ற நூலின் அயச்செம்புச் செந்தூரத்தை ஒன்பது வகையான உலோகங்களுடன் சேர்த்தால் பத்தரை மாற்றுப் பொன்னாக மாறும். எனவே இரச வாதத்திற்கும் இது பயனுடையதாய் உள்ளது.

சித்த மருத்துவத்தை முன்னேற்ற முனைந்துள்ள நாம் இரசவாத முறைப்படி சிறந்த உலோகங்களைப் பெற்று வேதியியல் பகுப்பாய்வு (Chemical analysis) மற்றும் மருத்துவப் பரிசோதனை (Clinical trial) செய்து பார்த்து இயற்கையில் கிடைக்கும் உலோகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துச் சிறந்த மருத்துவ குணங்களை உடைய மருந்துகளைப் பெற்று மருத்துவம் செய்ய வேண்டும். தற்போது அயச் செம்பினைப் பற்றிக் காண்போம்.

அயச்செம்பு

அயத்தினை முறைப்படி சுத்தி செய்து, சிலவகையான மூலிகைகளின் சாறு சேர்த்து ஊறவைத்தோ, சில குறிப்பிட்ட தாதுப் பொருட்களைச் சேர்த்தோ, அல்லது சீனப் பொருட்களைச் சேர்த்தோ உருக்கிப் பெறப்பட்ட சத்து அயச் செம்பு எனப்படும்.

அயச்செம்பு செய்யும் முறையினைப் பல்வேறு நூல்களில் பல்வேறு முறைப்படி கூறப்பட்டுள்ளது.

நான் செய்த அயச்செம்பின் செய்முறை:

ஒரு மூசையில் அரைபாகம் வரை கடல் நுரையை இட்டு நன்றாக அமுக்கி அதன்மீது அயத்தை வைத்து மேலும் கடல் நுரையைப் போட்டு நன்றாக அமுக்கி மூசை நன்கு பழுக்கும் மட்டும் இரண்டு துருத்தி கொண்டு ஊதி ஆறவிட வேண்டும். மறுநாள் கடல் நுரையை நீக்கி விட்டு மறுபடியும் மேற்கூறிய முறைப்படி செய்ய வேண்டும். இவ்விதம் 6 முறை செய்ய அயம் செம்பாக மாறும்.

இம்முறையானது ஓலைச்சுவடியில் கூறப்பட்டுள்ள முறை ஆகும். (இந்த அயச் செம்பினைக் கருத்தரங்கில்நேர்முகமாகக் காட்ட உள்ளேன்.)

கடல்நுரை

கடல்நுரை என்பது தற்போது சர்ச்சைக்குரிய ஒன்றாக உள்ளது. கடைகளில் கிடைக்கும் கடல்நுரை என்பது கணவாய் ஓடு ஆகும். உண்மையான கடல்நுரை என்பது கடலின் உள்ளே உள்ள பாரைகளில் கிடைப்பது ஆகும். கடைகளில் கடல்நுரை என்று கிடைக்கும் சரக்கினைக் கொண்டு மேற்சொன்ன முறைப்படி செய்து பார்த்தலில் அயச்செம்பு கிடைக்கவில்லை.

எனவே, கடலின் உள்ளே உள்ள பாறைகளில் படிந்து கிடைக்கும் பொருளே கடல்நுரை ஆகும்.

(கருத்தரங்கில் கடல்நுரையினை நேர்முகமாகக் காட்ட உள்ளேன்.)

1. பதிணென் சித்தர் திருவாய் மலர்ந்த
   வாதக்கோவை.
2. அகத்தியர் பள்ளு - 200
3. போகர் - 700
4. போகர் வைத்தியம் - 700

போன்ற நூல்களில் அயச்செம்பு செய்யும் முறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. மேலும் அவற்றை எவ்வாறு இரச வாதப் பொன்னாக மாற்ற முடியும் என்றும் கூறப்பட்டு உள்ளது. அகத்தியர் பள்ளு-200 நூலில் வங்க அயச்செம்பு மற்றும் இலிங்க அயச்செம்பு என்ற வேறு முறைகளும் கூறப்பட்டுள்ளன.

அயச்செம்பின் பயன்கள்:

இரசவாதம் மற்றும் மருத்துவம் ஆகிய இரண்டிலும் அயச்செம்பு பயன்படத்தக்கதாய் உள்ளது.

போகர் வைத்தியம் 700 என்ற நூலில் அயச்செம்புச் செந்தூரம் செய்முறை கூறப்பட்டுள்ளது. இதனை நாள் ஒன்றிற்கு 488 கிராம் வீதம் உட்கொள்ள உடல் இரும்பைப் போல் வன்மை உடையதாக மாறும். ஆயுள் நீளும். பாண்டு, காமாலை, சோகை, 40 வகை பித்த நோய்களும் நீங்கும்.

மேலும் செம்பினை எவ்விதம் மருத்துவத்தில் பயன்படுத்துகிறோமோ அதனைப் போல அயச்செம்பையும் பயன்படுத்தலாம்.

அயச்செம்பினை இரசவாதப் பொன்னாக மாற்றி மருத்துவத்தில் பயன்படுத்தத் தீராத பிணிகள் தீரும். இவ்விதம் இரசவாத முறைப்படி பெறப்பட்ட உலோகங்களைக் கொண்டு மருத்துவம் செய்தால் நோயும் எளிதில் தீரும். பொருளாதாரச் சிக்கனம் உடையதாகவும் கருதப்படும்.

செம்பில் பொடியுண்டு தேக முரமுண்டு
செம்பின் வடிவுண்டு செய்வதங் கையுண்டு
செம்பின் முடிவெலாந் தெய்வத மாகவோர்
செம்பின் குலந்திகழ் காதின மாகுமே.

எனத் திருமூலர் செம்பின் சிறப்பைக் கூறியுள்ளார்.

தாம்பிரத்தாற் சோரி பித்தஞ் சந்நியகு வைகபம்
வீம்பார்பி லீகமந்தம் வெண்மேகந் - தேம்பழலை
சூதகநோய் புண்கிரந்தி தோடசுவா சங்கிருமி
தாதுநட்டங் கண்ணோய்போம் சாற்று.

என்று செம்பின் குணம் கூறப்பட்டுள்ளது. எனவே செம்பைப் பயன்படுத்துவது போல் அயச்செம்பையும் பற்பம், செந்தூரம் இவைகளாகப் பயன்படுத்தினால் மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

இயற்கையில் கிடைக்கும் செம்பு-அயச்செம்பு ஒப்பிடுதல்

இயற்கையில் கிடைக்கும் செம்பைவிட அயச்செம்பு சிறந்ததாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அயச்செம்பானது வாத முறைப்படி பெறப்பட்டதாகும்.

நவீன விஞ்ஞானக் கருத்துப்படி ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்றினால் மிகச் சக்தி வாய்ந்ததாகச் செயல்படும். இதனைத்தான் நமது சித்தர்கள் தம் நுண்ணறிவால் இரசவாத உலோகங்கள் தீராத உடற் பிணியினைத் தீர்க்கும் அற்புத சக்திவாய்ந்தவை என்று கூறிச் சென்றுள்ளனர். எனவே அயச்செம்பு சிறந்ததாகக் கருதப்படுகிறது.

வேதியியல் அடிப்படையில் அயச்செம்பு:

நவீன விஞ்ஞானக் கருத்தின்படி ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்றுவது என்பது சாத்தியமில்லை. ஆனால் அதன் அணு உட்கருவில் (Nucleus) மாற்றங்கள் செய்து வேறு உலோகமாக மாற்ற இயலும், இது அணுக்கரு உலையில்தான் செய்ய இயலும். அயத்தின் (Iron) அணுவில் (Atom) 26 எதிர்மின் அயனிகளும் (Electrons), 26 நேர்மின் அயனிகளும் (Patrons) 30 Neutron களும் உள்ளன. அயமானது (Iron) செம்பாக (Copper) மாற வேண்டுமானால் 3 Electrons, 3 Patrons & Neutrons ஆகியவை கூட வேண்டும்.

Electronகளை வேண்டுமானால் அதிக சக்தி கொடுத்து மாற்ற முடியும். ஆனால் அணு உட்கருவில் உள்ள Proton & Neutron களை மாற்ற அணுக்கரு உலை வேண்டும். அப்படி அணுக்கரு உலை இன்றி Electron மட்டும் மாறினாலோ அல்லது முழுமையாக வேறு உலோகமாக மாறாவிட்டாலோ, மீண்டும் பழைய உலோகமாக மாறிவிடும் என்பது விஞ்ஞானக் கருத்து.

நம் நூல்களில் அவ்விதம் பழையபடி உலோகங்களாக மாறுவதாகச் சித்தர்கள் கூறவில்லை. எனவே இரசவாத முறைப்படி முழுமையாக மற்றொரு உலோகமாக மாறுவதாகத் தெரிகிறது.

மேலும் இரசவாத முறைப்படிப் பெறப்பட்ட உலோகங்களில் உட்கருவினைச் சோதனைக்கு உட்படுத்தினால் அது முழுமையாக வேறு உலோகமாக மாற்றம் அடைந்து உள்ளதா? என்று தெள்ளத் தெளிவாக அறிய முடியும். இதனை அணுக்கரு உலையில் வைத்துத்தான் சோதனை செய்ய இயலும். இவ்விதம் அணுக்கரு சோதனைக்கு உட்படுத்தி எவ்விதம் மாற்றமடைந்துள்ளது என்பதை அறிவோமானால் சித்த மருத்துவம் வளர்ந்து சிறப்பாக மருத்துவம் செய்ய உதவும் என்பதில் ஐயமில்லை.

நவீன விஞ்ஞானக் கருத்தின்படி ஒரு உலோகத்தின் உட்கருவில் மாற்றம் செய்து வேறொரு உலோகமாக மாற்ற அதிக சக்தி தேவை. அங்ஙனம் மாற்றம் அடைந்த உலோகம் மிகவும் வீரியமுள்ளதாக அமையும்.

இதனை நம் சித்தர்கள் பல்லாண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளனர்.

PROPERTIES OF IRON AND COPPER

		Iron	Copper
Atomic Number	:	26	29
Atomic Weight	:	55.85	63.54
Atomic Radius in A	:	1.26	1.28
Atomic Volume	:	7.1cc	
Proton	:	26	29
Neutron	:	30	35
Electron	:	26	29
Density	:	7.86(gm/cc)	8.96(gm/cc)
Melting Point	:	1536c	1083c
Boiling Point	:	3000c	2595c
Heat of fusion	:	3.67 (k.cal/mole)	3.11(k.cal/mole)
Heat of Vapouraisation	:	84.6(k.cal/mole)	81.0(k.cal/mole)
First Ionisation Energy	:	17.8(k.cal/mole)	18.2(k.cal/mole)

முடிவுரை:

அயச்செம்பு என்றால் என்ன? என்பதைப் பற்றி மட்டுமே இக்கட்டுரையில் கூறியுள்ளேன். இதனைக் கொண்டு மருந்துகள் செய்து வேதியியல் பகுப்பாய்வு (Chemical Analysis) மற்றும் மருத்துவ பரிசோதனை (Clinical Trials) செய்து பார்த்து அதன் முடிவுகள் பற்றி இனி ஆராய்ச்சி செய்து அடுத்து வரும் கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கின்றேன்.

இக்கட்டுரையில் அயச்செம்பு செய்ய இயலும் என்றும், வாத முறைப்படியான அயச்செம்பு ஆதலால் இது சிறப்பான மருத்துவ குணமுடையது என்றும் கூறியுள்ளேன். அதனை நாம் இரசவாதத்திற்காக பயன்படுத்தாமல் மருத்துவத்திற்காகப் பயன்படுத்திச் சிறப்பான மருத்துவப் பயன் அடையவேண்டும்.

இந்த அயச்செம்பினை மேலும் விரிவானதொரு ஆய்வுக்கு உட்படுத்தினோமானால் இன்னும் பல அரிய உண்மைகளைப் பெற இயலும்.

அவ்விதம் பெறப்பட்ட முடிவுகளின் மூலம் சித்த மருத்துவம் வளரும் என்பதில் ஐயமில்லை. மேலும் இரசவாத உலோகங்களைப் பெற்று மருத்துவம் செய்வது சித்த மருத்துவர்களின் கடமையாகும்.

கடல்நுரை, அயச்செம்பு இவைகள் கருத்தரங்கில் நேர்முகமாக காட்ட உள்ளேன். மேலும் கடல் நுரையின் வேதியியல் பகுப்பாய்வையும் (Chemical Analysis) அன்று சமர்ப்பிக்க உள்ளேன்.

இக்கட்டுரையை எழுத உதவிய நூல்கள்:

1. போகர் வைத்தியம்-700
2. போகர் - 700
3. பதினெண் சித்தர் திருவாய் மலர்ந்த வாதக்கோவை
4. அகத்தியர் பள்ளு-200
5. குணபாடம் தாது - சீவ வகுப்பு
6. தோற்றக் கிரம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும்
7. (PRINCIPLES OF INORGANIC CHEMISTRY BY B.R. PURI & L. R. SHARMA)

மேலும் இக்கட்டுரை சிறப்பாக அமைய உதவிய ஆசிரியர்கள்:

மரு. முருகேசன், எம்.டி. (சித்தா)
மரு. சொர்ண மாரியம்மாள் எம்.டி. (சித்தா)
மரு. பூபதிராஜ். எம்.டி. (சித்தா)

ஆகியோருக்கும், மேலும் ஊக்குவித்த அனைத்து ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சித்த மருத்துவத்தில் பயிரியலின் பங்கு

முனைவர்.ச. பாலு,
பயிரியல்துறை
அ.வி.வா.நினைவுதிரு. புட்பம்கல்லூரி, பூண்டி.

சித்த மருத்துவம், உலகின் தலைசிறந்த இந்திய மருத்துவ முனரகளில் ஒன்று. சிறப்பாகத் தமிழ் மருத்துவ முறை என்று இதனைச் சொல்லலாம். இன்று இம் முறை மறுபிறப்பெடுத்து விளங்குகின்றது. இந்நிலையில் இம்மருத்துவமுறையை மேம்படுத்தப் பல்வேறு வழிமுறை களை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. முக்கியமாகச் சித்த மருத்துவத்தில் பயன்படுத்தக்கூடிய மூலிகைகளின் அறிவியல் விளக்கங்கள் கிடைக்கப் பெறவேண்டும். இதனால் மூலிகைகள் சரியான முறையில் கண்டறியப்பட்டு மருத்துவத்தில் பயன் படுத்தப்படும். மேலும் மூலிகைகளின் மருத்துவக் குணங்களை சரியாகப் பெற ஏதுவாகும். பயிரியலின் வகைப்பாட்டியல் மற்றும் மரபியல் இதற்கு நன்கு பயன்படுவதாக உள்ளது. இக்கட்டுரை இதனை நன்கு விளக்குவதற்காக எழுதப் பட்டுள்ளது.

பயிரினங்கள் என்றென்றும் ஒரே அமைப்பினை உடையன அல்ல. பரிணாம வளர்ச்சியில், அவற்றின் புற அமைப்பியல் மற்றும் மரபியல் மாறுபாடுகள் ஏற்பட்டு வேற்றுமை பெறுகின்றன. ஒரு தாவரச் சிற்றினத்தில் இருந்து பல சிற்றினங்கள் தோன்றுகின்றன. நாளடைவில் ஒரு சிற்றினமானது சுற்றுப்புற மாறுபாடுகள் காரணமாகவும், மேலும் அதன் பால் இனப்பெருக்க முறையில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகள் காரணமாகவும், மற்ற உயிரினங்களின்

ஆக்கிரமிப்பு காரணமாகவும் அருகி மறைந்துவிட ஏதுவாகின்றன. இவ்வகையில் பலமூலிகைகள் நமக்குக் கிடைப்பதற்கு அரியனவாகி விட்டன.

இந்நிலையில் மூலிகைகளின் வாழ்க்கைச் சுழற்சியை நாம் கண்டறிந்து அவற்றின் இனப்பெருக்க முறைகளில் உள்ள தடைகளை நாம் களைய வேண்டும். இன்றைய நிலையில் சித்த மருத்துவத்தில் அறிவியல் பூர்வமான மூலிகை கண்டறியும் கையேடுகள் எழுதப்பெற வேண்டும். பயிரியலில் ஏற்கனவே பல கையேடுகள் உள்ளன. அவற்றைச் சித்த மருத்துவத்திற்கு ஏற்றபடி மாற்றியமைக்க வேண்டும்.

ஒவ்வொரு மூலிகையும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பெயர்களில் வழங்கப்படுகின்றன. இது அபாயகரமானது. ஒரு மூலிகைக்கு ஒரு பெயர்தான் வழங்கப்பட வேண்டும். இது சித்த மருத்துவர்கள் அனைவரும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு. இவ்விதம் செயல்பட்டால் மூலிகை கண்டறிதலில் எவ்விதமான தடங்கலும் ஏற்படாது. மேலும் நாடுதழுவிய அளவில் சித்த மருத்துவம் வளர்ச்சி பெறும்.

மேலும் மூலிகை கண்டறிதலை இலகுவாக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் பதப்படுத்திய மூலிகைகள் சேமித்து வைக்கப்படவேண்டும். இதனை மேனாட்டான் அன்றே செய்யத்துவங்கிவிட்டான். நாம் இன்னும் முயற்சி செய்யவில்லை. தமிழ் மொழியில் இதற்கான நூல்கள் பற்பல தொடர்ந்து வரவேண்டும். அனைத்து மூலிகைகளுக்கும் பயிரியல் விளக்கங்களும், விளக்கப் படங்களும், நிழற்படங்களும் அமையப்பெற வேண்டும். மூலிகைகளில் காணப்படக்கூடிய வேறுபாடுகள், மூலிகைகளில் உள்ள வேதிப் பொருட்களின் அளவு வேறுபாடுகள் முதலியன அவ்வப்பொழுது தமிழ் அறிவியல் ஆராய்ச்சி இதழ்களின் வாயிலாகச் சித்த மருத்துவ வல்லுநர்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும்.

சித்த மருத்துவத்துக்குத் தமிழ் மொழியில் அறிவியல் ஆராய்ச்சி ஏடுகள் இல்லையென்றே சொல்ல வேண்டும். இதற்கு ஆவன செய்ய அனைவரும் முயல வேண்டும். பயிரியல் வல்லுநர்கள் அனைவரும் சித்த மருத்துவ முன்னேற்றத்திற்கு அனைத்தும் செய்ய வேண்டும்.

சித்த மருத்துவ உய்வுக்கு வழி

டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை

ஒரு கலை சிறந்தது என்று எடை போடுவது, அக்கலை சம்பந்தமாக வெளிவந்துள்ள கருவூலங்களின் பண்பையும், திறனையும், பயனையும் பொறுத்ததாகும். கலையைச் சார்ந்த தரமான கருவூலங்கள் இருந்தால் மட்டும் போதாது. அவை அச்சாகிப் புத்தக வடிவில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதன் வாயிலாக அதன் சிறப்பு வெளிப்படும். கலை ஆய்வும் ஆராய்ச்சியும் நவீனக் கூடங்களில்தான் செய்ய வேண்டுமென்பதில்லை. கலையில் வசிக்கும் நீண்டகால பயிற்சியும், அனுபவமும் போதுமானவை. உயர் படிப்புப் படித்த பலர் படைத்துள்ள நூல்களைக் காட்டிலும் கல்லூரியை எட்டிப் பார்க்காத பல எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்கள் மக்களிடையில் பேராதரவைப் பெற்று, சாகித்திய அகாடமியின் பரிசைக் கூடத் தட்டிச் சென்றுள்ளதைக் காண்கிறோம். கலைத்துறையில் பிரகாசிக்க அருள் பெற்றிருக்க வேண்டும். திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும், கம்பராமாயணத்தை இயற்றிய கம்பனும் இதற்குச் சான்று. இவர்கள் எந்தக் கல்லூரியிலும் படிக்காத மேதைகள். இவர்கள் படைத்த படைப்புகளை வைத்து ஆய்வும், ஆராய்ச்சியும் செய்து டாக்டர் பட்டங்கள் பெற்றோர் எத்தனை! பெறப்போவோர் எத்தனை எத்தனையோ! இன்னும், பெருமையைச் சேர்க்கும் கருவூலங்கள் சிலரால், சிலகாலங்களில் தான் உருவாக்கப்படுகின்றன. கருத்தால் சிறந்ததும், காலத்தால் அழியாத நூல்கள் ஏட்டுச் சுவடியில் அக்கலையைக் கற்றோர் கையிலும், கலையைப் பற்றித் தெரியாதவர் கையிலும் மறைந்து இருக்கலாம். இப்படி இருப்பவை, ஆழ்கடலில் புதைந்துள்ள விலை மதியாத முத்துக்கள் போலும்!

அந்நிலையில், தனிப்பட்ட வகையில் தமிழர்களுக்கு உரித்தான மருத்துவக்கலை, சித்த மருத்துவம் பன்னெடுங் காலம் பல அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளில் வடித்துத் தரப்பட்டவை. மக்கள் நலனுக்காகத் தமிழகத்துக்கு தந்துபோனவை. கோடி கோடிப் பொன்னை வாரி வழங்கினாலும், உருவாக்க இயலாத காய கங்பங்கள், அற்புதப் படைப்புகள்-உயிர்க்கலை ஓவியங்கள் எனலாம். துர்வசமாக இவைகளில் சில காலத்தால் அழிந்து போனாலும், இன்னமும் நூற்றுக்கணக்கான ஏடுகள் அச்சேறாது இருக்கும் சீர்மிகும் ஏடுகள் என்று அச்சாகி மக்களிடையில் பரவுகின்றதோ-அப்போது தான் தமிழகத்தில் சித்த மருத்துவப் புரட்சி எழும்! மக்களும் சித்த மருத்துவ அருமை பெருமைகளை உணர முடியும். நாட்டில் சித்த மருத்துவ அறிவும் சரி, கல்லூரி படிப்பும் சரி, வகிக்கும் ஆராய்ச்சியும் சரி, மக்கள் பெறும் சித்த மருத்துவ சிகிச்சையும் சரி தரமுள்ளதாக அமையும். பெறுவதற்கரிய சித்த மருத்துவக் கருவூலங்களை வைத்துள்ளோர்களிடம் சென்று நூல்களைக் கொடுத்துவிடுங்கள். நாங்கள் அச்சேற்றி வெளியிடு கின்றோம்-என்றால் தந்துவிடுவார்களா? இவர்கள் அவற்றை உயிரினும் மேலாகவல்லவோ பேணி வருகின்றனர். இப்படிப்பட்ட அச்சேறாத ஏடுகளை எங்களிடம் இனாமாகத் தந்துவிடுங்கள் என்று விண்ணப்பிக்கும் பொறுப்புள்ள தமிழக இந்திய மருத்துவ இயக்குநரின் செயல் ஒரு புறம் உண்மைத் தமிழ் நெஞ்சங்களைப் பிளக்கிறது. மற்றொரு புறம் மதிப்பிழந்து சித்த மருத்துவம் அழியவும் காரணமாய் இருக்கிறது.

சித்த மருத்துவத்தில் போதிய கருவூலங்கள் இல்லை என்று தீர்வு எடுத்து, சித்த மருத்துவக் கல்லூரியில் நவீன மருத்துவப் பகுதிகளை (Pathology etc)ப் புகுத்திச் சித்த

மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குப் பாடங்களாக, பல வருடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. இதனால், சித்த மருத்துவத்திற்குச் சிறுமை சேர்ப்பது மாத்திரமல்ல, பின் விளைவுகளும் வேதனை தருவதாய் இருக்கும்! படிப்பு முடிந்தவுடன் சித்த மருத்துவர்கள் தன்னம்பிக்கை இழக்க நேரிடுகிறது, தம்மிடம் வரும் காய்ச்சல் நோயாளிக்கு மெட்டாசின் மாத்திரை பொடித்துத் தரப்பட்டும், தலைவலிக்கு ஆஸ்பிரோவால் நிவாரணம் காணும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம், சித்த மருத்துவக் கலையைச் சார்ந்த நூற்றுக்கணக்கான ஏடுகள் அச்சாகி சித்த மருத்துவத்தின் பரிபூரணத்தை வெளிக்கொணராத காரணமே இதுவரையிலும் வெளிவந்த சித்த மருத்துவ நூல்களை வைத்துச் சித்த மருத்துவத்தை எடை போடுவதும், சித்த மருத்துவர்களை உருவாக்குவதும், உசிதமாகாது. இதனால் சித்த மருத்துவத்தில் மக்களுக்கு இருக்கும் நல்லெண்ணமும் மாய்ந்து விடும்.

சித்த மருத்துவம் வேறு மாநிலங்களைச் சார்ந்து இருப்பின், அதைக் கட்டிக் காக்கவும், வளர்க்கவும் அவர்களுக்குக் கடமை உண்டு என்று விட்டுவிடலாம். ஆனால் சித்த மருத்துவம் தமிழனுக்குரிய நலக்கலை. இதைக் காக்கும் கடமை தமிழனுக்கும், தமிழரசுக்கும்தான் உண்டு.

அரசின் கையை எதிர்பாராது, வறுமையின் சின்னமான சித்த மருத்துவம் இனம், தமிழகத்துக் கிராமங்களில் வாழும். ஏறக்குறைய 4 கோடி மக்களினத்திற்கு என் கடன் பணி செய்து கிடப்பதே என்று நலம் காக்கும் கற்பக விருட்சமாகக் காட்சியளிக்கின்றனர். இவர்கள் கல்லூரிப் பட்டம் பெற்றவரில்லை. தன் உரிமையை எடுத்துக்கூற வழியற்ற-ஒதுக்கப்பட்ட இனத்தவர். வாய்ப்பற்ற நிலையிலும், மக்களுக்கு நலப்பணி ஆற்றி வருகின்ற

தன்னலமற்ற வாயில்லா வறுமைக் கூட்டங்கள். இவர்களிடம் தான் உண்மையான சித்த மருத்துவக் கருப்பொருட்களும், கருவூலங்களும் புதைந்து கிடக்கின்றன என்பதை ஆணித்தரமாகக் கூறுவதில் பெருமைப்படலாம்.

நாடு சுதந்திரமடைந்து, 44 ஆண்டுகளாகியும், அரசு சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஒரு சமூகம் சித்த மருத்துவர்கள். இவர்கள் நலிவுற, நாளுக்குநாள் இவர்களிடம் உள்ள கருவூலங்களும் மறைந்த வண்ணமாக இருக்கின்றன. இது உண்மை. தமிழ் உள்ளங்களை உருக்குலைக்கும் நிலை மாத்திரமல்ல, சித்த மருத்துவக் கலை தேய்ந்து மாயும் தன்மையுமாகும்.

எனவே, அச்சேறாத சித்த மருத்துவ ஏடுகளை தேர்ந்தெடுத்து, அதற்குரிய தரமான மானியம் தந்து, அவற்றை வெளியிடுவது அரசின் முதற்பணியாய் இருத்தல் வேண்டும். இன்னும் காலதாமதத்தால் சித்த மருத்துவப் படைப்புகளை அழியவிட்டால், அது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இதற்காகத் தமிழரசு ஒரு உயர் மட்டக் குழுவை நியமித்து, செயல்படல் உன்னதமானது. எல்லா அரசு நூல் நிலையங்களிலும், சித்த மருத்துவ நூல்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெற்றுத் தமிழர்களின் அறிவுக்கு விருந்து படைப்பதோடு, உடல் நலக்கலையின் தரம் காக்கவும் செய்யலாம். மத்திய அரசு வகிக்கும் பண்பாட்டுத்துறை (The Indian National Trust for Arts and cultural Heritage, New Delhi.) முன்வந்து, தமிழர் பண்பாட்டையும், கலாச் சாரத்தையும் பறைசாற்றும் நலக்கலையாகிய சித்த மருத்துவக் கருவூலங்களைக் காப்பாற்றி, அச்சேற்றி உலக மக்கள் நலன் காக்க வழிவகுப்பது விரும்பத்தக்கது. சித்த மருத்துவ நூல்கள் வேறு மொழிகளில் மொழி பெயர்த்து வெளியாக்குதலால் பிறர் சித்த மருத்துவ யுக்திகளை அறிய முடியும். நவீன

மருத்துவத்தைக் கிராம நலவாழ்வில் புகுத்தாது, கிராமக் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும், பழமையையும் அழிக்காது கட்டிக்காக்கும் வகையில், சித்த மருத்துவர்களுக்குப் புனரமைப்பு திட்டம் தீட்டி நடைமுறைப்படுத்துவது அரசின் தலையான கடமையாகும். இப்பணிக்காக போதிய பண ஒதுக்கீடும், காலவரை கொண்ட செயல்முறை திட்டமும் தேவை. இதனால் அழிந்து வரும் சித்த மருத்துவக் கூறுகளைக் காக்கவும், சித்த மருத்துவச் சமூகத்தைப் பேணவும் முடியும்.



மணி 4000 ஓர் ஆய்வு

டாக்டர் சே. பிரேமா
இணைப்பேராசிரியர் & துறைத் தலைவர்
சித்த மருத்துவத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

சித்த மருத்துவ நூல்களில், வைத்திய சிந்தாமணி எனும் நூல் அச்சுப் பதிப்பிலோ அல்லது பல்வேறு சித்தர்களின் பெயர்களில் சுவடியாகவோ காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக யூகி வைத்திய சிந்தாமணி, சரபேந்திரர் வைத்திய சிந்தாமணி, யாகோபு வைத்திய சிந்தாமணி, தன்வந்திரி வைத்திய சிந்தாமணி, அகத்தியர் வைத்திய சிந்தாமணி போன்றவையாகும். இவற்றில் அகத்தியர் வைத்திய சிந்தாமணி வெண்பா 4000 எனும் சுவடிப்பதிப்பு இங்கு ஆய்வு செய்யப்படுகிறது.

அகத்தியர் வைத்திய சிந்தாமணி வெண்பா 4000 எனும் பெயரிலிருந்தே இது அகத்தியர் பெயரில், வெண்பா அமைப்பில் உள்ள 4000 பாடல்களைக் கொண்ட நூல் என்பது தெளிவாகிறது. போகர் 7000, அகத்தியர் 12000 போன்ற நூல்களில் அகத்தியர் செய்துள்ள நூல் தொகுப்பில் மணி 4000 என்ற பெயர் இடம் பெற்றுள்ளது.

சட்ட முனிவர் வாதசாலியம் 1000 என்ற நூலில் உள்ள ஒரு விளம்பரத்தில் மணி 4000 என்ற நூல் அச்சில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் இந்நூல் வெளிவந்துள்ளதா என்பது தெரியவில்லை.

இப்பணி தொடர்பாக முதலில் சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்து சு. எ. ஆர். 3500 (சிந்தாமணி தாது நிதானம்) சுவடியிலிருந்து பெயர்த்தெழுதப் பெற்ற கையெழுத்துப் பிரதியும், அகத்தியர் வைத்திய சிந்தாமணி (ஆர். 2282) என்ற சுவடியும் வாங்கி வரப்பட்டது. இதில் முன்னது 1250 பாடல்கள் வெண்பாவிலும், இரண்டாவது 4000 பாடல்கள் (12ஆவது பாடல்களிலிருந்து தொடங்குகின்றது.) விருத்தமாகவும் அமைந்திருந்தது. விருத்தப் பாக்களால் அமைந்துள்ள சுவடி, இரசவாத முறைகளையே பெரும்பாலும் கூறுவதாக உள்ளது. வெண்பாப் பாடலில் அமைந்துள்ள கையெழுத்துப் பிரதி படியெடுத்துக் கொள்ளப்பட்டது. அதே சமயத்தில் வைத்திய சிந்தாமணி வெண்பா என்ற பெயரில் பல்வேறு சுவடிகள் நூலகங்களிலும் உள்ள சுவடிகள் விவரம் சேகரிக்கப்பட்டது. அச்சு நூல்களில் காணப்பெற்ற சிலசில பாடல்களும் அவ்வப்போது குறித்து வைத்துக்கொள்ளப்பட்டு ஒப்பு நோக்கப்பட்டன.

பிரதி செய்து வைத்துள்ள வெண்பாப் பாடல்கள் மற்ற சுவடிகள், தாள் சுவடிகள், அச்சு நூற்களுடன் ஒப்பு நோக்கிப் பாடபேதங்கள், அதிகமான பாடல்கள் போன்றவை எழுதப்பட்டன. தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள வைத்திய சிந்தாமணி (சு. எண். 250) என்ற சுவடியில், இந்நூலின்கண் உள்ள உட்தலைப்பும் அவற்றின் பாடல் எண்ணிக்கையும் கூறப்பட்டுள்ளன. அதன் எண்ணிக்கை 2672. ஆனால் இச்சுவடியில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை 1345 மட்டுமே ஆகும். மேலும் இந்நூலுடன் ஒப்புநோக்கப்பட்ட எந்தச் சுவடியிலும் இல்லாத வகையில் தசம சு.எ. 157, 200 ஆகிய சுவடிகளில்

சோதியின் ஒளியில் நின்று
துலங்கிய முகம்ம தாவே
ஆதியிப் புவனம் தன்னில்
அமைப்பித்த ஆதந் தன்னால்

சாதி இரண்டானபோதே
சகலநோய் விபரம் எல்லாம்
ஓதிய சிந்தாமணிக்கு
உடையவன் காப்புத் தானே.

முந்தாதி யந்தமிழால் மூதுலகி லேவைத்திய
சிந்தா மணிவெண்பா செப்புதற்கு - நந்தா
திரும னுலகாதி எவ்வுயிர்க்கும் தாயாம்
ஒருவன் துணையா கவும்

இவ்விரு பாடல்களும் நூல் முதலில் எழுதப்பட்டுள்ளன. இதுவன்றி இச்சுவடிகள் இரண்டும் மஸ்தான் சாயபு, காதர் பாட்சா ஆகிய இரு முஸ்லீம்களால் எழுதப்பட்டது என்பதற்கான குறிப்பும் உள்ளது.

வைத்திய சிந்தாமணி வெண்பா என்ற பெயரிலிருந்த சுவடிகளை மட்டுமே தேடி ஒப்பு நோக்கவந்த போது எதேச்சையாக வேறு சித்தர்களின் பெயர்களிலிருந்த சுவடிகள் சிலவற்றில் இந்நூலில் உள்ள பாடல்கள் காணப்பட்டன. இதனால் வெண்பா முறையில் பாடப்பட்டுள்ள சுவடிகள் பற்றிய விபரம் சேகரிக்கப்பட்டது. இதன் பின் இந்நூலுக்குத் தொடர்பானவை எனக் கருதப்பட்ட சுவடிகள் ஒப்பு நோக்கப்பட்டன.

தன்வந்திரி வைத்திய சிந்தாமணி எனும் பெயரில் விருத்தமாகவும், வெண்பாவாகவும் வெவ்வேறு விதமாகப் பாடப்பட்டுள்ள சுவடிகள் சில உள்ளன. இதில் வெண்பா முறையில் பாடப்பட்டுள்ள சுவடிகள் மணி 4000த்திற்கு ஒப்பாக உள்ளது. ஆயினும் தன்வந்திரி என்று பாடலின் இடையே வருகின்றது. இதில் 1500 பாடல்கள் உள்ளன.

அகத்தியர் வைத்தியம் 100 (சு.எ.ஆர் 6447 GOML) வைத்திய வெண்பா (ஆர் 4396 GOML) தேரையர் நோயின் சாரம் (ஆர். 3412, ஆர் 5430 GOML) வைத்திய சிந்தாமணி (38 SML அகத்தியர் 2000 என்ற அச்சுநூல் ஆகியவற்றில் மணி 4000த்தை ஒத்த பாடல்கள் காணப்படுகின்றன. இச்சுவடிகள் அனைத்தும் ஒரே விதமாக உள்ளன. அகத்தியர் வைத்தியம் 100 எனப் பெயர் கூறப்பட்டிருந்தாலும் இதில் 230 பாடல்கள் உள்ளன. மணி 4000ல் உள்ள வெண்பாக்கள் ஒரு தலைப்பில் உள்ள பாடல்கள் மட்டும் அந்தாதியாக உள்ளன. உதாரணமாக கத்தூரி மாத்திரை என்று எடுத்துக் கொண்டால் அதற்குறிய 2 பாடல்கள் மட்டுமே அந்தாதியாக அமைந்துள்ளன. ஆனால் மேற்கண்ட சுவடிகள் அனைத்திலும் உள்ள 230 பாடல்களுமே அந்தாதியாக அமைந்துள்ளன. இதன் முதல் பாடல்

ஆரியமாம் வாகடத்தின் உட்பொருளை ஆய்ந்து
சீரியதாம் செந்தமிழில் செப்பவே-மாரியென
வெள்ளை மதம்பொழியும் வேழ முகமுடைய
வள்ளலே யென்மனத்துள் வா

என்று தொடங்குகிறது. இந்நூலை இன்னார் செய்தார் என்ற குறிப்பு எதுவும் எங்கும் காணப்படவில்லை.

சென்னை அடையாறு மருந்து செய்நிலையத்தில் வைத்திய சிந்தாமணி என்னும் மேற்கோளுடன் 1. திராட்சாதி சூரணம் 2. ஆர்த்தராகண்டால லேகியம் 3. கிருமி முத்தர் ரஸம் 4. மஹாசன்னிபாத பைரவரஸம் 5. சூலைக்குடாரம் 6. சுவாசக் குடாரஸ 7. இராஜ மிருகாங்ரஸ 8. ஸீதிகாபரண ரஸ 9. வங்க பஸ்மம் ஆகிய 9 மருந்துகள் செய்து விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நூலின்கண் நாடி, முக்குற்ற நிதானம், முக்குற்ற கரம், சட்ரசம், பேடசம், கற்கம், குடிநீர், சுத்திமுறை, பற்பம், செந்தூரம், மாத்திரை லேகியம், இரசாயனம், சூரணம்,

வடகம், எண்ணெய், நெய், தைலம், பலரோகத்திற்கு மருந்து போன்றவைகள் கூறப்பட்டுள்ளன. ஆயினும் இதுவரை சுமார் 2800 பாடல்களே கிடைத்துள்ளன. மீதமுள்ள பாடல்கள் கிடைக்கப் பெறவில்லை. கிடைத்த வரையிலான பாடல்கள் தற்போது உரையுடன் அச்சியேற்றப்பட உள்ளன.

வைத்திய சிந்தாமணி என்ற பெயரில் சமஸ்கிருதத்திலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் நூல்கள் உள்ளன. மலையாளத்தில் சிந்தாமணி வைத்தியர் என்ற ஒரு பரம்பரையினர் உள்ளனர்.

பல எளிய மருத்துவ முறைகளையும், சில அரிய மருந்துகளையும் கொண்ட மிகச்சிறந்த நூல் இது. மருத்துவர்கள் மட்டுமின்றி, ஏனையோரும் பயன் அடையக் கூடிய நல்லதொரு நூலிது. இந்நூலில் குறைகின்ற பாடல்களை ஈடு செய்யத் தங்களிடம் இது தொடர்பான சுவடிகள், கையெழுத்துப் பிரதிகள், அச்சு நூல்கள் இருப்பின் அவற்றை இரவல் கொடுத்து உதவினால் இப்பணி முழுமையாக நிறைவு பெற வாய்ப்பாகும். அனைத்துத் தமிழ் மருத்துவச் சுவடிகளும் ஆய்வு செய்யப்பட்டுப்பின் நூலாக வெளிவருதல் சித்த மருத்துவ வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

ஒப்பு நோக்கப்பட்ட சுவடிகள்:

சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம்	சுவடி எண்:
1. அகத்தியர் வைத்திய சிந்தாமணி	4834
2. அகத்தியர் வைத்திய சிந்தாமணி 4000,	4731
3. அகத்தியர் வேதாந்த நவசிந்தாமணி	4721, 5416
4. அகத்தியர் வைத்திய சிந்தாமணி	4731
5. அகத்தியர் வைத்திய சிந்தாமணி (தாள்)	4834
6. அகத்தியர் வைத்திய சிந்தாமணி	6556
7. அகத்தியர் வைத்திய சிந்தாமணி	187

8. அகத்தியர் வைத்திய சிந்தாமணி	261
9. வைத்திய சிந்தாமணி	261
10. வைத்திய சிந்தாமணி	502
11. வைத்திய சிந்தாமணி வெண்பா	2282
12. அகத்தியர் வைத்தியம்	6447
13. சித்தர் வெண்பா	6925
14. பதார்த்த குண சிந்தாமணி	1806
15. பதார்த்த குண நிரூபணம்	2241
16. தேரையர் அருளிய சாரம்	3413
17. அகத்தியர் அறுகளை நிகண்டு	3502
18. பேடசகற்பம்	3503
19. பேடசகற்பம்	948
20. சிந்தாமணி தாது நிதானம்	948
21. வைத்திய சிந்தாமணி	3500
22. தன்வந்திரி வைத்திய சிந்தாமணி	2315
23. தேரையர் நோயின் சாரம்	942

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம்

24. அகத்தியர் வைத்தியத் திரட்டு	317
25. வைத்திய சிந்தாமணி	194
26. வைத்திய சிந்தாமணி	200
27. அகத்தியர் வைத்திய சிந்தாமணி	250
28. வாதமெண்பதுக்கும் பெயர் வெண்பா	288
29. பித்த நிதானம்	288
30. வைத்திய சிந்தாமணி	157
31. வாதமெண்பதுக்கும் பெயர் வெண்பா	170
32. பித்த ரோகப் பெயர் வெண்பா	170
33. வைத்திய நூல்	3600
34. அகத்தியர் ரஸ வர்க்கம்	204

35. சட்ரச நிகண்டு 212
36. பேடசம் 212
37. சட்ரச நிகண்டு 214
38. சட்ரச நிகண்டு 63
39. வைத்திய சிந்தாமணி 157
40. சட்ரச நிகண்டு 182
41. அகத்தியர் வைத்தியத் திரட்டு 317
42. சட்சர நிகண்டு 347
43. வைத்திய அந்தாதி 386
44. தைலவர்க்க வெண்பா 427
45. எண்ணெய் வர்க்க வெண்பா 70, 427

அறிஞர் அண்ணா மருத்துவமனை, அரும்பாக்கம்

46. வைத்திய சிந்தாமணி 132
47. வைத்திய சிந்தாமணி 4000 134
48. அகராதி சட்ரச நிகண்டு 487
49. அகத்தியர் சிந்தாமணி 824

சித்த ஆயுர்வேத ஆராய்ச்சிக் கழகம்.

50. பேடசகற்பம் 125
51. வைத்திய சிந்தாமணி 506
52. அகத்தியர் மணி நாலாயிரம் 137, 1345
53. சட்சர நிகண்டு பாடல்கள்
54. அகத்தியர் தைலமுறை
55. அகத்தியர் சிந்தாமணி 4000இல் சூதசுத்தி
56. அறுசுவை நிகண்டு
57. சித்தர் வெண்பா
58. ஆரிய வாகட வெண்பா 230 பாடல்கள்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

59. இரச வர்க்கம்	7
60. பட்சம் நின்ற கணக்கு	246
61. இரசவர்க்கம்	248
62. இரசவர்க்கம்	247
63. தன்வந்திரி சிந்தாமணி	571
64. மருத்துவ நூல்	1756
65. தன்வந்திரி சிந்தாமணி	1032

ஒப்பு நோக்கப்பட்ட நூல்கள்

1. போகர் 7000, ஐந்தாங் காண்டம், பக், 79, பாடல் 883
2. அகத்தியர் 12000, முதல் காண்டம், பக். 46, பாடல் 280
3. அகத்தியர் 2000, வெங்கடராஜன் எஸ், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 981, பக். 409.

சித்த மருத்துவ முன்னேற்றத்தில் மூலிகை ஆய்வு

முனைவர். ம. செகதீசன்
சித்த மருத்துவத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

முன்னுரை

தாவரங்கள் மனிதனுடைய உணவிற்கும் மருத்துவத் திற்கும் இன்றியமையாதவை. சித்த மருத்துவத்தில் மூலிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன. மூலிகைகள் தனி மருந்தாகவும் கூட்டு மருந்தாகவும், குடிநீர் செய்யவும், பற்றுப் போடுதல், ஆவி பிடித்தல் மற்றும் பாடாணங்கள் சுத்தி செய்யவும் போன்ற பல வகைகளிலும் சித்த மருத்துவத்தில் பயன்படுகின்றன. சித்தர்கள் அருளிய மூலிகைகளைப் பற்றிய விபரங்கள் ஏடுகளிலும் நூல்களிலும் இன்று கிடைக்கப் பெறினும் மூலிகைகளின் அடையாளம் காணப்படுதலிலும் மூலிகைகளுடைய பெயர்களிலும் குழப்பநிலை நிலவுகின்றது. மருந்துக் கடைகளில் விற்கப்படும் மூல மருந்துகளில் கலப்படங்கள் அதிகரித்துள்ளன. ஆயினும் தரக்கட்டுப்பாடு பற்றிய அறிவியல் ஆய்வுகள் இன்மையால் இதனைத் தடுக்க இயலவில்லை. தொழில்வளமும் மக்கள் நாகரிகமும் பெருகப் பெருக மூலிகை வளம் குன்றி வருவது கண்கூடு. மூலிகை வளம் குன்றினால் சித்த மருத்துவ முன்னேற்றமும் குன்றும். இவ்வாறின்ன பிற இடர்ப்பாடுகளும் இவற்றைத் தீர்க்கும் வழி முறைகள் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

மூலிகைப் பெயர்க் குழப்ப நிலை

சித்த மருத்துவ இலக்கியங்களில் மூலிகைகளின் பெயர்கள் பல்வேறு பெயர்களில் குறிக்கப்படுகின்றன. இதில் மறை பொருளில் பெயர்கள் குறிக்கப் பெறுவது மேலும் குழப்பத்தை உண்டு பண்ணுகிறது. மூலிகை அகராதிகள் சில வெளி வந்த போதிலும் அனைத்து மூலிகைப் பெயர்களும் குறிப்பிடவில்லை. மறைபொருளில் அழைக்கப்படும் மூலிகைகளான இரு குரங்கின் கை (முசுமுசுக்கை), தாயின் கீழ் பிள்ளை (வாழை), சரஸ்வதி (வல்லாரை), பராசக்தி (வேம்பு) திரிசூலி (சிவனார் வேம்பு), பூனை வணங்கி (குப்பை மேனி) இவற்றை அகராதிகள் மூலம் அறிய முடிந்த போது, விரல் தறிச்சான், எதங்கு சிங்கி, அடப்பன் துறப்பன், நின்றாற் சிணுங்கி போன்ற பல மூலிகைகளின் அடையாளம் இதுவரை சரியாக அறியப்படவில்லை. சித்த மருத்துவ ஏடுகளில் குறிப்பிட்ட மூலிகைகளை அடையாளம் காண முயலும் பலரும் ஒரு மூலிகைக்கு வெவ்வேறு தாவரப் பெயர்களைக் கூறுகின்றனர். எடுத்துக்காட்டாக, உரோம விருட்சத்தை ஒருவர் Sapium insigne Benth என்றும், மற்றொருவர் Exocaria agallocha L. என்றும், தொழுகண்ணியை Desmodium motorium (houti) Merr. மற்றும் D. gyrans DC எனவும், நாகதாளியை Aristolochia Inidica மற்றும் Opuntia dillent Haw எனவும் செங்கடுக்காயை Terminalia Chebula Retz மற்றும் Litsea decansis Gamb எனவும் வெவ்வேறான தாவரப் பெயர்களை அடையாளம் காணுகின்றனர்.

ஒரு மூலிகைக்குப் பல பெயர்கள் இருப்பதும் இடத்திற்கு இடம் வட்டார வழக்கப் பெயர்கள் மாறுபடுவதும் தமிழ் நாட்டில் மிகச் சாதாரணமாகக் காணப்படும் ஒன்று. இதேபோல் ஒரே பெயரில் பல

மூலிகைகள் இருப்பது அதிகக் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. உதாரணமாக எலியாமணக்கு என்ற பெயரில் Jatroap Curcas என்ற மூலிகையைத் தஞ்சை மாவட்ட வடக்குப் பகுதிகளில் குறிப்பிடுகிறார்கள். இதன் மற்றொரு பெயர் காட்டாமணக்கு. ஆனால் தஞ்சை மாவட்டத்தில் மற்ற பகுதிகளிலும் திருச்சி மாவட்டத்திலும் எலியாமணக்கு என்று Croton bonplandianus என்ற மூலிகையைக் குறிப்பிடுகிறார்கள். இதன் மற்றொரு பெயர் இரயிலடிப் பூண்டு. அல்லது தஞ்சாவூர்ப் பூண்டு. நெட்டிலிங்க மரத்தின் ஊசிவகை இனத்தைத் தற்காலத்தில் அசோகம் என்று வழங்கி வருவதால் நாட்டு மருந்துக் கடைகளில் கூட அசோகப் பட்டைக்குப் (Saraca asoca) பதிலாக நெட்டிலிங்கப் பட்டையே கிடைக்கின்றது.

அடையாளம் தெரியாத மூலிகைப் பெயர்கள்

தாவர அடையாளம் தெரியாமல் இருக்கும் மூலிகைகள் சித்த மருத்துவ இலக்கியங்களிலும் மற்றும்நாட்டு மருந்துக் கடைகளிலும் அதிகமாக உள்ளன. கோரக்கர் மலை வாகடத்தில் கூறப்பட்டுள்ளபல கற்ப மூலிகைகளுக்குச் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் சரியான தாவர அடையாளம் காண முடியவில்லை. காரணம், இம் மூலிகைகளைப் பற்றிய அடையாளம் காணக்கூடிய அதிக விபரங்கள் இந்நூலில் காணப்படவில்ல. சாயா விருட்சம், சுணங்கன் விருட்சம், கல் தாமரை, ஜோதிப்புல் போன்ற பல மூலிகைகளின் தாவரப் பெயர்கள் இன்னமும் அறியப்படவில்லை.

நாட்டு மருந்துக் கடைகளில் விற்கப்படும் சில மூல மருந்துகளின் தாவர மூலமும் அறியப்படவில்லை. (எ.டு.) கிளியூறல் பட்டை, அவில்தோல், ஊழலாற்றி.

மூல மருந்துகள் விற்பனை செய்யும் சில வியாபாரிகள் நன்கு அறிந்த மூலிகைகளுக்குப் புனைப் பெயர்களை அவர்களே இட்டுக் குழப்பம் உண்டாக்குகிறார்கள். வருமான வரி மற்றும் ஏற்றுமதித் தடை இவற்றிலிருந்து தப்புவதற்காக இந்தப் புனை பெயர்களை இடுகின்றார்கள். (எடு) கொடுத்து வா (சிறுகாஞ்சொறி) (அ) செந்தட்டி), பால் மிதப்பன் கிழங்கு (ஆகாசக் கருடன் கிழங்கு)

மூலிகை மருந்துகளின் தரம்

மூலிகை மருந்துகளின் தரம், அவற்றின் சரியான தாவர அடையாளம் சேகரிக்கும் காலம் மற்றும் இடம், பதனப்படுத்துதல் (processing) பாதுகாத்தல் (Storage), மற்றும் அவற்றின் செயற்பண்புக் கூறுகள் (active principles) இவற்றைப் பொறுத்து நிர்ணயம் செய்யப்படும். கீழ்க்கண்ட காரணங்களால் மூலிகை மருந்தின் தரம் பாதிக்கப்படுகின்றது.

1. மூலிகை சேகரிப்பவரின் தவறான மூலிகை அடையாளம்.

2. சேகரிக்கும் பொழுது பிற இலை தழைகள் கலந்துவிடல்

3. சேகரித்த பின்பு முறையாகப் பதனப்படுத்தாததினாலும் ஈரப்பதம் சரியான அளவு நீக்காமலும் மூஞ்சணம் மற்றும் பூச்சிகளினால் பாதிக்கப் பெறுதல்

4. முறையற்ற மற்றும் நீண்ட கால வைப்பு முறையினால் மருந்தின் செயற்பண்புக் கூறுகள் வேறுபாடு அடைதல் அல்லது குறைதல்

5. மூலிகை சேகரிக்கும் காலம் மற்றும் இடம் மாறுபாட்டினால் மூலிகை மருந்துகளின் செயற்பண்புக் கூறுகள் மாறுபாடு அடையும்.

6. ஒரே மூலிகைச் சிற்றினத்தில் (species) இரண்டு வெவ்வேறான வகைகளில் (varities) மருத்துவ குணம் மற்றும் செயற்பண்புக் கூறுகள் மாறுபடும். (எ.டு.) முடக்கறுத்தான், பிரண்டை.

7. கலப்படம்.

மூலிகை வளம்

தற்காலத்தில் இயற்கை வளங்கள் பெருமளவில் அழிந்து வருவதால் மூலிகைகளும் அரிதாகி விட்டன. காடுகள் அழிந்துபடல், விளைநிலங்கள் தொழிற்கூடங்களாக மாறுதல், மழையின்மை போன்ற காரணங்களால் சாதாரணமாக எங்கும் கிடைத்து வந்த மூலிகைகள் கூட அரிதாகி விட்டன. அரிதான மூலிகைகள் அழிந்துபடும் நிலையில் உள்ளன. மேலும் ஒரு பருவச் சிறுதாவர வகைகளைச் சேர்ந்த மூலிகைகள் எல்லாப் பருவங்களிலும் கிடைப்பதில்லையாதலால் அவற்றின் பயன்களும் மக்களுக்குக் கிடைத்தல்.

முன்னேற்றத்திற்கான வழிமுறைகள்

மூலிகை மருந்துகளின் அடையாளம் காணுதல், அவற்றின் தரம், மற்றும் வளம் இவற்றின் குறைவால், சித்த மருத்துவ முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட இடர்ப்பாடுகளைக் களைவதற்குக் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1. சித்த மருத்துவ இலக்கியங்களில் கூறப்படுகின்ற மூலிகைகளைத் தாவரவியலாரும் சித்த மருத்துவர்களும் இணைந்து அறிவியல் முறைப்படி அடையாளம் காணுதலும், இதுவரை அடையாளம் காணப்பட்ட மூலிகைகளைத் தொகுத்து சீர்ப்படுத்துதலும் வேண்டும். மூலிகைகளின் மறைபெயர்கள், வழக்குப் பெயர்கள் மற்றும் தாவரப் பெயர்கள் அடங்கிய முழுமையான மூலிகை அகராதி ஒன்று வெளியிடல் அவசியமாகும்.

2. அனைத்து மூலிகை மருந்துகளைப் பற்றியும் தர நிர்ணயம் (Drug standardisation) செய்தல் வேண்டும். இதற்கு, மூல மருந்து ஆய்வுகள் (Pharmacognostic studies) அனைத்து மூலிகைகளிலும் அதி தீவிரமாய் நடத்தப்பட வேண்டும். மேற்கண்ட ஆய்வுகள் முடிந்த பின்னர்தான் இந்திய மருந்துப் பொருள் தொகுதியில் (Indian Pharmacopoea) அனைத்து மூல மருந்துகளும் இடம்பெற்று வெளிவர ஏதுவாகும்.

3. மூலிகை மருந்துகளின் கலப்படங்கள் அறிவியல் முறைப்படி கண்டறிய ஆங்காங்கே பரிசோதனை நிலையங்கள் அமைத்துக் கலப்படத்தைத் தடுக்க வகை செய்தல் வேண்டும்.

4. மூல மூலிகை மருந்துகளை முறையாக அவற்றின் மருத்துவ குணம் குன்றாதவாறு பாதுகாக்கவும், அரிய மற்றும் குறிப்பிட்ட பருவத்தில் கிடைக்கக் கூடிய மூலிகைகளை நீண்ட காலம் பாதுகாத்து வைக்கவும் முறையான அறிவியல் ஆய்வுகள் தேவை.

5. நாட்டின் பல பாகங்களில் மூலிகைப் பண்ணைகள் அமைத்து மூலிகை வளத்தைப் பெருக்க வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகள் சித்த மருத்துவத்தை முன்னேற்றப் பெரிதும் வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

துணை நூற்பட்டியல்

1. Anonymous, Formulary of Siddha Medicine, 1972 IMCOPS, Madras.

2. Abstracts, Scientific seminar on Indian Medicinal Plant Research, Punem 1986, C.C.R.A.S., New Delhi.

3. Jagadeesan, 1990 Pharmacognistical studies on two varieties of Cardiothermum helicacabum 2.

Abstracts III International Congress on Traditional Asian Medicine, Bombay.

4. Jagadeesan, M, 1987, Pharmacognostical studies on Cissus Quadragularis L. National Seminar on Phytichemistry Bharathidasan University, Tiruchi

5. கோரக்கர் மலைவாகடம் இ. ராம குருசாமிக் கோனார் & சன், 1940.



மதியமுது - உடற்கூறு மற்றும் உடலியங்கியல் - ஆய்வுகள்

அ. கணேசன்,
பயிற்சி மருத்துவர்,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

சித்தர்கள், குண்டலினி யோகத்தின் மூலம் மதி யமுதினைச் சுரக்கச் செய்து நீண்ட ஆயுளையும், நிலைத்த தேகமும் பெற்றனர் என சித்தர் இலக்கியங்கள் கூறும் யோக முறைகள் பகர்கின்றன.

ஊறு அமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக்கலாம் -ஔவை ஞானக் குறள்

தெளிதரும் இந்த உறுநீர் பருகில்
ஒளிதரு மோராண்டில் ஊன மொன்றில்லை
திருமந்திரம் 826

எனவே, குண்டலினி யோகத்தையும், மதியமுதினையும் உடலியங்கியல் ஆய்வினுக்கு உட்படுத்துவதன் மூலம் இவ்வுண்மையைத் தெற்றெனத் தெளியலாம்.

மதியமுது, இருக்குமிடம் மற்றும் இயல்பினைப் பற்றிய ஆய்வு

இயல்பு

மேலப் பிறையினில் நெற்றி நேர் நின்ற
கோளத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே

என்பதிலிருந்து மதியமுது சுரக்குமிடம் ஓர் சுரப்புக் கோளம் என்பதுதெளிவு.

ஊறுமருவி உயர்வரை உச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு
திருமந்திரம் 2335

குளத்திலிருந்து கால்வாய் இல்லாமல் பாயும் என்பது மதியமுது சுரப்புக் கோளம் என்பது ஓர் நாளமில்லாச் சுரப்பிக் கோளம் என்பது தெளிவு.

இருப்பிடம்

மேலைப் பிறையினில் நெற்றி நேர் நின்ற கோளம்
திருமந்திரம் - 607

கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திமத்தில்
உண்ணாக்கு மேலேறி உன் புதுமை மெத்தவுண்டு
அழுகண்ணி சித்தர் ஞானம்

கண்ணாக்கு மூக்கு செவி கோளக் கட்டத்துள்
பண்ணாக்கி நின்ற பழம் பொருள் ஒன்றுண்டு
திருமந்திரம் - 399

உச்சிக்கு கீழது உண்ணாக்கு மேலது
திருமந்திரம்-1780

கண், நாக்கு, செவி, மூக்கு இத்துளைகள் நெற்றிக்கு நேராக அண்ணாக்குக்கு மேலாகச் சந்திக்கும் இடத்தில் காணும் நாளமில்லாச் சுரப்பிகள் இரண்டு. அவை

1. சுவலிக் கோளம் (Pitutiary Gland)
2. பீனியல் கோளம் (Pineal Gland)

இவ்விரண்டு கோளங்களுள் மதியமுது சுரக்கும் கோளம் எது என ஆராயும் போது,

மதியமுது சுரக்கும் கோளத்தின் உடற்கூறு ஆய்வு

தீங்கரும் பாகவே செந் தொழி லுள்ளவர்
ஆங்காரும் பாக அடைய நாவேறிட்டுக்
கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட
ஊன் கரும் பாகியே ஊணர் வருமே - திருமந்திரம் 788

அரும்பு போன்ற அமைப்புடைய சுரப்பியை யோகத்தின் மூலம் நிமிர்த்த சுரக்கும். இதையே நவீன உடற்கூற்று ஆய்வாளர்கள் Epiphysis cereberi is attached by a short hollow stalk the roof of third ventricle என்பர்

மூலத்து மேலது முச்சது ரத்தது - திருமந்திரம்-607

என முக்கோண வடிவமுடைய சுரப்பி என்கிறார்.

இதனையே, Epiphysics cereberi is a cone shaped. gray body -என நவீன உடற்கூறு சுற்றினின்று மதியமுது சுரக்கும் கோளம் பீனியல் கோளம் என உணரலாம்.

மதியமுது சுரக்கும் கோளமே பீனியல் கோளம் என்பதற்கான திகவியல் ஆய்வு

Pineal body attains maxmium development by about years of age and then undergoes a very slow involution. This involution containes to about 14 years of age and is characterised by a relative increase of interstitial tissue (Corpora arenata) (Brain sand) -Human physiology - Chatterjee page 4-192

பண்ணாக்கி நின்ற பழம் பொருள் ஒன்றுண்டு - திருமந்திரம்399

பழம் பொருள் என 14 வயதிற்குப் பின் செயல் குறைந்து அடைந்த பீனியல் கோளத்தையே திருமூலர் குறிப்பிடுகிறார்.

கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட
ஊண்கரும் பாகிய ஊணர் வருமே - திருமந்திரம் 788

14 வயதிற்கு பின் பீனியல் கோளத்தின் ஊண் மாறி கோங்கரும்பு போன்று ஆகியதை, யோகத்தின் மூலம் சரி

செய்ய மறுபடியும் ஊணாகி அமிழ்தம் சுரக்கும் என்ற திருமூலர் கூற்றிலிருந்து தெளிவாக மதியமுது சுரப்பு கோளம் பீனியல் என அறியலாம்.

வெள்ளி யுருகிப் பொன்வழி ஓடாமே
கள்ளத் தட்டானார் கரியிட்டு மூடினார் -திருமந்திரம் 814

இக்கூற்றினின்று கோளத்தினின்று சுரப்புச் சுரக்காமல் மூளை மண் (Brain sand) எனக் கருதப்படும் கரியால் மூடினார் எனத் தெளியலாம்

உண்ணீரமுத மூறு மூறலைத் திறந்
தெண்ணீர்..... -திருமந்திரம் 862

இக்கூற்றை 14 வயதிற்குப் பின் செயல் குறைந்த பீனியல் கோளத்தை யோகத்தின் மூலம் சுரக்கச் செய்வது எனத் தெளியலாம்.

ஆய்ந்துரை செய்யில் அமுத நின்றூறிடும்
வாய்ந்துரை செய்யும் வருகின்ற காலத்து - திருமந்திரம் 782

சுரப்பு நின்றுவிட்ட பீனியல் கோளத்தில் அமுதம் சுரக்கும் வகையைச் செய்யும் காலத்தில் காயசித்தி பெறலாம் என்ற திருமூலர் கூற்றினின்றும்

மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலும் இல்லையே - திருமந்திரம்602

செயலற்றுக் காணும் பீனியல் கோளத்தைச் செயல்படுத்தி வெளியே கொணர்ந்தபின் காலன் இல்லை எனத் தெளியலாம்.

மேலையண் ணாவில் விரைந்திரு காலிடிர்
காலனும் இல்லை கதவுந் திறந்திடும் - திருமந்திரம் 785

செயலற்ற பீனியல் கோளத்தின் கதவு திறந்து செயல்படக் காலன் இல்லை என விளங்கலாம்.

இவ்வாய்வுகளின் மூலம் மதியமுது சுரக்கும் கோளம் பீனியல் கோளம் தான் என்றும், சுவலிக்கோளமல்ல எனவும் தெள்ளத் தெளிவாக விளங்கப் பெறலாம்.

உடலியங்கியல் ஆய்வு

பீனியல் கோளத்தின் சுரப்பின் உடலியங்கியல் பண்புகளை ஆராய்வதன் மூலம் மதியமுதினுக்கு ஆயுளை நீடிக்கும் சக்தி உண்டென உணரப் பெறலாம்.

1. Descarts called pineal body as the seat of soul

2. It is postulated that pineal body displays a major role in preventing the aging factor or tissue.

3. Evidences suggest that bined hormone exerts influences on control of endocrine glands.

4. Having neuroendocrine functions.

5. As regulator of rhythmic activity of endocrine function by releasing a specific hormone (methoxyindoles)

6. HIMOT- This acts on hypothalamus through which it controls endocrine functions.

-Human physiology - Chatterjee pages 4-192
-Human Nervous system pages 342

இவ்வாறு திசுக்கள் அழிவைப் பீனியல் சுரப்பு தவிர்ப்பதன் மூலம் நீடித்த ஆயுளைப் பெறலாம்.

இவ்வாய்வுகளின் மூலம் மதியமுது கோளம் பீனியல் கோளம் எனவும், மதியமுது பீனியல் கோளத்தின் ஓர் சுரப்பு என்பதை விளக்கப் பெறலாம்.

மேலும் மதியமுதினைச் சுரக்கச் செய்யும் யோக முறைகளை உடலியங்கியல் ஆய்வின் மூலம் ஆராயும் முகமாகவும் இக்கூற்றை மெய்ப்பிக்கலாம். மதியமுதினைச் சுரக்கச் செய்யும் யோகங்களாவன:

1. குண்டலின் யோகம்

2. கேசரி யோகம்

3. பரியங்க யோகம்

4. சந்திர யோகம்

என்பன முக்கியமாவன.

யோக சித்திக்கு ஆதாரமாக, அஷ்டாங்க-யோகங்களையும் அவற்றிற்கு அடிப்படையாக பிரம்மச்சரியம் எனும் விந்துக்கட்டுப்பாடும் வலியுறுத்தப்படுகிறது. விந்துச் சுரப்பிற்கும் எதிர்விகிதச் செயல் (Reciprocal function) உள்ளது. இதனை

1. Pineal body is performed by controlling the release of G.R.F.

2. Pineal body activity is increased while gonodael development is inhibited.& -Human Nervous System, Page. 343

3. Enlargement of reproducive organs and early onset of puberty due to pinealectomy in rats.

4. Delayed puberty and reduced ovarian weight followed by injection of pineal extrocts.

5. Histochemically, pineal phospholipid is highest during de oestrus and lower during oestrus.

6. during oestrus cycles, serotonin content and HIMOT activity of pineal is reduced.

Human physiology - Chatterjee, page 4-194

தெளிவாக உணரலாம்.

செயல்வன்மை குறைந்த பீனியல் கோளம் மீண்டும் செயல்பட இது ஓர் காரணியாகுமே அன்றி இது மட்டுமே அல்ல.

The ability of melatonin is mediated through the decrease in G.R.F.

Human Physiology-Chatterjee, page 4-194

தெளிவாக உணரலாம்.

மேலும்

கோங்கரும்பாகிய கோணை நிமிர்த்திட
ஊண் கரும்பாகியே ஊணர் வருமே -திருமந்திரம் 788

இதனின்று பீனியல் கோளம் பழைய திசுவியலுக்கு வந்த பின்பே, மதியமுது சுரக்கும் என்பது தெளிவு.

குண்டலினி யோகம்

மூல நெருப்பை விட்டு மூட்டி நிலா மண்டபத்தில்
பாலை இறக்கி உண்டு பசி ஒழிவது எக்காலம்
பத்திரகிரியார் ஞானம்

கோணா மனதைக் குறிக் கொண்டு கீழ்க்கட்டி
வீணாதத் தண்டூடே வெளியுறத் தானோக்கிக்
காணாக் கண் கேளாச் செவி யென்றிருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியதுவாமே. -திருமந்திரம் 368

குண்டலினி யோகத்தின் உடலியங்கியல்

மூல நெருப்பை மூட்டி (Electro thermal induction) வீணாத் தண்டின் வழியே (ventral spino thalamic tract) நிலா மண்டபத்தில் (பீனியல் கோளம்) பாலை (மதியமுது) உண்ணச் சாவில்லை.

Ventral-Spino thalamic tract:
Origin

Originates from the nucleus of centro - dosails of posterior Iron cells of coccygeal plexys and second order neuron of this tract ends in paraventricular nucli of hypothalamus, where neuro secretary materials are present.

Human physiology- Chatterjee - page 5-312

Significance of Neuro Secretary cells

Neuro Secretary cells translated the neural information to endocrine for its function. -Chatterjee page 3-312

Through the superior cervical ganglia the neurosecretary cells contact with pineal neurosecretary cells.

-Human Nervous System, page 342

Mechanism of synoptic transmission

Activating current first travels along neural process (electrical phenomena of conduction) through ventral - Spino thalamic tract afterwards radiates over the synapase and causes the liberation of acetyl - choline contained in the synoptic vesicles of paraventricular neucli of hypothalamus.

Human physilogy-Chatterjee, page 3-97

Acetyl choline traverses the inter synoptica space and becomes attached to neuro secretary receptors which are situated in Hypothalamus and this causes a post synaptic current action and which 11 stimulate para ventricular nuclei of hypothalamus to secrete the neuro secretary cells. This secretion stimulates the pineal body through superior cervical ganglia for its regeneration of its histology.

Significance of Neuro - Secretary - cells

Neural information is channelled to pineal body and by which neural inputs are translated in endocrine functions

-Human physiology-Chatterjee, page 5-312

Along with the yoga practice many reflxes are inducing this physilogy. The pineal seems to participate in the regulation of the rhythmic activity of the endocrine system by the elboration of specific hormone or compounds such as methoxyindoles. This prime stimuli is medicated by visual reflexes.

-Human Physiology - Chatterjee-4-194

As photic stimulus relayed for optic pathways via sympathetic serve fibre is translated by pineal activity into a go nodal control.

Human Physiology - Chatterjee, page, 4-194

Pineal activity is increased in blindness or long term exposure to the dark.

Human Physiology-Chatterjee, Page 342

ஆகவேதான் யோகிகள் யோகங்களை இருண்ட குகைதனில் அப்பியாசித்தனர்.

HIMOT activity which normally increases in continuous darkness.

Through the inhibition of G.R.F. by means by yoga regenerated pineal will secrete its compound through pinealocyte. This secretion influences up on the hypothalamus. The route of hormote transport from pineal body may be via the blood vascular system or the C.S.F. into IIIrd ventricle.

குண்டலினி யோக முறையை உடலியங்கியல் ஆய்வின் மூலம் அணுகும் போது பீனியல் கோளத்தின் சுரப்பே மதியமுது ஆகும் என்பது உறுதி.

இந்த ஆய்வுக் கட்டுரையினின்று பீனியல் கோளம் பற்றிய புதிய கற்பிதக் கொள்கைகள்

A.G's Hypothesis of Pineal Gland

1. பீனியல் கோளம் தற்போது சுரப்பதாகக் கூறப்படும் மெலடோனின் HIMOT METHOLXY INDOLES இவை தவிர புதிய சுரப்பைச் சுரக்கலாம். இது சித்தர் விஞ்ஞானத்தில் மதியமுதாகக் கூறப்படுகிறது.

2. இச் சுரப்பானது Regeneration of hypothalamic neucli க்கு வழி வகுக்கும்.

3. பீனியல் கோளம் 14 வயதிற்குப் பின் செயல் தன்மை முற்றிலும் இழந்து விடுவதில்லை. ஆகையால், அதை மீண்டும் உயிர்ப்பிக்க இயலும்.

4. மூளையில் இருண்ட பகுதிகளையும் (In solar region) செயல்படுத்தும் வன்மை பீனியல் சுரப்பிற்கு உண்டு.

5. இச்சுரப்பின் மூலம் மனித வாழ்வை நீடிக்கலாம்.

யோக மருத்துவம் - மதுமேகமும் மறதியும்

க. இரவி, பயிற்சி மருத்துவர்
த. பாபு, பயிற்சி மருத்துவர்
பேராசிரியர் டாக்டர் சு. இராசேசுவரி, எம். டி.

உலகில் ஒவ்வொரு மனிதனும் இன்பமாக வாழவேண்டும். நீண்டநாள் வாழவேண்டும். நோயின்றி வாழ வேண்டும். மேற்சொன்ன வழியில் வாழ வழியில்லாமல் இல்லை. பல சித்தர்கள் எவ்விதச் செலவும் இன்றி மனிதன் பல்லாண்டு இன்பமாக வாழப் பல வழிகளை வகுத்துள்ளனர். அவற்றில் முக்கியமானது யோகாசனப்பயிற்சி வழி.

உடலுக்கு வலுவும் உள்ளத்துக்குத் தெம்பும் மூளைக்குச் சிந்தனைச் சக்தியும் கொடுக்கும் ஒரே உடற்பயிற்சி யோகாசனம். இப்பயிற்சியினால் விளையும் நண்மைகள் கணக்கில் அடங்கா. இக்கட்டுரையில் உலகில் பொதுவாக மக்களிடையே காணப்படும் நோயாகிய மதுமேக நோய்க்கும் எல்லா வயதினரும் அவதிப்படும் ஞாபகமறதி என்னும் நோய்க்கும் யோக முறையில் பயிற்சியைப் பற்றித் தெரிவிக்கின்றோம்.

மதுமேக நோய்க்குப் பற்பல காரணங்கள் கூறப்பட்டிருந்தாலும் இந்நோய்க்குக் கொடுக்கும் மருந்துகள் இரத்தத்திலோ சிறுநீரிலோ காணப்படும் சருக்கரைச் சத்தைக் கட்டுப்படுத்த மட்டுமே செய்கின்றன. இன்சுலினைச் சுரக்கச் செய்யும் கணையத்தின் பீட்டா விலங்களைத் தூண்டுவிப்பதில்லை. மதுமேக நோய் மருத்துவத்தில் அந்த விலங்களுக்கு வேலையில்லாததால் நாளடைவில் சூம்பி விடுகின்றன. யோக மருத்துவத்தில் அவை அழிந்து போகாமல் இருக்கு உறுதி கொடுத்து இரத்தச் சுழற்சியைப் பெருக்கி வேலை செய்ய வைப்பதே ஆகும். மேலும் இம்முறையில் மகிழ்ச்சியான செய்தி சர்க்கரைச் சத்து உள்ள உணவுப் பொருட்களை உண்டாலும் நீரின் சர்க்கரை அற்ற நிலையும், இரத்தத்தில் இயல்பான சர்க்கரை நிலையையும் ஏற்பட வைப்பதே ஆகும்.

யோக முறை:

ஆசனம் போடும் விதம் காற்றோட்டமாயும், ஆடைகள் இறுக்கமின்றியும் மலநீர் கழித்து உணவு உண்பதற்கு முபும் அதிகாலையில் நீராடிய பிறகும் செய்வது நலம். ஆசனங்கள் நிதானமாகவும் படிப்படியாகவும் செய்ய வேண்டும். முதலில் குருவின் உதவியுடன் செய்ய வேண்டும்.

கிரியா அடயோகம்:

1. தலை முழங்கால் ஆசனம்
2. நின்ற கொக்காசனம்
3. விட்டில் ஆசனம்
4. அமர்ந்த கொக்காசனம்
5. வில்லாசனம் (இதில் ஆடுகுதிரை மலைப்பாம்பு ஆசனம்)
6. மயிலாசனம்

1. தலை முழங்கால் ஆசனம்: (பவண முத்தாசனம்)



இவ்வாசனத்தில் வலது முழங்கால், இடது முழங்கால் இவற்றின் அழுத்தம் வயிற்றுப் பகுதியில் படும்படியாக அமைவதால் கணையமும், ஈரலும் தூண்டப்படுகின்றன. அடிவயிற்றின் தசை இறுக்கமடைகிறது.

2. நின்ற கொக்காசனம்



இவ்வாசனம் மதுமேக நோயாளிகள் இதய நோயுடன் அவதியுறும் போது நல்ல பலன் ஏற்படும். முதுகுத் தசைகள் விலக்கப்பட்டு பலம் பெறும். வயிற்று உறுப்புகள் அழுத்தப்பட்டுப் புத்துணர்ச்சி பெறும். (முதுமை அணுகாது)

3. விட்டில் ஆசனம் (சலபாசனம்)



இவ்வாசனத்தில் வயிற்றுப் பகுதியில் அதிகமான இரத்தம் தூண்டப்படும். நடு உடல்பகுதி பலப்படும். மலச்சிக்கல் தீரும். கல்லீரல், மண்ணீரல் கணையம் நன்கு வேலை செய்யும். தொந்தி குறையும்.

4. அமர்ந்த கொக்காசனம்:



இவ்வாசனத்தில் கல்லீரல், மண்ணீரல், கணையம், இரைப்பை, பிருக்கம், இவை புத்துணர்ச்சி பெற்றுத் தமது கடமைகளைச் சரிவரச் செய்கிறது. இளமை மேலிடும்.

5. வில்லாசனம்



இவ்வாசனத்தில் வயிறு தரைப்பகுதியில் இருந்து நன்றாகக் கசக்கப் படுவதால் வயிற்று உள்ளுறுப்புகள் தூண்டப்படுகின்றன. சிறப்பாக மலைப் பாம்பு ஆசனத்தினால் வயிற்றில் வலப்பக்கத்திலும், இடது பக்கத்திலும் அழுத்தம் ஏற்படுவதால் ஈரல், கணையம் தூண்டப்படுகின்றன.

6. மயிலாசனம்:



இவ்வாசனம் மதுமேக நோய்க்கு என்று சிறப்பாக உள்ளது. இவ்வாசனத்தைப் போடுவது கடினம் என்றாலும், இவ்வாசனத்தில் முதல் நிலையாகிய பறவை நிலையை எளிதாகப் போடலாம். இதில் முழங்கையின் அழுத்தம் கணையத்தில் இருக்கும்படி போடுவதால் கணையம் தூண்டப்படுகிறது.

நீரிழிவு நோய்க்கு என்று இன்னும் பல ஆசனங்கள் இருந்தாலும் எளிய முறையில் போடக்கூடிய இந்த ஆசனங்களைச் செய்தாலே நல்ல பலன் அளிக்கும். மேலும்,

1. நோயாளியைத் தினமும் ஒரு மைலுக்கு குறையாமல் நடக்கச் செய்வது

2. ஓடாத மிதிவண்டி (Static Cycle) முடிந்தவரை ஓட்டச் செய்ய வேண்டும்.

3. பேசிகளை இயக்கும் கிரியாக்கள் 10 நிமிடம் செய்ய வேண்டும்.

மறதி என்பது எல்லா வயதினருக்கும் உள்ள கோளாறாக இருந்தாலும் மாணவர்களுக்கு நினைவாற்றலை அதிகப்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பாகும். அதற்குரிய செயலைச் செய்யும் போதும் கற்கும் போதும் மனதை ஒரு நிலைப் படுத்தல் வேண்டும். மனம் என்பது ஒரு நீருள்ள குட்டையைப் போன்றது. சிறுகாற்றுக்கூட அதன் பரப்பைக் கலக்கும். மனத்தைக் கட்டுப்படுத்துவது எப்படி? இதனை யோகாசனத்தின் மூலம் அடையலாம். குறிப்பாகத் தியானத்தின் மூலம் அடையலாம்.

1. தியானம்

காற்றோட்டமான இடத்தில் பத்மாசனம் இட்டு அமர வேண்டும். பத்மாசனம் போட முடியாதவர்கள் சுகாசனத்தில் அமரலாம். நன்றாக நிமிர்ந்து உட்கார்ந்து இடது கை கீழாகவும் வலது கை மேலாகவும் மடியில் வைத்துக்கொள்ளவும். மனத்தை ஒரு நிலைப்படுத்த ஏதாவது ஒரு பொருளை உதாரணமாக எரிகிற மெழுகு வர்த்தியின் வெளிச்சத்தைக் கண்களை மூடிக்கொண்டு மனதினால் பார்க்கலாம். திறந்த கண்களோடுபார்க்கும்போது அது எப்படித் தோன்றுகிறதோ அதுமாதிரி அகக் கண்களுக்குத் தோன்ற வேண்டும். படிப்படியாக இதன் மூலம் மனத்தை ஒரு நிலைப் படுத்த முடியும்.

2. சிரசாசனம்



ஆசனங்களில் அரசி எனப் படுவது சிரசாசனம் ஆகும். தலையை முதன்மையாக வைத்துச் செய்யப் படும் ஆசனம். சிரசில் உள்ள மூளை அறிவிற்கும் ஆற்றலுக்கும் இருப் பிடமாக இருக்கிறது. என்று அழைக்கப்படும் நல்ல நிலையில் இயங்கவும் இந்த ஆசனம் பயன் படும். இந்த ஆசனத்தால் சிரசிற்கும் குருதி சுற்றோட்டம் நல்ல முறை யில் பரவுவதால் ஞாபக மறதி நீங்கும். செய்யக்கூடாதவர்கள், குருதி அழுத்தம் அதிகமாக உள்ளவர்கள், இதய நோயாளிகள், மிகவும் இளவயதினர் அவர்கள் அர்த்த சிரசாசனம் செய்யலாம்.

3. சருவாங்க ஆசனம்



இது ஆசனங்களின் தாய் எனப் படுவது. தாய் எவ்வாறு வீட்டைச் சிறந்து விளங்கச் செய்கின்றாளோ அதுபோல் உடலைச் சிறப்படையச் செய்யும் ஆசனம் ஆகும். வீதன கோளமும் நல்ல நிலையை அடைகின்றது. உடல் மந்தமுற்ற நிலை மாறிச் சுறுசுறுப்பு அடைகிறது. பாதம் வரை உள்ள அசுத்த ரத்தம் இதயத்தை நோக்கிப் பாய்ந்து எளிதில் சுத்தம் அடைகிறது. மலக்கட்டு நீங்குகிறது. இந்த ஆசனத்தினால் மலினங்கள் நீக்கப்படுவதால் உடல் புத்துணர்ச்சி பெறுகிறது.

4. விபரீத கரணி:

சர்வாங்காசனத்தின் 80% பயன் கள் இந்த ஆசனத்தில் கிடைக்கும். ஞாபக சக்தியுடன் சுறுசுறுப்பும் கிடைக்கும். கண்ணொளி பெருகும்.



5. திரிகோண ஆசனம்:

இதில் 10 நிலைகள் உண்டு. இதனால் மூளை முதுகுத் தண்டு தூண்டப்படுகின்றன. இதயத்துக்கு இரத்த ஓட்டம் நன்கு பாய்கிறது. ஞாபக சக்தி பெருகும்.



6. உத்தானாசனம்:

இந்த ஆசனம் மனத்தில் சோர்வு ஏற்பட்டிருந்தால் அதை நீக்க உதவுகிறது. விரைவில் உணர்ச்சி வசப்படும் மனிதர்களுக்கு இந்த ஆசனம் அவர்கள் அமைதிப்படுத்த உதவும். இந்த ஆசனம் போட்டு முடிந்த பிறகு கண்களில் ஒளி பெருகும். உடல் வெப்பம் தணியும். மனம் அமைதி உண்டாகும். சிரசாசனம் போட முடியாதவர்கள் முதலில் இதைப் பயிலலாம். மறதியும் மதுமேகமும் ஒரு சவாலாகவே இருக்கின்ற இக்காலக் கட்டத்தில் எளிதாக எல்லோராலும் செய்ய வல்ல விலையில்லா நலமிக்க யோக மருத்துவம் ஒரு சிறந்த தீர்வு. யோக மருத்தும் செய்யத் தனியோர் வசதியோ விலை உயர்ந்த சிறப்புக் கருவிகளோ தேவையில்லை. எங்கும் எப்பொழுதும், எல்லோராலும் செய்யவல்ல யோகப்பயிற்சி தற்போது நம் கல்லூரிப் பாடத்திட்டத்தில் முதலாம், இறுதியாண்டுகளில் இருக்கின்ற போதிலும் செயல் முறைப் பயிற்சி வழங்கப்படுமாயின் இந்தச் சித்த மருத்துவர்கள் தாம் சென்று பணிபுரிகின்ற எந்த இடத்திலும் எந்த ஊரக மருத்து மனைகளிலும் கூட மக்களுக்குக் கற்றுத் தந்து நோய்களை நீக்கலாம். மேல் சுவாசப் பாதை தாபிதம் முதல் புற்று நோய் மற்றும் நோய்த் தடுப்பு முறை நோய் வரை யோக மருத்துவத்தில் தீர்வு உண்டு. இதனை நடைமுறைப்படுத்துவதே பாலும் தெளிதேனும் கலந்து தரும் தன்மை போன்றது.

இக்கட்டுரையை வடிவமைக்க உதவிய நூல்கள்:

1. யோகி, இராமையா அவர்களின் போதனைக் குறிப்புகள்

2. இரா. ஆண்டியப்பன் ஆரோக்கிய வாழ்வு

3. LIGHT ON YOGA - B. K. S. IYENGAR.

ஓலைச் சுவடியில் சித்த மருத்துவம் ஒரு ஆய்வு

டாக்டர் கா. பழனிச்சாமி பி.ஐ.எம்.,மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்.
பெரியார் மாவட்டம், ஈரோடு.
டாக்டர் பி. லலிதாபாய், பி.ஐ.எம்., உதவி மருத்துவ அலுவலர் (சித்தா)
ஆரம்ப சுகாதார நிலையம், சித்தோடு, பெரியார் மாவட்டம்.

மனித இனம் தோன்றிச் சில காலங்களில் அவர்களின் எண்ணங்களை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற வகையில் முதலில் செய்கையாலும் பிறகு பேச்சாலும் வெளிப்படுத்தினார்கள். ஆனால் இவைகள் காலத்தால் அழிந்து விடக்கூடியவை. எனவே அவற்றைப் பாதுகாத்துப் பேணிக் காக்கின்ற வகையிலே பாறைகளிலும், களிமண், ஓடுகளிலும் மரப்பட்டைகளிலும், இலைகளிலும், துணிகளிலும், தாமிரத் தகடுகள் ஆகியவற்றிலும் எழுதி வைத்தார்கள். இதே போன்று ஓலைகளிலும் எழுதி வைத்தார்கள். இப்படி ஆவணங்களாகப் பயன்பட்ட ஓலைகள் கூந்தல் பனைஓலை, பனைஓலை ஆகியவைகள் சிறப்பான இடத்தை வகிக்கின்றன. இன்றும் இமயமலைப் பகுதிகளிலும் காகஸ் பத்தர் என்ற மரத்தின் பட்டையில் எழுதி வைத்திருக்கின்ற ஆவணங்கள் கிடைக்கப் பெறுகின்றன. தமிழகத்தில் சிறப்பாகப் பனை ஓலை களிலேயே அதிகமாக எழுதி வைத்தார்கள்.

பத்திரம் என்று வடமொழிச் சொல்லுக்கு இலை என்பது பொருளாகும். இன்றும் திருமணம் நடக்கும் பொழுது பத்திரம்/ ஓலை வாசித்தல் என்ற நிகழ்ச்சி நடைபெறுகின்றது. மேலும் வீடு, நிலம் ஆகிய சொத்துக்களைப் பதிவு செய்யும்போதும் இவ்வோலைகள் பயன்படுத்தப்பட்டன. ஆக காலங்காலமாக இவ்வோலைச் சுவடிகள் ஆவணங்களாகப் பலவற்றிற்கும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

இறை அருளோடு கூடிய அறிவியல் வல்லுநர்கள் எனச் சித்தர்களும் தாங்கள் அறிவு பூர்வமாகக் கண்டறிந்த மருத்துவ உண்மைகளை இவ்வோலைச் சுவடிகளில் எழுதி வைத்துப் பிறகு வேறொரு ஓலைச் சுவடிகளில் பதிவு எடுக்கலாயினர். காகிதம் கண்டுபிடித்து அச்சுத் தொழில் (அச்செடுக்கும் கலை) வளர்ந்து வரும் முறையில் ஓலைச்சுவடிகளில் எல்லோரும் எழுதி வைத்து வந்தனர். இவ்வோலைச் சுவடிகள் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஓலைச்சுவடிகளை வேண்டும்போது எடுத்து அவைகளை எண்ணெய் பூசிய பின் அவற்றிலிருந்து கருத்துக்களைப் படித்த அறிந்து கொண்டனர். தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மருத்துவரிடத்திலும் இவ்வோலைச் சுவடிகள் தற்காலத்தில் நூல்கள் காத்து வைப்பது போல் காப்பாற்றப்பட்டு வருகின்றன. காலம் செல்லச் செல்ல அவர்களின் சந்ததியினர் அவற்றைப் பராமரிக்காததாலும் மருத்துவத் துறையில் ஈடுபாடு இல்லாததாலும் அரசும் மற்ற நிறுவனங்களும் அவைகளை வாங்கி நூலகங்களில் பாதுகாத்து வந்தன. அப்படிப் பாதுகாத்து வைத்த நூலகங்கள் சென்னை ஓரியண்டல் மேனஸ்கிரிப்ட் லைப்ரரி, சரசுவதி மகால் லைப்ரரி தஞ்சை, பிரென்ச இன்ஸ்டிடியூட் ஆப் இண்டாலஜி பாண்டி, தமிழ்ச்சங்கம் மதுரை, குமாரதேவ வீரசைவ மடம் துறையூர், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை, அரசு சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டை, ஓரியண்டல் மேன்யுஸ்கிரிப்ட் லைப்ரரி, வெங்கடேசுவரா பல்கலைக் கழகம், திருப்பதி, தமிழ்நாடு சித்த மருத்துவ வாரியம் சென்னை, மத்திய ஆராய்ச்சி நிறுவனம், (சித்தா) சென்னை ஆகிய நிறுவனங்கள் அடங்கும். இவைகள் தவிர மடங்களிலும் தனியார் ஆகியோரும் பாதுகாத்து வந்த இவைகள் முறையாகப் படி எடுத்துப் பிறகு நூலாக வெளியிடப்பட்டுள்ளன.

எல்லா நூலகங்களில் இருக்கின்ற சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள் பற்றி எடுத்துக்கூறி இயம்ப வேண்டும் என்று என்னுள் ஒரு அவா இருந்தாலும் காலமும் நேரமும் கருதித் திருப்பதி வெங்கடேசுவரா பல்கலைக்கழகத்தில்

உள்ள ஓரியண்டல் மேன்யுஸ்கிரிப்ட் நூலகத்தில் உள்ள மருத்துவ ஓலைச்சுவடிகள் பற்றி மட்டும் எடுத்துக்கூற விழைகிறேன்.

1939ஆம் ஆண்டு ராவ்பகதூர் கே. வி. ரங்கசாமி அய்யங்கார் அவர்களின் தலைமையில்கீழ் இந்த நிறுவனத்திற்காக ஆந்திரப்பிரதேசத்திலும், தமிழகத்திலும் கிடைக்கின்ற சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள் அனைத்தும் சேகரிக்கப்பட்டன. 1940ல் சேகரிக்கும் வேலை நிறுத்தப் பெற்றது. இந்நிறுவனத்தில் 111 தமிழ் மருத்துவ ஓலைச்சுவடிகள் இருக்கின்றன. இவைகளில் 25 ஆயுர்வேதா மருத்துவம் எனப் பெயரிடப்பட்டுள்ளன. இந்த ஓலைச்சுவடிகள்தான் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபோது இருகூறுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒன்று சென்னையிலும், தஞ்சையிலும் ஏற்கனவே இருக்கின்ற ஓலைச்சுவடிகள், மற்றொன்று தஞ்சை, சென்னை ஆகிய இடங்களில் இல்லாத ஓலைச்சுவடிகள். தஞ்சையிலும் சென்னையிலும் இல்லாத ஓலைச்சுவடிகள் 65 கட்டுகளாக இருந்தன. அவைகளை மறுபடியும் பிரித்துப் பார்க்கின்றபோது 108 தனித்தனியான ஓலைச்சுவடிகள் இந்த 65 கட்டுகளிலும் இருந்தன. ஒவ்வொரு பொருளைப் பற்றியும் மருத்துவக் கருத்துக்கள் ஒன்று முதல் மூன்றுவரை உள்ள பக்கங்களிலும், சில பொருட்கள் பற்றி 150 முதல் 300 ஓலைகளிலும் சில பொருள்கள் பற்றி 300 முதல் 600 ஓலைகளிலும் எழுதப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் பெயர்களைக் கொண்டு கீழ்க்கண்டவாறு பிரிக்கப்பட்டன. அகத்தியர் 31, தட்சிணாமூர்த்தி 3, சட்டைமுனி 2, கொங்கனர் 4, கௌசிகர் 1, மச்சமுனி 1, நந்தி 3, கருவூரார் 2, பிரம்மமுனி 1, பிண்ணாக்கீசர் 1, இடைக்காடர் 1, புலிப்பாணி 2, தேரையர் 1, மாணிக்கவாசகர் 1, இராமதேவர் 5, கும்பமுனி 1, போகர் 1, மிஞ்சிய 47 ஓலைச்சுவடிகளும் ஆசிரியர் பெயர் போடாமல் மருத்துவச் செய்திகள் மட்டும் உள்ள ஓலைச்சுவடிகள் ஆகும். பொருள்கள் நோக்கில் பார்த்த போது கீழ்க்கண்டவாறு

பிரிக்கப்பட்டன. சித்த மருத்துவத்தினைப் பற்றிப் பொதுவான கருத்துக்கள் 4. மருந்துப் பொருட்களின் குணநலன்கள், மருந்து செயல்முறை, மருந்துகள் ஆகியவை குறித்து 71, கண் நோய்கள், நஞ்சு முறிவு, ரணவைத்தியம் பற்றியும் தனியாக ஒன்றும் இல்லை. காயகல்பம் பற்றியும் தனியாக ஒன்றும் இல்லை. முப்பூ, யோகம், ஞானம், சித்தாந்தம் ஆகியவைகள் குறித்து 22, முப்பும், இரசவாதம் குறித்து 6 இயந்திரம், மந்திரம், ஜாலம் ஆகியவைகள் குறித்து 5 மொத்தம் 108 ஓலைச்சுவடிகள் உள்ளன. ஓலைச் சுவடிகளைப் பிரித்துப் பார்க்கின்ற போது சில ஓலைச்சுவடிகளில் எழுதிய ஆசிரியரின் பெயரோ அல்லது அந்த ஓலைச்சுவடி எந்தப் பொருள் பற்றி கூறுகிறதோ அந்தப்பொருள் தாங்கி இருக்கின்றது என்று படித்துப் பார்க்கும்போது மற்ற பல கருத்துகள் அதில் நிரம்பியுள்ளன. எடுத்துக்காட்டாக, இராமதேவர் பூஜாவிதி என்ற ஓலைச்சுவடியில் நந்தி உப்பு, கொங்கணர் தரிசனம், அகத்தியர் தனிச்செயல் ஞானம் 100 என்ற பொருட்கள் பற்றிச் செய்திகள் அடங்கியுள்ளன. ஏற்கனவே, என்னுடைய ஆய்வை முடித்துக்கொண்டு கிளம்புகின்ற நாளில் ஆயுர்வேதா ஓலைச்சுவடிகள் என ஒதுக்கி வைத்த ஓலைச்சுவடிகளில் ஒன்றை எடுத்துப் பிரித்துப் பார்த்தபோது முதல் ஏட்டில் ஆயுர்வேதா என எழுதியிருந்தாலும் முழுவதும் சித்த மருத்துவச் செய்திகள் அடங்கியதாக இருந்தன.

இனி ஒவ்வொரு ஓலைச்சுவடிக் கட்டுகளும் என்னென்ன கருத்துக்கள் கூறுகின்றன என்று மட்டும் ஓரிருவரிகளில் தொகுத்துக்கூற விழைகிறேன்.

ஓலைச்சுவடி எண் 5230: அகத்தியர் சவுக்காரத் திறவுகோல். இது நல்ல நிலையில் உள்ளது. முழுவதும் உள்ளது. 120 பக்கங்கள் கொண்டது. யோகம், இரசவாதம், காயகல்பம் மருந்து செய்முறைகள் மற்றும் சவுக்காரம் கிடைக்கும். இடங்கள் ஆகியவை பற்றிக் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 5231: அகத்தியர் பெருங்குழம்பு 284 பக்கங்கள் - மருந்து செய்முறைகள்.

ஓலைச்சுவடி எண் 5217: 256 பக்கங்கள் - இவ்வோலைச் சுவடி ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன. 1. அகத்தியர் வைத்தியம் 1100 - 38 பக்கங்கள் - மருந்து செய்முறைகள், மருந்துச் சரக்குகள் சுத்தம் செய்தல்.

2. அகத்தியர் அருளிச்செய்த லோக மாரண சூத்திரம் - 34 பக்கங்கள். உலோக சம்பந்தமான மருந்து செய்முறைகள்.

3. அகத்தியர் அருளிச்செய்த பூஜாவிதிக்குச் சூத்திரம் - 18 பக்கங்கள், முப்பூ பற்றிய செய்திகள்.

4. அகத்தியர் அருளிச் செய்த சூத்திரம் - 18 பக்கங்கள் - செய்முறைகள்.

5. தட்சிணாமூர்த்தி முப்பூ தீட்சை - 20 பக்கங்கள், மருந்துச் சரக்குகள் சுத்தி முறை முப்பூ செய்முறை.

6. அகத்தியர் அருளிச்செய்த திருநீலகரணம் - 50, 18 பக்கங்கள்-முப்பு மற்றும் மருந்து செய்முறைகள்.

7. கொங்கணர் சுவாமி அருளிச்செய்த நாற்பது -12 பக்கங்கள் மூப்பு உபரசங்கள் தூய்மை செய்முறை

8. சட்டமுனி நிகண்டு சூத்திரம் - 66 பக்கங்கள்-மருந்து செய்முறைகள்

ஓலைச்சுவடி எண். 5429:- மொத்த பக்கங்கள் 298, இதில் 8 வெவ்வேறு பகுதிகள் உள்ளன.

1. அகத்தியர் மூப்பு - 50 மொத்தம் 36 பக்கங்கள் முப்பு செய்முறை

2. தட்சிணாமூர்த்தி நரசிம்ம லேகியம்-16 பக்கங்கள் - லேகியம் செய்முறை.

3. நீலகண்டம் 300ல் இரசவர்க்கச் செந்தூரம் 18 பக்கங்கள் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அனுபவ மருந்து செய்முறைகள்.

4. அகத்தியர் அருளிச்செய்த ஆறுமுகச் செந்தூரம் 2 பக்கங்கள்-ஆறுமுகச் செந்தூரம் செய்முறை அதன் பயன்கள்.

5. இராமபாணம் 6 பக்கங்கள் இராமபாணம் மாத்திரை செய்முறையும் அது குளிர் ஜ்ரம் ஆகியவைகளுக்குக் கொடுப்பது குறித்துக் கூறப்பட்டுள்ளது.

7. குமரித்தைலம் -1 பக்கம்-சோற்றுக் கற்றாழையைப் பயன்படுத்தித் தைலம் செய்முறை.

8. கந்தகபற்பம் - 1பக்கம்-கந்தகபற்பம் செய்முறையும் அதன் பயனும் கூறப்பட்டுள்ளன.

9. அனுபவ வைத்தியம் - இந்த ஓலைச்சுவடியில் கிட்டத்தட்ட முக்கால் பகுதியை இது நிறைவு செய்கிறது. இதில் மருந்துகள் செய்முறையும், அது நடைமுறையில் பயன்படுத்தி என்ன என்ன பலன்கள் கண்டறிந்தார்கள் என்பது பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 5220: அகத்தியர் வைத்தியம் 602 பக்கங்கள் செய்முறைகளும் அவற்றின் பயன்களும்.

ஓலைச்சுவடி எண். 6581:- அகத்தியர் வைத்தியம் 205 பக்கங்கள் 126, மருந்து செய்முறைகளும் அவற்றின் பயன்களும்.

ஓலைச்சுவடி எண் 6562: அகத்தியர் வைத்தியம் பக்கங்கள் 116 இவ்வோலைச் சுவடி உரை நடையிலேயே உள்ளது. மருந்து செய்முறையும் அதன் பயன்களும்.

ஓலைச்சுவடி எண் 5259: இது இரு பகுதிகளாகக் காணப்படுகின்றன. பக்கங்கள் 268. அ. மருந்து செய்முறைகளும் அதன் பயன்களும். 247 பக்கங்களைக் கொண்டதாக உள்ளது. இரண்டாவது பகுதியானது கௌசிகர் குழம்பு என்ற மருந்து செய்முறையைப் பற்றி 21 பக்கங்களில்

விளக்கியுள்ளது. மேலும் இப்பகுதியில் யாக்கோப்பு எண்ணெய், அகத்தியர் உலா ஆகியவைகளும் சேர்த்து காணப்படுகின்றன.

ஓலைச்சுவடி எண் 3411: சி. 186 பக்கங்கள். அபஸ்மாரண் வியாதிக்கு மருந்து. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மயக்கத்தைத் தெளிய வைப்பதற்கான உரிய மருந்து செய்முறைகள்.

ஓலைச்சுவடி எண் 5244- 166 பக்கங்கள் பதினான்கு பகுதிகளாக இருக்கின்றன.

1.அகத்தியர் சிவகுளிகை -7 பக்கங்கள் சிவகுளிகை மருந்து செய்முறையும் அது குழந்தைகளுக்குரிய மாந்தத்திற்கு வழங்குவது பற்றியும் கூறுகின்றன.

2. கொங்கணர் பார்வைக்குளிகை: 8 பக்கங்கள் - குழந்தைகளுக்குப் பயன்படுத்தும் முறை மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

3. சட்டமுனி பாடல் 8: 6 பக்கங்கள். பற்பம் செய்முறையும் அதன் பலன்களும்.

4. மச்சமுனி பாடல்8: 16 பக்கங்கள் மருந்து செய்முறைகளும் அது மேகநோய்க்குப் பயன்படும் முறைகளும்.

5. நந்தீசர் பாடல் 8: பக்கங்கள் 16, மாத்திரைகள் செய்முறையும் அது எலிகடிக்காகக் கொடுப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது.

6. அகஸ்திய சுவாமிகள் புராண காவிய சூத்திரத்தில் இரச கற்பூரவைப்புக் கற்பம், 33 பக்கங்கள், மருந்து செய்முறைகள் உலோகங்களைத் தூய்மை செய்தல், பிள்ளைப் பேற்றுக்குக் கொடுப்பதற்குரிய மருந்துகள் ஆகியவைகள் கூறப்பட்டுள்ளன.

7. கருவூரர் மாதுளம்பழக் கிருதம்: 2 பக்கங்கள் மாதுளம் பழத்தைக் கொண்டு நெய் செய்யும் முறையும் அது மூல நோய்க்கும் சுரத்திற்கும் பயன்படுத்தும் முறைகள் பற்றி.

8. பிரம்ம முனி வேதாந்த சுரம்: 2 பக்கங்கள் - மருந்து செய்யும் முறையும் அதன் பயன்களும்.

9. புண்ணாக்கீசர் வல்லாரை கிருதம்: 2 பக்கங்கள். மருந்து கொண்டு நெய் செய்யும் முறையும் அது மேக நோய்க்காகக் கொடுப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளன.

10. மேகப்புண் ரணத்தைலம்: 4 பக்கங்கள்- ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மேகநோய்க்காகச் செய்யப்படுகின்ற தைலம் பற்றிய குறிப்பு

11. இடைக்காடர் நாடி: 10 பக்கங்கள் - நாடி பார்த்தலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களும் செந்தூரம் செய்முறைகளும் கூறப்பட்டுள்ளன.

12. அகத்தியர் அருளிச்செய்த மெய்ஞ்ஞான நாடி-27 பக்கங்கள் 27-நாடி பார்த்தல். நாடியைக்கொண்டு வளி, அழல், ஐயம் ஆகியவைகளின் நிலைகள் அறிந்து நோய்களைக் கணித்தல்.

13. புலிப்பாணி முனிவர் அருளிச் செய்த சிமிழ் வித்தை-25 பக்கள் - அஷ்டகர்மம், பெண்களை வசியம் செய்தல் ஆகியவைகளைப் பற்றிக் கூறப்படுகின்றன.

14. கொங்கணர் முப்பு 3 பக்கங்கள் 3 முப்பூ பற்றிய செய்முறைகள் ஓலைச்சுவடி எண் 5225: 294 பக்கங்கள், இவ்வோலைச் சுவடியானது இருபகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. அகத்தியர் சவுமியசாகரம்: 282 பக்கங்கள், யோகம், ஞானம், பூஜாவிதி, முப்பு, மருந்துகள் தூய்மை செய்யும்

முறை மருந்து செய்முறை, பிராணாயாமம் மற்றும் ஐம்பூதக் கூறுபாடுகளும் அவை மனித உடலில் எவ்வாறு செயல்படுகின்றன என்பது பற்றியும் கூறப்படுகின்றன.

2. அகத்தியர் சூத்திரம்: 8 பக்கங்கள், ஞானம், யோகம் பற்றிக் கூறப்படுகிறது. மற்ற நான்கு பக்கங்கள் சேதமடைந்துள்ளன. ஓலைச் சுவடி எண் 5110: தேரையர் கியாழம் 22 பக்கங்கள். கியாழங்கள் செய்முறையும் அவற்றின் பயன்களும்.

ஓலைச்சுவடி எண் 5229: இது இருகூறாக உள்ளது. 77பக்கங்கள்.

1. அகத்தியர் இரத்தினச் சுருக்கம். 73 பக்கங்கள். நாடி பார்க்கும் முறை. நோய்க் கணிப்பு, மருந்து செய்யும் முறை. அதன் பயன்கள்.

2. அகஸ்தியர் மணிக்கடை சூத்திரம் 4 பக்கங்கள். நாடி பார்த்தல், நோய்க்கணிப்பு, இதற்கடுத்து 13 எழுதாத ஓலைச் சுவடிகள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 5115: இது 9 பகுதிகளாக உள்ளது. 132 பக்கங்கள்.

1. சரசாஸ்திரம்: 18 பக்கங்கள், ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பிராணாயாமம் பற்றிய செய்திகள்.

2. சிதம்பர சுவாமிகள் அருளிச் செய்த ஆனந்தக் களிப்பு: 5 பக்கங்கள், சைவ சித்தாந்தம்.

3. மாணிக்க சுவாமிகள் 9 பக்கங்கள். சைவசித்தாந்தம்.

4. நந்தீஸ்வரர் முன்னூறில் சரப்போக்கு. 21 பக்கங்கள். இரசம் சேர்ந்த மருந்துகள் செய்முறை. அதன் பயன்கள்.

5. அகத்தியர் அருளிச் செய்த சண்டமாருதச் செந்தூரம் செய்முறை அதன் பயன்கள்.

6. சகல சர்ப்ப விஷங்களுக்கும் மணிமருந்து 5 பக்கங்கள். பாம்புக் கடிக்கு மருந்து செய்முறை.

7. கேதாரேசுவர ரசகல்பம், 12 பக்கங்கள்-மந்திரங்கள்

8. சுத்த ஞானம் பக்கம் 22 சைவசித்தாந்தம் பற்றியும் சரப்பயிற்சி பற்றியும் கூறப்படுகின்றன.

9. மந்திரங்கள்-ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 16 பக்கங்கள்.

குறிப்பு: 23 எழுதப்படாத ஓலைகள் இருக்கின்றன.

ஓலைச்சுவடி எண் 5102: இது இருபகுதிகளாக இருக்கின்றன. 356 பக்கங்கள் உள்ளன.

1. அகத்தியர் அருளிச்செய்த ரசவாதத் திரட்டு - 24 பக்கங்கள். பஞ்சபூதம் பற்றிய அடிப்படைத் தத்துவங்களும் ஒவ்வொரு ஆற்றுநீரின் குணாதியங்கள் பற்றியும் மருந்துப் பொருட்களின் குணங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

2. பதார்த்த குண சிந்தாமணி 332 பக்கங்கள், மருந்துகள் குணநலன்கள் பற்றிக் கூறுகிறது.

3. ஓலைச்சுவடி எண் 5107: நான்கு பகுதிகளாகப் பிரிகிறது. பக்கங்கள் 74.

1. குருவித்தம்: பக்கங்கள் 2. குரு என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும், குழந்தைகள் நோய்கள் பற்றியும் அவர்களுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

2. அகத்தியர் பாலவாகடம்: 34 பக்கங்கள் குழந்தைகள் நோய்கள் பற்றியும் அவைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

3. அகத்தியர் திரட்டு பக்கம் 32 (48 பித்த நோய்கள் பற்றியது) பித்த நோய்கள் 48க்கும் விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

4. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. மருந்து செய்முறை பக்கம் 6.

ஓலைச்சுவடியினுடைய முதற்பக்கத்தில் அகத்தியர் குழம்பு என்று கூறியிருந்தாலும் அகத்தியர் குழம்பு செய்முறைச் செய்திகள் ஏதும் இல்லை.

ஓலைச்சுவடி எண்: 5247: வசிய மருந்து, ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 140 பக்கங்கள் முழுதும் உரைநடையில் உள்ளது. மக்களை எப்படி வசியப்படுத்த வேண்டும் என்பது பற்றியும் வசியம் செய்வதற்குரிய மருந்துகள் செய்வது பற்றியும் பற்பல நோய்களுக்கு என்ன என்ன மருந்து கொடுக்கலாம் என்பது பற்றியும் நஞ்சுக் கடிகளுக்கு உரிய மருந்துகள் குறித்தும் உலோகத்தினைத் தூய்மை செய்வது பற்றியும் நச்சு மூலிகைகள் பற்றியும் தாது நஷ்டத்தைப் போக்கும் மருந்து பற்றியும் குடும்பக் கட்டுப்பாடு செய்வதற்குரிய மருந்துகள் பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 5103: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 386 பக்கங்கள் உள்ளன. முழுவதும் உரைநடை நாடி பற்றிய செய்திகள். ஒவ்வொரு நோயினுடைய குறிகுணங்கள், மருந்து செய்முறைகள் அதன் பயன்கள்.

குறிப்பு: இவ்வோலைச் சுவடிகளில் எழுதப்படாத ஓலைகளும் உள்ளன.

ஓலைச்சுவடி 5271: வாகடம்-ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 110 பக்கங்கள் உள்ளன. மருந்து செய்முறைகளும் அதன் பயன்களும்.

ஓலைச்சுவடி எண் 6579: வாகடம் (தட்சணாமூர்த்தி அருளிச் செய்த காவியம்-ஆயிரம்) 274 பக்கங்கள் மருந்து செய்முறைகளும் அதன் பயன்களும் மேலும் மந்திரங்களை ஜெபிப்பதனால் என்னென்ன நோய்களைப் போக்கலாம் என்பது பற்றிக் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி 6571: வைத்திய சூத்திரம்: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பக்கங்கள் 188. மருந்துப் பொருட்களின் குணநலன்கள் மேலும், மருந்து செய்முறைகளும் மருந்து தூய்மை செய்முறைகளும் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 4065: வைத்திய நூல். ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பக்கம் 94 மருந்துப் பொருட்களின் குணநலன்கள், மருந்து செய்முறைகள்

ஓலைச்சுவடி 4660: புலிப்பாணி அருளிச் செய்த வைத்திய சூட்சுமம் 600. 130 பக்கங்கள். மருந்து செய்முறைகள் அதன் பயன்கள். பாம்புக் கடிக்கு மருந்துகள். கண்நோய்களுக்கு மருந்துகள். மேலும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு மருந்துகள்.

ஓலைச்சுவடி எண் 5218: வைத்திய முறைகள். பக்கம் 210 ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முழுவதும் உரைநடையில் உள்ளது. மருந்து செய்முறைகள் பயன்கள் மருந்துப்பொருள்கள் சுத்தி முறைகள்.

ஓலைச்சுவடி 5224: வைத்திய முறை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 172 பக்கங்கள், குழந்தைகள் நோய்கள் பற்றியும் அவைகளுக்குக் கொடுக்கப்படும் மருந்துகள் பற்றியும் உரைநடையில் உள்ளன.

ஓலைச்சுவடி 5232: பக்கங்கள் 279. மருந்து செய்முறைகளும், சைவசித்தாந்தம் ஞானம், யோகம் ஆகியவைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 5250: வைத்தியமுறை, ஆசிரியர் பெயர் இல்லை. 400 பக்கங்கள் முழுதும் உரைநடையில் உள்ளது. மருந்துகள் கொடுத்துப் பார்த்து அதன் பலாபலன்களை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. சிறப்பாகக் குழந்தைகளின் நோய்களுக்குச் செய்கின்ற மருந்துகள் அவைகள் பயன்படும் முறைகளும் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 5258: வைத்தியமுறை ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பக்கங்கள் 228. மருந்து செய்முறைகளும் அவைகளின் பயன்களும்.

ஓலைச்சுவடி எண்: 5261: இது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பக்கம் 462.

1. வைத்திய முறை. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அனுபவ முறையில் கண்டறிந்த மருந்து செய் முறைகளும் பயன்களும்.

2. அகத்தியர் பல திரட்டு. மருந்து செய்முறைகளும் அதன் பயன்களும்.

3. போகர் சூத்திரத்தில் நவலோக உப்பு மருந்து செய்முறைகள்.

ஓலைச்சுவடி எண் 5280: அகத்தியர் பல வைத்திய சாத்திரம், பக்கம் 180. மருந்து செய்முறைகளும் அதன் பயன்களும்.

ஓலைச்சுவடி எண் 5218: வைத்தியமுறை.ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 40 பக்கங்கள் நோய்களின் குறிகுணங்களும் அந்நோய்களுக்கு மருந்து செய்முறைகளும் அதன் பயன்களும்.மற்றும் வாதபித்த கப நோய்களுக்கு அட்டவணையும் கூறப்பட்டுள்ளது.

ஓலைச்சுவடி 6576: வைத்தியமுறை, 36 பக்கம், மருந்து செய்முறைகள்.

ஓலைச்சுவடி 6587: அகத்தியர் வைத்தியம் - 84 பக்கம் மருந்து செய் முறைகளும் அதன் பயன்களும். மேலும் மேக நோய்களின் தன்மைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 5248: பக்கம். 202. இவ்வோலைச் சுவடியானது நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முழுவதும் உரைநடையாக உள்ளது.

1. வைத்திய முப்பு: 50, ஆசிரியர் பெயர் தெரியவில்லை. (136 பக்கங்கள்) மருந்து செய்முறைகள், பயன்கள்.

2. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 6 பக்கங்கள் தாளகத்தைக் கொண்டு செய்கின்ற மருந்து முறைகளும், மாத்திரைகளும்.

3. வைத்திய முப்பு. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. 52 பக்கங்கள் முப்பு செய்முறைகள்.

4. ஆசிரியர் பெயர் தெரியவில்லை. பக்கங்கள் 8, எழுத்து வடிவம் தெலுங்கில் உள்ளது. வயிற்று நோய்களுக்கான மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

ஓலைச்சுவடி எண் 2213. வைத்தியம் 116 பக்கம்.

1. கருவூரார் பூஜாவிதி, பூஜையின் விதிமுறைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

2.அகத்தியர் கேசரி சூத்திரம், மருந்து செய்முறைகளும் பயன்களும்.

3. அண்டகுருமுறை: ஆசிரியர் பெயர் தெரியவில்லை. முப்பூ செய்முறை கூறப்பட்டுள்ளது. 42 பக்கங்கள், முழுவதும் மந்திரங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

ஓலைச்சுவடி எண். 5281: ராமதேவர் பட்சிணி. 112 பக்கங்கள். முழுவதும் மந்திரங்களைப் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்ட ஆய்வு என்னால் 1972ம் ஆண்டு செய்யப்பட்டது.இதை மற்றவர்களும் அறிந்துகொண்டு தேவையானவர்கள் அதைப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தில்தான் இதைத் தங்களுக்குப் படைக்கிறேன்.

பொதுவாக, ஓலைச்சுவடிகளை அப்படியே பாதுகாத்து வைப்பதை விட அவைகளை லேமினேஷன் என்று சொல்கின்ற இருபுறமும் தெரியும் வகையில் பாலித்தீன் பேப்பர்களை வைத்து ஓட்டுதல் செய்யலாம். அல்லது மைக்ரோபிலிம் செய்து பாதுகாக்கலாம். அல்லது உடனடியாக அவைகளைப் படி எடுத்துப் பாதுகாத்து நூலாக வெளியிட்டால் பின்னால் வருகின்றவர்கள் அவற்றைப் பயன்படுத்த ஏதுவாகும். இல்லையெனில் அவைகள் ஓலைச்சுவடியாகவே இருக்குமானால், காலப்போக்கில் அழிந்துபட்டு ஒழியும்.

என்னுடைய ஆய்வுக்காக என்னை ஊக்குவித்த காலஞ்சென்ற டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் ஹிஸ்டரி ஆப் மெடிசன், ஹைதராபாத் அவர்களுக்கும் டாக்டர் ராமராவ் அவர்களுக்கும் என் ஆய்வின்போது உதவி செய்த ஓரியண்டல் மேன்யுஸ்கிரிப்ட் லைப்ரரியின் அனைத்து அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Development of Siddha medicine

a student's view point
J. SAMSON

INTRODUCTION

The Science of medicine is of fundamental importance to man's well being and his survival. One branch of the science of medicine is our Siddha system. Such indigenous systems of medicine have gained considerable momentum since independence. But considering the period of origin of Siddha medicine it has not reached the great heights which it should have by this time. To further enhance its development we have to switch over to some positive steps.

Most of the books of Siddha system of medicine have a number of Sanskrit words. Hence this makes it difficult to understand the meaning of the word. To have a clear knowledge of siddha system these Sanskrit words in the books, which prove to be the basic insturment for the study of Siddha medicine should be translated in Tamil. Moreover the high languages of Tamil literature in the medical books should be converted into simple words so that students can have a clear knowledge about the subject.

Plants play a major role in the preparation of siddha drugs. Hence the students should have a thorough knowledge about the plants. Even though this requirement is fulfilled the inclusion of study of biochemical components of plants will add to its flavour. As it is clearly evident that most of our pharmacological drugs revolve around plants, growth of herbal garden should be encouraged at panjayat levels.Locally available herbs should be considered, for priority in health care.

There are siddha who are authorities in the treatment of eye disease. Some of them are Nagamuni and Agathier, who have written, books such as Nagamuni nayana vithi, Agastiar nayana vithi. They have mentioned 96 different types of eye diseases. Hence it will be apt to have a special Department for Optholmology in the educational institute of Siddha medicinel Moreover, it is common knowledge that the siddha system is considered good for dermatological and neurological diseases. Hence it would be helpful if separate Department are opened for these branches.

It is evident from the study of the history of Siddhars that Theraiyar has done a cranial surgery even at the ancient time and relieved the patient from the chronic headache. However, surgery is not encouraged or even practiced in siddha system now.

Moreover, we have also evidence from the Tamil literatures that surgery was in practice in Tamil medicine.

"வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாறாத காதல் நோயாளன் போல்"

Is the verse from Azhvar pasuram. From this it is evident that surgery has been practised by the ancient siddhars or even Vaidhyar's. However, at present, surgery is neglected in our system. This should be viewed seriously and proper action should be taken to implement surgery as one of the important methods of treatment.

Ther is a proverb, A sound mind in a sound body. Our system not only takes care of physiological and pathological factors but also includes the psychological factors. This is evident from the basic thought of siddhars who gave prime importance for philosophy. So it should be insisted on to include psychiatrics at higher levels of education. The siddha system of medicine has

a number of specialities. One among them is Ashtanga yogas. These yogas at present have been found to have Therapautic action in addition to its prophyaletic actions. Hence practice of this should be encouraged among students and patients. To our surprise, it has been recently discovered that yoga cures cancer and even the dreaded AIDS attractive foreigners to have belief in our system. As such we have Yoga OPD alone functioning only on Thursday. This service should be extended on all days and separate wards opened for this.

More priority should be given to do active research by encouraging the utilisation of local resources so that many endemic diseases can be diagonised and cured more specifically. In addition to technologies used to diagnose a disease at present more sophisticated technologies should be utilised to diagnose certain critical diseases accurately.

The easiest and commonest communication method to reach every body is the broadcasting and telecasting medias. So special programmes must be prepared and given to these media on priority basis for the development of traditional medicine.

Any system can thrive only under the recognition of the Government. Even though our government has ample programmes for the welfare of siddha system, due to lack of funds these programmes are delayed. The Government should find some way to implement these programmes for the development of siddha system in its home land.

Development is not the one which involves growth only in its place of origin. It should spread world wide. For this language stands as a barrier. To get rid of this crisis we should have at least some of our fundamental books in the universal language (ie) English. This will enable people outside our state and even country to have an idea about our system.

CONCLUSION

As mentioned in the familiar proverb Old is Gold, Siddha medicine which is the oldest of traditional medicines should be encouraged. The philosophy that medicinal herbs are vital for health should be supported and strengthened. If Health for all be 2000 A.D. is the aim of World Health Organisation. The development of traditional systems of medicine should also be encourated to ensure health in their regional areas. Accordingly the development of siddha medicine will have its own impact in Tamil Nadu.

ACKNOWLEDGEMENT

Principal and Teaching faculty members GSMC, Palayamkottai, Director, Sarasvathi Mahal Library, Tanjore.

SIDDHA VAIDYAM-WAYS AND MEANS FOR ITS DEVELOPMENT

M. KUMAR,
SIDDHA MEDICAL RESEARCH INSTITUTE
654, VYALIKAVAL, 11TH CROSS
BANGALORE - 560 003.

It is well known that the system of medicine propounded by the great Siddhas of our country is ancient in origin. After having realised the superiority of Siddha Medical Science, we have assembled here to find out the ways and means of its development. With this object in view, we have to consider the teaching and training methods adopted at present with that of Gurukula pattern followed in olden days. The teaching curriculum adopted at present seems to have been formulated by those who are familiar wiht Ayurveda and modern medicine.

Siddha system of medicine is not widely known similar to Ayurveda,a counterpart of the Indian system. The system is confined mostly to Tamil Nadu an account of the original texts being in Tamil script and language and not translated to other languages. The available published books on Siddha Vaidyam deal with different branches of medicine in addition to many formulae to combat various diseases.But a comprehensive and systematic approach is not available in these. A major portion of siddha texts are still in the form of palm-leaf manuscripts and plenty of such volumes are preserved in the libraries collections. Also, there are many more possessed by individuals as their

personal property. Such volumes in the name of different Siddhas seem to contain their deep knowledge about philosophy, astronomy, astrology and other branches of science including medicines. The original manuscripts as well as the published books are mostly poetic in form and phraseological, sympolic and mythical combined with mysticism. The correct interpretation of these cannot be easily comprehended without the guidance of competent persons. It is rare to find such suitable teachers now a days. Even a few, if available, would like to maintain the secrecy and sanctity of their knowledge. There are some texts known as Thiraiukol which is supposed to give the correct meaning of the terminology used in Siddhas. Even these are to find. Mostly, the style of the language seem to be the main impediment for the spread of Siddha system.

In Gurukula method of teaching of olden days, there was close relationship, between the teacher and student. Practical processes were learnt under the vigilant supervision of a competent teacher. Thereby utmost care was taken to see that the medicine prepared was perfect in all respects.

The basic necessity in the preparation and administration of medicine in Siddha Vaidhyam is the knowledge about muppu. Guru and jayaneer (Amuri). These are mainly referred in almost all the Siddha texts. But the mode of preparation and specific ingredients are not clearly indicated confounding their explanations. There may be some traditionally trained Siddha physicians who can throw some light on this aspect. The use of metals, minerals and salts in the form of Bhasmas, Sindhooras and Chunnams are the special features of Siddha Vaidyam. Inclusion of Rasa Shastra into Ayurveda is undoubtedly a later adoption from Siddha Vaidhyam, inspite of this, Siddha Vaidyam

has its owm uniquesness., in the administration and preparation of these medicines. But the facts that are required to be noted with care are the proper dosage of administering these Rasa-Oushadis. Human system requires compoundsof these metals and minerals in minute quantity to activate the production of proper enzymes. A medicine to be effective should have high specific activity. This can be achieved by using minute quantity of such medicines through proper vechiles. Heavy doses of such preparations would certainly give rise to adverse effects.

The above factors, require consideration while proceeding towards the development of the system.

Following suggestions are put forth with regard to the steps to be taken for the development of Siddha Vaidhyam.

1.First and foremost, measures are to be taken to translate the available siddha books to other languages. particularly English which is supposed to be the international language, in order to give wide publicity.

2. The existing palm-leaf manuscripts in various libraries have tobe brought to light by taking steps for their publication.

3. In order to arrive at the correct meaning of the words used in the original texts, a committee has to be set up consisting of the persons having technical knowledge along with Tamil Pandits.

4.Each Siddha Vaidhya should have the practical knowledge of preparing Bhasmas, Sindhooras etc., which are to be taught under expert guidance.

5. Knowledge of pulse reading is becoming extinct. Revival of this method is very essential for the correct diagnosis of the disease and appropriate medication. Experts in the field have to be approached to impart their knowledge.

6. It is of utmost necessity to understand about, Muppu, Guru and Jayaneer in their correct perspective which are the unique features of Siddha Vaidhyam. Arrangements are to be made to obtain the knowledge from the experts in the field.

7. Only traditionally trained Siddha Vaidhyas can throw some light on all the above aspects. Hence, such of those who are willing to render their services and can impart practical training have to be utilised for the purpose.

Coming to the work done by our institute, I wish to state that during the past twenty years, we have done intensive literary research into ancient Siddha manuscripts. We have collected valuable information on varied subjects detailed by Agasthyar, Bhogar, Theraiyar and other aspects of science, including medicine. A study of these literature indicates that the scientific knowledge of our Siddhas were far superior to that of present day scientists and researchers.. Without understanding the basic concept of Siddhas one cannot be perfect.

Siddha physician, Sage Agasthya has stated that ANDAM PINDAM ARINDON SIDDAN which means Siddha is a person who has well understood the Andam (the cosmos) and Pindam (the sensate and non-sensate objects of this world) and the relationship between these.

In one of the texts, it is mentioned that during Kali era 1800 (about 1300 B.C.) they imparted Siddha Vaidyam at a

training centre known as Thoranagiri payirchi Mukam (near Thenkasi). The detailed curriculam for this training being spread over a period of 12 years. After completion of the training the successful students were awarded certificates and Thambra Patras. This training centre was run under the patronage of Lord Muruga, the head of the institute being Agasthyar. The syllabus of the institute was formulated by Bhogar and the teaching staff consisted of other eminent Siddhas. These Siddhas had established different centres at Kuttralam, Podigai Malai, Poonkulam, Shenbhaga Devi, Thiruparankunram, Pasumalai, Maruda Malai, Paradesi Kundai and other places.

It is stated that the entire period of 12 years was divided into two portions of six years each, teaching practical methods under Marai Nool Vagadam and Pirai Nool Vagadam in Marai Nool portion the knowledge about Pancha Loha, Pancha Pashana, their physical and chemical properties, purification of Bhasmas and Sindooras of these to be utilised as medicines and also preparations of Kattu out of Pashanas were given.

The highest knowledge of Siddhas was imparted under Pirai Nool Vagadam. Under this curriculum philosophy, astronomy, astro physics, human physiology, astrology, chemistry etc., were included. Knowledge about Pencha Lavana, the procedure of preparing Muppu and Guru, maintaining the body through Kaya Kalpa and Kaya Karpa were also imparted under this curriculum.

The details of these have been copied by our institute from the original manuscripts. Based on the information collected medicines are prepared and the patients are treated and we are obtaining encouraging results.

Scope and Development of Siddha Medicine

STANDARDISATION OF DRUGS - A VITAL ASPECT:

R. Sudha and S.N. Yoganarasimhan,
Preliminary Standardisation Unit (Siddha) R.R.C. (Ay)
Jayanagar, Bangalore.

INTRODUCTION

The traditional systems of Medicine like Ayurveda and Siddha in India has very early history. The various natural products surrounding man were utilised by him in different forms to overcome the routine diseases faced by him. The experience gained and the increase in the knowledge resulted in the outcome of imported classics of Medicine. These classics were written in the language prevalent in those days viz. Tamil for Siddha and Sanskrit for Ayurveda. Further, these systems of Medicine were taught in Gurukula system of which necessiated a very closed relationship between the teacher, disciple and the nature. Much importance was given by the physician collecting the raw drugs required., preparing and administering them all by himself. Thus it can be concluded that the physician of the Ancient times was proficient in all spheres of system right from the identification and collection of the drugs, methods of preparation diagnosis of diseases, administration of the medicines.

However, due to several social and cultural factors above method was discontinued and in the process the valuable literature in the ancient system of medicine also lost its importance. This

ultimately caused the system to become much confused and controversial as understood today. In addition to this the various other branches of science like Botany, Chemistry, Pharmacy Geology etc, developed in a tremendous speed. Consequently, the present day science demands that the hidden knowledge in the ancient system of medicine like Siddha are translated into the language of modern science and subjected to a scientific evaluation to the extent possible.

One of the important aspects of modern science to-day is the Standardisation methods adopted, though, there is no doubt that the physicians in the early period practised standardisation in their own way. But, due to the non-availability of these authentic materials, lack of scholarly knowledge in the concerned language and dependance on modern subjects has made it imperative to undertake Standardisation worth utilising modern parameters for the survival of the Siddha system to the benefit of mankind.

Scope: The scope of Standardisation may be broadly discussed as follows:

1. Leterarute survey.: All the available Classisc and palm scripts should be critically reviewed by Tamil scholars with reference to the drugs, preparation, disease and line of treatment. This will provide a first-hand knowledge of the number of drugs inveolved originally in the Siddha system of medicine. It will also help to understand the correct classical name with their important characters for identification. The various methods for preparations of a particular medicine will also be brought to light.

2. Idendification of Drugs as per modern methods: The correct determination of botonical/zoological/geological/chemical nomenclature forms one of the important aspects of

Standardisation. Since one drugs is known by more than one name in the classical literature and often the description provided forthe drug corresponds to several drugs, it has led to much confusion and controvery in the present day for the identification of authentic drugs. Hence, it is necessary that all the drugs are known by a single name and its equivalent in modern science established. In otherwords it boils down to One name for One Drug.

The Crude Drugs are also identified now a days by Pharmacognostical methods. The macro and microscopic features, Ultra-violet and Chromategraphic studies of a Drug are carried out and the diagnosite characters are established for the identification of a specific drug.

3. Collection of authentic drugs for preparation: The collection of Drugs in the appropriate season has a very important bearing on the clinical efficacy. Even in the Classics, particular attention is paid towards the collection of the various parts of the piant in different seasons. This factor also collaborates in the chemical science since it is established that the optimum activity of a particular compound will be maximum in particular season. Hence, it is necessary to evaluate and understand the proper seasons in which the various drugs are to be collected.

4. Standardisation of Formulations and Preparation: Different formulations and methods for the name preparation exists in the different classics. A careful study of all the formulations and preparations should be carried out and the best formulations/ preparation meeting the requirements of a majority of the diseases to which the preparations are administered must be selected.

The Siddha Formulary of Govt. of India Ministry of Health, which is the resultant of a broad sanction of eminent practioners in the field and scientists. In fact may serve as the basis towards

this attempt. Like-wise, the method of preparations may also be selected from the Classics. Such selected preparations may be subjected to physico-chemical analysis which include parameters like presence of inorganic elements ash value pH, acid insoluple ash, values in organic solvents like petroleum, ether, benzene, alcohol ctc. They may also be subjected to chromatographic and Ultra-violet techniques if required. These values will be very useful for laying down the pharmacopoelal standards of the preparations and can be utilised in producing detecting authentic preparations.

Other Developmental Aspects: In addition to the standardisation aspects, certain other factors also help in the development of Siddha system of Medicine. They may be summarised as follows:

1. Establishment of a Herparium where all voucher specimens are properly documented and deposited. This will aid in the identification besides providing useful data on the distribution of the particular drug.

2. Preparation of a standard set of microscopic slides of all the drugs and depositing in a central place or in as many centres as possible. This provides the microscopic characters of the drug which will not only help in identification of crude drug but also in laying down pharmacognostical standards.

3. Establishment of Central crude depot and a pharmaceutical corporation for procuring, storing and distributing authentic drugs, besides manufacturing efficaceous preparations.

4. Establishing a Germplasm Bank for evolving better varieties.

5. Selection and preservation of Herbal Reserves- it is necessary that the selected areas in the forests are exclusively preserved and ear-marked for the drugs found in Siddha system. This helps in preserving the material in nature for posterity.

6. Cultivation of important medicinal Plants: Some important medicinal plants have become either rare, endangered or are on the verge of extinction due to either over exploitation or certain other natural calamities. Such drugs/plants are to be identified for undertaking large scale cultivation region wise.

Likewise programmes may be planned for the animal, geological, chemical material which are used as drugs in the system.

CONCLUSION

It is concluded that a proper understanding of the classics and the utilisation of modern sciences and technology are essential for the development of siddha system in the present day. The standardisation of drugs which is a very important aspect should be carried out in the light of modern parameters, at the same time reaining the classical approach. A consciensus should be arrived at by the siddha system regarding the adaptability of the Siddha Pharmacopoea in full. All the pharmacies should confirm their preparations as per the pharmacopoeal standards only. In short, it may be said that the future development of Siddha Medicine lies in the hands of Siddha people who should utilise the knowledge, technical know-how prevalent in other sciences so that the system becomes acceptable in the modern scientific age.

A STEP TOWARDS SIDDHA ANTIDOTES FOR SNAKE-BITE

By Joseph Thas J, Subramanian V
Krishnamoorthy J. R., Kanakambal K
Department of Pharmacology
Post-Graduate Study Centre
Government Siddha Medical College.
TIRUNELVELI-627 002

NEED FOR AN INDIGENOUS ORAL ANTI-DOTE

According to Swaroop and Grab (1954) about 2,00,000 persons are bitten annually by snakes and about 15,000 of them are fatal. Sawal etal (1974) say 01 to 2.1 per 1,00,000 deaths occur in Tamil Nanu. Of these 4.3 percent of death occur in hospitalised patients.

Anti-venin therapy a specific remedy for snake envenomation has been in practice for a long time. Anyhow some students show (Banerjee and Siddiqui 1976) that the mortality among the hospitalised patients was as high as 50 to 70 percent inspite of the treatment with polyvalent anti-snake venin ant-sera and supportive measures.

This may be due to one or more of the following reasons. Delay in getting the medical aid, which is usually 1 hour to 5 days between bite and reporting to the nearest hospital, ineffectiveness of anti-venin serum and other supportive measures.

Occupationally more than 80 percent of snake-bite victims are farm labourers (Banerjee, 1987). The snake-bite incidence is nearly 90 percent in rural and semi-rural areas. Getting medical aid in these areas takes considerable time due to lack of adequate hospitals, transport facilities and difficult terrain.

In Tamil Nadu and other places anti-venin therapy and other supportive modern therapy at best are available in District Headquarters Hospitals and Medical College. As anti-venin serum alone cannot help in such conditions, stocking them at the rural dispensaries and Primary Health Centres would only partially help a snake-bite victim (Banerjee, 1978)

Thus we need to develop an effective oral ants-dote that can be made available at all rural pockets. Traditional medical system, popular and still alive in rural areas can help a lot in this regard.

RESEARCH

With this aim we started undertaking research on a number of Siddha and other drugs, from January, 1984. So far research has been done on nearly 50 Siddha drugs. Among them Neeli (indigofera tinctoria) a medicinal plant exclusively mentioned in Siddha literature for snake and all other types of poisons was experimentally found to be effective orally in Cobra envenomation.

It was found to protect the lives of 30 to 40 percent of arbino rats from lethal dose of Cobra venom. The rest of the animals that finaly died had their death time postponed by nearly 135 minutes. Further it was also found that the drug inhibited Cobra neurotoxin at the nuromuscular junction (Joseph Thas, 1985)

Further research, revealed the efficacy of the Kausikar Kuzhambu (Kausikar mal, vidamirtham) another siddha drug in cobra envonomation (Joseph Thas et al, 1988) The combination of kausikar Kausikar Kuzhambu and Neeli brought down considerably the death rate (Joseph Thas et al, 1988)

Further it was found that a decoction of Neeli, Milagu and Karunjeerakam in fixed proportions was effective in protecting the lives of dogs from lethal doses of Cobra venom, (Joseph Thas et al. 1990)

Further it was found that the combination was also additive to anti-venin serum. That is, when this indigenous combination was given, even half the dose of anti-venin serum normally required to neutralise the known quantity of venum was effective in protecting the lives of dogs, (Joseph Thas, 1990)

In the light of the above findings the following inferences may be made.

All the drugs found to be effective are part and parcel of Siddha medicine. Many traditional practitioners and Village Vaidyars still use them in their day-to-day practice. Hence, the present study gives only a scientific backing to their claim and use. The drugs were found to be devoid of appreciable toxicity. At the same time they possess a number of other therapeutically important pharmacological actions (Joseph Thas, 1987)

THE PROPOSAL

In this background the following proposal is forwarded:

The studies conducted for the past nearly 6 years reveal that these drugs will be of help in bringing down the rate of snake-

bite deaths. By this it is not meant that Siddha treatment alone is sufficient in snake-bite. But it can be a complimentary one that would supplement medern anti-venin therapy in places where the latter would take time or not at all available to the victim.

Experimental research will have a meaning only when it is clinically confirmed. Though these drugs are clearly mentioned in Siddha literature and administered by some Vaidyars for snake-bite and experimentally found to be effective, there is a lack of controlled clinical trial. Hence these drugs may be released for clinical and field trial in a small way at first.

In this trial though some Siddha drugs are to be given, the treatment does not stop there. Every possible step should be taken to give the best prompt modern treatment in a well equipped hospital. Thus this trial would not deny anybody of treatment which otherwise is available.

In the course of time this study would reveal some aspects of the drug. The difference in rate of survival and other prognostic conditions between those cases that received those Siddha drugs and those that are not reveived before allopathic treatment would shed valuable light on the merits of the drugs.

METHOD OF TRIAL

The drugs may be distributed by D.S.M.O. and stocked at Siddha Wings of P.H.C. Govt. Dispensaries and other hospitals. The drugs may be distributed free of cost to even village Vaidyars and rural health workers, serving areas not very near to these hospitals and dispensaries.

DRUG PREPARATIONS

1. NEELI CHOORANAM

Ingredients fine powder of

a. Neeli (indigofera tinctoria) whole plant dry-1.7 g

b. Milagu (peper nigrum) 0.25 g
c. Karunjeerakam (Nigella satiya) 0.25 g

DOSE

One packet of 2.2 gm immediately with some water. The dose may be repeated after two hours if felt necessary

2. NEELI KUDINEER CHOORANAM

INGREDIANTS

a. Neeli (indigofera tinctoria) whole plant dry 10g
b. Milagu (peper nigrum) 2g.
c. Karunjeerakam (nigella sativa) 2g

INSTRUCTIONS

A packet containing 14 gm of the coarsely powdered drugs must be boiled with a cup of water for about 5 minutes filteed and administered.

3. KAUSIKAR KUZHAMBU

This drug may be prepared as per Siddha Formulary of India, 1985. 100 to 200 mg of the drug may be given orally preferably with 2 ml of Uthamani (Daemia extensa) juice or Neeli decoction half an hour after initial Neeli dose of choornam or decoction.

SUGGESTED LINE OF TREATMENT

1. First aid

2. Neeli Chooranam (since the preparation of decoction will take some time)

3. As soon as the deciction is ready a dose of this must be given

4. Kausikar Kuzhambu may be given along wiht the decoction or half an hour after bite.

5. These Siddha treatment may be given immediately after bite as well as while arranging for the victims transport to the nearby hospital where the specific anti-venin and other necessary treatment are available.

6. Whether these drugs are given or not every possible step should be taken to give anti-venin treatment at the earliest.

PREPARATION OF DRUGS

The drugs may be prepared either by College pharmacy or Regional Pharmacy, Palayamkottai.

HERBAL GARDENS

In this regard a master herbal garden may be set up near the manufacturing pharmacy to grow and cultivate neeli, etc. Also a small herbal garden around P.H.C., and Dispensaries to grow fresh herbs may be set up. In these gardens apart from growing drugs necessary for the snake-bite, other herbs of importance in day-to-day dispensing may also be cultivated.

ORIENTATION COURSE

The Doctors and other Para-Medical Staff who are to be involved in these studies may be given an orientation course at the Gove. Siddha Medical College, Palayamkottai for about 5 days.

ACKNOWLEDGEMENT

We acknowledge the Director, Central Council for Research in Ayurveda and Siddha, New Delhi for the financial assistance. The service of Thiru. S. Natarajan, Antony Packiam, C. Ravi, L. Victor, K. Pasunkili and M. Andi are gratefully acknowledged.

REFERENCES

Banergee R.N. and Siddhiqui, Z.A. (1976) Proc. 5th International Symposium on Animal, Plant and Microbial Toxins, Toxico.

Banerjee, R.N. (1977) Progress in Clinical Medicine in India (Second Series) Ed. by Ahuja, M.M.S., by Aroned Helnemann, New Delhi.

Joseph Thas J. (1985) Proceedings of Satellite Symposium on Traditional Medicine. Asian Gongress of Pharmacology, Tamil University, Thanjavur.

Joseph Thas J. (1987) Technical Report on some anti-snake bite drugs

Joseph Thas. J. Subramanian, V. Krishnamoorthy, J.R. Kanakambal, K. and Natarajan, N. (1987-88) Annual Report sent to the C.C.R.A.S. New Delhi.

Joseph Thas J. (1990) unpublished data.

Sawai Y. and Homa M. (1974) Animal Plant and Microbial Toxins, Vol. 2, Plenum Pub. Cor., New York-451.

Swaroop, S. and Grab, B. (1954) Snake-bite mortality in World. Bull. W.H.O. 10.35.

Further studies with Neeli (Indigofera tinctoria Linn)

Joseph Thas, J. Proceedings of First international seminar on Unani Medicine, New Delhi, India February, 13-15, 1987.

YUGI'S VISION OF VASCULAR OCCLUSIONS

DR. P. JEYAPRAKASH NARAYANAN
Reader in Siddha Medicine
Post Graduate Department

DR. T. CHELLIAH
Reder in Modern Medicine
Post Graduate Department

DR. THANGAMONEY
DR. KANAKAVALLI
Post Graduate Maruthuvam, Branch Students
Govt. Siddha Medical College, Palayamkottai

Yugi vaithya chinthamani a Siddha Classic which dates back to 15th Century is an authority in Siddha Clinical Medicine. His predecessors like Theran. Agathiar described clinical entities only on Mukkutra basis which was touch for easy following. But it is only the Siddha Yugi who described clinical entities in terms of symptomatological descriptions in addition to Mukkutra basis (Vall, Azhal, Iyam). In this way of describing deseases by their clinical feature Yugi has caused a turning point in the development of clinicial medicine.

Now, we look into four clinical entities viz. Odu, Vippurithi, Kuvalai Vippurithi, Karai Soolai, Vikitha Vadham which are closely indentical with primary Thrombophlebitis., migraine Secondary Thrombophlebitis. Thrombophelebitis is associated with pulmonary vascular occlusions and occlusion of the mesentric vessels which are described in modern pathology.

ODU VIPPURUTHI

சார்வாக வோடியே ரத்தம் சூழ்ந்து
தங்கியே கட்டியாய்ச் சார்ந்தெழும்பும்
தேர்வாகச் சடமெங்கும் திருகலாகச்
செழுமையாய்ச் சிவந்துமே வெளுப்புமாகும்
ஆர்வாக அங்கங்கள் எலும்புக்குள்ளே
அழன்றுமே விரணங்களாகக் காணும்
ஊர்வாக உடம்பெறும்பூர்தலாகும்
உண்மையாய் ஓடுவிப்புருதிதானே.

In this poem Yugi has described a stasis of blood which is migratory in nature. There is deep seated pain and on the surface of the body a crawling sensation. The swelling appears red and white.

By the description given by the Siddha Yugi, and physicians can assess the presence of thrombosis of migrating nature. The inflammatory reaction over the vessel wall is responsible for pain and tenderness. The site is red in colour. There may be associated limphoedema which appears paler. This clinical picture closely relates it to pancreatic malignancy with thromboplebitis migraine.

2. GARAI SOOLAI

மாசற்ற கறைச் சூலை வன்மை கேளாய்
மருவுதிரந்தான் திரண்டு தோலைப் பற்றித்
தேரற்ற வளையம் போல் திரண்டு நொந்து
சிறந்திருந்த நரம்பு வழிதங்கித் தங்கிக்
கேசற்ற நோவாகிக் கீழ்முதுகைப் பற்றிக்
கெட்டியாய் வலித்துமே நோவும் உண்டாம்
காசற்ற கை காலும் வலியதாகும்
கருத்தழிந்து மேனியுமே கருகும்பாரே.

In this entity Yugi describes stasis and thrombosis in the vessels of the low back causing pain which can be taken as a thrombophlebitis. Narambu and Naadi is generic name to a Channel through which something passes. So, definitely in implies here the formation of stasis of blood and the formation of thrombus.

In Lerisch's syndrome thrombosis occurs in the Bifurcation of aorta. There the pain is in the lower limb. So, the clinical entities are closely related to Arthrosclerotic occulusive vascular disease.

3. KUVALAI VIPPURUTHI

தானென்ற இடுப்போடு முள்ளந்தண்டு
தணிந்த இரு குறங்கு குய்யம் விலாக்கள் நெஞ்சு
கோனென்று நடுக்கியே குளிர் வெதுப்பும்
குத்தலாய் இருமியே கோழையாகும்
ஊனென்ற உதரவலி தானுண்டாகி
உக்கிரமாய்க் கொடிக்கொடியாய் உதிரம் சீழாய்
கூனென்று வலித்துமே குறுகுமக்கங்
குவளை விப்புருதியிடக் கூர்மை தானே.

Yugi describes a clinical picture with pain in the chest cough, pyrexia, abdominal colic pain associated with passage of blood clot and mucous etc.

The manifestation of abdominal colic associated with passage of blood and mucous following the history of chest pain, cough and pyrexia, strongly suggest the occlusion of mesentric vessels following pulmonary thrombosis or embolism.

Yugi considers here the occlusion of the inferior mesentric vessels a less common and less serious condition. According to pathology this is due to the establishment of collateral

communications with the superiors mesentric vessels above and the haemorrheldal vessels below.

The following description of mesentric vascular occulusion by William Boyd is worth considering. Arterial occulusion may be caused by thrombosis usually associated with atherosclerosls and occasionally by embolism. Venousocculusion is naturally the result of thrombosis the onset and course are slow, the result is often haemorrhygic gangreane, blood is always present in the stools and spontaneous recovery is possible.

4. VAIKITHA VADHAM

ஆமென்று வீங்கியதோர் இடத்தில் ரத்தம்
அழுத்தமாய்த் திரண்டுமே எங்குமே பாய்ந்தது
ஓமென்று ஒட்டியே திரண்டிருக்கும்
உறுதியாய்த் தோல் தானே மெத்தென்றாகும்
தேகமென்ற தேகமெங்கணும் இசிக்கும்
சிறிதோ திருமலோடு காய்ச்சலுண்டாகும்
பாமென்ற பாதந்தனிலே திமிருண்டாகும்
பாரமாய் வைகிதமாம் வாதந்தானே.

In this entity, Yugi has described the following clinical features viz. stasis of blood forming thrombus tends to dislodge, the swelling is soft, the numbness of the feet, enough pyrexia, body ache are also present.

The clinicial picture of lung signs associated with occurence of phlebothrombosis strongly suggests the manifestation of deep vein thrombosis of the leg with pulmonary embolism.

Modern authorities on pulmonary embolism refers topain in the chest, dysponea, haemoptysis. Shock is marked and the patient becomes grey and cold with a rapid feeble pulse, low

blood pressure and raised venous pressure. Death may occur at any moment, but the longer the patient survives the better are his prospects of recovery.

CONCLUSION

A close study of Yugi Muniver Vaidhya Chinthamani revealed their clinical proximity to certain clinical entities of Vascular occlusions being described in modern medical books. The authors made an attempt to expose them on the basis of clinical features on the hope that future workers and researchers can make use of this guidance to dive deeply to know the minute details of Vascular occlusions for the interest of the healer and the patients.

REFERENCE BOOKS

1. Yugi Muniver Vaidhya Chintamani
2. Siddha Maruthuvam, By Dr. Kuppusamy H.P.I.M.
3. Davidson's Principles and practice of medicine
4. Balley & Love's Short practice of surgery.



தூக்கமின்மையும் யோகத் தியானப் பயிற்சியும்

த. கண்ணன் ராசாராம், தே. பிரமிளா கிரேசு பயிற்சி மருத்துவர்
க. இராசேசுவரி துறைத்தலைவர்
உடற்கூறுயியல்துறை
அரசினர்சித்த மருத்துவக் கல்லூரி
பாளையங்கோட்டை.

நவீன உலகில் மக்கள் எதையும் விரைந்து செயல்படுத்தும் நிலையில் இருக்கின்றனர். மனம் மற்றும் உடல் சோர்வுகளால் அவர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். இந்நிலையில் அவர்களுக்குத் தூக்கமின்மை பெரும் பிரச்சினையாக உள்ளது. அதற்கான காரணங்களை அவர்கள் சிந்திப்பதில்லை. உடனே இவர்கள் தூக்க முண்டாக்கி செய்கை உடைய மருந்துகளை உண்ணும் பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். நவீனக் கணக்கெடுப்பு, சுமார் 60% மக்கள் தூக்கமின்மையால் அவதிப்படுகின்றனர் என்று கூறுகிறது. எனவே இந்நிலை மாறவும், இயல்பான தூக்கம் மற்றும் அதற்கான யோக தியானப் பயிற்சி முறைகளையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு இக்கட்டுரையின் மூலம் சமர்ப்பிக்கிறோம்.

சாதாரணமாக ஒரு மனிதன் 24 மணி நேரத்தில் 7½ முதல் 8 மணி நேரம் தூங்கவேண்டும். வாழ்க்கையில் $^{1}/_{3}$ பகுதி தூக்கத்திற்காகச் செலவிடப்படுகிறது. தூங்கும் பொழுது உள் உறுப்புகளின் செயல் வேகம் 25% குறைகிறது. வளர்சிதை மாற்றம் வீதம் (B.M.R.) 10-15% குறைகிறது.

தூக்கத்திற்கான உடல் இயங்கு இயல் செயல்பாடு:

தூக்கத்திற்கான பகுதி:

1. கட்குழி மேல் பகுதிக்கும் அடித்தளப் பகுதிக்கும் இடையில் உள்ள முன் மூளைப் பகுதியிலும்

2. தலாமஸ் பகுதி விலா நரம்பு பதார்த்தத்திலும்

3. மூளைத் தண்டின் வறோலிதுன்னத்தில் இயக்க நரம்பு இழைகளுக்குப் புற பகுதியிலும் அமைந்திருக்கும். இப்பகுதியில் காணப்படும் நரம்பு மின் அலையை (nerve impulse) கட்டுப்படுத்துதல் நரம்பு வேதியல் பொருட்களின் அடிப்படையில் அமையும்.

தூக்கத்தின் போது டெல்டா அலை உருவாகுதல்

டெல்டா அலையானது மூளையின் தனிப்படுத்தப்பட்ட புறணிப்பகுதியில் (isoloted cortex) உருவாகிறது. ஆழ்-மெது அலை தூக்கத்தின்போது (Deep slow wave sleep) அதிவோல்டேஜ் உடைய டெல்டா அலை உருவாவதும் இந்தப் பகுதியில்தான்.

இயல்பான தூக்கத்தின் வகைகள்:

இயல்பான தூக்கம் இரு வகைப்படும்.

1. விரைவற்ற கண்ணசைவுத் தூக்கம் - (Non Rapid Eye Movement Sleep)

இந்நிலையில் கனவற்ற (dreamless) ஆழ்ந்த அமைதியுள்ள (deep restful sleep) டெல்டா அலை உருவாக்கும் (Delt wave Sleep) தன்மையுள்ள இயல்பு (Normal) தூக்கம் ஏற்படும்.

இவ்வகைத் தூக்கத்தில் இதயத்துடிப்பு, நடை, குருதி, அழுத்தம், சுவாச எண் இவைகள் சற்றுக் குறைந்து இருக்கும். தசை தளர்வுற்றுக் காணப்படும். இது (Slow wave Sleep) எனவும் அழைக்கப்படும்.

2. விரைந்த கண்ணசைவுத் தூக்கம்: REM Sleep)

இந்நிலையில் கனவு ஏற்படும். இதயத் துடிப்பு, நடை, சுவாச எண் ஆகியவை ஒழுங்கற்றிருக்கும். பேசிகளில் ஒழுங்கீனமான அசைவுகள் ஏற்படும். கண்ணில் விரைவான அசைவு ஏற்படும்.

இயல்பான தூக்கத்தில் இவ்விரு வகைத் தூக்கமும் (NREM & REM) மாறி மாறி வரும்.

NREM	90 நிமிடங்கள்
REM	20 நிமிடங்கள்

தூக்கம் பற்றிய அடிப்படைக் கொள்கைகள்

தூக்கம் ஒரு நாளில் இயல்பாகக் கடந்து போகும் நிகழ்ச்சி என்பது ஒரு கொள்கை.

மூளையின் இயங்கு மையங்கள் நரம்பு மின் செய்திகளை (Signals) வலைப் பின்னல் தூண்டல் பகுதி (reticular activating) மண்டலத்திற்குக் கடத்தித் தூக்கம் வரவழைக்கப்படுகிறது என்பது மற்றொரு கொள்கை.

மூளையின் நரம்பு வேதியல் கடத்தியான (Neuro Transmitter) செரடோனின் (5 hydroxy tryptamine) தூக்கம் உண்டாவதற்கு காரணியாக இருக்கிறது.

தூக்கமின்மை - (Insomnia)

அசாதாரணமான விழிப்புநிலை அல்லது தூங்க இயலாமையே தூக்கமின்மையாகும்.

காரணங்கள்

மனோசுமை, பேராவல், அதிகக் கவலை, அதிக மகிழ்ச்சி, விழிப்புநிலை, நாட்பட்ட நோய்களில் காணும் வலி, புப்புசக் குருதிச் சுழற்சிக் குறைவு, தீவிரத் தொற்று நோய்கள், மனோ வியாதிகள் போன்ற காரணங்களால் தூக்கமின்மை ஏற்படுகிறது.

யோகத் தியானப் பயிற்சி

தியானம்: மனதை ஒரு நிலைப்படுத்தும் விஞ்ஞானம் தியானம் எனப்படும்.

இடம் மற்றும் இருக்கை நிலைகள்:

காற்றோட்டமான இடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆடைகளை இறுக்கமின்றித் தளர்வாய் அணிந்து கொள்ள வேண்டும். பத்மாசனம் இட்டு அமரலாம். முடியாதவர்கள் இடது காலைக் கீழே வைத்து வலது காலை மேலே வைத்துச் சுகாசனத்தில் அமரலாம்.

பின்பு பிராணாயாமப் பயிற்சி செய்ய வேண்டும். தூக்கம் உண்டாவதற்குத் தூக்கப் பிராணாயாமம். இதில் பூரகம், உள்கும்பகம், ரேசகம், புறக்கும்பகம் ஆகியவை முறையே 2-0-1-0 என்ற அளவில் அமைவதாய் இருக்க வேண்டும்.

செய்முறை:

நாட்டமிரண்டும் நடு மூக்கில் வைத்திடில்
வாட்டமுமில்லை மனைக்கு மழிவில்லை
யோட்டமு மில்லை, யுணர்வில்லை தானில்லை
தேட்டமு மில்லை சிவனவனாமே.

(திருமந்திரம்-584)

நயனமிரண்டு நாசிமேல் வைத்திட்
டுயர்விழா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரறா நாடியே தூங்கவல்லார்க்குப்
பயனிது காயம் பயமில்லை தானே.

(திருமந்திரம்-585)

திருமூலரின் இந்த திருமந்திரச் செய்யுளில் சொல்லப்பட்டவாறு இரு கண்களின் பார்வையையும் மூக்கு நுனியில் வைத்து, இருவித நினைவுகளையும் நடுமூக்கில் வைத்துப் பயிற்சி செய்ய, உடல் சோர்வு நீங்கும். உடலுக்கும் அழிவில்லை. வேறுபட்ட எண்ணங்களின் ஓட்டம் அடங்கும். புலனுறுப்புகள் மாட்டுச் செல்லும் உணர்வு இருக்காது. தன் முனைப்பு இருக்காது.

இவ்வகையோகத் தியானப் பயிற்சியைப் 10 நிமிடம் முதல் அரை மணி நேரம் வரை செய்தால் கூடப் போதுமானது. நல்ல பலன் கிடைக்கும்.

தியானமும், நரம்பு மண்டல இயங்கு இயல் நன்மைகளும்

மூளையின் நரம்பு வேதியல் கடத்தி செரடோனின் சுரப்பு யோக தியானப் பயிற்சியின் போது அதிகரிக்கிறது. இது இயற்கையாகவே மனத்தெளிவை உண்டாக்கும் தன்மை (Natural Tranquilizer) உடையது.

மேலும் உள்வலி குறை சுரப்பும் (Entorphines) மூளை உள்சுரப்பும் (Encephalines) யோக தியானப் பயிற்சியின் போது அதிகரிக்கிறது. இவை இயற்கையான வலி நிவாரணியாகும் (Pain killer)

யோக தியானப் பயிற்சிக்குப் பிறகு குருதி அழுத்தம், சுவாச எண், இதயத்துடிப்பு எண், வளர்சிதை மாற்ற வீதம் ஆகியவை குறைந்து காணப்படுவதும் தோலின் எதிர் அழுத்தம் (Resistance) அதிகமாவதும் புறக்குருதி சுற்றோட்டம் (Peripheral Blood flow) அதிகமாவதும் கண்டறியப்பட்டுள்ளது.

யோக தியானத்தில் மன உடல் இயங்கு இயல்:

சாதாரணமாக டெல்டா அலையானது ஆழ் தூக்க நிலை தவிர வேறு நிலைகள் உருவாவதில்லை. ஆனால் யோகத் தியானப் பயிற்சியின் போது இது உருவாகிறது. மனதின் செயல்பாடு அதிகமாகும்போது ஆபாஅலை மறைந்து விடுகிறது.

மனதைப் புலன் உறுப்புகளின் தொழில்களினின்று மூளை மற்றும் நரம்பு மண்டலத்தின் உதவியால் விடுவிக்கும் நிலையில் உடலும், மூளையும் தளர் நிலையிலிருக்கும் (Relax).

பரிசோதனை ஆய்வுச்சான்று:

விலங்குகளின் மூளையிலுள்ள (உணர்வோடும், உயிரோடும் இருக்கும்போது) புறணியை (cortex) மற்ற பகுதியிலிருந்து தனிப்படுத்தும்போது டெல்டா அலைகள் உருவாகின்றன.

ஆனால் இதையே ஒரு யோகத் தியானப்பயிற்சி செய்பவர் மனத்திறனைப் பயன்படுத்தி மூளையின் புறணிப் பகுதியைத் தனிப்படுத்தி டெல்டா அலைகளை உருவாகச் செய்கிறார்.

பிரம்ம குமாரிகள் உலக இறைப் பல்கலைக்கழகத்தில் யோகத் தியானப் பயிற்சிக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி டெல்டா அல்லது தீட்டா அலைகள் (4-7 H2) ஆபா அலைகளுடன் (8-13 H2) கலந்து ஒருவாரப் பயிற்சியிலேயே உருவாவதைக் கண்டறிந்துள்ளனர்.

இதனால் உடல் இயங்கு இயல் மற்றும் உயிர் வேதியல் நன்மைகளும் கிடைக்கின்றன. இதற்கு தொடர் தியானப் பயிற்சி அவசியம் தேவை.

யோகத் தியானப்பயிற்சியின் போது, ஆழ்-மெது அலை தூக்கத்தின்போதும் (Deep Slow wave sleep) டெல்டா அலைகள் உருவாவது EEG மூலம் உறுதி செய்யப் பட்டுள்ளதிலிருந்து யோகத் தியானப் பயிற்சியும் ஒரு விழிப்பு நிலையில் உள்ள ஆழ்-மெது அலை தூக்க வகை எனக் கொள்ளலாம். எனவே இந்த யோகத் தியானப் பயிற்சி தூக்கமின்மைக்கு நல்லதொரு பரிகாரமாக அமைகிறது.

தூக்கத்தை உண்டுபண்ணச் சாதாரணமாக உறக்க மருந்துகள்(Hypnotics) தூக்க உணர்வு தூண்டிகள் (Sedatives) மனத் தெளிவை உண்டாக்கும் மருந்துகள் (Transquilizers) போன்றவை வழங்கப்படுகின்றன.

யோகத் தியானப் பயிற்சியின் போது, செரடோனின் சுரப்பு அதிகமாவதன் மூலம் மனத் தெளிவை உண்டாக்கும் என்டார்பின் மற்றும் என்கெபலைன் சுரப்பு அதிகமாவதன் மூலம் வலி நிவாரணியாகவும் செயல்பட்டுத் தூக்கமின்மையைப் போக்குகிறது.

இவ்வாறு யோக தியானப் பயிற்சியானது மனத் தெளிவை உண்டுபண்ணி, தூக்கத்தையும் உண்டாக்கு வதோடு, தூக்கமின்மைக்கான காரணிகளையும் களைய வல்லதாய் உள்ளது.

சித்த மருத்துவத்தில் அபின், கஞ்சா, போன்ற சரக்குகள் சேர்ந்த மருந்துகள் தூக்கத்திற்குப் பயன்படுத்துகின்றன. இவை போன்ற மருந்துகளால் அறிவுக்கூர்மை குறைதல், சோர்வு உண்டாதல், மலகட்டு உண்டாதல், உடலின் மீதான மருந்துகளின் செயல்திறன் நாளுக்கு நாள் குறைதல், மருந்தடிமைப் பழக்கம் போன்ற பின்விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆனால் யோக தியானப்பயிற்சியானது ஒரு தீய பின் விளைவுகளற்ற சிகிச்சை முறையாகும். இதனால் அறிவுக் கூர்மையாதல், மனத்தெளிவு உண்டாதல், சுறுசுறுப்பு உண்டாதல், போன்ற நன்மைகளோடு பணச்செலவும் மிச்சமாகிறது. மருந்தடிமைப் பழக்கம் என்ற பிரச்சனைக்கே இதில் இடமில்லை. ஏழை எளியவர்கள் முதல் பணக்காரர்களும் செலவின்றி யோகத்தியானப் பயிற்சியை மேற்கொள்ள முடிகிறது.

மேலும் ஒரு மணி நேரத் தூக்கத்தினால் கிடைக்கும் நன்மை, சுமார் பதினைந்து நிமிட யோகத் தியானப் பயிற்சியிலேயே கிடைப்பதால் காலமும் நமக்கு மிச்சமாகிறது.

ஆதார நூல்கள்:

திருமந்திரம் - திருமூலர்
சித்த மருத்துவச் சிறப்பு - டாக்டர் தியாகராஜன்
யோகி இராமய்யா அவர்களின் போதனைக் குறிப்புகள்
Medical Physiology - Guiton}
Text Book of Medicine - Cecil
Positive Health - Brahmakumarish World Spiritual
Heart Disease and Meditation - University.

பாலர்வாதம் - (40) - ஒரு கண்ணோட்டம்

பொன்லதா
அரசினர் சித்த மருத்துவக்கல்லூரி, பாளையங்கோட்டை.

இன்றைய உலகில் இன்னலின்றி வாழ இனிய பல வழி முறைகள் உபதேசிக்கப்படுகின்றன. நவீன விஞ்ஞானம் வானளாவத் தனது அரிய பல சாதனைகளை அறிக்கையிட்டு வருகின்றது. இருப்பினும் இன்னலின்றி இனிதாக வாழ இயலவில்லை. குறிப்பாக, பாலப் பருவத்தில் பாலர் படுகின்ற இன்னல், இடையூறு, நோய்கள் ஏராளம். மாண்புமிக்க மனித உள்ளத்தைத் தொடும் பாலர் நோய்களுள் நவீன விஞ்ஞானத்தால் பழக்கமாக அழைக்கப்படும் போலியோ என்பது மிகவும் கொடூரமானது. இந்நோய் ஏற்பட்ட சிறார்கள் முடமாகி, நடைப் பிணங்களாகி விடுதல் கண்கூடு. போலியோ என்ற நோய்ப் பெயரைத் தமிழ்படுத்தியவர் ஏதோ சித்த மருத்துவத்தில் கூறிய பாலர் வாதம் என்ற நூலை உணராது தவறுதலாக இளம்பிள்ளை வாதம் எனத் தமிழாக்கி தமிழகத்திலே பாலர்களுக்கு ஏற்படுகின்ற வாதம் பால வாதம் என்றில்லாமல் அப்பாலகனை ஈன்ற தாய்க்கு அப்போது ஏற்படுகின்ற நோயாகிய இளம் பிள்ளை வாதத்தை உரிமைப்படுத்தி விட்டனர். இவ்வாறு ஏற்பட்ட தமிழ்ச் சொற்பெயர் சித்த மருத்துவ அறிஞர், மருத்துவர், மாணவர் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் நல்கியது உரைக்கப் பாலது.

இக்கட்டுரையில் பாலர்க்கு ஏற்படும் 40 வகையான வாத நோய்கள், குறிகுணம், மருத்துவம் போன்றவற்றைத் தெளிவாகக் கூறிச் செல்லும் பாலர் வாதம்-40 என்ற நிதானத்தின் ஆய்வைச் சுருக்கித் தருகின்றேன்.

பாலர் வாதம் பற்றிய பிற நூல்கள்:

பாலர் வாதம் - 8
உரையாசிரியர் - டாக்டர். கேசவ பிள்ளை
பாலர் வாதம் - 80
அச்சாகாமல் ஓலைச் சுவடியாகவே காட்சி தருவது

பாலர் வாதம் - 40

இச்சுவடி குறுமுனி என்ற அகத்தியரால் எழுதப் பட்டுள்ளது. மகாமுனிவர் அருளியது என்ற சுவடியின் ஆரம்பத்திலே கூறப்பட்டுள்ளதால் இது ஊர்ஜிதமாகிறது.

வி. எஸ். பிள்ளை தமிழ் - ஆங்கில அகராதிப் படி:
இளம் பிள்ளை வாதம்:

குழந்தைகளுக்கு இரத்த ஓட்டம் ஒரு பக்கம் குறைவதால் அப்பக்கத்துக் கை, கால், முகம் முதலியன சோம்பிக் காணும் ஓர்வித வாத நோய். இது குழந்தைகளுக்குக் கிருமிகளால் ஏற்பட்ட குற்றமெனக் கருதுவதுண்டு. இது ஒரு தொற்று நோய். ஆகையால் மற்ற குழந்தைகளுக்குத் தாக்காமல் பார்க்க வேண்டும்.

An affection in children, which comes on suddenly and attended with paralysis and attophy of groups of museles on the side generally. Infantile paralysis. It is considered to be due to worms. It is an infections disease and so should be guarded against other children becoming affected by it.

குழந்தைகளுக்குக் கர்ப்பக் கோளாறினாலும், பிரசவத்தினால் ஏற்பட்ட குற்றத்தினாலும் இழுப்பு முதலிய காரணங்களினாலும் இடுப்பின் கீழ்க் கால் முதலிய பாகங்களில் உண்டாகும் ஓர் வகை வாத நோய்.

A kind of paralysis occuring in early childhood due to congenital causes or through injuries in birth. Spasms etc. Infantile spastic paraplgia.

பாலர் வாத உற்பத்தி

பாலர் வாதம் பாலர்களுக்கு எதனால் ஏற்படுகின்றது என்பதனைப் பார்க்குமிடத்து பாலர் வாதம் 40 என்ற சுவடியில் கீழ்க்கண்ட காரணங்களைத் தான் பார்க்கமுடிகிறது.

உன்னியதோர் வாதமது சேர்ந்த செய்கை
உண்டாகும் சுரமுடனே சூலை, மேகம்
கன்னியதோர் காசமொடு இளைப்பு சன்னி
கடிதான அபஸ்மாரம், பித்த சோகை
வன்னியதோர் அமிர்தநோய் உள்ளுரோகம்
வலுவான நோய்களிடம் சேர்ந்து கொள்ளும்
மன்னியதோர் குளிர்ச்சையென்ற காலம் தன்னில்
மகத்தான வாதமது அணுகும் பாரே.

பார்க்கையிலே முன் செய்த பாவத்தாலும்
பல விஷங்கள் மாவுடனே பழங்கள் தின்னால்
கார்க்கையிலே எண்ணெயொடு புளி, மோர், பாலும்
காதலியின் முலைப்பால் விஷத்தினாலும்
சேர்க்கையிலே கணையுடனே நரம்பில் தோஷம்
கொண்டதோர் வறட்சையினால் வாதமாகும்

சாத்திய, அசாத்திய வாதம்:

தீரும், தீராத வாதங்களாக மேற்கண்ட பாலர் வாதம் பிரித்துச் சொல்லப்பட்டுள்ளது. சித்த மருத்துவ நூல்களில் தீராது என்று கூறிச் சென்ற நோய்களோ, குறிகுணங்களோ நவீன விஞ்ஞானம் இவ்வளவு வளர்ந்தும் தீர்க்க முடியவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இதற்குப் பாலர் வாதம் ஓர் சிறப்பான எடுத்துக்காட்டு.

பாலர் வாதம் 40ல் அரைக்கு மேல் ஏற்படும் 27 வாதங்களில் 12 வகை வாதம் தீராது என்றும், அரைக்குக் கீழ் வரும் 8 வாதங்களில் 3 வகை தீராது எனவும், சர்வ அங்கங்களையும் பற்றி நிற்கும் 5 வாதங்களில் 4 வாதம் தீராது எனவும் பிறித்தறியப்பட்டுள்ளது.

ஆக 40 வகையான வாதங்களில் 19 வகை வாதங்கள் தீராத குணத்தைக் கொண்டுள்ளன. பாலர் வாதம் 40 வகையானதையும் குணப்படுத்தி விட முடியும் என்பது மடமை. சித்தர் உரைகள் பொய்யாகாது.

குழந்தைகளுக்கு இடுப்புக்கு மேல் வருகின்ற வாத நோய்கள் 27 ஆகும். இடுப்புக்குக் கீழே வருகின்ற வாத நோய்கள் 8 ஆகும். உடல் முழுவதும் பரவிப் பாதிக்கின்ற வாத நோய்கள் 5 ஆகும். இந்த நோய்களின் தீரும், தீரா நிலைகளைக் காண்போம்.

அரைக்கு மேல் வாதம்: 27

1. கெம்பீர வாதம்
2. முகவாதம்
3. நேத்திரவாதம்
4. கர்னிக வாதம்
5. அமிர்த வாதம்
6. உதடு வாதம்
7. நாக்கு வாதம்
8. கண்ட வாதம்
9. கருள் வாதம்
10. பொருத்துளைவு வாதம்
11. உதர வாதம்
12. தாக வாதம்
13. சன்னி வாதம்
14. வாதத்தில் வாதம்
15. திவளை வாதம்
16. விரல் வாதம்
17. அனுதம்ப வாதம்
18. கன்ன வாதம்
19. அலகு வாதம்
20. விரை வாதம்
21. அபான வாதம்
22. குடல் வாதம்
23. கும்ப வாதம்
24. பித்த வாதம்
25. சிலேத்தும வாதம்
26. நீர் வாதம்
27. விறைக்கும் வாதம்

அரைக்குக் கீழ் வாதம் - 8

1. கணைவாதம்
2. பால வாதம்
3. சக்கர வாதம்
4. உள்ளடி வாதம்
5. காந்தல் வாதம்
6. மூட்டு வாதம்
7. சூலை வாதம்
8. இடுப்பு வாதம்

சுருவாங்க வாதம்

1. உருத்திராங்க வாதம்
2. பக்க வாதம்
3. பாலை வாதம்
4. மயில் வாதம்
5. ஆந்திர வாதம்

இடுப்புக்கு மேல் கூறப்பட்ட வாத நோய்களில் தீராதவை - 12

1. கெம்பீர வாதம்
2. திவளை வாதம்
3. அமிர்த வாதம்
4. அனுதம்ப வாதம்
5. கண்ட வாதம்
6. குடல் வாதம்
7. கும்ப வாதம்
8. சுருள் வாதம்
9. சன்னி வாதம்
10. வாதத்தில் வாதம்
11. கப வாதம்
12. விரைக்கும் வாதம்

இடுப்புக்குக் கீழ் வரும் வாத நோய்களில் தீராதவை-3

1. இடுப்பு வாதம்
2. பால வாதம்
3. சக்கர வாதம்

சுருவாங்க வாதத்தில் தீராதவை - 4

1. உருத்திராங்க வாதம்
2. மயில் வாதம்
3. பக்க வாதம்
4. ஆந்திர வாதம்

இடுப்புக்கு மேல் வரும் நோய்களில் தீர்வன - 15

1. நேத்திர வாதம்
2. கர்னிக வாதம்
3. கண்டு வாதம்
4. தாக்கு வாதம்
5. விரை வாதம்
6. அபான வாதம்
7. அலகு வாதம்
8. முக வாதம்
9. விரல் வாதம்
10. பொருத்து வாதம்
11. தாக வாதம்
12. நீர் வாதம்
13. பித்த வாதம்
14. உதர வாதம்
15. கன்ன வாதம்

இடுப்புக்குக் கீழ் வரும் வாத நோய்களில் தீர்வன-5

1. கணை வாதம்
2. மூட்டு வாதம்
3. காந்தல் வாதம்
4. உள்ளடி வாதம்
5. சூலை வாதம்

சர்வாங்க வாதத்தில் தீர்வன - 1

1. பால வாதம்

விரை வாதம், ஆந்திர வாதங்களின் விளக்கம்:

விரை வாதத்தில் விரை நரம்பில் நீர் ஏறும். குடலில் வாய்வு தங்கும். சிறுநீர்ப்பையில் நீர் சேர்ந்து அது சூடாகி விடும். விரை நரம்பில் நீர் ஏறிக் கனத்தல் உண்டாகும். விரையின் ஒரு பக்க நரம்பில் வாய்வு சேர்ந்து அப்பக்க விரை வீங்கும். சிறுநீர் கடுத்து விழும். குடல்நோகும். இடுப்புளைந்து கடுப்புண்டாகும்.

ஆந்திர வாதத்தில், மூல வாய்வு அபான வாய்வோடு சேர்ந்து நெஞ்சில் ஏறி நின்று உளைச்சலையும், குத்தலையும் உண்டாக்கும். வாயில் நுரை தள்ளும். புழுவைப் போல் நெளியும். சுரம் காயும். உள்வலி, புறவலி இரண்டும் உண்டாகும்.

மேற்குறித்த விளக்கங்களிலிருந்தும் வாதமலாது மேனி கெடாது என்ற கோட்பாட்டின் படியும், குழந்தைகளுக்கு வருகின்ற வாதநோய்கள் கை, கால், முடம் ஏற்படுத்துவது மட்டும் அன்றி இதர உடலின் உறுப்புக்களையும் பாதிக்கின்றது. குறிப்பாக நாக்கு, கண், காது, உதடு, விரைப்பை, விரை போன்றவையாகும்.

தச வாயுக்களின் பிறழ் நிலையே வாத நோய்க்கான காரணம் என்பது இதிலிருந்து புலப்படுகின்றது.

மருத்துவம்

பாலர் வாதம் -40 சுவடியில் தீரும் சாத்தியக் கூறுள்ள எல்லா விதமான வாத நோய்களுக்கும் தனித்தனி மருத்துவம் கூறப்பட்டுள்ளது. இறுதியில் பொது மருத்துவமும், அகப்புற மருந்து முறைகளுடன் ஒற்றல் முறையும் விளக்கப்பட்டுள்ளது.

அக மருத்துவம்:
பால சகசராதித் தைலம்:

குறிஞ்சி வேர் பலம் 10, ஆடாதொடை, தசமூலம், கருஞ்சூரை, கையான், நொச்சி, கருவிலாஞ்சிக் குடம், திருப்பண்புல், சிற்றாமுட்டி தெற்றி, சுவடு, முக்கம் பாலை, பொன் குறண்டி, எட்டி, வில்வவேர், முள்முருக்கு, நாயுருவி வேர், வேப்பம் பட்டை வகைக்குப் பலம் 1.

ஒரு மட்பாண்டத்தில் பழைய காடி, கடல்நீர், சுத்திநீர் இளநீர், கதம்பை நீர் வகைக்கு 2 படி வீதம் மேற்படி மருந்துகளை இட்டு அடுப்பேற்றி $^{1}/_{8}$ ஆகக் குறுக்கி வடித்து, குறுந்தொட்டிவேர்ப்பட்டை, வேப்பங்கொழுந்து, கடுகு, கஸ்தூரி மஞ்சள், சதகுப்பை, கொடுவேலி, வெள்ளைப்பூடு எல்லாம் அரைத்து,

மாவிலங்குச் சாறு, இசங்கு, ஆடாதொடை, முள்முருக்கு, முருங்கைப் பட்டை, ஆட்டுப்பால், பசும்பால் வகைக்கு 1 படி வீதம் சேர்த்து அத்துடன் எள், நெய், வேப்பெண்ணெய், தேங்காய்ப்பால் வகைக்கு ½ படி வீதம் கலந்து மேற்படி மருந்தெல்லாம் ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றி, கோழி இரத்தமும், குடலும் கூடச் சேர்த்து மெதுவாக கிண்டி வேகும் போது காயம், இந்துப்பு வகைக்கு 1 கழஞ்சு சேர்த்துக் குடல் முறியும் பருவத்தில் வடித்துக்கொள்ளவும்.

காசெடை உள்ளுக்குக் கொடுத்து இரு காதுகளிலும் துளியாக விட்டு வெளியிலும் பூச, வீச்சு வலி, வெட்டு, விறையல் சன்னி, குத்துளைவு, அஸ்தி காந்தல், கை, கால், முடக்கம், திமிர்ப்பு இவை அனைத்தும் தீர்வதோடு பால வாதம் எல்லாம் பறந்து போகும்.

புற மருத்துவம்:

ஒற்றல்:

நவரையரிசி அரைப்படி பாலுடன் கலந்து நீர் சேர்த்து வேக வைத்து அந்த வெந்நீரைத் தனியாக வடித்து மீண்டும் நவரையரிசியைக் கிழியாகக்கட்டி, அந்த வெந்நீரிலேயே வேகும்படி அடுப்பில் வைத்து விடவும். பால் சகசராதித் தைலத்தை உடலில் தடவிப்பின் வெந்நீரில் வெந்துக் கொண்டிருக்கும் கிழியை எடுத்துச் சூடு பார்த்துப் பொறுக்கும் சூட்டில் உடல் முழுவதும் முறைப்படி ஒற்றமிடவும்.

சித்த மருத்துவ மேம்பாட்டிற்கு பாலர் வாதம் 40ன் பங்கு

பாலர் வாதம் 40 என்ற சுவடி 185 வெண்பாப் பாடல்களைக் கொண்ட ஒரு முழுமையான நூலாகும். இது போன்ற சுவடிகள் ஆயிரமாயிரம் பலரிடம் உள்ளன. இதனையெல்லாம் சேகரித்து நூலாக வெளியிடல் அவசியம்.

சித்த மருத்துவத்தில் கூறப்படாதவை இல்லையெனும் அளவிற்கு ஏராளமான மருத்துவ மூறைகள், கை பாகங்கள் ஒவ்வொரு நாளும் அழிந்து கொண்டிருக்கின்றன.

பாலர் வாதம் 40 என்ற சுவடி கிடைக்காத நிலையில் பாலர் வாதம் என்றால் ஏதோ பாலர்க்கு ஏற்படும் வாதம், இரு கால்களையும் முடக்கும் நிலை - என்ற நிலையை மாற்றித் தெளிவாகக் குழந்தைகளுக்கு ஒரு சிறந்த வாத நோய்ப் பரிகாரத்தையும் நோய்ப் பகுப்பையும் வெளிக்கொணர்ந்த தன்மையைக் காண முடிகிறது.

ஆகவே, சித்த மருத்துவ மேம்பாட்டிற்கு ஓலைச்சுவடிகளில் இருப்பவை எல்லாம் நூலாக்கப்படவேண்டும். இது மட்டுமின்றி அவையெல்லாம் சித்த மருத்துவத்தின் தாயகமாம் பாளை, சித்த மருத்துவக் கல்லூரி, பழனி சித்த மருத்துவக் கல்லூரி போன்ற சித்த மருத்துவ மாணாக்கரைத் தோற்றுவிக்கும் நிலையங் களிலுள்ள நூலகங்களையும் இதர நூலகங்களையும் ஆக்கிரமிக்க வேண்டும். இவ்வாறு பன்னாட்டு, உள்நாட்டுச் சித்த மருத்துவச் சுவடிகள் எல்லாம் அச்சாகி நூல் வடிவம் பெறும் நாள் என்னால் எண்ணிப் பார்க்க இயலவில்லை. அவ்வளவு ஆனந்தமான நாள் மகிழ்ச்சிக் கண்ணீர் வடிக்கும் நாள் என உள்ளம் பூரிப்படையும் நாளென்றால் மிகையாகாது.

மேலும் இக்கட்டுரை தயாரிப்பதற்கு முழுவதும் உதவித் தொகுத்துத் தந்த ஆசிரியர் மதிப்பிற்குரிய டாக்டர் ஆ. மரியஜோசப் பி.ஐ.எம்.எம்.டி.(எஸ்) அவர்களுக்கும் மற்றும் எனக்கு உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியை மனதாரத் தெரிவித்துக் கரம் குவிக்கின்றேன்.

வாழ்க தமிழ்!

வளர்க தமிழ்!

செழிக்க சித்தர் தந்த சீரிய மருத்துவம்.

சித்த மருத்துவ வளர்ச்சியில் மருந்து செய்முறைகளின் பங்கு

கு. இராஜலட்சுமி, இசிமஅ
மூன்றாமாண்டு, அரசு சித்த மருத்துவக் கல்லூரி,
பாளை.

மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து

உடல் நோய்களையும், உளநோய்களையும் போக்குவதோடு வராமலும் தடுத்து இறப்பையும் மறுப்பதுதான் மருந்து என மருந்துக்கு இலக்கணம் வகுத்தது சித்த மருத்துவ விஞ்ஞானமாகும்.

நம் சித்த மருத்துவத்தில் மருந்துப் பொருட்களை இருவகையாகப் பிரித்துள்ளனர். அவற்றில் உள்ளுக்கு வழங்கப்படுவன யாவும் அக மருந்து எனவும் வெளிப் பிரயோகமாகப் பயன்படுத்தப்படுவன யாவும் புற மருந்து எனவும் வழங்கப்படுகின்றன.

சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்பே நோய் அளவு நோயாளியின் அளவுக்கு ஏற்ப நம்முடைய மருந்துகளை நாமே தயாரித்து வழங்குவதாகும். இவ்வாறு நாமே மருந்துகளைத் தயாரித்து வழங்குதலே மற்றைய அனைத்து மருத்துவ முறைகளில் இருந்தும் நம்மை வேறுபடுத்திக் காட்டுகிறது. எனவே நம் மருத்துவத் துறையில் மருந்துகளைச் செய்வதற்குத் தேவையான செய்முறைகள் யாவும் தெளிவாகக் கூறப்பட்ட விரிவான செய்முறை நூல் நமக்கு இல்லை.

நம்முடைய சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையில் மருந்து செய்முறை என்பது மருந்துகளைத் தயாரிக்கும் செய்முறை பற்றிய அறிவு மற்றும் மருந்து செய்வதற்குத் தேவையான மருந்துச் சரக்குகள் பற்றிய அறிவு ஆகிய இரண்டும் சேர்ந்ததே ஆகும். ஏனெனில் மருந்துச்

சரக்குகளைப் பற்றி நமக்குத் தெளிவாகத் தெரிந்தால்தான் அவற்றைக் கொண்டு நாம் மருந்துகள் செய்து மருத்துவமும் செய்ய முடியும். எனவே நம் மருத்துவத் துறையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மருந்துச் சரக்கையும் நன்கு தெரிந்து வைத்திருத்தல் அவசியம்.

மேலும் நம் சித்த மருத்துவத்தில் மருந்து செய்முறை என்பது ஒரு சாதாரண விசயம் அன்று. இது சித்தர்கள் காலத்திலேயே சிறப்புப் பெற்று விளங்கிய ஒரு Acvanced Chemistry என்று நாம் உறுதியாகச் சொல்லமுடியும். இதனால்தான் நம் சித்தர்கள் அக்காலத்திலேயே **வேதியின் மகன் வைத்தியம் செய்வான்** என்று குறிப்பிட்டுள்ளனர்.

சித்த மருத்துவத்தில் மருந்து செய்முறைகள் யாவும் சித்தர் நூல்களில் ஆங்காங்கே பரவலாகத்தான் காணப்படுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதப் பட்டவைகளாகையால் அவற்றில் சிதைந்தவை போக மீதி உள்ளவற்றை அவரவர்கள் தமக்குக் கிடைத்தவற்றை எழுதி வைத்துள்ளனர். நமக்கு இப்பொழுது கிடைக்கும் சித்தர் நூல்களில் செய்முறைகள் யாவும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் அவரவர் மனப்பான்மைபோல் உவந்தவற்றைப் படித்தலும் மருந்து செய்தலுமாகவே காணப்படுகின்றன. நமக்கு இது ஒரு பெரும் குறை. எனவே இக்குறையை நீக்கும் பொருட்டு நம்முடைய சித்த மருத்துவத்திற்குச் செய்முறைகளைப் பற்றிய முழுமையான விவரங்கள் அடங்கிய செய்முறை நூல் இப்போதைய நிலைமையில் அவசியம் தேவையான ஒன்றாக இருக்கிறது.

மேலும் நம் மருத்துவத்தில் மருந்துகளைச் செய்வோர் அவரவர் மனப்பான்மைபோல செய்தலும் ஒரு மருத்துவர் கொடுக்கும் மருந்தின் குணம் முதலியவற்றை மற்ற மருத்துவர்கள் அறியாது இருத்தலுமான குறைகளைக் களைந்து நம் மருத்துவத்தில் மருந்துகள் செய்வதற்கு உண்டான விதிமுறைகள் சட்டதிட்டங்கள் அடங்கிய குறிப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

எரிப்பு முறைகள்

சித்த மருத்துவ மருந்து செய்முறையில் எரிப்பு முறை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. அவற்றுள் தீயின் அளவு நான்கு வகைகளாகக்கூறப்பட்டுள்ளது. விளக்கின் சுடரைப் போல உள்ளதீயிற்குத் தீபாக்கினி என்றும், மலர்ந்த தாமரைப் பூவைப்போல உள்ள தீயிற்குக் கமலாக்கினி என்றும், வாழைப் பூவைப்போல் உள்ள தீயிற்குத் கதலியாக்கினி என்றும் இந்த அளவுக்கும் மிகுதிப்பட்டதற்குக் காடாக்கினி என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்சொல்லப்பட்ட தீயின் அளவுகள் எந்த அளவு வெப்பத்தைக் குறிப்பிடுகின்றன என்று தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எனவே மருந்து செய்முறைக்குத் தேவையான தீயின் அளவு பற்றிய அறிவானது தெளிவுபடுத்தப்பட வேண்டிய ஒன்று.

புடபாகம்:

புடபாகம் பற்றிக் குறிப்பிடும்போது அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட எருக்களுக்கும் இப்பொழுது நாம் பயன்படுத்துவதற்கும் வரட்டியின் அளவு தன்மை ஆகியவற்றில் வேறுபாடு காணப்படுவதால் எருவின் அளவும் குணமும் திட்டப்படுத்தப்பட வேண்டும். மேலும் ஒரு வரட்டியில் இருந்து எவ்வளவு வெப்பம் நமக்குக் கிடைக்கின்றது என்று தெளிவுபடுத்தப்படவில்லை. இந்த வெப்பத்தின் அளவு நமக்குத் தெளிவாகத் தெரிந்திருக்குமேயானால் நாம் நவீன முறைப்படி தேவையான அளவு வெப்பத்தைக் கொடுத்துப் பின் மருந்திற்குத் தகுந்தாற்போல் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளவும் முடியும்.

மருந்து செய்முறையில் வைப்புச் சரக்குகளின் முக்கியத்துவம்:

நம் மருத்துவ முறையில் பெரும்பான்மையான மருந்துச் சரக்குகளுக்கு வைப்பு முறைகள் கூறப்பட்டு

உள்ளன. வைப்பு முறையில் செய்யப்பட்ட மருந்துச் சரக்குகள் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மருந்துச் சரக்குகளில் இருந்து வேறுபட்டுக் காணப்படுகின்றன. நாம் மருந்துகளைத் தயாரிப்பது மட்டுமல்லாமல் முடிந்த அளவிற்கு எளிமையாக நம்மால் செய்யக்கூடிய மருந்துச் சரக்குகளையாவது நாமே தயாரித்துக்கொள்ள வேண்டும். நம் மருத்துவ முறையில் வைப்பு முறையில் செய்யப்பட்ட சில சரக்குகள் தற்போது உபயோகித்து வரும் சரக்குகளில் இருந்து வேதியியல் குணங்களிலும் பௌதிக குணங்களிலும் வேறுபட்டுச் சிறப்பாக அமைந்திருப்பது முந்தைய கருத்தரங்குகளில் நிரூபிக்கப் பட்டுள்ளது. ஆனால் நாம் எவ்வளவுக்கு எவ்வளவு வைப்புச் சரக்குகளைப் பயன்படுத்துகிறோமோ அந்த அளவிற்கும் சித்தர்கள் குறிப்பிட்டுள்ள முழுப்பயனையும் அடைய ஏதுவாக இருக்கும்.

நம் மருந்துச் சரக்குகளையும் மருந்துகளையும் வேதியியல் முறைப்படி ஆய்வு செய்து மருந்துகள் மற்றும் மருந்துச் சரக்குகள் ஆகியவற்றின் வேதியியல் பொருட்கள், மருந்துகளின் வீரியம், செயல் திறன் என்பன போன்றவற்றைத் தெரிந்து கொள்வதற்கும் நமக்கு எல்லா வசதிகளும் அடங்கிய வேதியியல் கூடம் அவசியம் தேவைப்படுகிறது. நம் துறையில் உள்ள ஒவ்வொரு மருத்துவருக்கும் அடிப்படையாகத் தேவையான வேதியியல் அறிவினைப் பெறுமளவிற்காவது வசதிகளை அமைத்துத் தரவேண்டும்.

பக்குவாபக்குவம்

எளிய முறையில் செய்யப்பட்ட மருந்துகளே யானாலும் பக்குவ பாகத்தைப் பொருந்துமானால் அவை தேவர்கள் உண்ணத் திருப்பாற் கடலில் உண்டான

அமிர்தத்திற்கொப்பாகும். பெருமுறையினால் செய்யப் பட்ட மருந்துகளேயானாலும் செய்பாகம் கெடுமானால் அவை திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் வருத்தம் பொறாத ஆதிசேடன் கக்கிய விடத்திற்கு ஒப்பாகும் என்று பதார்த்தகுண சிந்தாமணியில் கூறப்பட்டிருப்பதால் மருந்துசெய்யும்போது மருந்துகளில் பக்குவாபக்குவங்கள் நமக்கும் சரியாகத் தெரியவேண்டும்.

உதாரணமாகப் பற்பம் முதலிய அகமருந்துகள் முழுமையாக முடிந்துள்ளனவா என்பதற்கு உரிய சோதனையில் ஆள்காட்டி விரலுக்கும் கட்டை விரலுக்கும் நடுவிலிட்டுப் பற்பத்தைத் தேய்த்தால் ரேகை பதிய வேண்டும் என்றும், சிறிதளவு பற்பத்தை நீரில் போட்டால் உடனே மூழ்கக் கூடாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் எந்த ஒரு பொருளையும் மிகவும் மென்மையாகப் பொடித்து நீரில் போடும்போது மிதக்கவே செய்கிறது. எனவே மேற்கண்ட சோதனைகளை மட்டுமே கொண்டு ஒரு பற்பம் முடிந்துவிட்டதாக நாம் முடிவுக்கு வர இயலாது. இது போன்ற செய்திகள் தெளிவு படுத்தப்படவேண்டும்.

சரக்குகளை இனம் கண்டறிதல்:

நம் மருந்து செய்முறையில் சரக்குகளை இனம் கண்டறிதல் அவசியம். வழக்கொழிந்து வரும் சரக்குகளை நாம் கண்டறிந்து அவற்றை வெளிக்கொணர வேண்டும். சரக்குகளை இனம் காணும் அறிவை ஒவ்வொரு மருத்துவரும், மருத்துவ மாணவரும் கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும்.

சித்திரமும் கைப்பழக்கம்,
செந்தமிழும் நாப்பழக்கம், என்பதை

நம் மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில்

செய்முறையும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்

என்று சொல்வது மிகவும் பொருத்தமானதாகும். ஏனெனில் நம் மருந்துகளைப் பொறுத்தவரையில் நாம் எவ்வளவுக்கு எவ்வளவு செய்து பார்க்கின்றோமோ அந்த அளவிற்குத்தான் நாம் நம் மருந்துகளைப் பற்றிப் பூரணமாக அறிய இயலும். அதாவது நம்மால் செய்துகொள்ள முடியும் என்ற நிலையில் உள்ள மருந்துகள் எல்லாவற்றையுமாவது நாம் திருப்பித் திருப்பிப் பல முறைகள் செய்து பார்க்க வேண்டும். அதற்குத் தேவையான செய்முறைக் கூடங்களும் வசதிகளும் மருத்துவர்களுக்கும் மாணவர்களுக்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

மேலும் நம் மருந்து செய்முறைக்குத் தேவையான மூலிகைகள் நமக்கு எல்லோருக்கும் எளிதில் தேவையான அளவிற்குக் கிடைப்பதில்லை. எனவே நிறைய மூலிகை உற்பத்தியைப் பெருக்குவதற்காக மூலிகைப் பண்ணைகள் மற்றும் தோட்டங்களை அமைத்து குறையை நாமே போக்க வேண்டும்.

நம்முடைய [illegible]களுக்கும் மருத்துவ முறைக்கும் விளம்பரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இவற்றைப் பொதுமக்கள் அனைவரும் நன்கு அறியும்படி செய்வது அவசியமாகும். ஒவ்வொரு வீட்டிலும் மூலிகைகளை வளர்க்கச் செய்ய வேண்டும்.

எனவே நம்முடைய மருந்து செய்முறைக்கு அடிப்படையாகவும் அவசியமாகவும் தேவைப்படுகின்ற மருந்து செய்முறைகள் பற்றிய விரிவான நூல், மருந்து சரக்குகள் பற்றிய அறிவு, மருந்து செய்முறைக்குத் தேவையான மருந்துச் சரக்குகள் எளிதில் கிடைக்கச் செய்தல், நமக்குத் தேவையாக இருக்கின்ற அடிப்படை வேதியியல்

அறிவும் வசதிகளும் கிடைக்கச் செய்தல் போன்ற நடைமுறையில் உள்ள இந்தச் சிக்கல்களையாவது நிவர்த்தி செய்து கொள்ள வேண்டிய கட்டாய நிலையில் நாம் இருக்கின்றோம். ஆகவே இந்த வசதிகள் யாவும் மருத்துவர்களுக்கும், மாணவர்களுக்கும், கிடைக்கச் செய்ய வேண்டியது நமது அரசின் கடமையாகும். நம்முடைய இந்தத் தேவைகளை நாம் அடையும்போது நம் மருத்துவம் மேன்மேலும் வளர்வதற்கு ஏதுவாக இருக்கும். அப்பொழுதுதான் நம் மருத்துவம் வளரும், சிறப்புப் பெறும்.

இக்கட்டுரை சிறப்புற அமைவதற்கு உறுதுணையும், உதவியும் நல்கிய ஆசிரியப் பெருமக்களுக்கும் மற்றும் அனைத்து நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் ஆதாரம்

1. சித்த மருத்துவாங்கச் சுருக்கம்.

2. குணபாடம்-தாது சீவ வகுப்பு

3. T. V. சாம்பசிவம் பிள்ளை அகராதி

4. தேரையர் வெண்பா

சித்த மருத்துவத்தில் பலர் போற்றும் புழு வெட்டு மை

மரு. அ. அறிவழகன், பி.எஸ்.எம்.எஸ்.,
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளை.

முன்னுரை:

உலகில் உள்ளவர்கள் பெரும்பாலும் உடல் ஆரோக்கிய மின்மையால் அவதிப்பட்டுக்கொண்டுள்ளனர். ஆரோக்கிய மின்மையால் உண்டாகும் பலாபலன்களைப் பார்க்கும்போது நாட்டின் பொருளாதாரம் சீர் கெட்டு எல்லோரும் துன்பத்தில் இருந்து வருகின்றனர். அதிலும் தோல் வியாதியைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இது நீண்ட நாள்பரிகாரம் செய்ய வேண்டிய ஒன்று என்பது எல்லோருக்கும் புரியும். நீண்ட நாள் பரிகாரம் செய்யும்போது பணச்செலவு, வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியாமை ஏற்படும். இதனால் நோயாளியைச் சார்ந்துவரும் பட்டினியிலிருந்து அவர்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது. இதனால்தான் இதனைக் கரும வியாதி என்கின்றனர். கரும வியாதி என்று சொன்னால் மனம், உறவினர், பொருளாதாரம், சமுதாயம், நாடு ஆகிய எல்லாம் சீர்கேடு அடைந்து நாட்டுக்கு விடப்பட்ட சவாலாக அமைகிறது. இந்நிலையில் இதற்குப் பரிகாரம் என்று பார்க்கும் போது கருமவினையை நீக்கக் கூடிய சித்த மருத்துவம்தான் சிறந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே சித்த மருத்துவத்தில் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளில் ஒன்றான புழுவெட்டும், மருத்துவமும் என்பதைப் பற்றிச் சிறு கட்டுரை ஒன்று இங்கு படிக்கப்படுகிறது.

பொதுவாகத் தோல் பிணிகள் வரக்காரணம்

தோல்நோய் வரப் பல காரணங்கள் உண்டு. இதில் புழுக்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. புழுவினாலும் தோல் நோய்கள் வருமென்பதை

புழுக்கடி போல் காணுமது கிருமியாலே 93
திரேகமதில் சொறிக்குட்டம் கிருமியாலே 93

என்னும் குருநாடிப் பாடலால் அறியலாம்.

குட்டமுடன் திரேகமெல்லாம் பறக்கும்போது
குழிகுழியாய் கிருமியினால் கொள்ளும் புள்ளி 96

வியாதியுள்வேறு விளங்கிய குட்டங்கேள்
சுயாதிக்கிரந்தி சுழன் மேகத்தாலாறும்
பயாதி மண்ணுளப் பலவண்டினால் வெட்டும்
நியாதிப் புழு நாலாய் நின்றதிக் குட்டமே

என்னும் திருமூலர் பாடலாலும் அறியலாம்.

பொதுவாகப் புழு என்பது கிருமியைக் குறிக்கும். கிருமிகள் இருக்கக் கூடிய இடங்கள், பெருங்குடலில் இறங்கு பகுதி, மயிர்க்கால்கள், (வியர்வை ஏற்படக் கூடிய இடங்கள்) அழுக்குச் சேரக்கூடிய இடங்களில் வாழும் கிருமிகள் வளருவதற்கு ஒன்றையொன்று சார்ந்திருக்கும். இவ்வாறு நம் உடலில் பல வகையான கிருமிகள் காணப்படுகின்றன. இதில் பெருங்குடலில் காணும் கிருமிகள் பல நோய்களுக்கே ஏதுவாகின்றன. இந்தக் கிருமிகள் வளர்ச்சியடையக் காரணம் அபான வாயு பாதிப்பதாகும். அபானவாயு சரிவர செயல்படாத காரணத்தால் மலச்சிக்கல் உண்டாகும். மலச்சிக்கல் காரணமாக மலம் சரியாக வேளியேறாது. தேக்கம் உண்டாகும். இப்படி மலக்கட்டினால் அபானவாயு பாதிப்பதால் மற்ற கழிவுகளை வெளியேற்றும் உறுப்புகள் உதாரணமாக மயிர்க்கால்களுக்கு அடியில் உள்ள வியர்வையை வெளியேற்றும். வியர்வைச் சுரப்பிக்

கோளங்கள் பாதிக்கப்படுகின்றன. இப்படிப் பாதிப்பவைகள் தோல் வியாதிக்குக் காரணமாகின்றன.

பிராணவாயு மனோமய கோசத்தோடு நெருங்கிய தொடர்பு உள்ளது. மனோமய கோசம் என்பது மனதைப் பற்றியது. எனவே மனம் வாலிப வயதை அடையும் போது மாற்றம் அடையும். இக்காலத்தில் உள்ளிடைச் சுரப்பிகளின் தொழில் மற்றும் செயல்பாடுகள் ஈடுபாடு உடைய வைகளாக அமைகின்றன. இதுவும் தோல்வியாதிக்கு ஒரு காரணமாக அமைகின்றது. மேலும் தோல் வியாதி கண்டவரிடம் நெருங்கிப் பழகுதல் அவர்களுடன் போகம் செய்தல், அழுகிய நீரில் வாழும் உயிர்களான மீன், நண்டு, நத்தை, இவைகளை உண்பதாலும் தோல் வியாதி உண்டாகும். இவைகளில் புழு வெட்டு வியர்வைச் சுரப்பிக் கோளத்தில் பாதிப்பு ஏற்படுவதால் முடியுள்ள இடத்தில் உண்டாகும் ஒருவகைத் தோல் நோயாகும்.

முக்குற்ற வேறுபாடு

நத்தை மீன் முதலிய உயிர் வாழ்பவைகள் வாதம் செய்வதால் அபானவாயு பாதிப்படைகிறது. இதனால் வாதம் பாதிப்படையும், கபவாத பாதிப்புகளால் உடல் பலகீனமடைந்து சீரணம் பாதிக்கப்படுகிறது. இதனால் உஷ்ணம் மிகுதியாகி வறட்சி, சொறசொறப்பு, தினவு போன்றவைகளை உண்டாக்கும். கப மிகுதி பாதிப்பைக் காட்டும்.

வாதமில்லாது மேனி கெடாது

என்பதால் எல்லா நோய்களும் வாதம் (சத்துவகுணம்) பாதிக்கப் படுவதால் உண்டாகும் என்பதுமேற்கண்ட எடுத்துக்காட்டு மூலம் புலனாகும்.

புழுவெட்டு

தலையில் திட்டு திட்டாக முடி உதிர்ந்து அவ்விடங்கள் மினுமினுப்பாகத் தோன்றும். ஒரு வகைக் கிருமி நோயைப் புழு வெட்டு என்கிறோம். முடி உதிர்தல், ஒரு சிறிய இடத்தில் தொடங்கிப் பரவிக் கொண்டே வரும். இது தலை முழுவதும் வழுக்கையாகக் காரணமாகலாம். முடி உதிர்ந்த இடத்தில் முடி வளர்வது கடினமாகும். இதைப் புழு அரித்தல் (Eaten by Worm) என்று கூறலாம்.

பொது மருத்துவம்

மருந்துகளைக் கொண்டு முறையாகவே நோய்களை நீக்குவது மருத்துவம் எனப்படும் (மருந்து -நோயை நீக்கக் கூடி மூலப்பொருள்) மருத்துவச் செயல்பாட்டில் அக மருத்துவம் புறமருத்துவம் என இரண்டு பெரும் பிரிவுகள் உள்ளன. இதில் அக மருத்துவத்தில் பயன்படுத்தும் மூலப் பொருள்கள் சுவை, வீரியம், குணம், செய்கை இவைகளைக் கொண்டு உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது. இதே முறையில் புற மருத்துவமும் பயன்படும். தோல் நோயில் கப குற்றம் மிகுவதால் மலச்சிக்கல் உண்டாகும். எனவே அதை நீக்கவும் கிருமிகளை அழிக்கவும் கூடிய மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும்.

நோய்க்கான மருத்துவம்
புற மருத்துவம்

அக மருத்துவத்தைப் போன்றே முத்தாதுக்களைச் சமப்படுத்தப் புறமருத்துவமும் அவசியமாகிறது. அண்டத்தில் உள்ளதே பிண்டம் என்ற மொழிக்கேற்பச் சீதோஷ்ண நிலைக்கு இடங்கொடுப்பது உடலின் புறப்பாகம். எனவே புற மருத்துவத்தை அக மருத்துவத்தோடு செய்ய வேண்டும். மேலும் சில தவிர்க்க முடியாத சூழ்நிலையில் புற மருத்துவத்தைக் கையாண்டாலே நோயின் தீவிரம் குறையும்.

புழுவெட்டு மை

தேவையான பொருட்கள்	கருவிகள்
1. வெண்காரம்	வெண்கலப்பாத்திரம்
2. கரிசாலை	இரும்பு உலக்கை
3. வெண்ணெய்	சங்கு

செய்முறை

வெண்காரம் ஒரு வராகன் எடையை எடுத்து வெண்கலத்தட்டில் வைத்துக் கரிசாலை சாறுவிட்டு இரும்பு உலக்கையால் துழாவி, பின் தேவையான அளவு வெண்ணெய் சேர்த்து மூன்று நாழிகை நன்கு அரைத்துப் பின்னர் சங்கால் மூன்று நாழிகை மைபோல் அரைத்து எடுத்துச் சூரிய புடம் வைக்க வேண்டும். புழு வெட்டு மையில் சேரும் மருந்துப் பொருட்களின் குணங்கள்.

கரிசலாங்கண்ணி	கரிசல் ஆம் கண்ணி கரிசல் என்பது கருப்பு நிறமுடைய தொகுப்பு எனப்படும்.
கருப்பு	வாதம் - மேக நிறம்

எனவே வாதத்தின் நிறம் மேகநிறம் என்பதால் கரிசாலை ஒரு வாத மூலிகையாகும். எனவே கரிசலாங்கண்ணி சத்துவ குணமுள்ளது. எனவே இது சத்துவ குணத்தைப் பாதிக்கக் கூடியவைகளை நீக்கக் கூடியது. சத்துவ குணத்தைப் பித்தம், கபம், இரண்டும் பாதிக்கச் செய்கிறது. கபம் தமோ குணம். தமோ குணத்தால் சத்துவ குணம் பாதிக்கப்படுகிறது. எனவே இவைகளை நிவர்த்திக்கச் சத்துவ குணப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். கரிசாலை சத்துவகுணம் உடையது என்பதால் இதனைப்

பயன்படுத்தலாம். கர்ம வினையை நீக்கக் கூடிய மூலப் பொருட்கள் சத்துவ குணத்தை அதிகப் படுத்தும் மூலப் பொருட்கள் கற்ப எனப்படும். எனவே கரிசாலை கற்ப மூலிகைகளில் ஒன்று. கரிசாலங்கண்ணியை வாத குறை குணத்தால் ஏற்படும் நோய்களுக்கும், கபமிகுதியால் ஏற்படும் நோய்களுக்கும் கபவாத நோய்களுக்கும் நிவாரணியாகப் பயன்படுத்தலாம்.

சுவை

கைப்பு, தன்மை - வெப்பம், பிரிவு - கார்ப்பு

குணம்:

குரற்கம்மற் காமாலை குட்டமொடு சோபை
யுறற்பாண்டு பன்நோயொழிய - நிரற்சொன்ன
மெய்யாந்த கரை யொத்த மீனின்று, நற்புலத்துக்
கையாந்தகையொத்த கல் (அ.கு)

வெங்காரம்:

சுவை: இனிப்புடன் கூடிய துவர்ப்பு சுவை

குணம்:

"சொறிபுடையென் குன்ம நவை சோரியரசம்
பறிகிரணி கல்லுமை பண்நோய்-நெறியைத்
தடங்கணங்க பங்கிருமி சர்ப்பவிடஞ் சற்றி
யிடங்கணங்க லக்கிற் போமென்"

"வெங்காரம் சேத்துமத்தை வேறு பண்ணுமேகடுகு
தங்குசில நீர் முறியத் தான் வாங்கும்."

வெண்கலம்:

சுவை -துவர்ப்பு, வீரியம் -வெப்பம், பிரிவு, கார்ப்பு

குணம்:

நேத்திரநோய் சோமவினை நீர் பெருக்கு இரத்த பித்தம்
வீழ்ந்து சுவாச மந்தம் மேகங்கால்-ஆழ்த்து கபம்
வாதவலி சூலை மகோதரம் போம் பித்தமொடு
தாதுவுமாம் வெண் கலத்தால் சாற்று.

இரும்பு

பாண்டு வெண்குட்டம் பருந்தூல நோய் சோபை
மாண்டிடச் செய் மந்தம் காமாலை குன்மம்
பூண்ட பெரும் தாது நாட்டம்போம் பேதி பசியுண்டாம்
கருந்தாது நட்டம் இடுங்கால்

வெண்ணெய்:

குணம்

கண்ணிலெழு நோயுங் கண்ணெரிவும் பீளையும் போ
மெண்ணும் பசியுமெம்புங்கான்-நண்ணரிய
ஆவினறும் வெண்ணெய்க் கலும் வன்மேகமெல்லாம்
பூவினர்க்கெல்லாம் புகல்

சங்கு:

குணம்

கசிவா மிரத்த பித்தங் கண்ணோய்க ளேகும்
பசியாரும் வாதம் பறக்கு-மிசியுடனே
தங்கு முளை விரணம் தானகலுமே வெள்ளைச்
சங்கமது வுண்டா யிற்றான்

பயன்படுத்தும் முறை:

மருந்தை வேண்டிய அளவு எடுத்துப் பாதிக்கப்பட்ட இடத்திலும், அதைச் சுற்றியுள்ள இடத்திலும் நன்கு அழுத்தித் தேய்க்க வேண்டும்.

மருத்துவ ஒப்புநோக்கு

அ. தலையின் ஒரு பகுதியில் மட்டும் பாதிக்கப்பட்டுக் குணம் கண்டவர்கள் விபரம்:

வரிசை எண்	பெயர்	வயது	பால்	ஊர்	மருந்து	குணமான நாள்
1.	சாயிராபானு	23	பெ	சமாதான புரம்	வேண்டிய அளவு	6 நாள்
2.	மகேஷ்வரி	25	பெ	தேன்காசி	வேண்டிய அளவு	5 நாள்
3.	சுரேஷ்	18	ஆ	முருகன் குறிச்சி	வேண்டிய அளவு	5 நாள்
4.	சங்கரன்	30	ஆ	பாளையங் கோட்டை	வேண்டிய அளவு	7 நாள்
5.	கோபால்	7	ஆ	வல்லநாடு	வேண்டிய அளவு	5 நாள்
6.	ராணி	12	பெ	ரெட்டியார் பட்டி	வேண்டிய அளவு	6 நாள்

அகமருத்துவ அவசியம்

உடலின் பல பகுதிகளிலும், அதாவது தலை, தாடி, அக்குள் போன்ற பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட்டிருப்பின் அகமருத்துவம் அவசியமாகின்றது.

அகமருந்து

கருடன் கிழங்கு எண்ணெய்

இது மலமிளக்கி, புழுக்கொல்லி, செய்கைகளைக் கொண்டிருப்பதால் புழுக்களைக் கொன்று மலத்துடன் வெளியாக்குவது மட்டுமின்றி வியர்வை மூலம் வெளிப்பட வாய்ப்புள்ளது.

அளவு:

15 மில்லி வெந்நீருடன்

பத்தியம்

உப்பு புளி நீக்க வேண்டும்.

ஆ. உடலின் மற்ற பகுதிகளிலும் பாதிக்கப்பட்டு குணம் கண்டவர்கள் விபரம்

வரிசை	பெயர்	வயது	பால்	ஊர்	உள் மருந்து அளவு	புற மருந்து அளவு
1.	மாரியப்பன்	45	ஆ	பெரிய பாளையம்	15 மில்லி காலை மட்டும் வெந்நீருடன்	வேண்டிய அளவு
2.	குழந்தைசாமி	36	ஆ	சங்கர் நகர்	--	17
3.	டேவிட்	27	ஆ	களக்காடு	--	18
4.	குணசேகர்	23	ஆ	தியாகராசநகர்	--	20
5.	தமயந்தி	23	பெ	பாளையங் கோட்டை	--	16

பிற மருந்துகள்

1. பேய்க்குமட்டிக்காய் சாறு வெப்ப நெய் தேன்
2. பலகரை பழச்சாறு
3. அரிந்த வெங்காயத்தைப் பாதித்த இடத்தில் தேய்த்தல்
4. அரளிச் செடியின் பாலைத் தடவுதல்

இந்த மருந்துகளையெல்லாம் விட புழுவெட்டு மை விரைவாகவும் எளிதிலும் குணம் தரக்கூடியது என்பது மட்டுமின்றி நிச்சயமாகவும் குணம் தரக்கூடியது என்பது மேற்கண்ட மருத்துவ ஒப்பு நோக்கு மூலம் தெரிய வந்தது.

சித்த மருத்துவ வளர்ச்சியில் புழுவெட்டு மையின் பங்கு ஒரு எடுத்துக்காட்டு

ஆங்கில மருத்துவத்தில் குணப்படுத்த முடியாத இந்நோயை இந்த மை எளிதாகவும், விரைவாகவும் குணப்படுத்துகிறது. மேலும் இதனால் உடனுக்குடன் எவ்விதமான ஒவ்வாத உபாதைகளும் உண்டாவதில்லை. இதைப் போல தோல் வியாதிகளைக் குணப்படுத்தக்கூடிய அரிய மருந்துகள் பல சித்த மருத்துவத்தில் காணப்படுகின்றன. எனவே புழுவெட்டு நோயை இந்த மையின் மூலம் மிக நிச்சயமாகக் குணமாக்கலாம்.

முடிவுரை

தோன்றியவைகள் (Creation) யாவும் கரும வினையினால் பின்னிப் பிணைக்கப்பட்டவையாகும். இப்பிணியை நீக்கச் சித்த மருத்துவம் முதன்மை பெற்று விளங்குகிறது. ஆகவே தோல் சம்பந்தப்பட்ட பரிகார முறைகளுக்குச் சித்த மருத்துவம் சிறப்புடையது என்பது மட்டுமல்லாது எல்லா விதமான நோய்களுக்கும் பரிகாரம் உண்டு.

இதைத் தெளிவுபடுத்துவதுதான் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆகவே இதை உலகப் பொது மருத்துவம் என்று கூறினால் அது மிகையாகாது. இப்புழு வெட்டு மையைப் போலச் சித்த மருத்துவத்தில் தோல் பிணிகட்கு மட்டும் அல்லாது எல்லா நோய்களுக்குமே நல்ல குணம் தரக்கூடிய எத்தனையோ அரிய மருந்துகள் உண்டு. அவைகளை எல்லாம் சித்த மருத்துவ அடிப்படையில் செயலாற்றினால் மக்கள் சிகிச்சைக்குச் சித்த மருத்துவத்தை நாடுவர் என்பது திண்ணம். எனவே சித்த மருத்துவம் வாழ வேண்டும், வளர வேண்டும் என வேண்டி விரும்பி இக்கட்டுரையை முடித்துக் கொள்கிறேன்.

ஒரு நூற்றாண்டு மருந்து

மருத்துவர் வெ. அருணாசலம், விரிவுரையாளர்
பட்ட மேற்படிப்புத்துறை
மரு. மரியஜேசப், உதவிவிரிவுரையாளர்
செல்வி. ம. புனிதா
நிறைவாண்டு, பி.எம்.எம்.எஸ்.
அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

முன்னுரை

சித்த மருத்துவம் என்பது சித்தர் கண்ட மாபெரும் மருத்துவ முறை மட்டுமன்று. சித்தியடைந்த மருந்துகளால் பிணிகளை நீக்குவது எனவும் பொருள்படும். சித்த மருத்துவம் தமிழ் தோன்றிய காலத்திலேயே தோன்றியது. சித்த மருத்துவத்தில் தாவரம், தாது மற்றும் உயிரினங்களின் உறுப்புகள் ஆகியவற்றைக் கொண்டு மருத்துவம் செய்யப்படுகிறது.

சித்த மருத்துவத்தில் மருந்து முறைகளை அக மருந்து எனவும், புற மருந்து எனவும் இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளார்கள். இவற்றுள், அக மருந்துகளில் மிகவும் வீரியம் மிக்கதாகவும், நூறு ஆண்டு ஆயுட்காலத்தைக் கொண்டதுமான கட்டு என்ற மருந்தின் மருந்தியல் திறனை சித்தர்களின் முறைப்படி சுருங்கக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஆயுட்காலம்

மருந்துகளின் ஆயுட்காலங்களைப் பற்றிக் கூறிய சித்தர்கள் ஒவ்வொரு மருந்துக்கும் தனித்தனியே ஆயுட்காலங்களை வரையறுத்துள்ளனர். அவைகளுள், கட்டு, நூறாண்டுகாலம் வன்மையுடையதெனத் தெளிவுபடுத்துகின்றனர். இதை "நீறு கட்டு உருக்கு களங்கு நானூறு" என்று கூறியுள்ளனர். ஆதலால் நூறாண்டு காலம்

பயன்படும் இம்மருந்தை ஒவ்வொரு மருத்துவரும் பயன்படுத்தி நிறைந்த நிலையான நோய் நீக்கத்துக்கு வழி காணலாம்.

கட்டு

எளிதில் துகள்களாகச் சிதறக்கூடிய பாடாணங் களையும், நெருப்புக்குப் புகையும் பொருள்களையும், புகையாது உருகு நிலைக்குக்கொண்டு வந்து இதை கட்டுப்படுத்துவதே கட்டு ஆகும். இதை "மாத்திரைக்கல்" எனவும் மருத்துவ இலக்கியங்கள் கூறுகின்றன. கட்டு என்ற மருந்தை மருத்துவத்தில் முக்கியமாகப் பயன்படுத்துவதன் நோக்கம், அதனுடைய அதிக வீரியத்துக்காக மட்டுமின்றி அதனுடைய நெடிய ஆயுளைக் கருத்தில் கொண்டுமாகும் என்பதை அறிய முடிகிறது.

1. நடைமுறையில் சில மருத்துவ அறிஞர்கள், மூன்று முகக்கட்டு, நான்முகக்கட்டு, ஐந்து முகக்கட்டு என்று பல வகையான கட்டுகளைப் பயன்படுத்தி வருகின்றனர் என்ற செய்திகளின் வாயிலாக நம் சித்தர்களின் வாத வேதியியல் திறனை நாம் அறிய முடிகிறது.

2. மருந்துப் பொருட்களைக் கட்டுகளாகச் செய்து வைத்துக்கொண்டு அவற்றைத் தேவையானபொழுது பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு இருப்பதால் இம்முறை எல்லோருக்கும் பயனுள்ளதாக அமையும்.

3. சித்தர்கள் பெரும்பாலும் பாடாணங்களையே கட்டுகளாக்கிப் பயன்படுத்தி வந்தனர். நடைமுறையில் அனுபவம் ஈட்டிய மருத்துவர்கள் வாதக்கட்டு என்றும் வைத்தியக்கட்டு என்றும் இருவகையான கட்டுகளைக் குறிப்பிடுகின்றனர். வாதக்கட்டு என்பது வாதவேதியல் (அல்கெமி) முறைக்குப் பயன்படுத்தப்படுவதாகச் செய்யும் கட்டு. வைத்தியக் கட்டு என்பது நோய் நீக்கத்துக்காகப் பயன்படுவது ஆகும்.

கட்டுமுறைகள்

கட்டு செய்யும் முறைகளுள் பாடாணங்களைத் தனியாகவோ அல்லது வேறு பொருள்களுடன் கலந்தோ புகைநீர், செயநீர், இலைச்சாறு, குடிநீர், தாய்ப்பால், குழிப்புட நெய் இவற்றுள் ஏதாவது ஒன்று கொண்டு சுருக்குக்கொடுத்துக் கட்டிக் கொள்வதும் ஒரு முறை.

உருகித் திரவமாகிற தாதுவை வேறு ஒரு பொடி அல்லது திரவத்தால் தற்காலிகமாகக் கெட்டிப்படுத்த முடியும். அதை நிரந்தரமாகக் கட்டுப்படுத்துவதே கட்டு எனப்படும்.

உப்புகளின் கட்டுமுறை

சில உப்பு வகைகளைக் குறிப்பிட்ட நாட்கள் இலை, மலர், காய் அல்லது கனி இவைகளின் சாற்றில் ஊறவைக்க வேண்டும். ஊறிய பின்னர் அதை ஒரு பாத்திரத்தில் ஊற்றி, அப்பாத்திரத்தை உலையில் வைத்து ஊதினால் பின்னர் உப்பு உருகிக் கட்டிப்படும். இது ஒரு முறை.

காரசாரக் கட்டுகள்

சில காரசாரங்களைச் சில உப்பு வகைகளுடன் சேர்த்துச் சட்டியிலிட்டு அச்சட்டியை முறைப்படி புற்றுமண் கொண்டு சீலை செய்து உலர்த்திக் கொள்ள வேண்டும். நன்கு உலர்ந்த பின்பு, அதை நெருப்புக்கு உட்படுத்தி உருகச் செய்து, அதை ஆறவிட்டுக் கட்டுப்படுத்தல் - இது மற்றொரு முறை.

சில வகை உபரசங்களைக் குறிப்பிட்ட மூலிகைச்சாறு விட்டு அரைத்து, வில்லை தட்டி வெயிலில் உலர்த்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு உலர்த்தப்பட்ட வில்லையை ஒரு அகலில் வைத்து மேலகல் கொண்டு மூடி அதற்கு முறைப்படி சீலைமண் செய்து புடமிட்டு எடுத்தால் கட்டு ஆகும். இது இன்னொரு முறை.

இலக்கணம்

கட்டு என்றால் அது எப்படியிருக்க வேண்டுமென அதற்குரிய இலக்கணத்தைச் சிலர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்கள்.

1. எந்த நிலையிலும் நொறுங்கிச் சிதறக்கூடாது
2. நெருப்புக்குப் புகையக்கூடாது.
3. நீர்மப்பொருளில் கரையக் கூடாது.

இவ்வாறு கூறப்பட்டால் வைத்தியத்திற்காக உருவாக்கப்பட்ட கட்டுகள் சில நொறுங்கும் தன்மையுடையதாகவே வழக்கில் உள்ளன. மேலும், சில கட்டுகளைப் பொடித்து சில முறை மருந்துகளுடன் வழங்க வேண்டும் எனப் பல சித்தர்களே குறிப்பிட்டுள்ளதையும் நாம் இங்குக் கவனத்தில் கொள்வது அவசியம். பொதுவாகப் பலமுறை சாணை ஏற்றப்பட்ட வாதக்கட்டுகள் நொறுங்குவதில்லை. ஆனால் வைத்தியக் கட்டுகளில் சில நொறுங்கும் தன்மையுடைதாயுள்ளன.

வகைகள்

செந்தூர வகைகளை அதன் தயாரிப்பு முறையை அடிப்பயைாகக் கொண்டு அரைப்புச் செந்தூரம் வறுப்புச் செந்தூரம் என சில வகைகளாய்ப் பகுப்பதைப் போன்றே கட்டுகளையும் அதன் தயாரிப்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம். அவை வருமாறு

1. எரிப்புக் கட்டு
2. புடக்கட்டு
3. சுருக்குக் கட்டு

எரிப்புக்கட்டு

கட்ட வேண்டிய மருந்துப் பொருளை கட்டுவதற்கு வேண்டிய பொருட்களால் கவசம் செய்து எரித்துக் கொள்வது

எரிப்புக் கட்டு. இதற்கு எடுத்துக் காட்டாக இலிங்கக் கட்டு செய்யும் முறைகளுள் ஒன்றைக் குறிப்பிடலாம்.

முறை

கற்பூரம், பளிங்குச் சாம்பிராணி இரண்டையும் சேர்த்துக் குழிக்கல்லிலிட்டு நன்கு அரைத்து மெழுகு பதத்திற்குக் கொண்டுவந்து, அதை பத்து பங்கு வைத்து, ஒரு பங்கை சீலையில் தடவி. அதை இலிங்கக்கட்டியின் மீது சுற்றி சிறு தீயாக எரிக்க வேண்டும். எரித்து முடிந்தபின் கரியைச் சுரண்டி எடுத்து மீதமுள்ளவற்றையும் தனித்தனியாக இவ்வாறு கவசம் செய்து கைபாகம் செய்பாகம் அறிந்து எரித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

புடக்கட்டு

கட்ட வேண்டிய மருந்துப் பொருட்களை சில சாறுகளைக் கொண்டு சுருக்குக்கொடுத்தாவது அல்லது சில மருந்துப் பொருள்களின் சில துகள்களுக்குள் புதைத்தாவது, முறைப்படி சீலைமண் செய்து புடத்துக்கு உட்படுத்திச் செய்யும் கட்டு முறை புடக்கட்டு எனப்படும்.

முறை

இதற்கும் இலிங்கக்கட்டு செய்யும் முறைகளுள் ஒன்றையே எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

செய்முறை

ஒரு மண் பாத்திரத்தில் இஞ்சிச் சாற்றை விட்டு, மண் பாத்திரத்தின் மீது ஓலைக்கனமுள்ள ஒரு செம்புத்தகட்டை வைத்து, அதன்மீது இலிங்கக் கட்டியை வைத்து, மேற்சட்டி கொண்டு மூடி, ஐந்து சீலை மண் செய்து, ஈரமுலர்ந்த பின்பு அடுப்பேற்றிக் கமலாக்கினியாக இரண்டு சாமம் எரித்தெடுத்தால் இலிங்கமானது கட்டிப்போயிருக்கும். மண் பாத்திரத்தில் வைத்த இஞ்சிச்சாறு சுண்டிக் குழம்பாயிருக்கும். இஞ்சிச்சாறு ஒரு வேளை சுண்டாமலிருந்தால் மறுபடியும் முன்போலச் சீலை செய்து சாறெல்லாம் சுண்டும் அளவுக்கு

எரித்துக்கொள்ள வேண்டியது. பின்பு அதை மண் பாத்திரத்தினுடைய வெப்பம் நீங்கிய பின்பு, சட்டியைப் பிரித்து இலிங்கக் கட்டியை எடுத்து அதன் மீதுள்ள சுருக்கைச் சுரண்டி நீக்கிவிட்டுக், கட்டைப் பத்திரப்படுத்த வேண்டும்.

சுருக்குக்கட்டு

கட்ட வேண்டிய மருந்துப் பொருளைச் சாறு, குடிநீர், புகைநீர், செயநீர் இவற்றில் ஏதாவது ஒன்றைக் கொண்டு சுருக்குக்கொடுத்துக் கட்டிக் கொள்ளும் முறை. இதற்கும் இலிங்கக் கட்டு முறைகளுள் ஒன்றையே எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம்.

சுருக்குக்கட்டு செய்யும்பொழுது கட்ட வேண்டிய மருந்துப் பொருளை சுருக்குக் கொடுக்க வேண்டும். மேலும், புதைந்துவிடாமல், மிகக் கவனமாகக் கட்டுச்சரக்கு உருகிக் கட்டப்படும் போது பெறப்படும் புகையுடன் பலவித நச்சுக் கலப்பாக இருக்குமாதலால் மிகக் கவனமாகக் காற்றிற்கு எதிர்த் திசையிலன்றி மாறாக உட்கார்ந்தோ அல்லது நின்றுகொண்டோ செய்யப்படல் அவசியம்.

செய்முறை

சூடனைப் பொடித்து வெங்காயச் சாற்றில் கலக்கி ஒரு குப்பியில் விட்டு கல்கார்க்கிட்டு மூன்று நாள் வைத்து நான்காம் நாள் உபயோகிக்க வேண்டும். இலிங்கத்தை அப்பிரகத் தகட்டின் மீது வைத்துக் கொஞ்சம் சூடேறிய பின்பு குப்பியில் தயாரித்து வைத்திருக்கும் திரவத்தை ஒரு சிறு கரண்டியால் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்கிட வேண்டும். ஒரு தடவை விட்ட சாறானது சுண்டிப்போன பின்பு மறுதடவை முன் சாற்றைவிட வேண்டும். அடிக்கடி இலிங்கக் கட்டியை எல்லாப் பக்கங்களிலும் சுருக்கு ஏறும்படி புரட்டிக் கொடுத்து வரவும் வேண்டும். சரக்கின் அழுக்கு, கட்டியின் மேல் சேர்த்து விடுகிற சாற்றை இழுத்துக் கொள்ளத் தடையா யிருக்குமாகையால், ஒரு சாமத்திற்கு ஒரு தடவை கட்டியின் மீதுள்ள அழுக்கைக் கூர்மையான கத்தியால் சுரண்டி நீக்கிச் சுருக்கிட வேண்டும். இவ்விதம் அந்தச் சாற்றையெல்லாம்

செல்லுகிற வரையில் தீயை மெதுவாக எரித்துச் சுருக்கிட வேண்டும். பின்பு ஆறவிட்டு இதில் கொஞ்சமெடுத்து நெருப்பில் போட்டுப் பார்க்க, அது புகையாதிருக்கும். இது கட்டினை அறியும் சோதனையாகும். மேலும் இதுவே சரியான பக்குவமும் ஆகும். அப்படி இல்லாவிட்டால், மறுபடியும் முன்போல் சாறுவிட்டு சுருக்குக் கொடுத்தால் நெருப்பிற்குப் புகையாத கட்டு கிடைக்கும்.

பொதுவாக, அனைத்துக் கட்டுகளும் செய்யப் பயன்படும் பொருள்கள். 1. கோழி முட்டை வெண்கரு 2. தாய்ப்பால், 3. புகைநீர், 4. சுண்ணாம்புத் தெளிநீர் 5. பழச்சாறு இவற்றைப் பயன்படுத்தி எந்தவிதமான கட்டுக்களையும் செய்து முடிக்கவியலும்.

சுட்டுச் செய்யப் பயன்படும் பொருள்களில் மிக முக்கியமானவை சில உள்ளன. அவை வருமாறு:

1. வெள்ளைப் பாடாணம் 2. இரசம் 3. இலிங்கம். 4. வீரம் 5. பூரம் 6. கல்லுப்பு, 7. நாகம் 8. வெடியுப்பு 9. நவச்சாரம் 10. கற்பூரம் 11. சீனாக்காரம் 12. துருசு 13. இந்துப்பு 14. கந்தகம்.

மேற்சொன்ன பாடாணங்களின் கட்டுகள் முறையாக முடிக்கப்பட்டிருந்தால் அதைக் கீழ்க்காணும் இலக்கணங்களைக் கொண்டு உறுதி செய்யலாம்.

1. கல்லுப்பு கட்டுப்பட்டால் கரி நெருப்பில் உருகும்

2. வெடியுப்பு தந்தம் போல் வெளுத்தும், உறுதியுடனும் காணும்

3. வெண்காரக்கட்டை நெருப்பிற்குட்படுத்தினால் பொங்கி உருகியோடும்.

4. சீனாக்காரம் மணி போலுருகும்.

5. கற்பூரம் கட்டுப்பட்டால் நெருப்பில் எரியாது

6. இந்துப்பு கட்டுப்பட்டால் நெருப்பில் வெடிக்கக் கூடாது.

7. இரசம் கட்டினால் இளகாது

8. இரசம் குகையில் வைத்திருக்க மணிபோலாகும்.

9. கந்தகம் நெருப்பில் புகையாமல் கட்டியாகி நிற்கும்.

சில மூலிகைகளைக் கொண்டு சில பாடாணங்களைக் கட்டுகளாக செய்வதைப் போன்றே சில உயிரினங்களின் உறுப்புகளைக் கொண்டும் கட்டுகளைச் செய்ய இயலும். அதன் பொருட்டு சில எடுத்துக் காட்டுகள் இங்கே கொடுக்கப்படுகின்றன. அவை வருமாறு:

1. யானைத் தந்தத்தால் வெடியுப்பையும், பன்றி மாமிசத்தால் சூதத்தையும், நரி மாமிசத்தால் ஈயத்தையும், கெருடன் முட்டையால் இரசத்தையும், காகத்தின் முட்டையால் கந்தகத்தையும், உடும்பு நெய்யால் அனைத்துப் பாடாணங்களையும் ஆமைக் கறியால் இரசத்தையும் பூநாகத்தால் ஈயத்தையும் பாம்புக் கண்டத்தால் தாளகத்தையும், நண்டைக் கொண்டு இரசத்தையும் காட்டலாம்.

கட்டுகளைச் செய்யப் பயன்படும் முக்கிய சில மூலிகைகள் வருமாறு:

பாகலிலையினால் இலிங்கத்தையும், வெள்ளெருக்கினால் நவச்சாரத்தையும், தக்காளியால் கந்தகத்தையும், குன்றிமணியால் வெங்காரத்தையும் முள்ளங்கியால் கந்தகத்தையும், முருங்கையைத் கொண்டு நாகத்தையும, வெண்தாமரையால் இரசத்தையும், கட்டுக்கொடியால் உப்பையும், சிறுகீரை மற்றும் பொன்னாமத்தையால் இரசம், பொட்டிலுபபு மறறும் கௌரி பாடாணத்தையும் கட்டலாம். உப்பு வகைகளைப் பயன்படுத்திக் கட்டுக்களைச் செய்யும் முறையைவிட மூலிகைகளைக் கொண்டு செய்யப்படும் கட்டுகளைக் கட்டிப் படுவதற்கு பலமுறை முயற்சி தேவைப்படும் என வழக்கு முறையின் மூலம் தெரிய வருகிறது.

பயன்படுத்தும் முறை

முறையாக முடிக்கப்பட்ட கட்டுகளைத் தேன், தாய்ப்பால், மூலிகைகளின் சாறு இவைகளில் ஏதாவதொன்றில் இழைத்தும், அல்லது கட்டுகளைப் பொடித்தும் தக்க துணைமருந்துகளுடன் உள்ளாட்சியாகப் பயன்படுத்த வேண்டும்.

கட்டுமருந்தை உரைத்து வழங்கச் சிறுகல்பம், கருங்கல் தட்டு, தங்கம் உரைத்துச் சோதிக்கும் கல் ஆகியன சிறந்தவையாகும். இம்மூன்றிலும் தங்கம் உரைக்கப் பயன்படும் கல்லே உருகிக்கட்டிய கட்டை உரைக்கச் சிறப்பானது.

முடிவுரை

அருகிவரும் இந்தக்கட்டுச் செய்யும் முறையை மீண்டும் புதுப்பித்து மருத்துவம் செய்து மக்களினத்தைக் காக்க முனைப்போடு மருத்துவர்கள் முனைதல் முற்றிலும் பொருத்தமானதாகும்.

சித்த மருத்துவத்தை முன்னேற்றுவதற்கான வழிமுறைகள்

க. ராஜாசங்கர், III, B.S.M.S.,
அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை.

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே, முன் தோன்றி மூத்த குடியாம் நம் தமிழ்க்குடி, ஆம் ஆனால் அதிலும் மூத்ததாம், நம் சித்தர்களின் தோற்றம். உலகு உய்வதற்கும், உலக மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கும், தேவையான வழிமுறைகளை வகுத்துச் சென்றவர்கள் நம் சித்தர்கள். அகத்தூய்மை, புறத்தூய்மை இரண்டையுமே வலியுறுத்தினார்கள். உடம்பார் அழியின் உயிரார் அழிவர் என்ற கூற்றிற்கு இலக்கணமாய்த் திகழ்ந்தனர். நீங்கா நோய்களையும் நீக்கும் மருத்துவம் கண்டனர். புறத்தூய்மையோடு, அகத்தூய்மையும் இருத்தல் வேண்டும்,என்பதையும் உணர்த்தி சித்த வைத்தியம் எனும் மாமகுடத்தை உலகிற்கு அர்ப்பணித்தவர் நம் சித்தர்கள். அவர்களின் வழி வந்தவர்களாகிய நம் கையில் தான் அதன் பெருமையை சீர்குலையாமலும், தூசுபடாமலும், காப்பதோடு மட்டுமின்றி அதை முன்னேற்றி வளர்ப்பதற்கான பொறுப்பும் செயல்பாடும், ஊக்கமும் இருக்கின்றன.

முதலில், நம் கல்விப் பாடத்திட்டம்தனை ஆராய்ந்து பார்த்தோமேயானால், ஒன்றாம் ஆண்டு முதல் இறுதியாண்டு வரை உள்ள பாடங்கள் எல்லாம் ஒரு சங்கிலித் தொடரின் கோவையே! ஆனால் கோக்கப்படாது விடப்பட்டுள்ளன. அக்காரணத்தால் தான் நமக்கு அதன் இணைப்பு அறிவிற்கு எட்டும் அளவிற்கு இல்லை. முதலாமாண்டில் சேரும் போதே அவ்வாண்டு பாடங்களை நன்கு அறிந்து ஆராய்ந்து படித்து அடுத்த ஆண்டு வரும் போது, முன் பயின்ற பாடத்தைப் புதிதோடு சேர்த்து அவைகளின் இணைப்பையும், தொகுப்பையும் அறிய வேண்டும். அப்போதுதான் ஒரு

திருந்திய அறிவும், திறனும் கிடைத்து ஒரு தலைசிறந்த மருத்துவ மாணவனாகக் கல்வியாண்டில் விளங்குவதோடு மட்டும் அன்றி, வாழ்க்கை நடைமுறையில் ஒரு நல்ல மருத்துவனாகவும் இருக்க முடியும். அதற்கு மாணவர்களின் ஊக்கமும் ஆசிரியர்களின் உதவியும் வேண்டும். இந்தச் சங்கிலித் தொடர்தனை நாம் கோத்துவிட்டோமானால், பலவிதமான அறியாமை இருள் நம்மை விட்டு விலகி, நமக்கே ஒரு நம்பிக்கையைக் கொடுப்பதுமின்றி, மருத்துவத்தின் பெருமையையும் உணர்த்தும். மேலும் நம் அரிய மருத்துவமானது, வாதபித்த கப அடிப்படையிலும் (TRIDOSHA THEORY) முக்குற்ற, அறுசுவை, ஐம்பூதக் கூட்டுறவினாலும் ஆனது. அண்டத்திலுள்ளதே பிண்டம் என்ற கூற்றின்படி அறிந்து ஆராய்ந்து பார்த்தோமானால், நம் மருத்துவத்தின் நுண்மைகளும் உண்மைகளும் விளங்கும். பழைய சுத்தமான சித்த மருத்துவத்தையே நாம் கொண்டுவர வேண்டும் என்றால், மேற்கூறிய முக்குற்ற, ஐம்பூத, அறுசுவை அடிப்படையில் அறிந்து, ஆராய்ந்து ஒரு நோயாளியை கணிக்கும்போது அம்முறையிலேயே ஆராய்ந்து, மருந்துகளையும் அக்குற்ற அடிப்படையின் படியே கொடுத்து வந்தோமானால், அதுவே முழுமையான சித்த மருத்துவம் ஆகும். மேலும், பார்ப்போமானால் திதி, நாள், மாதம், நட்சத்திரம் முதலியவற்றையும் கூடக் கடைபிடிக்கலாம். ஆனால் நாமோ, இப்போது மூலிகைகளை நவீன மருத்துவ முறைப்படி அதன் செய்கை, அவை தீர்க்கும் நோய்கள் என்ற முறைப்படி ஆராய்ந்து வருகிறோம். அதை முதலில் மாற்ற வேண்டும். ஒவ்வொரு மூலிகைகளையும், அதன் சுவை, வீரியம், விபாவம் பிரபாவம் என்ற தொகுப்பிலேயே ஆராய்ந்து, அதன் மூலமே மருந்துகளையும், தீர்க்கை செய்து, கொடுத்து வர வேண்டும். அதுவே முழுமையான சித்த மருத்துவம் ஆகும். (SIDDHA MODE OF DIAGNOSIS) ஆனால் நாம் இப்போது 21ம் நூற்றாண்டை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறோம். அத்தகைய தருணத்தில் இதைச்

சாத்தியமாக்குவதற்கு இடையறாத பொறுமையும், உழைப்பும் மக்களைத் தன்வழி கவரும் திறமும் இருத்தல் வேண்டும். இவை எல்லாவற்றிற்கும் முழுமையான பூரண அறிவு வேண்டும். இப்படி இருக்கும் போது இன்னொரு முறையையும் கையாளலாம். அதாவது நவீன முறைப்படியே ஒவ்வொரு மூலிகை, தாது, ஜீவ சங்கமங்களையும் அவற்றின் செய்கை, அவற்றில் உள்ள வேதியியற் பொருட்கள், முதலியவற்றையும் ஆராய்ந்து அறிந்து அவர்களைப் போலவே Differential Diagnosis, Radiological Diagnosis முதலியவற்றைக் கடைப்பிடித்து ஆனால் மருந்து வழங்கும் போது நம் மருந்துகளையே வழங்க வேண்டும். (A Herbal Medicine with Allomathic Science) ஏனென்றால், உடல்கூறு, உடல் தத்துவம், யாவர்க்கும் ஒன்றே. ஆனால் இதற்கு நவீன மருத்துவ முறைகளைப் பற்றிய முழுமையான அறிவும், அதைப்போல் நம் மருத்துவத்தில் உள்ளவற்றைப் பற்றிய தெளிந்த அறிவும், அவ்விரண்டிற்குள் உள்ள தொடர்பையும் அறிய வேண்டும். (A Half Knowledge is always dangerous) இன்னும் முன்னேறக்கூடிய உலக அரங்கில், எதையுமே சாட்சிச் சான்றுகளோடு நிரூபிக்காவிட்டால் மக்கள் கூட்டம் ஏற்காது. எல்லாம் நம் சித்தர்கள் எழுதி வைத்துச் சென்றது. அதே வேதவாக்கு என்று கூறினால் அறிவுள்ள கூட்டம் ஏற்காது. எவற்றையுமே நிரூபித்துக் காட்ட வேண்டும். இதற்கு Research Minded Students மிகவும் அவசியம். 1.Chemical Analysis, 2.Pharmacological Analysis எல்லாம் செய்து நிரூபிக்க வேண்டும். நவீன மருத்துவர்கள் நம் தாதுப் பொருட்களை முக்கியமாகப் பாடாணங்கள், உலோகங்கள் இவற்றிலிருந்து எடுக்கும் பொருட்கள் நச்சுத்தன்மை உள்ளவை என்றும், அப்படிச் செய்யப்பட்ட மருந்துகள் நம் பிருக்கத் (Kidney) திணைச் சேதமாக்கும் என்றும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நம் மருத்துவர்களோ, அவற்றைச் சுத்தி செய்து, நச்சுத் தன்மைதனை நீக்கிய பின்னரே மருந்தாக்கிக் கொடுக்கின்றனர். அவை நோய் நுண்ணுயிர்களையும் அழிக்கின்றன. ஆனாலும், நவீன மருத்துவர்கள் இதை ஏற்க முன் வரவில்லை.

அப்படியிருக்கையில் நச்சுத்தன்மை அற்றது (After Purification) என்பதை நிரூபித்து அவர்களின் அறிவிற்கு எட்டும் அளவிற்கு எடுத்துப் புரிய வைத்தல் நம் கடமை என்பது உண்மை. எல்லாவற்றிற்கும் ஆராய்ச்சி தேவை. ஒரு மூலிகையை எடுத்துக் கொண்டு அதனை ஆராய்ந்து அதில் இன்னின்ன சரக்குகள் உள்ளன. அவற்றின் செய்கைகள், அச்செய்கைகளினால் அம்மருந்துகள் எவ்வாரு நோயைத் தீர்க்கின்றன என்பதைக் காட்டவேண்டும். இப்படி எல்லாம் செய்வதற்கும், ஒரு முழுமையான Theoritical அறிவும், அதனை ஆயத்தப்படுத்தும் ஒரு Practical அறிவும், தவறாமல் இருத்தல் வேண்டும். அதற்கு அடிப்படைக் கோட்பாடுகள் எல்லாம் நன்கு அறிந்து இருக்கவேண்டும். மேலும் முப்பு, கட்டு, களங்கு, இரசவாதம் முதலிய உயர்மருத்துவ முறைகள், எல்லாம் நம் மருத்துவத்திற்கே உரிய தனிச்சிறப்பு! இவற்றைப் பற்றி மக்களுக்குப் புரியும்படி எடுத்தாற்றத் தக்க மருத்துவ மாணவர்களும் தேவை. மேற்கண்ட மருத்துவ மகுடங்களின் பெருமைகளை நாம் உலகிற்கு எடுத்து விளம்பும் நாள்தான் சித்த மருத்துவம் வெளிச்சத்திற்கு வரும் நாள் ஆகும். வர்மக்கலை முதலியவற்றை எல்லாம் இன்னும் முன்னேற்ற வேண்டும். மேலும் நம் மருத்துவத்துடன் சம்பந்தமுள்ள பல துறையினரிடம் நாம் உறவு வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு தாவரவியல் நிபுணர் (Botanist), ஒரு நுண்ணுயிரியல் நிபுணர் (Microbiologist) கடல்வாழ் உயிரினங்களைப் பற்றி அறிந்த (Marine Biologist) வர்களிடம் நாம் நம் அறிவைப் பரிமாறிக்கொள்ள வேண்டும். வாணிப முறைப்படி பார்த்தோமானால், நம் நாட்டில் உள்ள கடல்வாழ் உயிரினங்களாகிய மீன், ஆமை, சங்கு முதலியவற்றைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வாணிப வருமானத்தை ஈட்டுகிறோம். ஆனால், அவர்களோ அதனை ஆராய்ந்து, அதன் Extract தனை எடுத்து அதனை ஆராய்ந்து, அதன் மருத்துவ குணங்களை வெளியிடுகின்றனர். ஆனால் நாமோ வாணிப வருமானம் ஈட்டும் பொருட்டு அதனை ஏற்றுமதி செய்கிறாம். இதை நாம் நீக்கிவிட்டு, அப்பொருட்களை

ஆராய்ந்து உலக அரங்கில் நம் பெருமையை நாம் நிரூபிக்கலாம். இதற்கு நம்மவர்களின் ஊக்கமும், உழைப்பும் தேவை. எல்லாவற்றிற்கும் மேலாக அரசின் ஒத்துழைப்பும் தேவை. மேலும் அதிக இரத்த அழுத்தம், மதுமேக நோய், மனவளர்ச்சி குறை நோய் போன்றவற்றிற்கு யோகப் பயிற்சி அளிப்பதன் மூலம் சிறந்த முறையில் முற்றிலும் குணமாக்க முடியும். எனவே, யோகா முயற்சியினைச் சிறந்த முறையில் அறிந்தாராய்ச்சி செய்வதன் மூலம் அறியலாம். சர்க்கரைக்குரிய மூலிகைகள் தாதுப்பொருட்கள் ஜீவப்பொருட்கள் இவற்றினை ஆராய்ந்து தெளிவதன் மூலம் அவற்றைக் கொண்டு சிறப்பாக மருத்துவம் செய்ய முடியும்.

இத்தகைய முன்னேற்றங்கள் ஏற்படுவதற்கு முதலில் நம் கல்லூரியில் சில வசதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இத்தகைய ஆராய்ச்சிகளைச் செய்யும் பொருட்டுப் பற்பல ஆராய்ச்சி மையங்களை நிறுவிச் சிறப்பான மூலிகைகளையும் அவற்றின் குணங்களையும் கண்டறிந்து நோய்க்கும், நோயாளிக்கும் தக்கவாறு மருத்துவம் செய்ய வேண்டும். எந்த மனநோய்களுக்கும் நம் மருத்துவம் மிகவும் சிறந்தது. ஏனென்றால் நம் மருத்துவம் அகத்தூய்மை, புறத்தூய்மை இரண்டையும் அடிப்படையாகக்கொண்டு அமையப் பெற்றது. உடலும், உள்ளமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த இரு உருவங்கள். யோகப்பயிற்சி மேலும், அதோடு சேர்ந்த பலவற்றை நன்கு ஆராய்ந்து, மன நோய்களுக்கு மருத்துவம் செய்யலாம். பரம்பரை மருத்துவம் செய்பவர்களைச் சந்தித்து அவர்களிடமிருந்து முக்கிய நோய்களுக்கான சிறப்பான மருந்துகளைத் தெரிந்து கொண்டு, அதுவும் கை வழக்கில் உபயோகித்து வரும் முறையை அறிந்து மருத்துவம் செய்யலாம். நம் நாட்டில் உள்ள ஓலைச் சுவடிகளில் பல மருத்துவக் குறிப்புகள் உள்ளன. அவற்றை முறையாகச் சேகரித்துத் தற்காலத்தில் எல்லோருக்கும் புரியும்படி பதிப்பிக்க வேண்டும். அதில் உள்ள மருந்துகளை முறைப்படி நோயாளிகளுக்கு வழங்கி அது செயல்படும் திறனை ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். இது

ஓலைச்சுவடிகளில் அறிய பல மருத்துவ முறைகள் அமைந்துள்ளன. சர்ச்சைக்குரிய மூலிகைகள், தாதுப் பொருட்கள் இவைகளை ஆராய்ந்து தெளிவதன் மூலம் நல்ல விதத்தில் மருத்துவம் செய்ய முடியும். இரசவாதம் முப்பு, காயகற்பம், போன்ற மருத்துவத்தின் சிறப்பான அங்கங்களைத் தெரிந்துகொண்டு, நோயாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் சுகாதார முறையில் வாழும் வழியினைப் போதித்து, மருந்தே உணவு உணவே மருந்து! என்ற கொள்கைகளை வலியுறுத்தி, நோயில்லாமல் அவர்களை வாழச் செய்வதன் மூலம் மருத்துவம் வளரும். நாட்டுப்புறங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்களிடம் சென்று நம் சித்த மருத்துவ முறைப்படி நில, நீர், நேர, பருவ காலங்கள் அவற்றிற்கேற்ப எங்கெங்கே எப்படிப்பட்ட உணவுகளை எல்லாம் உண்டு வரலாம் என்பதைக் கூறி, நோயின்றி அவர்களை வாழச் செய்யலாம். ஏனெனில் Prevention is better than cure. சிற்சில நோய்களுக்கு தாவரங்கள், அருகில் இல்லாமல் தொலைவிலும், மலைகளிலும் கிடைப்பதால் அவசர காலங்களில் சேகரிக்க இயலாது. எனவே, அரிய மூலிகைகளைக் கொண்டு ஒரு மூலிகைத் தோட்டம் அமைப்பதால் எளிதில் மருத்துவம் செய்ய உதவியாக இருக்கும். மேலும் சில நோய்களுக்கு மூலிகைகள் அப்போது பறித்தவைகளாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நேரங்களில் மருத்துவ மனைகளுக்கு அருகிலேயே மூலிகைத் தோட்டத்தை அமைக்கலாம். மருந்து செய்நிலையத்தில் மருந்துகளை நம் திரட்டுக்களில் கூறியிருக்கும் முறையிலேயே சுத்தமாகச் செய்தால்தான் மருந்தின் வீரியமும், குணமும், குறையாமல் கிடைக்கும் அனுபானங்களை நோய்கட்கு ஏற்ப, நோய் நிலைகளுக்கு ஏற்ப அதாவது ஒரே மருந்து பலவிதமான நோய்களுக்குப் பல அனுபானங்களில் கொடுக்கப்படுகின்றது. அனுபானங்கள் மருந்தின் வீரியத்தையும் செய்கையையும் அதிகப் படுத்துகின்றன. அனுபானங்களை மிகச்சரியாகக் கொடுக்க வேண்டுமென்பதை அறிந்து அதற்கேற்ற அனுபானத்தில் கொடுத்தால் நல்ல பலன் கிடைக்கும். இந்த அனுபவ முறை

நம் மருத்துவத்திற்கே உரிய பெருமை. ஆனால் நவீன மருத்துவத்தில் இத்தகைய அனுபவ முறைகள் இல்லை. சித்த மருத்துவத்தின் சிறப்பைப் பற்றி புத்தகங்கள் வெளியிடுவதன் மூலம் மருத்துவம் வளர்ச்சியடையும். "முயற்சி திருவினையாக்கும்" "வேணும் ஆயின் முளையிலேயே கூட காய்காய்க்கும்" என்ற பழமொழிப்படி நாம் செயல் படுவோமேயானால், அதாவது மேற்கூறிய முன்னேற்ற வழிமுறைகளை எல்லாம் நம் கடைப்பிடித்து, நம் கடின உழைப்பாலும், சித்த மருத்துவர்களும், மேலும் நாம் ஆசிரியர்களின் ஒத்துழைப்பாலும் அரசின் துணையாலும், சித்த மருத்துவத்தை உலக அரங்கில் உயர்த்தி மருத்துவத்திற்கு ஒரு பெருமையும் புகழும் சேர்த்து அதன் மூலம் நாமும் உயர்ந்து,Health for all by 2000 A. D. என்ற அளவிற்கு நாட்டையும் மக்களையும் உயர்த்தி நாமும் உயர்வோமாக. இதை ஏன் நான் அறிவுறுத்துகிறேன் என்றால் கடின உழைப்பால் அசாத்தியச் செயல்களையும் சாத்தியமாக்கலாம். நம் மருத்துவமோ பல பெருமை களையும், உயர்வுகளையும், தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த அகப்பெருமைகளைப் புறத்துக்கு கொண்டு வர வேண்டும். அவ்வளவுதானே என்ற ஒரு உணர்ச்சியோடும், ஊக்கத்தோடும் செயல்படுவோமானால், எண்ணிய எல்லாம் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

சித்த மருத்துவமும் அதன் வளர்ச்சியும்

S. குப்புமீனா
இறுதியாண்டு பி.எஸ்.எம்.எஸ்.

முன்னுரை

சித்த மருத்தவம் என்பது சித்தர்களால் தோற்றுவிக்கப் பட்ட வன்மையும், தொன்மையும் பெற்ற ஓர் அரிய சிறந்த மருத்துவ முறையாகும். வேதகாலத்திற்கு முன்பே குமரிக் கண்டத்தில் தோன்றிச் செழித்து வளர்ந்து, தென்னிந்தியா முழுவதும் பரவியுள்ளது. இடைக்காலத்தில் திராவிடர் அல்லாத பிற நாகரிகங்கள் தமிழகக் கலாச்சாரத்திற்குள் தலைநீட்டத் தொடங்கியதாலும், இயற்கையின் சீற்றத்தாலும், அந்நியர்களின் ஆளுமைக்கு உட்பட்டதாலும், சிதைந்து சீரிழந்து அருகிக் குறுகிவிட்ட நிலையை எய்தியது. வேகமாக வளர்ந்து உலகமெங்கும் ஆளுமையைப் பரப்ப வேண்டியஇந்த மருத்துவ முறை, இன்றைக்குப் பூபாரத்தில் ஓர் சிறிய பகுதியில் மட்டும் வாழ்வதற்கே போராடிக் கொண்டிருக்கும் நிலையில் இருக்கின்றது. ஆகவே இம்மருத்துவ முறை சீர்பெறவும், உரிய வளர்ச்சியை எட்டவும், என்ன செய்ய வேண்டும் என்பதனை ஓர் மாணவரின் கண்ணோட்டத்தோடு, என் சிற்றறிவுக்குத் தோன்றிய கருத்துகளை விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சித்த மருத்துவத்தின் தொன்மை:

மருத்துவ நூல்களை எழுதிய பெரியார்கள், தங்கள் வழிபடு கடவுளை வணங்கி மருத்துவப் பரம்பரையைக்

கூறுகிறார்கள். அஃதாவது அவர்கள் மருத்துவ நூற்களை எவ்வாறு அடைந்தார்கள் என்பதைச் சுருக்கமாக இயம்பியுள்ளார்கள். தென்மொழி மருத்துவ நூல்களை எழுதிய சித்தர்கள் அவை பரமசிவனிடமிருந்து நந்தி வழியாயும், அவரிடமிருந்து அகத்தியர், புலத்தியர் முதலிய சித்தர்கள் வழியாயும், நமக்குக் கிடைத்தனவென்று எழுதியிருக்கின்றார்கள்.

இயற்கை, செயற்கை ஒழுக்க வழிகளிற் பயிலும் இக்காலத்து மக்களாகிய நமக்கு இஃது ஒருவிதப் புதுமையாகவே தோன்றுகிறது. ஏனெனில், உருவமாகவும், உருவமின்றியும் எங்கும் நிறைந்தவராய் இருக்கும் கடவுளிடத்திலிருந்தும், தேவர்களிடத்திருந்தும் அக் காலத்தில் இம்மருத்துவ நூல்கள் தோன்றின எனில், இக்காலத்துப் பெரும்பாலும் சிதலுக்கு இரையாகிய அம்மருத்துவ நூல்களையெல்லாம் மறுபடியும் அப்பெரியார்கள் நமக்கு ஏன் அளித்தலாகாது என்றும் மேற்கூறியபடி கடவுளிடத்திலிருந்து எவ்வாறு இந்த வைத்திய நூல்கள் உண்டாகக் கூடும்? என்றும் கேட்க வழி ஏற்படுதலின், இவையெல்லாம் புராணக் கதையென்றே எண்ணுவதற்கு ஏதுவாகின்றது. ஆயினும் மருத்துவத்தில் மிக்கத் தேர்ச்சி பெற்று நன்முறையில் ஒழுகி, மேன்மையுடன் புகழ் பெற்று வாழ்ந்த பெரியார்களைக் கடவுளைப் போன்றே போற்றி வாழ்தல் தமிழ் மக்களின் இயல்பாதலை நாம் இன்றும் கண் கூடாகக் காண்கின்றோம். ஆகவே, அக்காலத்தில் கீர்த்தி பெற்று வாழ்ந்த மருத்துவப் பெரியோர்களைக் கடவுள் என்று மதித்து வந்திருக்கின்றனர் என்று நாம் அறிந்து கொள்ளலாம்.

மனித உடற்கூறு பற்றிய ஞானமும், மனித உடலைப் பலவீனப்படுத்தும் நோய்களையும், உடலை அழியச் செய்யும் நோய்களைப் பற்றிய ஞானமும்,

வேதகாலத்திலேயே இருந்திருக்கின்றன. ஆரிய மக்கள் வருகைக்கு முன்பே பல சித்தர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அவர்கள் சிஷ்யர்களின் பொருட்டு விலை மதிப்பற்ற சுவடிகளில் வைத்திய முறைகளை எழுதி வைத்தனர். மதி நுட்பம் வாய்ந்த சிஷ்யர்கள் அதனைக் கிரந்தங்களாக இயற்றினர். இந்த விதமாக கி. மு. 800 முதல் கி. பி. 600 இரண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி சித்த மருத்துவத்தின் மிகச் சிறந்த பொற்காலமாக விளங்கியது.

சித்த மருத்துவத்தின் சிறப்பு:

வருமுன் காப்போம். இதுவே சித்த மருத்துவத்தின் அடிப்படைத் தத்துவமும், அழிக்கமுடியாத சிறப்புமாகும். இது எல்லா மருத்துவத்திற்கும் பொது அடிப்படை ஆயினும், சித்த மருத்துவமோ அதனுடன் ஆன்மீக மருத்துவத்தையும் சேர்த்துக் கொடுப்பதில் தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருக்கின்றது.

நல்ல உணவு முறைப் பழக்கத்தினாலும், சிறந்த மனப் பயிற்சியினாலும், யோகம், பிராணாயாமம் என்னும் பயிற்சி முறைகளாலும், பொய்யென்ற இவ்வுடலை நீண்ட நாட்களுக்கு வாழவைக்கவும், மெய்யென்ற ஆன்மாவைத் தாங்கி நிற்கும் இவ்வுடலை எவ்வித சுகவீனமும் அணுகாதபடி பாதுகாக்கவும் காயகல்ப முறை என்னும் சிறந்த மருத்துவ முறையை சித்த மருத்துவம் கொண்டுள்ளது.

ஆய்வின் அவசியம்

மேற்கூறியபடியும் இன்னும் பல சிறப்புக்களையும் உடைய இம்மருத்துவ முறை உரிய வளர்ச்சியைக் காணச் செய்வதற்கு ஆய்வு தேவை என்று சிலரும், இம்மருத்துவ முறை முடிவான முடிவு என ஒரு சிலரும் கூறி வருகின்றனர். பழங்காலத்தில் இம்மருத்துவ முறையைப் பின்பற்றியவர்கள் இம்மருத்துவத்தைக் கொண்டு தொழில் ஆற்றியவர்கள்.

அனைத்துக் கலைகளையும் அறிந்து வைத்திருந்தனர். ஏனெனில் நம் சித்த மருத்துவமானது நம் கலாசார அடிப்படையான பிற கலைகளுடன் நெருங்கிய தொடர்புடையது.

சித்த மருத்துவ இலக்கியங்கள் இலட்சக் கணக்கில் பரவலாகக் காணப்படுகின்றன. அதில் குறிப்பிட்டுள்ள அத்தனை முறைகளையும் அறிவதற்கோ அல்லது மருந்தாகப் பயன்படுத்துவதற்கோ இதனுடன் தொடர்புடைய அனைத்துக் கலைகளையும் பற்றிப் புரிந்து கொள்வதற்கோ, யாருக்கும் ஆயுட்காலம் போதாது. ஆகவே, சித்த மருத்துவத்தை ஆய்வுக்கு உட்படுத்துவதா அல்லது வேண்டாமா என்ற விவாதத்தினை விடுத்து மருத்துத் துறைக்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும் என்ற முனைப்போடு நமக்குப் பயன்படக் கூடியவைகளையும், எளிய முறைகளில் பழம்பெரும் சித்தர்களால் கூறப்பட்டவற்றையும் சித்த மருத்துவ வல்லுநர்களின் துணையோடு நாம் ஆய்வு மேற்கொண்டு அதனை ஓர் எளிய விதத்தில், சிறந்த அறிவியல் முறையாகக் கொண்டு வரலாம். ஆனால் இம்முறையில் சித்த மருத்துவத்தின் அடிப்படை தகர்க்கப்படாமல் பாதுகாத்து வருவதும் மிக மிக முக்கியமான ஒன்று.

சித்த மருத்துவத்தின் காலம் வேதகாலத்திற்கு முற்பட்டது என்று டி.வி. சாம்பசிவம் பிள்ளை அகராதியில் குறிப்பிட்டிருந்தாலும், அதற்குப் போதிய ஆதாரங்களை வரலாற்று ஆய்வாளர்களின் துணை கொண்டும், அகழ்வாராய்ச்சியின் துணை கொண்டும், நிலை நிறுத்த சித்த மருத்துவத்தின் தொன்மையை காலத்தால் முந்தியது என்பதனை நிலை நிறுத்த உரிய முயற்சியை மேற்கொண்டால் அன்றி சித்த மருத்துவத்திற்குரிய தனித்தன்மையைக் காப்பாற்ற இயலாது.

தமிழகப் பல்கலைக் கழகங்களில் காணப்படும் மருத்துவ இலக்கியங்கள், போர்ப் பரணி பாடல்கள், சிந்து, நாடோடி, கும்மிப்பாட்டு போன்றவைகளை ஆய்ந்து மருத்துவக் குறிப்புகளைத் தொகுக்கும் பணியை விரைவில் செய்தல் வேண்டும்.

நூற்பதிப்புகளில் மாற்றம்:

பழமையான சித்த மருத்துவ நூல்கள் செய்யுள் வடிவாகவே அமைந்திருந்தன. அதனைப் பொழிப்புரைக்க முனைந்த நிபுணர்கள், தங்களுடைய சொந்தக் கருத்துக்களைப் பொழிப்புரைகளின் இடையே திணித்தும், செய்யுள் வடிவிலுள்ள மருத்துவக் குறிப்புகளைக் கருத்துரை எழுதியவர்கள், மருத்துவத்திற்கு முற்றிலும் பொருத்தமான கருத்துக்களைக் கூறாது இடைச் செருகலை மிகவும் நுழைத்திருக்கின்றனர். ஆகவே பிற்சேர்க்கைகளைப் புறக்கணித்து, மருத்துவ சம்பந்தப்பட்டவைகளை நாம் பயனடையுமாறு நூல்களை வடிவமைக்க வேண்டும்.

பழஞ்சுவடிகள் எங்கெல்லாம் கிடைக்குமோ, அவற்றினை ஆராய்ந்து அங்கிருந்து சேகரித்து அவற்றில் உள்ள அரிய பெரிய கருத்துக்களைத் தொகுத்தும், வகுத்தும், உரிய நூல்களாக்கி அனைத்து மருத்துவ நிபுணர்களுக்கும் கிடைக்கச் செய்தல் அவசியம்.

சித்த மருத்துவக் கல்லூரிதனில் நடைமுறையில் உள்ள பாடப் புத்தகங்கள் இன்னும் புதிய பதிப்பினைப் பெறவில்லை என்ற நிலையிலேயே இருக்கிறது என்ற குறையைக் களைந்து நாளதுவரை, நமது மருத்துவர்கள் ஈட்டிய அனுபவங்களையும், அவர் தம் ஆற்றலையும் பயன்படுத்திப் புதிய பதிப்பாக வெளியிடுதல் வேண்டும்.

சித்த மருத்துவ அகராதி என இதுவரை எதுவும் இல்லை. இனியாவது அந்நிலை மாறி அங்ஙனம் ஒன்று தேவை.

சித்த மருத்துவ அறிஞர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அனைத்துவிடங்களிலும், கிடைக்கும் மருத்துவ ஏடுகளைத் திரட்டி, நன்மொழியாக்கம் செய்து, புத்தக வடிவில் வெளியிட ஏற்பாடு செய்தல் நன்று.

மொழி பெயர்த்தலின் சிறப்பு:

தமிழ் அறியாதோரும், வேற்று நாட்டவர்களும் மருத்துவத்தின் சிறப்பை உணரும் பொருட்டும், மற்ற நாட்டவர்களுக்கு நாம் எடுத்தியம்புவதற்காகவும் சித்த மருத்துவப் பாடநூல்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படவேண்டும். இது மிகவும் ஒரு கடுமையான பணி. எனினும் இன்னும் சில ஆண்டுகளுக்குள் செய்து முடித்தால் மிகவும் நன்மை பயப்பதாக அமையும்.

இந்தக் கொள்கையைத் தேசீய சித்த மருத்துவ நிறுவனம் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். ஏனெனில், தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் பன்னாட்டு மாணவர்கள் வருகை தந்து, இதனைப் பயில இருக்கின்றார்கள். அவர்கள் சித்த மருத்துவத்தைக் கற்று, இம்மருத்துவத்தின் மேன்மையை அவர்கள் நாட்டில் கூறும்பொழுது சித்த மருத்துவ முறைக்கு உலக அங்கீகாரம் கிடைக்க வாய்ப்புள்ளது.

மூலிகையின் முக்கியத்துவம்:

இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள, நாம் இனம் காணாத சில மூலிகைகளை, பரம்பரை மருத்துவர்களை அணுகி, இது பற்றிய செய்திகளைச் சந்தேகத்திற்கிடமின்றித் தெரிந்திட வழிவகை செய்திடல் வேண்டும்.

காடுகள் அழிக்கப்படுவதைத் தவிர்த்து, எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, ஆங்காங்கே காடுகளில் மூலிகைகளை வளர்க்க ஆவன செய்தல் வேண்டும்.

நாள்தோறும் உணவிலும், மற்றும் பழக்கத்திலும் உள்ள மூலிகைகளின் சிறப்புகளை இளம் மாணவர் பருவத்திலேயே வருங்காலச் சந்ததியினர் அறிய அவர்களின் பள்ளிப் பருவத்திலேயே இவைகளை பற்றிய பாடங்களைப் புகுத்துதல் அவசியமும், பயனுள்ளதுமான ஒன்று.

யோகத்தின் முக்கியத்துவம்:

உடல் உறுதியும் மன உறுதியும் தரும் யோகாசனப் பயிற்சிகளையும், பிராணாயாமப் பயிற்சிகளையும் அதன் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் உணர்ந்து, அதனை ஒவ்வொரு சித்த மருத்துவ மாணவர்க்கும் கற்றுத்தர வேண்டுவது அவசியம்.

சோதிடத்தின் பங்கு

சோதிடத்துக்கும் மருத்துவத்திற்கும் உரிய தொடர்பை ஆய்ந்தறியத் தனிப் பிரிவுகளைச் சித்த மருத்துவக் கல்லூரிகளில் தொடங்கவேண்டும்.

மருந்து முறைகள்:

மருந்து முறைகள் 64ஐயும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். 10,000 பேர்களைக் கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஓர் உதவி சித்தமருத்துவரை நியமனம் செய்து அவர் மூலம் எளிய மக்களும் பயன் பெறச் செய்யலாம்.

அரசாங்கத்தின் பங்கு

தகுதியுள்ள சித்த மருத்துவ மாணவர்களுக்கு, மற்ற மருத்துவ மாணவர்களைப் போலவே ஆராய்ச்சி மருத்துவப் படிப்பு மேற்கொள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் தக்க இடங்களும், அதற்கான உதவித் தொகையும் வழங்கிட அரசு முன்வர வேண்டும்.

அரசு அங்கீகாரம் பெறாமல் நாட்டின் பல மூலை, முடுக்குகளில் தனக்குத் தெரிந்தவற்றை மருத்துவம் என்ற பெயரில் செய்து, மருத்துவன் என்ற பெயரில் நடமாடி வருவோரையும் அவர் தம் மருத்துவத்தையும் தக்க நடவடிக்கை எடுத்துத் தடை செய்ய வேண்டும்.

முடிவுரை:

இதுகாறும் நான் சொல்லியவற்றின் முக்கிய சாராம்சம் என்னவெனில் பழம்பெரும் தொன்மை வாய்ந்தது மட்டுமல்லாது சிறப்பும் சீரிய பல முறைகளையும் கண்ட இந்தச் சித்த மருத்துவ முறையை

பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கருத்திற்கேற்றபடி சித்த மருத்துவமுறையின் அடிப்படைத் தத்துவம் சிதையா வண்ணம், அதனையே இன்னும் கொஞ்சம் அறிவியல் கண்ணோட்டத்துடன் ஆராய்ந்து, அதனை எல்லோரும் பயன்பெறும் வண்ணம் அமைத்து, அனைத்து நாட்டுமக்களும் அறிந்து, இதன்மூலம் பயன்பெற வேண்டும் என்ற பொது நல நோக்கத்தோடு மட்டுமல்லாமல், நாம் கற்கும் இந்த சித்த மருத்துவம் நமக்கு மட்டுமல்லாது பிற நாட்டவரும் அறிந்து அதன் சிறப்பினைப் போற்றவேண்டும். அதனால் நாம் பெருமையடைய வேண்டும் என்ற சுயநலத்தோடும், அங்ஙனம் வளர்ச்சியடைய வேண்டிய வழிமுறைகளையும், அதற்குத் தடங்கலாயிருக்கும் தடைகளையும் இங்குக் கூறியுள்ளேன்.

சித்த மருத்துவத்தின் வளர்ச்சியில் நவீன அறிவியலின் பங்கு

செ. முக்துகிருஷ்ணன்
முன்றாமாண்டு இளங்கலை, சித்த மருத்துவம்.

சித்த மருத்துவம் என்பது சித்தர்கள் முறைப்படியுள்ள வைத்தியமாகும். இத்தகைய மருத்துவத்துக்கு உரியவர்கள் சித்தர்கள் என வழங்கப்பட்டவர்களே. சித்தர்கள் யோகப் பயிற்சியின் முதிர்ச்சியால் ஞானம் பெற்று அதன் துணையால் வாதம் செய்து மக்களின் உடற்பிணிகளையும், உளப் பிணிகளையும் தீர்க்க முனைந்து வெற்றி கண்டவர்கள்.

இவ்வாறு தாங்கள் ஞானத்தினால் பெற்ற வைத்தியத்தை உலகத்தோர் பயனுற எண்ணி அதனைத் தங்கள் வழிவந்த மாணாக்கர்களுக்குப் பயிற்றுவித்தனர். அவர்கள் தாங்கள் கற்ற வைத்திய முறைகளை ஓலைச்சுவடிகளில் எழுதியும், படித்தும், படியெடுத்தும் போற்றி வந்தார்கள். பின்னர் அவர்கள் வழிவந்தவர்கள் அம்மருத்துவ நூல்களில் விரித்தும், சுருக்கியும் தங்கள் அனுபவங்களைச் சேர்த்தும், குறைத்தும் எழுதி வந்துள்ளனர்.

இத்தகைய சிறப்புப் பெற்ற சித்த மருத்துவத்தைப் பற்றித் தற்கால மக்களின் எண்ணங்கள் கீழ்க்கண்டவாறு உள்ளன. தற்காலத்தில் சித்தர்களைப் போன்ற மகான்களுக்கு ஓர்வித பயபக்தி விசுவாசம் காட்டினாலும் பொதுவாகத் தற்காலத்து வைத்தியம் அதற்கு வேண்டிய முக்கியமான அம்சங்களைப் பெறுவதற்கில்லை. இக்காலத்தில் மூல

வைத்திய நூல்களைச் சரிவரப் போதிப்பதில்லை. முன்னோர்கள் செய்த வைத்திய முறைகளைப் பற்றிப் போதிய புத்தகங்கள் இல்லை. பழைய காலத்துச் சித்த வைத்தியத்தைத் தற்காலத்து மக்கள் ஆச்சரியமாகவும், பயன்படாத மறைந்த பொருளாகவும் கருதுகிறார்கள் என டி.வி.எஸ் அகராதி கூறுகிறது.

ஆனாலும் தற்போது அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்திலும், மற்ற நோய்களின் மருத்துவத்திலும் சித்த மருத்துவத்தை விட நவீன மருத்துவமே சிறப்புப்பெற்று உள்ளது. சித்த மருத்துவத்தின் இத்தாழ் நிலைக்குப் பல காரணங்கள் உள்ளன.

அனேக வைத்தியர்கள் தங்களது மேன்மை பெற்ற அறிவுத் தேர்ச்சியினையும், அனுபவத்தினையும் வெளியில் காட்டிக்கொள்ளாமல் இரகசியமாய் வைத்திருந்தார்கள். அவர்கள் மறைவுக்குப் பின் அவர்கள் கற்ற கலையும், அவர்களோடு மறைந்து விட்டது. எனவே இந்தச் சுயநலமும், வெளிக்காட்டிக் கொள்ளாத் தன்மையுமே சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு முக்கிய தடையாகும்.

சித்த மருத்துவத்தின் வளர்ச்சியில் ஓலைச்சுவடிகளின் பங்கு இன்றியமையாததாகும். எனெனில் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட வைத்திய முறைகளை இன்றுவரை அழியாமல் காத்துத் தந்திருப்பவை ஓலைச்சுவடிகளே. ஆனால் இக்காலத்தில் ஓலைச்சுவடிகள் பற்றிய அறிவும், படிக்கும் ஆர்வமும் மக்களிடம் குறைந்து விட்டன. இதுவும் சித்த மருத்துவ வளர்ச்சியின் தடைக்கல்லாகும்.

இவையெல்லாவற்றிற்கும் மேலாகச் சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பது நவீன அறிவியல் நோக்கின்மையே. இன்றைய விஞ்ஞான உலகில்

எந்த ஒரு விஷயத்தையும் ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகள் மூலம் ஆராய்ந்து அந்தக் கேள்விகளுக்கு விடை கிடைத்த பின்னரே அது உண்மையான ஒன்று என்பதை உலகம் ஏற்றுக் கொள்கிறது. இந்நிலையில் இந்தச் சித்த மருத்துவம் ஞானத்தால் எழுதப் பெற்றமையால் யாவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டிருந்தால் அதனால் ஒரு பயனும் இல்லை.

தற்காலத்தில் நவீன அறிவியலைப் பயின்ற மக்களால் சித்த மருத்துவத்தின் மெய்ஞான தத்துவதங்களையும், வாத வேதியியலையும் புரிந்துகொள்ள இயலவில்லை. அதனாலேயே சித்த மருத்துவம் ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே உள்ளது. எனவே இவ்வுலகத்தோர் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நமது மருத்துவத்தை நவீன அறிவியல் நோக்கில் ஆராய்ந்து உலகத்தோர் எல்லோருக்கும் புரியும் வகையில் நமது மருத்துவத்தின் சிறப்பை வெளிப்படுத்தினால்தான் நமது மருத்துவத்தின் புகழ் உலகமெல்லாம் பரவும். எனவே நமது மருத்துவத்தின் வளர்ச்சிக்கு நாம் செய்ய வேண்டிய தலையாய இன்றியமையாத பணி நவீன அறிவியல் ஆராய்ச்சியாகும்.

நவீன அறிவியல் ஆராய்ச்சியில் நவீன மருத்துவத்துடன் நமது மருத்துவத்தை ஒப்புநோக்க வேதியியல், தாவர வேதியியல், மருந்தியல், நுண்ணுயிரியல், நஞ்சியல் போன்ற அறிவியல் துறைகளைப் பற்றிய அறிவு மிகவும் இன்றியமையாதது. இதனைப் பற்றி சிறிது ஆராய்வோம்.

வேதியியல்

நம்முடைய சித்த மருத்துவத்திலுள்ள மருந்துப்பொருட்கள் அனைத்தும் தாவர, தாது சீவப்

பொருட்களில் அடங்கும். இருந்தாலும் நமது மருந்துகளின் பெரும்பான்மைப் பங்கு மூலிகை, தாதுப் பொருட்களையே சார்ந்துள்ளது. இத்தாதுப் பொருட்களைப் பற்றிய இயற்பியல் அறிவும், மருத்துவக் குணமுமே நமது நூல்களில் கூறப்பட்டுள்ளன. அம்மருந்துகளின் நவீன வேதியியல் பண்புகளும், ஒரு மருந்து மற்றொரு மருந்துடன் கலக்கும்போது ஏற்படும் மாற்றங்களைப் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

தற்போது நம்முடைய மருத்துவ முறையில் மருந்துப் பொருட்களில் மிக அதிக அளவில் கலப்படம் காணப்படுவதற்குக் காரணமே நம்மால் சரியான மருந்துப் பொருளை வெறும் இயற்பியல் தோற்றத்தை மட்டும் வைத்து கண்டு பிடிக்க முடியாமையே. எனவே ஒவ்வொரு மருந்துப் பொருளையும் தர நிர்ணயம் செய்ய வேண்டும். அப்போதுதான் மருந்தின் செயல் திறன் முழுமையாகப் பெறப்படும்.

அடுத்து, எந்த ஒரு செந்தூரத்தையோ, பற்பத்தையோ நிறத்தை வைத்து மட்டும் நம்மால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. ஒன்றிரண்டு தவிர எல்லாச் செந்தூரங்களும் சிவந்த நிறத்திலேயே காணப்படுகின்றன. பற்பங்கள், (தங்க பற்பம் தவிர) எல்லாம் வெண்மை நிறத்திலேயே காணப்படுகின்றன. எனவே ஒவ்வொரு மருந்தையும் நவீன அளவறி பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அவற்றின் தரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.

நம்முடைய மருந்து செய்முறைகளில் ஒரே மருந்திற்குப் பல்வேறு செய்முறைகள் கூப்பட்டுள்ளன. ஒரு மருந்து செய்முறையின் ஒவ்வொரு படியிலும் என்னென்ன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை ஆராய்ந்து, அம்மாற்றங்களினால் மருந்தின் தன்மை அதிகரிக்கிறதா

என்பதையும் எந்த வகையில் அதிகரிக்கிறது என்பதையும் அறிய வேண்டும். இதனால் நம்முடைய மருத்துவ முறையில் கூறப்பட்டுள்ள கடினமான மருந்து செய்முறைகளை எளிதாக்கி விடலாம். தேவையற்ற முறைகளை நீக்கி விடலாம்.

மேலே குறிப்பிட்ட பணிகளெல்லாம் நிறைவேற வேண்டுமெனில் நவீன வேதியியல் பற்றிய அறிவு சித்த மருத்துவ மாணாக்கர்களுக்குக் கிடைக்க வேண்டும். எனவே நவீன வேதியியலை ஒரு பாடத்திட்டமாக அமைக்க வேண்டும். அதைவிட எல்லாவகை வசதிகளையும் பெற்ற நவீன வேதியியல் ஆய்வுக்கூடம் ஒவ்வொரு சித்த மருத்துவக் கல்லூரிக்கும், ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் வேண்டியது இன்றியமையாதது.

தாவர வேதியியல்

நம்முடைய மருத்துவத்தில் மூலிகைகளின் பங்கை அளவிட முடியாது. அதனால்தான் மூலிகை மருத்துவம் என்று கூட நமது மருத்துவம் வழங்கப்படுகிறது. நமது நூல்களில் பல்வேறு மூலிகைகள் பல்வேறு நோய்களைக் குணமாக்குவதாகச் சொல்லப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு மூலிகையும் என்னென்ன மருந்துப் பொருட்களைத் தன்னுள் கொண்டுள்ளது, மூலிகையின் எந்தப் பகுதி மருந்துப் பொருளாகச் செயல்படுகிறது போன்ற தெளிவான, விளக்கமான பாடங்கள் இல்லை.

நமது பாடத்திட்டத்தில் மூலிகைகளை அடையாளம், கண்டு கொள்வதற்கும், மூலிகைகளை வகைப்படுத்து வதற்கும், மட்டுமே பாடங்கள் போதிக்கப் படுகின்றன. அதனால் ஒவ்வொரு மூலிகையிலும் உள்ள உட் பொருட்களை அறிவதற்கான தாவர வேதியியல் என்ற பிரிவு

தேவைப்படுகிறது. இத்தாவர வேதியியலே மூலிகை மருத்துவத்தில் மிக்க பயன் விளைவிக்கும் ஒரு துறையாகும்.

மேலும் பல்வேறு மூலிகைகளைப் பயன்படுத்தித் தாதுப் பொருட்களை மருந்துகளாக மாற்றும் முறைகளில் மூலிகைகளின் பங்கையும், செயலையும் அறியவேண்டியது இன்றியமையாதது. இதற்குத் தாவர வேதியியல் துரையே உதவி புரியும். எனவே சித்த மருத்துவ மாணாக்கர்களுக்கு தாவரவியல் துறையுடன் தாவர வேதியியல் துறையையும் ஏற்படுத்தி தாவர வேதியியல் ஆய்வுக்கூடம் ஒன்றையும் இக்கல்லூரியில் நிறுவவேண்டும்.

மருந்தியல்

நமது எல்லாக் குணபாட நூல்களிலும் ஒவ்வொரு மருந்துகளையும் கூறி, அம்மருந்து குணப்படுத்தும் நோய்களும் கூறப்பட்டுள்ளன. ஆனால் எந்த ஒரு நூலிலும் மருந்து உடலில் எவ்வாறு செயல்படுகிறது என்று குறிப்பிடப்படவில்லை. இதற்குக் காரணம் இத்துறையில் நவீன அறிவியலைப் பயன்படுத்தாமையே ஆகும். எனவே நவீன மருத்துவத்துடன் போட்டியிடும் அளவுக்கு நமது குணபாடத்துறையை விரிவாக்க நவீன மருந்தியல் அவசியம் தேவைப்படுகிறது.

குணபாடம் என்பது மருந்துகளின் செய்கைகளைப் பற்றியது. மருந்துகள் எவ்வாறு செயல்பட்டு நோயை நீக்குகின்றன என்பதைத் தெரிவிப்பது. ஆனால் நமது பாடத்திட்டத்தில் மருந்து செய்முறைகளே பெரும்பான்மை இடத்தைப் பிடித்து, ஒரே நோய்க்கு ஏராளமான மருத்துவ முறைகள் கூறப்பட்டு அதனால் எந்த மருந்து சிறந்தது என்ற தர நிர்ணயம் செய்ய இயலாத நிலையில் உள்ளோம். அதனால்தான் பல்வேறு சித்த மருந்துகள் வெளிக்கொணரப்படாமலேயே உள்ளன.

எனவே நவீன மருந்தியல் ஆய்வுக்கு நமது எல்லா மருந்துகளையும் நமது பாடத்திட்டத்துடன் சேர்ப்பதுடன், நமது மருந்துகளின் மருத்துவக் குணத்தைத் தர நிர்ணயம் செய்து அதிகத் தரம் உடைய மருந்துகளைப் பயன்படுத்திப் பாடச் சுமையைக் குறைக்க வேண்டும். மேலும் இளங்கலை மாணவர்களுக்கும் நவீன மருந்தியல் ஆய்வு பயிற்சிகளை அளிக்க வேண்டும்.

நுண்ணுயிரியியல்:

தற்போது எந்த ஒரு மருத்துவமனையை எடுத்துக்கொண்டாலும் நோயாளிகளில் பாதிக்கு மேற்பட்டோர் நுண்ணுயிரிகளால் ஏற்படும் தொற்றுநோய்களினாலேயே பாதிக்கப்பட்டுள்ளனர். நம்முடைய சித்த மருத்துவத்தில் பல்வேறு தொற்று நோய்களுக்குச் சங்கு பற்பம், காடிக்காரச் செந்தூரம் போன்ற மருந்துகள் கூறப்பட்டிருந்தாலும் அவை எந்த வகையான நுண்ணுயிரிகளினால் ஏற்படும் தொற்று நோயைக் குணமாக்குகின்றன என்றும் எந்த அளவில் செயல்படுகின்றன என்றும், குறிப்பிட்ட நுண்ணுயிரிக்கு எந்த மருந்து சிறந்தது என்றும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கவில்லை. எனவே மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பெறுவதற்காக ஒவ்வொரு மருந்தும் நுண்ணுயிரியியல் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட ஆய்வுகள் செய்வதற்குக் கல்லூரியில் நுண்ணுயிரியியல் ஆய்வுக் கூடம் ஏற்படுத்த வேண்டும். மேலும் நுண்ணுயிரியியல் பற்றிய அறிவை நமது மாணாக்கர்கள் பெறுவதற்காக நுண்ணுயிரியிலைப் பாடத் திட்டமாக்க வேண்டும்.

அவசரக்கால மருத்துவம்:

பொதுவாக நமது சித்த மருந்துகள் எல்லாம் நீண்ட நாட்கள் சாப்பிட்டால்தான் குணமாக்கும் என்றும்,

உடனடியாக நோயைக் குணப்படுத்தாது என்றும் மக்களிடையே ஒரு கருத்து நிலவி வருகிறது. எனவே நமது மருத்துவத்தில் அவசர காலச் சிகிச்சைக்கான வர்மம், அறுவை, திராவக மருத்துவம் போன்ற மருத்துவ முறைகளை ஆராய்ந்து, நமது மருந்துகளில் உடனடியாகச் செயல்படக்கூடிய மருந்துகளை மருந்தியல் அடிப்படையில் தேர்ந்தெடுத்து அதனைப் பயன்படுத்தும் வழிமுறைகளை ஆராய வேண்டும்.

அவசரகால சிகிச்சை முறைகள் ஊழி போன்ற நோய் நிலையிலும், விபத்துக்களிலும், நஞ்சுண்ட நிலையிலும் அவசியம் தேவைப்படுகின்றன. அந்நோய் நிலையில் நாம் அளிக்கும் மருந்துகள் உடனடியாகச் செயல்பட வேண்டியதிருப்பதால் வாய்வழி மருந்து செலுத்துவதினால் அதிகப் பயன் கிடைப்பதில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட நோய் நிலைகளில் மருந்துப் பொருட்களை நாளம் வழியாக நேரடியாக செலுத்தி குருதித் தாதுவுடன் கலந்து உடல் முழுவதும் பரவச் செய்து உடனடி சிகிச்சை செய்ய வேண்டும்.

மேலும் பல்வேறு நோய்களில் உடலில் அறுவை செய்து உடலின் உள்ளுறுப்புக்களில் ஏற்பட்டுள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. மேற்கூறிய அறுவை சிகிச்சை முறை நமது புறமருந்துகளில் ஒன்றாகச் சொல்லப்பட்டிருந்தாலும், இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் அம்மருத்துவ முறையைச் செவ்வனே செய்யாமையினால் மேற்கூறிய அறுவை போன்ற உடனடி சிகிச்சைகள் வழக்கொழிந்து போயின. எனவே மேற்கூறிய அவசரகாலச் சிகிச்சை முறைகளை எல்லாம் நவீன அறிவியலின் துணை கொண்டு புதுப்பிப்பது இன்றியமையாததாகும்.

எனவே அவசர கால சிகிச்சைக்குத் தேவைப்படும் நேரடியாகக் குருதியில் கலக்கும் தன்மையுடைய சித்த மருந்துகளை நவீன அறிவியலின் அடிப்படையில் ஆராய்ந்து பயன்படுத்த வேண்டியது தேவையான ஒன்றாகும்.

மேற்கூறிய அறிவியல் ஆய்வுமுறைகளும், வளர்ச்சி முறைகளும் சித்த மருத்துவத்திற்கு ஏற்பட்டால் சித்த மருத்துவம் உலகம் முழுவதும் பரவி, உலகிற் சிறந்த மருத்துமாகச் சீரும் சிறப்பும் பெற்று வாழ வழி ஏற்படும். அந்த நாளை ஏற்படுத்தும் பொறுப்பு இளைஞர்களாகிய நம் கையிலேயே உள்ளது. ஆகையால் தோளோடு தோள் கொடுத்துச் சித்த அறிவியல் மருத்துவத்தின் வளர்ச்சிக்குப் பாடுபடுவோமாக.

சித்தர்கள் ஆய்வு - சித்த மருத்துவ வளர்ச்சி

மருத்துவர் ப. பார்த்திபன், பி.எஸ்,எம்.எஸ்.,
இரண்டாம் ஆண்டு பட்ட மேற்படிப்பு
பாளையங்கோட்டை.

சித்த மருத்துவம் பயிலும் மாணவர்களாகிய நாம் சித்தர்களைப் பற்றியும், அவர்கள் வாழ்ந்த காலங்களைப் பற்றியும், சித்த மருத்துவம் தோன்றிய காலங்களைப் பற்றியும் தெளிவான உண்மைகளை அறிவது இன்றியமையாத ஒன்றாகும். இன்றைய நாள் வரை சித்தர்கள் இரண்டாயிரம் நூற்றாண்டுகளுக்கு முற்பட்டு வாழ்ந்தார்கள் என்ற கருத்தை வலியுறுத்தக்கூடிய சான்றுகள் கிடைக்காத நிலையில் நாம் சித்த மருத்துவத்தைப் பற்றிய உண்மையான வரலாற்றைக் கல்வெட்டுகளிலிருந்தோ, பழைய புராணக் குறிப்பு களிலிருந்தோ தேடி ஆராய்ந்து, நூல் வடிவாக வெளியிடுவது நம் கடமை. அந்தக் கன்னி முயற்சியில் எனது ஒரு சிறிய திரட்டு.

முதலில் சித்தர்களைப் பற்றிப் பதினெண் சித்தர்கள் என்று பன்னிரு விதமாகத் திரு. என். கந்தசாமிப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்கள். பதினெண் சித்தர்களில் முக்கியமாகப் போற்றப்படுபவர்களில் போகரும் ஒருவர். போகர் எழுநூற்றில், ஐந்நூற்று முப்பத்தெட்டாம் (538) பாடலில்,

சொல்லவே சித்தர்கள் தாம் பதினெண் பேரும்
சீவ விந்தைக் கட்டியல்லோ திறம் ஆனாரே

என வருகிறது. இதனால் போகரின் காலத்திலேயே சித்தர்கள் பதினெண் பேர் என்று வறையறை ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் இந்த வரையறை எங்கு, எப்போது, யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பது தெளிவாக இல்லை.

சித்தர்களைப் பற்றித் தமிழ் இலக்கியங்களில் சில இடங்களில் குறிப்பிடும் போது, அகத்தியரைப் பற்றி விந்தம் அடக்கியவன், இசைமேதை, காவிரியணிந்தவன், சிவனை நிகர் பொதிகை முனி என்று கூறுகிறது. இடைக்காடரைப் பற்றிய செய்திகளைத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

பரஞ்சோதியார் எழுதிய கல்லானைக்குக் கரும்பருத்திய படலம், இடைக்காடர் பிணக்குத் தீர்த்தப் படலம் ஆகியவற்றில் சித்தர்களைப் பற்றிக் கூறியிருக்கலாம். ஆனால் இவையெல்லாம் செவிவழி வரலாறாகத்தான் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன.

சித்தர்களைப் பற்றியும், அவர்கள் வாழ்ந்த முறைகள் பற்றியும், பல கட்டுக்கதைகள் கூறி வந்தாலும், வரலாற்றுச் சான்று கொண்டு சித்தர்கள் கிறிஸ்துவுக்கு முற்பட்டவர்கள் என்பதைத் தெரிவிப்பது நம்மால் இயலாத ஒன்றாகவே உள்ளது.

சித்தர்கள் எழுதிய அனைத்தும் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, விருத்தம் முதலிய பாவினங்களிலே இருப்பதனால், பாவினங்கள் தோன்றியதற்குப் பின்னரே சித்தர்கள் தோன்றியிருக்க வேண்டும். பாவினத்தை முதன்முதலில் புகுத்தியவர் இளங்கோவடிகள்.

தமிழ் இலக்கியக் கொள்கை என்ற நூலில் கம்பனையோ, இளங்கோவையோ பெருங்காவிய ஆசிரியர்கள் எனவும், கதை கூறும் திறன் நிறைந்தவர் எனவும்,

சமுதாயச் சிற்பி எனவும் உணர்ந்து கொள்ள அவரின் பாடல்கள் போதுமானவை. ஆனால் வரலாற்றுச் சான்றுடன் கற்பது முழுமையுடையது. இப்போதைக்கு இக்கவிஞர் படைப்புப் பற்றியவை புராணங்களாகக் கிடைக்கின்றதே தவிர வரலாற்றுப் பூர்வமாக நிரூபிக்கப்பட வில்லை என்று தமிழிலக்கியக் கொள்கை 8ம் பாகம் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

பதினெண் சித்தர்களைப் பற்றி, நமது பாடத்திட்டத்திற்குரிய புத்தகங்களையும், தமிழக அரசின் முதல் பரிசு பெற்ற டாக்டர் இரா. மாணிக்கவாசகம் எழுதிய நம் நாட்டுச் சித்தர்கள் என்ற நூலினையும் படித்த வரையில், சித்தர்களைப் பற்றிய தெளிவான சரித்திரச் சான்றுகளுடன் கூடிய சித்தர்களைப் பற்றிய தெளிவான சரித்திரச் சான்றுகளுடன் கூடிய சித்தர்களின் காலங்கள் தெளிவாக இல்லை. உதாரணமாக அகத்தியரைப் பற்றிக் கூறும்போது, தொல்காப்பியர்க்கு ஆசிரியராக விளங்கிச் சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்திலக்கணம் பாடிய அகத்தியர் வேறு மருத்துவப் பாடல்கள் பாடிய அகத்தியர் வேறு என்றும், அல்லது இருவகை நூல்களையும் எழுதியவர் ஒரே அகத்தியர் என்றும், பலவிதமான நிச்சயமற்ற கருத்துக்கள் நிலவி வருகின்றன.

சேதி ஒன்று சொல்லுகிறேன் தெளிவாய்க் கேளு
செகந்தனிலே சியாமளா தேவி தன்னை

மேற்கூறிய பாடல் மருத்துவம் பாடிய அகத்தியரது ஆகும்.

இது சங்க காலத்தில் வாழ்ந்த அகத்தியரது நடையாகத் தோன்றவில்லை. எனவே ஒன்றுக்கு மேற்பட்ட அகத்தியர் இருந்ததாகத் தெரிகிறது. அல்லது அகத்தியரே ஒரு பொய்யான புனைப்பெயர் என்று சந்தேகம் தோன்றுகிறது.

அகத்திய மாமுனிவர் பரிபூரணம் - 1200க்கு
சூஸ்திரமாகிய பூரண சூஸ்திரம் 216
தலவிசேட மருத்துவம் பக்கம் 29

பாடல் 105

என்ற புத்தகத்தில்

மெத்த வடாடில்லிக்கு மேற்காக
விருதனாதலங்களுண்டு மேவிப்பாரு
சித்தரப்பா சஞ்சமலைச் சித்தர் வாழ்க்கை

.....

சூல மான ஆற்காட்டின் மேற்கே பத்து

.....

திண்டுக்கல் தேசம் தன்னில்

எனும் பாடலில் டில்லி, திண்டுக்கல், ஆற்காடு என்ற தற்காலப் புதிய ஊர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனை அகத்தியர் நூல் என்று கருதி வேறு துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் படிக்க நேர்ந்தால் நமது சித்த மருத்துவக் கொள்கையை எந்த அளவுக்கு மதிப்பிடுவார்கள்?

அசோகருடைய வரலாற்றைப் பார்க்கும்போது, அது புத்த, சமண மதங்கள் பரவிய காலம். அக்காலத்தில் நாகார்ஜுன சித்தர் என்று ஒருவர் கிடையாது. நாகார்ஜுனர் என்பவர் அசோகரிடம் அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார் என்றே தெரிகிறது. சித்தர் என்ற வார்த்தை இடைக்காலத்திலே யாராலோ செருகப்பட்டுள்ளது. இதேபோல் அகப்பேய் சித்தர், அழுகண்ணிச் சித்தர், மற்றும் இடைக்காடர் முதலியவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது அவ்வாறு

கூறப்படுகின்றது, வழங்கி வந்தது, அறியப்படுகிறது என்ற நிச்சயமில்லாத வார்த்தைகளைப் போட்டு நிரப்பி யுள்ளார்கள்.

இராமதேவரைப் பற்றிக் கூறும்போது அவரே பின்னர் யாக்கோபு என்ற பெயரில் பாடல்களை எழுதினார் என்றும் பிறப்பால் முகம்மதியர் என்றும் கூறியுள்ளார். யாக்கோபு வைத்திய வாத சூத்திரம் - 400 என்ற நூலில் இவர் மெக்கா சென்றதற்கான காரணத்தை 397, 398, 399 என்ற எண்ணுள்ள பாடல்களில் விளக்கியுள்ளார். இவர் சதுரகிரியில் ஆசான் அகத்தியரோடு தங்கியிருக்கும் கைலாசச்சட்டைநாதர் தீட்சை 200 என்னும் நூல், திருமூலரிடத்தில் கொடுக்க அதை அவர் கிழித்துப்போட ஒரு சிறிய கதையை விளக்கி அதனால்தான் மெக்கா சென்று வந்தார். அப்படியென்றால் முகலாயப் படையெடுப்புக்குப் பின்னர் அதாவது கி.பி. 14ம் நூற்றாண்டுக்கு பின் இவர் தோன்றியிருக்க வேண்டும். இதிலிருந்து யாகோபு, திருமூலர், அகத்தியர் எல்லோரும் ஒரே காலத்தவரா? அல்லது வெவ்வேறு காலத்தினரா? திருமந்திரம் எழுதிய திருமூலர் எந்த காலத்தை சேர்ந்தவர்?

கருவூராரைப் பற்றிக் கூறும்போது இவர் கருவூரார் தலபுராணத்தில் காணப்படும் கருவூர்த் தேவன் அல்லது கருவூரார் அக்ததியருடன் வாழ்ந்ததாகக் குறிக்கப்படுவதால் இவர் சங்க காலத்தைச் சேர்ந்தவர் என்றும் இவர் அந்தணக் குலத்தில் பிறந்தவர் என்றும் போகரின் மாணாக்கர் என்றும் கூறுகின்றனர்.

(A Tamil dictionary of proper names - pages, 119 & 120)

தஞ்சையில் இராஜராஜ சோழன் கட்டிய கோவிலில் சிவலிங்க பிரதிஷ்டைக்கு இவரே அஷ்டபந்தனம் செய்வித்தார் என்ற செய்தி வழங்கி வருவதுகொண்டு இவரது காலம் கி.பி. 11ம் நூற்றாண்டு என என்னலாம்.

(ஆதாரம்: சித்தர் பாடல்கள் பக்கம் - 24 கருவூரார் பூசாவிதி - பாடல் -16)

எனவே கருவூரார் சங்க காலத்தைச் சார்ந்தவரா? அல்லது இராஜராஜன் காலத்தைச் சார்ந்தவரா? தஞ்சை பிரகதீசுவரர் ஆலயத்தில் இவருக்கென்று ஒரு சிலையும் உள்ளது.

போகரைப் பற்றிக் குறிப்பிடும்போது தஞ்சை பிரகதீசுவரர் கோவிலின் விமானத்தில் உள்ள கபாலக்கல்லை ஏற்ற வகையறியாது தயங்கிய சிற்பிகளுக்கு இவர் பஞ்சு மூட்டைகள் உபயோகித்து மேலே ஏற்ற உபாயம் கூறியதாக நமது தோற்றக்கிரம ஆராய்ச்சி 344ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. அப்படியென்றால் போகர் கருவூரார் காலத்தவரா?

உரோமரிஷி

இவர் காலம் சட்டமுனிக் காலம். எந்தவிதமான புற அகச் சான்றும் இல்லாததால் காலத்தால் கணிப்பது அரிது. எனினும் கி.பி. 5ம் நூற்றாண்டுக்குப் பிறகு சித்தர்களின் வளர்ச்சி இருத்தல் கூடும். மேலும்

பாரையா குதிரை மட்டம் பாய்ச்சல் போச்சே
மூடாமல் சிறிது மனப்பாடம் பண்ணி

என்று சித்தர் ஞானக்கோவையில் உரோமரிஷி பாடியதாகக் கூறப்படுகிறது. இந்தச் சொல்லாட்சி மிகவும் பிற்காலத்தியது. எனவே இவர் பாடலில் பின் வந்தவர்கள் சேர்த்தார்களா? அல்லது, இவரைப் பற்றிய செய்திகள் அனைத்தும் பொய்யா?

இவ்வாறாகச் சித்தர்களைப் பற்றிய முன்னுக்குப் பின் முரணான செய்திகளையே அடிப்படையாகக் கொண்டு தவறான கருத்துக்களையே கொண்டுள்ளோம். எனவே சித்த

மருத்துவர்களாகிய நாம் சித்தர்களைப் பற்றித் தெளிவான வரலாறுகளை அறிந்தால்தான் அவர்கள் எழுதிய பாடல்களை மற்றவர்களுக்கும் சரித்திர ஆதாரத்துடன் கூற வசதியாய் இருக்கும்.

ஆனால் வரலாற்றைக் கொண்டு பார்க்கும்போது முதல் மூன்று நூற்றாண்டுகள் கற்காலம், மூன்று முதல் ஆறாம் நூற்றாண்டு களப்பிரர்? ஆட்சி (இது இருண்ட காலம்) 6-9 ஆம் நூற்றாண்டு பல்லவர் ஆட்சிக்காலம், 9-12ம் நூற்றாண்டு சோழர் ஆட்சிக்காலம் 12-16ம் நூற்றாண்டு. முகலாயப் பேரரசு மற்றும் நாயக்கர் காலம், 16-19ஆம் நூற்றாண்டு ஆங்கிலேயர் ஆட்சிக் காலம்.

மேற்கண்ட ஆட்சிக் காலங்களில் ஏற்பட்ட சரித்திர நிகழ்ச்சியை மையமாகக் கொண்ட ஆதாரங்கள் எவற்றிலும் சித்தர்களைப் பற்றியோ அவர்கள் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியோ ஆதார பூர்வமாகக் குறிப்பிடவில்லை. எல்லாச் சித்தர்களது வாழ்க்கை வரலாறுகளும், வாழ்ந்த காலங்களும் ஒரு யூகத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளன. தமிழிலக்கியங்களுள் தொன்மையாகக் கருதத் தக்கதான கடைச் சங்க இலக்கியங்கள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலியவற்றிலோ, அல்லது தொல்காப்பியத்திலோ சித்தர் அல்லது சித்து என்ற வார்த்தை காணப்படவில்லை. ஆனால் சங்க இலக்கியத்தில் அறிவர் என்ற சொல் அல்லது

நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த
மறைமொழிதானே மந்திரமென்ப

என்ற வரியில் நிரைமொழி மாந்தன் என்ற சொல் சித்தரைக் குறிக்கலாம் எனும் நாம் கற்பனையாக நினைத்தாலும் அதனை நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் எதுவும் இல்லை. இதற்குச் சான்றாக டி.வி.எஸ். அகராதி 3ம் பாகம் பக்கம் 2088ல் கீழே கண்டவாறு கூறியிருக்கிறார்.

சித்தர்கள் அனேக காலங்களுக்கு முன் இருந்தவர்கள் என்றாலும், சில ஆயிரம் வருடங்களுக்கு முன்னர்தான் தோன்றியவர்கள் என்று பொதுப்படக் கூறினாலும், இன்ன காலத்தில் தான் தோன்றியவர்கள் என நிர்ணயிக்க முடியவில்லை என்று கூறியுள்ளார்.

எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் நான் அறிந்த சில நூல்களைப் புரட்டிய வகையில் சித்தர்களுடைய வாழ்க்கை வரலாறு மற்றும் அவர்கள் வாழ்ந்த காலங்கள் வரலாற்றுச் சான்றுகள் மூலம் நிரூபிக்கப்படவில்லை. எனவே நம்மால் முடிந்தவரையில் சித்தர்கள் என்பவர்கள் இருந்தார்கள் என்றும் அவர்கள் வாழ்ந்த காலம் ஒரு குறிப்பிட்ட காலம்தான் என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் நிரூபிக்க முயலுவோமாக.

சித்த மருத்துவ வளர்ச்சி

சித்தர்களைப் பற்றிய கருத்துக்கள் பலவாக இருப்பினும் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட மருத்துவத்தைக் கட்டிக் காப்பது நமது தலையாய கடமையாகும்.

சித்த மருத்துவ மாணவர்களுக்குப் பலநூல்களிலிருந்து திரட்டியவைகளையும், பாடல்களுக்குத் தவறான பொழிப்புரையுடனும் கூடியவைகளையும், பாடங்களாகக் கொள்வதைவிடச் சித்தர்களுடைய மூலப்பாடல்களையே பாடத்திட்டமாகக் கொள்ள வேண்டும். உதாரமணமாகத் தேரையர் யமக வெண்பா, யூகிமுனி வைத்திய சிந்தாமணி, அகத்தியர் குணவாகடம் முதலியவற்றை நேரடியாகவே இளங்கலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்தில் புகுத்தலாம். இதேபோல் சித்த மருத்துவத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய நோயை விரைவில் தீர்ப்பது நமது கடமை. அந்த முறையில் பார்த்தால் அனுபானம் மிகவும் முக்கியமான

ஒன்று. எனவே அனுபானத்தைப் பற்றித் தெளிவாக ஆராய்ச்சி செய்து படிப்பது, அதனை வழக்கிலும் பயன்படுத்துவது இன்றியமையாத ஒன்று.

முடிவு:

இந்தக் கட்டுரையின் மூலம் எனது கருத்தை நான் தெரிவிப்பதை விடச் சித்த மருத்துவர்களாகிய நாம் அனைவரும் சேர்ந்து சித்த மருத்துவத்திற்கு ஆற்ற வேண்டிய பணியினை விளக்கியிருக்கிறேன். இதில் தவறான கருத்துகளும்கூட இருக்கலாம். அதனை இந்தச் சிறியவனின் தவறாக நினைத்து அதனைச் சரித்திர ஆதாரங்களுடன் நாம் அனைவரும் சேர்ந்து நிரூபிப்போமாக!

1. நம் நாட்டு சித்தர்கள் இரா. மாணிக்கவாசகம்
2. தமிழ் இலக்கியக் கொள்கை ச.வே. சுப்பிரமணியன்
3. தோற்றக்கிரம ஆராய்ச்சி, சித்த மருத்துவ வரலாறும்
4. திருமூலர் வைத்தியம் (கருக்கடை காள)



வெண்படையும் - பரிகாரமும்

டாக்டர் நா. அனந்த பத்மநாபன், பி.ஐ.எம்.,
உதவிமருத்துவ அலுவலர்
போத்தனூர், கோவை 23

ஆதி முதற் பாரம் பொருளே போற்றி!

முதற் சித்தன் சிவனால் பல்லாயிரம் ஆண்டு முன்னம் உருவாக்கப்பட்டது. சித்த மருத்துவம் சிவனின் சீடர்களான சித்தர் கூட்டமும் பல கோடிக் கிரந்தங்களை வடித்து நமக்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய சித்தர்கள், மூன்று காலங்களையும் உணர்ந்து இருந்தார்கள். அதனால்தான் இக்கலியுகத்தில் வரக்கூடிய நோய்களையும் அதன் பரிகாரங்களையும் முன்னமே தங்களது முதுமைப் பேரறிவால் பல நூற்றாண்டு முன்பே ஓலைச் சுவடியில் வேதமாக, நாடி வாக்கியமாக எழுதி விட்டார்கள் என்கின்ற உண்மையை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய நூல்களையே விதி அறியும் வேதம் என்றார்கள்.

இத்தகைய நூல்களை நமது பெரும்பாலான சித்த மருத்துவர்களோ சித்த மருத்துவக் கல்லூரிகளோ, மருத்துவப் பல்கலைக் கழகமோ, இந்திய மருத்துவ இயக்கமோ, தமிழக அரசோ இன்னும் ஆராயவில்லை. ஆனால் பெங்களூரைச் சார்ந்த சித்த ஆராய்ச்சி நிலைய அறிஞர் டாக்டர் குமார் அவர்கள் நெடுங்காலமாக ஆய்வு செய்து வருகிறார். அவரது உதவியால் நானும் அவ்வழி முனைந்து வருகிறேன்.

கடந்த 20 ஆண்டுக் காலமாக சித்த மருத்துவ நூல்களை ஆய்ந்து வரும் நான் தற்போது வெண்படை எனும் தோல் பிணிக்காக முனைந்து மருத்துவம் செய்து வருகிறேன். இதில் ஓரளவு வெற்றியும் கண்டு வருகிறேன்.

வெண்படை

வேறு பெயர்கள்:- வெண்படை, வெண்புள்ளி, வெண்குட்டம், வெண் தொழுநோய், சுவேத குட்டம், வெண் திட்டு, வெண்தழும்பு என இவ்வாறாகவும்.

ஆங்கிலத்தில் - லூக்கோ டெர்மோ, விட்டிலிகோ என்றும் வழங்கப்படுகிறது.

இயல் (நோயின் தன்மை) உடலின் தோல் பகுதியில் மங்கல் நிறமாகப் புள்ளிகள் தோன்றி அவை படைகளாகிய அவ்விடத்து மயிரும் நாளடைவில் வெளுத்து விகாரமான தோற்றத்துடன் உடல் முழுவதும் பரவும்.

பொதுக்குறி குணம்:

இந்த நோயில் தோலாவது தடிப்பாகவோ தடிப்பற்றோ இருக்கலாம். உடல் முழுவதுமான கை, கால், தலை, உதடு, முகம், உள்ளங்கை, பிறப்பு உறுப்புகள் ஆகிய சில இடங்களிலுமாவது வெளுத்து இருத்தல், அவ்விடத்து மயிர் வெளுத்தல் சில வேளை உதிரல், எரிச்சல் காணுதல் ஆகிய அடையாளங்களைக் குறி குணமாகக் கொண்டுள்ளது.

வெண்படையின் வகைகள்

சித்தர் நூல்களில் குற்ற அளவாக மூன்று என்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும் தற்கால ரீதியாகப் பல வகைகள் உள்ளன.

1. வாத வெண்படை (Leucoderma due to Vadha factor)
2. பித்த வெண்படை (Leucoderma due to Pitha factor)
3. கப வெண்படை (Leucoderma due to Kaba factor)
4. மேக வெண்படை (Leucoderma due to VD or STD)
5. சரும ஒவ்வாமை வெண்படை (Allergic causes bums and scalds)
6. பரம்பரை வெண்படை (Hereitary Factor)
7. பிறவி வெண்படை (Albumism or Leucoderma by Birth)

வெண்படை நோயின் காரணம்:

முற்கூறப்பட்ட விதி அறியும் வேதத்தில் காண்பவை

சித்தர் நந்தீசர் வகுத்தபடி

1. கருவிலே பிறக்கும் போது ஏற்படும் உணவாதி செயல்களின் விகற்பத்தாலும்

2. குறிப்பிடும்படியான கோள்நிலை மாறுபாடாகவும்.

3. கருவிலே இருக்கும் போது சூரிய சந்திர கதிர் வீச்சு நிலையாலும்

4. சந்திரனின் தேய்பிறை நாட்களையொட்டி ஏற்படும் சந்திர கிரகணக் கோளாறுகளாலும்

5. உடலின் சருமத்திற்கு வனப்பை அளிக்கும் பாடாண வகைகளுள் ஒன்றான திமிரி பாடாணம் குறைவதாலும்

6. நுண்ணிய அணுக் கிருமியாலும்

இத்தகைய கிருமி எவ்வாறு தோன்றியது என்றால் சந்திரகிரகத்தில் உள்ள மண்ணின் உஷ்ணத்தால் கிரிகை ஏற்பட்டு வான மண்டலத்தின் வாயு நிலை ஒட்டி எரி கற்கள் மண்தூசு ஆகியன வந்தடைந்தன. இவ்வாறு வந்தடைந்த

சந்திர அணுதூசி ஒட்டி இவை சூரியக் கதிரின் வெப்பத்தால் பூமியில் நிலை மாற்றமாகிக் கண்ணுக்குப் புலப்படாத நிலையில் அணுக்கிருமிகளாக உள்ளவை. உடலின் சுவாசயங்களில் உட்புக நேரிட்டு நோயினைத் தோற்றுவிக்கும்.

குறிப்பாக இச்செயல் சூரிய சந்திர கிரகணங்களின் போது அதிகப்படியாக நிகழும். ஆகவேதான் கர்ப்பிணிகள் இக்காலங்களில் வீட்டினைவிட்டு வெளியேவரக்கூடாது என்று சித்தர்கள் கூறினார்கள்.

இதையும் மீறிக் கர்ப்பிணிகள் வரும்போது சந்திர சூரியகிரகணத்தின் போது உள்ள கதிர்வீச்சால் சந்திர தூசி அணுவானது நாசியின் உட்புகுந்து கர்ப்பிணியின் கர்ப்பத்தைத் தொட்டு அங்கே அணுவாய் நிற்கும் வளர்ச்சியதன் கருவிலே தொந்தமாகி அதன் சருமத்தில் தங்கிவிடும். தோலின் நிலையிலும் மாற்றம் அடையும்.

ஆதிகாலங்களில் கிரக சஞ்சார நிலையுமான சஞ்சாரிகள் மூலம் இந்நோய் சட்டம் பரவலாகும். பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்து நூற்றாண்டு முன்பே தோன்றிட்ட இச்சட்டம் கலியுகம் தன்னில் சந்திர சட்டம் என அழைக்கப்படும். பூமிக் கிரகத்தில் கிரக சஞ்சார வான ஊர்திகள் (ராக்கட்டுகள்) நிலையாலே மருத்துவத்தில் நோய் சட்டத்தில் வளர்ச்சியுறும் கிரண காரியம் உண்டு.

இத்தகைய கருத்தின்படி கிரக சஞ்சார ஊர்திகள் தோன்றி இதன் கட்டமாக இவை ஆழி தன்னில் கொண்ட மாசில் என்றபடி விண்கலங்கள் ராக்கெட்டுகள் ஆகியவை சமுத்திரத்தில் வந்திறங்கும். இதன் காரணமாக கடல்வாழ் உயிரினங்கள் பாதிப்படைந்து மீன்கள் மூலமாக மக்களிடையே இத்தகைய வெண்படை வியாதித் தொந்தம் வரும் என்று கூறப்பட்டுள்ளது.

பிறவி வெண் படை

ஆகவே முற்கூறிய சந்திர அணுத்தூசிக் கருவிலே தொந்தமான குழந்தைகள் பிறந்தால் அவை நளினம் இல்லாத இந்நளினத்தால் வெளுத்தும் கண்களின் ஒளிக்குழல் நா அதனில் கோளாறு ஏற்பட்டுக் கண்களின் தோற்றம் முன் பின்னாகவும், இருநிலையாகவும் காணும். கண் கூச்சமடையும் நிலை தோன்றும்.

இத்தகைய நோய் நிலை சட்டம் மேற்கத்திய நாடுகளில் அதிக நிலைக்கு ஏற்ப

வெண்ணிற சமூகம் தன்னில் செந்நிறத்தழும்பு காணும் இவ்வாறாக கருப்பர் நாடு, சீனபுரி, மங்கோலியம், கூர்ஜரம், அங்காரக நாடு ஆகிய நாடுகள் இந்நோய் பரவலாகக் காணும்.

மருத்துவம்

பூமி தன்னில் சந்திரக் கலையில் ஜனித்திடு நாத விந்து அதனின் நீர், அதனால் பருகப் பெறின், நாள் தொட்டுக் குணமாகும். இதற்கு மருந்தாகப் போகர் கூறிய மருத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

1. திமிரி சத்து உடைய மூலிகைகளைப் பயன்படுத்த வேண்டும்.

முருங்கை
பொன்னாங்கண்ணி
சம்பரத்தை
செம்பருத்தி ஆகியன

2. குருதியிலே உள்ள செவ்வணுவில் திமிரிச் சத்து உண்டு.

3. மருதோன்றித் தைலம் புற ஆட்சியாகப் பயன்படுத்த வேண்டும்.

4. வீரலிங்கப் பதங்க செந்தூரம் தக்க அளவு பயன்படுத்தி வரவேண்டும்.

5. மகா வில்லுவக் களிம்பு

6. இரசச் செந்தூரக் களிம்பு ஆகியவை பயன்படுத்த வேண்டும்.

நூல் சான்றுகள்

1. சித்த மருத்துவம்

2. ஓலைச்சுவடி, கந்தர்நாடி வாக்கியம் - நூல் உதவி டாக்டர் குமார் சித்த ஆராய்ச்சி நிலையம், பெங்களூர்.

சித்த மருத்துவம் வளரச் சில வழிகள்

டாக்டர் இரா. மாணிக்கவாசகம்,M.A., M.Litt., Ph.D.,
(கியூவோ பார்மா)
27, கஜபதி தெரு, சென்னை-10.

1. முறையாக தமிழ் பயின்று பட்டம் பெறாதவர் புகழ் பெற்ற பெரும் தமிழ் அறிஞர்களாக விளங்கி இருக்கிறார்கள். அதுபோல முறையாக மருத்துவம் பயிலாத பலரும் சிறந்த மருத்துவர்களாக விளங்கி இருக்கிறார்கள். மருத்துவத் தொடர்பாக நூல்கள் எழுதியுள்ளனர். எழுதி வருகின்றனர். இத்தகையவர்களின் தொண்டினை ஊக்குவிக்க வேண்டும்.

2. எ.ம்., எம்.லிட்., பிஎச்.டி., போன்ற பெரிய பட்டம் பெற்றவர்களைக் காட்டிலும் ஆழ்ந்த இலக்கிய அறிவுடைய தமிழ்ப்புலமை பெற்ற பண்டிதர்கள் ஆங்காங்கு குடத்தில் உள்ள விளக்குப்போல் உள்ளனர். அதுபோல் பரம்பரை சித்த மருத்துவர்கள் பலர் உள்ளனர். அவர்களிடம் அரிய மருத்துவ முறைகள் உள்ளன. பரம்பரைச் சித்த மருத்துவர்களை ஊக்குவிப்பதன் மூலம் அந்த மருத்துவ முறைகளைக் கண்டறியலாம்.

3. வியாபார ரீதியில் சித்த மருத்துவம் சார்ந்த மருந்துகள் தமிழக எல்லைக்கு தான் விற்பனையாகின்றன. கேரளம், ஆந்திரம், கர்நாடகம் முதலிய மாநிலங்களில் சித்தா என்றால் தெரியவில்லை. மருந்துகளுக்கு வரவேற்பும் இல்லை. ஆயுர்வேதா என்று இதே மருந்துக்கு லேபில் ஒட்டினால் ஓடுகிறது. இப்படித் தமிழகத்திற்குள்ளேயே சிறையிருக்கும் சித்த மருத்துவத்தை வளர்க்க வேண்டுமானால் அரசு உதவி

தேவை. பெரிதும் தேவை. சித்தா மருந்து தயாரிப்பாளர்கள் மிகவும் குறைவு. அவர்கள் தம் தயாரிப்புக்களை விற்பனை செய்யப்பெறும் துன்பப்படுகிறார்கள். அரசு தொடர்பான மருத்துவ மனைகளில் முன்பு வாங்கியமை போலத் தரமான மருந்துகளைவாங்கி ஆதரவு அளிக்கலாம். பரவலாகச் சித்த மருந்துகள் மக்களிடையே அறிமுகம் ஆகும். மருத்துவ மனைகளில் இன்னமும் பழைய முறைகளையே கையாளுகின்றனர் Capsule, Tablet முதலிய முறைகளை ஊக்குவிக்கலாம்.

4. தனியார் மருந்துகளுக்கு ஆதரவு தர முன்வரின் தரக்கட்டுப்பாடு தேவை. மிகமிகத் தேவை. அனுபவமிக்க பட்டதாரி அறிஞர்களையும் பரம்பரை மருத்துவர்களையும் கொண்ட குழு ஒன்று நியமிக்கலாம்.

5. மருந்து வாங்கும் போது குறைந்த விலை மருந்துகளை வாங்குவது தவிர்க்க வேண்டும். தயாரிப்பில் தரம் இருக்காது. அதற்காக அதிகம் விலை உள்ள மருந்துகளை வாங்க வேண்டும் என்பது பொருள் இல்லை. குறைந்த விலை நிறைந்த தரம் உள்ளன எனப் பொதுவாக மருத்துவர்கள் நினைப்பனவற்றை அரசு வாங்கலாம்.

6. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சித்த மருத்துவ இதழ்கள் நடத்தவேண்டும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட வேண்டும்.எனக்குத் தெரிய வேலூர் மருத்துவர் டாக்டர் கண்ணப்பரின் மூலிகை மணியை அவரது மகன் டாக்டர். வேங்கடேசன் தொடர்ந்து நடத்தி வருகிறார். எத்தனையோ இதழ்கள் தோன்றி உதிர்ந்து விட்டன. வாங்குவார் இல்லை. பெரும் பொருள் இழப்புடன் வேங்கடேசன் போன்றோர் துணிந்து எந்த விளம்பரம் பொருள் உதவியும் இன்றி நடத்தி வருபவர்களை அரசு தக்க வகையில் கௌரவிப்பதோடு தொடர்ந்து நடத்த மானியம் வழங்க வேண்டும்.

7. சித்தர்கள் இலக்கியங்கள் பாமரர்கள் இலக்கியமாகவே உள்ளன. இதுபோல் சித்த மருத்துவமும் பாமரர் மருத்துவமாகவே உள்ளது. சித்த மருத்துவப் பகுதிகளுக்கு வருபவர்கள் எத்தனைபேர் கார்களில் வருகிறார்கள்? இது பணக்காரர்களுக்கும் போய்ச் சேரவேண்டும். சென்னை போன்ற பெரிய நகரங்களில் உள்ள பெரிய மருத்துவ மனைகளில் சித்தர் பகுதிகள் அமைக்க வேண்டும். அத்துடன் அலோபதி மருத்துவர்கள் கூட துணிவாகச் சித்தா மருந்துகளைப் பரிந்துரைக்கும் நிலை வரவேண்டும். Liv52 ஒன்றுதான் அவர்களுக்குத் தெரியும். எந்தவிதப் பின்விளைவும் பயவாத மருத்துவம் நம் மருத்துவம், (உலோகம், பாஷாணம் சுத்தி முறை செம்மையாக அமைதல் வேண்டும்)

8. திருப்பதி தேவஸ்தானத்தில் 90 லட்ச ரூபாய் மருத்துவம், சமயம் சார்ந்த நூல்வெளியீட்டுக்கு வழங்குகிறார்கள். எந்தவித சிபாரிசும் இல்லாமல், யாரையும் பார்க்காமலேயே இரண்டு புத்தகங்களையும் நான் வெளியிட உதவி பெற்றேன். நம் நாட்டுச் செல்வ சிறப்புடைய திருக்கோயில்களும் இத்தகைய முறையில் நிதியுதவி செய்யமுன்வர வேண்டும். பழனித் திருக்கோயில்களில் தொண்டு தொடரவில்லையே!

9. திருக்கோயில்கள் சார்ந்த மருத்துவமனைகளில் பல மூடப்பட்டுக் கிடக்கின்றன. காரணம் போதுமான நிதியின்மை, அவை மீண்டும் செயல்பட அரசு முன்வரவேண்டும்.

10. ஆங்கில மருந்துகளை அரசு மருத்துவ மனைகளில் வாங்குவதில் சில சட்ட திட்டங்களைத் தளர்த்தியுள்ளது போல் சித்தா மருந்துகளை வாங்குவதிலும் அவசியம் திருத்த வேண்டும்.

திருமூலர் - ஓர் ஆய்வு

டாக்டர் ச. ரங்கராசன், BIM, உதவிமருத்துவ அலுவலர்,
ஆரம்பசுகாதாரநிலையம், அம்மாபேட்டை.

சித்த மருத்துவத்தில் திருமூலர் சிறப்பானதொரு இடத்தைப் பெறுகின்றார். திருமூலர் என்ற பெயரில் பலரிருந்தாலும் திருமந்திரம் எழுதிய திருமூலரே காலத்தால் மூத்தவர் ஆவார். திருமந்திரம் எழுதியத் திருமூலரின் காலம், கி. பி. 7ம் நூற்றாண்டு என்று திரு. மு. அருணாசலம் கூறுகின்றார். கி.பி. 5ம் நூற்றாண்டு என்பதாக டாக்டர் மாணிக்க வாசகம் கூறுகின்றார். எவ்வாறாயினும் காலத்தால் ஏனைய சித்தர்களுக்கு முற்பட்டவர் என்பதும், அவருடைய நூலில் உள்ள சித்த மருத்துவக் கருத்துக்கள் ஏனைய நூல்களுக்கு முற்பட்டவை என்பதும் தெளிவு.

தமிழ்ப்புலவர் அகராதியில் 1. திருமூலதேவர் 2. திருமூல நாயனார் எனப் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. திருமூலத் தேவரின் நூல்களாக 1. திருமந்திர மாலை 2. திருமூலதேவர் பாடல்கள் 103. 3. வாலைபஞ்சாக்கர விளக்கம் 20 என்பனவும் திருமூல நாயனாரின் நூல்களாக 1. சிதம்பர ரகசியம் 2. திருமூல நாயனார் நிகண்டு 3. திருமூல நாயனார் வாத சூத்திரம் என்ற பெயரில் பலர் இருந்திருக்கக் கூடும் என்பது தெளிவாகின்றது.

திருமூலர் நூல்களில் குழூஉக்குறியான சொற்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் திருமூலரின் பாடல்கள் தெளிவற்றவை. விளக்க எவ்வளவு முயன்றாலும் விளக்கம் பெறும் நிலையில்லாத அந்தப் பாடல்களைத்

தமிழ்ச் சைவர்கள் மிகவும் உயர்வாக மதிக்கின்றார்கள் என்று திரு. கே. ஏ. நீலகண்ட சாத்திரியார் கூறுகிறார். திருமூலரின் பெயரில் உள்ள மருத்துவ நூல்கள் 25 என சித்த மருத்துவ நூலோதியிலிருந்து அறியமுடிகிறது. திருமூலரின் பாடல்களிலேயே இடைச்செருகல் உள்ளது என்று திரு வெள்ளைவாரணனார் கூறுகின்றார்.

கலந்தருள் காலங்கர் தம்பால் அகோர்
நலந்தரு மாளிகைத் தேவர் நாதாந்தர்
புலங்கொள் பரமானந்தர் போக தேவர்
நலந்திகழ் மூலர் நிராமயத்தோரே. (திருமந்திரம்)

14ம் நூற்றாண்டில் உள்ள போகரை மூலர் வாழ்த்துவதாக வருகின்றது. 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த மூலர் 14ம் நூற்றாண்டின் போகருக்கு வாழ்த்துக் கூறுவதால் இப்பாடல் பிற்சேர்க்கையாகும்.

திருமூலரை பல்வேறு சித்தர்கள் போற்றுகின்றார்கள். இவர்கள் 14ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள்.

என்றாலுமே கூர்மமுனி திருமூலர் பேர
ஏற்றமாம் போகர் என்ற முனிவர் தானும்?

திருத்தமாய் நந்தீசர் சந்தம் சொன்னார்
திருமூலர் சொன்னதுதான் மந்திரமாலை

ஆயினும் இராமதேவர் என்ற யாகோபு தன்னுடைய வைத்திய சிந்தாமணி 700ல் அகத்தியர், தன்வந்திரி காலாங்கி, போகர், யூகி, சட்டைமுனி, புலத்தியர் என்று ஏனைய சித்தர்களுக்கு வணக்கம் கூறுகின்றார். ஆனால்திருமூலரின் பெயர் இதில் இடம் பெறவில்லை. இதுபற்றி ஆய்வு செய்யப்படவேண்டும்.

திருமூலரின் நூல்களில் பல கருத்து வேறுபாடுகள் உள்ளன. சான்றாக திருமூலர் கருக்கடை 600 என்ற நூலில் காயகற்ப மூலிகைகளின் தொகை 108 எனவும் திருமூலர் வைத்திய 600 காயகற்ப மூலிகைகள் 113 என்றும் பட்டியல் தருகின்றன.

(இவ்வேறுபாடுகள், திருமூலர் என்ற பெயரில் பலர் இருந்திருத்தல் கூடும் என்ற திரு ந. சி. கந்தையய்யா பிள்ளையின் புலவர் அகராதியின் ஆசிரியர் கருத்துக்களுக்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது.

மூலிகை கற்ப முயன்று அறுபது
பால்யுபாசம் பாங்காய் அறுபது
வாலிய சூதம் தங்கமிகாண்டு
ஒலியொரு நூற்றுபத்திரண்டொன்றே. (10)

அஞ்சுயுகத்தில் அழியாத காயந்தான்
மிஞ்சிய கற்பம் விளம்பினோம் நூற்றியெட்டு
தஞ்சமுறவேதான் தின்ன வல்லார்க்கு
பஞ்சுநரைபோய் பதிந்தோங்கி வாழ்வாரே. (11)

இதுபோன்றே முதல்தர முலிகைகளாக 1. நீலி, 2. கொடி வேலி, 3. மகாசோதி, 4. கருநெல்லி, 5. கருநொச்சி என்பன திருமூலர் வைத்திய காவியம் 1000ல் கூறப்பட்டுள்ளன. இரசவாத மூலிகைகளாக 1. செந்தாட்பாலை. 2. கருகரி சாலை. 3. தாமரை என்பன பேசப்படுகின்றன. மூலிகைகளிலிருந்து உப்பு பெறும் முறை, சாறு எடுக்க குளிகை என்பன பற்றியும் வைத்திய காவிய 1000ல் கூறப்படுகின்றது.

திருமூலர் கருஉற்பத்தி பற்றி கூறுகின்றார். கலவி செய்வதிலிருந்து பிள்ளைப் பேறு வரை கருவின் வளர்ச்சி பற்றி விரிவாகக் கூறுகின்றார். பல்வேறு வகையான மலடுகளைக் கூறுகின்றார். 1. ஆண் மலடு பற்றியும் கூறுகின்றார். 2. பெண் மலட்டில் பலவகைகளைக்

கூறுகின்றார். 1. வாதோட்டின் மலடு 2. மலட்டுப் புழுவினால் ஏற்பட்ட மலடு, 3. சீழ்நீர் மலடு 4. அததவாயுவாலான மலடு. 5. இரத்த மலடு 6. துர்மாம்ச மலடு 7. கர்ப்ப மலடு இவை தவிர 1. ஆதிமலடு 2. காகமலடு 3. கதலி மலடு 4. கர்ப்ப மலடு என்றும் வகைப்படுத்துகின்றார்.

பிணிகளின் எண்ணிக்கை 4448 என்று தொகையிட்டு கூறுகின்றார். ஆயினும் பெயர்களைக் கூறவில்லை. இத்தொகையை எல்லா பிற்காலத்தவர்களும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளுகின்றனர். கண்நோய் 96 என்பதும் மூலர் நூலில் கூறப்படுகின்றது. திருமூலர் நூல்களில் மேலும் சீழ்மேசம், வாயு, சூலை, பல்நோய்கள், உருத்திர வாயு, சன்னிமூலம், கிராணி, கழிச்சல், குன்மம், குட்டம் கண்நோய்கள், பெரும்பாடு, நீரிழிவு என்பன போன்ற நோய்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆயினும் மருந்துகளைப் பற்றி மூலர் அதிகம் கூறவில்லை.

பொடியாய் நோய்போகப்பகன்றிட்டார் என்நந்தி

நந்தி என்பவர் மூலவருக்கு முந்தைய சித்தாக இருத்தல் கூடும். ஆயினும் அவருடைய பெயரில் நூல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இதுகாறும் கூறியவற்றால் பலர் என்பதும், அவருடைய நூல்களில் வேறுபாடுகள் உள்ளன என்பதும், திருமூலர் பாடல்களில் இடைச்செருகல் உள்ளது என்பதும் திருமூலரே சித்தர்களில் காலத்தால் மூத்தவர் என்பதும், அவருடைய நூல்களையும் காலத்தையும் வரலாற்று ஆய்வு செய்வது அவசியம் என்பதையும் இக்கட்டுரை விளக்கியது.

1. அருணாசலம், மு. தமிழிலக்கிய வரலாறு - 10ம் நூற்றாண்டு ஜெமினி பிரஸ், கும்பகோணம், 1972.

2. மாணிக்கவாசகம், இரா. திருமந்திர ஆராய்ச்சி - அபிராமி வெளியீடு சென்னை 1982.

3. கந்தையா பிள்ளை, ந.சி. தமிழ்ப்புலவர் அகராதி 1952.

4. நீலகண்ட சாத்திரியார், கே.ஏ. தென்னிந்திய வரலாறு, தமிழ்ப்பாட நூல் நிறுவனம் சென்னை.

5. பிரேமா, சே. சித்த மருத்துவ நூலோதி - தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 1988 பக். 16.

6. திரு. வெள்ளை வாரணனார், திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

7. கந்தசாமி முதலியார், போகர் 7000, இலக்கணக் களஞ்சிய அச்சகம், 1988 பாடல் 815

8. கந்தசாமி முதலியார், போகர் 7000, இலக்கணக் களஞ்சிய அச்சகம், பாடல் 887.

9. இராமதேவர் வைத்திய சிந்தாமணி 700, குருசாமிக் கோனார் ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸ், 1945, பக். 4

10. ஆறுமுக சாமிகள், திருமூலர் வைத்தியம் கருக்கிடை 600, பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலை, திருவெண்காடு, 1884.

11. பரசுராம முதலியார், திருமூலர் கருக்கிடை 600, பரப்பிரம்ம முத்திராக்ஷரசாலை, சென்னை, முதல் பதிப்பு, 1868.

12. திருமூலர், திருமந்திரம், மருத்துவப்பகுதி, திருவாவடுதிறை ஆதீனம், 1957.

13. திருமூலர், வைத்திய காவியம் 1000, கந்தசாமி முதலியார் பதிப்பு.

தெய்வீக மூலிகைகள்

டாக்டர் ஜி. அன்புகணபதி, எம்.எஸ்சி., பிஎச். டி.,
பேராசிரியர், விலங்கியல்துறை,
கந்தசாமிக் கவுண்டர்கல்லூரி,
வேலூர் (சேலம்) 638 182.

உலகில் முதலில் குளிர்ந்ததும், உயிர் பிறந்ததும் தென்குமரிக்கோடே என்பது புவியியல் ஆராய்ச்சி முடிவு. அவ்வாறாயின் பரிணாம நிகழ்ச்சி தோன்றித்துவங்கி வளர்ந்த முதலிடம் அதுவே ஆகக்கூடும். எனவே பரிணாம உயர்நிலையாம் மானிடமும், அறிவும், ஆயகலைகளும், மனித மேம்பாட்டுப் படைப்புகளும் தோன்றியதற்குக் குமரிக்கோடே தொட்டிலாகிறது. குமரியின் இனம் தமிழினம், மொழி தமிழ் ஆதலின் தமிழ் மருத்துவமே உலகில் முதலாவதும், முன்தோன்றி மூத்ததும் என்பது தெளிவு.

தமிழ் மருத்துவத் தந்தையார் சித்தர்கள், நந்தி, அகத்தியர் மூலர் வழியில் பதினெண் சித்தர்கள் ஆய்ந்து அறிவால் அறிந்து ஞானத்தால் தெளிந்து இக பர சுகம் பெற இவ்வுடல் நிலைத்தல் பொருட்டு வகுத்த மார்க்கம் சித்த மருத்துவம். இயற்கையோடு இசைந்த மருத்துவ வழிகள் சித்த மருத்துவச் சிறப்பியல்பு. மெய்ஞானம் சித்திக்கும் வரையில் பொய்யான மெய்யை மெய்ப்பித்திருக்கச் செய்தது சித்தர்கள் காயசித்தி, கல்ப முறைகள், நோய் அணுகாதிருக்கவும், பிணி நேர்ந்திடின் நீக்கவும், மூலிகை, பாஷாணம், உலோகம் ஆகியவற்றைச் சித்தர்கள் மருந்துகளாகப் பயன்படுத்தினர். இவற்றுள் முதல் நிலையில் மருத்துவ உபயோகம் கொண்டவை மூலிகைகள்.

பஞ்சபூதத் தத்துவமே சித்தமருத்துவ அடிப்படை. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாஷ் என்னும் பஞ்சபூத சேர்க்கையே ஜீவ சரீர சூட்சும கோலம். அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளது. உயிரார் நிலைக்க உற்றவழி உடலார் நோன்பு.

உடம்பார் அழியில் உயிரார் அழிவர் 1
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே 2
(திருமூலர்)

ரூப ஸ்தூல சரீரம் பிருதிவி அம்சம் அதில் அப்பு தேயு, வாயு, அரூபாரூப அம்சங்கள், அரூப ஜீவன் ஆகாய அம்சம் நிலமாம் உடலில் நீர், நெருப்பு, காற்று எனும் முப்பூதங்கள் நிலைபிறழா விகித இயக்கப்படுதலே உயிர் நிலைக்கும் இரகசியம். காற்று, நெருப்பு, நீரின் மருத்துவப் பெயர்களே வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகும்.

சேத்துமம் தண்ணீர் பித்தம் தீ காற்று வாதம்தானே 3
அகத்தியமுனிவர்

வாத பித்த சிலேத்துமாதிகளின் தொந்திப்பே நோய் என்பது சித்த மருத்துவ முதுமொழி

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று 4 திருவள்ளுவர்

செயல்கள், உணவு இவற்றின் அடிப்படையில் இம்மூன்று பூதங்களும் நிலை பிறழலாகின்றன. சோம்பலால் வாதமும், மிதமிஞ்சிய வேலையால் பித்தமும், ஒழுங்குமுறை நழுவிய செயலால் கபமும் மேலிடுவது நமது வாழ்க்கை அனுபவம். இயற்கையில் விளையும் உணவுப் பொருட்களில் வாத பித்த கப தன்மைகள் இயல்பாகவே அமைந்துள்ளன. சில உணவுகளில் இக்கூறுகள் அதிகமாக

இருப்பதால், அவ்வகை உணவுகளை உண்ட அன்றே அவற்றின் விளைவுகளை நம்மால் உணரமுடிகிறது. உதாரணமாக உருளை, வாழை, மாட்டிறைச்சியால் வாதாதிக்கமும், கத்தரி, பப்பாளி, கோழிக்கறியால் பித்தாதிக்கமும், வெங்காயம், தக்காளி, பன்றி மாமிசத்தால் கபாதிக்கமும் விளைவது உண்பவர் அறிந்த உண்மை. இவ்வடிப்படையில் வாயு பதார்த்த மெனவும், பித்தகரப்பான் பண்ட மெனவும், சீதளப் பொருட்கள் எனவும் பாமர மக்களும் உணவை வகைப்படுத்திக் கூறுவதைக் கேட்கிறோம். இவ்வாறு நோக்கின் ஒவ்வோர் உணவும் குறைந்த அல்லது கூடிய அளவில் வாத, பித்த, கப பண்புகளைப் பெற்றுள்ளது புலனாகிறது. உணவுப் பழக்க வழக்கத்தாலும் ருசிக்கடிமையானதாலும், இயற்கையில் வாழுமிடத்தில் உற்பத்தியாகும் உணவானதாலும் சிலவற்றைப் பெரிதும், மற்றதைச் சிறிதும் உண்ண நேர்கிறது. இதனால் வாத, பித்த, சிலேத்துமாதிகள் நிலை பிறழ்ந்து நோய்க்கேதுவாகின்றன.

இப்பிறழ்ச்சியைச் சீர்செய்யவல்ல சரியான 3 மூலிகை களைச் சித்தர்கள் அறிந்தனர். அவ்வறிய மூலிகைகளே வில்வம் (Aegle Marmilos) வேம்பு (Azadirochta indica) துளசி (Osimum sanctum) என்பன. வாதத்தோடு வில்வமும், பித்தத்தோடு வேம்பும், கபத்தோடு துளசியும் தொடர்புடையன. வயிற்று உபாதைகளுக்கு வில்வமும், பித்த வாந்தி, வாய் கசப்பிற்கு வேப்பம்பூக் குழம்பும், சளிக்குத் துளசி தீர்த்தமும் இன்னும் கிராம மக்கள் பயன்படுத்துவது வழக்கில் உள்ளது. நலிவு நீக்கி நலம் தரவல்ல இம்மூலிகைகளை இறைவனோடு இணைத்துப் போற்றி வணங்கினர் நம் மக்கள்.

பாரம்பரியமாக எனது முன்னோர்கள் இம்மூன்று மகாமூலிகைகளைப் பல நோய்களுக்கு மருந்தாகப்

பயன்படுத்தி வந்தனர். கடந்த 25 ஆண்டுகளாய் நானே அனுபவித்தும், பல பிணியாளர்களுக்கு கொடுத்தும் இந்த மூலிகைகளை ஆராய்ந்து பல உண்மைகளை அறிந்தேன். வில்வம், வேம்பு, துளசி இலைகளின் நிழலிலுலர்த்திய சூரண வஸ்திர காயங்களை வகைப்படிக்கு 3:2:1 என்ற விகிதத்தில் கலந்து தினம் மூன்று வேளை உணவுக்கு முன் 500 எம்ஜி அளவு கொடுத்து பல வகைப் பிணிகளுக்கும் வியத்தகு பரிகாரம் கண்டு வருகின்றேன். நோயின் அடிப்படை அறிந்து அதற்கேற்ப எது காரணமோ அதற்குரிய மூலிகையே 3 பாகமும், மற்றவற்றைச் சரீரதன்மைக்கேற்ப 2(அ) 1 பாகமாகச் சேர்த்து அதிசயப் பலன்களை நான் பார்க்கிறேன். வாதப் பிணிகளுக்கு வில்வம் 3, வேம்பு 2, துளசி 1 எனவும், பித்த நோய்களுக்கு வேம்பு 3, வில்வம் 2, துளசி 1, கப நோய்களுக்குத் துளசி 3, வேம்பு 2, வில்வம் 1 எனவும் மூன்று விகிதங்களில் சமயோசிதமாய் பயன்படுத்தி எண்ணிறந்த நோய்களைக் குணமாக்கி வருகிறேன். குறிப்பாக நானுள்ளிட்ட 50க்கு மேலானவர்களுக்கு இரத்தத்தில் சளிக்கூறு அணுக்கள் (Easinophils) சதவீதம் 15.22 வரை கூடி இருந்ததை மூன்று மாதத்தில் 5-7 சதவீதம் என்னும் இயல்பு நிலைக்குக் கொண்டு வந்துள்ளேன். தொடர்ந்து 6 மாதம் எடுத்துக் கொண்டதில் பல ஆண்டுகள் கழிந்தும் கூட மீண்டும் இவர்களில் யாருக்கும் சளிக்கூறு அணுக்களின் அளவு அதிகரிக்கவே இல்லை என்பது நோக்கற்பாலது.

நோயின் தன்மை மிகவும் முற்றிய நிலையில் காரசாரம், பாஷாணம், உலோகம் சேர்ந்த மருந்துகள் கொடுக்கும் போதும், மேற்கூறிய சூரணத்தை நோய்க்கேற்ப விகிதக்கூட்டை தீர்மானித்துச் சேர்த்ததில் எவ்விதப் பக்க விளைவுகளும் இன்றி நோய்கள் விரைந்தும், முழுவதும் குணமாவதைக் கண்டது குறிப்பிடத்தக்கது.

நான் அனுபவப்படுத்தி வரும் மற்றுமொரு தெய்வீக மூலிகை அறுகம்புல் (Cynodon dactylon) சைவ, வைணவத் திருத்தலங்கள் எதுவாயினும் அங்கே பொதுவாகவும், எல்லா ஊர்தோறும், இந்துக்கள் அனைவரும் தொழும் முழு முதற் பொருளாம், மூலமுதலோன், விக்நசமர்த்தன், விநாயகப் பெருமானுக்கு உரியது அருகம்புல். முன் சொன்ன தெய்வ மூலிகைகளின் தனித்தனிப் பலன்களை இது ஒருமிக்கப் பெற்றது. தானே தனித்து வாத, பித்த, கப நாடிகள் மூன்றையும் தன்னிலைப் படுத்தும் ஆற்றல் இம்மூலிகைக்கு உண்டு.

அறுகம்புல் வாதபித்தம் ஐயமோடீளை
சிறுகவறுக்கும் மின்னுஞ் செப்பி லறிவுதரும்
கண்நோ யொடு தலைநோய் கண்புகை யிரத்தபித்த
முண்நோ யொழிக்கு முறை. -தேரையர்

அறுகம்புல் சாறு (அ) சூரணத்தால் நச்சு தோஷங்கள் (Toxins) நீங்கி இரத்த சுத்தி ஏற்படுகிறது. ஒவ்வாமை (Alergy,) நோய்க்கு இது ஒரு ஒப்பிலா மருந்து. பல மருத்துவ முறைகளில் பன்மருந்துகள் உண்டதால் உடலில் சேர்ந்த நச்சுகளை இது அகற்றும் தன்மையுடையதால், கால் மண்டலம் அருகம்புல் கொடுத்து பின்பே நோய்க்குரிய தனி மருந்துகளை அளித்து, இதுகாறும் சிறந்த மருத்துவப் பலன் கண்டுவருகிறேன். குறிப்பாகத் தோல் வியாதிகளுக்கு (Alergic dermatitis) 20க்கு மேற்பட்டோர்க்குத் தனி அறுகம்புல் சூரணத்தாலே முழுக்குணம் கண்டுள்ளேன்.

உடல் நலம் காக்கும் சிறப்புடையதால் கடவுளர்களுக்குரிய கற்பக மூலிகைகள், அறுகு வில்வம், வேம்பு, துளசி, இறைவனுக்குச் சமமாக வணங்கிப் போற்றப்பெறும் தெய்வீக மூலிகைகளாய்ப் பெருமைப் படுத்தப்படுகின்றன.

ஒப்பேடுகள் பட்டியல்

1. 724 (13) சரீரசித்த உபாயம், திருமந்திரம்.
2. 725 (13) சரீசசித்த உபாயம், திருமந்திரம்
3. 3, அகத்தியமுனிவர் நாடி, பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம்
4. 941, மருந்து, திருக்குறள்.
5. 376, பதார்த்தகுண சிந்தாமணி.

சித்த மருத்துவ வளர்ச்சிக்கான வழி முறைகள்

டாக்டர் க. சைபுதீத், பி.எஸ்.எம்.எஸ்., (சித்தா)
234, சோன்மாதேவி ரோடு
பேட்டை, திருநெல்வேலி 627-004.

சித்த மருத்துவம் சிறப்பான முறையில் வளர்ச்சியடைய வேண்டுமெனில் அது தமிழ் மருத்துவத்தில் தங்களை இணைத்துக்கொண்ட மருத்துவர்கள், மற்றும் தமிழ் மருத்துவ மூதறிஞர்கள், பரம்பரை வைத்தியர்கள், பட்டமேற்படிப்பு மாணவர்கள் போன்றவர்களின் முயற்சியுடன் தமிழக அரசின் தீவிர முயற்சியும் ஒத்துழைப்பும், இன்றியமையாததாகும். மேலும் தமிழ் மருத்துவப் படிப்பு பாடத்திட்டங்களில் நவீன மருத்துவ அறிவியல் அடிப்படைகளையும் ஒருங்கிணைத்து உலக அரங்கில் சித்த மருத்துவத்தின் உயர்வையும் அதன் சிறப்பையும் வெளிப்படுத்த முயலவேண்டும். இந்த முறையில் கீழ்க்கண்ட வளர்ச்சிக்கான வழி முறைகளை விரிவான கண்ணோட்டத்துடன் ஆராய்தல் கடமையாகும்.

1. பாடதிட்டங்களில் புதிய அணுகுமுறை:

முதலாம் ஆண்டுப் பாடங்களில் உயிர் வேதியியல், மருத்துவ தாவரவியல் போன்றவர்களும் இரண்டாம் ஆண்டுப் பாடங்களான உடற்கூறு இயல், உடல் இயங்கும் இயல் மற்றும் நோய்க்குறியியல் பாடங்கள் தமிழிலேயே போதிக்கப்படுகின்றன. இந்தப் பாடங்களை நவீன மருத்துவ வளர்ச்சிக்கு ஏற்பவும் ஆங்கில மொழியில் போதிக்க வேண்டும். இதன்நோக்கம் சித்த மருத்துவ அடிப்படைத் தத்துவங்களில் எவ்வித மாறுதல்களோ, மொழி மாற்றமோ அல்ல. மாறாக இதன் மூலம் மாணவர்களின் பொது மருத்துவ

அறிவுத்திறன் அதிகரிக்கும். மேலும் வளர்ந்து வரும் நவீன மருத்துவங்களின் பின்விளைவுகள் பற்றி மாணவர்கள் அறிந்து, தமிழ் மருத்துவத்தின் தனித்தன்மைகள சிறப்புக்கள் போன்றவற்றை உலகிற்கு எடுத்துக்காட்ட முடியும்.

2. சித்த மருத்துவர்களின் பயிற்சியில் செய்ய வேண்டிய முன்னேற்றங்கள்:

சித்த மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியானது மருத்துவத்துறையின் பல்வேறு துறையின் பல்வேறு நுட்பங்களையும், உயிர்காக்கும் முறைகளையும் நடைமுறையில் செயல்படுத்துவதாக இருக்க வேண்டும்.

உதாரணமாக மாரடைப்பு, மூச்சுத்திணறல், ரணஜன்னி, பாம்புக்கடி போன்ற அவசர நிலைகளில் சித்த மருத்துவர் என்ன செய்யவேண்டும் என்பதையும் தமிழ் மருந்துகள் சிறப்பாக எவை இந்த நிலைகளில் பயன்படும் என்ற திட்டமான அறிக்கையை ஆராய்ச்சித்துறையில் உள்ளவர்கள் ஆராய்ந்து அரசுக்குச்சமர்ப்பிக்க வேண்டும்.

ஏனெனில் அரசு மருத்துவ மனையில் பணி புரிபவர்களுக்குத் தனியாகப் பணியில் உள்ள சித்த மருத்துவர்கள் இதுபோன்ற சூழ்நிலைகளில் நோய் தீர்க்க இயலும் என்பதை மக்களும், அரசும் அறிவதற்கும் தமிழ் மருத்துவத்தின் மீதுள்ள நம்பிக்கையும் ஆர்வமும் அதிகரிப்பதற்கும் இது சிறந்த வழியாகும்.

பரம்பரை சித்த வைத்தியர்கள் மற்றும் தமிழ் மருத்துவ அறிஞர்களின் முயற்சி:

உலக மக்கள் நோய் தீர்க்கச் சித்தர்கள் கண்டு பிடித்த சித்த மருத்துவம் வளர்ச்சிபெற வேண்டுமாயின், அதைத் தங்களின் பரம்பரையாகச் செய்து வரும் மருத்துவர்கள் பரந்த மனப்பான்மையுடன் அரசுக்கு உதவ வேண்டும். தாங்கள்

அறிந்துள்ள சித்தர்களின் அரிய மருத்துவ முறைகளையும் அவற்றால் நீக்கும் நோய்க் குறிப்புகளையும், அனுபவத்தால் அறிந்த விபரங்களையும் தொகுத்து அரசுக்கு அளிக்க முன்வரவேண்டும். அவ்வாறு முன்வருவார்களாயின் நாட்டில் உள்ள நலிவுற்ற மக்கள் குறைந்த செலவில் மருத்துவ வசதி பெறுவார்கள். சித்த மருத்துவம் வளர்ச்சியடையும்.

4. சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளைச் சேகரித்தலும் அவற்றை ஆராய்வதற்கு பயிற்சியளித்தலும்

தமிழ் நாட்டில் பல பாகங்களிலும் பரவிக் கிடக்கும் தமிழ் மருத்துவ ஓலைச்சுவடிகளை ஒன்று திரட்ட வேண்டும். தமிழக அரசு இதற்கு முயற்சி செய்து அத்தகைய ஓலைச்சுவடிகளை அரசுக்கு அளிக்க முன்வருபவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் பொருள் உதவிகளும் செய்ய வேண்டும். இந்தச் சுவடிகளை ஆராய்வதற்கு ஒரு குழுவை ஏற்படுத்தி அதில் உள்ள நோய் தீர்க்கும் மருத்துவ முறைகளையெல்லாம் ஆராய்ந்து நடைமுறைக்கு எளிதானவற்றை எல்லாம் தொகுத்து நூலாக வெளியிட வேண்டும். இவ்வாறு நூல் வடிவில் தொகுப்பதனால் மாணவர்களும், நோயாளிகளும் பெரும் பயன் அடைவார்கள்.

5. தமிழ் மருத்துவர்களும், பட்ட மேற்படிப்பு மருத்துவர்களும் மேற்கொள்ள வேண்டிய அறிவியல் முறை ஆராய்ச்சிகள்:

சித்த மருத்துவர்கள் அறிவியல் பூர்வமாக ஆராய்ச்சி செய்ய வேண்டுமானால் தற்கால மருத்துவ முறைகளிலும் நமது மருத்துவ முறைகளிலும் உள்ள நிறை குறைகளை ஆராய்ந்து சித்த மருத்துவம் வளர்வதற்கான வழிகளை ஆராய வேண்டும்.

உதாரணமாகத், தொற்று நோய்களைக் குணப்படுத்துவதின் மூலமாகத்தான் நவீன மருத்துவம் உலகின் முன்னனி மருத்துவமாக விளங்குகிறது. சித்த மருத்துவத்தில் கிருமிகளையும் தொற்று நோய்களையும் அழிப்பதற்கு மருந்துகள் இருந்த போதிலும் விரைவாக முன்னேறத் திட்டமிட்ட ஆராய்ச்சிக் குறிப்பேட்டை உருவாக்க வேண்டும். உதாரணமாக மேக நோய், காச நோய் போன்றவற்றிற்கு நம்மிடம் மருந்து உள்ளது. ஆனால் இந்த மருந்துகளின் நாள் அளவு மருந்தளவு பின் விளைவுகளற்ற தன்மை போன்றவைகளை ஆய்வுக் கூடங்களிலும் நோயாளிகளின் உடல்நிலைகளின் மீது ஒரு மருத்துவ உயர் மட்டக் குழுவின் மூலம் திட்டமிட்ட அறிக்கையை வெளியிட்டு எல்லாச் சித்த மருத்துவர்களும் ஒரே வழி முறையைக் கடைப்பிடிக்க முயற்சிக்க வேண்டும்.

காச நோய், தொழுநோய், மேக நோய், போன்றவற்றிற்கும் மருந்துகல் நவீன மருத்துவத்தில் இருப்பினும் அவைகளில் பின்விளைவுகளும் குணமாகும் கால அளவுகளும் அதிகம் இத்தகைய சூழ்நிலையில் சித்த மருத்துவத்தில் உள்ள மருந்துகளையெல்லாம் ஆய்வு செய்வதால் நாட்டில் மருத்துவத் துறைக்கு மிகுந்த பயன் கிட்டுவதுடன் மக்கள் இயற்கையுடன் ஒன்றிய ஆரோக்கிய வாழ்வு வாழ்வதற்கும் மருத்துவத்திற்காக செலவிடப்படும் செலவுகள் குறைவதற்கும் வாய்ப்பாக அமையும். இத்தகைய பொருளாதார ஆய்வுகளை முறையான ஆய்வு செய்வதற்கு தமிழக அரசு உதவி புரிய வேண்டும். தொற்று நோய்க்கு காரணமாக உள்ள நுண் கிருமிகளை சோதனைக் கூடங்களில் வளர்த்தும் அவற்றின் மேல் சித்த மருந்துகள் எத்தகைய விளைவுகளைச் செய்கிறது என்ற பரிசோதனை முடிவுகளை அறியவேண்டும்.

மேலும் அரசு மருத்துவ மனைகளில் குறிப்பிட்ட சில நோயாளிகளுக்கு தமிழ் மருந்துகளை கொடுத்து அவற்றின்

ஆற்றல் பற்றிய உண்மைகளை அறிந்து வெளியிடலாம். தமிழ் மருந்துகள் நோயாளிக்கு எவ்வித பின் விளைவுகளையும் நச்சு விளைவுகளையும் பெரும்பாலும் ஏற்படுத்தாத காரணத்தால் இந்த முறைகளை எளிதில் செயல்படுத்த இந்த முறையில் வெற்றி கிடைக்குமாயின் தமிழ் மருத்துவத்தின் புகழ் உலகம் முழுவதிலும் பரவுவதற்கும் வளர்ச்சியடைவதற்கும் துணையாக அமையும்.

6. சித்த மருத்துவத்தின் வளர்ச்சியில் தமிழக அரசின் பங்கு:

தமிழ் நாட்டின் சொந்த மருத்துவமனை சித்த மருத்துவ வளர்ச்சி பெற மாநில அரசு மத்திய அரசின் உதவியுடன் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் நம் நாட்டில் எளிதாகக் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு குறைந்த செலவில் நோய்களைக் குணப்படுத்தலாம். இதற்காக தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் அரசு மூலிகைப் பண்ணைகளை அமைத்து அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் மருத்துவப் பயனுள்ள மூலிகைகளை ஒன்று சேர்த்து அவற்றின் பயனை மக்கள் எளிதில் பயன்படுத்த வகை செய்யலாம்.

தமிழ் மருத்துவ வளர்ச்சிக்குப் பயன்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், மருத்துவக் குறிப்புகள் ஓலைச்சுவடி போன்றவற்றை அனுப்புபவர்களுக்கு தகுந்த பரிசும் ஊக்கமும் அளிக்க மத்திய மாநில அரசுகள் முன்வர வேண்டும். இத்தகைய செய்திகள் மக்களை அடைவதற்கு தமிழரசு என்ற பத்திரிகை மூலமாக அல்லது அதற்குத் துணையாக சித்த மருத்துவ இதழ் என்பவற்றை வெளியிடலாம்.

மேலும் தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை மத்திய அரசுடன் இணைந்த வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றில் சித்த மருத்துவத்தின் பயன்களை மக்கள் எளிதில் அறியும்படி செய்யலாம்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தமிழ் பாடத்திட்டத்தில் சித்த மருத்துவத்தின் முக்கியத்துவத்தையும் சித்தர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் பாடமாக்கி இணைத்து எல்லா மாணவர்களும் இதன் சிறப்பை இளமையிலேயே அறியச் செய்ய வேண்டும்.

முடிவுரை

மேற்கண்ட ஆய்வுகளை எல்லாம் சித்த மருத்துவ வளர்ச்சி கருத்தரங்கம் நடத்துகின்ற சரசுவதி மகால் நூலகக் குழு தலைவர்கள் தமிழக அரசிற்கு சமர்ப்பித்து சித்த மருத்துவம் சீறும் சிறப்போடும் வளர்ந்து உலக மக்கள் யாவரும் இதன் பயனை அடைய முயற்சி செய்யவேண்டும்.